பன்னிரண்டு உத்தமிகள் கதை

O111,3x
N01
118169

195
26 NOV. 1901
MADRAS

பன்னிரண்டு உத்தமிகள் கதை.

BRIEF BIOGRAPHIES

OF THE

GREAT AND GOOD WOMEN

OF THE

VICTORIAN ERA.

FREELY TRANSLATED

BY

DEWAN BAHADUR V. KRISHNAMACHARIAR,

Fellow of the University of Madras, Member of the Society of Arts, & Author of "A Glorious Reign of Sixty years," and of several other Illustrated Vernacular Publications.

MADRAS:
PRINTED AT THE S. P. C. K. PRESS, VEPERY.
1901.

All Rights Reserved.

VICTORIA, R.I.
(In her Coronation Robe, 1837.)

5-3

TO

THE REVERED MEMORY

OF

QUEEN-EMPRESS VICTORIA,

A MOTHER TO INDIA,

WHOSE WELFARE SHE EVER HAD AT HEART,

THIS SERIES OF

BRIEF BIOGRAPHIES OF THE GREAT & GOOD WOMEN

OF

HER GLORIOUS REIGN

IS MOST RESPECTFULLY DEDICATED

IN BEHALF OF

THE AUTHOR'S LOYAL COUNTRY-WOMEN.

PREFATORY NOTE.

All will allow that our school and family Libraries ought to contain a good selection of modern literature of a healthy kind to suit each successive period of child-life, in order that a habit of reading may be formed and a love for books may increase with the child's growth. Young people of our day, especially girls of eleven and twelve years of age who have got beyond short stories and fairy tales, are interested in books of a higher type. To meet the demand then of such as have reached a higher level, we ought to provide a useful and wholesome collection of miscellaneous literature in their mother tongue.

To such modern literature, the present series of biographical sketches of the "Great and Good Women of the Victorian Era" is intended as a small contribution. The moral influence brought to bear upon the readers of these true stories of the lives of the much admired women-philanthropists cannot but do its vital work as an "impressed force" or invisible pressure from without. If it is something outside the thermometer that produces a change in the thermometer, it is equally certain that it is some outside influence that produces a moral change upon us. This truth was whispered long, long ago by the old sage Agastya to a King, and many generations after, by Vidura during his night conference with the Maharajah in a very short verse of the Great Epic *Mahābhārata*, and the unrivalled

fabulist says the same in *Brihat Katha*. In the wor of a writer in Modern England "It is the Law Influence that we become like those whom we habi ually admire. George Eliot's message to the wor was that men and women make men and women. T family, the cradle of mankind, and society itself h no meaning apart from this. On the doctrine of I fluence, in short, the whole vast pyramid of human is built."

In the opinion of the supporters and thought readers of the "Maharani Magazine" in whose pa several of these monographs originally appeared, th moral force seems already to have done its small meas of good. It may therefore be fairly assumed th collected in a permanent book-form, they will be he ful to my country-women in search of information to what other women in other lands have done, and doing, for the benefit of their fellow creatures, who a less fortunate than themselves. It is hoped that th will tend to inspire them with a desire to better condition of the poor and the ignorant around them, sympathise with all who are in distress, to nurse the s and the suffering, and to assist all schemes of bene lence and charity.

These brief biographies were written in English, my request, mostly by Anglo-Indian ladies, for I felt th earnest and cultured ladies best knew how to write women and children. I am therefore under deep obligati to the lady friends under whose aid and advice this wo has been completed—more particularly to Mrs. Bens and her sister Miss Gilbert-Cooper, to Lady Arbuthno Mrs. Grigg and Miss Spring Branson, to each of who gratitude is due from all readers that have found

may hereafter find in these sketches both pleasure and profit, and who have so generously taken pains to lead their Hindu sisters and daughters in higher and healthier ways that are beyond the range of musty old books written by the sterner sex, and to encourage the production of new works calculated to liberalise and expand the mind, and better worth reading than what have heretofore filled the scanty hours that most Hindu women can spare for self-improvement.

I must also repeat the acknowledgment of my indebtedness to the distinguished friend of Native Female Education—Miss E. A. Manning of the National Indian Association—whose kind help in securing most of the illustrations and wood-cuts and whose advice and cordial support for years I esteem and value so much, and whose zeal and exertions in promoting the cause of social and moral progress of India are not likely to be forgotten by my educated fellow-countrymen.

V. K.

MADRAS,
August 30th, 1901.

6

CONTENTS.

		Pa
Dedication		
Prefatory Noto		
Elizabeth Fry—எலிஸபெத் ப்ரை	Mrs. R. S. Benson.	
Elizabeth Barrett Browning—எலிஸபெத் பாரெட் ப்ரௌனிங்கு	Lady Arbuthnot.	3
Florence Nightingale—ப்ளாரென்ஸ் நைத்திங்கேல்	Mrs. R. S. Benson.	4
Harriet Martineau—ஹாரியெட் மார்த்தினோ .	Mrs. R. S. Benson.	6
Harriet Beecher Stow—ஹாரியெட் பீச்சர் ஸ்டோ	Miss Gilbert-Cooper.	9
Charlotte Brontë—ஷார்லெட் ப்ரான்தி . . .	Miss Spring Branson.	13
Princess Alice—ப்ரின்செஸ் ஆலிஸ்	Mrs. R. S. Benson.	17
Elizabeth, Queen of Roumania—ரோமேனியா நாட்டு இராணியாகிய எலிஸபெத்	Miss Gilbert-Cooper.	217
Kate Marsden—கேட் மார்ஸ்டென்	Mrs. R. S. Benson.	25
Frances Power Cobbe—பிரான்ஸிஸ் பவர் காப்	Editor.	28
Baroness Burdett Coutts—பர்டெட் கூட்ஸ் பெருமாட்டி.	Editor.	297
Mary Carpenter—மேரி கார்ப்பெண்டர் . . .	Mrs. H. B. Grigg.	317



Mrs. Elizabeth Fry.

ELIZABETH FRY.

எலிஜபெத் ப்ரை.

1780–1845.

மானிட ஜன்மமடைந்தவர்கள் பெறவேண்டிய பல நற்குணங்களுள் முதன்மையானது லோகோபகாரமே யல்லவா? லோகோபகார சிந்தையுடையவர்களாய் நாட்டாருக்கு நன்மை செய்யப் பாடுபட்டவர்களின் சரித்திரத்தை யறிதல் நாகரிகமடைதற்கு வேண்டிய காரணங்களுள் ஒன்றாயிருப்பினும் அப்படிப்பட்ட நீதிபோதகமான சரித்திரங்கள் இதுவரையில் நமது தேசபாஷைகளில் அதிகமாக ஏற்படாமலிருப்பது பெருங்குறைவாக இருக்கின்றது. முற்காலத்தில் பக்தி மார்க்கமாய் லோகோபகாரமான காரியங்களைச் செய்து கீர்த்திபெற்ற நமது தேசத்து ஸ்திரீகளின் சரித்திரம் சிலவுண்டென்பது வாஸ்தவமே. ஆயினும் இக்காலத்தில் நாடு சீர்திருத்தம் பெறுதற்பொருட்டுச் சிறிதும் சுயநயம் பாராட்டாமல் லோகோபகாரத்திற்காகவே முயற்சி செய்து தங்கள் வாழ்நாளைக் கழித்த பிறதேசத்து உத்தமிகளின் வரலாற்றை நமது தேசத்தார் தெரிந்துகொள்வது நலமாயிருக்குமென்று கருதி, அத்தன்மையான சில மாதர்களின் சரித்திரத்தை, கல்வி கேள்விகளிற் சிறந்த அங்கிலேய ஞானாசாரிமார்கள் எழுதியிருப்பதை அநுசரித்து, தமிழ் நாட்டாருக்கு உபயோகமாகும்படி எளிதான தமிழ் நடையில் எழுதத் துணிகின்றோம்.

லோகோபகாரமாகப் பாடுபட்ட பிறதேசத்துப் பெருமாட்டிகள் பலருள், சிறைச்சாலையில் அகப்பட்ட பெண் குற்றவாளிகளுக்குச் சன்மார்க்க போதனை செய்த எலிஜபெத் ப்ரை என்னும் குணமகளே பெரிய லோகோபகாரியாகத் தோற்றுகிறாளாதலால், அவளது சரித்திரத்தை முதலில் எழுதுகிறோம்.

இந்த எலிஜபெத்து கர்னி என்னும் பெருமாட்டியார் 1780-ம௵ பிறந்தார். கர்னி பெருமாட்டியாருடைய தாய் தந்தையர்கள் உயர்குலத்திலே பிறந்தவர்கள்; மிக்க செல்வமுடையவர்கள்; அவர் இங்கிலாந்து தேசத்தின் கிழக்கிசையிலுள்ள நார்விச் நகரத்துக்கு அருகேயுள்ள ஓர் அழகான சோலையின் நடுவிலிருந்த பெரிய வீட்டில், சகோதரரும் சகோதரிகளுமாகிய பதினொரு பேருடன் கூடிவாழ்ந்தார்.

அவருடைய தாயும் தந்தையும், கிறிஸ்தவர்களுக்குள்ளேயிருந்த வைராக்கியமுடையவர்களும், தாங்கள் பிறருக்குப் பயன்படுதற்பொருட்டு இவ்வுலக இன்பத்தில் அதிகமாக ஈடுபடாமல் மிதமான உண்டியை உண்கிறவர்களும், ஆடம்பரமின்றி வாழுகின்றவர்களுமான குவேகர் என்னும் வகுப்பினைச் சேர்ந்தவர்கள். உடுபாவனையைப் பார்க்கையிலேதானே அவர்களை இன்னாரென்று யாரும் எளிதில் அறிந்துகொள்ளலாம். அன்றியும், அவர்கள் தங்கள் வகுப்பினரோடு பேசுகையில், "நீங்கள்" என்று சொல்லுவதற்குப் பதிலாக "தேவரீர்கள்" என்று மரியாதைப் பன்மையாக வழங்குவார்கள். ஆனால் அந்த வீட்டார் அப்படிக்கொன்றுஞ் செய்யவில்லை; பிறப்பினால்மட்டும் அவர்கள் குவேகர்களேயல்லாது மற்ற விஷயங்களில் அவர்களைப்போலில்லை; மற்றவர்களெல்லோரையும்போல் அவர்கள் தங்களுக்கிருந்த செல்வத்துக்குத் தக்கபடி நன்றாய் உண்டுடுத்துச் சுகமாக வாழ்ந்தார்கள்.

அந்த வீட்டாருக்கு வெளியே சுகமாய்ப் போகவரக் குதிரைவண்டியொன்றுண்டு; எல்லோரையும்போலவே சாதா

ரணமாய்ப் பேசுவார்கள்; சாதாரணமாய் எல்லோரும் அவர்களுடைய வீட்டிற்கு வார்த்தைசொல்லப் போவதும் வருவதுமாயிருப்பார்கள்; அவர்கள் தங்கள் மக்களைச் சுகமாகப் போற்றி வளர்த்துவந்தார்கள். குவேகர் கொள்கையில் அதிக வைராக்கியமுடையவர்கள் அவர்களை லௌகிகர்களென்றெண்ணி அவர்களைக் கண்டால் முகங்கொடுத்து வார்த்தை சொல்லாமல் விலகிச் செல்லுவார்கள். அப்படியிருந்தும் கர்னி என்பவர் தம்மக்களை நன்னெறிமுறை பிறழாது நடக்கும்படி செய்து தெய்வபக்தியுடையவர்களாகச் செய்தார். இவ்வுலகமெங்கும் பெரும்புகழ்பெற்ற உத்தமியாகிய எலிஜபெத்து ப்ரையின் தாயார் ஆதிமுதல் தம்மகளைப் போற்றிவந்த கிரமத்தை யாரும் நன்றாய் அறிந்துகொள்ளும்படி அவர் எழுதிவைத்திருக்குந் தினசரியினின்று சிறிது இங்கு எடுத்துக் காட்டுகிறோம். அதாவது:—

"எவ்வளவு கடினமான இடுக்கண் வந்துற்றவிடத்தும், இறைவன் விட்டவழி விடட்டுமென்று அவன் சரணகமலத்தைப் போற்றவேண்டும்; உயிர்க்கிறுதி வருகிறதாகவிருந்தாலும் கடவுளை மறக்கவொண்ணாது. இவ்வுலகில் மதவிஷயமாகப் பலர் ஒருவருக்கொருவர் வேறுபட்டு வாதாடிச் சண்டைசெய்வது விழலுக்கிறைத்த நீரைப்போல வீணேயாகும்; அவ்வாறான நூல்களை நாம் தழுவியிருக்கும் மதத்தில் புகழ்ந்திருந்தாலும், அவற்றைப் படிப்பதினால் அத்தனையாகப் பயனுண்டாகிறதில்லை. நெஞ்சை யொளித்தொரு வஞ்சகமில்லை யாதலால், மனத்தின்கண் மாசில்லாதிருத்தலே நலம்.

"மனத்துக்கண் மாசில னாத லனைத்தற
னாகுல நீர பிற."

என்னுடைய பெண்களெல்லாரும் இவையனைத்தையும் உண்மையென்று நம்பி அவற்றின்படி நடக்கவேண்டுமென்று என் மனதில் ஆசை குடிகொண்டிருக்கிறது. நன்னெறிமுறையி

னின்றும் பிறழாதிருப்பதற்குத் தெய்வபக்தியே மூலகாரணமாதலால், பெண்களுக்கு அது அவசியம் வேண்டும்; இது வேதநூலின் கொள்கையேயன்றிப் புதிதாகச் சொல்லப்பட்டதன்று."

"நாம் கல்வி கற்று அறிவை விருத்திசெய்வது முக்கியமாகையால், நமக்குரிய பாஷை, கணிதம், சரித்திரம், பூகோளம், ஜந்துசாஸ்திரம், சித்திரமெழுதுதல் முதலியனவைகளும் பெண்களுக்குத் தெரிந்திருப்பது நன்று. 'பாழே கொடியில்லா மனை' என்றபடி மனையாளில்லாத வீடு பாழாதலாலும், வீட்டில் செய்யவேண்டிய வேலைகளெல்லாம் மனையாளைப் பொறுத்தனவாதலாலும், பண்டங்களை அவற்றின் முறையறிந்து சீராக வைத்திருத்தல், குடித்தனப்பாங்காய்ச் செலவுசெய்தல், கணவனை வழிபடல், பிள்ளைகளைப்போற்றல் முதலிய எல்லா விஷயங்களிலும் நன்றாய்ப் பயின்றிருக்க வேண்டும். இவை எல்லாவற்றுள்ளும், 'அடக்கமுடைய அறிஞர், அடங்காதார் கல்லார்' என்றும்,

"அடக்க மமரரு ளுய்க்கு மடங்காமை
ஆரிரு ளுய்த்து விடும்"

என்றும் கூறியபடி அடக்கமே பெரிதாதலால், அடங்கியிருக்கவேண்டும்" என்கிறார்.

எலிஜபெத்து ப்ரை அவருக்கு மூன்றாவது பெண்; அப்பெண் தலைமயிர் அழகாயிருக்கும்; சிறு குழந்தைப் பருவந்தொடங்கியே, பெண்ணுக்கினிய மடம், நாணம், அச்சம், பயிர்ப்பு என்னுங் குணங்கள் அவரிடத்தில் குடிகொண்டிருந்தன. எங்கேயாவது சத்தங்கேட்டால் அவர் நடுங்குவார்; யாரேனும் சற்றே உற்றுப்பார்த்தால் கண்ணீர் விடுவார். அவருக்குத் தாயாரிடத்தில் பற்று அதிகம்; இவ்வாறே அவர் தமது தாய்க்குச் செல்வமகளானார்.

அச்சமுள்ள குழந்தைகளுக்குள்ள சுபாவப்படியே அவருக்கு இருட்டைக் கண்டால் மயிர் சிலிர்த்து அச்சம் பதறும்.

அவரை இருட்டில் விளக்கில்லாதபடி சற்றே வைத்திருந்தால் உடம்பெல்லாம் நடுக்கமெடுத்து இளைப்புண்டாகும்.

அவர் வாயைத் திறந்து ஒருவருடனும் பேசுகிறதில்லை. ஆதலினால் அவரை எல்லோரும், பேசாமடந்தையென்றும், அறிவில்லாதவளென்றும், பிடிவாதக்காரியென்றுஞ் சொல்வதுமுண்டு. சிலசமயங்களில் இவ்வாறு அவரை எல்லோரும் பழித்து அவர் காதிற்பட்டதுமுண்டு. இப்படிக்கு அவர்கள் எந்நேரமுஞ் சொல்லுவதைக் கேட்பதனால் அவர் மனஞ்சோர்ந்து தமக்குப் படிக்கும்படியான பாக்கியமில்லாமற் போயிற்றேயென்று விசாரப்படுவார். அவர் படியாதிருந்ததற்கு இதுவும் காரணமாயிற்று. ஆதலினால் அவர் பாலியத்திலே படியாமல் கவலையற்று, மனம்போன போக்கின்படி செய்யவும், பிடிவாதமாய் நடக்கவும் நேர்ந்தன. அவர் பெரியவரானபின்பு, தாம் பாலியத்திலிருந்த நிலைமையைப் பற்றி அடியிற்கண்டவாறு எழுதியிருக்கிறார்.—"எனக்குச் சற்றே பிடிவாதமுண்டு; அதுமாத்திரமல்ல; யாவரேனும் ஏதாவது ஒன்றைச் சொன்னால் அதை அல்லவென்று மறுத்து வீண்வழக்காடுவதுமுண்டு" என்கிறார்.

இந்தக் குணங்கள் நாளுக்குநாள் அதிகப்பட, பிற்காலத்தில் அவற்றால் அவருக்குப் பெருமையுண்டாயிற்று. அவ்வளவுக்கவ்வளவு பின்னிட்டு அவர் எதையும் தாமே யோசித்துச் செய்யவும், தாம் செய்யப்புகுந்த காரியத்தை இடைசோராது செய்து முடிக்கவும், யார் தடுப்பினும் அஞ்சாத உதாரகுணமுடையவராகவும் இந்தக் குணங்களே இளமைப்பருவத்திலேயே வித்திடப்பட்டதுபோலாயின. அவற்றோடு அவர் தாய் இளமைதொடங்கியே தம்மக்களுக்கு வேதவாக்கியங்களின் உள்ளுறையான கருத்துகளெல்லாம் நன்றாய் விளங்கும்படி நாடோறும் சொல்லிக்கொண்டுவந்திருந்ததினால், அவர்

விட்டாரெல்லோருக்கும் எப்பொழுதும் ஆழ்ந்த தெய்வபக்தி யுண்டாயிருந்தது. அவருக்குப் பன்னிரண்டாவது வயதில் அவர் தாய் தேகவியோகமானார். அதனால் பின்பு அவருக்குப் புத்திசொல்லுவாரில்லை.

அவர் பதினேழாம் வயதில் நன்றாய் உயர்ந்து வளர்ந்து அழகாயிருந்தார். அவரிலும் அவர் தமக்கைமார்களிருவரும் அதிகமான அழகுடையவர்களென்றாலும், பார்த்தவர்களெல்லாரும் கண்டு அவரையே கட்டழகியென்று வியந்தார்கள். அவர் யாரோடு வார்த்தை சொன்னாலும் இனிமையாய்க் கேட்கக் கேட்க இன்பமாயிருக்கும்படி சொல்லுவார்; முகம் செந்தாமரை மலர்போல் மலர்ந்து, கண்கள் அழகுடையனவாய், குரல் குயில் கூவுவதுபோலிருக்கும். அவர் எழுதிவைத்திருக்கின்ற தினசரியினின்று நாம் அடியில் பெயர்த்து எழுதியிருப்பதைப் படிப்பதனால், அந்தக்காலத்தில் அவர் மனமும் கருத்தும் இன்னவாறிருந்தன வென்பதை அறிந்துகொள்ளலாம்; அதாவது:—"இன்று எனக்குப் பதினேழாம் பிராயம் நிறைந்தது. நான் சென்றவருஷம் இந்நாளிருந்ததைவிட இப்பொழுது அதிக சுகமாயிருக்கிறேன். நான் என்னிடத்திலும், மற்றவர்களிடத்திலும் எத்தனையோ விஷயங்களைக் கண்டிருக்கிறேன். நான் என் மனம்போன போக்கின்படியெல்லாம் நடந்துவிட்டேன். "நெஞ்சை யொளித்தொரு வஞ்சகமுமில்லை" ஆதலால், நான் குற்றமுடையோனென்பது என் மனத்தாரத் தெரிந்ததேயாம்; ஆயினும் அக்குற்றங்களைக் கடிந்து இன்னும் குணப்படவில்லை. இனிமேல் கணப்பொழுதேனுந் தாமதியாமல் உறுதியாய்நின்று என்னிடத்திலுள்ள தீக்குணங்களனைத்தையும் போக்க வழிபார்க்கவேண்டும். இனி எந்தக் காரியத்திலும் அவசரப்படலாகாது; காரணமின்றி எதையும் மறுப்பது கூடாது; எனக்கு என்றுமுள்ள வழக்கப்படி இனி எதையும் நான் மிகைபடப் பேசலாகாது; மிகத்தப்பிச் சுகத்

துக்கு ஆசைப்படலாகாது; மனஞ்சோர்ந்திருப்பது கூடாது. "தீமை விலக்கு" என்றபடி தீயவற்றைச் செய்வதினின்றும் விலகி "நன்மை கடைப்பிடி" என்றபடி நன்மையானவற்றைக் கைப்பற்றவேண்டும். ஏதேனும் ஓர் நல்ல மதத்தைத் தழுவி அதன்படி நடப்பதே நலமென்று தோற்றுகிறது; ஏனெனில், அப்படிச்செய்தால் பல நன்மைகளைச் செய்தற்கு அநுகூலமாயிருக்கும். எனக்குள்ள நற்குணங்களை நான் நாளடைவில் இழந்துவிடுவேனென நினைக்கிறேன். எனக்கு நாளுக்குநாள் வெடுவெடுப்பும், டம்பமும், இறுமாப்பும், வீண்செலவு செய்தலும் அதிகமாகிவருகின்றன. இத்தனையும் எனக்கிருந்த உல்லாச விநோதத்தினாலும், உலக இன்பத்திலுள்ள ஆசையினாலுமே என்னைப் பற்றியது; நான் உண்மையான மதமொன்றை நம்பியிருப்பேனாயின், இப்பொழுதிருப்பதிலும் இன்னும் எவ்வளவோ மேன்மையைப் பெற்றிருப்பேனென்பது எனது துணிவு.

"ஆனால், மதமென்றால் எனக்கு அதிக அச்சமுண்டாகிறது; ஏனெனில், மதாவேசமில்லாதவனை நான் இதுவரையிலும் எங்கும் கண்டதில்லை. இவ்வுலகத்தில் நடந்த கொடிய யுத்தங்களையெல்லாம்பற்றி இதற்குமுன்பே எழுதியிருக்கிற எந்த மகாபுருஷன் எழுந்து, மனிதனது மனநிலைமையையும், நற்குணங்களும் தீக்குணங்களும் போராடும் போராட்டத்தையும் இவ்விதமென்று யாரும் எளிதிலறிந்துகொள்ளும்படி எழுதி மனிதனைத் தீயவழியினின்றும் விலக்கி நல்வழியில் நடக்கும்படி செய்யப்போகிறானோ தெரியவில்லை. இப்படிச் செய்தால் உண்மை தெரியாமல் அவதிப்படுகிறவர்களுக்கெல்லாம் நன்மை உண்டாகும். மனோதருமம் இன்னபடியிருக்கிறதென்று அதன் தன்மையை அறியாமையினாலேதான் அநேகர் இன்னமும் மதிமயங்கித் திரிகிறார்கள்" என்கிறார். இந்தக்காலத்தில் எலிஜபெத்துக்கும் அவர் சகோதரிகளுக்கும்

ரோமன் காதலிக் மதசித்தாந்தத்தைச் சேர்ந்த குரு ஒருவர் அறிமுகமானார். அவர் நல்ல புத்தியும் நிதானமுமுள்ளவர்; அவர் ரோமன் மார்க்கத்தைச் சேர்ந்த குருவெனினும், தம்மிடத்தில் அதிக நம்பிக்கைவைத்திருந்த அந்தப் பெண்களைத் தமது மதத்தில் சேர்த்துக்கொள்ள விரும்பாமல், கிறிஸ்து மதத்தின் சித்தாந்தத்தைமட்டும் இன்னதென்று பயபக்தியுடன் எடுத்துரைத்து வந்தார். படபடப்பும், சோம்பலும், உலக இன்பத்திலே பற்றுடைமையுமுள்ள எலிஜபெத்து அவர் செய்த ஞானோபதேசங்களை வினயமாய் ஆதரவோடு செவிகொடுத்துக் கேட்டார். அதுமுதல் அவருக்குத் தாம் இன்னபடி நடக்கவேண்டுமென்று ஒன்றும் புத்தியில் நிலைப்படவில்லை. சிலவேளைகளில் அவர் தாம் ஒயிலான நடையும் ஒய்யாரவார்த்தையுமாக, ஒன்றுந்தெரியாத பேதையா யிருப்பதைக்கண்டு துக்கித்து, இந்த இழிவான வீண் டம்பமாகிய பாசபந்தமென்னும் நீர்ச்சுழலினின்று விலகவேண்டுமென்று வழிதேடுவார். வேறு சில வேளைகளில் அவர் விலைபெற்ற சிவப்பு உடுபாவனையணிந்து குதிரையேறி நார்விச் நகரத்துப் படைவீரர் முழக்கும் ஜயபேரிமுதலிய வாத்தியகோஷத்தைக் கேட்கும்படி சென்று, அங்கிருந்து திரும்பிவருகையில் சிந்தை சோர்ந்திருப்பார்.

அவர் இதுவிஷயமாக, "இவ்வுலகவாழ்க்கையில் பற்று வைப்பதினால் இப்பொழுது எனக்கு வருத்தமுண்டாகிறது; உலகவாழ்க்கையினால் இறுதியில் துன்பமே மேவுகின்றது. உலகவாழ்க்கை மனதைக் கெடுத்து, டம்பம், இறுமாப்பு, வீணெண்ணம், பொறாமை, பேராசை இவற்றை வளர்க்கின்றது; உடை நடை முதலிய படாடோபங்களிலே புத்தி நாடுகின்றது; பின்பு இவற்றினாலெல்லாம் மனதுக்குச் சுகமுண்டாகாததைக் கண்டு, கட்டுக்கதை படிப்பதிலும், தூஷிப்பதிலும் புத்தி செல்லுகின்றது", என்று தாமே எழுதியிருக்

கிறார். இன்னோரிடத்தில், "அவதூறு பேசுவது தீதென்று நான் நன்றாக அறிந்திருப்பினும், எனக்கு அப்படிப் பேசுவதே அதிக ஆசை" என்று தாமே ஒப்புக்கொண்டிருக்கிறார். இவ்வுலக இன்பத்துக்கும், இவ்வுலக இன்பத்தைத் துறந்து ஆண்டவன் திருவடிகளைப் பற்றுவதற்குமுள்ள பேதம் எலிஜபெத்து ம்மைக்குத் தெரியாமலிருந்தது; பின்பு அவர் நாளடைவில், தாம் அடிநாளில் செய்ததையெல்லாம் நினைத்து அநுதாபப்பட்டு, ஏழைகள், பாவிகள், துன்புற்றோர் முதலிய கதிபற்றவர்களைக் கண்டு இரக்கமுற்று, அவர்களோடு பழகப்பழக முன்னிருந்த தீக்குணங்கள் ஒருவாறு நீங்கின.

அமெரிக்கா கண்டத்தினின்றும் ஊரூராய்ச் சென்று பிரசங்கிக்க வந்திருந்த குவேகர் வகுப்பினரைச் சேர்ந்த உல்லியம் ஸேவரி என்னுங் குருவின் பிரசங்கங்களைக் கேட்டதே அவர் நல்வழிப்படுவதற்கேற்ற காரணமாயிற்று. அந்தக் குரு செய்த பிரசங்கங்களைக் கேட்குந்தோறும் கண்ணுங் கண்ணீருமாய் அவர் மனங் கரைந்துருகி, தம்மால் கூடியவரையில் வேதத்தில் சொல்லப்பட்டிருக்கிறபடி வழுவாது நடக்கவேண்டுமென்று நிச்சயித்துக்கொண்டார். அவரது தந்தை அவர் கருத்துக்கொண்ட விதத்தை யறிந்து, அவர் வீணான உலக இன்பத்தை ஒழித்து அதிக பக்தி வைராக்கியமுடைய வைதிகராகிய குவேகர் வகுப்பினரைச் சேருவதற்கு முன்பே அவர் மனம் நன்றாய்த் திருந்தவேண்டுமென்கிற முழு நோக்கத்துடனே, அவரை லண்டன்மாநகரத்திற் கழைத்துக்கொண்டுபோய், அங்கே பலரோடு கலந்து கொண்டாடிக் குலாவும்படி செய்ததுமன்றி, அங்குள்ள நாடகசாலைகளில் நடந்த ஆடம்பரங்களையெல்லாம் பலமுறை நன்றாய்க் காட்டினார். ஆயினும் அவருக்கு நாடகத்தில் ஆசையில்லை. அவர் இயல்பாகவே நல்ல உறுதியும், விவேகமும், மனச்சுத்தியுமுடையவராதலால், அவ்வொன்றிலும் அவருக்கு ஆசை பற்ற

வில்லை. இவ்வண்ணம் அவர் யாத்திரை செய்தது எலிஜபெத்துக்கு மிகுந்த நன்மையைச் செய்தது.

இது நடந்த முப்பது வருஷத்துக்குப்பின்பு "கற்றவை பல; நினைத்தவை பல; நான் உல்லாஸமாயிருந்தவர்கள் எத்தனையோபேரைப், பார்த்திருப்பதுமன்றி, நானே அநுபவித்துமிருக்கிறேன்; எத்தனை இடங்களில் ஆடல் பாடல் முதலியவற்றையுங் கண்டிருக்கிறேன்; பலர் கூடி உண்ணும் விருந்து மண்டபங்களுக்கும் போயிருக்கிறேன்; இவ்வுலகில் நான் பாராத விநோதமில்லை" என்று எழுதியிருக்கிறார்.

அவருக்கு இவ்வுலகத்தின் தன்மையெல்லாம் நன்றாய்த் தெரியும். பெருந்தன்மையும், ஆழ்ந்த விவேகமு முடையவராதலால்,

"நீரிற் குமிழி யிளமை நிறைசெல்வம்
நீரிற் சுருட்டு நெடுந்திரைகள்—நீரி
லெழுத்தாகும் யாக்கை நமரங்கா ளென்னே
வழுத்தாத செம்பிரான் மன்று"

என்றபடி இவ்வுலக இன்பத்தினால் மனதுக்கு நிலையான சுகமில்லையென்றும், எல்லாம் அற்பமென்றும், நிலையான சுகம் பெறுவதற்கேற்ற வழியைத் தேடவேண்டுமென்றுங் கண்டார். குவேகர் வகுப்பைச்சேர்ந்த கிறிஸ்தவர் கூடிச் செய்த பிரார்த்தனை பலவற்றிற்கும் அவர் போயிருந்து, அவ்விடத்தில் வில்லியம் ஸேவரி என்பவரின் மதுரவாக்கைக் கேட்டு ஆநந்த பரவசரானார். அதன் பயன் அவர் வீட்டிற்கு வந்தபொழுது தெரிந்தது. ஆரம்பத்தில் அவர் தாம் வழக்கமாய்ச் சிவப்புச்சாயந் தோய்த்த உடையை உடுத்துவதை விட்டுவிட்டு, தம்மேலணிந்திருந்த ஆபரணங்களையெல்லாங் கழற்றி ஒரு பக்கத்திலே வைத்து, தமக்கு ஒழிந்த காலத்தில் எளிய குழந்தைகளுக்குப் பாடஞ்சொல்லத் தலைப்பட்டார். அவர் பள்ளிக்கூடமொன்றை ஸ்தாபிக்கவும், அதில்

- 23 -

எழுபது ஏழைக்குழந்தைகள் படிக்க வந்தார்கள்; அத்தனை பேருக்கும் அவர் வேறொருவர் துணையுமின்றிப் புத்தகங்களுமில்லாமல் தாமே பாடஞ்சொன்னார். நூறு வருஷங்களுக்கு முன்னே புத்தகங்கள் இக்காலத்திலே கிடைப்பதுபோலச் சுலபமாகக் கிடைப்பதுமில்லை; அப்படிக் கிடைத்தாலும் அதிக விலைகொடுத்து வாங்கவேண்டும்.

1800-ம் ௵ எலிஜபெத்து கர்னி என்பவருக்கு இருபதாம்பிராயம் நிறைய, மிக்க தனமுடைய வர்த்தகசாலையில் கூட்டு வியாபாரஞ் செய்துகொண்டிருந்த ஜோஸப் ப்ரை என்பவருக்கு அவர் வாழ்க்கைப்பட்டார். அதனாலேதான் அவருக்கு எலிஜபெத்து ப்ரை என்று நாமதேயமாயிற்று. அவர் அதுமுதல் தமது கணவனுடன் லண்டன் நகரத்தில் வெகுகாலமிருந்தார். அவருடைய குழந்தைகளெல்லாம் பெரும்பான்மையாய் அந்நகரத்திலே பிறந்தவர்கள். அவர் அங்கிருந்தகாலத்தில் தமக்குள்ள வழக்கப்படி எளிய நோயாளிகளின் வீடுகளுக்குப் போய்ப் பார்த்துவருவார். திக்கற்றவர் எங்கே அகப்படுவார்களென்று மூலைக்குமூலை சந்துசந்தாய்த் திரிந்து, சகிக்கக்கூடாத நாற்றமுள்ள விடங்களுக்குஞ் சென்று பார்ப்பார். கல்வியிலே அவருக்கு அதிக விருப்பமாதலால், குவேகர்களிருக்கும் தொழிற்சாலைப் பாடசாலைகளுக்குச் சென்று பார்த்துவருவார். இவ்வாறு அவர் ஒன்பது வருஷ காலமளவும் லண்டனில் வசித்தார். பின்பு அவர் மாமனார் இறந்துபோனதால் அந்த வீட்டார் யாவரும் அந்நகரத்தை விட்டு நாட்டுப்புறத்துக்குப் போய்விட்டார்கள்.

அவருக்குச் செடி கொடிகளைக் காண ஆசையாதலால், அவர்கள் அப்படிச் செய்ததில் அவருக்கு அதிக சந்தோஷமாயிற்று. அவர் கூடையில் புஷ்பச்செடிகளை யெடுத்துக் கொண்டு, தமது குழந்தைகளும், வேலைக்காரியும், தோட்

டக்காரனும் தம்மைச் சூழ்ந்திருக்கத் தோட்டங்களுக்கும் சோலைகளுக்கும் சென்று அவைகளை ஆற்றங்கரைகளிலும், இன்னும் நடத்தக்க வேறு இடங்களிலும் நட்டு, ஆகாயத்தில் நக்ஷத்திரங்கள் ஆச்சரியமாய் விளங்குவதையும், பூச்சிகள் விசித்திரமாய்ச் சிருஷ்டிக்கப்பட்டிருப்பதையும், செடிகள் விந்தைவிந்தையாய் அரும்பெடுத்து அழகாய்ப் பூப்பதையும் பற்றி அவர்களோடு சம்பாஷித்துக்கொண்டிருப்பார். ப்ளை பெருமாட்டியார் அந்த ஊருக்குச் சென்றவுடன், அங்கே பெண்களுக்கென்று பாடசாலை யொன்றை ஏற்படுத்தினார். அவர் தமது இயற்கையான அன்போடு அதில் அப்பெண்களுக்குப் பாடஞ்சொல்லிவந்தார். அவர் எப்பொழுதும் ஏழைகளுக்கென்று கம்பளம், பருத்திநூற்புடவை, பாவாடை முதலிய வஸ்திரங்களை மிகுதியாக வைத்திருந்ததுமன்றி, நோய் கொண்டவர்களுக்கு வேண்டிய மருந்துவகைகளையும் வைத்திருந்து, அவர்களுக்கு வேண்டும்போது கொடுத்துவந்தார்.

பெரிய ஸ்போடகம் வாராதிருக்கும்படி அம்மைப்பால் குத்தவேண்டுமென்று, அவர் அவ்விடத்திலே பட்டபாடு கொஞ்சமல்ல. இந்தக் காரியத்தில் உல்லன் பண்டிதர் இதன் கூறுபாடுகளையெல்லாஞ் சொல்லி அவருக்குத் துணையாய் நின்றதனால், இதை அவர் எங்கும் பரவச்செய்ததுமல்லாமல், தாமாகவே பலருக்கு ஸ்போடகம் குத்தியும் வந்தார். அவர் இப்படிச் செய்ததனால் அவரிருந்த நாட்டைச் சுற்றிலும் அம்மையென்கிற பெயருமில்லாமற்போயிற்று. இந்தக் கொடிய நோயைப்பற்றி, தாக்கரே என்னும் வித்துவான் தாமெழுதிய எஸ்மாண்டு என்னும் கதையில் "எனது பெருமாட்டியாகிய லேடி மேரி மாந்தேன் என்பவர் துருக்கிதேசத்திலிருந்து அம்மைப்பாலைக் கொண்டுவந்து குத்த ஆரம்பித்த பின்புதான், உலகத்தவரெல்லோரும் கண்டு அஞ்சுகின்ற இக்கொள்ளைநோயின் கொடுமை நமது நாட்டில் ஒருவாறு

கட்டுப்பட்டது; இக்கொடிய வியாதியினால் தங்கம்போன்ற அழகான சிறுவர்கள் நூற்றுக்கணக்காக நாள்தோறும் இறந்துபோனார்கள்; யாரேனும் இதற்குத் தப்பிப்பிழைப்பதுண்டானாலும், பார்வைக்கு நலங்குறைந்து விகாரமாய் உடம்பெல்லாம் புள்ளி புள்ளியாயிருக்கும். நான் சிறுவனாயிருக்கையில் இந்நோய் வந்ததுண்டு; இது வந்தால் ஊரிலுள்ளவர்களில் பாதிப்பேரைக் கொண்டுபோய்விடும்; அழகுடையவர்களையன்றி, எவ்வளவு பலசாலிகளும் இதற்கஞ்சுவார்கள்; அநேகர் இதற்குத் தப்பும்படி ஊரைவிட்டு ஓடிப்போகிறதுமுண்டு" என்று எழுதியிருக்கிறார்.

இருநூறு வருஷங்களுக்கு முன்னே இங்கிலாந்திலுள்ள கிராமங்களின் தன்மை இவ்வாறிருந்தது. அப்புறம் அம்மை குத்துவது எங்கும் பரவியதால், இக்காலத்திலே அவ்வகையான தீங்கொன்றுமில்லை. அன்றியும், அம்மை வடுவுள்ள ஐரோப்பியர் எவரையேனும் இக்காலத்திலே காண்பதரிது. இந்துதேசத்திலும் எல்லோரும் அவர்களைப்போல அம்மை குத்திக்கொள்ளுகிற வழக்கத்தைக் கையாண்டுவருவதால், ஐரோப்பாவில்போலவே இங்கும் ஒருவருக்கும் இனி இக்கொடிய நோய் வரமாட்டாது.

எலிஜபெத்து ப்ளை என்பவர் பல குழந்தைகளைப் பெற்றுப் பெரிய சம்சாரியானார்; இயல்பாகவே வருத்தமான வேலைகளைச் செய்ய அவருக்குத் திராணியில்லை; அப்படியிருந்தும் அவர் தமக்குண்டாகும் வருத்தத்தைச் சிறிதேனும் பாராட்டாமல் ஒன்றிலுங் குறைவில்லாமல் எல்லாவற்றையுஞ் செய்துவந்தார். அக்காலத்தில் அவருக்குண்டான துன்பங்கள் பல. ஐந்துவயதுள்ள அவரது அருமைக் குழந்தையொன்று இறந்துபோயிற்று. "புத்திரசோகத்திலும் பெரிய துக்கம் வேறுண்டோ?" அதனால் அவருக்குத் துக்கம்

பொறுக்கக்கூடாதிருந்தும், "அவனன்றி யோரணுவு மசையாது; எல்லாங் கடவுளின் செயல்" என்றெண்ணிப் பொறுத்திருந்தார். அதுமுதல் அவருக்கு நினைவெல்லாம் அந்தக் குழந்தைமேலாய், அதற்காகத் தமது வீட்டாருடன் தேவனைத் தோத்திரஞ் செய்துவந்தார். அவர் பலவாறான வேலைகளைச் செய்துகொண்டிருக்கும்போதும் அவருக்கு இறந்துபோன குழந்தையின்மேலிருந்த ஆசையின் மிகுதியினால் மனம் அதை அடக்கஞ்செய்திருந்த இடத்திற்குச் செல்லும்.

இவ்வாறே அவர் சிறைச்சாலைகளிலும், மற்றும் பலவிடங்களிலுமுள்ள கீழ்ச்சாதியிற் பிறந்த குழந்தைகளைக் கண்டு அவர்களோடு வார்த்தை சொல்லிக்கொண்டிருந்தபோது அந்தக் குழந்தையின் நினைவு வந்து வருந்தியழுவார். இதற்குச் சிலகாலஞ் சென்றபின்பு அவருடைய பெரிய பிள்ளைகளும், பெண்களும் பள்ளிக்கூடத்துக்குப் படிக்கப் போனார்கள்; அவருடைய சிறு குழந்தைகள்மட்டும் அவரோடு கிராமத்தில் இருந்தார்கள். அவருடைய அருமை மகள் இறந்துபோன ஆறு மாதத்திற்குப்பின் அவருக்கு ஒரு குழந்தை பிறக்க, அதை அவர் அன்பாய்ப் போற்றி வளர்த்தார். இவ்வளவு வேலைகளிருக்கையிலும் அவர் தமது மக்களுக்குக் கடிதமெழுதிப் புத்தி சொல்லிக்கொண்டு வந்தார். 1820-ம் ௵ அவர் தமது அருமைத் தந்தையை இழந்தார். அவரை அடக்கஞ் செய்த இடத்தில் அவர் உட்கார்ந்து ஒரே தியானமாய் நெடுநேரமளவும் கடவுளைத் தோத்திரஞ் செய்தார். அவ்வாறு அவர் இரைந்து ஜபஞ்செய்ததனால் அதுமுதல் அவருக்கு முன்னிருந்த கூச்சமும், அச்சமும் நீங்கித் தெளிவாய்ப் பேசப் பழக்கமாயிற்று. குவேகர் வகுப்பாருக்குள்ளே அவர் நன்றாய்ப் பிரசங்கஞ் செய்பவரானார். 1812-ம் ௵ அவர் குடும்ப ஸகிதமாய்க் குளிர்காலத்திற்காக லண்டன் நகரத்துக்குத் திரும்பிவந்தார்.

மறுவருஷத்தில் அவருடைய சிநேகிதர்களில் சிலர் கேட்டுக்கொள்ள, அவர் தமக்குத் துணையாக மங்கைப் பருவமுள்ள ஒரு சீமாட்டியை அழைத்துக்கொண்டு நியூகேட்டிலிருந்த சிறைச்சாலைக்கு முதல் முதல் போய்ப் பார்த்துவந்தார். அக்காலத்தில் சிறைச்சாலைகள் மிகவும் சீர்கெட்டிருந்தன. நியூகேட் சிறைச்சாலையில் முந்நூறு பேதைப்பெண்கள் தங்கள் பிள்ளைகளோடு அடைக்கப்பட்டிருந்தார்கள். அவர்கள் அத்தனைபேர்களையும், இரண்டுமுறை போய்ப் பார்த்துவந்தார். சிறைச்சாலைத் தலைவன் குற்றவாளிகளை, இன்ன குற்றஞ் செய்ததற்காக இன்னாருக்கு இன்ன இடமென்று பிரித்தேனும் வேற்றுமை ஏற்படுத்தாமல், விசாரணை செய்யப்பட்டவர்கள் செய்யப்படாதவர்கள் ஆகிய எல்லோரையும் பிடித்து, வேண்டியவளவு உடையுமில்லாமல், வெளிச்சமின்றிப் புழுதி படிந்துகிடந்த ஒரு அறையில் அடைத்துவைத்திருந்தான். அவர்களில் பெரும்பான்மையோருக்கு ஒரு வேலையுஞ் செய்யும்படி கொடுக்கவில்லை; அதைவிட்டு நீங்க வேண்டுமென்றால், அவர்களுக்கு ஒரு வழியுங்கிடையாது.

அந்தப் பேதைகள் எங்கே பார்த்தாலும் ஆணையிட்டுச் சத்தியஞ் செய்வதும், குடிப்பதும், சூதாடுவதும், ஒருவரோடொருவர் சண்டையிடுவதுமாயிருந்தார்கள். எலிஜபெத்து ப்ரை அங்கே போனபோது, அங்கிருந்த கசுமலத்தையும், அறையின் நெருக்கத்தையும், மானிடர்க்குரிய குணங்களையிழந்து அவர்களிருந்த துஷ்டத்தன்மையையுங் கண்டு அவர் நடுக்கமுற்றாரென்றாலும், மிகுந்த கருணைகொண்டு அவர்களைக் குளிரப் பார்த்தார். அதற்குப்பின்பு அவருக்கே ஒவ்வொன்றாய்த் துன்பத்தின்மேல் துன்பம் சேர்ந்தமையால், பிறகு மூன்று வருஷகாலமளவும் அங்கே மறுபடியும் போய்ப் பார்த்துவரக் கூடாமற்போயிற்று. "பட்ட காலிலேயே படும்; கெட்ட குடியே கெடும்" என்றபடி இவ்வளவோடு போகாமல்

அவர் கணவனுக்குப் பொருள் கஷ்டமு முண்டாயிற்று; ஆனதனால், அவர்கள் நாட்டிலேயிருந்த அழகான வீட்டை விற்றுவிட்டு லண்டனுக்கருகேயிருந்த ஒரு சிறு வீட்டிற்கு வந்திருக்கவேண்டியதாயிற்று. காலக்கிரமத்தில் எலிஜபெத்து ப்ரை பெருமாட்டியாரின் புகழ் எங்கும் பரவ, பின்னிட்டு அவரைக் காணுதற்பொருட்டு அரசர்களும் பிரபுக்களும் அந்த வீட்டிற்கு வரும்படியாயிற்று. பின்பு அவருக்கு தேகஅசௌக்கியமாகி மிகவும் துர்ப்பலமாயிருந்ததனால், அவர் தம்மக்களெல்லாரையும் விட்டுப் பிரிந்து சிறிதுகாலம் தனியே வசிக்கவேண்டியதாயிற்று.

1816-ம் வரு அவருக்கு வயது முப்பத்தாறு ஆக, அதுமுதல் அவர் அதிகமாக வேலை செய்துவந்தார். அவர் இரண்டாமுறை அந்தச் சிறைச்சாலையைப் பார்க்கச் சென்றபோது தமக்குத் துணையில்லாமல் தாம்மட்டுந் தனியே போகவேண்டுமென்று கேட்டார். அந்தச் சிறைச்சாலையின் தலைவன், அவர் அப்படிச் செய்யத்துணிவது உசிதமல்லவென்றும், அவசியம் அப்படியே செய்யவேண்டுமென்றால், கடிகாயந்திரத்தையாவது, பணப்பையையாவது கையோடு அவ்விடத்திற்குக் கொண்டுபோவது கூடாதென்றும் சொல்ல, அவர் அதையுங் கேளாமல், ''ஐயா! உங்களுக்கு நமஸ்காரம்; நான் ஒன்றுக்கும் பயந்திருக்கவில்லை; என்னுடையதொன்றும் கெட்டுப்போகாது'' என்று சொன்னார். உடனே அவர் நல்லதென்று, தடைசொல்லாமல் அவரை விட்டுவிட, அவர் அந்தக்ஷணமே அங்கே சென்று அந்தப் பாவிகள் அத்தனை பெயருங் கும்பலாகச்சூழ அவர்களுக்கு நடுவே நின்றார். அன்பு, சித்தசுத்தி, பொறுமை, இவையனைத்தும் ஒன்றாக உருவெடுத்து வந்தாற்போன்ற அந்த உத்தமி தங்களுக்கு நடுவேவந்து நின்றதை அவர்கள் கண்டவுடன் பிரமித்துச் சிறிதுநேரமளவும் ஒன்றும் பேச நாவெழாமலிருந்து, அது

தெரிந்தபின்பு ஓவென்றோலமிட்டு, பணம்பணமென்றார்கள். அந்தப் பேர்க்கூச்சலையும், அழுகுரலையுங் கேட்கவே அவருக்கு முதலில் ஒருவாறு அச்சமுண்டாயிற்று. அப்பொழுது இன்னவண்ணம் அவர்களோடு பேசவேண்டுமென்று அவருக்குத் தோற்றவில்லை. ஆகலினால் அவர் தம்மிடமிருந்த கிறிஸ்துவேத புத்தகத்தை யெடுத்து, ''திராக்ஷைத் தோட்டத்தலைவன்'' என்னும் உபாக்கியானத்தை வாசித்து அதற்கு வேதார்த்தபரமாய் அருத்தஞ்சொல்லிப் பிரசங்கித்தார்.

அவர் குரல் குயிலின் குரல்போல இயல்பாகவே இனியது. அவர் வாசிக்கத் தொடங்கினதைக் கேட்டு அங்கிருந்தவர்கள் அத்தனைபேரும், அலைகடலில் எண்ணெயை உகுத்தாலெப்படியோ அப்படியே, பாவைகள்போல அசைவற்று நின்று கண்ணுங் கருத்துமாய் ஆசையோடு அதைக் கேட்டுக்கொண்டிருந்தார்கள். பிரசங்கமானபின்பு அவர் அவர்களை நோக்கி, அம்மையீர்! உங்களைக் காண்கையில் துன்பமுற்றிருக்கிறீர்களென்று தோற்றுகிறது; அன்றியும், வஸ்திரமில்லாதிருக்கிறீர்கள். யாராவது இங்குவந்து உங்களுக்குள்ள வருத்தங்களைத் தீர்க்கிறதாக இருந்தால் அது உங்களுக்குச் சம்மதமாகவிருக்குமா என்றார். அதற்கு அவர்கள், ''அம்மா! எங்களை ஏனென்று கேட்பாரொருவருமில்லை; ஏற எடுத்து விழிப்பாருமில்லை; நாங்கள் கெட்ட கேட்டிற்கு எங்களுக்குச் சிநேகிதர்களுமுண்டோ'' என்றார்கள். அதற்கு அவர், ''உங்களுக்குத் துணைசெய்தற்பொருட்டாகவே நான் இங்கே வந்திருக்கிறேன்; நீங்கள் நான் சொல்லியபடி செய்வீர்களேயானால் நான் உங்களுக்குத் துணையாவேனென்று நினைக்கிறேன்'' என்றார். அந்தப் பேதைப்பெண்கள் அத்தனைபேரும் அவரைச் சுற்றி நின்று; இனி இந்த உத்தமி இங்கே மீண்டும் வருவதேது; ஒருநாளும் இனிமேல் இவர் இந்தவிடத்துக்கு வரமாட்டாரென்று அச்சமுற்று அழுதகண்ணுஞ் சிந்தினமூக்குமாய் நின்றார்

கள். அதற்கு அவர் தாம் அவசியந் தப்பாமல் வருவதாக அவர்களுக்கு நம்பிக்கையுண்டாகும்படி சொன்னார்.

அவர் மறுபடி அங்கே சென்றபொழுது அங்கிருந்த குழந்தைகள் நல்ல உணவில்லாமலும், நல்ல காற்றில்லாமலும், படிப்பில்லாமலும், ஒரு வேலையுமின்றி அலங்கோலமாயிருந்ததைக் கண்டு, அந்தக் குழந்தைகளுக்கு வேண்டியபடி நன்மைசெய்தால் அவர்களுடைய தாய்மார் அந்த உபகாரத்தை யெண்ணிக் குணப்படுவார்களென்று நினைத்தார். அவர் அவர்களை அழைத்து, உங்கள் குழந்தைகளைப் படிக்க வைப்பதற்காகப் பாடசாலையொன்றை வைக்கவேண்டுமென்று நினைக்கிறேன்; இதற்குச் சற்றே நீங்களும் துணைசெய்வீர்களாவென அவர்கள் ஆநந்தக் கண்ணீர்ப் பெருக்குடன் சம்மதித்தார்கள்.

அந்தச் சிறைச்சாலையின் அதிகாரிகள் அதிலிருந்த ஒரு அறையைப் பாடசாலையின் உபயோகத்திற்கென்று கொடுத்தார்கள். அவர்கள் தங்களுள் ஒருத்தியை அந்தக் குழந்தைகளுக்குப் பாடஞ்சொல்லிக் கொடுக்கும்படி நியமிக்க, ப்ரை நலம்பெற நடத்துதற்பொருட்டுச் சில சீமாட்டிகளைச் சேர்த்து ஓர் சபைகூட்டி, அவர்களுள் ஒவ்வொருவரும் முறையாக அதைப் போய்ப் பார்த்துவரும்படி ஏற்பாடுசெய்தார். சிறையிருந்த ஸ்திரீகளில் அநேகரை அந்தப் பள்ளிக்கூடத்தில் சேர்ந்து படிக்கும்படி சொன்னதில், அங்கே போதுமான இடமில்லாததனால் அப்படிச் செய்ய வாய்க்காமற்போயிற்று. ஆரம்பத்தில் சிறுவர்களுக்கென்று ஏற்படுத்திய அந்தப் பாடசாலை சீக்கிரத்திலேதானே ஸ்திரீகளும் வந்து சேர்ந்துகொண்டு படிக்கும்படி பெரியதாயிற்று. அதில் படிப்பதற்கு புஸ்தகங்கள் அதிகமாக இல்லை; பாடஞ்சொல்லிக் கொடுப்பதற்காகவென்று ஒருத்தியை நியமித்தார்கள். குற்றவாளிகள் அவரவர்கள் செய்த குற்றங்களுக்கேற்றபடி வேறு வேறு வகுப்பினராகப் பிரிக்கப்பட்டார்கள். பிச்சைபுகல், பிரமாணஞ்செய்

தல், கள்குடித்தல், சீட்டாடுதல் இவை அனைத்தும் இனிமேல் ஒருபொழுதுங் கூடாதவையென விலக்கப்பட்டன; பாடசாலைக்கு அதிபர்களாக ஏற்படுத்தப்பட்ட பெருமாட்டிகள் பெரும்பான்மையாய் அந்தச் சிறைச்சாலையி லிருந்தவர்களே. தினந்தோறும் காலையில் அந்தப் பாடசாலையைப் பரிபாலித்துவந்த ஸ்திரீகளில் யாரேனும் வேதபுத்தகத்திலிருந்து ஒரு அத்தியாயத்தைப் படிப்பார். வாரந்தோறும் ப்ரை தாமே காலையில் ஒருமுறை போய்ப் பார்த்துப் படித்துவிட்டு வருவார். இவ்வாறு ஒன்றரை வருஷகாலம் நடந்துவந்ததில், யாவருங் கண்டு அதிசயிக்கும்படி அந்தச் சிறைச்சாலையிலிருந்தவர்களெல்லாரும் சீர்திருத்தத்தைப் பெற்றார்கள். அவ்விடத்தில் எங்கே பார்த்தாலும் எல்லா மமைந்து ஒழுங்காயிருந்தன; அதற்கு முன்னே காட்டுமிருகங்களைப்போல அடங்காமல் ஓலமிட்டவர்களெல்லாரும் குற்றமற்றவர்களாகி, ஓயாமல் ஏதேனும் ஒரு தொழிலில் அமர்ந்திருந்தார்கள்.

ஒருவருஷ காலத்திற்குள்ளே அதில் சிறையிருந்த ஸ்திரீகளும் குழந்தைகளுமாகச் சேர்ந்து, ஆஸ்திரேலியாவிற்கு அனுப்பப்பட்டிருந்த குற்றவாளிகளுக்கு அனுப்புவதற்காகச் சற்றேறக்குறைய 20,000 உடைகளை செய்து தைத்தார்கள். அதைக்கண்டு அந்தச் சிறைச்சாலையின் அதிகாரிகள் ஆச்சரியப்பட்டார்கள். இவ்வளவுமாத்திரமேயல்ல; அங்கே முன்னிருந்தபடியில்லாமல் திருட்டெல்லாம் அடியோடு நின்றுவிட்டன; கொடுத்த பண்டத்தைக் கெடுத்துவிட்டதைப்பற்றிய இரண்டு குற்றங்களைத் தவிர்த்து வேறொன்றுமில்லை. ஊராளியும், குருவும் இதைக்கண்டு அதிசயித்தனர்; நகரபாலகர்களும் அந்த அதிசயத்தைப் பார்க்கவேண்டுமென்று அங்கே சென்றார்கள். அதனால் எலிஜபெத்து ப்ரைக்குண்டான புகழுக்கு அளவில்லை. அதில் சிறையாக இருந்த ஓர் உத்தமி அவளைப்பற்றி "அந்த லோகோபகாரியையும், அவர் நிரு

கேட்டுச் சிறைச்சாலைக்கு வந்தநாளையும், ஆண்டவன் ஆசீர்வ
திப்பாராக; அவர் எங்களுக்குச் செய்யவேண்டிய யாவற்றை
யுஞ் செய்தார்; அவரை நாங்கள் எந்நாளும் ஆசீர்வதிக்க
மறவோம்" என்று சொல்லியிருக்கிறார்.

ப்ரை பெருமாட்டியார் உலகத்தார் தம்மைப் புகழும் பு
ழ்ச்சிக்காகப் பாடுபடவில்லை; தம்மை யாவரேனும் வர்த்
தமான பத்திரிகைகளில் புகழ்ந்தெழுதியதைக் கண்டால், அது
முதல் சிறிதுகாலம் அவர் சிறைச்சாலைக்குப் போய்வருவதை
விட்டிருப்பார். குற்றவாளிகளான ஸ்திரீகளை இங்கிலாந்திலி
ருந்து பிறநாட்டுக்கு அனுப்பினபோது, அவர்களுக்குக் கப்பல்
பிரயாணகாலத்தில் செய்யத்தக்க வேலைகளை யேவி, படிப்ப
தற்கு வேண்டிய நல்ல புத்தகங்களையுங் கொடுத்துக் கப்பல்
வரையிலுங்கூடப் போய் வழிவிட்டார். அதற்குமுன்னே
சிறைப்பட்டவர்களைக் கப்பலேற்றி அயல் நாடுகளுக்கு அனுப்
பும்போதெல்லாம் காட்டுமிருகங்களைக் கூட்டிக் கப்பலேற்றி
னால் எப்படியோ அப்படி பேரமளியாயிருக்கும்; இப்பொழு
தோவெனின் அப்படிக் கொன்றுமில்லாமல், ப்ரை பெரு
மாட்டி தர்மங்களைப்பற்றி அங்கே செல்லும் ஸ்திரீகளுக்குச்
சொல்லும் நற்புத்திகளையும், அவரவர் விஷயமாகக் கடவுளை
நோக்கிச் செய்யும் பிரார்த்தனையையுங் கேட்பதற்காக மாலு
மிகள் கப்பலின் கயிற்றைப் பிடித்துத் தொங்கிக்கொண்டே
பார்ப்பார்கள்.

லண்டன் நகரத்தில் சிறையாக வைக்கப்பட்டிருந்த ஸ்தி
ரீகளுக்கு மாத்திரமே அவரால் உபகாரமுண்டாயிற்றென்
பீர்களோ? அல்ல; இங்கிலாந்து, ஸ்காட்லாந்து இந்நாடுகளின்
பெரிய நகரங்களிலுள்ள சிறைச்சாலைகளுக்கும், ஜலஸந்தியி
லுள்ள தீவுகளுக்கும் அவர் போய் வந்தார். அவர் எந்த
விடத்திற்குப் போனாலும், பெண்களை வைத்திருக்கும் சிறைச்

சாலைகளையும், சங்கங்களையும்பற்றி அவற்றின் அதிகாரிகளுக்
குத் தமது அபிப்பிராயத்தை எழுதித் தெரிவித்துவந்தார்.
அவரது புகழ் பரவினது தமது நாட்டில்மாத்திரமேயல்ல;
அவர் வந்து பார்த்தபின்பு அவருடைய அபிப்பிராயத்தைக்
கேட்டுச் சீர்திருத்தஞ்செய்தற்பொருட்டு, பெர்ஷியா, பெல்
ஜியம், பிரான்ஸ், ஜர்மனியாகிய இந்நாடுகளின் அதிகாரிக
ளும் அவருக்குக் கடிதமெழுதினார்கள். 1838-ம் ௵ அவர்
தமது கொழுநனோடு பிரான்ஸ் தேசத்திற்குப் போய் அங்
குள்ள வைத்தியசாலைகள், பாடசாலைகள், மடங்கள், சிறைச்
சாலைகள் ஆகிய இவற்றையெல்லாம் பார்த்துவந்தார். அங்கே
போனபோது அவர் அத்தேசத்து அரசனையும் ராணியையுங்
கண்டு வார்த்தை சொன்னார்; தருமஞ்செய்கிற விஷயத்தில்
அவர்களும், தாமும் ஒரேவிதமாயிருப்பதைக் கண்டு தமக்
குள்ளே ஆனந்தப்பட்டார்.

அடுத்த வருஷத்தில் அவர் வசத்திலிருந்த சிறைச்சாலை
யின் வரும்படி சற்றே குறையத்தலைப்பட, அவர் அதுவே
கருத்தாயிருந்தார். சிறிய பெண்களுக்கும், ஸ்திரீகளுக்கும்
தனியேயிருக்க அங்கே இடங்கள் ஏற்படுத்தப்பட்டன;
சிறைப்பட்டவர்களைப் பிறதேசத்துக்கு அழைத்துக்கொண்
டுபோகிற கப்பல்களுக்கு உடனுக்குடன் பணம் வேண்டியி
ருந்தது. ஆதலினால் அவற்றிற்கெல்லாம் வேண்டும்பொரு
ளைச் சேகரிக்கும்பொருட்டு, அவர் பல பண்டங்களை விற்
குஞ் சந்தையொன்றைச் சீராக வைத்து விற்றதில், ஆயி
ரம்பவுன் இலாபங்கிடைத்தது. இதற்குப்பின் ப்ரை இரண்
டாவதுமுறை ஐரோப்பாவில் யாத்திரை சென்றார். இம்
முறை அவர் ஸ்விஜர்லாந்துவரையிலும் கருணைகொண்டு சென்
றார். அடுத்த வருஷம் அவர் ஜர்மனி, பெல்ஜியம் இந்நாடு
களுக்குப் போனார். இந்த இரண்டுநாட்டு அரசரும், அரசி
யும் அவரைக்கண்டு அதிகமாகக் கொண்டாடினார்கள்.

அவர் இவ்வாறு கண்டு வார்த்தைசொன்ன காலங்களில் அவர்களுக்கு மாலை சூட்டினதுமில்லை; தோத்திரபத்திரம் எழுதிக் கொடுத்ததுமில்லை; ஆபரணங்களால் அலங்கரித்ததுமில்லை; உபசார வார்த்தைகள் சொன்னதுமில்லை. இதுவிஷயத்தைப்பற்றி அவருடைய சகோதரன்மகள் எழுதியிருப்பதைப் படிப்பது யார்க்கும் இன்பந்தரத் தக்கதாகுமென்று கருதி அதை அடியில் எழுதுகிறோம்:— "என்னுடைய அத்தை ஜர்மனி தேசத்திலுள்ள சிறைச்சாலையைப் பார்க்க வேண்டுமென்றிருந்ததை, அந்நாட்டில் பெண்கள் சிறைச்சாலையின் அதிகாரத்தை வகித்துவந்த சீமாட்டிகளின் சங்கத்தார், ராஜகுமாரியாகிய வில்லியத்துக்கு அறியப்படுத்தியிருந்தார்கள். இந்தச் செய்தியைக் கேட்டவுடன் அந்த ராஜகுமாரியும் அதிக ஆசையோடு அப்படியே செய்யலாமென்று அநுமதி கொடுத்து, தமக்கு அதில் அதிக சந்தோஷமென்று காட்டுதற்பொருட்டு அந்தச் சபையைத் தமது அரண்மனையிலே வந்து கூடும்படி செய்தார். இதுமாத்திரமல்லாமல் அவர் தமது நண்பரில் இன்னும் பலரையும் அத்தையை உபசரிக்கும்படி வரவழைத்தார். அத்தை அங்கே போனபோது நாற்பது சீமாட்டிகள் கூடியிருந்தார்கள். தமிழ் நாட்டாராகிய நமக்கு, கூர்ச்சரநாட்டிலே வழங்கிவருகிற கூர்ச்சர பாஷை எப்படித் தெரியாதோ அப்படியே, ஜர்மன்பாஷை இங்கிலாந்து தேசத்தாருக்குத் தெரியாது ஆதலால், கவுண்டு பார்பன் என்பவர் அதை மொழிபெயர்ப்பவரானார்.

"நாங்கள் அங்கே போனபோது ராஜகுமாரி தாமே எழுந்து வந்து எங்களை அதிகமான அன்போடு அரண்மனைக்குள்ளே அழைத்துக்கொண்டுபோய் உட்காருவித்தார். அரண்மனையிலுள்ள மற்றவர்கள் வருமளவும் நாங்கள் அவ்விடத்திலே சற்றுநேரம், வார்த்தை சொல்லிக்கொண்டிருந்தோம். அங்கேவந்திருந்த சீமாட்டிகளெல்லாரும் அங்கே அடுக்கடுக்

காயிருந்த அறைகளில் உலாவிக்கொண்டிருந்தபடியே வினோதமாகப் பேசிக்கொண்டு, சற்றுநேரம் ராஜகுமாரியின் வரவிற்கு எதிர்பார்த்திருந்தார்கள். சற்று நேரத்திற்குள்ளெல்லாம் அவரும் வந்தார். ராஜகுமாரனாகிய சார்லஸ் அவ்விடத்திலிருந்தார்; இளவரசரும் அங்கே உடனே வந்துவிட்டார்."

"அத்தைக் கெதிராக எழுது பீடத்தின்மேல் எழுதுகோலும், மசியும், காகிதமும் வைக்கப்பட்டிருந்தன. மற்றச் சங்கத்தாரைப்போலவே என்னுடைய அத்தையும் பற்பலவாகிய விதிகளை எழுதினார். எழுதி முடிந்தபின்பு அத்தையானவர் அவற்றை அங்கிருந்தவர்களுக்கு வாசித்துக்காட்ட, அவையனைத்தும் ஜர்மனி பாஷையில் மொழிபெயர்க்கப்பட்டன. இங்கிலாந்து தேசத்திலுள்ள சங்கங்களைப்பற்றி அத்தை சங்கிரகமாகச் சொன்னார். எல்லாம் முடிந்தானவுடன், அத்தையானவர் வேத புத்தகத்தை யெடுத்துப் படித்து, அவர்களுடைய க்ஷேமத்தின் பொருட்டும், அவர்கள் இனிச்செய்ய நினைத்திருக்கின்ற காரியங்கள் இனிது முடிதற்பொருட்டும் பிரசங்கித்தார். அதன்பின்பு, ஜர்மனியை விட்டு நாங்கள் இங்கிலாந்துக்குத் திரும்பிப்போவதற்குள்ளே எங்களோடு வார்த்தை சொல்லவேண்டுமென்று ராஜகுமாரி எங்களை அழைத்தமையால், நாங்கள் அரண்மனைக்குப் போயிருந்தோம்; அவர்களெல்லோரும் அகமலர்ச்சி, முகமலர்ச்சியோடு ஆதரவாய் உபசரித்து அனுப்பினார்கள்" என்கிறாள்.

மகிமைபெற்ற நமது விக்டோரியா சக்கரவர்த்தினியாரின் அருமைத் திருமருமகளும், இப்பொழுது இந்தியாவுக்குச் சக்கரவர்த்தினியாயிருப்பவருமாகிய பிரின்செஸ் ஆவ் வேல்ஸ் பெருமாட்டியார் பிறந்தவிடமாகிய டென்மார்க்கு தேசத்து அரசன் ப்ரை பெருமாட்டியை ஆதிமுதற்கொண்டே கௌரவமாய் நடத்திவந்தார். அந்நாட்டாசி அங்குள்ள பாடசாலைகளையும், மற்றுமுள்ள இடங்களையும் அவர் பார்க்கும்

பொருட்டு அவளைத் தமது ரதத்திலே தம்மோடு சமமாக ஏற்றிக்கொண்டுபோய்க் காட்டியதுமன்றி அவளைத் தமக்கும் அரசனுக்கும் நடுவிலே வைத்துக்கொண்டு சாப்பிட்டார். இவ்வாறு அரசனோடு ஒரேபந்தியில் விருந்துண்ணும் பெருமையைப் பெறுபவர்கள் பெரும்பான்மையாய் அக்காலத்திலே அவர்களுக்குச் சந்தோஷமுண்டாகும்படி, நாட்டுவளம், நகரச்சிறப்பு, துரைத்தனப்பாங்கு முதலியவற்றின் விஷயமாய்ப் புகழ்ந்து கொண்டாடுவது வழக்கம்.

ப்ரை பெருமாட்டியைப்போலவே அவர் சகோதரன் மனைவியாகிய கர்னி பெருமாட்டியும், உலகத்தவர்க்கு நன்றி பயக்கத்தக்க இந்தத் தருமகாரியத்தில் அவரோடுகூடவே அவருக்குத் துணையாயிருந்தார். அவர்கள் இருவரும் அந்த வேளையில் பேதைகளான சில கிறிஸ்தவர்கள் படும் வருத்தங்களையெல்லாம் அரசனிடத்திலும், அரசியிடத்திலும் விருந்துண்ணும்போது நன்றாய்ப்படும்படி எடுத்துச் சொன்னார்கள். அவர்களுடைய நாடாகிய டென்மார்க்கிலுள்ள சிறைச்சாலைகளிருந்த பரிதாபமான நிலைமைப்பற்றி வேண்டிய அளவு முறையிட்டார்கள். டென்மார்க்கு தேசத்தார் குடியேறிய மேற்கு இந்தியா தீவுகளில் அடிமை வியாபாரம் நடப்பதைப்பற்றித் துக்கித்தார்கள். கர்னி பெருமாட்டி அப்பொழுதுதான் மேல் இந்தியா தீவுகளுக்குப் போய் அங்கே நடப்பதையெல்லாம் நேரில் பார்த்துவந்ததனால் அந்த அக்கிரமங்களையெல்லாம்பற்றி நெடுநேரமளவும் பேசினார்.

இவ்வாறாக ப்ரை பெருமாட்டி சிறைச்சாலையைச் சீர்திருத்தியதும், ஸ்திரீகளின் சங்கங்களை ஏற்படுத்தியதும், சிறைமீண்ட பெண்களுக்கும் குழந்தைகளுக்கும் வீடுவாசல்களை வாங்கிக்கொடுப்பது மாத்திரமேயல்ல; கடற்கரையோரமாய் அங்கங்கே காவலாயிருந்த மனிதர்கள் கல்விகற்குமாறு ஐந்நூறுக்குக் குறைவில்லாமல் புத்தகசாலைகளை ஏற்படுத்தினார்;

நகரங்களாவது, கிராமங்களாவது அருகேயில்லாமல் வெகு தூரத்துக்கப்பால் தனியேயிருக்கும்படி நேரிடுகிறவர்களுக்குப் படிப்பதற்கு நல்ல புத்தகங்களில்லாவிட்டால், நல்லறிவின்றித் தெய்வபக்திகுன்றி, நொடிப்பொழுது யுகப்பொழுதுபோல வருத்தமாயிருக்குமென்று அதற்கு முன்பே அவர் அறிந்திருந்தார்.

இதற்கென்று 500 இடங்களேற்பட்டு, ஆணும், பெண்ணும், குழந்தைகளுமாக 21,000 பேர் படித்தார்களென்றால், அது எவ்வளவு தூரம் பரந்திருக்கவேண்டுமோ அதையறிந்துகொள்ளுவ தரிதன்றோ? இதற்காகக் கையொப்பக்காரரிடமிருந்து வருஷமொன்றுக்கு ஆயிரம் பவுன் கிடைத்தது; துரைத்தனத்தாரை ஐந்நூறு பவுன் கேட்டதில், அவர்கள் தடைசொல்லாது அந்தத் தொகையைக் கொடுத்ததுமல்லாமல், பின்னிட்டு வேறாக நானூறு பவுனுங் கொடுத்தார்கள்.

இவ்வாறாக அவர் தொடங்கிய காரியம் நிர்விக்கினமாய் நிறைவேறியது. அவர் இந்தப் பணத்தைக்கொண்டு கடற்கரையோரத்திலேயிருக்கிறவர்களுக்காக 12,880 புத்தகங்கள் அடங்கிய 780 புத்தகசாலைகளையும், கப்பல்களிலே பிரயாணஞ் செய்கிறவர்களின் உபயோகத்திற்காக 1867 புத்தகங்களடங்கிய 48 புத்தகசாலைகளையும் ஸ்தாபித்தார்; கப்பல்களிலுள்ள சிறுவர்கள் கல்வி பயிலுதற்பொருட்டு 6464 பாடசாலைப் புத்தகங்களையும் வாங்கினார். இவற்றைத் தவிர்த்துச் சிறு புத்தகங்கள் 5357 இருந்தன; இவையெல்லாஞ் சேர்ந்து 52,464 புத்தகங்களிருந்தன. ப்ரை செய்த தருமந் தழைத்தோங்கவே, அவர் பெருமை எங்கும் பரந்து, அவரால் உபகாரம்பெற்று முன்னுக்கு வந்தவர்கள் அவருக்கு இன்னாரென்று தெரியாதிருந்தும், அவர்கள் அந்நன்றியை மறவாமல் அவருக்கு வந்தன பத்திரங்கள் எழுதியவண்ணமாயிருந்தார்கள். கடைசியாக அவர் மருத்துவிச்சிகள் என்ற ஓர் கூட்டத்தாரிருப்

பது எல்லோருக்கும் அவசியமென்று கண்டு, புதிதாய் அவர்களை ஏற்படுத்தத் தொடங்கினார்; அவர் நோயாளியிருக்கும் அறைகளுக்குச் செல்லுகையிலும், அவைகளுக்கு மருத்துவஞ் செய்யும்போதும், வயித்தியம் பார்க்கத்தெரிந்த நல்ல பெண்களில்லாமையினால் அப்படிப்பட்டவர்கள் அவசியமென்று நினைத்துத் தாமே முதலில் பலரைச் சேர்த்து அவர்களைப் பயிற்றுவிப்பதே தொழிலாக இருந்தார்.

இந்நன்முயற்சியில் அவர் சகோதரனுடைய மனைவியாகிய ஸாமியுவெல் கர்னி பெருமாட்டி அவருக்கு வேண்டியபடியெல்லாந் துணையாயிருந்தமையால், அந்த வேலை முழுவதையும் அவர் வழியாகவே பார்த்துவரும்படி விட்டுவிட்டார். அதற்கு மகாராணியார் வேண்டுமளவு உதவிசெய்ய, இளமைப்பருவமுள்ள ஸ்திரீகள் அநேகரைத் தேர்ந்தெடுத்து, வயித்தியஞ்செய்யக் கற்றுக்கொடுத்தார்கள்; அந்தக் கூட்டத்தாரைச் சேர்ந்த பெண்களெல்லாரும் ஒருவருக்கொருவர் சகோதரிபோலிருந்து ஒரேவிதமாக உடை உடுத்து, ஒவ்வொருத்தியும் வருஷமொன்றுக்கு இருபது பவுன் சம்பளம் பெற்றுவந்தார்கள். இதைக்கொண்டு பார்க்குமளவில் ப்ரை பெருமாட்டியின் சரித்திரமும் ப்ளாரென்ஸ் பெருமாட்டியின் சரித்திரமும் ஒன்றோடொன்று ஒற்றுமையாகின்றன; அது எவ்வாறெனில், 1840-ம் ௵ மருத்துவப்பெண்கள் கூட்டம் முதலிலுண்டாக்கப்பட்டது; அக்காலத்தில் ப்ளாரென்ஸ் பெருமாட்டியாருக்கு வயது இருபது; ஆகலினால் அவர் அந்தக் காலந்தொடங்கி ப்ரை பெருமாட்டியின் கருத்துக்கிணங்க, அதில் ஆசைபற்றி, அதன்பின் தமது ஜீவகாலம் முழுமையும் அதிலேயே செலுத்தினாரென்று எண்ணுவதற்கிடமுண்டு.

நமது இளவரசராகிய பிரின்ஸ் ஆவ் வேல்ஸுக்கு ஞானஸ்நானம் நடக்கையில், அதற்காக ஜர்மனி தேசத்து வேந்தர்

வந்திருந்தார். அப்பொழுது அவர் ப்ரை பெருமாட்டியைக் கண்டு பழமைபாராட்டி வார்த்தை சொல்லியதுமல்லாமல், தாமே அவர் வீட்டுக்குச் சென்று அவரோடுகூட இருந்து சிற்றுண்டியுண்டு அவரைக் கௌரவப்படுத்திவிட்டுப் போனார். தர்ம காரியமாக ப்ரை பெருமாட்டி இதற்குமுன் ஜர்மனிக்கு யாத்திரை போயிருந்ததை அவர் மறந்ததுமில்லை, அலக்ஷியஞ்செய்ததுமில்லை. சிறைச்சாலைகளிலும், பைத்தியக்காரரை வைத்திருக்கும் வைத்தியசாலைகளிலும் வேண்டிய சீர்திருத்தங்களைச் செய்யவேண்டுமென்ற ஆவலுடன் எவ்வளவோ தூரம் யாத்திரைசெய்த ஒரு ஸ்திரீயை அவள் வீட்டிலேபோய்ப் பார்ப்பது முறைமையேயென்று அவர் நிர்மானித்தார்.

இந்தியாவின் சக்கரவர்த்தினியாகிய விக்டோரியா பெருமாட்டியார் தமக்கு விவாகமாகிச் சிலநாள் சென்றதும், ப்ரை செய்யத்தொடங்கிய நன்மைகளுள் ஒன்றாகிய திக்கற்ற பெண்களுக்குத் துணைசெய்யுந் தருமத்துக்கென்று ஐம்பது பவுன் கொடுத்தனுப்பினதுமன்றி, தம்மை வந்து பார்க்கும்படியும் அவரை வரவழைத்தார். லண்டன் நகரத்தில் அரண்மனை வீட்டில் பெரிதான விருந்தொன்று நடந்தபொழுது ப்ரை பெருமாட்டியார், நமது சக்கரவர்த்தினியாரின் நாயகரான ஆல்பெர்ட்டு பிரபுவுக்குப் பக்கத்தில் வீற்றிருந்து விருந்துண்டார். அப்பொழுது அவர் அந்த ராஜபிரபுவுடன் என்ன பேசிக்கொண்டிருந்தாரோ அதை ப்ரை பெருமாட்டி தாமே சொல்லியிருப்பதைக் கேட்பது பிரியமாயிருக்குமாதலால், அதை அடியிற் குறிக்கிறோம்:—"விருந்துண்டபோது மகாராணியாரின் பர்த்தாவான ஆல்பெர்ட்டு ராஜபிரபுவுடனும், இங்கிலாந்துக்கு அக்காலத்திலே பிரதான மந்திரியாயிருந்த ஸர் ராபர்ட் பீல் துரையுடனும் நெடுநேரமளவும் வார்த்தைசொல்லிக்கொண்டிருந்தேன்; கிறிஸ்தவர்கள் தங்கள் மக்களுக்கு

வேண்டிய அளவு வைதிகமார்க்கத்தைப்பற்றிய விஷயங்களைக் கற்பியாதிருப்பதையும், மதப்பற்றுடையவர்களாய் பக்தியார்க்கம் தவறாதிருப்பதின் பெருமையையும், நான் எங்கும் போய்ப் பார்த்தமட்டில் எப்படிப்பட்டவர்களுக்கும் திருப்தியுண்டாவதற்குக் காரணம் ஈசுவர பக்தியைத் தவிர்த்து வேறொன்றுமில்லையென்பதையும்பற்றி நான் ராஜபிரபுவுடன் பேசினேன்; அதன்பின்பு ஐரோப்பாவின் நிலைமையையும் நியாயஸ்தலங்களிலே மதவிஷயத்தில் ஞானம் அதிகப்படுவதையும் சிறைச்சாலைகளின் நிலைமையையும்பற்றிப் பேசினோம். இவ்வளவோடு போகாமல், நான் தேசயாத்திரைகள் செய்ததையும், ஐரோப்பாவின் தற்கால நிலைமையையும், அங்கங்கே அவரவர்கள் காலக்ஷேபஞ் செய்யும் விதத்தையும், அவரவர்கள் நடையுடை பாவனைகளையும்பற்றி நாங்களெல்லோரும் சாப்பிட்டெழுந்திருக்குமளவும் வேடிக்கையாய் வார்த்தை சொல்லிக்கொண்டிருந்தோம்." என்று சொல்லுகிறார்.

"முயற்சி திருவினை யாக்கு முயற்றின்மை
யின்மை புகுத்தி விடும்"

என்றும் "ஒருவன் தன் கடமையை உன் கண்முன்னே நன்றாய்ச் செய்வானானால், அவன் அரசன்முன்னே நிற்பான்; அற்பர் முன்னே நில்லான்" என்றும் கூறியபடி ப்ரை நன்றாய்ப் பாடுபட்டுப் பெருமை பெற்றவர்: அவருடைய சரித்திரத்தைப் படிப்பவர் தமக்குண்டாகும் நலத்தை விரும்பாமல், பரோபகாரஞ் செய்வதிலேயே தமது ஜீவகாலத்தைப் பின்னிட்டுப் புகழுடம்பைப் பெறுவர். நன்றாக உழைப்பவர் அதிகமாக வேலை செய்வதனால் இளைத்துப்போவதும், சோம்பலுடையோர் வேலைசெய்யப் பயந்து தேம்பித் திரிவதும் உலக வழக்கமன்றோ? எலிஜபெத் ப்ரை பெருமாட்டியோ, நெடுங்காலம் ஒழிவின்றி வேலைசெய்துவந்ததனால், ஸாதாரணமான பெண்

கள் பலர் கூடிச் செய்யத்தக்க பெரிதான வேலையைத் தாமொருவராகவே நின்று முடிக்க வல்லவராயினார்.

அவர் தேகவியோகமாவதற்குச் சில வருஷங்களுக்குமுன்பே அவர் தேகம் நோயால் மிக மெலிந்துபோயிற்று; கஷ்டப்பட்டாலும், சுகப்பட்டாலும் பேதமில்லாமல் எப்பொழுதும் தமது வேலையை ஒரேசீராய்ச் செய்துவந்தார். அவருடைய தெய்வபக்தி அவர் இறந்துபோவதற்கு முன்னே சொன்ன அடியிற்கண்ட வார்த்தைகளால் நன்றாய் விளங்கும்:— "நான் பதினேழு வயதுள்ள சிறு பெண்ணாயிருக்கும்போதே, நான் எப்படிச்செய்தால் கடவுள் திருவுள்ளத்துக் குவப்பாயிருக்குமோ அப்படிச் செய்யவேண்டுமென்று என் மனதிலோர் தோற்றமுண்டாயிற்று. ஆதலால், அதுமுதல் நான் இரவிலாயினும் பகலிலாயினும், தூக்கத்திலாயினும் விழிப்பிலாயினும், நோய்கொண்டிருந்தாலும், சுகமாயிருந்தாலும் எப்பொழுதும் இந்த எண்ணம் எனது நெஞ்சைவிட்டு ஒரு கணப்பொழுதாயினும் நீங்கினதில்லை" என்கிறார்.

எலிஜபெத்து ப்ரை 1845-ம் வரு அக்டோபர்மீ 13உ பரலோகஞ் சென்றார். அவருடைய தேகத்தைப் பார்க்கிங்கில் அதற்குப் பல வருஷங்களுக்கு முன் சிறுகுழந்தையாயிருக்கும்போதே இறந்துபோன அவருடைய செல்வமகளை அடக்கஞ்செய்திருந்த இடத்துக்குப் பக்கத்திலே அடக்கஞ்செய்தார்கள். "கடவுள் தமக்காக உழைப்பவர்களைப் புதைத்துவிட்டுத் தமது வேலையைச் செய்துகொண்டேயிருக்கிறார். அவருக்கு இத்தனை பெருமையை யுண்டுபண்ணின விசித்திரமான அந்தக் காரியங்களெல்லாம் நன்றாய் அபிவிருத்தியாகி, இந்நாளளவும் அவருடைய பேர் அழியாமலிருக்கிறது." எலிஜபெத்து ப்ரை, ப்ளாரன்ஸ் நைத்திங்கேல் ஆகிய இவ்விரண்டு புண்ணியவதிகளால் ஆரம்பிக்கப்பட்ட இந்நன்முயற்சி இக்காலத்தில் இன்னும் எத்தனையோமடங்கு அதிக

மான சீர்திருத்தம்பெற்று, இப்பொழுது இந்தியாவிலுள்ளவர்களும் அதன் பயனையெல்லாம் அநுபவிப்பதற் கேதுவாயிருக்கின்றது. எலிஜபெத்து ப்ரை என்பவர் சிறப்பான ஆடையாபரணங்கள் தமக்கு வேண்டாமென்று வெறுத்தது, இந்துதேச ஸ்திரீகளின் மனதிற் பதிந்ததேயாயின், அவர்களுக்கு நல்ல புத்தி வாராதிருக்குமா? ஆடையாபரணங்களை யணிந்து கொண்டு, படிப்பில்லாமலும், கடவுளால் அளிக்கப்பட்ட அறிவை விருத்திசெய்யாமலும், நோய்கொண்டவர்களையும் வருத்த முற்றோரையும் பார்த்து ஆதரியாமலுமிருந்தால், அவர்களால் யாருக்கு என்ன பயனுண்டு; அவ்வாறான பெண்களை எலிஜபெத்து ப்ரை காண்பாரேயாயின் அவர் மனம் என்ன பாடுபடாது?

"குஞ்சி யழகுங் கொடுந்தானைக் கோட்டழகும்
மஞ்ச ளழகு மழகல்ல—நெஞ்சத்து
நல்லம்யா மென்னு நடுவு நிலைமையால்
கல்வி யழகே யழகு."

ELIZABETH BARRETT BROWNING.

எலிஜபெத்து பாரெட்டு ப்ரௌநிங்கு.

1806–1861.

"அடியவர்க் காவிலைய அரங்கச் செல்வனை
அடிபணிந் தேத்தித் தொழுவோம் யாமே."

நமது நாட்டை அதிகமான சிறப்போடு பரிபாலனம் செய்துவந்த விக்டோரியா சக்கரவர்த்தினியார் காலத்தில் புகழ்பெற்று விளங்கிய மாதுசிரோமணிகளைப்பற்றிச் சரித்திரம் எழுதப்புகுந்த யாம், "கவிசக்கரவர்த்தினி" என்று வேறோர் கவிராயரே புகழும்படியான பெருமை வாய்ந்த எலிஜபெத்து பாரெட்டு ப்ரௌனிங்கு என்பவளைப்பற்றிச் சொல்லாவிடில் அந்தச் சரித்திரம் பூர்த்திபெறாதென்பது நிச்சயம். அவள் வாழ்வின் வரலாற்றையும் சிறப்பையும் எடுத்து விரித்துரைத்தால், ஆங்கிலேய ஸ்திரீகளுக்கு உண்டானது போலவே நமது நாட்டுப் பெண்களுக்கும் அதில் இச்சையும் இனிப்பும் உண்டாகுமென்றே நம்புகிறோம். ஏனெனில், நோயாளியாயும் சுகதேகமற்றவளாயும் பலநாள் படுக்கையறையைவிட்டு வெளிப்புறப்படக் கூடாதவளாயும் அம்மாது இருந்தபோதிலும், தனது நுண்ணறிவாலும் ஜீவகாருண்ணியத்தாலும், புண்ணியவசத்தால் தான் பெற்ற வாக்குமகிமையாலும் அநேகம் அரிய பெரிய கிரந்தங்கள் செய்து காவியாலம்பநம் பண்ணினாள். ஆதலின் ஒருவர் எவ்வளவு வருத்தமுற்றிருந்தபோதிலும், தம்மைப்போன்ற வேறு பெண்களுக்கும், சிறுவர் சிறுமிகளுக்கும் வருத்தம் நீக்கிச் சுகமுண்டாக்கித் தமது ஜன்மத்தை ஸபலமாக்கக்கூடுமென்பதற்கு அவளது சரித்திரம் சிறந்த திருஷ்டாந்தமாகின்றது. எலிஜபெத்து மௌல்டன் பாரெட்டு என்பவள், இன்றைக்கு ஏறக்குறைய

எலிஜபெத்து பாரெட்டு ப்ரௌனிங்கு.

95 வருஷங்களுக்கு முன்னே 1806-ம் வருஷத்தில் ஆங்கிலேயநாட்டின் வடபாகத்தில் பிறந்தவள். இவள் பிறந்த சிறிதுகாலத்துக்குப்பின் இவளது பிதா மேல்நாட்டில் தமக்குச் சொந்தமான ஒரு அழகிய பிரதேசத்தில் வீடுகட்டி வாழ்ந்துவந்தாராகையால், இப்பெண்மணி சிறுபிராயமுழுதும் அங்கே வளர்ந்துவந்தாள். அவளுக்கு இளமைப்பருவம் தொடங்கியே செடி கொடி புஷ்பம் முதலியவைகளில் விருப்பம் அதிகம். அவளது உடன் பிறந்தவர்களும் வெள்ளை ரோஜாவை நன்றாய்ப் பரிபாலிக்கும் திறமையுள்ளவளென்றே அவளைக் கொண்டாடியிருக்கிறார்கள். அவளும் தனது கவிகளில், பூஞ்செடிகளுக்குப் பாத்திகட்டிப் பலிக்கும்படி செய்யும் விதத்தைப்பற்றிக் கூறி, பசும்புல் தரையில் மனிதனைப்போல் ஒரு உருவம் மிகப் பெரியதாகப் புஷ்பத்தால் உண்டாக்கி அவ்வுருவத்திலே கண்களிருக்கவேண்டியவிடத்தில் நீலோத்பலங்களை வைத்து வளர்த்து, ஆகாசத்தை நோக்கி மலர்வன குளிர்வனவாய் அமைத்ததாக வர்ணனையையும் செய்திருக்கிறாள். ப்ரௌனிங்கு இளம்பிராயத்திலேயே நான்கு அதிகாரத்தில் ஒரு பெரிய காவியம் எழுதினாள். அதைக் கண்டு அவளது தகப்பனார் மிகவும் பெருமைகொண்டு அதை அச்சில் பதிப்பித்தார். அவள் மிகவும் மெல்லிய தேகமுடையவளாதலால் சௌக்கியக்குறைவு உண்டாகி வெகுவாய் அவள் வீட்டிற்குள்ளேயே இருக்கும்படியாயிற்று. அந்த வேளைகளில் எழுதுவதும், கையில் கிடைத்த புஸ்தகங்களைப் படிப்பதும், தனது அருமைத் தமையன் எட்வர்ட்டு என்பவன் கிரீக்கு, லத்தீன் படிக்கும்போது தானும்கூடப் படிப்பதுமே அவளுக்குப் பொழுதுபோக்காக இருந்தன. அவள் இந்தவிதமாக எழுதிப் படித்துக் காலங்கழிப்பது அவளது பாட்டியாருக்கு இஷ்டமில்லை. இப்படி கிரீக்கு படிப்பதை விட எலிஜபெத்துப் பூ வேலையும் தையல் வேலையும் நன்

றாய்ச் செய்து முடித்தால் மிகவும் மேன்மையாயிருக்கும் என்று அவள் சொல்லுவது வழக்கமாம். ஆனால் எலிஸபெத்தின் பிதாமட்டும் அவள் படிப்பதையும் எழுதுவதையும் வெகுவாய் அபிவிர்த்தி செய்வதிலேயே கருத்தாயிருந்தார். மேலும் கண்ணில்லாத அந்தகரான சிநேகிதரொருவர் கிரீக்கு பாஷையில் மிகவும் நிபுணராயிருந்தார். அவர் அந்தப் பாஷையில் அவளுக்கு அதிகமான ஊக்கத்தை உண்டாக்கினார்.

அவள் இருபது பிராயமானபோது தான் பாடின கவிகளையெல்லாம் சேர்த்து ஒரு புத்தகமாகத் தன் பெயரைக் குறிக்காமல் அநாமதேயமாய்ப் பதிப்பித்து வெளிப்படுத்தினாள். அக்கவிகள் அத்தனையாய்ச் சுகமானவைகளல்ல. ஆயினும் அவள் அவ்விஷயத்தில் முயற்சியை விட்டுவிடவில்லை. இப்படியிருக்க இன்னம் இரண்டு வருஷங்களுக்கெல்லாம் அவள் தாயை இழக்கும்படி நேர்ந்தது. தாயிறந்துபோகவே, தகப்பனுருக்கு ஆறுதல் சொல்லித் தேற்றவும், அவளுடைய உடன் பிறந்தவர் எழுபேரையும் காத்து ரக்ஷிக்கவும், அவளைவிட வேறே கதியில்லாமல் போய்விட்டது. இந்த வருத்தம் போதாதென்று கடவுள் அவள் பிதாவுக்குத் திரவிய நஷ்டமு முண்டுபண்ணினார். 'பட்ட காலிலே படும் கெட்ட குடியே கெடும்' என்றபடி இப்படிப் பலவிஷயத்திலும் கேடு சம்பவிக்கவே மேல்டன் பாரெட்டு என்பவர் மால்வரன் மலைப் பிரதேசத்திலுள்ள தமது நேர்த்தியான மாளிகையை விற்றுவிட்டு லண்டன்மா நகரத்துக்குப் போய்ச்சேர எண்ணங்கொண்டார்." ஆயினும் வேறுபல இடையூறுகளால் இரண்டு வருஷகாலம் அங்கே போய்ச்சேர முடியாமல் இங்கிலாந்தின் தென்கரையில் கடலோரத்துப் பட்டணமொன்றில் காலங்கழிக்க வேண்டியதாயிற்று. இக்காலத்தில்தான் நமது மாது தனது இரண்டாவதான பிரபந்தத்திரட்டைப் பதிப்பித்து

வெளியிட்டாள். இது 1833-ம் வருஷம். பிறகு லண்டன் நகரஞ் சேர்ந்தார்கள். ஜனனம் முதல் வெளிகளிலே கடவுள் சிருஷ்டிகளின் இயற்கை யழகைக்கண்டு நன்றாயனுபவித்துச் சுகமடைந்த நமது மாதுசிரோமணிக்கு, லண்டன் நகரத்து மாளிகைகள் நிறைந்த தெருக்களில் அடைபட்டுப் பூர்வ சுகமெல்லாங் கெட்டு மூச்சுக்காற்றும் நிர்ப்பந்தமாய்ப் பெற வேண்டியதாயிருந்தது வெகு கஷ்டமாயிருந்திருக்கவேண்டும்.

இந்தக் காரணங்களெல்லாம் ஒருங்குசேர்ந்து, தேக சௌக்கியம் குறைந்து, வியாதியுண்டாகி, அவள் தனது படுக்கை அறையை விட்டு வெளியிலே புறப்பட முடியாமற் போயிற்று. ஆயினும் கவிகள் நூதனமாய்ப் பாடுவதிலும் புஸ்தகங்களைப் படிப்பதிலும் பிரியம் மேன்மேலும் அதிகமாயிற்று. மேலும் புதியவர்களான சிநேகிதர் பலருண்டானார்களாகையால், தான் அசௌக்கியத்தால் அவர்களைப் போய்ப் பார்க்க முடியாத காலங்களில் நேரே சம்பாஷிப்பதைப்போல அவர்களுக்குக் கடிதங்கள் எழுதிக் காலங்கழிப்பாள்.

அவள் பாடிய தனிப்பாட்டுகளெல்லாம் அக்காலத்துப் பத்திரிகைகளிலும் சஞ்சிகைகளிலும் வெளியாயின. மிஸ். மிட்பர்ட்டு என்னும் பாடகியின் வேண்டுகோளின்மேல் எழுதப்பட்ட "கங்கையின் கதை" என்னும் பாடலானது, "கங்கா நதியில் பல இந்துப் பெண்கள் கூடித் தங்கள் நாயகர்கள் வந்து கூடுவதைப்பற்றிச் சகுனம் பார்க்கும்படி அழகாகச் சித்திரிக்கப்பட்ட கொட்டாங்கைச்சிகளில் சிறிய விளக்குகளை ஏற்றிப் புஷ்பத்துடன் மிதக்க விடுவதைப்பற்றிய வெகு நேர்த்தியான ஆற்றுவரிப்பாடலாம்.

"மிகவும் அழகான சந்திரபிம்பம்போன்ற முகமும், அதனிடையில் எடுப்பும் சாய்ப்புமாய் அமைந்த நெற்றியும், பூர்ண சந்திரன் முழுநிலாவைச் சொரிந்தாற்போல் முத்தினொளியை வெளிவிடுகிற வடிவொத்தவாயும், கொவ்வைக்கனியும் கோலம்

திகழ் பவளக்கொழுந்துண்டமும் போன்று பனிமொழிகளுக்கு ஆதாரமான உதடும், கறுத்துப் புடைபெயர்ந்து மிளிர்ந்து நீண்டு ஒளிவீசுகின்ற தாமரைபோன்ற கண்களும், குளிர்ந்து அழகுபெற்ற இரண்டு தாமரைமலர்களை மதத்தாலே மிதித்தாடுகின்ற இரண்டு வண்டு வரிசைபோன்ற புருவட்டங்களும், சுருண்டு நீருண்ட மேகம்போல் கறுத்து விளங்கும் கூந்தலும், மேன்மையும் மிருதுவும் பொருந்திய ரோஜாமலரின் நிறமும் புகழுமுடைய சரீரத்தின் அழகுமுடையவள் இப்பெண்கள் நாயகம்" என்று மிஸ். மிட்பர்ட்டு என்பவள் இவளுடன் ஆதியில் சிநேக ஆரம்பத்திலேயே இவளைப்பற்றி வர்ணித்திருக்கிறாள். இதனோடு இவள் வயசத்துக்குச் சுபாவமாயுள்ள அழகையும், நிறம், விலை, இவைகள் பொருந்திய உடுப்பையும் சேர்த்துக் கூறின், அவளது சுரூபம் இத்தன்மையதென நன்றாய் விளங்கும்.

அவள் ஒரு சமயத்தில் அருமையும் ஆழ்ந்த நுண்பொருளும் தத்துவ விளக்கமுமுடையனவாகிய கவிகளைப் பாடுவாள். சில தருணங்களில் வெண்மையாயும் உருக்கமாயும் யாவர் மனதையும் கவரத்தக்க நயத்தோடு, தனக்கு உஷ்ண தேசங்களிலிருந்து பரிசாகவந்த இரண்டு புறாக்களின்மேல் கட்டிய கவிபோன்ற பாடல்களையும் பாடுவாள். 1837-ம் வருஷத்தில் நான்காவது உவில்லியம்தேகவியோகமானவுடன் அப்போது பட்டம்பெற்ற நமது மகாராணியார் விக்டோரியாவின்பேரில் ஒரு பாட்டைப் பாடிப் பிரசுரம் செய்தாள். பிறகு ஒரு வாரத்துக்கெல்லாம் "விக்டோரியாள் சிந்திய கண்ணீர்" என்கிற உருக்கமான வாழ்த்து வரிப்பாடல்களைப் பாடினாள். அந்தக் கவியானது இந்த 63 வருஷகாலமாய் அடிக்கடி எல்லாரும் கொண்டாடத் தக்கதாயிருந்தது.

எலிஜபெத்து மாது, இப்படி தான் இடைவிடாமல் படிப்பதோடு, தனது சகோதரர்களுக்கும் கிரீக்கு கற்பித்துவந்

தாள். அவளது தேகம் அதிகமாக மெலிவடைந்து மிகுந்த விசாரத்தைக் கொடுக்கும்படியான நிலைமைக்கு வந்ததைக் கண்டு, வைத்தியர் லண்டனைக்காட்டிலும் மிருதுவும் குளிர்ச்சியும் சுகமுமுள்ள நாட்டிற்குப் போய் வாசஞ்செய்யும்படி எச்சரிக்கை செய்தார். ஆனாலும் தூர பிரயாணத்துக்குத் தகுந்த தேகவலிமையில்லாமையைக் கண்டு அவள் அண்ணனுடன் அவளைத் தென்மேற்குக் கரையோரத்திலுள்ள தார்க்வே என்னும் நகரத்துக்கு அனுப்பினார்கள். அவள் அவ்விடத்தில் பிழைப்பாள் என்கிற நிச்சயமில்லாமல் தத்தளித்துக்கொண்டிருந்தாளாயினும், இடையிடையில் சற்றுத் தெளிவாக இருக்கும்போது படிப்பையும் எழுதுவதையும் நிறுத்தாமல் கையாண்டுவந்தாள். இப்படிப்பட்ட சமயத்தில் "உலகத்திலே யாவரும் அதிக ஆவலாக ஜீவனோடிருக்க விரும்புவார்கள். எனக்கோ கவலையற்று ஓய்வுற்று இருப்பதே விருப்பம். இவ்விதமான நிம்மதியைப்பற்றிச் சொல்லும் பாசுரங்களே நான் மிகவும் ஆசையோடு விரும்பும் பாசுரங்கள்" என வுரைத்தும், "தேவன் தனது அன்பர்களுக்கு அறிதுயிலளித்துச் சுகமுறுகிறார்" என்று பொருள்படும்படியான பழமொழி வாக்கியத்தை எடுத்து உதாரணங்காட்டியும், தனது நண்பர் ஒருவருக்கு எழுதியிருக்கிறாள். இக்காலத்தில், மிகவும் மேன்மையும் கருத்தும் நிறைந்த "தூக்கம்" என்கிற தனிப்பாடல் முதலியவைகள் அடங்கிய மூன்றும் புஸ்தகத்தை அச்சிடுவித்து வெளிப்படுத்தினாள்.

இவ்வாறு அதிகமான நோய்கொண்டு எலிஜபெத்து மாது வெகுவாக வருத்தமுற்றிருக்கும்போது அவளுக்கு இன்னொரு விசனமுண்டாயிற்று. அவளுடன் பிரியாத்தோழனாய் அவளிடத்தில் அதிகமான அன்புடையவனாயிருந்த அவளது அண்ணன் எட்வர்ட்டு சிறு படகு தள்ளிப்போகையில் படகு கவிழ்ந்து முழுகிப்போய்விட்டான். அந்தப் பிரே

தத்தைக் கண்டெடுப்பதற்கு வெகுநாள் சென்றன. இதனிடையில் அண்ணனுக்காக அவள் பட்ட கஷ்டத்தையும் வருத்தத்தையும் பார்த்தால், நோயாளியான அவளும் விசனந்தாங்காமல் இறந்துபோவாளென்றே தோன்றியது. "இத் துன்பமானது என்னை இடி இடித்துத் தள்ளினதுபோலிருந்தது" என்று அவளே எழுதியிருந்தாளாயினும், பிறகு அதைப்பற்றிப் பேசுவாவது, தனது பிராண சிநேகிதர்களுக்கு எழுதவாவது அவளுக்குத் துணிவுண்டாகவில்லை. என்றாலும் தன் மனதிலுண்டான விசனத்தை "மஹார்ணவத்திலிருந்து" என்னும் சில வரிப்பாடல்களில் மிகவும் அழகாகப் பாடியிருக்கிறாள். சற்றே சரீரத்தில் வலிவுண்டானதும் தன்னூருக்குத் திரும்பிப் போகவேண்டுமென்று அவளுக்கு அதிகமான ஆசை எழுந்தமையால், 1841-ம் வருஷம் வசந்தகாலத்தில் புறப்பட்டுப்போய், நாலாவது வருஷம் திரும்பிவந்து சேர்ந்தாள். அப்பொழுது அவளது தகப்பனார் லண்டன் நகரத்தில் விம்பில் தெருவில் குடியிருந்தார். இவளது கவன சக்தியைக் கண்டு இவளுடன் நட்புக்கொள்ள அநேகர் விருப்பமுற்று வந்தார்கள். ஆனால் வெகுநாளாக வியாதியாயிருந்து தனியே படித்துக் காலங்கழித்தவளாகையால் அந்நியரைப் பார்த்துப் பேசுவது அவளுக்கு வருத்தமாகவே யிருந்தது. 1844-ம் வருஷத்தில் அவள் தனது பாடல்களை மறுபடியும் சேர்த்து அச்சிடுவித்தாள். அதில் எல்லாராலும் கொண்டாடப்பட்ட "பாலர் அழுகை" என்கிற பாடல் வெளிவந்தது.

இது வெளியானபோது, நிலக்கரிச் சுரங்கங்களிலும் யந்திர சாலைகளிலும், சிறுவர்களும் சிறுமியர்களும் வேலைசெய்து வரும் காலத்தையும் விதத்தையும்பற்றிச் சட்டம் ஒன்றும் ஏற்படவில்லை. அதுவிஷயமாக விசாரணைச் சபையொன்று ஏற்படுத்தவே, மிகவும் கோரமான சங்கதிகள் வெளியாயின. ஏழைப்பெண்களும் சிறு குழந்தைகளும் பூமியின் கீழ்

நிலவறைகளில் நிலக்கரி ஏற்றிய பாரமான வண்டிகளை, இருப்புச் சங்கிலிகளைத் தங்கள் அரையில் கட்டிக்கொண்டு தலைநிமிர்ந்து நடக்கமுடியாத இருட்டுவழி மூலமாய் நாள் முழுதும் சூரிய வெளிச்சமும் நல்லகாற்றும் இன்னதென்று தெரியாமல், நிர்ப்பந்தமாய் இழுத்து வேலை செய்துவருகிறார்கள் என்று தெரியவந்தது. குழந்தைகள் சற்று விளையாடிச் சுகமனுபவிக்கவாவது படிப்பு என்கிற வாசனையைப் பெறவாவது கொஞ்சமேனும் இடமில்லாமல்போகவே, அவர்கள் நாகரிகம் கெட்டு உணர்ச்சியற்றவரானார்கள் என்பது ஆச்சரியமல்ல. யந்திரசாலைகளிலும் இதேமாதிரியாகவே ஓய்வு என்பதற்கு இடமேயில்லை; இருபத்துநான்குமணி கொண்ட ஒருநாளில் 14, 15 மணி காலம் ஒரே வேலையை ஓயாமலே செய்யும்படி பண்ணிவந்தார்கள். இவ்வாறு நாள் முழுதும் உழைத்துக் குணமற்றுப்போன பெண்களுக்குத் தங்கள் வீடுகளிலும் சௌக்கியமென்பது எப்படி உண்டாகும்? ஆனதுபற்றியே இவற்றையெல்லாம் கண்டு மனமிரங்கிய சிஷ்டர்களாகிய சில கனவான்களும் உத்தமஸ்திரீகளும் ஒன்று சேர்ந்து, இச்சிறுவர்கள் சிறுமிகளின் வேலை விஷயமாகச் சட்டம் ஒன்று ஏற்படுத்தி ஒழுங்குக்குக் கொண்டுவர வேண்டும் என்று பார்லிமெண்டுசபையாரைப் பலமுறைவேண்டிக்கொண்டார்கள். அப்படியே அந்தச் சபையார், நிலக்கரிக் கனிகளில் சிறுவர்களையும் ஸ்திரீகளையும் வேலைசெய்ய வைத்துக்கொள்ளக் கூடாதென்றும், 14 வயதுக்குட்பட்ட சிறுவர்களையும் சிறுமிகளையும் யந்திரசாலைகளில் வேலைக்கு வைத்துக்கொள்ளக்கூடாதென்றும், வேலைசெய்யவேண்டிய கால அளவையும் நன்றாய் நிர்ணயித்துச் சட்டம் ஏற்படுத்தியதுமல்லாமல், ஒவ்வொருவனும் தனது குழந்தைகளைப் பள்ளிக்கூடத்துக்கு அனுப்பிக் கட்டாயமாய்ப் படிப்பிக்கவேண்டும் என்றும் சட்டம் ஏற்படுத்தினார்கள். இவ்வாறு சட்டங்கள்

ஏற்பாடாகி ஆசாரத்துக்கு வரச் சில வருஷங்கள் சென்றன. இது விஷயமாக அதிக முயற்சியோடும் ஊக்கத்தோடும் வருந்தி யுழைத்து, ஜனங்களுக்கு அந்தந்த இடங்களில் நடக்குங் கொடுமைகளையும் அநியாயங்களையும் எடுத்துக்காட்டிக் கண்களைத் திறந்துவிட்டவர்களில் எலிஜபெத் என்பவளும் முதன்மையானவள் என்று உறுதியாகச் சொல்லலாம். இது விஷயமாகவே எழுதப்பட்ட "பாலர் அழுகை" என்னும் பாடல்களால் தான், அநேகருக்கு இந்த விஷயத்தில் மனஞ்சென்று சீர்திருத்தங்கள் செய்யவேண்டும் என்கிற எண்ணமுண்டாயிற்று. அவைகள் மிகவும் உருக்கமான ரஸம் நிறைந்த கவிகளாதலால், அவற்றி லிரண்டொன்று இவ்விடத்தில் வரைவோம்.

இவ்வுயர் நாட்டி னுள்ளீ ரேழையர் பாலர் விம்மி
யெவ்வமோ டழுதல் கேட்டீ ரில்லையோ முன்னா மென்றே
யிவ்வகை யெனத் தேருத விளமையாம் பருவந் தன்னிற்
செவ்விய தாய்மார் போடு சேர்ந்துதான் மகிழ் வுண்டாமோ.

கோவிளங் கன்று மாட்டுக் குட்டியு மானின் கன்று
மேவிய பறவைக் குஞ்சும் வேறுசிற் றுயிருந் தத்தம்
நோவுறா விளமை தன்னி லினவுடனின் புற்றி ருக்கும்
பாவமோ வேழைப் பாலர் பரிதவித் தழுதல் பாரீர்.

ஆட்டிளங் குட்டி யெல்லா மன்னிய வயலில் மேயக்
கூட்டினிற் பறவை யெல்லாங் கொஞ்சுகின் றனையான் மன்று
கோட்டுறு மாந்தி னீழல் குலவக் கன் றாடுகின்ற
மேட்டரும் புரவி சாய மேற்றிசை சாயும் பாரீர்.

பேர்பெறு சுதந்த ரங்கள் பெற்றவிவ் விராச்சி யத்தில்
நேர்தர விளையாட் டாற்று நேசமா மிளமை தன்னில்
வார்தரு மேழைப் பாலர் மாத்திரங் கண்ணீ ரின்று
தீர்தரத் தழுகை பார்த்தல் நியாயமோ நாட்டீர் சொல்லீர்

என்று இவ்வாறு பாடினாள். கரைப்பார் கரைத்தால் கல்லுங் கரையு மாதலால், கல் நெஞ்சினரையும் உருக்கத்தக்க விதமாக அச்சிறுவர்கள் படுந்துக்கங்களை மேற்சொல்லிய வண்ணம் எடுத்துரைத்தமையாலன்றோ அப்படிப்பட்ட நல்ல சட்டங்கள் பிறப்பிக்கப்பட்டன!

இதுபோலவே அமெரிக்காக்கண்டத்து அடிமைகள் படும் வருத்தத்தைக் கேள்வியுற்று அவர்களை விடுவிக்கும்பொருட்டும், இத்தாலி நாட்டார் அயல் தேசத்துக் கொடுங்கோன் மன்னர் கைப்பட்டுப் பரிதவிப்பதை நீக்கும்பொருட்டும் அவள் மிகவும் முயன்றாள்.

ஆகவே அது விஷயமாக அவளுக்கு மனோபாவமும் மெய்யுணர்ச்சியும் அதிகமாதலால், அவள் இதைப்பற்றி எழுதிய சிறப்புப் பாடல்களை உலகத்தாரெல்லாரும் படித்துச் சிந்தனை பண்ணுகிறார்கள். ஆனதுபற்றி அவைகள் ஒருநாளும் மறக்கத்தகாதவையேயாம்.

1841-ம் வருஷம் முதல் 46-ம் வருஷம் வரையில் அவள் லண்டன் நகரத்தில் சுகமற்று ஒரு சிறு வீட்டின் பின்புறத்தில் வெளிச்சமும் காற்றும் நன்றாய் நடையாட இடம் போதாத அறையில் காலம் கழித்துவந்தாள். அப்படியிருந்தாலும், இடையறாது படிப்பதிலும் கவிகள் பாடுவதிலும் சிறந்த கர்த்தர்களாகிய தனது சிநேகர்களுடன் கடிதப் போக்குவரவு செய்வதிலும் அவள் முயற்சி குறையவே இல்லை. இப்பொழுதுதான் தனது கவிகள் மூலமாக ரோபெர்ட்டு ப்ரௌனிங்கு என்பவருடன் சிநேகமாயினாள். அவரும் இவளைப்போல ஒரு கவிராயர்தாம். ஆனால் இவளத்தனை கீர்த்தி பெற்றவரல்லர் அவரது கவிகள் மிகவும் கடினமாய்ப் பொருள்தரத்தக்கவையாதலாலும், அவரது சிறந்த காவியம் இனியே வெளிவரவேண்டியிருந்ததாகலாலும், அவரை நன்றாய்த் தெரிந்தவர் மட்டும் அவைகளை நன்கு மதித்துவந்தார்கள். பாரெட்டு அவரது கவிகளைப் படித்து அவைகளை விசேஷமாய் அநுபவித்திருக்கிறாள். ஆயினும் அவளது அசௌக்கியத்தால் இருவரும் நேரில் சந்திக்கச் சமயம் வாய்க்காமலே யிருந்தது. 1844-ம் வருஷத்தில் அவள் பதிப்பித்து வெளியிட்ட பாடல்நூலடங்கிய புத்தகத்தில் ரோபெர்ட்டு என்னும்

கவிராயரைப்பற்றியும், அவர் அப்பொழுது எழுதியிருந்த பாக்களைப்பற்றியும் மிகவும் புகழ்ந்து கூறியிருந்தாள். 1845-ம் வருஷம் ஜனுவரி மாதத்தில் அவர் தமது சிநேகிதன் ஒருவனால் அவள் புஸ்தகம் தமக்குக் கிடைத்ததை வெளியிட்டும், அவளது அழகிய "உயிருள்ள பாடல்களைப் புகழ்ந்தும்" ஒரு கடிதம் அவளுக்கு எழுதியனுப்பினார். மேலும் அவளது உறவினராகிய நேசரொருவருடனே தாம் ஒருதரம் அவளைப் பார்க்க அவள் வீட்டுக்கு வந்திருந்ததாகவும், அப்போது அசௌக்கியமாயிருந்தபடியால் அந்நியரைப் பார்க்க முடியாதென்பதைக் கேள்வியுற்றுத் திரும்பிப் போய்விட்டதாகவும் எழுதியிருந்தார். அதுமுதலாக அவ்விருவரும் கடித மூலமாகப் பாக்களைப்பற்றியும் வேறு சங்கதிகளைப்பற்றியும் ஆராய்ச்சி செய்து வந்தார்கள். இப்படி மூன்று நான்கு மாதங்கள் கழிந்ததும், ரோபெர்ட்டு ப்ரௌனிங்கு இவளை வந்து பார்க்கவும், இவள் அவரைப் போய்ப் பார்க்கவும் இடமுண்டாயிற்று. பிறகு கொஞ்ச காலத்துக்கெல்லாம் ரோபெர்ட்டு என்பவர் தமக்கு அவளிடத்தில் உண்டாயிருந்த மதிப்பையும் நேசத்தையும் நன்றாய் வெளியிட்டார். எலிஜபெத் இத்தனை காலமாக நோயாளியாயிருந்தபடியால் தனக்குச் சுகமும் ரோக நிவர்த்தியும் இந்த ஜன்மத்தில் உண்டாவதில்லை என்றே நினைத்திருந்தாள். அதனால் கலியாண விஷயமாய் ஆசரித்துப் பேசும்பொழுது அதைச் சிறிதும் காதுகொடுத்துக் கேட்பதற்கு அவளுக்கு இஷ்டமேயில்லை. அவளது பிதாவும் ஒருவகைப் பிடிவாதமுள்ளவராயும் உலக நடவடிக்கைகளில் நன்றாய்ப் பழகாதவராயுமிருந்தபடியால் இவள் சௌக்கியப்படுவாள் என்று எண்ணவே இல்லை. பின்னுஞ் சிறிதுநாளைக்கெல்லாம் இவள்தான் கொஞ்சம் சம்மதித்தாள்; ஆயினும், பிதா சம்மதிக்கமாட்டாரென்று நிச்சயமாயிருந்தபடியால், அவருடைய அநுமதியன்றியே ஏகாந்தத்தில கலியா

ணம் செய்துகொள்ளத் தீர்மானித்து அந்தப்படியே 1846-ம் வருஷம் செப்டம்பர் மாதத்தில் அந்தச் சடங்கை நிறைவேற்றிக்கொண்டாள்.

உடனே ஸ்திரீபுமான்களிருவரும் தேகசௌக்கியத்துக்காக உஷ்ண தேசங்களை நோக்கிப் பிரயாணமானார்கள். அவள் இவ்வாறு செய்ததற்காக அவள் பிதா கோபங்கொண்டு அவளைத் திரும்பவும் பார்க்கமாட்டேனென்று சொல்லிவிட்டார். எத்தனையாக வேண்டிக்கொண்டபோதிலும் அவர் இரங்கவே இல்லை. மேலும் அவள் அவருக்கு அனுப்பிய கடிதங்களையெல்லாம் பிரிக்காமலே வைத்திருந்து கொஞ்சநாள் சென்றதும் அவைகளை அப்படியே திருப்பி அனுப்பிவிட்டார். தான் அடிநாட்களில் மிகவும் அன்புபாராட்டிவந்த தகப்பனார் இப்படிப் பிடிவாதமாய்க் கோபங்கொண்டிருந்ததினால் அந்நாட்டுக்குத் திரும்பிவர அவளுக்கிஷ்டமில்லாமலே போய்விட்டது. பிறகு தனது வாழ்நாள் முழுதும் தனது கணவனுடன் இத்தாலியாவில் கழித்தாள். ஆனால் சிற்சில சமயங்களில் இங்கிலாந்துக்கும் வந்துபோவாள். அவளது ஸம்ஸார வாழ்க்கையானது முன் தகப்பனுடன் வாழ்ந்த விதத்துக்கு முற்றும் மாறாயிருந்தது. அத்தனைகாலும் வருத்தத்தோடு ஓரறையில் அடைபட்டிருந்ததுபோய், கலியாணமானபின் கணவனுடன் விசேஷமான உல்லாசமும் சௌக்கியமும் அடைந்துவந்ததாக அவளே எழுதியிருக்கிறாள்.

ரோபெர்ட்டு பிரௌனிங்குக்கும், இப்பொழுது கலியாணம் பண்ணிக்கொண்ட நமது மாதுசிரோமணிக்கும் கலியாணத்துக்குமுன் நடந்துவந்த கடிதப் போக்கு வரவுகளையெல்லாம் சேர்த்துத் திரட்டி, அவ்விருவரும் அழியாப் புகழ்பெற்று ஜீவன் நீங்கி வெகுகாலம் ஆனபிற்பாடு 1899-ம் வருஷத்தில், இரண்டு பெரும் புத்தகமாக அவைகளை அச்சிற் பதிப்பித்தார்கள். அவைகள் மிகவும் ரஸமானவை. நமது மாது

எவ்வாறு அசௌக்கியமாகிய அந்தகாரத்தில் மறைந்து கிடந்தாளோ, எவ்வாறு ரோபெர்ட்டு அந்த அந்தகாரத்தைச் சுகமாகிற வெளிச்சத்தைக்கொண்டு பிரகாசிப்பித்தாரோ, அவை அவற்றால் நன்றாய் வெளியாகின்றன. நோயிலடிபட்டுக் கிடந்த அவளுக்குப் புருஷன் ஒருவன் வேறோர் பிரயோஜனமும் வேண்டாமலே தன்னை நேசிக்கக்கூடும் என்கிற எண்ணமானது மனதில் உதிக்கவே இல்லை.

ரோபெர்ட்டு ப்ரௌனிங்குக்கு அவள் எழுதிய கடிதமொன்றில் தன்னிலையை அவளே மிகவும் விரிவாயும் உருக்கமாயும் கூறியிருக்கிறாள். அதாவது, "உமது பரிசத்தினால் புனிதமாவதற்கு முன்னர் எனது வாழ்க்கை இந்தன்மையாயிருந்ததென உமக்குத்தெரியாதே. எனது அறையில் தனியாயிருந்து உலகவாழ்க்கையில் அருவருப்புண்டாகி நான் எழுதும் பாக்களிலும் சுகமுண்டாகாமல், அவைகள் என் அறையிலிருந்தால் அவைகளுடைய பெருமையும் கெட்டுப்போமென்று எண்ணி அவைகளையும் பிரித்தெறிய வேண்டியதாயிருந்தது. எனது நாய்கூட என்னை விட்டு நீங்கி வெளியேபோய்ச் சுகம் பெறாமல் நாள் முழுதும் என்னோடுகூட இருட்டில் நின்று வருந்தவேண்டியதாயிற்றென்று அதனிடத்தில் எனக்கு மிகப் பரிதாபமுண்டாகியது. எனது உறவினர் என்னை உபயோகமற்றவள் என்றும் குடும்பபாரமென்றும் நினைக்காமலும் வெளியிடாமலும் இருந்தது அவர்களது மேன்மையையும் பெரிய உபகாரகுணத்தையும் வெளியிடுகிறது என்று எனக்குத்தோன்றியகாலத்தில், நீர் நேசக்கடிதம் எழுதியதைக் காணும்போது என்னென்று நினைப்பது" என்றிவ்வாறு கூறியிருக்கிறாள்.

ப்ரௌனிங்கும் அவரது மனைவி நமது நாயகியும் இத்தாலிநாட்டில் கொஞ்சகாலம் பீசாவிலும் பிறகு ப்ளாரென்ஸிலும் வசித்துவந்தார்கள். இங்கிலாந்து நாட்டில் அவள் தனது சிநேகிதருடன் கடிதப் போக்குவரவு செய்துவந்தவளாயினும், அவளையும் அவளது நாயகனையும் அடிக்கடி வந்து பார்த்து விசாரிப்பவர்கள் இத்தாலியரும் அமெரிக்காக் கண்டத்தாருமே. அக்காலத்தில் இத்தாலியர் ஆஸ்திரியாநாட்டு நிர்ப்பந்தத்தினின்றும் விடுவித்துக்கொள்ள முயன்றார்கள். அப்போது நமது மாது தானும் அந்நாட்டாருடன் சேர்ந்துகொண்டு தனது சக்தி முழுமையுங்கொண்டு நாட்டுக்கு க்ஷேமம் உண்டாகும்படி பாடுபட்டாள். அவர்கள் படும் வருத்தங்களைக் கண்டு மனம் இளகித் தனது அபிப்பிராயங்களை வழக்கப்படி பாவின் மூலமாக வெளியிட்டாள். இவ்வாறு உலக நன்மைக்குப் பாடுபடுவதினால் உண்டான சந்தோஷம் கொஞ்ச நஞ்சமல்ல. இதனுடன், ஓர் பிள்ளை பிறந்து அவளுக்கு உவப்பு அதிகமாகியது. இறந்தாலொழிய ஜீவனோடு சுகமுறுவதில்லை என்றே எண்ணிப் பிராணத்தியாக நிலைமையில் உழைப்பற்று நின்றவளுக்கு உலக வாழ்க்கையில் உவகை பிறந்து மக்கட்பேறுமுண்டாகி மானிடர்க்குண்டாகும் எல்லாச் சுகமும் பெறும்படியான காலமும் நேர்ந்தது. இது அவளது புண்ணியத்தின் பலமன்றோ!

இங்கிலாந்து நாட்டில் சமஸ்தான வித்வான் என்று ஒருவரை அரசி நியமிப்பதுண்டு. அப்பெருமை வகித்திருந்த உவர்ட்ஸ்வர்த்து என்னும் மகாகவி 1850-ம் வருஷத்தில் இறந்துபோகவே, அந்த ஸ்தானத்துக்கு நமது மாது சிரோமணியை நியமிக்கலாமென்று தகுந்த பத்திராதிபர் ஒருவர் அக்காலத்தில் எழுதினார். இச்சிறப்பு ஸ்திரீகளில் எவருக்கும் இதுவரையில் உண்டானதில்லை என்றாலும், நமது விக்டோரியா சக்கரவர்த்தினியார் இராஜ்யபாரத்தில் பெண்கள் அடைந்த பெருமையையும் கீர்த்தியையும் இது நன்றாய் விளக்கும் என்று எல்லாரும் எண்ணினார்கள். அந்தப் பிரகாரம் நிறைவேறாவிடினும், அக்காலத்திலுள்ள காவிய பரிசோதகரும் காவியக்குறை கூறுவோரும் கூட இவளது

கவிகளை மிகவும் உத்தமமாகமதித்தார்கள் என்று இது தெற்றெனத் தெரிவிக்கின்றதல்லவா?

“அரோரா லே” என்பது அவளது மிகப் பெரிய காவியம் என்றும், அவளது பாடல்களுக்குள் ஆழ்ந்த பொருளும் பெருமையும் வாய்ந்ததென்றும் அவளே கூறியிருக்கிறாள். ஒன்பது அதிகாரங்களடங்கிய அந்தக் காவியமானது அம்மாது ப்ளாரென்ஸில் வாஸமாயிருந்தகாலத்தில் 1853-ம் வருஷத்தில் ஆரம்பமாகி முற்றுப்பெற மூன்று வருஷகாலம் சென்றது. 1856-ம் வருஷத்திலே வேனிற்காலத்தில் இங்கிலாந்துக்குப் போயிருந்தபோது அதை முழுதும் எழுதி முடித்ததாகத் தெரிகிறது. வருத்தத்தோடு இத்தனைகாலம் அது விஷயத்தில் அவள்முயன்றபோதிலும், இத்தாலியாவிலிருந்து லண்டனுக்குப் போகும்போது வழியில் இக்காவியம் வரையப்பட்ட புஸ்தகமும், அதோடு தனது குமாரன் இங்கிலாந்தில் முதல்முதல் போட்டுக்கொள்ளவேண்டியதென்று வெகு நேர்த்தியாய் அலங்காரஞ் செய்திருந்த உடுப்புகளும் வைக்கப்பட்டிருந்த பெட்டி காணாமல் போனபோது, மாது எலிஜபெத்து ப்ரௌனிங்கு அந்தக் குழந்தையின் உடுப்புக்காக அதிகமாய் விசாரப்பட்டாளேயொழிய எழுதிய புத்தகம் போனதைப்பற்றிச் சற்றேனும் வருத்தமுறவே இல்லை. அதிஷ்டவசமாய் அந்தப் பெட்டி கஸ்டம் ஆபீஸிலே சில வறையில் ஒரு மூலையிலே மறைக்கப்பட்டிருந்ததை அவளது தம்பி தேடிக்கண்டெடுத்துக்கொண்டு வரவே அவளது விசாரம் நீங்கியது.

அந்தக் காவியமானது அவளது வாழ்க்கையின் சரித்திரமேயாம். அவள் பட்ட கஷ்டநஷ்டங்களையும் அவளது குணகுணங்களையும் நன்றாய் அறியவேண்டினாலும், மிகவும் கீர்த்திபெற்ற மாதுசிரோமணிகளில் சிறந்தவளாகிய எலிஜபெத்தின் சத்திய சரித்திரத்தைப் படிக்க விரும்பினாலும், அவ

ளாலேயே சுயசரித்திரம்போலும் கதைபோலும் எழுதிவைக்கப்பட்ட “அரோராலே” என்னும் காவியமே தகுந்ததாகும் என்று, அவளது சரித்திரத்தைச் “சிறந்த மாதர்தரங்கிணியில்” சுருக்கி எழுதிய ஜான் இங்கிராம் என்பவர் கூறியிருக்கிறார்.

இத்தாலி நாட்டு நன்மையே அவள் மனதில் குடிகொண்டிருந்தமையால், 1859-ம் வருஷத்தில் இத்தாலியர்கள் சுவதந்திரமடையக் கிளம்பினபோது தனது நாவன்மையாலும் எழுதுகோலாலும் அவர்களுக்கு வெகுவாய்த் துணைசெய்து வந்தாள். பிரான்சு நாட்டார் இவர்களுக்கு உதவியாக முன்வரவே, மூன்றாவது நெபோலியனை மஹாபுருஷனாக மதித்திருந்தாள். அவர் சொல்படி நிறைவேறாமல், இத்தாலியர் தோல்வியுற்று, வில்லா பிராங்கா என்னும் சமாதான உடன்படிக்கை நடந்தேறியதே அவளுக்குத் தொலையாத தொல்லையும் தீராத நோயுமுண்டாக்கியது. இக்கவலையால் உண்டாகிய வியாதி அவளுக்கு நீங்கவே இல்லை. என்றாலும் இத்தாலி நாட்டு விஷயமாய் மிகக் கொதிப்பாயும் உருக்கமாயுமுள்ள பாடல்களை எழுதாமலிருக்கவில்லை. அதே வருஷத்தில் இப்பாடல்களெல்லா மடங்கிய கடைசி புஸ்தகம் அச்சிட்டு வெளியாயிற்று.

1860-ம் வருஷத்தில் நீங்காத நோய்கொண்டு இருமலினால் வருத்தமுற்றுப் படுக்கையாயிருக்கையில் உடன் பிறந்தாள் இறந்துபோனாள். அதற்குப் பிற்பாடு அவளுக்கு உடம்பு சௌக்கியமாகவே இல்லை. பிறகு ரோமாபுரியிலிருந்து ப்ளாரென்சுக்குத் திரும்பிப்போனாள். ஆயினும் நோய்முற்றி அவளுக்குங் கூட வியாதியின் கொடுமை வெளியாகாமலே குணமாவதுபோல் தோன்றிக் கடைசியில், தனது பிள்ளைக்கும் கணவனுக்கும் தன் தேககுணத்தைப்பற்றித் தைரியம் சொல்லிக்கொண்டிருக்கையிலேயே, தேகவியோகமானாள்.

ப்ளாரென்ஸ் நகரத்தில் அவளை அடக்கம் செய்தார்கள். அவளும் அவள் புருஷனும் மிகவும் அன்போடு சுகமாய்க் வாழ்ந்துவந்த வீட்டின்மேல் சலவைக்கல்லொன்று பதித்து அதில் உசிதமான ஒரு சாசனமும் எழுதுவித்தார்கள்.

அவள் இறந்த ஒரு வருஷத்துக்கெல்லாம் அவளது பாடல்களில் அச்சிடப்படாதவைகளையெல்லாம் அச்சிடுவித்து அவளது கணவன், "நன்றியுள்ள ப்ளாரென்ஸ் நாட்டாருக்கு" என்று அரங்கேற்றினார். அதில் எலிஜபெத்தாருடைய சிறந்த பல பாடல்களும், கிரேக்கு பாஷையிலிருந்து மொழிபெயர்த்த பல மொழிபெயர்ப்புகளுமுள்ளன.

அமெரிக்கா கண்டத்துச் சிறந்த சிற்பசாஸ்திரியாகிய ஸ்டோரி என்பவர் இவளை மிகவும் புகழ்ந்து வர்ணித்திருக்கிறார். இவளைப் பார்த்தவர்களில் ஆசைப்படாதவர்களில்லை. இவளது முகத்தின் தெளிவும், பெருந்தன்மை வாய்ந்த நற்குண நற்செய்கைகளுமே ஆழ்ந்த பொருளுடைய பெரிய பாடல்களுக்கு ஆதாரமானவை என்று நன்றாய்த் தெரிவிக்கின்றன. இவள் எவ்வளவு வருத்தமநுபவிப்பினும் அதைப் பிறர்க்கறிவியாள். நன்மையும் சத்தியமுமே தொழிலாக மேற்கொண்டொழுகுபவள். நுண்ணிய கருமமும் எண்ணித் துணியும்படியான நிதானமுடையவள். ஆற்பெருங்கேள்வியுடையவளாயினும் எல்லாரிடத்திலும் தயையும் இரக்கமுமுடையவள். எல்லாரையும் நல்லவரென்றே மதித்தவளாகையால் ஒருவரிடத்திலும் அவளுக்குச் சந்தேகமுண்டானதே இல்லை. இந்த உத்தமி நம்முடைய ஜீவகாலத்திலேயே வாழ்ந்து புகழ்பெற்றவள் என்பதை எண்ணுங்கால், எத்தனை அற்பனாயினும், ஒவ்வொருவனும் தன்னாலியன்றமட்டும் வருந்தித் தன் கடமையை நடத்துவானாயின், தானும் சுகமடைந்து உலகத்தார்க்கும் நன்மை உண்டாக்குவான் என்று தெளிவாய் விளங்குகின்றதல்லவா?

FLORENCE NIGHTINGALE.

Born 1820.

ப்ளாரென்ஸ் நைற்றிங்கேல்.

இந்த இந்துதேசத்தின் இராஜப்பிரதிநிதியாக இருந்து இராஜ்யபரிபாலனஞ் செய்த டப்பெரின் பிரபு அவர்களின் மனைவியாட்டியாகிய டப்பெரின் பெருமாட்டியைப்பற்றி நீங்கள் கேள்வியுற்றிருக்கலாம். தங்கள் வீடுகளுக்குத் தேர்ந்த வைத்தியர்களை வரவழைத்து வைத்தியம் பார்த்துக்கொள்ளச் சக்தியில்லாத உயர்ந்த ஜாதி ஸ்திரீகளுக்கு நோய்கள் வந்தால், அக்காலங்களில் அவர்களுக்குத் தங்கியிருக்க நல்ல இடமும், தகுந்தபடி வைத்தியோபசாரம் செய்ய நல்ல வைத்தியர்களும், சுலபமாய்க் கிடைக்கும்படியாக அவர் வைத்திய சாலைகள் ஸ்தாபித்த விவரமும் பலருக்குத் தெரிந்திருக்கலாம்.

ஸ்திரீ வைத்தியர்களையும் வைத்தியோபசாரம் செய்யும் தாதிமார்களையும் உங்களில் பலர் பார்த்திருக்கலாம். அவர்களுடைய புத்திநுட்பமும், பொறுமையாய்ப் பரிகாரஞ் செய்யுங் குணமும், அவர்கள் நோயாளியின் வருத்தத்தை மெதுவாய்ப்போக்கிச் சவுக்கியமுண்டாக்குகிறவிதமும், உங்களுக்கு நேரில் நன்றாய்த் தெரிந்திருக்கலாம். இந்துதேசத்தில் உயர்ந்த ஜாதி ஸ்திரீகளுக்கு வைத்தியசாலை யென்பது இப்பொழுதுதான் புதிதாக ஏற்படுத்தப்பட்டது. உயர்ந்தஜாதி ஸ்திரீகளுக்காகவே அப்படிப்பட்டவை முக்கியமாய்க் கட்டப்பட்டன. ஏனெனில், மற்ற ஸ்திரீகள் எல்லாத் தேசங்களிலும் வைத்திய சாலைகளினாலாகும் நன்மைகளையும் சவுக்கியத்தை

ப்ளாரென்ஸ் நைத்திங்கேல்.

யும் அடைந்துவருகிறார்கள்; அப்படியிருக்க இந்துதேசத்து ஸ்திரீகள் மாத்திரம் நாகரிகம் பெற்ற நாட்டில் இந்தப் பெரிய நன்மையைப் பெறாமலிருப்பது உசிதமல்லவே.

இத்தேசத்திலும், மேரி கார்ப்பெண்ட்டர், ப்ளாரென்ஸ் நைத்திங்கேல், லேடி டப்பெரின் இவர்கள்போன்ற பெருமாட்டிகள் உண்டானார்களென்று எழுதி யிருக்கிறார்கள், டப்பெரின் பெருமாட்டியைப்பற்றியும் அவர்செய்த காரியங்களைப்பற்றியும் உங்களுக்குத் தெரிந்திருக்கலாமாயினும், நைத்திங்கேல் என்பவளைப்பற்றி உங்களுக்கு அவ்வளவாகத் தெரிந்திராது. டப்பெரின் பெருமாட்டி இந்துதேசத்து ஸ்திரீகளுக்குச் செய்ததுபோலச் செய்வதற்கு, மிக்க செல்வமும் செல்வாக்குமுள்ளவராயிருப்பவர் வேண்டுமென்று நீங்கள் சொல்வீர்கள்.

அவளைப்போலாவதற்கு நாம் எதிர்பார்க்கவேனுங்கூடுமோ? கூடாது தான். நீங்கள் நைத்திங்கேல் என்னும் பெண்மணியைப்பற்றிக் கேள்வியுற்றிருப்பீர்களானால், அம்மாதிரி நடக்கத்தக்கவர்கள் சிலரே யல்லர், பலரிருக்கின்றனரென்று நீங்களே சொல்லுவீர்கள். அப்பெருமாட்டி இளமையில் கஷ்டப்பட்டுப் பலகாரியங்கள் செய்திராமற்போனால், இப்பொழுது இந்துதேசத்தில் உயர்ந்தஜாதி ஸ்திரீகளுக்கு வைத்தியசாலைகளுண்டாக இடமேயிராது. வைத்திய சாலைகளில் நோயாளிகளுக்கு உபசாரஞ்செய்யும் தாதித்தொழில், உயர்ந்த ஜாதியில் பிறந்தவர்களும் படிப்புள்ளவர்களுமான பெண்கள் கையாளக்கூடிய தென்பதை, முதல் முதல் இப்பெருமாட்டிதாமே அனுஷ்டித்துக் காட்டினார். அத்தொழில் செய்ததனால் இகழப்படுவதுபோய், அவர் ஐரோப்பியர் அனைவராலும் கொண்டாடப்பட்டுக் கனப்படுத்தப்பட்டார். சக்கரவர்த்தினியாரும் அவருடைய உதாரகுணத்தை வியந்து மேலாகக்கொண்டாடினார்.

இப்படிப்பட்ட பெருமை பெற்றவரான ப்ளாரென்ஸ் நைத்திங்கேல் 1820-ம் ௵ பிறந்தவர். அவர் இங்கிலாந்தில் மிக்க செல்வவானான ஒரு பிரபுவினுடைய இரண்டாவது மகள். அம்மகளுக்குத் தந்தை தாமே வெகுகருத்தாய்க் கல்வி கற்பித்துவந்தார். சுதேசபாஷையொன்றே படிப்பது போதாதென்று இத்தேசத்துப் பெண்களுக்கு ஸம்ஸ்கிருதம், ஹிந்துஸ்தானி, தெலுங்கு, கன்னடம் முதலிய பாஷைகளைக் கற்பிப்பதுபோல, அவள் தந்தை அவளுக்கு ப்ரெஞ்சு, ஜெர்மன், இத்தாலியன், லத்தின், க்ரீக்முதலான பல பாஷைகளைக் கற்பித்தார். கணிதசாஸ்திரமும் சங்கீதமுங்கூடக் கற்பித்தார். அன்றியும் [illegible] புத்தகங்களைப் பார்த்துப் படிக்கும் சங்கதிகள் சரிதானென்று பிரத்தியக்ஷமாய்க் காணும்பொருட்டு, அவள் புத்தகங்களில் படிக்கிற நாடுகளுக்கும் நகரங்களுக்கும் தந்தை அவளை நேராகவே அழைத்துக்கொண்டு போனார். அவள் தந்தையுடனே எகிப்து தேசத்துக்கும் போயிருந்தாள். அவ்விடத்திலும் கேவலம் தன் விநோதத்தையே பாராட்டாமல் தான்கண்ட நோயாளிகள் பலருக்கு உபசாரம் செய்து அவர்களுக்கு ஏற்ற நல்வார்த்தை சொல்லிவந்தா ளென்கிறார்கள்.

ப்ளாரென்ஸ் நைத்திங்கேல் தனது இளமைப்பருவத்தை வெகு அழகாகப் போக்கினாள். அப்பொழுது அவள் வசித்த மாளிகை ஒரு மேட்டுத்தாக்கான இடத்திலிருந்தது. அம் மாளிகையைச் சுற்றி மலைகளும் குன்றுகளும் காடுகளும் அடர்ந்திருந்தன. அங்கே அழகாக நதியொன்று பெருகுகின்றது. இங்கிலாந்தில் இந்த இந்துதேசத்தி லிருப்பது போல நதிகள் அத்தனை விசாலமின்றிக் குறுகியவைகளா யிருந்தாலும், எப்போதும் வெள்ளம் பெருகிக்கொண்டிருப்பதால் அவற்றின் காட்சி வெகு அழகாயிருக்கும். அம்மாளிகை இருநூறு மூந்நூறு வருஷங்களுக்கு முன்னே கட்டப்

பட்டது. இச்சோலையிலுள்ள கலசமகல் அவ்வளவு பெரியதாயிருக்கும். அதைச்சுற்றியுள்ள நிலமெல்லாம் வெகு அழகாகச் சீர்ப்படுத்தப்பட்டிருந்தது. அந்நிலத்தில் நடுவே பசும்புற்களும், ஓரங்களில் பூஞ்செடிகளும் நன்றாகக் களை வெட்டிப் பயிராக்கப்பட்டிருந்தன. பக்கங்களில் பெரிய நிழல்கொடுக்கு மரங்கள் வளர்ந்திருந்தன. இங்கிலாந்தில் எளிய நாட்டுக்குடிகள் கூடத் தம் குடிசையையும் அதை யடுத்த தோட்டத்தையும் சுத்தமாயும் அழகாயும் வைத்துக் கொள்ள வெகு விருப்பங்கொண்டவர்கள். அப்படியான போது நைத்திங்கேல் பெருமாட்டியின் மாளிகை, குப்பையும், அழித்தெறிந்த கடுதாசித்துண்டுகளும் சிறிதளவும் காணப்படாமல் நிர்மலமாயிருந்ததென்பதை நாம் சொல்ல வேண்டுமோ? அம்மாளிகையில் வர்ணம்போன சன்னல்களும் நிலைபோன கதவுகளும் எப்பொழுதும் காணப்பட்டதில்லை. இப்படிப்பட்ட வீட்டில் எளிய வேலையைச் செய்வதற்குப் பல வேலைக்காரர்கள் கைகட்டிக் காத்திருப்பார்கள்; நிர்விசாரமாய்ப் புத்தகங்களிலும் பாட்டிலும் பொழுது போக்கலாம்; விலையுயர்ந்த ஆடையாபரணங்கள் வேண்டுமளவு வாங்கித் தரித்துக்கொள்ளவும், இஷ்டமானபோது சிறந்த கணவனைத் தேடிக் கலியாணஞ் செய்துகொள்ளவும் பொருள் விசேஷமாயுண்டு; ஆனதுபற்றி விசாரமற்று வீட்டிலேயே சுகமாய்ப் பொழுதுபோக்கிக்கொண் டிருக்கலாமல்லவா?

ஆனால், உண்மையில் அவள் எப்படிப் பொழுதுபோக்கினாளென்று பார்ப்போம். அவள் சிறுபிராயம் முதற்கொண்டே, தம் வீட்டிற்குச் சமீபத்தில் எளிய ஜனங்கள் யாவராயினும் வருத்தப்பட்டால், அந்த வருத்தத்தைப் பார்க்கப்பொறாமல் தானும் வருந்தித் தன்னாலான உதவி செய்தா ளென்றும், எளியவர்களுடைய வீட்டிற்குத் தினந்தோறும் போய் அவர்களுடைய க்ஷேமங்களை விசாரித்து வந்தாளென்

றும், அடுத்த கிராமங்களிலுள்ள பள்ளிக்கூடங்களுக்கு வேண்டுமென்று தானேபோய்ப் பலவருஷகாலம் எளியவர்களுக்குப் படிப்புச் சொல்லிவந்தாளென்றும் சொல்லியிருக்கிறது.

இங்கிலாந்து தேசத்துப் பெண்கள் வெகுவாய் 18 வயதானால் பாடசாலையைவிட்டு உலக வியாபாரத்தில் புகுவது வழக்கம். இப்பெருமாட்டிக்குப் பதினெட்டுவயதானபோது தந்தை அவளை லந்தன் நகரத்திற்கு அழைத்துக்கொண்டு போய் மகாராணியாருக்கு ஒரு பரிசாக அளித்தார். அந்தச் சமயத்தில் லந்தன் நகரத்துப் பெருமாட்டிகள் பலர் அந்தச் சிறப்பைக்கண்டு கொண்டாடினார்கள்.

லந்தன் நகரத்திலிருந்தபோது நைத்திங்கேல் பெருமாட்டி அந்த நகரத்தில் நடக்கும் விருந்து திருவிழாமுதலிய விநோதங்களுக்குச் சென்று பொழுதுபோக்குவதை விட்டு, அவ்விடத்திலுள்ள வைத்தியசாலை வித்தியாசாலைகளுக்கும், சீர்திருத்தம் செய்வதற்காக ஏற்படும் சங்கங்களுக்கும் போய் வருவதிலேயே பொழுது போக்கிவந்தாள். லந்தன் நகரத்திலிருந்து எடிம்பரோ நகரத்திற்கும், அங்கிருந்து ஐரோப்பா கண்டத்திலுள்ள மற்றத் தேசங்களுக்கும் போய், தற்காலத்திற்கும் பிற்காலத்திற்கும் உபயோகமான பலவிஷயங்களைத் தெரிந்துகொண்டாள். பெண்களுடைய மனதில் சிறந்த விஷயங்கள் தோன்றினால் அது ஒருநாளும் வீண்போவதில்லை; அவை வெகுசிறப்பாக வெளித்தோன்றிப் பல நன்மைகளை விளைவிக்கின்றனவென்று உலகத்தில் சொல்வதுண்டு; இந்த நீதிமொழியின் உண்மையை வெளிப்படுத்த நைத்திங்கேலுடைய சரித்திரமே ஒரு சிறந்த நிதர்சனமாயிருக்கின்றது.

1851-ல் சிறந்த பலபொருட் காட்சிசாலை ஒன்று ஸ்தாபித்த நிமித்தம் ஐரோப்பாகண்டம் முழுதும் யாவரும் திரு

விழாக்கொண்டாடி விடுமுறையா யிருக்கையில், படிப்பினாலும் பிறப்பினாலும் எங்கும் ஒரு சிறந்த நக்ஷத்திரம்போல விளங்குகின்ற நைத்திங்கேல் பெருமாட்டி ரைன் நதிக்கரையில் கைஸர்வார்த்திலுள்ள ஒரு வைத்தியசாலையில் சென்று அங்கே மூன்றுமாதகாலம் இராப்பகல் ஓயாமல் நோயாளிக்கு உபசாரம் செய்வதும், வைத்தியசாலையை நடத்துவதற்கு வேண்டிய முறைகளைக் கற்பதுமாகக் காலங்கழித்தாள். மிகுந்த செல்வமுடையவளான இச்சிறுமியைப்போல வைத்தியசாலை விஷயங்களில் அவ்வளவு திறமையாகப் பரீக்ஷை கொடுத்துத் தேறினவர் ஒருவருமில்லையென்றும், தான் கற்க வேண்டிய விஷயங்கள் எல்லாவற்றையும் அவள் வெகு நன்றாகக் கற்றறிந்தாளென்றும், அவளைப்பற்றி அந்த வைத்தியசாலைத் தலைவர் சொல்லியிருக்கிறார்.

இப்படியாக அவள் ஜர்மானியாவில் பல காரியங்கள் செய்துவிட்டு, அத்தேசம் உடம்புக்கு ஒத்துக்கொள்ளாமல் உடம்பு கொஞ்சம் அசவுக்கியமானதனால், தேகசவுக்கியத்தின் பொருட்டுத் தாய்தந்தையரும் சகோதரரும் வசிக்கும் சுதேசத்திற்குத் திரும்பிவந்தாள். ஆயினும் அவள் அங்கே நெடுநாள் நிலைத்திருக்கவில்லை. லந்தன் நகரத்தில் பெரிய பிரபுக்களின் பெருமாட்டிகளுக்காக ஏற்பட்ட வைத்தியசாலையில் இவளது உதவி வேண்டியிருந்தமையால் அவ்விடம் சென்றாள். இப்படிப்பட்ட வைத்தியசாலை விஷயத்தில் சீமாட்டிகள் பலர் தங்களாலானவரையில் பொருள்கொடுத்துத்தான் உதவிசெய்வார்கள்; இந்த நைத்திங்கேல் பெருமாட்டியோ தன் உடலையேகொடுத்து உதவிசெய்தாள்.

அவள் அந்த வைத்தியசாலைவிசாரணைமுழுமையும் தானே மேற்கொண்டு பரிபாலித்து வந்தாள். அவளுடைய இஷ்டர்கள் அங்கே போய்ப் பார்த்தபோது, ஒருபுறத்தில் தாதிமார்களுடன்கூடி உபசாரஞ்செய்வதும், ஒருபுறத்தில் வந்த கடிதங்

களைப் பார்த்துப் பிரதியுத்தரங்கள் எழுதுவதும், ஒருபுறத்தில் சிகிச்சைக்குவேண்டிய மருந்து சீட்டுகள் எழுதுவதும், ஒருபுறத்தில் கணக்குகள் பார்ப்பதும், இன்னும் பல தொல்லைகளுக்கு எதிர்நிற்பதுமா யிருந்தாளென்று சொல்லுகிறார்கள்.

நைத்திங்கேல் தன் சொந்தமாளிகையில் வாழும் சுக வாழ்க்கைக்கும், லந்தன் நகரத்தில் வாழும் வாழ்க்கைக்குமுள்ள வேற்றுமை இப்படிப்பட்டதென்று இத்தேசத்தவர்களுக்கு அத்தனை தெளிவாக விளங்காது. இந்த இந்துதேசத்தில் ஆகாயம் எப்பொழுதும் நிர்மலமாய் நல்லகாற்று வீசிக்கொண்டிருக்கிறதே. லந்தன் நகரத்திலோ புகையும் பனியும் கலந்த காற்றுத்தான் எங்கும் நிறைந்திருக்கும்; அதைத்தான் எல்லாரும் மூச்சின்வழியாகப் பிராணாதாரமாய் உட்கொள்ள வேண்டும். நைத்திங்கேலுடைய சொந்தகிரகத்தில் மிகவும் சவுக்கியமான இரண்டு பெரிய அறைகள் அவளுக்கு உண்டு. அவ்வறைகளில் அவசியமான கட்டில்களும் நாற்காலிகளும் போடப்பட்டு ஏறியிறங்குவதற்கு ஏற்ற படிகளும் அமைத்திருக்கும். லந்தன் நகரத்திலோ கட்டில் நாற்காலி போட வேண்டிய விடங்களில் நோயாளிகளுடைய படுக்கைகளே மிகுதியாயிருக்கும். அவ்விடத்து மாளிகைகள் மிகவும் உயரமானவை யாகையால் மேல்மாடிக்கும் கீழ்மாடிக்கும் ஏறியிறங்குவதே தாதிமார்களுக்கு மிகுந்த பிரயாசையாகும்.

இப்படியிருக்கையில் இங்கிலாந்துக்கும் ருஷியாவுக்கும் சண்டை யுண்டாயிற்று. பிராஞ்சுக்காரர் அங்கிலேயருடன் சேர்ந்து ருஷியாதேசத்தார்க்கு எதிரியானார்கள். நாள்தோறும் அந்தச் சண்டையைப்பற்றிய சமாசாரமும், அந்தச் சண்டையில் போர்வீரர்கள் பலர் அடிபட்டதும், அவர்கள் ஆதரிப்பவரின்றித் தங்குவதற்குச் சவுக்கியமான இடமுமில்லாமல் அவஸ்தைப்பட்டதுமாகிய மற்றச் சமாசாரங்களும் இங்கிலாந்துக்கு வந்துகொண்டேயிருந்தன. ஆபத்துவேளையில்

உதவி செய்பவ ரில்லையென்று அவர்கள் புலம்பியது ப்ளாரென்ஸ் நைத்திங்கேலுடைய மனதை மிகவும் வருத்தியதனால், அவள் முப்பத்தேழு தாதிமார்களைக் கூடவே அழைத்துக்கொண்டு தான் அவர்களிடம் போகிறதென்று தீர்மானித்தாள். அந்த முப்பத்தேழுபேர்களில் பலர் யோக்கியதையில் அவளுக்குச் சமானமானவர்கள். அவர்களெல்லாரும் சுதேசத்திலுண்டான சவுக்கியத்தை விரும்பாமல் வெகு சந்தோஷமாகவே தூரதேசம் போகத் துணிந்தார்கள். தாம் போகுமிடம் பல நோய்களுக்கும் மற்றும் பல அபாயங்களுக்கும் இடமானதென்பதையும் அவர்கள் கருத்தில் கொள்ளவில்லை. 1854-ம் ௵ அக்டோபர்மீ 24௳யான செவ்வாய்க்கிழமை ஸ்குட்டேரி நகரத்தில் அவர்கள் இறங்கினார்கள்.

ஸ்குட்டேரி என்பது கான்ஸ்தாந்திநோபிளுக்கு நேரெதிரிலிருக்கிறது. அந்நகரத்தினது கோபுர மண்டபப் பிராகாரங்களும், மாளிகைகளும், பல விருக்ஷங்கள் அடர்ந்த தோப்புகளும் நடுக்கடலிலிருந்து பார்க்கும்பொழுது வெகு அழகாய்ப் பிரகாசிக்கும். அந்நகரத்தில் முக்கியமான வைத்தியசாலைகள் இரண்டுண்டு; அவை பொது வைத்தியசாலை, பட்டாள வைத்தியசாலை என்பவையாம். அவை நோயாளிகளும் காயம்பட்டவர்களுமான தங்கள் மனிதர்களை வைத்துக்கொள்வதற்காக அங்கிலேயருக்குக் கொடுக்கப்பட்டன. அந்த வைத்தியசாலைகளின் ஸ்திதியைப் பார்த்தால் எப்படிப்பட்டவரும் அஞ்சத்தக்கதாயிருந்தது. அங்கே விஷச்சுரமும் விஷபேதியும் அதிகரித்திருந்தன. வைத்திய சகாயமும் கிடையாது, நல்ல உணவும் கிடையாது. அவ்விடத்தில் துன்பங்களும் வருத்தங்களும் நிமிஷத்துக்கு நிமிஷம் விருத்தியடைந்தன. அந்தத் துன்பங்களைக் காதினால் கேட்கும்போதே உடம்பு நடுங்குமென்றால் கண்ணாலே பார்த்தால் சொல்லவேண்டுமா? நைத்திங்கேல் பெருமாட்டியும் அவளு

டன் சென்ற மற்றத்தாதிமார்களும் ஸ்குட்டேரியிலுள்ள பட்டாள வைத்திய சாலைபோய்ச் சேர்ந்தார்கள். அது மிகப் பெரிதான ஒரு கட்டடம். அந்தப் பாசறை எவ்வளவுதூரம் பரவியதோ அவ்வளவுதூரம் அந்த வைத்தியசாலையும் பரவியிருந்தது. அதாவது நாலுமைல் தூரமென்கிறார்கள்.

அந்த வைத்தியசாலையிலிருந்த காயம்பட்ட போர்வீரர்கள் இந்தத் தாதிமார்களைக் கண்டவுடனே அவர்களை நல்வரவுகொண்டாடி அவர்களிடத்தில் மிகவும் நன்றி பாராட்டினார்கள். அவர்களுள் மிகவும் எளியவனான ஒருவன் அவர்களைக் கண்டவுடனே கண்ணீர் பெருக்கி ஒரு வார்த்தை சொன்னான். அதாவது, இவர்களைக் கண்டபோது தனக்குத் தானே கண்ணீர் பெருகலாயிற்று. இங்கிலாந்து தேசத்துப் பெருமாட்டிகள் நம்மிடத்தில் பரிதாபப்பட்டு நமக்குச் சிகிச்சோபசாரம் செய்ய 2000 மைல் தூரமான இவ்விடத்திற்குவந்தார்களே; இந்த ஒரு விஷயத்தை நினைத்தாலே நமக்கு நோயெல்லாம் நீங்கித் தேகம் அனுகூலப்பட்டதுபோலாகின்றது என்றான்.

அந்தத் தாதிமார்கள் அவ்விடம் போய்ச் சேர்ந்த சிறிது நேரத்துக்கெல்லாம் அவர்களுடைய கவலைகளும் காரியங்களும் மிகவும் அதிகமாயின. போர்க்களத்திலிருந்து காயம்பட்ட போர்வீரர் 600 பேர் வந்துசேர்ந்தார்கள். நைத்திங்கேல் பெருமாட்டிதன் விசாரணையிலுள்ள அத்தனை நோயாளிகளுக்கும் வேண்டிய பரிசுத்தமான உடைகளுக்கும் உணவுக்கும் தக்க ஏற்பாடுகள் செய்தாள். அந்த வைத்தியசாலைக்குச் சமீபத்தில் ஜலசவுக்கியமுள்ள வீடு ஒன்று வாங்கிக்கொண்டு அதில் அத்தனை பேருக்கும் வேண்டிய உடைகளை வெளுத்து உலர்த்திக்கொடுக்கும்படி ஏற்பாடு செய்தாள். அவள் அவ்விடம் சேர்ந்த பத்துதினத்திற்குள் சமையல்வீடு ஒன்று சித்தம் செய்து அதில் நாள்தோறும் ஐந்நூறுபே

ருக்கு நல்ல உணவு ஆக்கியளிக்கும்படி திட்டம் செய்தாள். வைத்திய சாலையில் நோயாளிகளுக்கு இந்தத் தாதிமார்களே போய்ப் பாய் தலையணைகள் தைத்துக் கொடுத்து உபசரித்தார்கள். தாதிமார்களுடைய உதவி அவர்களுக்கு இன்னும் மிகுதியாக வேண்டியிருந்ததனால், நைத்திங்கேலுடன் கூடி உபசாரம் செய்வதற்காக ஸ்தான்லி என்பவர் 50 தாதிமார்களுடன் அவ்விடம் வந்துசேர்ந்தார். அவர்களுடைய வைத்தியோபசாரம் மிகவும் அவசியமாயிருந்தது. ஏனெனில், பாஸ்பரஸ், டார்டனெல்ஸ் என்னுமிடங்களில் ஏழெட்டு வைத்தியசாலைகளிருந்தன. அந்த வைத்தியசாலைகளில் நோயாளிகளும் காயம்பட்டவர்களும் 500 பேர் வந்து சேர்ந்தார்கள். இதனோடு கிரிமியாவிலிருந்து 1000 பேர் வந்து சேர்ந்தார்கள். நைத்திங்கேலுடைய வைத்தியசாலையில்மாத்திரம் 3000 நோயாளிகளிருந்தனர். உங்களுடைய வீட்டில் இரண்டு மூன்று பிள்ளைகளுக்கு ஒருகால் நோய் வந்துவிடுமானால் அப்போது உண்டாகும் அலைச்சல் எத்தன்மையதாயிருக்கின்றது. அதைக்கொண்டே அத்தனை நோயாளிகளுடன் இந்தப் பெருமாட்டிகள் பட்டபாடு இப்படிப்பட்டதென்பதை நீங்கள் ஒருவாறு தெரிந்துகொள்ளலாம். நைத்திங்
ல் பெருமாட்டி சற்றுநேரங்கூட ஓரிடத்தில் உட்காராமல்
ள்முழுதும் நின்றுகொண்டே வைத்தியோபசாரம் முதலிய
ரியங்கள் செய்துவருவாள். இதற்கிடையே விஷபேதி
ம் விஷச்சுரமும் அதிகமாயின. ஒரு மாதகாலத்திற்குள்
ட்டு வைத்தியர்கள் இறந்துபோனார்கள்; மிகுந்திருந்த
கள் எட்டே பேர். தாதிமார்களில் மூன்றுபேர் மிகவும்
கசவுக்கியம் தப்பி அபாயமான ஸ்திதியிலிருந்தார்கள்.
கவும் கொடியதான நோய் எவ்விடத்திலிருக்கிறதோ அவ்
டத்தில் ஒப்பில்லாத உத்தமியான நைத்திங்கேல் பெரு
ட்டி காணப்படுவது நிச்சயம்" என மெக்டானல்டு

என்பவர் எழுதியிருக்கிறார்; பிராணன் போகிற தருணமானாலுங்கூட அவர்களுக்கு எதிரே இப்பெருமாட்டி வந்து நிற்பாளானால் உடனே அவர்களுக்கு ஒருவிதமான உற்சாகமுண்டாகின்றது. நாம் சொல்லுவது அதிவாதமென்று எண்ணவேண்டாம்; அந்த வைத்தியசாலை வியாபாரங்களை நடத்திய விஷயத்தில் அவள் ஒரு அற்புத சக்தியுள்ள தேவதையென்று சொல்லத்தக்கவளாயிருந்தாளேயன்றி வேறல்ல. அந்த வைத்தியசாலையில் அவள் நோயாளிகளைப் பார்த்துக்கொண்டு போகும்போது அந்தந்தப் பந்தியில் படுத்திருப்பவர் ஒவ்வொருவரும் அவளைப் பார்த்துப் பேரானந்தமடைந்து முகமலர்ச்சி கொள்வார்கள். இராப்பொழுதாகி மற்ற வைத்திய உத்தியோகஸ்தர்கள் எல்லாரும் தங்கள் இருப்பிடங்களுக்குச் சென்று வைத்தியசாலை முழுவதும் நிசப்தமாயிருக்கும் இருண்டுபோன தருணத்தில் இப்பெருமாட்டி தனியே ஒரு சிறு விளக்கும் கையுமாய் அவ்விடத்தில் சுற்றிப் பார்த்துக்கொண்டிருக்கக் காணப்படுவாள். இப்படி பார்த்து வந்த கோலத்தை 59-ம் பக்கத்துப் படத்தில் காண்க. அவளுடைய மெலிந்த தேகத்தைப் பார்த்தவர்கள் அவளது சுக சரீரத்திற்கு என்ன அபாயம் வருகிறதோவென்று திகில்படாதவர்களில்லை. ஆயினும் அப்பெருமாட்டி உத்தம ஸ்திரீகளுக்குரிய உதார புத்தியோடும் சாந்தகுணத்தோடும், நிதானமும் ஊக்கமும் மனவுறுதியுமுடையவளாய் ஸ்திரீகள் செய்வதற்கு அருமையான காரியங்களைச் செய்துவந்தாள்.

ஏழுமாத காலம் ஓயாமல் உழைத்ததனால் கிரிமியா சத்துச் சுரம் கண்டு ப்ளாரென்ஸ் நைத்திங்கேல் இரா வாரம் மிகவும் வருந்தினாள். பிறகு வரவர தேகம் பெ யத்தொடங்கியது. ஆயினும் அவள் நோய்கொண்டு ப கையாயிருக்கையிலேயே, என்னுடம்பில் அபாயகரமா

நோய் ஒன்றுமில்லையென்றே சொல்லிக்கொண்டிருந்தாள். தேகசவுக்கியத்தைப் பார்த்துக்கொள்ளும்படி அவளைப் பலவாறு வேண்டிக்கொண்டார்கள். யார் என்ன சொல்லியும் தான் மேற்போட்டுக்கொண்ட அவ்வேலையைவிட்டுப் போகவேண்டுமென்கிற கருத்து அவளுக்கு உண்டாகவேயில்லை. அதுகண்டு ஒரு பெரியவர் தமது சிறு கப்பலைக் கொடுத்து அதில் ஏறிக்கொண்டு கடலில் உலாவிச் சற்று நல்ல காற்றுப்பட்டால் ஆரோக்கியமாயிருக்குமென்றார். அப்பொழுது நைத்திங்கேலுடைய தேகஸ்திதி கப்பலில் அயலார் தூக்கிக்கொண்டு போய்விடும்படியான தசையிலிருந்தது. சீக்கிரம் அவளுக்குத் தேகம் சவுக்கியமாகவேண்டுமென்று மனப்பூர்வமாக சுவாமியைப் பிரார்த்தித்துக்கொண்டு பலர் நிற்க, சிலர் மெதுவாக அவளைக் கையிலெடுத்துக்கொண்டு கப்பலில் கொண்டுவிட்டார்கள்.

நைத்திங்கேல் போர்ச்சேவகர்களுக்கு உபகாரம் செய்துகொண்டிருக்கும்பொழுது அவளுக்கு நமது சக்ரவர்த்தினியார் ஒரு திருமுகம் எழுதியிருக்கிறார். அதாவது, இந்தப் போர்வீரர்களிடத்தில் அபிமானமும், அவர்கள் படும் வருத்தத்தில் பரிதாபமும், அவர்களுடைய தைரிய சௌரிய பராக்கிரமங்களுக்காகச் சந்தோஷமும் அவள் கொண்டிருக்குமளவிற்கு அதிகமாக மற்றெவர்க்குமிரா என்பதாம். நைத்திங்கேல் பெருமாட்டி செய்துவரும் உபகாரத்தை நன்கு மதித்து அதற்கு அறிகுறியாக அவளுக்கு மகாராணியார் இரத்தினங்களிழைத்த ஒரு பதக்கத்தைப் பரிசாக அளித்தார்; அதன் மத்தியில் 'கருணையுடையவர்களைக் கடவுள் கடாக்ஷிப்பாராக' என்னும் கருத்துள்ள வாக்கியமும், மிகப் பளபளப்புள்ள மூன்று வைரக்கற்களால் சூழப்பட்ட கிரிமியா என்னும் சொல்லும் எழுதப்பட்டிருந்தன. அன்றியும் சுல்தான் இரத்தினங்களிழைத்த ஆரமொன்று வெகுமதியளித்

தார். 1885-ம் ௵ கடைசியில் உலகத்தாருக்குச் செய்த உதவிக்குப் பதிலாக அவள் விஷயத்தில் நன்றிபாராட்டி ஏதேனும் ஒரு சன்மானஞ் செய்யவேண்டுமென்று தீர்மானித்து உடனே "நைத்திங்கேல் நிதி" என்று பெயரிட்டு மிகுந்த தனம் சேர்க்கப்பட்டது. ஆயினும் அப்பெருமாட்டி தன் சொந்த நன்மைக்காகத் தான் ஒன்றும் பெற்றுக்கொள்வதில்லையென்று மறுத்ததனால், அப்படிச் சேர்க்கப்பட்ட நிதியை, தாதித்தொழிலும், வைத்தியோபசாரம் செய்யும் தொழிலும் பயிற்றுவதற்கு ஒரு *சாலை ஸ்தாபித்து அது விஷயத்தில் அதை உபயோகிக்கும்படியாகத் தீர்மானிக்கப்பட்டது.

அவ்விடத்தில் செய்யவேண்டிய காரியம் முடிவான பிறகு நைத்திங்கேல் பெருமாட்டி சுதேசத்திற்குத் திரும்பினாள். திரும்பி வரும்போது வழியில் வீணாடம்பரங்கள் ஒன்றையும் வேண்டாதபடி அடக்கமாகவே சென்று 1856-ம் ௵ ஆகஸ்ற்று௴ 15உ இங்கிலாந்துபோய்ச் சேர்ந்தாள். சேனாவீரர் வைத்தியசாலையில் அவரிருந்த அறைகள், அவர் விட்டு வந்தபோது எந்த ஸ்திதியிலிருந்தனவோ, அதே ஸ்திதியிலேயே நாளைக்குமிருக்கின்றன.

நைத்திங்கேல் பெருமாட்டி தமக்கு வெகுமதி ஒன்றும் வேண்டுவதில்லையென மறுத்தபோது, அவளைப்பற்றி அவளது நேசர் ஒருவர் எழுதியிருக்கிறார். அதாவது, "நைத்திங்கேல் தாம் உழைத்து உபசாரம்செய்யத் தகுந்த ஸ்தானமேதாவது ஒன்று கிடைத்தால் அதுவே தமக்கு ஏற்ற வெகுமதியாகக்கொண்டிருக்கிறார். தாம் செய்யத்தொடங்கிய நன்மை மிகுதியாய் எங்கும் பரவும்படி செய்யவேண்டுமென்பது அவரது கோரிக்கை. ஏதாவது தக்க தொழிலொன்று செய்யும்படி கொடுப்பதைப்பார்க்கிலும் பெரிய உபகாரம் அவருக்கு வேறில்லை" என்பதாம். அந்த உபகாரம் அவர் கோரிக்கையின்படியே கிடைத்திருக்கின்றது. இந்துதேசத்து

ஸ்திரீகளுக்கு வைத்தியசகாயம் செய்வதற்காக லேடி டப்பெரின் நிதி ஏற்பட்டதே அவருக்குப் பெரிய காரியமாயிற்று. அது இங்கிலாந்தில் முப்பதுவருஷங்களுக்குமுன் ஏற்பட்டது. நைத்திங்கேல் பெருமாட்டியைப்போல, அந்த வழியில் பழகுகின்ற சுதேச ஸ்திரீகள் இன்னும் அருமையாகவே யிருக்கின்றனரென்பது உண்மையே. ஆயினும் ஸ்திரீ வைத்தியசாலைகள் ஏற்பட்டு இன்னும் சில வருஷங்களில் சுதேச வைத்தியர்களென்பது இப்பொழுது இருப்பதுபோல் அருமையாயிராமல் எங்கும் சாதாரணமாகிவிடும். ஆயினும் வேலைசெய்வதற்குப் போதுமான அத்தனை ஸ்திரீகள் கற்றுத்தேறுவது கடினமாகும். இப்பொழுது நாம் முதலில் அறியாமை யென்னும் துர்க்குணத்தைப் போக்கவேண்டும். படிப்பில்லாமலே நைத்திங்கேலும் இவருக்குச் சகாயமாயிருந்த நூறுபேர்களும் அவர் மேற்கொண்ட காரியத்தை நிறைவேற்ற வல்லவர்களானார்களா? படிப்பினாலேயே பெண்கள் உலகத்தில் நல்ல நிலைமைக்கு வருவார்கள். நமது பெண்களை எவ்வளவு காலம் கூடுமோ அவ்வளவு காலம் பாடசாலையில் படிக்கவிடவேண்டும். பின்பு அவர்கள் படிப்பை விடாமல் வீட்டிலிருந்தே வேண்டுமளவு படித்துவரவேண்டும். பெற்றோர்களும் புருஷர்களும் ஒழிவுவேளைகளில் படிக்க வைத்துக்கொண்டு, தங்கள் மனதில் தோன்றியிருக்கும் அருமையான விஷயங்களை அவர்களுக்குப் பலவிதமாக விளங்கும்படி எடுத்துச் சொல்லி அவற்றாலாகிய நன்மைகள் பலவும் விளையும்படி செய்துவருவார்களாக.

HARRIET MARTINEAU.

Born 1821.

ஹாரியட் மார்த்தினோ.

ப்ளாரன்ஸ் நைத்திங்கேல் பெருமாட்டி, கிரிமியா சண்டையில் காயப்பட்டு நோய்கொண்ட படைவீரர்களுக்கு எந்நேரமும் வைத்தியசாலையை விட்டு விலகாமல் வைத்தியம் பார்த்துக்கொண்டும், நோய்கொண்டவர்களை நன்றாய்ப் போற்றிப் பாதுகாத்து அவர்களுக்கு வைத்தியஞ்செய்வதற்குத் தடையில்லாதபடி பெண்கள் பலருக்கு வைத்தியம் பார்ப்பதற்கு நன்றாகக் கற்றுக்கொடுத்து அவர்களை நாடெங்கும் பரவச்செய்யவேண்டுமென்று பாடுபட்டுத் தமது காலத்தைக் கழித்துக்கொண்டும்வருகையில், ஹாரியட் மார்த்தினோ என்னும் பெருமாட்டி அவளைப்போலவே தாமும் ஒரு சிறப்பான வேலையில் அமர்ந்துகொண்டார். இவர் ப்ளாரன்ஸ் பெருமாட்டியைப்போல அவரவர் நோய் தீர்ப்பதை விட்டு, நோயை வரவொட்டாதபடி செய்யவேண்டிய விதிகளைக் கற்றுக்கொடுத்தார். எல்லோருக்கும் நன்னெறியை விளக்கிக் காட்டும்படியாக வாசகநடையிலும், செய்யுளிலும், பல கட்டுக்கதைகளையும் எழுதினார். ஹாரியட் மார்த்தினோ துரைசானிக்கு ப்ளாரன்ஸ் நைத்திங்கேல் துரைசானி நன்றாய்த் தெரியும். அவர் செய்த நன்மைகளைப்பற்றி இவர் நன்றாகப் புகழ்ந்தார். இந்த இரண்டு பெருமாட்டிகளாலும் பத்தொன்பதாவது நூற்றாண்டின் முன். பாதியில் விளைந்த நன்மைக்கு அளவில்லை. இவ்விருவருஞ் செய்த நன்றியைப் பிற்காலத்திலே ஆயிரக்கணக்கான பெண்கள் உறுதியாகக் கொண்டு 'வைத்தியசாலை மருத்துவ வேலைகளிலும், அச்

Harriet Martineau
From a Photograph by M. Bowness of Ambleside.

சயந்திரசாலைகளிலும், புத்தகங்களை யெழுதிப் பிரசுரஞ்செய்
வதிலும் அமர்ந்து உலகத்திற்குப் பலவாறாக நன்மையைச்
செய்துவந்தார்கள்.

மார்த்தினோவின் குடும்பத்தார் ஆதியில் பிரான்ஸ்தேசத்தி
லிருந்தவர்கள். 1688-ம் வருஷத்தில் மதவிஷயமாக அங்குள்ள
வர்கள் அவர்களைப் படுத்திவைத்த பாடுகளைப் பொறுக்
கமாட்டாமல், அவர்கள் இங்கிலாந்துக்குச் சென்று அங்குள்ள
அழகிய நகரமாகிய நார்வுச்சில் குடியேறினார்கள். இதுதான்
எலிஜபெத் ப்ரை வாழ்ந்த இடம். வெகுநாளளவும் இவ
ருடைய முன்னோர்கள் அந்நகரத்திலே வைத்தியஞ்செய்து
கொண்டிருந்தார்கள். அவர்க ளெல்லோரையும்போல இவ
ரது தந்தை ரணவைத்தியராயிராமல், சாதாரணமான மருந்து
யாத்திரைகளைமட்டுந்தான் செய்யப் பழகியிருந்தார். அவ
ருடைய மனைவி இங்கிலாந்தின் வடநாட்டிலே சர்க்கரை
சுத்திசெய்துகொண்டிருந்த ஒருவன் மகள். மார்த்தினோவென்
னும் துரைசானியுடன் கூடப்பிறந்தவர்கள் எட்டுப்பேர்; அவர்
களுள் மார்த்தினோ ஆறாவது குழந்தை. பேர்பெற்ற மாது
சிரோமணிகளின் தாய்மார்களைப்பற்றிப் படிப்பது முக்கிய
மானதல்லவா? மார்த்தினோவின் தாய் அதிக நேர்மையுடை
யவர்; அவர் ஒருபொழுதும் நன்னெறி தவறி நடவார்; ஆனால்
மேட்டிமை பாராட்டுபவர்; அதிகாரத்தை வகிப்பவர்; உபச
ரிக்கத் தெரியாதவர்; மனதிலுள்ளதை இங்கிதங்களால் வெளி
யிடாதவர்; தாய்க்குத் தம்மக்களிடத்திலுள்ள அன்பும், ஆத
ரவும் இவரிடத்தில் ஒருவாறு மறைந்திருந்தன. குழந்தைக
ளிடத்தில் சிரிப்பும் விளையாட்டுமாக நடந்துகொள்ளாமலிருப்
பது, அவர்களுக்குவேண்டிய உணவைக் கொடாமலிருப்பது
எவ்வளவு தீதோ, அதனிலும் தீதென்று இவர் அறியவில்லை.
குழந்தைகள் ஓடி விளையாடித் திரிந்தால்மட்டுமே தேகம்
சுகமாயிருக்குமென்பதும் இவருக்குத்தெரியாது. மனதிலே

நினைப்பதை வெளியே சொல்லாமலும், அப்படிச் சொல்லுவது கெட்டதென்று நினைத்துக்கொண்டிருக்கிற தாய்மார்கள், ஹாரியட் சிறுகுழந்தையாயிருந்த காலத்தில் இவருக்கு நேர்ந்ததை அறிவார்களேயானால் அப்படிச் செய்யார். ஹாரியட் சிறு குழந்தையாயிருக்கும்போதே காது ஒருவாறு செவிடாகிவிட்டது. இவருக்கு நினைவு தெரியுமுன்பே மோத்தலறிவு மட்டுப்பட்டது; மோத்தலறிவும், சுவையறிவும் ஒன்றுக்கொன்று சம்பந்தமுடையவையாதலால் சிறிது நாளுக்குள்ளே அதுவும் இவருக்கு இல்லாமற்போயிற்று. இவ்வாறாக இவர் பெரிய பெண்ணாவதற்குமுன் மூக்கினால் மோந்து பார்க்கவும், நாவினால் சுவைக்கவும், கண்ணால் பார்க்கவுங் கூடாமற்போயிற்று. மனிதருக்குள்ளே ஐம்புலன்களுள் காணுதலும், சுவைத்தலும், மோத்தலும் ஆகிய இம்மூன்றும் அவருக்கில்லை. ஆதலால், சந்தோஷமாக வாழ்ந்திருப்பது வருத்தமாயிற்று. இத்தனை சங்கடங்களோடு போகாமல் சிறு குழந்தையாயிருக்கும்போது உண்ட உணவு செரிக்காமல் மந்தந்தட்டி வருத்தப்பட்டதுமுண்டு; பால் இவர் உடம்புக்கு ஒத்துக்கொள்ளவில்லை. ஆயினும் சிறு குழந்தைக்குப் பாலும், ரொட்டியும் இல்லாதிருப்பது நன்றல்லவே. ஆகலால் இவர் தாயார் அவற்றை இவருக்கு மல்லுக்கட்டி ஊட்டவேண்டியதாயிற்று. ஆனதினால், பகலிலும் இரவிலும் உண்ட உணவு செரிக்காமல் வயிற்றை இழுத்துப் பிடித்துக்கொண்டு இவரை அதிகமாய்ச் சங்கடப்படுத்தியது. இயற்கையாகவே எளிதில் பயப்படத்தக்க இந்தப் பெண் காரணமின்றிப் பகலிலும் எதைக்கண்டாலும் நடுங்குவாள்; இவரைவிட்டு அச்சம் ஒருபொழுதும் நீங்கினதில்லை.

இத்தனையாகப் பிறந்த குழந்தையை ஏற்றபடி பார்த்து வருவதற்கு இவர் தாயார் நல்ல புத்திசாலியல்ல; இவர் பெரிய குடும்பத்திலே பிறந்தவர்; இவர் தாய்க்குப் பி

வாதமும், கண்டிப்பும், அதிகாரம் வகிக்குங் குணமும் அதிகம். இத்தனையிருந்தும் அவள் தன் மக்கள்மேல் கருத்தாயிருந்து தன் வருத்தத்தைப் பாராமல் எந்த வேலையையுஞ் செய்யச் சோம்பாமல் பாடுபட்டாள். அவள் மற்றவர்களைவிட ஆழ்ந்த புத்தி நுட்பமுடையவள். அவள் எந்தக் காரியத்தையும் ஆராய்ந்துபார்த்து ஏற்றவண்ணமாகச் செய்துவந்தமையால், அவள் கணவன் தான் செய்யவேண்டிய காரியங்களையெல்லாம்பற்றி அவளோடு கலந்து யோசித்துச் செய்யத் தவறினதில்லை. அவள் நல்ல தர்மசிந்தையும் அன்புமுள்ளவள்; சண்டையிட்டுப் பிடாரியைப்போலக் கத்தித்திட்டுகிற துர்க்குணம் அவளிடத்திலில்லை. வீட்டு வேலைகளைப்பார்ப்பதில் எல்லாவற்றையும் முக்கியமாகத் தன் மனப்போக்கின்படியே பிடிவாதமாகச் செய்துவந்ததனால் அவள் குணம் ஒருவாறு கெட்டுப்போயிற்று; இதுவுமல்லாமல் பிறரிடத்தில் அவளுக்குள்ள அன்பை வெளியே காட்டாதிருந்தாள். ஹாரியட் மார்த்தினோ தாம் எழுதிய கதையொன்றில் தன் தாயின் குணானுபவங்களையெல்லாம்பற்றி அன்னியதேசத்து ப்ராக்டர் துரைசானி சொல்லுகிற பாவனையாக நன்றாய் விளக்கிக் காட்டியிருக்கிறார்.

அந்தக் கதையில் ப்ராக்டர் என்பவள் யாரையும் புகழ்ந்து பேசுகிறதில்லையாதலால் அவள் வாக்கினால் புகழப்பட்டவர்களுக்கு அதிக மரியாதையுண்டு. அவள் காணும்படி யாருங்கண்ணீர் விடுகிறதில்லை; அவளுங் கண்ணீர்விடுவதுண்டென்றாலும், அப்படி விடாதிருப்பதே மேன்மையென்று எல்லோருக்கும் புத்திசொல்லிக் கண்டித்துவந்தாள். அந்தக் கதையில் அவளுடைய மகன் சிறுபிராயத்தில் வீட்டைவிட்டுக் கல்விபயிலுதற்பொருட்டு முதலில் பாடசாலைக்குப் புறப்பட்டுப்போனவுடன் அவனைவிட்டுப் பிரிந்திருக்கமாட்டாமல் அந்த வீட்டிலிருந்தவர்களெல்லாரும் அழுதபோது அவள்

மட்டும் துக்கத்தை வெளியே காட்டாமலும், கண்களினின்றும் ஒரு துளி நீரையாயினுஞ் சிந்தாமலும் தைரியமாயிருந்தாள். அதன் பின்பு ஒரு காலத்தில் அந்தச் சிறுவனுக்கு ஒரு ஆபத்துநேர்ந்து அதனால் வைத்தியன் அவன் காலை வெட்டிப்போடும்படி நேர்ந்ததென்றாலும், அவன் துக்கம் இன்னும் அதிகரித்து அதுகாரணமாக மனம் நொந்து ஏக்கங்கொள்ளுவானென்று அவள் பயந்து, தனக்குண்டான துக்கத்தை அவன் முன்னே வெளியிடாதிருந்தாள். இவ்வாறே அந்தப்பிள்ளையும் தன் தாய் தன்னோடுகூடவே இருக்கவேண்டுமென்பதைவிட்டு, அவளைப்பார்த்து, "அம்மா! இந்த நோய் கொடிது; நீ என்முன் இப்பொழுது நிற்கவேண்டாம்; இந்த வேதனையை நான் பொறுக்கமாட்டேன்; நீ இப்போதே இதைவிட்டுத் தூரச்செல்; வைத்தியனை உள்ளே வந்து சீக்கிரம் பார்க்கச் சொல்" என்று சொன்னான். காலைவெட்டிய புண் ஆறினபின்பு அவன் தன் தாயைக் கண்டபோது அவளைத் தெரியாமலே அவனுக்குத் துக்கம் பொறுக்காதபடி வெளிப்பட்டது; ஒருநாள் அவனும், அவன் தாயும், சகோதரியும் உட்கார்ந்து வார்த்தைசொல்லிக்கொண்டிருக்கையில், அவனுக்குத் தன்னையறியாதபடி துக்கம் மேலிட்டு, "நான் என் வருத்தத்தை எப்படிப் பொறுப்பேன்; இப்படி எத்தனை காலந்தான் சங்கடப்பட்டுக்கொண்டிருப்பேன்; எல்லோரையும்போல ஓடியாடித் திரிந்து சுகமாயிராமல் இந்தக்கஷ்டத்தை ஆயுள்காலமெல்லாம் எப்படிச்சகிப்பேன்" என்று சொன்னான். ஒருநாளும் தான் பட்ட வருத்தத்தை வெளியே சொல்லாத தன் சகோதரன் அன்று தன் தாய் முன்னே அப்படிச் சொல்லியதைக் கேட்டு, அது இவ்வளவென்று வாயாற் சொல்லவொண்ணாத மரணவலியாயிருந்தபடியினாலேதான் அவன் வாயைவிட்டு வெளியிட்டானென்று நினைத்தாள்.

அவளது குழந்தைகளுக்கும் அவளுக்கும் இத்தனையாக உள்ளத்தில் அன்பு மிகுந்திருந்தது. குழந்தைகள் தங்களுக்கு உண்டாகும் வருத்தங்களைத் தாயினிடஞ் சொல்லிக்கொள்ளுவது உலகத்தியற்கையல்லவா? அவளுடைய மக்கள் தாங்கள் பட்ட வருத்தங்களைப்பற்றி அவளோடு அதிகமாக ஒன்றுஞ் சொன்னதில்லை! தாயும், குழந்தைகள் இவ்வாறு படும் வருத்தத்தைக்கண்டு அதைப்பற்றி ஒன்றும் வாயைவிட்டுச் சொல்லாமல், அவ்வருத்தங்களெல்லாம் நீங்குதற்பொருட்டு இடைவிடாமல் ஓடியுழன்று வருந்திக்கஷ்டப்பட்டாள். அவளுக்குத் தம்மக்களிடத்தில் பூர்ணமான விசுவாசமுண்டு; அம்மக்களுடைய இளம்பிராயத்தில் அவள் அவர்களுக்கென்று பட்டவருத்தங் கொஞ்சமன்று. ஆனால் மனதிற்குள்ளேயிருந்ததுபோலவே, வெளித்தோற்றத்திலும் அவர்களோடு கொஞ்சிக் குலாவி முத்தமிட்டுச் சிரிப்பும் விளையாட்டுமாயிராதிருந்த தோஷமொன்றுதானுண்டு. குழந்தைகளோடு கொஞ்சி முத்தமிட்டு விளையாடுவது வீணல்ல. முன்சொன்ன எலிஜபெத் ப்ரையை எப்படி நினைத்தார்களோ அப்படியே இவரை வீட்டிலிருந்த குழந்தைகளெல்லாரிலும் மந்தமான புத்தியுடையவரென் றெண்ணியிருந்தார்கள். இவருக்கு நாளடைவில் உடம்பிலே பலமுண்டாகத் தலைப்பட்ட பின்புதான் அறிவு விருத்தியாயிற்று. குழந்தைகள் எவ்வளவுக்கெவ்வளவு சந்தோஷமாயிருக்குமோ, அவ்வளவுக்கவ்வளவு புத்தி கூர்மையாயிருக்கும்; மனம் தெளிவாகும்; மூளை பலமாயிருக்கும்; எதைப்பார்த்தாலும் கருத்து மனதில் நன்றாய் ஊன்றி மறந்துபோகாமலிருக்கும். கல்வியை நன்றாய்க் கற்றவளாகிய மேரி என்பவளைப்போலவே இவர் சிறுகுழந்தைப் பருவமுதற்கொண்டு கல்வியில் நன்றாய்த் தேர்ந்தார்; ஏழுவயதாயிருக்கும்போதே மில்ட்டன் ஆசிரியர் செய்த செய்யுட்களைப் பாடஞ்செய்யத் தொடங்கி அதன் சுவையை

வியந்து அவரைக் கொண்டாடினர். அவருக்குப் படிப்பதில் அதிகமான பற்றுண்டானபொழுது மிகவும் விரைவாய்ப் படித்தார். ஷேக்ஸ்பியர், கோல்ட் ஸ்மித், தாம்ஸன், மில்டன் இந்தக் கவிகள் எழுதிய செய்யுட்கள் பல இவருக்கு வாய்ப்பாடமாகத் தெரியும்.

மார்த்தினோ சிறுபெண்ணாயிருந்தகாலத்தில் பெண்கள் படிப்பு ஒருவகையாயும், பிள்ளைகள் படிப்பு வேறொருவகையாயுமிருந்தன. ஆனால் இவருடைய தமையன்மார்களும், தமக்கைமார்களும் வீட்டிலே இவருக்குப் பாடஞ்சொல்லி வந்தபடியால் அத்தனையாக வேறுபடவில்லை. அவர்கள் இவருக்கு இவ்வாறாக, வீட்டிலிருந்தபடியே லத்தீன் பாஷையையும், பிரெஞ்சுபாஷையையும் நன்றாய்ச் சொல்லிக் கொடுத்ததுமல்லாமல், இன்னும் பலவிஷயங்களையும் ஒருவாறு கற்றுக்கொடுத்தார்கள். மார்த்தினோவுக்குப் பதினொரு வயதான பொழுது இவருடைய சகோதரியான ராச்சல் என்பவள் ஒரு பள்ளிக்கூடத்திற்குப் போனாள். அப்பாடசாலை உபாத்தியாயர் நல்லவர். அந்தப் பள்ளிக்கூடத்தில் பிள்ளைகளும் படித்துவந்தார்கள். மார்த்தினோ இந்தப் பள்ளிக்கூடத்திலே சேர்ந்து நன்றாய்ப் படித்துவந்தார். அதின் உபாத்தியாயராகிய பெர்ரி என்பவர் சாந்தமுடையவர்; பாடஞ் சொல்லிக்கொடுப்பதில் நன்றாய்த் தேர்ந்தவராதலால், மார்த்தினோ சிறிதும் வருத்தத்தைப் பாராமல் நன்றாய்ப் படித்தார். அங்ககணிதம் அவருக்குப் பாடமாகத் தோற்றி வருத்தத்தைக் கொடாமல் விளையாட்டைப்போல வேடிக்கையாயிருந்தது. அங்கிலேய பாஷை பிழையற நன்றாய்க் கற்றுக்கொடுக்கப்பட்டு, இவருக்கு இனிய பாடமாயிற்று. இவ்வாறு இரண்டுவருஷகாலம் அந்தப் பள்ளிக்கூடத்திலே படித்தபின்பு மறுபடியும் வீட்டிலேதானே இருந்துகொண்டு படித்தார். இவர் லத்தீன், பிரெஞ்சு, சங்கீதம் இவற்றை வெளி உபாத்தியாயர்களிடஞ் சென்று கற்று

வந்தார். சரித்திரம், கதை, காவிய முதலியவற்றைத் தாமே படித்துவந்தார். ஒரு பெண் உரத்துக் கூவிப் படித்துக்கொண்டிருக்கையில் இன்னொருபெண் தையல்வேலை செய்துவருவாள். மார்த்தினோ பூத்தையல்வேலையில் கைதேர்ந்தவரானார். இவர் எழுதவேண்டிய விஷயங்கள் அதிகமாயிருந்தனவென்றாலும் அவற்றுடன் வாழ்நாள் முழுவதும் தையல் வேலையையும் விடாமல் செய்துவந்தார்.

முற்காலத்திலே இங்கிலாந்தில் தையல்வேலை பெண்களுக்கு முக்கியமானது; இதற்கென்று பெண்கள் பட்டபாடு கொஞ்சமல்ல. மார்த்தினோவின் காலத்தில் பெண்கள் தையல் வேலைக்காகப் பட்டகஷ்டம் இத்தனை அத்தனையென்று சொல்ல முடியாது. இக்காலத்திலோ, எங்கும் தைக்கும் யந்திரங்கள் வழங்கிவருகிறதினால் அவ்வளவாகப் பெண்கள் தையல் வேலைசெய்ய முயலுகிறதில்லையென்று காண்கிறது. மார்த்தினோ என்பவர் தையல்வேலையைப் பற்றிச் சொல்லியதாவது:—"இக்காலத்தில் தையல்வேலை தேகசவுக்கியத்திற்கென்றே பெரும்பான்மையாகச் செய்யப்படுகின்றது; அன்னவஸ்திரத்துக்குக் குறைவில்லாதவர்களும் இதை விட்டுவிடுகிறதில்லை. எனக்குத் தையல்வேலையினால் உண்டாகும் ஆனந்தம் கொஞ்சமல்ல. என்னைப்போல் தைப்பதில் பாடுபடுகிறவர்கள் அதிகமாயிரார். என்னுடைய அநுபவத்தில் தையல்வேலையைப்போல வருத்தமானது வேறொன்றுமில்லை; மிதமாகச் செய்தால்மட்டுமே நல்லதாகத் தோற்றும். எந்நேரமும் உட்கார்ந்து குனிந்துகொண்டிருப்பதினுங்கூட அத்தனையாக வருத்தமிராது; இடைவிடாது தைத்துக்கொண்டிருக்க வேண்டியதனால் கை ஓய்ந்துபோய் வலிக்கும். எந்நேரமும் தைத்துக்கொண்டிருந்தால் எப்படிப்பட்டவர்களுக்கும் இளைப்புண்டாகும். சிறு பெண்ணாயிருந்த காலத்தில், தைக்கும்போது மற்றவர்களைத் தூஷித்துப் பேசிய வம்பளப்பினால்

வலிமை குன்றியது; பிற்காலத்திலே அதற்காக எவ்வளவு துக்கப்பட்டுப் பரிகாரஞ் செய்துகொண்டாலும் பயன்படுகிறதில்லை" என்று பின்னிட்ட காலத்தில் தாமே அநுபவித்ததாகக் கண்டு எழுதியிருக்கிறார்.

இவ்வாறு மார்த்திநோவினால் அங்கீகரிக்கப்படாத தையல் வேலையை இந்தியாவில் வீடுதோறும் அதிகமாக வளர்த்துச் செய்வது நலமென்று எனக்குத் தோற்றவில்லை. ஏனெனில், இந்தியாவிலுள்ள புருஷர்களும் ஸ்திரீகளும் உடுக்கும் உடைகள் தைத்துக்கட்டப்படாதவைகளாதலாலும், சீதளதேசங்களில் வசிப்பவர்களுக்கு தேகமுழுமையும் போர்க்க வஸ்திரங்கள் வேண்டியிருப்பதைப்போல உஷ்ணதேசத்திலே வசிக்கிறவர்களாகிய இந்துக்களுக்கு வேண்டுவதில்லையாதலாலும், இந்ததேசத்தில் வீடுதோறும் தையல்வேலை அத்தனை அதிகமாய்வேண்டாம். இப்போது தான் இந்தியாவில் பெண்கள் வீடுகளிலே ஏதோ கொஞ்சம் படிக்கத் தலைப்பட்டிருக்கிறபடியால், அதனோடு தையல்வேலையை அதிகமாக வைத்துக்கொள்ளுவது தீது; அல்லாமலும், ஆங்கிலேயர்களுக்கிருப்பது போல இது இந்துக்களுக்கு அத்தனையாக தேசாசாரமுள்ளதுமன்று. தைப்பதினாலே கல்வி அபிவிருத்தியாவது மில்லை; பின்னாலே வரப்போகிற விஷயங்களை யோசித்துப் பார்க்கும் புத்திநுட்பமுமுண்டாவதில்லை; வீண்வம்பு பேசுவதை நிறுத்துவதுமில்லை. எவரையும் தூஷித்துப் பேசுவதுதானிந்தத் தேசத்திலுள்ள வழக்கம். எந்த நாட்டிலே படிப்புக் குறைவுபட்டு படிக்கப் புத்தகங்கள் அகப்படுவது வருத்தமோ, அந்நாட்டில் வீண்வம்பளப்பு அதிகமாயிருக்கும். "பெண்காள்! நீங்கள் கற்றுத்தேர்ந்து முன்னுக்கு வாருங்கள்; முன்காலத்திலிருந்தது போல இக்காலத்திலே கல்வியானது புருஷர்களுக்கு மாத்திரமே உரியதென்று மூடிவைத்து முத்திரைபோடப்பட்டிருக்கவில்லை. ஆதலினால் நீங்கள் நிறைகல்வியைக் கற்று, அறி

யாமை நீக்கிப் பழிபாவங்களுக்கு அஞ்சி வீண்வம்பளப்பை யொழித்துப் பகைமை மறந்து சுகமாக வாழ்ந்திருங்கள்" என்று டென்னிஸன் கவி பாடியிருக்கிறார். மார்த்திநோ பெரிய பெண்ணாகிப் பாடசாலையை விட்டபின்பு, வெளியிலுள்ள மற்றப் பெண்களெல்லாரையும்போலக் கல்விப்பொருளை விருத்திசெய்யாதிருக்கவில்லை; வீட்டிலே விளையாடி வம்புபேசாமலும், சோம்பித் திரிந்து வீணே காலத்தைப் போக்காமலும் எப்பொழுதும் படித்துக்கொண்டு நற்பொழுது போக்கினார். மிகுந்த தனத்தைத் தேடவேண்டுமென்று இவர் கவலைப்பட்டதில்லை. அக்காலத்தில் இவர் தாய் தந்தையருக்கு வேண்டிய பொருளிருந்தது. இவர் குடும்பத்திலுள்ள பெண்களுக்கெல்லாம் எந்தக்காலத்திலும் கவலையற்றுச் சுகமாக உண்டுடுத்து வாழ்ந்திருக்கப் போதுமான செல்வமுண்டாகையால் பாடுபடவேண்டுமென்கிற விசாரம் அவர்களுக்கில்லை. ஆயினும் அந்த வீட்டுப் பெண்களெல்லாம் கல்வி பயின்று, எந்தவிஷயத்திலும் நன்றாய்த் தேர்ந்திருந்ததைக் கண்டு ஊரார் அவர்களை அத்தனையாகப் பணக்காரர்களென்றெண்ணவில்லை. "நான் சிறுமியாயிருந்தகாலத்திலே, சிறுபெண்கள் கல்வியை அதிகமாகக் கற்றல் நன்றல்லவென்றும், அதிலும் எழுதும் இறகைக் கையிலே வைத்திருப்பது கூடாதென்றும் நினைத்திருந்தனர்" என்று அவர் எழுதியிருக்கிறார். ஆகையாலேதான் இவர் பின் மாலைவேளைகளிலும், இருட்டியபின்னும் மற்றவர்க்குத் தெரியாமல் படிக்கவேண்டியதாயிற்று. இவர் தமது சகோதரனோடு லத்தீன் பாஷையையும், அத்தைமகனாகிய லீ என்பவரோடு இத்தாலிய பாஷையையும் படித்தார். வேதபுத்தகத்தை விடாமல் படித்துவந்து, கேட்டதற்கெல்லாம் உடனே உத்தரஞ்சொல்ல வல்லவரானார். இவர் தனியே படித்த படிப்பு இதனினுஞ் சிறந்தது. இவர் பலர் எழுதிய தத்துவ சாஸ்திரங்களையும், நீதிசாஸ்திரங்களையும் கருத்தாகப் படித்

தார். இவர் பின்னிட்டுத் தாம் எழுதத் தொடங்கியபோது இவை இவருக்கு நன்றாய் உதவியாயின.

இந்தக்காலத்தில் இவருக்குக் காதுகேட்பது வரவர மந்தப்பட்டதனால், மற்றவர்களோடு பேசுவதை மட்டுப்படுத்தினார். இந்த வருத்தத்தை இவர் பொறுத்தது ஆச்சரியமானது. 1834-ம் ௵த்தில் இவரால் எழுதிப் பிரசுரஞ்செய்யப்பட்ட செவிடர்க்கெழுதிய கடிதத்தில், தமக்கு இதனாலுண்டான வருத்தங்களையெல்லாம் நன்றாய் எழுதியிருக்கிறார். எப்பிடிப்பட்ட துன்பம் நேர்ந்தாலும், நமது சவுக்கியத்தை மாத்திரம் பாராமல், தைரியம், பொறுமை, கபடமின்மை இவற்றால் அவற்றைப் பொறுத்தலே நலமென்று இவர் அதிக கம்பீரமாயும், அழகாயும் எழுதியிருப்பதைக் காணலாம். இவர் சொல்லியிருக்கும் புத்திமதியெல்லாம் இவர் முதலிலே தாமாகவே நன்மையென்று கண்டவையாம்; சிலரைப்போல இவர் பிறர்க்குச் சொல்லுவதொன்றும், தாம் செய்வது வேறுமாயிருக்கவில்லை.

ஹாரியட்கலியாணம்செய்துகொள்ளும்படி நிச்சயித்திருந்த வர்த்திங்ட்டன் என்பவர் அவருடைய சகோதரராகிய ஜேம்ஸ் என்பவருக்கு மிகவும் வேண்டியவர்; அவர்கள் இருவரும் ஒரு பாடசாலை மாணாக்கர். மார்த்திநோ அவனைக் காண்பதற்கு முன்னமே அவனைப்பற்றிக் கடிதங்கள் எழுதிக்கொண்டிருந்தாராகையால், அவ்விருவருக்கும் நல்ல சிநேகமுண்டாகிப் பாடசாலையில் விடுமுறைநாள் வந்தபோது வர்த்திங்டன் சிறிதுநாள் நார்விச் நகரத்துக்கு வந்து தமது தோழராகிய ஜேம்ஸ் என்பவருடன் வசித்தார். அப்போது அவருக்கும் மார்த்திநோவுக்கும் அதிகமான பழக்கமுண்டாகி இருவரும் ஒருவருக்கொருவர் மிக்க அன்புடையவரானார்கள். இப்படியிருந்தும், அவர்கள் மணம்புரிந்துகொள்ள வாய்க்கவில்லை. வர்த்திங்ட்டன் ஏழைவீட்டுப் பிள்ளை; அப்பொழுது

அவர் மாணாக்கராயிருந்தார். தாம் எண்ணியபடி மணஞ்செய்துகொள்ளக் கூடாமற் போய்விட்டதைப்பற்றி அவர் மனங்கரைந் துருகினார். இவ்வாறாக, இருவருக்கும் உண்டான நட்பு நாளுக்குநாள் விருத்தியடைந்து மணஞ்செய்துகொண்டு சுகமாயிருக்கவேண்டியது போகத் துன்பத்திற் கிடமாயிற்று. ஆயினும், மார்த்திநோவின் தாய் தந்தைகள் சிறிதுநாள் சென்றபின் இதை நல்ல சம்பந்தமென்று ஒப்புக்கொண்டார்கள். அந்தக் கலியாணத்தை அவர்கள் ஒப்புக்கொள்ளுவதற்கு மூன்று வருஷமாயிற்று. இப்படி நெடுங்காலந் தாமதித்ததாயினும், அதனால் இருவர்க்குமுள்ள அன்பு நாளுக்குநாள் விருத்தியாகித் திட்பமான நட்புண்டாயிற்று. மார்த்திநோ பருவமடைந்து பெரிய பெண்ணாக விருந்தகாலத்தில் ஆவலோடு கல்வி பயின்று வந்தவரென்றும், அதிகமாக வருந்திய கஷ்டப்பிராணியென்றும், காது செவிடாயிருந்ததை நினைக்க அவர் மனது சங்கடப்பட்டதென்றும், தமக்கு நடக்கப்போகிறதாயிருந்த விவாகத்தைப்பற்றிச் சந்தோஷமும், ஆனால் அது எப்போ நடக்கப்போகிறதோவென்ற விசாரமுமாயிருந்ததென்றும் அவர் எழுதிய புத்தகங்களிலே எங்குங் குறிப்பாகக் காணலாம்.

மார்த்திநோ தமக்கு இருபது வயதானபோது புத்தகங்களை எழுத ஆரம்பித்தார். தெய்வபக்தி இன்னதென்று விளக்கி எழுதிய பெண்களின் பெருமையைப்பற்றி ஒரு பிரபந்தத்தை எழுதினார். அவர் முதலிலே எழுதிய புத்தகங்களைப் படிப்பதற்கு இன்பமாயிருக்கும். அவற்றைப் படிப்பதனால் அவர் பின்னிட்டு எழுதிய புத்தகங்களின் கருத்தையெல்லாம் நன்றா யறிந்துகொள்ளலாம்:—"தெய்வபக்தியுண்டாகும் விதத்தைப்பற்றி நான் எழுதியவை அனைத்தும் சிறப்புடையவைகளானதற்குக் காரணம் என்னவெனில், இதற்கு முன்னே அங்கிலேயபாஷையில் பெண்கள் இது விஷயத்தைப்

பற்றி நன்றாய் எழுதிவைத்திருந்த புதைபொருள்தான்; இந்த இரகசியம் மற்றவர்களுக்குத் தெரியாமலிருப்பினுமிருக்கலாம். பெண்களின் மனது இயல்பாகவே இளகியதானதையாலும், நல்லதைக் கண்டால் அதில் பற்றுண்டாய்க் கொண்டாட்டமுண்டாகு மியல்புடையதானதையாலும் இப்படியிருக்கலாம். மத விஷயத்திலும் சன்மார்க்கத்திலும் இவ்வாறு பெண்களுக்கு அதிக ஆசையுண்டாவதைக் கண்டு எனக்குச் சந்தோஷமுண்டாகிறது" என்று எழுதியிருக்கிறார். பெண்கள் புத்தகங்களை எழுதி அவற்றின் மூலமாக மற்றவர்களுக்குப் போதிக்கக் கூடுமென்பதை அவர் முதலிலே கண்டார். தெய்விகம் இத்தன்மையதான தென்பதைப்பற்றி, அவர் எழுதியிருப்பது அனேக விடச்சிறந்ததே. மதங்களின் கோட்பாடுகளைப் பற்றியும் அவர் வாதிக்கிறதில்லை. சிறுநாவல்களில் நீதிகள் மதக் கோட்பாடுகளோடு பொருந்தாமலிருப்பதும் உண்டானதையால், அவற்றை அங்கீகரிப்பது கூடாதென்று யாரென்ன விரோதஞ் செய்தாலும் அவர் கேட்பதில்லை. பெண்களின் பெருமையைப்பற்றி அவரெழுதியது முக்கியமானது; அது உண்மையென்று அதை நிலைநிறுத்தற்பொருட்டு அவர் நேராகவும் மற்றவர்கள் மூலமாகவும் செய்த முயற்சி கொஞ்சமல்ல. பெண்கள் முக்கியமான எப்படிப்பட்ட விஷயங்களையும் ஆராய்ந்தறிய வல்லவர்களென்றும், குற்றமற்று வாழ்ந்திருக்கக் கூடுமென்றும் அவர் நன்றாய் விளக்கிக் காட்டியிருக்கிறார். அவருக்கு இருபத்தாறாவது வயதில் இரண்டுவிதமான பெருந்துன்பங்கள் நேர்ந்தன. அதற்கு முன்னெல்லாம் நன்றாய் வர்த்தகஞ்செய்து, நல்ல ஊதியம் பெற்றுவந்த அவருடைய தந்தைக்கு நஷ்டம் நேர்ந்து அதனோடு ஒருவாறு நோயுமுண்டாகி, அதனால் அவர் அதுவே விசாரமாக மரணமடைந்தார். அவர் அவ்வாறு இறந்துபோகுங்காலத்தில் மார்த்தினோவினால் செய்யப்பட்ட உபசியாசம், ஸ்தோத்திரம், பிரத்தனை

இவை அடங்கிய புத்தகத்தைப் படித்து அவருக்கு ஆறுதலுண்டாயிற்று.

மற்றொரு பெருந்துன்பமென்னவென்றால், உயிருக்குயிராயிருந்த அவருடைய பர்த்தாவாகிய வர்த்திங்ட்டன் என்பவர் நோய்கொண்டு இறந்துபோய்விட்டார். வர்த்திங்ட்டன் எந்த நாளிலும் சுகவலிமை இல்லாதவராகவே இருந்தார். அவர் குருபீடத்திற்குரிய காரியத்தில் அமர்ந்தபின் எப்பொழுதும் அதுவே நினைவாக வேலைபார்த்துவந்தார். அவருக்கு அந்த வேலையைச் செய்வதும் அதிக வருத்தமாயிற்று. இருந்தாற்போலிருந்து மூளையைப்பற்றிய சுரம் வந்து மயக்கமுண்டாயிற்று. இவ்வாறு உண்டான நோயைக் கண்டு அவர், அதற்கு மருந்து வேண்டாமென்றும், தம் காதலியாகிய மார்த்தினோ தம்மிடம் வந்திருந்தால் அந்நோய் நீங்கிவிடுமென்றுஞ் சொன்னார். அதன்படியே அவர் மார்த்தினோவின் தாயாருக்குக் கடிதமொன்றெழுதி, தன்னை வந்து பார்த்துவிட்டுப் போகும்படி தன் மனைவியாளையனுப்ப வேண்டிக்கொண்டார். அவரைப் போலவே மார்த்தினோவுக்குத் தமது நாயகனைப் பார்க்க வேண்டுமென்று அதிக ஆசை. ஆனாலும் அப்படிப் போய் பார்த்துவிட்டு வருவது அவர் தாயாருக்கு சம்மதமில்லை. அப்படியுண்டான ஆபத்துக்காலத்திலே தாம் தம் கணவனண்டையிருக்கக்கூடாமற்போனதைப்பற்றி மார்த்தினோ மனம்வருந்தினார்; ஆயினும், தமது தாயின் மனதுக்கோணை நடப்பது கூடாதென்றெண்ணி அவளிட்ட கட்டளையை மீறி நடவாமலிருந்தார். தமது கண்ணாயிருந்த காதலனைக் காணாதிருக்கும்படியாயிற்றேயென்று அவர் நினைத்துத் துக்கித்தார். இவ்வாறு அவர் துக்கித்துக்கொண்டிருக்கையில், வர்த்திங்ட்டன் இறந்துபோனார். அன்றுமுதல் அவர் அதுவே விசாரமாக ஆயுள்நாளளவும் கைம்பெண்ணாகவே யிருந்தார். அவர் ஆயுள் காலமெல்லாம் எப்பொழுதும் சோம்பலின்றி உழைத்தார்.

அவருக்கு நல்ல ஞாபகசக்தி யிருந்ததுமன்றி, புத்தியும் மிகக் கூர்மையாயிருந்தது. அவ்வளவு பாலியத்திலே கைம் பெண்ணாகாமலிருப்பாரேயாயின் அவர் இன்னும் எவ்வளவோ அன்புடையவராயிருப்பார்.

மேலும் அவர் இயல்பாகவே பெருந்தன்மையுடையவர். வர்த்திங்டன் இறந்துபோன மறுவருஷம் தாம் அதிகமாக வியாதியினால் வருத்தப்பட்டதாகவும் அவர் எழுதினார். அவர் எதைச்செய்தாலும் "செய்வன திருந்தச் செய்" என்றபடி நன்றாகச் செய்கிற வழக்கமுடையவராதலால், இடையில் சோர்வு அடைகிறதில்லை; செய்வதில் குற்றமொன்று மிராது. அவரிடம் 11 வருஷகாலம் கூடவேயிருந்து வேலைசெய்து வந்த வேலைக்காரி யொருத்தி "நான் அவரை முதலிலே பார்த்த காலத்தில் அவர் நாற்காலியில் சாய்ந்துகொண்டிருந்தார்; அப்பொழுது அவர் கைகளிரண்டையும் தொங்கவிட்டு ஒன்றிலும் நினைவில்லாமல் நோயினால் வருந்திக்கொண்டு இருந்தார். அப்படியிருந்ததனால் அவருக்கு ஏதோ பெரிய நோயிருந்ததென்றெண்ணினேன்" என்று சொன்னாள். அவர் முதலில் புத்தகங்களை எழுதியகாலத்தில் அதனால் வருமானம் கிடைக்கவில்லை. அப்படியிருந்தும் அவர் சோர்வடையாமல் எழுதிக்கொண்டே வந்தார். தாம் எழுதும் புத்தகங்களால் நன்மை எப்படியும் கிடைக்குமென்கிற நம்பிக்கை அவருக்குப் பூர்ணமாக வுண்டாதலால், எடுத்த காரியத்தை விட்டுவிடவில்லை; அவர் பெருமை உடனே வெளிப்படாமல் வரவர வெளிப்பட்டது. இவ்வுலகத்திலே பெரும் புகழடைந்தவர்களெல்லோரும் இப்படியேதான். கடைசியில் அவர் பிரசித்தி எங்கும் பரவத் தொடங்கியது: கல்வியில் அவர் நல்ல தேர்ச்சியுடையவரானார். சிறுமியாயிருந்தகாலத்தில் அவருக்கு இத்தனை சாமர்த்தியம் உண்டென்று அவர் தாய் அறிந்துகொள்ளவில்லை. அவளைப்பற்றி அவர் தாய், என் மக்களைப்பற்றி

எனக்கு விசாரமில்லை; மார்த்தினோ செவிடியாதலால் அவள் எப்படிச் சுகமாக வாழ்ந்திருப்பாளோ வென்பதை நினைக்க விசனமா யிருக்கிறதென்று சொல்லுவதுண்டு. லண்டன் நகரத்தில் வருஷமொன்றுக்கு 2000 பவுன் சம்பளமுள்ள வேலையொன்று மார்த்தினோவுக்குக் கிடைக்கிறகாலத்தில், அவளை விவாகஞ் செய்துகொள்வதற்கிருந்த வர்த்திங்டனும் அவளும் சேர்ந்திருந்ததை அவர் தாயார் கண்டு தமது மகளை யழைத்து அப்பொழுதே அந்த விடத்தைவிட்டு வீட்டுக்குப் போகவேண்டுமென்று கட்டளையிட, அவர் அதை மீறாமல் தாயார் சொன்னபடியே செய்தார்.

அந்தக்காலத்தில், ரோமன் மார்க்கம், யூதமார்க்கம், மகம்மதுமார்க்கம் ஆகிய இந்த மதங்களைச் சேர்ந்தவர்கள் ஒவ்வொருவரும் அவற்றைவிட்டுக் கிறிஸ்தவராகும்படியாக பிரபந்தங்களை யெழுதுகிறவர்களுக்குத் தனித்தனியே மூன்று வெகுமதிகள் கொடுக்கப்படுமென்று பிரசித்தஞ் செய்யப்பட்டது. அதுகேட்டு மார்த்தினோ மூன்று பிரபந்தங்களை யெழுதி, தனித்தனியே வெவ்வேறு மனிதரைக்கொண்டு மூன்று பிரதிகள் எழுதச்சொல்லி, வெவ்வேறான இடங்களிலேயிருந்து தபாலில் அனுப்பும்படி செய்தார். அந்த மூன்றிலும் அவரே வெகுமதி பெற்றார். 1831-ம் ௵ தனநிர்வாகநூலை எல்லோர்க்கும் பயன்படும்படி கருத்துகளைக் கதாரூபமாக எழுதி யாவருக்கும் விளங்கச் செய்தார். அவர் எழுதியகாலம் அதற்கேற்றது: அப்பொழுதுதான் மகாஜன சபையார் நூதனமாகக் கற்பித்த சீர்திருத்தச் சட்டத்தைப் பிரபுக்கள் சபையார் இணங்காமல் வேண்டாமென்று தள்ளிவிட்டார்கள். ஜனங்களுக்கு வேண்டிய விஷயங்களையெல்லாம் சாஸ்திர முறையாக நன்றாய் எடுத்துக் காட்டுவதற்கு அது ஏற்றகாலம். அவர் கதைகளை நன்றாக எழுதத் தொடங்கினார்; அவ ரெழுதியவற்றை யெல்லாம் பிரசுரப்படுத்துவதற் கேற்பவர்

ஒருவர் அகப்படுவது சற்றே வருத்தமாயிற்று. இதற்கென்றே அவர் தாமே லண்டன் நகரத்துக்குச் சென்றார். மூன்று வாரமட்டும் அவர் தெருத்தெருவாய் அலைந்து, மழையிலும் ஈரத்திலும் நின்று சங்கடப்பட்டார்; அவரென்ன முயன்றும் பயன்படவில்லை. இரவெல்லாம் அதிகமாக முயன்று எழுதிக்கொண்டிருந்தார். கடைசியில் ஒருவர் அவற்றையெல்லாம் பிரசுரஞ் செய்ய உடன்பட்டார்; அதில் மார்த்திநோவுக்கு அதிகலாபம் கிடைக்கவில்லையாயினும், அத்தனைகாலமாக மறைந்துகிடந்த கையெழுத்துப் பிரதிகள் அச்சிடப்பட்டு அவர் பெருமை வெளிக்கு வந்தது. அச்சிட்ட பத்து நாளைக்குள்ளே 1500 பிரதிகள் விலைப்பட்டன; ஆகலினால் அதை அச்சிட்டவர் மீண்டும் 5000 பிரதிகளை உடனே அச்சிடவேண்டியதாயிற்று. பின்னும் எல்லோரும் அவர் எழுதியதைக் கொண்டாடத் தலைப்பட்டார்கள். அவர் பார்வைக்கு வந்த கடிதங்களுக்கும், சிறு புத்தகங்களுக்கும், மாத சஞ்சிகை பத்திரிகைகளுக்கும் அளவில்லை. லார்ட்டு ப்ரூகாம் பிரபுவானவர் அவரால் பல புத்தகங்கள் பிரசுரஞ் செய்யப்பட்டதைக் கண்டு ஆச்சரியப்பட்டு, அப்படிப் புத்தகங்களை விசேஷமாக எழுதிப் பிரசுரப்படுத்தி எங்குங் கல்வியைப் பரவச்செய்வதில் புருஷர்களுக்குள்ளு மொருவருமில்லையென்று சொல்லியிருக்கிறார். இத்தனையிருந்தும் மார்த்திநோவுக்குச் சாதுகேளாது. அது முதல் அவர் லண்டன் நகரத்திற்கு வந்து வசிக்கத் தலைப்பட்டார். அங்கே அவர் தாயாரும் அவரோடிருந்தார். அது முதற்கொண்டு அவருடைய பாண்டித்தியம் எங்கும் வெளிப்பட்டு எல்லோரும் அவரைக் கொண்டாட ஆரம்பித்தார்கள். வித்துவான்களும், பட்டம் பெற்றவர்களும் மகாஜன சபையார்களும் அவரைக் கண்டு சம்பாஷணை செய்யத் தொடங்கினார்கள்.

அவர் லண்டன் நகரத்தில் வசித்த இரண்டுவருஷ காலத்திற்குள்ளே 34 புத்தகங்களை யெழுதினார். அவ்வாறு எழுதி

அச்சிடப்பட்ட புத்தகங்கள் ஒவ்வொன்றிலும் நூற்றிருபது பக்கத்துக்குக் குறைவில்லை. அவர் காலையில் எழுமணிக்கு எழுந்திருப்பார்; தாமே காப்பிக்கொட்டைக் கஷாயம் செய்து குடிப்பார். காலைப்போஜனமானவுடன் செய்காரியத்தைத் தொடங்கி மத்தியான்னம் ஒருமணிவரையிலும் வேலை செய்வார். பின்பு இரண்டுமணிமுதல் நாலுமணிவரையிலும் தம்மைக் காணவந்தவர்களுடன் வார்த்தை சொல்லுவார். அதன் பின்பு உலாவிவிட்டுச் சற்றுநேரமளவும் வர்த்தமான பத்திரிகைகளைப் பார்த்துக்கொண்டிருந்து அதற்குப் பிறகு மாலைவேளைப் போஜனஞ் செய்தற்பொருட்டு வேறு ஆடை உடுத்துக்கொள்ளுவார். அவர் பெரும்பாலும் பிறர் வீட்டிலே இராத்திரி விருந்துக்குப்போவது வழக்கம். அந்நேரத்திலும் யாராவது இரண்டொருவர் வந்து வார்த்தை சொல்லிக்கொண்டிருப்பார்கள். அவ்வளவோடு அன்றைப்பொழுது கழிந்துவிடுமென்று அவரைப்பற்றி எழுதப்பட்டிருக்கிறது.

தேகத்திலே நல்ல பலமில்லாத ஒரு பெருமாட்டி இத்தனை அருமையான காரியங்கள் செய்ததைக் காண யாருக்கும் வியப்பாகவே தோன்றும். வெறுங் கதைகளைமட்டுஞ் சொல்லுகிறதென்றால் வருத்தமாக இருக்கும்: அவர் சொல்லுங் கதைகள் ஒவ்வொன்றிலும் மனிதர்களுடைய மனத்தோற்றமெல்லாம் நன்றாய் விளக்கிக் காட்டப்பட்டிருக்கும்; இராஜாங்கத்திலும், மானிட சமுதாயங்களிலும் வழங்கிவருகிற நடவடிக்கைகளெல்லாம் அவற்றில் ஏற்றவண்ணமாக அமைந்துச் சொல்லப்பட்டிருக்கும். அவர் எந்தக்கதையை எழுதத் தொடங்கினாலும், அந்தக் கதையினாலுண்டாகும் பயனை முன்பே அறிந்து எந்தெந்த விஷயங்களை எப்படியெப்படி சொல்லவேண்டுமோ அப்படியே சமயோசிதமாகச் சொல்லுவார். ஆகலினால் அவர் எழுதிய கதைகளெல்லாம் உபயோகமற்ற வீண் கதைகளாய்ப் பொழுது போக்குவதற்

கேற்றவைகளாக மட்டுமிராமல், ராஜ்யதந்திரமுறை முதலிய நல்லயுக்திகள் அடங்கிய சிறந்த கதைகளாகவேயிருக்கும். அன்றியும் அவற்றில் சிலருடைய குறைகுணங்களும் மறைபொருளாகச் சொல்லப்பட்டிருக்கும். "தெய்வநூல் விளக்கம்" என்னும் புத்தகத்தைப் பிரசுரஞ் செய்தபின்பு அவர் வட அமெரிக்காவுக்குச் சென்று இரண்டு வருஷகாலமளவும் அங்குள்ள இடங்களைச் சுற்றிப்பார்த்தார். "யானை வரும் பின்னே மணியோசை வரும் முன்னே" என்றவண்ணமாய் அவர் அவ்விடம் போவதற்கு முன்பே அவர் கீர்த்தி அங்கெங்கும் பரந்திருந்தமையால், தங்கள் முன்னோருடைய ஜன்மபூமியாகிய இங்கிலாந்து தீவிலிருந்துவரும் பரோபகார சிந்தையுள்ள மகானுபாவர்களை ஆதரிப்பதற்குச் சித்தமாயிருந்த அத்தேசத்தார் ஹாரியட் மார்த்தினோவை அன்புடன் உபசரித்தனர். அவர் அமெரிக்கா தேசத்தைப்பற்றிப் புத்தகமொன்றை எழுதினார். அதனால் அவருக்கு 9000 பொன் கிடைத்தது. 1838-ம் வருஷத்தில் அவர் "உபசார முறைமை" என்னும் புத்தகத்தை யெழுதினார். பிறகு "பற்பல சேவகவிதி"யென்று துவக்கிப் புத்தகமஞ்சரியாகப் பல நூல்கள் எழுத ஆரம்பித்தார். அவர் எழுதியிருக்கும் "வீட்டில் குற்றேவல் செய்பவள்," "வீட்டின் பணிவிடைக்காரி," "துரைசானி வேலைக்காரி," "தையற்காரி" என்னும் புத்தகங்கள் அந்த மஞ்சரியைச் சேர்ந்தவை. அவருக்கு வீட்டுவேலை யனைத்தையும் நன்றாய்ப் பார்க்கத் தெரியும். மற்ற விஷயங்களிற்போலவே இதிலும் அவர் மனச்சாக்ஷிக்கு விரோதமாக ஒன்றுஞ் செய்ததில்லை. இல்வாழ்க்கைக்கு மிகுந்த புத்தி நுட்பமும், நல்லொழுக்கமும் இன்றி யமையாதவை. இவையனைத்தும் அவரிடம் பொருந்தியிருந்ததனால், மனை மாட்சிமையையும் தையல்வேலையையும்பற்றி அவர் சொல்லியிருக்கும் புத்திமதிகளின் வழிகள் பிழைபாடின்றி யிருக்கின்றன. ஹாரி-

யட் பெருமாட்டியார் அன்னியதேச வர்த்தமானங்களை நன்றாயறிந்து ராஜ்யதந்திர முறையைப்போன்ற கடினமான விஷயங்களை நன்றாய்க் கிரகிக்கும் புத்திகூர்மையை யுடையவராயிருந்ததுமன்றி, அவ்விதமான விஷயங்களை ஜனங்களுக்குச் சொல்லிக்கொடுக்கவும் வல்லவராயிருந்தார். மனதிற்கு விருப்பமான விஷயங்களிலே மாத்திரமன்றி வெறுப்பான விஷயங்களிலும் புத்திமான்கள் உட்புகுந்து மனதைச் செலுத்துவார்கள். எப்பொழுதும் அவர் தம் வீட்டுக்காரிய மெல்லாவற்றையும் தாமே செய்வது வழக்கம். வீட்டிலிருக்கும்பொழுது அவர் தாமே விளக்கைச் சுத்திசெய்து அதில் எண்ணெய் வார்த்துத் திரியிடுவார்; தாமே தம் புத்தகங்களைத் தூசுப்போகத் துடைப்பார்."

அப்பொழுது மார்த்தினோவின் உடம்பு நோய்கொண்டு ஆரோக்கியம் குன்ற ஆரம்பித்தது. புத்தகம் எழுதுவதற்காக இரவும் பகலும் உழைத்ததாலும், வீட்டு விசாரத்தாலும் அவருடம்பு இளைத்தது. ஐந்துவருஷ காலமளவும் இடைவிடாமல் எப்பொழுதுமிருந்த நோயால் அவர் பட்ட கஷ்டம் இவ்வளவவ்வளவல்ல. அப்பொழுது அவர் வெளியேபோகச் சக்தியற்றவராய்ப் படுக்கை யறைக்கும், படிக்குமறைக்கும் நடுவிலேயே அலைந்துகொண்டிருந்தார்.

இவ்வாறு அவஸ்தைப்படுகையிலும் அவர், நோயில்லாமல் சௌக்கியமாயிருக்கையில் அதிக சுறுசுறுப்பான ஒருவன் எத்தனை புத்தகங்களை எழுதக்கூடுமோ, அதற்குச் சிறிதுங் குறைவில்லாமலே எழுதிவந்தார். அதில் வர்த்தகர்களுடைய காரியங் கைகூடுவதற்காக அவர் எழுதின "தற்கால மனித நிலைமை" என்னும் கதை அழகாயும், கேட்பவரை மனமுருகச் செய்வதாயுமிருப்பதுமன்றி, அதி கம்பீரமாயு மிருக்கிறதென்று ஜப்ரி பிரபு எழுதியிருக்கிறார். அதைப்பற்றியே

ப்ளாரென்ஸ் நைத்திங்கேல் பெருமாட்டியார் "இதனினுஞ் சிறந்த கதை வேறொன்றுமில்லை யென்பதில் சிறிதேனும் சமுசயம்வேண்டாம்" என்று சொல்லியிருக்கிறார். அவர் நோயால் வருந்திக்கொண்டிருக்கையில் துரைத்தனத்தார் அவருக்கு வருஷமொன்றுக்கு ரூ. 2400 நன்கொடைச் சம்பளம் கொடுப்பதாகச் சொன்னார்கள். அவர் ஒரு காரணம்பற்றி அதைத் தமக்கு வேண்டாமென்று சொல்லிவிட்டார். துரைத்தனத்தார் ஏழைகளுக்கும் தனவான்களுக்கும் பேதமில்லாமல் வரிபோட்டுப் பணம் சேகரம்பண்ணுவதாலும், நன்கொடைச் சம்பளங் கொடுக்கும் அதிகாரம் தேச நன்மைக்காக ஏற்பட்ட பார்லிமெண்டார் வசத்தில் இல்லாததாலும் தமக்கு அது வேண்டாமென்றும், ஒருவேளை தமக்கு அதிகமான வறுமை வந்துவிட்டால் யாசகஞ்செய்து ஜீவன செய்வதேயொழிய அவ்வாறுசெய்கிறதில்லையென்றுஞ் சொல்லிவிட்டார். அவர் அப்பொழுது அதிக ஏழையாயிருந்ததால், பந்துக்களிடமிருந்து உபகாரம் பெற்றுக்கொள்ளவேண்டியதாயிற்று. ஆயினும் இவ்வளவு ஏழையாயிருந்தகாலத்திலும் சித்திரவேலை முதலியவற்றைச் செய்து பணம் சம்பாதித்து தர்ம காரியங்களுக்காகப் பணங்கொடுத்துக்கொண்டிருந்தார்.

1841-ம் வருஷத்தில் "வீட்டிற் குடியேறுவோர்," "இராஜகுமாரனும் ஏழைக்குடியானவனும்," "ஆற்றைக் கடத்தல் முதலிய வீரச் செய்கைகள்," "லண்டன் நகரத்தில் சிறுவர்களுக்கான கதைகள்" என்கிற நான்கு புத்தகமெழுதினார். இந்தக் குழந்தைக் கதைகள் இனிய சொற்கள் நிறைந்தனவாயிருக்கின்றன. சென்னைச் சகல கலாசாலையிலிருந்து வருஷந்தோறும் பட்டம் பெறுகிறவர்களுள் எவரேனும் இக்கதைகளைத் தமிழில் மொழிபெயர்த்து, இங்கிலாந்திலிருக்கும் ...தைகள் இவைகளைப் படித்து ஆனந்தப்படுவதுபோல

தேசத்துக் குழந்தைகளுக்கும் ஆனந்தத்தை யளிப்பார்களேயாயின் நலமாயிருக்கும்.

1843-ம் வருஷத்தில் அவருடைய தரித்திரத்தையும், துரைத்தனத்தார் கொடுக்கவந்த சம்பளத்தை அவர் வேண்டாமென்று சொல்லிவிட்டதையும் கேட்ட அவருடைய நண்பரில் சிலர், அவர் ஜனங்களுக்குச் செய்த நன்மைக்காக அவருக்கு நன்கொடை கொடுக்கவேண்டுமென்று கருதி, அவரை யறிந்தவ ...டஞ் சென்று பணம் சேகரஞ் செய்தார்கள். அவ்வாறாகக் ...டைத்த ரூபாய் 21,000-த்தையும் அவர் பேரால் ஓரிடத் ...ல் வட்டிக்குக் கொடுத்துவைத்தார்கள்; இன்னம் கொஞ்சம் ...ணம் செலவழித்து ஒரு தாம்பாளம் செய்து அவருக்குக் ...த்தார்கள். அப்பொழுதுதான், கிரிமியா சண்டையில் ...யம்பட்ட போர்வீரர்களுக்குச் செய்த உபகாரத்தாற் பிர ...த்திபெறுவதற்கு முன்பே, நோயாளிகளை அன்புடனாதரித்து வந்த ப்ளாரென்ஸ் நைத்திங்கேல் பெருமாட்டியார் நோயால் வருந்தும் ஹாரியட் மார்த்தினோவை யாதரிக்க வந்தார். அவர்களிருவருக்கும் அப்பொழுதுண்டான பழக்கமானது பிற்காலத்தில் அவர்களிருவரும் பொது நன்மைக்காக ஒன்றுசேர்ந்து முயற்சி செய்வதற் கேதுவாயிற்று.

அவரை நெடுநாளாய் வருத்திய வியாதி 1844-ம் வருஷத்தில் ஔஷதப்பிரயோகத்தால் லகுவாயிற்று. ஆனால் அந்த மருந்து வியாதியை உடனே ஒழிக்கவில்லை; சில மாதங்கள் சென்ற பின்புதான் குணப்படுத்தியது.

ஹாரியட் மார்த்தினோ நாற்பதாம் வயதில் தமக்குச் சொந்தமாக ஒரு வீடு சம்பாதித்துக்கொள்ள வேண்டுமென்று விரும்பினார். இங்கிலாந்திலிருக்கும் ஏரிகள் நிறைந்த பிரதேசங்களின் அழகைக்கண்டு அவர் அங்கேயே வாசஞ்செய்ய வேண்டுமென்று கருதினார். அவர் அவ்விடத்தில் இரண்டு

சாணி நிலம் வாங்கி, அதில் கட்டடம் கட்டுவதற்காகச் சில பொருள்களை யீடுவைத்துத் தம்முடைய பணக்கார அத்தனிடமிருந்து கொஞ்சம் பணம் வாங்கினார்; தம்மனதுக்கு இசைந்தபடித் தாமே வீட்டின் மாதிரிப்படத்தை யெழுதிக் கொடுத்து, வீடுகட்டும்போதும் பக்கத்திலேயே யிருந்தார். மனங்கொண்டது மாளிகை யல்லவா. அவருடைய வீட்டுத் தோட்டம் அழகிய புஷ்பச்செடிகளால் நிறைந்திருந்தது.

அந்தப் புதுவீட்டுக்குக் குடிபோவதற்கு முன்னே ஹாரியட் மார்த்தினோ தம் தோழர் சிலரோடு எட்டோதம் எகிப்திற்கும், பலஸ்தீனாவிற்கும் பிரயாணம் போனார். அந்தப் புதுவீட்டிற்கு வந்தபிறகு, அவர் தமது நாளைப் பின்வருமாறு கழித்துவந்தார்:—அதிகாலையில் சூரியோதயத்திற்கு முன்பே எழுந்திருந்து பதினைந்துமைல் நடந்துவிட்டு ஏழரைமணிக்குள்ளே பகற்போஜனத்துக்கு வீடுவந்து சேருவார். பிறகு வீட்டுக்காரியங்களைப் பார்த்துவிட்டு எட்டரைமணி முதல் இரண்டுமணி வரையில் மற்றொன்றையும் பாராமல் எழுத்து வேலையைச் செய்வார். பிறகு அதிதிகள் யாரேனும் வந்திருந்தால் அவர்களை யுபசரிப்பார். இறைத்த கிணறு ஊறும், இறையாத கிணறு நாறும் என்றறிந்தவர். குளிர்காலமாயிருந்தால் அந்த வேளையில் ஆட்டுரோமத்தைத் திரித்துக் கம்பளமாகப் பின்னுவார். அப்பொழுது அவர் மனம் வேறுவேறு விஷயங்களிலே இருந்ததனால், தாம் செய்வ தின்னதென்ற ஞாபகமில்லாமலே எத்தனையோ கஜம் நீளம் பின்னுவார். அவர் தம் வேலைக்காரர்களை நன்றாகப் பழக்கி, அவர்களிடத்தில் பிரியமாக இருந்தார். அவர்களும் அருமையறிந்த அந்த உத்தியோகத்தில் அனேக வருஷகாலமிருப்பார்கள். கல்யாணம் பண்ணிக்கொள்ளவாயினும், அயல் வீட்டிற்குக் குடிபோகவாயினும் நேரிடும் காலத்திலேதான் அவரை விட்டுப் பிரிந்துபோவார்கள்.

சில வருஷங்கள்வரையினும் குளிர்காலத்தில் தம் வீட்டிற்குப் பின்புறத்திலிருந்த பாடசாலையின் கூடத்தில் அவ்வூரிலுள்ள கூலி வேலைக்காரர்களுக்கும் வியாபாரிகளுக்கும் சில பிரசங்கங்கள் செய்தார். கண்டதைக் கற்றுக்கொண்டு ஞாயேறுங்கள் என்று அவர் இவ்வாறு செய்த உபந்நியாசங்களில் வெவ்வேறு விஷயங்களைப்பற்றி விவரித்துச் சொன்னார். அவற்றுள் சில வைத்தியத்தைப் பற்றியவை; சில அவர் பிரயாணம்போயிருந்த இடங்களைப் பற்றியவை; சில இங்கிலாந்தின் சரித்திரத்தைப் பற்றியவை; சில வட அமெரிக்காவைப் பற்றியவை; 1854-ம் ௵ நவம்பர் ௴த்தில் அவர் கடைசியாகச் செய்த பிரசங்கங்கள் கிரிமியா சண்டையையும், அச்சண்டையில் ருஷியா துரைத்தனத்தாரின் நடவடிக்கையையும் பற்றியவை. மார்த்தினோவின் பிரசங்கங்களை நேரில் கேட்டுக்கொண்டிருந்த சில பெரியோர்கள் அவரைப் பற்றிப் பின்வருமாறு சொல்லுகிறார்கள்.—“அவற்றின் பொருள் குழந்தைகளுக்கும் எளிதில் விளங்கும்; அவர் நடுவில் நிறுத்தாமல் பேசுவார்; அவை கேட்க மிகவும் இனிமையாயிருந்தன; எத்தனைதரம் கேட்டாலும் சலியாது.” அவர் செய்த உபந்நியாசங்கள் ஒன்றேனும் வீண்போகவில்லை. அவர் அங்குள்ள வேலைக்காரர்களை வீடுகட்டுஞ் சங்கமொன்றை ஏற்படுத்தும்படி செய்து, ஒவ்வொருவரும் கொடுக்கும் வாடகைப் பணத்தைக்கொண்டு எளிதில் வீடுகட்டிக்கொள்ளலாமென்று அவர்களுக்கு வழி காண்பித்தார். அவர் அவர்களுக்காக ரூபாய் 7500 கடன்பட்டு, ஒரு நிலத்தை வாங்கி, அதைப் பல பாகங்களாக வகுத்து, அதில் நீரைவடிக்க வாய்க்கால் ஜலதாரை முதலியவற்றைக் கட்டி, அதற்கு வழிகளையும் செய்து கொடுத்தார். இன்றளவும் அங்கே அக்குடிசைகள் அவர் தமது எளிய அயலாருடைய நன்மைக்காக எடுத்துக்கொண்ட பிரயாசத்திற்கு அடையாளமாக நிற்கின்றன.

அவ்வூரிலுள்ள புத்திசாலிகளான சிறுவர்களைத் தம்மிடமிருந்த புத்தகங்களைப் படிக்கும்படி செய்தார்.

பிறகு அவர் புத்தக மெழுதுவதைத் தவிர்த்து, தம்முடைய இரண்டு ஏகரா நிலத்தில் தாமே வேளாண்மைசெய்ய ஆரம்பித்தார். 'சீரைத்தேடின் ஏரைத்தேடு' என்றபடி கிருஷி சாஸ்திரத்தையும், வேளாண்மையையும் நன்றாய்க் கற்கவேண்டுமென்ற ஆசையுள்ளவராய் அவர் இவ்வாறு செய்யப் புகுந்தார். அவர் ஆரம்பித்த வேலையை நன்றாகச் செய்தார். சில கனவான்கள் அவரை வேண்டிக்கொண்டதனால் அவர் கிருஷியில் தமக்குள்ள அநுபவத்தை, "தேக சௌக்கியம், பயிர்த்தொழில், கைத்தொழில், எனது இரண்டு ஏகரா நிலம்" என்னும் பெயருள்ள சில புத்தகங்களாக எழுதியிருக்கிறார்.

அவர் புது வீட்டிற்கு வந்த பத்து வருஷங்களில் நோயின்றி நீங்கிச் சௌக்கியமாயிருந்ததனால் "கீழ்நாட்டில் உயிர் வாழ்க்கை," "இறந்தகாலமும், நிகழ்காலமும்" "குடித்தனப்பாங்கு," "அமெரிக்காவின் முப்பது வருஷத்துச் சரித்திரம்" என்னும் பல புத்தகங்களையும் எழுதினார். அமெரிக்காவின் "முப்பது வருஷத்து சரித்திரம்" என்பது அத்தன்மையான புத்தகங்களுள் நிகரில்லாதது. அவர் எழுதியிருக்கும் பல புத்தகங்களில் இதுவே வெகுகாலமளவும் நிற்கத்தக்கதும், மிகச் சிறந்ததுமாகும். இதனால் பிற்காலத்தோருக்கு அவருடைய புத்தி எவ்வளவு கூர்மையானதென்றும், அவருடைய குணங்கள் இத்தன்மையானவையென்றும் தெரிய வருகிறது. "குடித்தன வாழ்க்கை" என்னும் பத்திரிகையில் சுகமாக ஜீவிக்கும் வழியைப் போதிக்கும் சில கதைகளை யெழுதினார். கடல்மட்டத்திற்கு வெகுதூரம் மேலேயிருக்கும் கவிவானதேசங்களில் வசிப்பதனால் விளையும் நன்மைகளையும் மற்றொரு புத்தகத்தில் எடுத்துக் காட்டியிருக்கிறார்.

1852-ம் ௵த்தில் "தினவர்த்தமானி" என்னும் பத்திரிகைக்குப் பற்பல விஷயங்கள் எழுதும்படியாக ஹாரியட் மார்த்தினோவைக் கேட்டுக்கொண்டார்கள். அவர் அதை ஒப்புக்கொண்டு தம் வாழ்நாள் முடிவதற்கு முன் ஆயிரத்து அறுநூற்று நாற்பத்திரண்டு விஷயங்களை எழுதினார். இதுவல்லாமலும் "கலாசோதனைப் பத்திரிகை" யிலும் அவர் எழுதின விஷயங்கள் அநேகமுண்டு.

1854-ம் ௵த்தில் மறுபடியும் மார்த்தினோவின் தேகசௌக்கியம் கெட ஆரம்பித்தது. இரண்டு வருஷத்திற்கெல்லாம் லண்டன் நகரத்து வைத்தியர்களிடம் சென்று அது என்ன வியாதியென்று கேட்டார். அவர்கள் அதை நன்றாய்ப் பரிசோதித்துப் பார்த்து அது இரத்தாசய வியாதியென்று கண்டு, அதற்கு யாதொரு சிகிச்சையு மில்லையென்றும் அவர் மேலுலகம் செல்லச் சித்தமாயிருக்கவேண்டுமென்றும் சொன்னார்கள். அடிக்கடி வலிப்புவந்து சொரணையில்லாமல் கிடப்பார்; இரவில் படுத்துக்கொண்டவுடனே வெகுநேரமளவும் மூச்சுத் தடுமாறித் தவிப்பார்; இப்படி அவஸ்தைப்படுவதைக் காட்டிலும் பிராணன் போய்விடுவதே நலமென்று எண்ணினார். நோயாளிக்குத் தெரியும் நோயின் வருத்தம். ஆனால் மரணம் அவர் கஷ்டத்தை நீக்க வரவில்லை. இப்படியே வந்த கஷ்டமனைத்தையும் பொறுத்துக்கொண்டு இருபத்தொரு வருஷகாலம் ஜீவித்திருந்தார். சிலநாள்கள் கழித்து மறுபடியும் அவர் தம்முடைய எழுத்துவேலையைச் செய்ய ஆரம்பித்தார். நோயால் அவஸ்தைப்படுகையிலும், "தினவர்த்தமானி"க்குப் பிரதிவாரமும் விஷயங்களை யெழுதிக்கொண்டிருந்தார்.

1855-ம் ௵த்தில் லண்டன் நகரத்திற்கு வந்தபிறகு அவர் வீட்டைவிட்டு அசையவில்லை. ஒவ்வொரு தினமும் அவர் பட்ட கஷ்டத்திற்கு அளவில்லை; சரியாக மூச்சுவிடச் சாத்தி

யப்படவில்லை; தலை கனத்தது; இரத்தவோட்டம் சரியாக இல்லாதிருந்ததனால் கண் மங்கியது; அடிக்கடி அவருக்கு மூர்ச்சை வந்துவிடும். அவருக்கு வந்த ஆபத்துக்கள் சாதாரணமானவையல்ல; பிராணனையே அபகரிக்கத்தக்கவை. இந்தச் சங்கடத்திலிருக்கையிலும் அவர் தம்வேலையைச் செய்ததுமன்றி, ஏழை அயலாருக்கும் உபகாரம் செய்தார். அவர் தமக்காகவென்று பிரியமாய் தம்முடைய நண்பர் அனுப்பிய மதுரமான பணியாரங்களை அவ்வேழைகளுக்குக் கொடாமல் தாம் உண்ணார். "நாடிய வரமெல்லாம் நல்கும் நாயகி"யாகையால் அவர்களும் தங்களுக்கு ஏதேனும் வேண்டியிருந்தால் அவரிடமே போய்க் கேட்பார்கள்.

1859-ம் வருஷத்தில் "இங்கிலாந்தும் அத்தேசத்துக்குப் போர்வீரர்களும்" என்னும் பெரும் புத்தகமொன்றை யெழுதினார். தமது நற்றோழராகிய ப்ளாரென்ஸ் நைத்திங்கேல் போர்வீரர்களின் க்ஷேமத்திற்காகச் செய்துவந்த வேலைக்கு உதவியாக அப்புத்தகத்தை யெழுதினார். தொண்ணூறு பெரிய உபந்நியாசங்களை யெழுதி, அவற்றைப் பிரசுரஞ்செய்வதற்காக அமெரிக்காவுக்கு அனுப்பினார். வெளியேபோகச் சக்தியில்லாமல் நோயால் வருந்திக்கொண்டு வீட்டிலேயே யிருந்தார். "நாடு எங்கும் வாழக் கேடு ஒன்றுமில்லை" என்னும் பழமொழிப்படி ஒரு பெண் உலகத்தில் நடந்த சங்கதிகளையெல்லாம் அறிந்து பொதுநன்மைக்காகப் பாடுபட்டது ஆச்சரியம்.

1861-ம் வருஷத்தில் தேச சரித்திரங்களை யெழுத ஆரம்பித்தார். அவர் தாம் செய்த கம்பளங்களை விற்று அநேக தர்மகாரியங்களுக்குப் பணம் கொடுத்தார். உடம்பு குணப்படாமலிருந்த காலங்களில் அவர் எழுதின புத்தகங்களின் பெயர்களைமட்டும் எழுதுவதென்றாலும் எத்தனையோ பக்கங்கள் பிடிக்கும். அவருக்கு எழுபத்துநான்காம் வயது விட்-

டபொழுது அவர் தேகம் மிகவும் மெலிந்து சக்தியில்லாமற் போய்விட்டது. இந்தக் கடைசி நாட்களிலும் காணிசாம்பல் கோடி வருத்தமென்று எண்ணி அவர் சோம்பலைவிட்டுத் தொழிலையே நாடினார். அவர் விருத்தையாகையால் கை மரத்துப்போய்விட்டது; பார்வை மங்கிவிட்டது; களைப்பு சகிக்கக்கூடாமலிருந்தது; அப்படியிருக்கையிலும் அவர் தமது இரண்டு சிநேகிதர்களுக்குக் கடிதமெழுதிக்கொண்டும், சித்திரவேலைகளைச் செய்துகொண்டு மிருந்தார். தம்முடைய நண்பர்களின் குழந்தைகளுக்குக் கட்டிற்கம்பளிகளைச் செய்து கொடுத்தார். எப்பொழுதும் அவருக்குக் குழந்தைகளைக் கண்டாற் கொண்டாட்டம். தம்மைக் காணவந்த பெரியோர்களைப் பார்க்கக் கூடாமல் நோய்கொண்டிருக்கையிலும் அவர் ஒரு குழந்தை வந்தால் சிறிதுநேரமட்டுமாவது அதனுடன் கொஞ்சிக் குலாவுவார். அவரால் குழந்தைகளுக்கென்று எழுதப்பட்ட கடிதங்கள் மனோரஞ்சகமானவை. குழந்தைகளின் மனதையறிந்து நடப்பதில் அவர் அதிக சாமர்த்தியமுடையவர். அவ்வாறே அக்குழந்தைகளுக்கும் அவரைக் கண்டமாத்திரத்திலே சந்தோஷம் உண்டாகும். "குழந்தையும் தெய்வமும் கொண்டாடின இடத்திலே" யல்லவா.

மார்த்தினோ தமது வாழ்நாளின் கடைப்பாகத்தையும் பொறுமை, அன்பு, மகிழ்ச்சி இவற்றுடனே கழித்தார். 1876-ம் வருஷம் ஜூன்மீ 27உ அன்றையதினம், அவருக்கு எப்பொழுதும் களிப்பையளித்த மேனாட்டுமலைகள் அஸ்தமிக்கும் சூரியனுடைய கிரணங்களால் சோபித்திருக்குந்தருணத்தில், ஹாரியட் மார்த்தினோ கஷ்டத்தினின்று விடுபட்டுப் பரலோகஞ் சென்றார். அவருடைய கடைநாட்களும், அவர் மரணமும், வந்த துன்பங்களையெல்லாம் அவர் பொறுத்ததும், பின் எழுதியிருக்கும் வேதவாக்கியத்திற்கு நல்ல திருஷ்டாந்தமாகும். "குழந்தையைப்போல நிஷ்கபடமாயிருந்து, ஒரு

பொழுதும் தப்புவழியில் செல்லாமல் நேர்பட நடந்தால்தான் முடிவிலே சுகமுண்டாகும்."

இக்காலத்தில் பொதுநன்மைக்காகப் பாடுபடும் ஸ்திரீ ரத்னங்களுக்கு மார்த்திநோவே வழிகாட்டியவர். அங்கிலேய துரைசானிகளுக்கு அவர் மிகச்சிறந்த வழிகளைக் கற்பித்துக் கொடுத்ததற்காக அவர்கள் "நன்றி மறவேல்" என்பதை நினைத்து அவருக்கு நன்றிபாராட்டவேண்டும். தங்கள் கொள்கைகள் வேறாயிருப்பினும் மகான்களனைவரும் மெச்சும்படியாக அவர் நடந்தார். அவர் செய்திருக்கும் மேன்மையான காரியங்களை யோசித்துப் பார்க்குமளவில், பெண்களும் ராஜாங்கவிஷயங்களை ஊன்றிப் பார்க்கும் திறனுடையவரா யிருக்கலாமென்றும், ஆண்பிள்ளைக்கும் புத்திசொல்லக்கூடுமென்றும் உள்ளங்கை நெல்லிக்கனிபோலத் தெளிவாய்த் தெரியவருகிறது. அவர் தம்முடைய சுயநன்மையைச் சிறிதுமெண்ணாமல் பொதுநன்மைக்கென்றே பாடுபட்டு "குளவி புழுவைத் தன் நிறம் ஆக்குவதுபோல்" தம்முடன் பழகினவர்களையும் அவ்வாறே செய்யப் பழக்கிவிட்டார். அவருடன் பழகினவர்கள் அவரிடத்தில் "காந்தமும் ஊசியும் போல்" அதிக நேசமாயிருந்தார்கள். அவர் தம் வேலைக்காரர்களைக் கண்ணுக்குக் கண்ணாகப் பார்த்து வந்தார். அவர் சிநேக தர்மத்தை நன்றாய் அறிந்தவர்; குழந்தைகளிடத்தில் மிகுந்த அன்புடையவர்; பிச்சைக்கென்று தம் வீட்டிற்கு வரும் பேதைகளுக்கு உபகாரஞ் செய்யாமலிரார்; "அடுத்துவந்தவர்க்கு ஆதரவு சொல்லுவோன் குரு;" அவர் மாசிலா மாணிக்கம்.

இத்தனை பெருமையுடையாராகி மார்த்திநோ பெருமாட்டியார் செய்தியையெல்லாங் கேட்டால் இந்துதேசத்திலுள்ள ஸ்திரீகளுக்கு வியப்புண்டாகாதிராது. மார்த்திநோவைப் போல இளமைப்பருவ முதற்கொண்டே ஆயுள்காலமெல்

லாம் கைம்பெண்களாயிருப்பவர்கள் ஆயிரக்கணக்காக இருக்கிறார்கள். இந்தியாவிலுள்ள விதந்துக்களில் எல்லோருமே முயலாவிட்டாலும், அவர்களில் பெரும்பான்மையோராவது மார்த்திநோவைப்போல முயன்று பெண்களின் நன்மைக்கென்று நன்றாகக் கல்வியைப் பயின்று, நீதியை விருத்தி பண்ணி, நன்னடக்கையை ஓங்கச்செய்து, எங்கும் சுத்தமாயிருக்கச்செய்து, கல்வி யறிவை யுண்டாக்கி, நாட்டுக்கு நன்மை செய்யவேண்டும். இப்பொழுதிருப்பதுபோலல்லாமல் அறிவு விருத்திக்கேற்றவைகளும், தெய்வபக்தியுண்டாகத் தக்கவைகளுமான பல நல்ல கதைகளை ஒழிந்தநேரங்களிலே சொல்லும்படி செய்யவேண்டும். பெண்களில் பெரும்பான்மையோர் வீட்டைவிட்டு வெளியே போகிறதுமில்லை; மற்றவர்களோடு தாராளமாகக் கலந்து வார்த்தை சொல்லுகிறதுமில்லை; பகல் முழுதும் தனியேயிருந்து காலத்தைக் கழிக்கிறார்கள். இப்படிப்பட்ட ஸ்திரீகள் மார்த்திநோவின் சரித்திரத்தைப் படிப்பார்களேயானால் அவர்களுடைய புத்தி எவ்வளவோ திருந்திப் பெருமை பெறும். இச்சரித்திரம் படிப்பதனால் பெண்கள் வெளிப்படாமல் வீட்டிலிருந்துகொண்டே வாணாளுக்கு ஏற்ற கரும நிஷ்டை தவறாமல் எத்தனையோ பல நன்மைகளைச் செய்யலாம். மிகப்பெரிய நாடான இந்தியாவிலுள்ள பெண்களெல்லாரும் அந்தகாரத்தை விட்டு நீங்கி முன்னுக்கு வந்து நலம்பெறவேண்டுமானால், இந்தியாவிலுள்ள ஸ்திரீகள் "வித்தை விரும்பு" என்று ஔவையார் சொன்ன முதுமொழியை நினைத்து நன்றாகக் கல்விபயின்று, உயர்ந்தோர் தாழ்ந்தோரென்று பேதம்பாராட்டாமல் எல்லோரும் ஒன்றுசேர்ந்து, மார்த்திநோ, நைத்திங்கேல் என்னும் பெருமாட்டிகளைப் போலவே நன்மையானவற்றைக் கடைப்பிடித்து அவற்றிலேயே ஓயாமல் மனதைச் செலுத்திப் பாடுபடவேண்டும்.

HARRIET BEECHER STOW.

1811-1896.

ஹாரியட் பீச்சர் ஸ்டௌ.

நாம் இப்பொழுது சொல்லப்போகிற பெருமாட்டியின் சரித்திரம் இதுவரையில் சொன்ன நால்வருடைய சரித்திரம் போன்றதல்ல; அவற்றிற்குச் சற்று வேறுவிதமானது. இவளது குலம் நடுத்தரமானது. மிகவும் ஏழைக்குடி. யோசித்துப் பார்த்தால் இவள் செல்வமும் செல்வாக்கும் பெற்று வாழ்வது வருத்தமாயிருக்குமென்றே முதலில் தோன்றியது. ஆயினும் இவள் உலகத்தில் மிகவும் மேன்மை பெற்றவளானாள்; முன்சொன்ன நான்குபேர்களைப் பார்க்கிலும் இவள் அதிகமாகச் சிறப்புப்பெற்றாளென்றே பலர் சொல்லுவார்கள். எப்படியென்பீர்களோ? அது பின்னால் விளங்கும். ஒருவருக்குச் சிறப்பு வருவதெல்லாம் அவர் தமது நன்மைகளைப் பெரிதாகப் பாராட்டாமல், இப்பூமியில் தாம் பிறந்தது பரோபகாரம் செய்வதற்காகவேயென்று கருதி நடப்பதனாலேதான்.

இக்கதைக்கு நாயகியான பெருமாட்டி பிறந்து வாழ்ந்தவிடம் இந்த இந்துதேசமன்று, ஐரோப்பாவுமன்று, இவ்விடத்திற்கு வெகு தூரத்திலுள்ள அமெரிக்காகண்டமாம். தேச சரித்திரங்களாகட்டும், மனுஷிய சரித்திரமாகட்டும், யாத்திரைகளாகட்டும் எதைப் படித்தாலும் எதிரில் பூகோளப் படத்தை வைத்துக்கொண்டுதான் படிக்கவேண்டும். நாம் சரித்திரத்தில் படிக்கும் தேசங்களாகட்டும் மனிதர்களாகட்

Mrs. Beecher Stowe.

டும் இருக்குமிடமின்னதென்று நன்றாய்ப் பார்த்துத் தெரிந்து கொண்டு படித்தால், அதைப்போல் ஆனந்தமுண்டாக்குவது வேறொன்றுமில்லை. ஆகையால் இதைப் படிப்பவர்களும் அப்படியே படிக்கக்கடவர்கள். இப்பொழுது அமெரிக்கா கண்டத்துப் படத்தைத் திருப்பிப் பாருங்கள். அதில் மிகப் பெரிய தேசமொன்று இருக்கின்றதல்லவா? அதற்கு ஐக்கிய மாகாணங்களென்று பெயர். அந்த மாகாணம் வடபாதி, தென்பாதியென்று இரண்டாகப் பிரிக்கப்பட்டிருக்கிறது.

அம்மாகாணத்தில் கன்னெக்டிகட்டு என்னும் நாட்டில் லிச்சுபீல்டு என்னும் ஊரில் 1811-ம் ௵ ஜூன் ௴ 14௳ ஹாரியட் பீச்சர் என்பவள் பிறந்தாள். அவளுடைய தந்தை கிறிஸ்துமதப் பிரசங்கம் செய்கிற ஒரு பண்டிதர். அவர் அந்தப் பக்கங்களிலெங்கும் பிரசித்திபெற்றவர். அவளுக்குச் சகோதரர்களும் சகோதரிகளும் ஐந்துபேர் இருந்தார்கள். அவளுக்குப் பிறகு இரண்டு இளைய சகோதரர் பிறந்தனர். ஆக மொத்தம் அவர்கள் எட்டுப்பேரானார்கள். ஐயோ! ஹாரியட்டுக்கு நான்குவயதிலேயே அப்பிள்ளைகளின் தாயார் இறந்துபோனாள். அதைப்பற்றி ஹாரியட் பிற்காலத்தில் எழுதியிருப்பதாவது:—

“ஒரு தருணத்தில் என் தாயாருக்கு உடம்பு சௌக்கியமில்லையென்று எல்லாரும் சொல்லிக்கொண்டிருந்தது எனக்கு ஞாபகமிருக்கின்றது. அப்பொழுது ஒருநாளைக்கு ஒருதரமே என் தாய் படுத்திருக்கும் அறைக்குள் தாயண்டை போவதற்கு எனக்கு உத்தரவு கொடுப்பார்கள். அப்பொழுது போய்ப் பார்த்த தாயின் அழகான முகமும், கன்னங்களிலிருந்த சிவப்புப் புள்ளிகளும், அன்போடு கூடிய புன்சிரிப்பும் இன்னும் அப்படியே என்னுள்ளத்தி லிருக்கின்றன. அப்படியிருக்க ஒருநாள் இரவு கனவு கண்டது எனக்கு நினைவுவருகிறது. அதாவது, என் தாய்க்கு உடம்பு சொஸ்தப்பட்டுப் போன

தாகக் கனவு கண்டேன். உடனே நான் விழித்துக்கொண்டு அளவற்ற சந்தோஷத்துடனே என் தாய் படுத்திருக்கும் அறைக்கு எழுந்தோடினேன். அதைக்கண்டு அப்பொழுது அந்த அறைக்குவந்த சிலர் எனது சந்தோஷத்தை யடக்கி, என்னை அப்பால் அழைத்துக்கொண்டு போய்விட்டார்கள். நான் கண்ட கனவு உண்மையாகவே முடிந்தது. அவள் ஒருநாளும் நோயுண்டாகாத ஆரோக்கியமான திவ்விய சரீரமுடையவளானாள்.

அப்புறம் அவளுக்குச் சாமக்கிரியை நடத்தப்பட்டது. அப்பொழுது ஹென்றி மயானத்துக்குக்கூட நடந்துவரமாட்டாத குழந்தை. அவன் அப்பொழுது நடந்த செய்தி ஒன்றுமறியாமல் சிறுபிள்ளைத்தனமான சந்தோஷத்துடனே இங்குமங்குமோடிக் குதித்துக்கொண்டிருந்தான்.

அச்சமயத்தில் பெரியவர்களெல்லாரும் கண்ணீர்விட்டழுததும், தாயை மயானத்திற்குக் கொண்டுபோனதும், அங்கே கல்லறையண்டை சிலர் உட்கார்ந்து பேசியதும், எனக்கு இப்பொழுதும் நினைவுவருகின்றன. பிறகு எல்லாக் கருமங்களும் முடிவாயின. அக்காலத்தில் நடந்த காரியங்களின் விபரமின்னதென்று சிறுவர்களான எங்களுக்கு ஒன்றும் புலப்படவில்லை. எல்லாம் ஏதோ ஒரு புதுமையாயிருந்தன. ஆதலால் நாங்கள், "தாய் இப்பொழுது எங்கே போனாள்? மறுபடி எப்பொழுது திரும்பி வருவாள்?" என்றும் அங்கிருந்தவர்களைக் கேட்டுத் தாய்முகம் காணாதபிள்ளைகள் மழைமுகம் காணாத பயிர்போல வாடினோம்.

உங்கள் தாய் பூமிக்குள் படுத்துக்கொண்டிருக்கிறாளென்று அவர்கள் ஒரு சமயத்தில் எங்களுக்கு மறுமொழி சொன்னார்கள். மோக்ஷத்திற்குப் போனாளென்று மற்றொருதடவை மறுமொழி சொன்னார்கள். அதுகேட்டு ஹென்றி இரண்டையும் ஒன்றாகச் சேர்த்து அர்த்தம்பண்ணி, தான் பூமியில்

பள்ளம்தோண்டி மோக்ஷத்திற்குப் போய்த் தாயைப் பார்க்க வேண்டுமென்று தீர்மானித்தான். அப்படியே அவன் ஒரு நாள் காலையில் எங்கள் அக்காள் காத்தரைனாளின் அறைக்கு எதிரே தோட்டத்தில் மிகுந்த வீராவேசத்துடனே பள்ளம் வெட்டிக்கொண்டிருந்தான். அப்பொழுது காத்தரைனாள் அதைப் பார்த்து சரேலென்று அவனண்டை போய் நீ இப்பொழுது இங்கே என்ன செய்கிறாயென்று கேட்டாள். அது கேட்டு அவன் தலையெடுத்துப் பார்த்து, "ஏன்? என் தாயைக் காண்பதற்காக மோக்ஷத்திற்குப் போக வழி பண்ணுகிறேன்" என்று இயல்பாய்ப் பேசினான்.

இவ்விதமாக எங்கள் தாயின் தேகம் கண்ணுக்குத் தெரியாமல் மறைந்துபோயிற்றானாலும், அவளது ஞாபகக்குறிகளும் அவள் நடத்திக் காட்டிய நடையுடை பாவனைகளும் ஒருபோதும் மறவாமல் எங்களுக்கு விசேஷமான நன்மைகளையுண்டாக்கின; நன்மை தீமைகள் இன்னவையென்று கண்டுணர்ந்து தீமையை விலக்கி நன்மையைக் கைக்கொள்ளும்படி செய்தன; தாய் உயிரோடிருப்பவர்களுக்கு அவ்வளவு நன்மையுண்டாகவில்லை. நாங்கள் எவ்விடம் போனாலும் எங்கள் தாயின் ஞாபகம் எங்களுக்கு மறக்கவேயில்லை; ஏனெனில், அந்தப் பட்டணத்திலெங்கேபோனாலும் குழந்தை முதற்கொண்டு கிழவர்வரையில் எல்லோரும் எங்கள் தாயின் குணங்களையும், அவள் வாழ்நாள் கழித்துவந்த அழகையும் கண்டு களிப்படைந்தவர்களாகி எப்பொழுதும் அவளுடைய நன்னடக்கையைப்பற்றி உபகதைகளால் எங்களிடத்தில் திருஷ்டாந்தப்படுத்திக்கொண்டிருப்பார்கள். இந்தத் தாயின் ஞாபகத்தினால் எங்களுக்கு எவ்வளவு நன்மை உண்டாயிற்றோ அவ்வளவு தாயிருக்கிறவர்களுக்குக்கூட உண்டாகவில்லை" என்று உரைத்திருக்கிறாள்.

இப்படித் தாயிறந்துபோனபிறகு லிச்சுபீல்டு நகரத்தில் அவ்வீட்டிலே வசிக்க அச்சிறுமிக்குத் தகுந்த ஆதரவில்லாமற் போயிற்று. அங்கேயே யிருந்தால் வரவர விசனமும் அதிகமாகுமென்று எண்ணி, அச்சிறுமியின் சிற்றம்மையானவள் வேறொரு ஊரில் வசித்திருந்த அவளது பாட்டியாரிடம் அவளைக் கொண்டு சேர்த்தாள்.

இவ்விதமாகப் பாட்டியார் வீடுபோய்ச் சேர்ந்த சங்கதியை இந்தச் சிறுமியே தான் ஸ்டோ என்னும் பெயர்பெற்ற பிறகு அடியில் வருமாறு எழுதியிருக்கிறாள். அதாவது:—

"அப்பொழுது நான் பாட்டியார் வீட்டிற்குப் புறப்பட்டுப்போனது எனக்குத் தூரதேச யாத்திரையாகத் தோன்றியது. பொழுதுபோய் இருட்டானபிறகு நாங்கள் பாட்டியார் வீடுபோய்ச் சேர்ந்தோம். அது ஒரு தனிப்புறமான சிறிய மாளிகை. அம்மாளிகையின் கூடத்திலே ஒரு கிழவி உட்கார்ந்திருந்தாள். அவள் எங்களைப் பார்த்தவுடனே என்னையெடுத்து மடியில் வைத்துக்கொண்டு வெளிக்குத் தெரியாமல் உள்ளுக்குள்ளேயே அழுது கண்ணீர்விட்டாள். இதற்கு என்னகாரணமென்று நான் ஒன்றுந் தோன்றாமல் பிரமித்து நின்றேன். ஏனெனில், எனக்கு அது ஒன்றுந்தெரியாத பேதைப்பருவமாதலால், எனக்கு நேரிட்டிருக்கும் பெரிய விபத்து அதற்குள் எனக்கு மறந்துபோய்விட்டது.

பிறகு சிற்றம்மை என்னை ஒரு பெரிய அறையின் ஒரு பக்கத்தில் படுக்கவிட்டது எனக்கு நன்றாக ஞாபகமிருக்கிறது. அங்கே எனக்கும் சிற்றம்மைக்கும் சரியாக ஒரு படுக்கை போட்டிருந்தது. மற்றொருபுறத்தில் பாட்டியாருக்குப் படுக்கை போட்டிருந்தது.

என் சிற்றம்மை மிகுந்த ஊக்கமும் கண்டிப்புமுடையவள். மரியாதையாக நடக்கவும், மெல்லிய குரலாயும் அழகாயும் பேசவும், உடைகளைக் கிழிக்கவொட்டாமல் கிழிக்

தலைத் தைத்துக்கொள்ளவும், காலையி லெழுந்திருக்கும்பொழுதும் இராத்திரி படுக்கும்பொழுதும் கடவுளைத் துதித்துப் பிரார்த்திக்கவும், சிறு பெண்களுக்குக் கற்பித்துக் கொடுக்க வேண்டுமென்பது அவளுடைய கோட்பாடு" என்று சொல்லுகிறாள்.

இந்த ஹாரியட் என்னும் சிறுமி அந்தப் பாட்டியார் ஊரிலிருக்கும்போது பல பாட்டுக்களும், கீர்த்தனைகளும், தன் அக்காள் காத்தரைனுக்குச் சொல்வதற்காக சில வேத வாக்கியங்களும் மனப்பாடம் செய்துகொண்டாள். பிறகு அந்தக் காத்தரைனாள் ஹாரியட்டைக் குறித்து எழுதியபோது அடியில் வருமாறு எழுதியிருக்கிறாள். அதாவது:—

"ஹாரியட் மிகவும் நல்ல பெண். அவள் கோடைகாலமெல்லாம் பள்ளியில் படித்து நல்ல வாசக நாட்டியுடன் படிக்கக் கற்றுக்கொண்டிருக்கிறாள்; பாட்டில் இருபத்தேழுக் ககிகம் பாடம் செய்திருக்கிறாள்; வேத புத்தகத்தில் இரண்டு அதிகாரம் மனப்பாடம் செய்திருக்கிறாள்; ஞாபகசக்தி அவளுக்கு மிகவும் அதிகம். அவள் பிற்காலத்தில் சிறந்த பாண்டித்தியமுடையவளாவாள்" என்பதாம்.

ஹாரியட்டுக்கு ஆறுவயதில் அவளுடைய தந்தை மறுவிவாகம் செய்துகொண்டார். அப்பொழுது அந்த இளைய தாயாரைக் குறித்து ஹாரியட் சொல்லியிருப்பதாவது, "என் தம்பிகளான இரண்டு குழந்தைகளுடனே நான் ஒரு அறையில் படுத்துத் தூங்கிக்கொண்டிருந்தேன். தந்தை எங்கேயோ வெளிக்கிராமத்திற்குப் போயிருக்கிறாரென்றும், சீக்கிரத்தில் ஊருக்குத் திரும்பிவருவாரென்றும் எங்களுக்குத் தெரியும். அப்படியே நாங்கள் படுத்திருக்கையில் ஒரு கூச்சல் கேட்டு விழித்துக்கொண்டோம். உடனே தந்தை நாங்கள் படுத்திருக்கும் அறைக்கு வந்தார்; அவருடன் எங்கள் இளைய தாயாரும் அவ்விடம் வந்தாள். அவள் கறுத்துக் காதளவு நீண்ட

கண்களும், அழகிய தலைப்பின்னலுமாகப் பட்டு உடை தரித்து வெகு சுந்தரமான வடிவழகுள்ளவளா யிருந்தாள். அவளுடைய அழகைப்பார்த்து இப்படியுமொரு அழகி யிருப்பாளோவென்று நாங்கள் மிகவும் அதிசயமடைந்தோம்.

மறுநாள் எங்களுக்கு அந்த இளைய தாயாரண்டை போகக் கூட மிகவும் அச்சமாயிருந்தது. அவளுடைய அழகையும் நடையுடைகளையும் பார்க்கும்போது அவளருகே போக எங்களுக்குத் துணிவுண்டாகவில்லை; அவள் அவ்வளவு பெருந்தன்மையான தோற்றமுடையவளாயிருந்தாள். அவளுடைய காரியங்களும் ஏற்பாடுகளும் உசிதமானவைகளாயிருந்தன" என்று சொல்லியிருக்கிறாள்.

இந்தப் புதிய ஸ்தானத்திற்குப் போனபோது அங்கே தன் புத்திக்குத் தோன்றியவைகளை அவள் பின்னொருகாலத்தில் அடியில் வருமாறு எழுதுகிறாள். அதாவது, "அந்த ஸ்தானம் மிகவும் ஏகாந்தமாய், சௌக்கியமாயும் மனதுக்கு மிக்க மகிழ்ச்சி விளைவிப்பதாயு மிருந்தது. அவ்விடத்தில் எனக்கு உண்டான நன்மைகளை நான் ஒருபோதும் மறவேன். மேலும் அங்கே நல்ல சகவாசமமைந்ததோடுகூடச் சிலர் சிறந்த புத்திமான்களாயிருந்ததனால் அவ்விடத்திலிருக்க எனக்குப் பின்னும் அதிகமான ஆசையுண்டாயிற்று" என்று சொல்லுகிறாள்.

இந்தச் சிறுமி இளமைப்பருவத்தில் தன் சகோதரர்களுடனே மரம்செறிந்த காட்டுப் பிரதேசத்துக்குப் போய் விநோதமாக உலாவிவருவதும், சகப்பனர் படித்துக்கொண்டிருக்கும்பொழுது அதை ஊற்றமாகக் கேட்டுக்கொண்டு அவரண்டை உட்கார்ந்திருப்பதும், யாராவது பிரசங்கம் செய்தால் அதைக் கவனமாகக் கேட்பதும், அந்தந்தச் சமயத்தில் பாட்டியாரைப் போய்ப் பார்த்துவருவதுமாயிருந்தாள். படிக்கும் பிள்ளைகளில் மிகவும் கெட்டிக்காரியென்று பாட

சாலையிலும் பெருமை பெற்றுவந்தாள். அவள் பத்து வயதுள்ள பெண்ணாக இருக்கும்பொழுது, "இவள் எந்தப் புஸ்தகத்தையெடுத்தாலும் தட்டுத்தடையில்லாமல் நன்றாகப் படிக்கிறாள்; தையல்வேலையும் அழகாகச் செய்கிறாள்" என்று அவளுடைய சகோதரனான எட்வர்டு என்பவன் எழுதியிருக்கிறான்.

அந்தத் தந்தைக்கு ஹாரியட்டே கடைசிக் குழந்தை என்கிற பெருமை 1832-ம் வருஷத்தில் மாறிப்போயிற்று. ஏனெனில், அந்த வருஷம் அவளுக்கு ஒரு தங்கை பிறந்தது. பள்ளிக்கூடம் போய்ப் படிக்கிற நேரம்போக மற்ற வேளைகளில் அந்தக் குழந்தையை வைத்துக்கொண்டு வளர்ப்பது அவளுக்கு ஒரு பெரிய காரியமாயிற்று. அப்படிப்பட்ட காலங்களிலும் அவள் புஸ்தகத்தைக் கைவிடவில்லை; அறிய அறிய கெடுவார் உண்டா? மிகுந்த புத்திசாலிகளான உபாத்தியாயர்களிடம் படித்துச் சிறந்த கல்வித்தேர்ச்சி உடையவளானாள். அவள் படிப்பதை மாத்திரமே பெரிதாகப் பாராட்டாமல் "செல்வத்துட் செல்வம் செவிச் செல்வம்" என்கிறபடி கற்பதைப்பார்க்கிலும் கேட்டறிவது நலமென்று எண்ணிப் பலர் சொல்லும் சிறந்த விஷயங்களுக்குச் செவி கொடுத்து அநேக காரியங்களை அறிந்துகொண்டாள். "இளமையில் விஷயங்கள் தெரிந்துகொண்டது நான் படித்ததனாலே மாத்திரமென்று பலர் நினைப்பார்கள்; உண்மை யதுவல்ல; பெரியோர் பலருடனே உபாத்தியாயர் பேசும்போது அவ்விஷயங்களை அண்டையிலிருந்து கேட்டு அதனாலேயே அநேக காரியங்களை அறிந்தேன்" என்று, அவளே ஒரு தருணத்தில் சொல்லியிருக்கிறாள்.

பத்தாவது வயதிலே ஹாரியட் ஒவ்வொரு விஷயத்தைப் பற்றிச் சிற்சில பிரபந்தங்கள் எழுத ஆரம்பித்தாள். அவள் எழுதிவரும் பிரபந்தங்களெல்லாம் கேட்பவர் கொண்டாடத் தக்கவையாயிருந்தன. பன்னிரண்டு வயதுக்குள்ளேயே

சயமாக எழுதுவதில் அவளுக்குச் சிறந்த தேர்ச்சி உண்டாகிவிட்டது. "கை உண்டாவது கற்றவருக்கேயாம்." அப்போது பாடசாலை விநோதக்காட்சி ஒன்று ஏற்படுத்தப்பட்டது; அச்சமயத்தில் பலபேருடைய முன்னிலையில் எடுத்து வாசிக்கும்படியாகக் குறித்த இரண்டு மூன்று சிறிய பிரபந்தங்களில் இச்சிறுமியின் பிரபந்தமும் ஒன்றாகத் தேர்ந்தெடுக்கப்பட்டது. "புத்தி முற்றினவர்க்குச் சித்தியாதது ஒன்றுமில்லை."

அக்காலத்தில் நடந்த அதிசயத்தை ஹாரியட் தானே பின்னொரு சமயத்தில் புகழ்ந்து பேசுகிறாள். அதென்னவெனில், "அப்பொழுது ஏற்படுத்திய பாடசாலை விநோதக் காட்சி எனக்கு நன்றாக நினைவிருக்கின்றது; அது எனக்கு ஒரு நல்லகாலம். அந்தச் சபையில் அவ்வூரிலிருந்த வித்வான்களெல்லாரும் வந்து கூடியிருந்தார்கள். அவர்களெதிரே எங்களுடைய பிரபந்தங்களும் உரத்து வாசிக்கப்பட்டன. எனது பிரபந்தத்தை எடுத்து வாசிக்கும்பொழுது என் தந்தைக்கு மிகவும் வியப்புண்டாகி அதைக் கருத்துடனே காதுகொடுத்துக் கேட்க ஆரம்பித்தார். அந்தப் பிரபந்தம் படித்தானவுடனே "இது யார் எழுதினது" என்று அவர் கேட்க "உம்முடைய மகள்தான் எழுதியது" என்று மறுமொழி சொன்னார்கள். அவர் அவ்வாறு மகிழ்ந்த தினமே எனது வாழ்நாளில் மிகவும் செருக்கடையத்தக்க சுதினமாம்" என்று எழுதியிருக்கிறாள்.

அப்பொழுது எழுதிய பிரபந்தத்தை அப்படியே காப்பாற்றி வைத்திருக்கிறார்கள். பழையகாலத்து மஞ்சள் கடிதத்தில் அச்சிறுபெண் எழுதிய கைபடியாத கையெழுத்துடன் அது இன்னும் அப்படியே யாவரும் பார்த்துப் படிக்கும்படி தெளிவாயிருக்கின்றது.

அந்தப் பிரபந்தம் எந்தவிஷயத்தைப் பற்றியதென்றால், "ஆத்துமா நித்தியமென்பதை, இப்பிரபஞ்சத்தைக் கொண்டே

நிரூபிக்க முடியுமா?" என்பதைக் குறித்ததாம். 'இந்தவிஷயம் பன்னிரண்டு பிராயமான சிறுவர்களுடைய மனதில் ஆய்ந்தறியக் கூடியதா? ஆயினும் "விளையும் பயிர் முளையிலேயே தெரியுமல்லவா?" ஆகலால் சிறந்த புத்திசாலிகளுக்கு எல்லா விஷயங்களும் எந்தக்காலத்திலும் எளிதில் அறியத்தக்கவையேயாம்.

இந்தப் பிரபந்தமெழுதிய சிலநாளைக்கெல்லாம் அச்சிறுமி தன் படிப்பை விருத்தி செய்துகொள்வதற்காக அவ்வூரைவிட்டு ஹார்ட்டு போர்டு என்னும் ஊருக்குப் போகும்படி நேரிட்டது. அங்கே இவளுடைய பெரிய தமக்கை காதரைன் புதிதாக ஒரு பாடசாலை ஸ்தாபிக்கலானாள்; அதில் படிக்கும்படி ஹாரியட் சேர்ந்துகொண்டாள்.

இந்தப் பாடசாலையில் சேர்ந்துகொண்டது ஹாரியட்டின் வாழ்நாளில் ஒரு விசேஷகாலமாயிருந்தது. ஏனெனில், அதுதான் அவளுடைய குணம் நல்லதோ கெட்டதோ ஏதாவது ஒரு வழியில் திரும்புகிறகாலம். மேலும் அவள் தமக்கையின் விசாரணையிலேயே நேராகச் சேர்ந்திருந்ததினால் அந்தத் தமக்கையைப்பற்றி இரண்டொரு மொழி இங்கே சொல்லாமல் விடுவது உசிதமன்று. மிகவும் கொண்டாடத்தக்கவளான இந்தத் தமக்கையின் நடவடிக்கைகளையும் குணநிசயங்களையும் பற்றிக் கொஞ்சமாவது தெரிந்துகொண்டாலல்லாமல், இந்த ஸ்டோ என்னும் சிறுமியைப் பற்றியாயினும், அவளெழுதிய விசேஷங்களைப் பற்றியாயினும், ஒன்றும் செவ்வையாகத் தெரிந்துகொள்ள முடியாது. அந்தத் தமக்கையின் உரிமையும் ஆத்தும குணங்களும் இச்சிறுமியினிடத்தில் அப்படியே அமைந்துபோயின. சிறந்த புத்திசாலியும், கீழ்ப்படிந்து அடங்கி நடப்பவளும், தீர்க்காலோசனை யுடையவளுமாதலால், "அடக்கமே பெண்ணுக்கழகு" என்றபடி நடந்து இச்சிறுமி தமக்கையினிடமுள்ள உத்தம குணங்களை

அப்படியே தானேற்றுக்கொண்டாளென்பது ஒரு அதிசய
மன்று. அந்தப் பருவத்தில் முக்கியமாகத் தன் சகோதரன்
எட்வர்டு, தமக்கை காத்தரைனாள், இவர்களுடைய குணங்
களே தனக்கு விசேஷமாகப் பழகினவென்று இந்தச் சிறுமி
தானே சொல்லியிருக்கிறாள்.

உலகத்தில் பிரசித்திபெற்ற புருஷர்களானாலும் ஸ்திரீக
ளானாலும், அவரவர்களுடைய ஒழுக்க வழக்கங்கள், இளமை
யிலும் வெகுவாக வாழ்நாள் முழுமையுமே கூடிவாழ்கிற
மற்றொருவருடைய ஒழுக்க வழக்கங்களினின்று தான் உருப்
பட்டு விளங்குகின்றன வென்பது பிரசித்தமானவிஷயம்.
இப்படி பூவும் மணமும்போல் ஒருவருடைய குறைகுணங்கள்
மற்றொருவருடைய குறைகுணங்களால் உருவமைகின்ற அ
சயத்தை நல்லவர்களுடைய சரித்திரத்தைக்கொண்டு க
டறிந்து பார்ப்பது மிகவும் ஆனந்தத்தை உண்டாக்கும்.

அதுநிற்க, இப்பொழுது இந்தக் காத்தரைனைப் பற்றி
சொல்லுவோம். அவள் தனது எழுபத்தாறுவது வயதி
கை நடுநடுங்கத் தனது சரித்திரத்தைச் சுருக்கமா யெழு
யிருக்கிறாள். "1800-ம் ௵ செப்டெம்பர் ௴ 5௳ மாலை
மணிக்கு என் தந்தை எழுதவும் படிக்கவும் இருக்கும் அறைக்கு
எதிரிலுள்ள ஒரு பெரிய அறையில் நான் பிறந்தேன்.
அதைப்பற்றி எனக்கு இப்பொழுது அதிகமாக நினைப்பில்லை"
என்று சொல்லிச்சரித்திரம் ஆரம்பித்திருக்கிறாள். இவ்
வகைச் சாதுரியமான பேச்சுகள் பேசுவது அவளுக்குச்
சுவபாவமாயிருந்தது. அவள் மிகவும் ஆழ்ந்த மனமுடை
யவளாயினும், உல்லாசமும் விநோதமுமாகப் பேசிக்
கொண்டு யாவருடனும் அந்நியோந்நியமாக இருப்பாள்.
மிக்க புத்தி நுட்பமும் சாமர்த்தியமு முடையவளாகி, பாட
சாலையி லேற்படுத்திய பரீக்ஷைகளிலெல்லாம் வெகு சுல
பமாகத் தேறிவந்தாள். இருபதாம் வயதில் சங்கீதமும் சித்

சித்திரங்களும் கற்க ஆரம்பித்தாள். அன்றியும் கல்வியில்
தேர்ந்தவளாகி ஒரு பாலிகா பாடசாலையில் உபாத்தியாயர்
வேலைக்குத் தக்கவளானாள். 1822-ல் அலெக்ஸாண்டர்
பிஷர் என்னுமொரு சிறந்த பண்டிதரிடம் உத்தியோகமாக
அமர்ந்தாள்.

அவள் அதிசீக்கிரத்தில் விருத்திக்கு வருவதற்கு அது
ஒரு சிறந்த குறிப்பாகத் தோன்றியது. ஆனால் மறுவருஷம்
வசந்தகாலத்தில் அந்தப் பண்டிதர் தமது பாடசாலைக்கு
வேண்டிய புஸ்தகம் முதலியவை வாங்குவதற்காக ஐரோப்பா
வுக்குப் போகக் கப்பலேறினார். மறுபடி அவர்கள் சந்திக்க
வேயில்லை. ஏனெனில், அவரேறிச்சென்ற கப்பல் அயர்லாந்து
தேசத்தண்டை கரை தட்டி உடைந்துபோயிற்று. அந்தக் கப்
பலிலே சென்றவர்களில் ஒருவன்மாத்திரம் தப்பிப் பிழைத்
தானாம். அவன் இந்த பிஷரல்லன்.

இப்படிப்பட்ட துக்கத்தைக் கேட்டால் யாருக்குத்தான்
வருத்தமுண்டாகாது; ஆயினும், இந்தக் காத்தரைனாள் மிக
வும் மனவுறுதியுடையவளாகி "இன்பமும் துன்பமும் எடுத்த
உடலுக்கு இயல்பு" என்று எண்ணி அந்த துக்கத்துக்குத் தன்
உள்ளத்தி லிடங்கொடாமல், இனிப் பரோபகாரஞ்செய்து
பேரானந்த மடையவேண்டுமென்று மனவுறுதி செய்துகொண்
டாள். 1824-ல் அவள் கனெக்டிகட் நாட்டில் ஹார்ட்டு
போர்டு என்னும் நகரத்தில் அதற்காக ஒரு பாடசாலை ஸ்தா
பிக்கலானாள். ஆரம்பத்தில் அப்பாடசாலையில் எட்டுப் பிள்
ளைகளே சேர்ந்தனர். அவளுடைய சகோதரியான ஹாரியட்
அந்தப் பாடசாலையில் சேர்ந்தபோது அங்கிருந்த பிள்ளை
களின் தொகை இருபத்து நான்கு; பிறகு அது நூற்றுக்
கணக்காகப் பெருகியது.

ஹாரியட் அந்தப் பாடசாலையில் படித்துக்கொண்டிருக்
கும்பொழுது, புல் என்னும் ஒரு பெருமாட்டியினது போத

னையிலிருந்தாள். இந்தப் பெருமாட்டியைப்பற்றி ஹாரியட் சொல்லியிருப்பதாவது, "என்னைக் கண்டவுடனே அப்பெருமாட்டி தன் வயிற்றில் பிறந்த பிள்ளைபோல் என்னிடத்தில் மிகுந்த அன்புவைத்தாள். எனது சொந்த உபயோகத்திற்காகத் தனது வீட்டில் எனக்கு ஒரு சின்ன அறையும் அதில் எனக்கேற்றதாய் மெத்தெனப் படுக்க ஒரு படுக்கையும் கொடுத்தாள். அவற்றைப் பார்க்க எனக்கு மிகவும் ஆனந்தமாயிற்று. ஒருகால் எனக்கு உடம்பு அசௌக்கியமாகிவிட்டால் அப்பொழுது அவள் எனக்குச் செய்யும் உபசாரத்தைச் சொல்லி முடியாது. எழுபிறப்புப் பிறந்தாலும் அவள் செய்த நன்மையை மறக்கமாட்டேன். அப்படி சிகிச்சையும் உபசாரமும் செய்பவர் உலகில் ஒருவருமில்லையென்றே சொல்லலாம்" என்று எழுதியிருக்கிறாள்.

பிறகு ஹாரியட் அந்தப் பாடசாலைப் பிள்ளைகளில் கெட்டிக்காரர்களாயிருந்த இரண்டு பெண்களுடனே தான் நேசம் செய்துகொண்டு அவர்களுடன் சேர்ந்து தானும் படித்துவந்ததும், லத்தீன் பாஷையைத் தானே சுயமாகப் படித்துக் கற்றுக்கொண்டதும், ஒரு வருஷத்திற்கெல்லாம் சிலவற்றைச் செய்யுள் நடையில் மொழிபெயர்த்ததும், அம்மொழிபெயர்ப்பு பாடசாலை விநோதக்காட்சி சபையில் படிக்கப்பட்டதும், அதை யாவரும் சிறப்பாகக் கொண்டாடியதுமாகிய விஷயங்களையெல்லாம் தானே விவரமாகச் சொல்லியிருக்கிறாள். "கனிந்தபழம் தானே விழும்" என்றவாறு அப்பொழுது அவள் தான் ஒரு கவியாகவேண்டுமென்று கருதியிருந்தாள். பிறகு அவள் பிரெஞ்சு பாஷையும் இத்தாலியா பாஷையும் கற்க ஆரம்பித்தாள். இவ்வளவு காலம்வரையில் அவள் ஒரு குறையுமில்லாமல் சுகமாகவே வாழ்ந்துகொண்டிருந்தாள்.

தெய்வபக்தி அவளிடத்தில் குடிகொண்டது. ஆயுளளவும் அது அவளுள்ளத்தைவிட்டு நீங்கவேயில்லை. ஆயினும்

அவள் ஒரு வருஷத்திற்குப் பிறகு தன் தமையனுக்கு ஒரு கடிதமெழுதினாள். அதில் தன் வாழ்நாளில் பலவகைக் கஷ்டங்கள் நேரிட்டனவென்றும், ஒரு காரியமும் தான் சரியாகச் செய்யவில்லையென்றும், பலவிதமான சோதனைகளுக்கு உட்படும்படி நேரிட்டதென்றும், மனக்கவலை பலக்குறைவு என்றபடி பலவகைப் பாவங்கள் செய்து சௌக்கியத்தை இழக்கும்படியாயிற்றென்றும், அகங்காரமாத்திரம் தலைக்கேறிப்போயினதென்றும், தான் அதுவரையில் செய்த பாவங்கள் இன்னின்னவென்று நன்றாகச் சொல்லக்கூடுமென்றும் தன்னைத்தானே வெறுத்துக்கொள்ளுகிறாள்.

பிறகு டாக்டர் பீச்சர் தமது குடும்பத்துடனே போஸ்டன் போய்ச் சேர்ந்து அவ்விடத்தில் ஆறு வருஷகாலமிருந்தார். அப்புறம் அவர் அங்கிருந்து ஐக்கியமாகாணங்களுக்கு அக்காலத்தில் பிரதான நகரமாயிருந்த ஸின்ஸினெட்டஸ் பட்டணம்போய்ச் சேர்ந்தனர். அங்கே டாக்டர் பீச்சர் வேதசாஸ்திர வித்தியாசாலைச் சங்கத்திற்கு அக்கிராசனாதிபதியானார். காத்தரைனாள் அவ்விடத்தில் ஸ்திரீகளுக்காக ஒரு வித்தியாசாலை ஸ்தாபிக்கவேண்டுமென்று கருதிக்கொண்டாள்; ஹாரியட் அவளுக்கு உதவியாயிருக்கவேண்டுமென்று நிச்சயித்தாள்.

அக்காலத்தில் இருப்புப்பாதை வழி கிடையாது; அதனால் பிரயாணம் போவதென்றால் அதிக பிரயாசம்; அதிலும் குடும்பத்தோடு ஒருவர் புறப்பட்டுப் போகவேண்டுமென்றால் அதின் வருத்தம் சொல்லிமுடியாது.

வழிப்பிரயாணம் போகும்போது ஹாரியட் வெகுவாகக் கடிதமெழுதுகிற வழக்கமல்லவா? அதன்படியே அவள் இப்பொழுதும் ஒரு விநோதமான கடிதமெழுதினாள். அதென்னவெனில், "கடைசியில் நாங்கள் நியூயார்க்கு நகரத்திலிருந்து புறப்பட்டோம். அப்பொழுது உண்டான இக்கஷ்

களைச் சொல்லி முடியாது. கூலிக்காரன் சாமான்களையெல்லாம் வழிதெரியாமல் வேறோரிடத்திற்குக் கொண்டுபோய் விட்டான். அவனுக்காக நாங்கள் வெகுநேரம் காத்தும் அவன் வந்து சேராமையால் அந்தச் சாமான்களில்லாமலே நாங்கள் புறப்பட்டுப்போக நேரிட்டது. அந்தச் சாமான்களுக்காக அங்கே ஜியார்ஜ் நிறுத்தப்பட்டான். நாங்கள் சனிக்கிழமை ராத்திரி ஊர்போய்ச் சேர்ந்தோம்; அப்பொழுது நெடுநேரமாகிவிட்டது. அச்சமயத்தில் தூறலும் மழையுமாயிருந்ததனால் எங்களுடுப்புக்களெல்லாம் நனைந்துபோயிருந்தன. நல்லதாகத் தரித்துக்கொள்ளக் கையில் ஒரு தொப்பிகூடக் கிடையாது. எங்களுடைய சாமான் பெட்டிகள் மறுநாள் வந்து சேர்ந்தன. வரும்போது அவற்றைப் பார்த்துக்கொண்டிருந்த எங்கள் தகப்பனார் மிக்க மகிழ்ச்சிகொண்டவராகி ஆனந்தக் கூச்சலிட்டுக் கூவினார்" என்பதாம்.

அவ்விடத்தில் வசித்துக்கொண்டிருக்கும்பொழுது ஹாரியட்டுக்கு அடிக்கடி மனதுக்கு உண்டான பல கிலேசங்களுடனே தேகத்திலும் பல அசௌக்கியங்களுண்டாகி மிகவும் வருத்தமுற்றாள். ஆனாலும் அவள் அந்தப் பாடசாலை ஸ்தாபிக்கிற விஷயத்தில் தன் சகோதரியான காத்தரைனுடன் அதிக ஊக்கத்துடனே பாடுபட்டு உழைத்தாள். அந்த வித்தியாசாலைக்கு மேற்றிசைப் பெண் வித்தியாசாலையென்று பெயரிடப்பட்டது. அவர்கள் பட்ட பாடு எம்மாத்திரமோ அம்மாத்திரம் அது விருத்தியடைந்து வந்தது.

1833-ல் ஹாரியட் டல்ட்டன் என்னும் பெருமாட்டியுடனே கென்தக்கியென்னும் மாகாணத்திற்குச் சென்றபோது முக்கியமாக அத்தேசத்திலுள்ள அடிமைத்தனத்தைக் கவனிக்கும்படியாயிற்று. அங்கே அடிமைகளாயிருக்கும் நிகிரோ ஜாதியாரைக் கண்ணுற்றார்கள். பல வருஷங்களுக்குப் பிறகு இந்தப் பிரயாணத்தைப்பற்றி மிஸ். டல்ட்டன் எழு

—125—

தியதில் அவர் சொல்வதாவது, "அக்காலத்தில் ஹாரியட் அந்த அடிமைகளின் இயற்கையைச் சற்றும் கவனித்ததாகத் தோற்றவில்லையாயினும், மனதில் அவ்விஷயத்தையே முதன்மையாகக் கவனித்துக்கொண்டாளென்று பிறகு நன்றாகத் தெளிவாயிற்று. அங்கே அந்த நிகிரோவருடைய செய்கைகளில் சிறிதும் கவனம் செலுத்தாதவர்கள்போலத் தோன்றினாலும், பிறகு அவள் எழுதிய யாத்திரையின் சரித்திரத்தில் அந்த அடிமைகளைப்பற்றிய ஒவ்வொரு ஸங்கதியும் குறிக்கப்பட்டிருப்பது கண்டு மிகவும் வியக்கும்படியாயிற்று" என்பதாம்.

1834-ல் கோடையில் அவள் அந்த நகரத்தை விட்டுக் கிழக்கிலுள்ள விநோதங்களைப் பார்க்கப் போனாள். அங்கிருந்த பல விசேஷங்களுள் நயகாரா என்னும் ஒரு பெரிய ஆகாயகங்கையைக் கண்ணுற்றாள். அதைப்பற்றி அவள் எழுதுவதாவது, 'அந்த நயகாரா எவ்வளவு உன்னதமாக இருக்கிறதோ, எவ்வளவு தாழ விழுகிறதோ, எவ்வளவு அதிகமாக இரைகின்றதோ, இளையளில்லையோ, ஒரே தன்மையான காட்சியளித்ததோ இல்லையோ, எனக்கு ஒன்றும் தோற்றவில்லை; அதைப் பார்த்தவுடனே என்னுடைய மனது பிரமை பிடித்துப்போயிற்று. அது எனக்கு ஒரு புதிய விசித்திரமான உலகம்போலத் தோற்றியது. இது ஏதோ ஒரு தேவலோகத்துப் புதுமையென்று நினைக்கத் தக்கதாயிருந்தது. அதைச்சுற்றி எங்கே பார்த்தாலும் வானவில் வீசியிருப்பதுபோல விளங்கியது. பலவகை ரத்தினங்கள் பிரகாசிப்பதுபோலப் பளபளவென்று துலங்கியது; வெளேரென்று சந்திரகிரணம்போல அந்த ஆகாசகங்கை மேலிருந்து விழுவதும், அதனிடையே அடிக்கடி இந்திரதனுசு தோன்றி மறைவதும் வெகு விசித்திரமாயிருந்தன. அதைப் படைத்த பொறியினது மனம்போலவே அது மிகத் தெளிவாகத் தோன்றி

பது. அது ஒப்புயர்வில்லாத அழகுள்ளது. அதைப் பார்க்கும்போது எங்களுக்கு உள்ளத்தில் ஒருவகை அச்சமுமுண்டாகியது' என்பதாம்.

பிரதிவருஷமும் அந்த ஆகாயகங்கையின் அதிசயத்தைப் போய்ப் பார்த்துவருகிற ஜனங்கள் இவ்வளவென்று கணக்கிட்டுச் சொல்ல முடியாது. அதைப் பார்த்தவுடனே பலருக்கு மிகுந்த தெய்வபக்தி உண்டாகிவிடுகிறது. "அங்கே பூலோகம் தேவலோகம்போலத் தோற்றுகிறது, அங்கே சாதாரணமான ஒரு புதரைப் பார்த்தாலுங்கூடக் கடவுளின் ஞாபகமுண்டாகின்றது" என்று ஒரு கவி வர்ணித்திருக்கிறார்.

இந்தத்தடவை கோடைகால சஞ்சாரம் போயிருக்கையில், தனது உயிர்த்தோழியும் ஸ்டோ என்னும் பண்டிதருடைய மனையாட்டியுமான இலைஜா என்பவள் இறந்துபோனதாக ஹாரியட்டுக்குத் தெரியவந்தது. ஸ்டோ பண்டிதருக்குச் சந்ததியுமில்லை. அப்படி அவருக்குப் பத்தினி வியோகம் நேரிட்டது கேட்டு ஹாரியட் மிகவும் விசனமடைந்தாள். அவர் விஷயத்திலுண்டான பரிதாபத்தினால் அவரை அவளே விவாகம் செய்துகொள்ள உடன்பட்டாள். "இருமற்றதே தாரம், ஊரில் ஒருவனே தோழன்" என்பதுபோல், 1836-ம் ௵ ஜனவரி௴ 6௳ அவ்விருவருக்கும் விவாகம் நடந்தேறியது.

இப்படி விவாகமானபோது ஹாரியட்டுக்கு வயது இருபத்தைந்து. கைபிடித்த கணவனோ சிறந்த கல்வித்தேர்ச்சியும் லோகோபகார சிந்தையுமுடையவர். உடைமையென்பது கல்வியுடைமை, கல்வியழகே அழகு, கல்லாதவரே கண்ணில்லாதவர், என்னும் முதுமொழிப்பொருளை யுணர்ந்தவராகையால், முக்கியமாக உலகத்தில் மேலான படிப்பு எங்கும் விசேஷமாகப் பரவும்படி செய்யவேண்டுமென்பது அவருடைய முதன்மையான கோரிக்கை. அதற்காகவே அவர் போதனாப்பியாஸ பாடசாலை யொன்று ஸ்தாபிக்க

லானார். அதன் கருத்தென்னவெனில், சாதாரணமாய் எங்கும் பாடசாலைகள் ஸ்தாபிக்கவேண்டுமென்பதும், உபாத்தியாயர்களுடைய பெருமையை அதிகப்படுத்த வேண்டுமென்பதும், அதனால் உலகத்தில் படிப்புக்கு அதிகமான உபயோக முண்டாக்கிவிடவேண்டுமென்பதுமாம்.

இவர்களுக்குக் கலியாணமான சிலநாளைக்கெல்லாம், ஐரோப்பாவிலே முக்கியமாகப் ப்ரஷியா தேசத்திலுள்ள பாடசாலை ஏற்பாடுகளைத் தேற விசாரித்தறிந்து வரும்படி ஸ்டோ பண்டிதர் ஐரோப்பாவுக்கு அனுப்பப்பட்டார்.

1836-ம் ௵ ஆகிய அந்தக்காலத்தில் அமெரிக்கா ஒரு புதிய தேசமாயிருந்தது; அப்பொழுதுதான் பிரஜைகள் புதிதாய் அங்கே குடியேறினார்கள். அங்கே அதுவரையில் பராமுகம் பண்ணப்பட்ட வித்தியாப்பியாசமென்பது அப்பொழுது தான் ஆரம்பிக்கப்பட்டது. அதனால் அங்கே தலைமையாயிருந்த சிலர் அறிவும் அநுபவமும் சம்பாதித்துக்கொண்டு வரும்படி ஐரோப்பாவுக்குச் சென்றார்கள்.

இவ்விதமாக நாயகன் வெளியே புறப்பட்டுப்போயிருந்த காலத்தில் ஸ்டோ பெருமாட்டி அடிமைகளைப்பற்றிய வரலாற்றை விசேஷமாக ஆராய்ச்சி செய்யலானாள். நாம் முன்னே சொல்லியவிதமாகவே இந்த ஐக்கிய மாகாணங்கள் வடபாதியென்றும் தென்பாதியென்றும் இரண்டாகப் பிரிக்கப்பட்டிருந்தது. அதில் வடபாதியெல்லாம் சுதந்தரமான தேசம். தென்பாதியில் அடிமையாகப் பிடிபட்டவர்களால் உழுது பயிர்செய்யப்பட்ட விசேஷமான நெல்விளைநிலங்களும் கரும்பஞ் சோலைகளுமிருந்தன.

அங்கே சிறகு பறிகொடுத்த பறவைபோன்ற அடிமைகளை வைத்து ஆளுகிற ஏற்பாடு மிகவும் கொடியதாக இருந்தது. அடிமைகள் தென்பாதியில் அதிகமாகத் துன்புறுத்தப்பட்டு வந்தனர்.

வின்வினேட்டை என்னும் மாகாணத்தில் இந்த அடிமை வியாபாரத்தை அடக்கவேண்டு மென்பதைப்பற்றிப் பலர் அதிக ஊக்கம் கொண்டவரானார்கள். அடிமைத்தனத்தை உடனே அடக்கி அனைவர்க்கும் சுவாதந்திரியம் அளிக்கவேண்டு மென்று அநேகர்க்கு அதிக ஆவேசமுண்டாகியது; ஒரேகாலத்திலில்லாவிட்டாலும் நாளளவில் அடக்கினாலும் நல்லதே யென்று மற்றவர்கள் அபிப்பிராயப்பட்டார்கள். எப்படியானாலும் அதை அடக்கிவிடவேண்டு மென்பதில் யாவரும் ஒருமுகமானார்கள்.

“அடிமை படைத்தால் ஆள்வது கடன்” என்று நினைத்த பணக்காரர் இரக்கமில்லாமல் அடிமைகளை வைத்தாளுகிற கொடுமைகளைப்பற்றிச் சமாசார பத்திரிகைகளில் பிரபலமாகப் பிரசுரம் செய்யப்பட்டது. அதைப் பார்த்தபோது தெற்கே அடிமைகளை வைத்தாளும் தனிகர்களுக்கு மிகுந்த ஆக்கிரக முண்டாகியது. அதனால் அவர்கள் போக்கிரிகளுக்குப் பணம் கொடுத்துச் சமாசார பத்திரிகை பிரசுரம் செய்பவர்களை எதிர்க்கும்படி செய்தார்கள். எங்கே பார்த்தாலும் பெரிய கலகமுண்டாகத் தலைப்பட்டது. அதை அடக்குவதற்காக அதிகப் பிரயாசைப் படவேண்டியதாயிற்று. அக்காலத்திலுண்டான கலகங்களையும் அதைத் தடுக்க முயன்ற முயற்சிகளையும் இங்கே எடுத்துரைப்பதென்றால் மிகவும் விரிவாகும்.

“ஆராருக்கு ஆளாவோம் என்று நினைத்து நினைத்து அந்த அடிமைகள் படுகிற உபத்திரவங்களைப்பற்றி யாரிடத்தில் எடுத்துப் பேசினாலும், அவர்களுக்கு அடங்காத கோபமுண்டாகும்; அதற்கு ஏதாகிலும் பரிகாரம் தேடவேண்டுவது அவசியமே என்னசெய்கிறது? என்று ஒவ்வொருவரும் பரிதபித்துக் கேட்கலானார்கள்” என்று ஸ்டோ துரைசானியே சொல்லுகிறாள்;

ஸ்டோ பண்டிதர் நியூயார்க்குப் பட்டணம் திரும்பி வந்தபோது இலைஜா, ஹாரியட் என்னும் இரண்டு பெண்கள் தமக்கு இரட்டைப்பிள்ளையாகப் பிறந்த செய்தி கேள்விப்பட்டுச் சந்தோஷிக்கலானார். 1838-ல் ஹென்றி யென்று மற்றொரு பிள்ளை பிறந்தது.

அதன்பிறகு ஸ்டோ துரைசானி முன்போலத் தன் மனம் போனபடியெல்லாம் யதேச்சையாக இருப்பதற்கு அநுகூலப் படாமற்போயிற்று. ஏககாலத்திலே கையில் மூன்று குழந்தைகள் ஏற்பட்டுப்போயின; அவள் உடம்போ மிகவும் நுட்பமானது. ஏழையாகையால் வேலைக்காரர்களும் அதிகமாக வைத்துக்கொள்ள அநுகூலப்படாமல் ஒரே ஒரு வேலைக்காரியே வைத்துக்கொள்ளும்படியிருந்தது. அதனால் அவள் தானே குழந்தைகளைப்பற்றியும் வீட்டு வேலையைப்பற்றியும் அதிகமான கவலைப்படவேண்டியதாயிருந்தது. இப்படியிருக்கையிலும் அவளது புத்திமாத்திரம் சும்மா இராமல் பற்பல வேலைகளைச் செய்ய அவளைத் தூண்டிக்கொண்டேயிருந்தது. அவள் பற்பல சமாசார பத்திரிகைகளுக்கும், இதரமான பத்திரிகைகளுக்கும் அடிக்கடி விஷயங்கள் எழுதிவந்தாள். அதற்காக அவளுக்குக் கிடைத்த பணம் மிகவும் சொற்பமாயினும் திருப்தியுடன் பெற்றுக்கொள்ளத் தக்கதாயிருந்தது. அப்பொழுது அவள் தனது தோழியான ஜார்ஜியானா மே என்பவளுக்கு ஒரு கடிதம் எழுதினாள். அதாவது, “தோழியே! குழந்தைகளைப் பாதுகாப்பதும் வீட்டுவேலையைப் பார்ப்பதும்தவிர வேறு வேலை எதுவும் செய்ய எனக்கு இடமுண்டாகவில்லை; ஆயினும் சற்று நிதானித்து யோசிக்குமளவில், கணவன் விஷயத்திலும் குழந்தைகள் விஷயத்திலும் நான் சிறந்த பாக்கியம்பெற்றவள் என்று சொல்லத் தடையில்லை. “பிள்ளைச்சீர் கொள்ளக் கிடைக்குமா!” இந்தக் குழந்தைகளில்லாமல் எனக்கு எவ்வளவு சௌக்கியம்

கிடைத்தாலும், ஒழிவு கிடைத்தாலும், இன்பம் கிடைத்தாலும், ஒன்றும் எனக்கு வேண்டியதில்லை; குழந்தைகளாவது வட்டிக்குப்போட்டு வைத்திருக்கிற நிதிபோலவாம். அதன் விலைமதிப்பு நிமிஷத்திற்கு நிமிஷம் விருத்தியடைந்து கொண்டே யிருக்கிறது" என்று எழுதினாள்.

1839-ல் ஸ்டோ துரைசானிவீட்டில் அத்தேசத்துச் சிறுபெண் ஒருத்தி வேலைக்காரியாய் அமர்ந்தாள். அவள் ஓஹியோ என்கிற நாட்டில் கொண்டு சேர்க்கப்பட்டபடியால் அந்நாட்டுச் சட்டத்தின்படியே அவள் அடிமைத்தனம் நீங்கிச் சுவாதீனம் பெற்றிருப்பது உறுதிதான்.

இப்படியிருக்க அந்தப் பெண் இவர்களிடமமர்ந்த சில மாதங்களுக்கெல்லாம், அந்தப் பெண் தன் அடிமை என்று ஒருவன் அவளைத் தேடிக்கொண்டு அப்பட்டணத்தில் வந்திருக்கிறானென்றும், தகுந்த ஜாக்கிரதையுடன் இராவிட்டால் அவன் அப்பெண்ணைப் பிடித்துக்கொண்டு போய் அடிமையாக்கிக்கொள்வானென்றும் ஸ்டோ பண்டிதருக்குச் செய்தி தெரியவந்தது.

அது தெரிந்தவுடனே அப்பண்டிதர், அடைக்கோனை ஆதரி என்கிறபடி அப்பெண்ணைத் தேடுகிறவர்கள் ஒழிந்து போகிறவரையில் அவளை ஒருவர் கண்ணுக்கும் அகப்படாத பத்திரமானவிடத்தில் கொண்டு சேர்த்து வைக்கவேண்டுமென்று தீர்மானித்து, அப்படியே அவர் அந்தப் பெண்ணை ஒரு மூடுவண்டியிலேற்றி, தம் மைத்துனனுடனே தாமும் காவலாகப் புறப்பட்டு, ஒருவரும் சஞ்சரியாத தனிவழியே இராத்திரியிலேயே சென்று பன்னிரண்டுமைல் தூரத்திற்கப்பால் அப்பெண்ணின் சிநேகிதர் வசித்திருந்த பத்திரமான ஓரிடத்தில் கொண்டுசேர்த்தார். இவ்விதமாக அத்தேசத்தில் அடிமைகள் படுகிற பாட்டை நேராகக் கண்டனுபவித்தபிறகு ஸ்டோ துரைசானி அவர்கள் வரலாற்றை

தானெழுதிய நீக்ரோ ஜாதியார் சரித்திரத்தில் செவ்வையாயெழுதி வைக்கலானாள்.

1840-ம் ௵ மே௴ அவர்களுக்கு பிரடெரிக் உவில்லியம் என்று மற்றொரு பிள்ளை பிறந்தது. டிசம்பர்௴ அவள் தனது தோழிக்கு ஒரு கடிதமெழுதினாள். அதில் அவள் சொல்வதாவது "ஒரு வருஷகாலமாக நான் இன்றியமையாத காரியங்களைப்பற்றிய கடிதங்கள்மாத்திரமே எழுதிவரும்படியாயிற்று. அதற்கு முக்கியமான காரணம் என் கண்களில் ஒருவிதமான நோய் உண்டானதேயாம். இரண்டு மாதகாலம் கண்ணால் பார்த்து எழுதவே கூடாமற்போனதோடுகூட எதையும் நன்றாக ஊன்றிப் பார்க்கவும் சாத்தியப்படாமற்போய்விட்டது. பகலில் வெளிச்சத்தையும் பார்க்கக் கூடாமற்போயிற்று. அந்தச் சமயத்திலேதான் எனக்கு பிரடெரிக் என்கிற குமாரன் பிறந்தான். பிறகு இரண்டு மாதகாலம் நான் படுத்த படுக்கையாகவே யிருந்தேன்" என்று எழுதினாள்.

1842-ம் ௵த்தில் அவள் தேகசௌக்கியத்தின் பொருட்டு வெளியே புறப்பட்டுப் போனாள். அப்போது அவளுடைய கணவன் அவளுக்கு எழுதுகிறார். அதாவது, "என் அருமைக்கண்ணாட்டி, நீ சிறந்த கல்வித்தேர்ச்சியுள்ள நூலாசிரியராகப் போகிறாய்; தெய்வ சங்கற்பம் அப்படிப்பட்டதாகவே யிருக்கின்றது. ஆதலின் அதற்கேற்றபடியே நீ எல்லா ஏற்பாடுகளும் செய்துவரக்கடவை. கூடிய சீக்கிரம் உடம்பை நன்றாகச் சௌக்கியப்படுத்திக்கொண்டு மனதையும் நன்றாகப் பண்படுத்திக்கொள். அதைப்பார்க்கிலும் உன்னை மனைவியாகப் பெற்றவனுக்குப் பெரிய பாக்கியம் வேறில்லை; உன் மக்களுக்கும் அதுவே பெரும்பேறாகும்" என்பதாம். மறுபடியும் அவர் அவளுக்கு எழுதுகிறார்: அதென்னவெனில், "என் அருமைக் கண்மணி, வெகு சீக்கிரத்தில் நீ இவ்விடம் வந்து சேரக்கடவை; ஏனெனில், உன் பிரிவைப் பொறுத்தி

ருக்க என்றால் முடியவில்லை; நாம் இப்படி ஏழையாயிராமல் போதுமான பாக்கியம் நமக்குக் கிடைத்திருக்குமானால், உடனே நான் உன்னிடம் புறப்பட்டு வந்துவிடுவேன்; இந்தப் பூலோகத்தில் உன்னைப்போன்ற பேரறிவுள்ள பெண்மணி இருந்ததுமில்லை. செருக்கென்பது சிறிதுமில்லாமல் இவ்வளவு சிறந்த அறிவும், வீணாடம்பரமென்பது சிறிதுமில்லாத அவ்வளவு புகழ்ச்சியும், விகல்பம் சிறிதுமில்லாத அவ்வளவு கல்வித் தேர்ச்சியும், அளவுக்கு மிஞ்சாத அவ்வளவு விடாமுயற்சியும், கடுஞ்சொல் சிறிதுமில்லாத அதிகமான பேசுந்திறமும், இவ்விதமே மற்றும் பலவிஷயங்களிலும் அபவாதத்திற்குச் சிறிதுமிடங்கொடாத உத்தம குணங்களும் உன்னைத் தவிர வேறு யாரிடத்திலுண்டு" என்று எழுதினார்.

இக்கடிதத்திற்கு அந்தப் பெண்மணி உத்தரமெழுதும்பொழுது, நீ சிறந்த நூலாசிரியராக வேண்டுமென்பதற்கு எழுதிய மறுமொழியாவது: "அதற்கென்று கஷ்டப்பட்டால் கல்வித்தேர்ச்சியும் பெறலாம், நூலாசிரியருமாகலாம், சந்தேகமில்லை; ஆனால், அது நமக்குச் சாத்தியமாகுமா என்பது சந்தேகமாயிருக்கிறது; ஏனெனில், குழந்தைகளெல்லாம் பச்சைப் பாலகர்கள்; தாய் எப்பொழுதும் அக்குழந்தைகள் மேலேயே கண்ணாயிருக்க வேண்டியிருக்கிறது. அன்றியும், நான் எப்பொழுதும் நூல்கள் எழுதுவதே தொழிலாகக் கொள்ளவேண்டுமானால், எனக்கென்றே தனியாக ஒரு அறை வேண்டும்; நமக்குத் தனியாக ஒரு இடமும் கிடையாது; என்னசெய்வது" என்று எழுதினாள். அதற்கேற்றபடியே சில காலம்வரையில் தரித்திரத்தோடு நோயும் மிகவும் வருத்த ஆரம்பித்து அவள் அதிகமான கஷ்டங்களை அநுபவிக்கலானாள்.

1842-ம் வருஷம் அந்தக் கல்விச்சாலை மாணாக்கர்களுக்கெல்லாம் ஒருவகை விஷச்சுரம் உண்டாகத் தலைப்பட்டு, இந்த

ஸ்டோ துரைசானியின் வீடு ஒரு பெரிய வைத்தியசாலையாகிவிட்டது. 1843-ம் வருஷத்தில் அவளுக்கு ஒரு ஆண் குழந்தையும் பிறகு ஒரு பெண்குழந்தையும் பிறந்தன; நோயும் தரித்திரமும் அதிகமாக வருத்தலாயின. கடைசியில் அவள் நோயினால் மிகவும் மெலிந்தவளாகி, 1846-ம் வருஷம் முதலில் தேகசௌக்கியத்திற்காக ஒரு வருஷகாலம் வெளியே போய்வரவேண்டுமென்று நிச்சயிக்கலாயிற்று.

அங்கிருந்து 1846-௵ மார்ச்௴ அவளெழுதுகிறாள். "எனக்கு எவ்வளவோ கஷ்டங்களிருக்கையிலும், என் விஷயத்தில் கடவுள் பூரணகடாக்ஷம் வைத்துச் சிறந்த அன்புள்ளவர்களான நேசர்களைக் கொடுத்து என்விஷயத்தில் எப்போதும் கவனமுள்ளவரா யிருப்பதை நினைக்க நினைக்க எனக்குப் பேராநந்தமா யிருக்கின்றது; இந்த மாரிகாலத்தில் பிரதிதினமும் இதற்கு அத்தாட்சிகள் அமிதமாக உள்ளங்கை நெல்லிக்கனிபோல விளங்கிக்கொண்டிருக்கின்றன. எப்பொழுதும் ஒருவராவது இரண்டொரு சிநேகிதர்கள் என்னை மனங்களிக்கச்செய்து எனக்கு வேண்டிய உதவிசெய்ய என்னிட மிருந்துகொண்டே யிருப்பார்கள். அதனால் ஒரு குறையும் என் மனதில் தோன்றாமலே யிருக்கிறது. என்னுடைய கணவன் வீட்டு விசாரணை கர்த்தாவாயும் பிள்ளைகளுக்குத் தாதிபோலவுமாயினார். இராத்திரி அவர் மூக்குக் கண்ணாடியுடன் பிள்ளைகளையெல்லாம் படுக்கையறைக்கு ஓட்டிக்கொண்டு போவதைக் கண்டால் நீங்களெல்லாரும் நகைக்கும்படியாயிருக்கும். பேரூர் தெரியாத யாரோ ஒரு நண்பர் என் பிரயாணத்திற்கு வேண்டிய திரவியம் வெகு விசித்திரமானவகையாய் அனுப்புவித்தார்.

இவைகளையெல்லாம் பார்த்தால் கடவுளுடைய கடாக்ஷம் நம்மிடத்தில் பரிபூரணமா யிருக்கிறதென்பது வெளிப்படையாக விளங்குவதோடு, அதைக்கண்டு ஐயம் நீங்கி

எக்காலத்திலும் அவனையே பூரணமாக நம்பியிருப்பதற்குந் துணிவுண்டாகின்றது" என்பதாம்.

இப்படி தேகசௌக்கியத்திற்காகப் போயிருந்தவிடத்தினின்றும் 1847-ம் ௵ முதலில் திரும்பி வரும்படியாயிற்று. மேமீ ஸ்ட்டோ துரைசானி தன் வீடுவந்து சேர்ந்தாள்; அதுகண்டு அவளது கணவனும் குழந்தைகளும் மிக்க மகிழ்ச்சி கொண்டார்கள்.

1848-ம் ௵ ஸாமுவேல் சார்லெஸ் என்கிற ஆறாவது குழந்தையொன்று அவளுக்குப் பிறந்தது. இப்படியிருக்க அந்தச் சமயத்தில் அவளுடைய கணவனுக்குத் தேகம் மிகவும் அசௌக்கியமாகிவிட்டது. அதனால் அவர் இப்போது தம் பங்குக்கு நல்ல காற்றும் ஜலமுமுள்ள விடத்திற் போயிருந்து உடம்பைச் சொஸ்தப்படுத்திக்கொள்ள வேண்டியதாயிற்று. அதன்படியே அவர் 1848-ம் ௵ ஜூன்மீ புறப்பட்டுப்போயினார்; அங்கேயே மறுவருஷம் செப்டெம்பர்மீ வரையில் அவர் இருக்கவேண்டியதாக நேரிட்டது.

இப்படி அவர் வெளியே போயிருந்தகாலத்தில், ஸின்ஸினேட்டை நகரத்தில் வாந்திபேதி நோய் உண்டாகத் தலைப்பட்டது. அதுகேட்டு ஸ்ட்டோ பண்டிதர் உடனே தம் குழந்தைகளண்டை திரும்பி வந்துவிடவேண்டுமென்று அதிக ஆவல் கொண்டார். ஆனால் அவருடைய மனையாட்டி அதற்கு உடன்படவில்லை. அப்படியிருக்க அவளுடைய சிறுகுழந்தையான சார்லிக்கு உடம்பு அசௌக்கியமாயிற்று; அதனால் அக்குழந்தைக்கு உடம்பு மிகவும் துர்ப்பலமாகிவிட்டாலும், சீக்கிரம் சொஸ்தமாகி விடுவதுபோலக் காணப்பட்டது. அப்போது ஜூலைமீ 23உ அவள் தன் கணவனுக்கு எழுதுகிறாள்: என்னவெனில், "என் பிராணநாதனே! கடைசியில் யமதருமராஜன் நமதுமேலேயும் கைவைக்கலானார்போலும். சார்லியென்னும் நமது சிறுகுழந்தை மாறுவலைதையுடனே

படுத்திருக்க, ஒருநாள் முழுதும் நாங்கள் பக்கத்திலுட்கார்ந்து பார்த்திருக்க நேரிட்டது. கொஞ்சங் கொஞ்சமாய் மூச்சு அடங்கி வரலாயிற்று. முன் கடிதத்தில் அவனுக்கு நோய் கண்டதாக எழுதினேனே! முதலில் அது கொஞ்சம் குணமாயிற்று. ஆனாலும் அதுமுதல் உடம்புமாத்திரம் மெலிந்து கொண்டே வந்தது; அப்படியிருக்கையிலும் உடம்பு அநுகூலமாகுமென்றே நாங்கள் ஆசைவைத்திருந்தோம். இப்போது திடீரென்று நான்கு நாளைக்குமுன்னே கொடிய வாந்திபேதி காணலாயிற்று. இனி இன்று இராத்திரி தப்புமென்கிற ஆசையில்லை. அக்கம் பக்கத்தார் தங்களால் எவ்வளவு உதவிசெய்யக்கூடுமோ அவ்வளவும் நமதுவிஷயத்தில் செய்தார்கள். நீங்கள் இதற்காக இவ்விடம் திரும்பி வரவேண்டாம்; நீங்கள் இவ்விடம் வருவதற்குள் எல்லாக் காரியமும் முடிந்துவிடும். இந்தத் தொத்துநோய் இனிப் புதிதாய்க் காண்கிறவிடமெல்லாம் அபாயமாகவே முடிகிறதென்று வைத்தியர்கள் சொல்லுகிறார்கள். அது தங்களுக்கு ஞாபகமிருக்கட்டும்; கடவுள் நம்மை நிக்கிரகிக்கும்போது நாம் அவர்மேல் ஆயாஸங் கொள்ளலாகாது. இதற்குமேல் அதிகமாய் ஒன்றும் சொல்ல எனக்கு இப்பொழுது துணிவுண்டாகவில்லை; சீக்கிரமே மற்றொரு கடிதமெழுதுகிறேன்" என்று தெரிவித்தாள். அதன்படியே ஜூலைமீ 26உ எழுதிய கடிதமாவது: "பிராணநாதா! காரியம் கடைசியில் முடிவாகிவிட்டது; நமது அருமைக் குழந்தை நம்மைவிட்டுப் போய்விட்டது. இப்பொழுது அது மோக்ஷமடைந்து அடியார்களுடனே பேரானந்த மநுபவித்துக்கொண்டிருக்கின்றது. அவ்வளவு அழகும், ஒளியும், சிரிப்பும், சமத்காரமும், மதுரமும், மழலைச்சொல்லுமுள்ள நமது ஆசைக்கிளி இப்பொழுது பிணக்கோலத்துடனே படுத்திருக்கின்றது. எனக்குச் செருக்கும் சந்தோஷமும் தந்து எப்பொழுதும் என் மனத்

னதைத் தேற்றிக்கொண்டிருந்தது இக்குழந்தை. இக்குழந்தையைக் கண்டு நான் எத்தனையோ மயக்கவலைகளை நீக்கினேன்;

"மக்கண்மெய் தீண்ட லுடற்கின்ப மற்றவர்
சொற்கேட்ட லின்பஞ் செவிக்கு"

என்றபடி எனக்கு எத்தனையோ துயரங்கள் இக்குழந்தையைக் கையால் தொட்டவுடனே நீங்கிப்போயின. அப்படிப்பட்ட குழந்தையை நான் மரணாவஸ்தையில் என் கண்ணால் பார்க்கும்படியாக நேரிட்டது; அப்பொழுது எனக்கு ஒன்றும் செய்யத் தோன்றாமற்போயிற்று. அச்சமயத்தில் குழந்தையின் கொடிய வேதனையை ஆற்றத் தகுந்தவர் ஒருவருமில்லை. அவ்வேதனையைப் பார்த்து நான் படுகிற பரிதாபத்தைக் கண்டு அக்குழந்தைக்குச் சீக்கிரமே உயிர் போய்விடலாகாதாவென்று பிரார்த்தனை செய்வதுதவிர மற்றொன்றும் ஒருவராலும் செய்யக் கூடவில்லை. இப்படி நானெழுதுவதைப் பார்த்தால் என் துக்கம்போன்ற துக்கம் மற்றவருக்கு இல்லையோவெனத் தோன்றும்; முன் எகிப்து தேசத்தில் உண்டானதுபோல் இப்பொழுது இப்பட்டணத்தில் சாகக்கொடாத வீடு ஒன்று கூடக்கிடையாது. இந்தக் கொடுந்துயரம் எங்கே பார்த்தாலும் பரவியிருக்கின்றது; இது எப்பொழுது நீங்குமோ கடவுள் ஒருவருக்குத்தான் தெரியும்" என்பதாம்.

இவ்விதமாக அத்தேசத்துப் பிரஜைகளை வெகுநாள் வருத்திக்கொண்டிருந்த அந்தக் கொள்ளைநோய் கடைசியில் ஓய்ந்தது. 1849-ம் ௵ செப்டெம்பர் ௴ ஸ்டோ பண்டிதர் ஊருக்குத் திரும்பிவந்தார். வந்தவுடனே அவ்வூர் கல்விச்சாலையில் ஒரு பிரதான பண்டித உத்தியோகத்தை அங்கீகரிக்கவேண்டுமென்று அவருக்குப் பத்திரிகை வந்தது. அப்படியே அவர் அதை ஏற்றுக்கொள்ளத் தீர்மானித்தார்.

துயரம் வந்த காலத்திலும் தருமம் செய்தலே தலைமையெனக் கொண்டு பீச்சர் துரைசானி அப்பொழுது வேறு

விதமான மற்றொரு நற்செய்கை செய்யலானாள். இதுவரையில் நாம் அவளை ஒரு கன்னிகையாகவும், பெண்சாதியாகவும், தாயாகவுமாத்திரமேயல்லவோ கண்டிருக்கிறோம். ஒரு நூலாசிரியராக இதுவரையி லெங்கும் எடுத்துரைக்கவில்லையே! அவள் ஒப்பில்லாத அறிவுள்ள ஒரு பெண்ணரசியென்று அவளைச் சூழ்ந்திருப்பவர்களுக்கு நன்றாய்த் தெரிந்திருந்தாலும், பல கதைகளும், சமாசார பத்திரிகைக்கு வேண்டிய பற்பல விஷயங்களும் அடிக்கடி யெழுதிவந்தாலும், அவளுடைய பெயர் வெளியில் விசேஷமாகப் பிரசித்திபெறவில்லை. உலகத்தா ரனைவரும் கொண்டாடத்தக்க புத்தகமொன்றும் இதுவரையில் அவளா லெழுதப்பட்டுப் பிரசுரமாகவில்லை. நீக்ரோவர் சரித்திரமாகிய அங்கிள் தாம்ஸ் காபின் (Uncle Tom's Cabin) என்று பெயரிட்டு அரிய புத்தகமொன்றை எழுதுவதற்கு இன்றியமையாத பூததயை பச்சாத்தாபத்தின் ஆழமிவ்வளவென்று கண்டறிய நெடுநாளைய அனுபவம் வேண்டியிருந்ததுபோலும். பூததயை பச்சாத்தாபமுடையவர்கள் கடவுள் எவ்வளவு சோதனைசெய்தாலும் அதற்கு உட்பட்டிருக்க வேண்டுவதேயாம்.

இந்த ஸ்டோ துரைசானி மிகுந்த நுட்ப புத்தியுடையவளென்பது உண்மையே. ஆயின் அந்த நுட்பபுத்தி பிறப்பிலேயே கடவுள் கடாக்ஷித்த உத்தம குணமாம். அவள் தன்னுடைய படிப்பினால் இயற்கையிலமைந்த சாமர்த்தியங்களை மிகவும் விசேஷமாக விருத்திபண்ணிக்கொண்டாள். ஆனாலும், எவ்வளவு நுட்ப புத்தியிருந்தாலும் எவ்வளவு பயிற்சியிருந்தாலும், இந்த ஒரு புத்தகம் இவ்வுலகத்தில் நாகரிகம்பெற்ற பல்லாயிரம் பிரஜைகளையும் அடிமை வியாபாரத்துக்கு விரோதமாக கோபமூட்டிக் கிளப்பிவிட்டதுபோலக் கிளப்ப மற்றெவராலு மாகாது.

பிள்ளைகளும் குட்டிகளும் நிறைந்த பெரிய குடும்பத்தைக் காப்பாற்றுகிற கவலை மேலிட்டு, தேகவலிமையில்லாமல் தரித்திரத்தோடு போராடுகிறவளும் இவ்வுலகசிந்தையில்லாமல் பரலோக சிந்தையே மேலாகக்கொண்டு பாடுபடுகிறவளுமான இப்படிப்பட்டவளா அடிமைகளைப்பற்றிய இவ்வளவு அற்புதமான கதை யெழுத வல்லவளாயாள் என்று பலர்க்கு வியப்பு உண்டாகுமல்லவா?

1850-ம் வருஷத்தில் ஐக்கிய மாகாணத்தில் அங்கங்கே போய்ப் பதுங்கிக்கொண்ட அடிமைகளுக்காக ஒரு சட்டம் பிறப்பிக்கப்பட்டது. அந்தச் சட்டத்தினால் உண்டான உபத்திரவமென்னவெனில், தெற்கே அடிமைகளை வாங்கி வைத்தாளுகிறவர்களுக்குள் எவரானாலும் தங்களுடைய அடிமையென்று யாரைச் சொல்லுகிறார்களோ அவனை உடனே தேடிப் பிடித்துத் தம்மிஷ்டப்படிக் கஷ்டப்படுத்த அதிகாரம் உண்டானதுமன்றியில், கலகத்திற்கிடமான இந்தச் செயலுக்குத் தங்களாலான ஸகாயம் செய்யும்படிச் சுதந்தர நாடுகளிலுள்ளவர்களுக்குங்கூட நிர்ப்பந்தமுண்டாயிற்று.

ஸ்டோ துரைசானி போஸ்டன் நகரத்திலிருந்த காலத்தில் அங்கே இந்தக் கொடிய சட்டத்தைப்பற்றின பேச்சே பெரிய பேச்சாயிருந்தது. அவள் பிரொன்ஸ்விக்கு நகருக்கு வந்த பிறகு ஆதரவற்ற பேதை ஜனங்களைத் துன்புறுத்தும்படி இவ்விதமாக ஒரு அநியாயச்சட்டமுண்டாகுமாவென்று அவளுடைய மனம் கொதித்துக்கொண்டேயிருந்தது.

அந்தச் சட்டம் அப்படியே உறுதிப்படுத்தப்பட்டுப் போனபிறகு, அந்தச் சட்டத்தினால் உண்டாகும் அகோரமான கொடுமைகள் இன்னின்னவிதமாயிருக்கின்றனவென்று சொல்லி ஒன்றன்பின் ஒன்றாய்ப் பல கடிதங்கள் ஸ்டோ துரைசானியிடம் வரத் தலைப்பட்டன. நாடுகளைவிட்டு நகரங்களை தப்பித்துக்கொண்டோடிப்போன அடிமைகளைப் பிடிப்

பதற்கு மிகவும் ஏற்றவிடங்களாயிருந்தன. சுதந்தர நாடுகளுக்கு மத்தியஸ்தானமாயிருந்த போஸ்டன் நகரங்கூட அடிமைகளைத் தேடிக்கொண்டு வருகிறவர்கள் தட்டுத்தடையில்லாமல் பிரவேசிக்கும்படியான இடமாகிவிட்டது. அதனாலுண்டான துன்பங்களையும் வருத்தங்களையும் இவ்வளவென்று எடுத்துச் சொல்ல ஒருவராலும் முடியாது. குடும்பங்களெல்லாம் சின்னபின்னமாய்ப்போயின. சிலர் உதவியற்ற சாமான்கள் அடைத்திருக்கும் மேலறைகளில் ஒளித்துக்கொண்டனர்; சிலர் நிலவறையி லொளித்துக்கொண்டனர்; சிலர் கடற்கரைக்கோடிக் கப்பலேறி ஐரோப்பாவுக்குப் போகலானார்கள்; மற்றவர்கள் கனடா தேசத்துக்குப் போய்விட்டார்கள்.

ஏழைப்பையன் ஒருவன் அனைவருக்கும் உபயோகமான மட்பாத்திர வியாபாரஞ்செய்து தன் குடும்பத்தைப் பாதுகாத்துக்கொண்டு வந்தான். அப்படியிருக்கையில் அவனை விலைக்கு வாங்கின பரிவு இல்லாத யஜமானன் ஒருவன் அவனைத் தேடிக்கொண்டு வருவதாக அவனுக்குச் செய்தி தெரிந்தது. அந்த யஜமானனை இவன் விட்டுப் பல வருஷங்கள் கழிந்துபோயின. அப்பொழுது நல்ல மாரிகாலம். யஜமானன் தேடிக்கொண்டு வருகிற செய்தி கேள்விப்பட்டவுடனே அந்தச் சிறுவன் ஏதேனும் ஒரு வண்டியிலேறிக்கொண்டு போனால் எப்படியாகுமோவென்று பயந்து காலால் நடந்து கனடா தேசம் போகப் புறப்பட்டான். அப்படிப் பிரயாணம்போகையில் அவனது கால்களிரண்டும் பனியால் வெறித்து வெடித்துத் தீராத புண்களுண்டாகிக் கடைசியில் அந்தக் கால்களையே வெட்டிவிடும்படியாக நேரிட்டது.

இது நடந்த சில வருஷங்களுக்குப்பிறகு எட்வர்ட் பீச்சர் என்னும் துரைசானி ஸ்டோ துரைசானியின் மகள் ஒருத்திக்கு அனுப்பிய கடிதத்தில் இதைப்பற்றி ஒரு சங்கதி

யெழுதினாள். அதாவது "இப்பொழுது நடக்கிற இந்தக் கொடிய செய்கைகளைக் கேட்டால் எப்படிப்பட்டவனுக்கும் மிகுந்த கோபமுண்டாகும். ஆனாலும் நானென்ன செய்யக் கூடும். என்னால் கூடியவரையில் யோசித்தேன், என்னால் அவ்வளவு பெரியகாரியம் செய்து முடிக்கச் சாத்தியப்படா தென்று தோன்றுகிறது. ஆனால் அதைச் சாதிக்கத்தக்க சக்தியுள்ளவர் ஒருவர் இருக்கிறார். அப்படியே நான் உன் தாயாருக்கு இந்தக் கொடிய செய்கைகளைப்பற்றிப் பல கடிதங்கள் எழுதினேன். அவற்றுள் ஒரு கடிதத்தில், அம்மா! உன்னைப்போல எழுதும் திறமையை எனக்குக் கடவுள் அளித்திருப்பாரானால், இந்த அடிமை வியாபாரத்தைப் போன்ற பாவச்செய்கை உலகில் வேறுண்டோவென்று உலகத்தார் அனைவரும் கோபாவேசங் கொள்ளும்படியான விதமாக எழுதிவிடுவேன் என்று குறித்துக் காட்டினேன்" என்பதாம்.

பிரன்ஸ்விக்கு நகரில் ஒருநாள் அவர்கள் உட்கார்ந்து பேசிக்கொண்டிருக்கும்போது இந்தக் கடிதம் சேர்ந்தது; அதை ஸ்டோ துரைசானி வாசித்துப் படித்தாள். அதில் இந்தச் சங்கதி வந்தபோது நாற்காலியில் சாய்ந்துகொண்டிருந்தவள் கையில் அந்தக் கடிதத்தை நசுக்கிக்கொண்டே மிக்க ஆக்ரோஷத்துடன் நிமிர்ந்தெழுந்து "அப்படியே நானொன்று எழுதுவேன்; நான் உயிரோடுமாத்திர மிருக்கக் கடவுள் கருணைகூர்வாரானால், அப்படியே எழுதி முடிப்பேன்" என்று சொன்னாள்.

அவள் நீக்ரோவர் சரித்திரம் எழுதியதற்கு இதுதான் மூலகாரணம்.

மனிதர்களை அடிமையாக விலைக்குவாங்கி ஆளுவது ஒரு குற்றமான செய்கையென்று உலகத்தார் அனைவரும் உணரும்படி செய்வதான இந்தச் சிறந்த கதை எழுதுகிற காரியம்

உடனே செய்து முடிக்கப்படவில்லை. 1850-ம் ஞூ டிசம்பரில் ஸ்டோ துரைசானி யெழுதுகிறதாவது, "என் சகோதரி யெழுதிய கடிதத்திற்காக அவள் விஷயத்தில் நான் மிக்க நன்றியுள்ளவளாகிறேன்; அக்கடிதத்திற்கு நான் சீக்கிரமே பதிலெழுதுகிறேன்; இரவில் குழந்தை யென்பக்கத்தில் படுத்துத் தூங்கும்படி யிருக்குமளவும் ஒரு காரியமும் அதிகமாகச் செய்ய என்னாலாகாது; எதையும் கடைசியில் செய்கிறேன். நான் உயிரோடு மாத்திரமிருந்தால் இவ்விஷயத்தை எழுதி முடிக்கத் தடையிராது மெய்த்தொழில் என்றும் மெய்ப் பயக்கும்" என்றெழுதினாள்.

1851-ம் ஞூ பிப்ரவரியில் ஸ்டோ துரைசானி பிரென்ஸ்விக்குக் கல்விச்சாலையைச் சேர்ந்த ஆலயத்தில் ஒரு காரியமாய் உட்கார்ந்திருந்தாள். அந்தருணத்தில் திடீரென்று அவள் மனத்தில் ஒரு படத்தைப் பிரித்துப் பார்ப்பதுபோல் டாம் என்கிற நீக்ரோவினுடைய மரணக்காட்சி நன்றாகத் தோன்றியது. அத்தோற்றம் உடனே கண்ணீர் விட்டழும்படி அவ்வளவு பலமாக மனத்தை உறுத்தியது. அப்போது கண்ணீர் வரவொட்டாமல் தடுப்பதே மிகுந்த பிரயாசமாயிற்று. பிறகு அவள் வீட்டிற்குத் திரும்பிவந்தவுடனே கடிதமும் எழுதுகோலு மெடுத்துக்கொண்டு தானாகவே தன் மனத்தில் தோன்றின அத்தோற்றத்தின் விவரங்களை யெழுத ஆரம்பித்தாள். முதலில் தன் குடும்பத்தை யெல்லாம் தன்னைச்சுற்றி உட்காரவைத்துக்கொண்டு, தான் என்ன எழுத வேண்டுமென்று மனத்தில் நினைத்திருந்தாளோ அதை அவர்களுக்குச் சொல்லிக் காட்டினாள். அது கேட்டுப் பத்து வயதும் பன்னிரண்டு வயதுமான அவளுடைய இரண்டு சிறு குழந்தைகள் கேவிக்கேவி அழ ஆரம்பித்தன. அப்படி யழுதுகொண்டே ஒரு குழந்தை "அம்மா! உலகில் அடிமைப் படுவது மிகவும் கொடுமையானது" என்று சொல்லிற்று.

அப்பால் இருபத்தைந்து வருஷமான பிறகு ஸ்டோ துரைசானி அக்காலத்திலிருந்த தன் செய்கையைப்பற்றித் தன் பிள்ளைக்கு எழுதுகிறாள். "நீ குழந்தையாயிருந்த ஒரு மாரிகாலம் எனக்கு இப்பொழுது ஞாபகம் வருகிறது. அப்பொழுது நான் நீக்ரோவர் சரித்திரம் எழுதிக்கொண்டிருந்தேன். நமது தேசத்தார் அடிமைகள் விஷயத்தில் செய்யும் கொடுமையும் அக்கிரமமும் கண்டு என் மனம் மிகவும் நொந்து, அதனால் அதற்குப் பரிகாரமுண்டாகும்படி ஏதாவது கொஞ்சம் செய்யும்விஷயத்தில் எனக்குத் திறமையளிக்க வேண்டுமென்றும், நான் கூறுவனை யெல்லாரும் கேட்கும்படி செய்ய வேண்டுமென்றும், கடவுளை நான் பிரார்த்திக்கலானேன். அன்றியும் இராத்திரிதோறும் உன் பக்கத்தில் படுத்துத் தூங்கும்பொழுது அடிமைகளாகப் பிடிபட்டுப் போயிருக்கும் குழந்தைகளின் தாய்மார்களுடைய நினைவுவந்து அவர்களுக்காகக் கண்ணீர்விட்டுப் புலம்பலானேன்" என்பதாம்.

இந்த வியப்புள்ள சரித்திரம் 1851-ம் ௵ ஜூன்௴ எழுத ஆரம்பிக்கப்பட்டது. அது முடிவதற்கு 1852-ம் ௵ ஏப்ரல்௴ 1௳ வரையில் சென்றது. அந்தக் கதை கேட்கக் கேட்க மிகவும் விருப்பத்தக்கதாயிருந்ததனாலும், பின்னும் விசேஷமாகப் பலவிஷயஞ் சேர்க்கவேண்டுமென்று பலர் வேண்டிக்கொண்டதனாலும், அவளுடைய மக்கள் தனியாயிருக்கும்படி பலர் அவளை உற்சாகப்படுத்திக்கொண்டிருந்ததனாலும், அப்படியே அவள் மிகுந்த ஆவேசங்கொண்டவளாகி, உலகத்திலுள்ள மிகக் கொண்டாடத்தக்க அரிய பெரிய புத்தகங்களோடு ஒப்பிடத்தக்கதான உத்தம நடையில் அதை யெழுதி முடித்தாள். ஆயினும் அவள், "இப்புத்தகத்தை யெழுதி முடித்தது நானன்று; அது தனக்குத்தானே யெழுதி முடிந்தது; இப்புத்தகத்தைப் பிரசுரப்படுத்தியதைப் பற்றிய அருமையெல்லாம் கடவுளுடையதே; இதை யெழுதுவ

தற்கு நான் அவர் கையில் ஒரு சாதாரணமான கருவிபோலவே நின்றேன்" என்று எழுதினாள்.

கடைசியில் அப்புத்தகம் முடிவுபெற்றது; அப்படி அவள் தன்னால் செய்யக்கூடியதைச் செய்து முடித்து, மற்றதைப்பற்றிக் கடவுளை நம்பித் தன் காரியத்தில் கண்ணாயிருந்தாள். அந்தப் புத்தகம் பிரசுரமானவுடனே முதல் நாளிலேயே மூவாயிரம் பிரதி செலவாகி, இப்புத்தகத்தை யாராவது கண்ணெடுத்துப் பார்ப்பார்களா? இப்புத்தகம் செலவாகுமாவென்றிருந்த சந்தேகம் நீங்கிவிட்டது. உடனே மறுபதிப்புப் பிரசுரமாயிற்று. ஏப்ரல்௴ 3-வது பதிப்பு வெளிப்பட்டது. ஒரு வருஷத்திற்குள் 120 பதிப்புப் பிரசுரமாகி மூன்று லட்சம் புத்தகம் விற்பனையாகி விட்டது. இரண்டொரு தினத்திற்குள்ளே அந்த ஏழைப் பண்டிதருடைய பெண்சாதியின் பெயர் உலகமெங்கும் பிரசித்தமாகிவிட்டது. அவள் வார்த்தையை எவ்விடத்திலுள்ளவர்களும் மேலாக ஏற்றுக்கொண்டார்கள். அவளுடைய ஒவ்வொரு வார்த்தையும் யாவரும் மேற்கோளாக உபயோகப்படுத்தலானார்கள். அவள் அத்தனைகாலமாக தரித்திரத்தினால் பட்ட கஷ்டமெல்லாம் அரைநிமிஷத்தில் ஒழிந்துபோயிற்று. நாதனற்ற ஏழைகளைக் காப்பாற்றுவதற்காக அவள் பட்ட கஷ்டத்தினால் அவளுக்கும் விசேஷமான நன்மை கிடைக்கும்படியாயிற்று. இந்தப் புத்தகம் பிரசுரமான நான்குமாதத்திற்கெல்லாம் அவளுக்கு இருபத்தையாயிரம் ரூபாய் கிடைத்துவிட்டது. அவளைப் புகழ்ந்தவர் பலர்; இகழ்ந்தவர் பலர். எந்த விதமாயினும் அவளுடைய பெயர் எங்கும் பிரசித்தமாகிவிட்டது. தென் அமெரிக்காவில் அடிமைகளை வாங்கி வைத்திருந்தவர்களெல்லாம் அவள்மேல் ஆக்கிரகம் கொண்டார்கள். இந்த விஷயம் ஒரு திருஷ்டாந்தத்தால் தெளிவாகும். அதாவது, ஒருவன் இதுவிஷயமாக அவளை எதிர்த்துப் பேச

லானன். "புத்தியில்லாத இவள் எழுதிய நீக்ரோ சரித்திரம் எவ்வளவு கேடுகெட்டதாயிருக்கிறதோ அவ்வளவு உலகத்தில் மிகச் சிறந்த ஏற்பாடான அடிமை வியாபாரத்தை நிறுத்தத் தொடங்கிய முயற்சியும் கேடுகெட்டதாயிருக்கிறது. மொத்தப் படித்து அவர் எழுதியதைப் பார்த்தால், கேவலம் ஒரு மூர்க்கத் தனத்தால் எழுதியதென்றே தோன்றுகிறது". என்று நிந்தித்தான்.

"மெய்யது நன்றியிடும்" என்று தெரிந்த ஸ்டோ துரைசானியும் அதற்கு ஏற்ற சமாதானங்களுடனே தானெழுதிய நூலுக்கு விளக்கமாக உரையொன்று எழுதினாள்; எல்லாம் செய்து முடிக்க 1853-ம் வரு ஏப்ரில் வரையில் சென்றது. இந்த வேலை முடிந்தவுடனே, ஸ்காத்லாந்து தேசத்தில் கிளாஸ்கோ நகரத்தில் இந்த அடிமை வியாபார சம்பந்தமாக ஒரு சங்கம் ஏற்படுத்தவேண்டுமென்று அதற்காக இவளை வரும்படி வேண்டியழைக்கவே, இவள் தன் கணவனுடனேயும், சகோதரனான சார்லஸ் பீச்சருடனேயும் அவ்விடம் போகப் புறப்பட்டாள்.

இப்படிப் பிரயாணத்திற்குச் சித்தமாயிருக்கிற தருணத்தில் லந்தன் நகரத்திலிருந்து இவளுடைய நட்பினளான பாலன் துரைசானி இவளுடைய குடும்பத்து யோகக்ஷேமங்களையும், இவளெழுதிய நீக்ரோவர் சரித்திரத்தின் வரலாற்றையும் விவரமாகத் தெரிவிக்கும்படி எழுதிய கடிதமொன்று வந்து சேர்ந்தது. அதற்கு இந்த ஸ்டோ துரைசானி ஆதிமுதல் அதுவரையுள்ள தன் குடும்பத்து வரலாறுகளையும், தான் நீக்ரோவர் சரித்திரம் எழுதும்படியான முயற்சி தனக்கு உண்டானதற்குக் காரணமாகிய எல்லாச் செய்திகளையும் வெகு அழகாக எழுதியனுப்பினாள். அதை விவரமாயெழுத இங்கிடமில்லையென்று விட்டுவிடலாயிற்று.

பிறகு அவர்கள் இங்கிலாந்து போய்ச் சேர்ந்தார்கள். அங்கே ஸ்டோ துரைசானிக்கு நடந்த மரியாதைகள் இவ்வளவு அவ்வளவென்று சொல்லிமுடியா. அங்கே நடந்த மரியாதைகளைக் கண்டு அவளே மிக்க வியப்படைந்தாளென்றால் அதன் பெருமையை நாமென்னென்று எடுத்துரைக்கக் கூடும். "மெய்மை சாற்ற வையம் ஏற்றும்" என்றபடி அங்கங்கே பெரிய சபைகள் கூடி அடிமைகளின் சங்கதியைப் பற்றி விசேஷமாகப் பேசப் போகிறார்களென்று எங்கே பார்த்தாலும் இந்தப் பேச்சுத்தவிர வேறு பேச்சுக் கிடையாது. அடிமைகளுக்குச் சுதந்தரமுண்டாக்குகிற மகோபகாரத்திற்காகக் கையொப்பம் விதிக்கப்பட்டு ஆயிரம் ரூபாய் சேர்த்து, ஸ்காத்லாந்தில் ஒரு பெரிய சங்கம் சேர்ந்தபோது அவருக்கு அளிக்கப்பட்டது.

இப்படி பணம் சேர்ப்பதாக ஒரு வித்தியாசாலையில் கூட்டம் கூடினபோது, அங்கே வந்திருந்த ஒரு குருட்டுக்கிழவியைப்பார்த்து, "இந்த உபகாரத்திற்கு இக்கிழவி ஒருத்தியன் சந்தா கொடுக்கமாட்டாள்போலும்; ஏனெனில் இப்புத்தகத்தைப் படித்து இதிலுள்ள ஸாரத்தை அறிந்துகொள்ள அவளுக்குக் கண்ணில்லையே" என்று அங்கிருந்தவர்கள் சொன்னார்கள். அதுகேட்டு அந்தக் கிழவி, "ஆம், எனக்குப் படிக்கக் கண் இல்லைதான்; ஆனாலும் என் மகன் படிக்கக் கேட்டு நான் மிக்க மனங்களித்தேன்; இதோ என் கையொப்பத் தொகை கொண்டுவந்திருக்கிறேன்" என்றாள்.

இவ்விதமாக அத்தேசத்திலுள்ளார் யாவரும் அவளை மேலாகக் கொண்டாடினார்கள். நமது சக்கரவர்த்தினியாரும் இவளிடம் நேராக வந்து பேசிப் பெருமைப்படுத்தினார். ஆயினும் இவற்றினால் சிறிதும் செருக்கடையாமல் எப்போதுமிருப்பதுபோலவே அவள் மிக்க அடக்கமும் வணக்கமுமுடையவளாகவேயிருந்தாள்.

பிறகு அவள் இங்கிலாந்து தீவுகளை விட்டு ஐரோப்பாகண்
டத்திற்குச் சென்றாள். அவ்விடத்தில் பல தேசங்களிலும்
சென்று யாவரும் மகிழும்படி செய்து வேண்டிய பொருள்
சேர்த்துக்கொண்டு வந்தாள். இப்படி அவள் ஐரோப்பாவிற்
குச் சென்றது 1853-ல். பிறகு அவள் அமெரிக்காவுக்குத்
திரும்பிச் சென்று 1857 வரையில் அடிமைகளுக்காகப் பின்
னும் அதிகமாகப் பாடுபட்டு அவர்களுக்கு நேர்ந்த இடுக்கண்
களையும் அநியாய நிர்ப்பந்தங்களையும்பற்றி மற்றொரு புத்தக
மெழுதினாள். மறுபடியும் ஐரோப்பாகண்டத்துக்குச் சென்
றதற்கு முன் தான் புத்தகத்திலே மாத்திரம் படித்திருந்
பல தேசங்களையும் நேராகப் போய்ப்பார்த்து அங்கங்குள்
அருமை பெருமைகளையெல்லாம் கண்டறிந்தாள்.

அப்பால் 1857-ம் ஆு அவள் மறுபடி அமெரிக்காவு
க்குத் திரும்பினாள். அப்பொழுது உலகமெங்கும் ஒளிபெற்
விளங்குவதாகவே அவள் கண்ணுக்குப் புலப்பட்டது. இ
படி அவள் பேரானந்தமாயிருக்கிற தருணத்தில் மிகுந்த விச
மொன்று உண்டாயிற்று. அவளுக்கு ஹென்றி என்கிற கும
ரனொருவன் பிறந்ததாகச் சொன்னோமே, அவள் அமெரிக்
வுக்குத் திரும்பிவந்தவுடனே அந்தப் பிள்ளை, படிக்கும் வி
தியாசாலைக்கு அருகிலுள்ள ஒரு ஆற்றில் ஸ்நானம் செய்
போய் அப்படியே மறுபடி எழுந்திராமல் மூழ்கிப்போ
னானென்கிற துக்கச் செய்தியைக் கேட்கும்படியாயிற்று. இ
படி நேரிட்ட புத்திரசோகத்தைவிடப் பெருந்துயரம் வேறில்
லையாயினும், எல்லாம் கடவுள் செயலென்றெண்ணித் தா
கொண்ட ஊக்கத்தைக் கைவிடாதவளாகவேயிருந்தாளென்று
அவள் அப்பொழுது தன் நட்பினளான ஒரு பெருமாட்டிக்கு
எழுதிய பெரிய கடிதத்தால் மிகத் தெளிவாக விளங்குகிறது.
அக்கடிதத்தில் அச்சிறுவனுடைய திறமை பெருமை முத

லியவை தெளிவாகக் கூறப்பட்டிருக்கின்றன. அதை யிங்
கெழுதுவதென்றால் இடங்கொள்ளாது.

அப்பால் நடந்த கதையைச் சுருக்கமாகச் சொல்வோம்.
அமெரிக்காவில் 1860-ம் ஆு வட தேசத்தாருக்கும் தென்
தேசத்தாருக்கும் உள்நாட்டுக் கலகம் உண்டாயிற்று. இதைப்
பற்றி ஸ்டோ துரைசானி சொல்வதாவது, "அத்தேசத்தார்
செய்த கொடுமைகளுக்குத் தக்க தண்டனையாக இந்தப் போர்
தெய்வசங்கற்பத்தால் உண்டானதேயொழிய வேறன்று; தென்
தேசத்தார் அடிமைகளை வாங்கி நிர்ப்பந்தித்து வதைத்துப்
பொருள்தேடுகிற விஷயத்தில் வடதேசத்தாரும் சம்மதித்
திருந்ததற்காக அவர்கள் அப்படித் தீயவழியில் தேடிய
பொருள்களையெல்லாம் போருக்கு வரியாகக் கொடுக்கும்படி
யாயிற்று; பல வருஷங்களாய் ஏழைகளை வருத்தித் துன்புறுத்
தியதற்காக அத்தேசத்தார் அனைவரும் போரில் உயிரிழக்
கும்படியாயிற்று; அந்த அடிமைப்பிள்ளைகளின் தாய்மார்
கண்ணீர்விட்டுக் கதறியதற்குக் கேள்வியில்லாமற் போனதற்
காக அவர்களைப்போலவே அத்தேசத்துப் பெண்டிரனைவரும்
கூட்டங் கூட்டமாகக் கண்ணீர்விட்டழும்படியாயிற்று; அடி
மையென்பது இல்லாத சுதந்தரமான நாடுகளிலிருந்தவர்களும்
அடிமைகள் பசிதாக முதலியவற்றால் வருந்திப் புலம்பியதைக்
கேளாமலிருந்ததற்காக அந்நாட்டாரும் பல துன்பங்களை
அநுபவிக்கலாயிற்று" என்று சொல்லுகிறாள்.

இந்த யுத்தத்திலுண்டான கொடுமையை ஸ்டோ துரை
சானி தான் நேராகவே அநுபவித்து இவ்வாறு எழுதியிருக்கி
றாள். ப்ரெடெரிக்கு என்கிற அவளுடைய சொந்த மகனே
இந்தப் போரில் வேண்டுமென்று சேர்ந்துகொண்டான். அந்
தப் போரில் அவனுக்குத் தலையில் கொடிய காயமொன்று பட்
டது. அந்தக் காயம் ஒருவாறு ஆறினது; ஆயினும் பின்பு

அச்சிறுவனுக்கு உடம்பு முன்போல ஒருபோதும் அநுகூலப் படவேயில்லை.

இந்தப் போர் முடிவானவுடனே, நல்ல காற்றுள்ள விடத்தில் போயிருந்தால் தன் மகனுக்கு உடம்பு குணமாகுமென்று எண்ணி பிளோரிடாவில் ஒரு பெரிய தோட்டத்தை வாங்கினாள்.

அவன் அவ்விடத்திலேயே பல வருஷங்களிருந்தான். பிறகு அங்கிருப்பதைவிடக் கடல்யாத்திரை செய்தால் அதிகமான சௌக்கிய முண்டாகுமென்று யோசித்து நியுயார்க்கு முதலான பல விடங்களைப்போய்ச் சுற்றிப் பார்த்துக் கொண்டிருந்தான். கடைசியில் அவன் கேப்ஹாரன் போய்ச் சேர்ந்தானென்கிற சங்கதிமாத்திரம் தெரியவந்தது. பிறகு அவனைப்பற்றி ஒரு சங்கதியும் தெரியவில்லை; அவன் என்ன கதியானானோ வென்று யாவருக்கும் பெருந்துயரமுண்டாகி விட்டது.

நாம் எதிர்பார்த்திருந்தபடியே இந்தப் போரால் வடதேசத்தாருக்கு கடவுளருளால் வெற்றியுண்டாகி அடிமைகளெல்லாம் சுதந்தரராக விட்டுவிடும்படி ஏற்பாடாயிற்று.

இந்தப் போர் முடிந்த சில நாளைக்கெல்லாம், மாரிகாலத்தில் வடநாட்டிலே வாடைக்காற்றினால் வருந்தாதிருக்கும்படி, தெற்கே மாரிகாலத்து மாளிகையொன்று கட்டிக்கொள்ளும்படி ஸ்ட்டோ துரைசானி ஆலோசித்தாள். அவ்விடத்தில் வசிப்பது ப்ரெடரிக் என்னும் துன்புற்ற தன் மகனுக்கு மிகவும் ஆரோக்கியமா யிருக்குமென்று எண்ணினாள்.

அன்றியும், அத்தேசத்திலே மிகவுந் துன்புறுத்தப்பட்டுப் பிறகு தான் உதவிபுரிந்து விடுதலைசெய்த சிறிதும் விவேகமற்றிருந்த அத்தேசத்துப் பிரஜைகளுக்குக் கல்விப்பயிற்சி செய்விக்கவேண்டுமென்று விசேஷமாக விருப்பங்கொண்டாள்.

அப்படியே அவள் தன்குடும்பத்தோடு ப்ளாரிடா போய்ச் சேர்ந்தாள். அது கடல் நீரும் ஆற்றுநீரும் பாய்கிற செழிப்பான தேசம்; அங்கே இச்சிலித் தோப்புகள் விசேஷம்; அது உஷ்ணதேசமானாலும் குளிர்ந்த கடற்காற்று வீசுவதனால் சுகமாயிருக்கும்.

இவ்விடம் விட்டு அவ்விடம்போய்ச் சேர்ந்தவுடனே, அடிமைகள் கூட்டங் கூட்டமாய் அவ்விடத்தில்போய்க் குடியேறலானார்கள்.

1867-ம் ஞு ஸ்ட்டோ துரைசானி மாண்டரீனுக்கு அருகில் வாசயோக்கியமான ஒரு வீடு வாங்கினாள். அது அக்காலந்தொடங்கி அவளுக்கு மாரிகாலத்துக்கு சந்தடி இல்லாத குளிருக்கு அடக்கமான வீடாயிற்று. அதை எவனாயினும் எப்பொழுதாவது ஒருகாலத்தில் பார்த்திருந்தால் அதன் அழகை ஒருபோதும் மறக்கமாட்டான்.

ஏகாந்தமான அந்த இடத்தில் அவ்வீடு அங்கே ஐந்து மைல் அகலமுள்ளதாய்ப் பாய்கின்ற ஸெண்டு ஜான்ஸ் என்னும் ஆற்றோரத்தில் ஏராளமான பழங்கள் நிறைந்த தோட்டங்களின் நடுவே வெகு சுகமாயிருந்தது. "பாடகக்காலி வாழ்ந்தால் பத்து எட்டுச்சனம் பிழைக்கும்" என்பதுபோல் அங்கே குடிவளம் ஓங்கி சீர்பெற்றது. அவள் தான் கோரினபடியே ஒரு பாடசாலை ஏற்படுத்தி அவ்விடத்துப் பிரஜைகளுக்கு அறிவும் விவேகமும் விருத்தி செய்துவந்தாள். அன்றியும் அங்கே ஒரு தேவாலயமும் கட்டுவித்தாள். சீக்கிரமே பல பெரிய மாளிகைகள் ஏற்பட்டுச் சிறிய ஊராயிருந்த அவ்விடம் ஒரு பெரிய நகரமாகிவிட்டது.

ஸ்ட்டோ துரைசானிக்கு விசேஷமான பிரசித்தியுண்டானது அவள் எழுதிய நீக்ரோசரித்திர மொன்றினால் மாத்திரமல்ல, அப்படியே இன்னும் இரண்டு மூன்று புத்தகங்கள் எழுதினாள். உலகத்தில் கஷ்டம் சேர்ந்தால் அதைக் கண்டு

ஒடுங்கிப்போகின்றவர் பலர்; சிலர் அவற்றால் மனந்தளராமல் அதையே ஆதாரவாகக்கொண்டு தமக்கும் பிறர்க்கும் பல நன்மை தேடிக்கொள்வார்கள். நம்முடைய துரைசானி இப்படிப்பட்டவளே. இவள் தன் அருமைக்குமாரன் இறந்ததனாலுண்டான புத்திரசோகத்தினால் சிறிதும் தளராமல், அடிமையாய்ப்போன சிறுவர்களின் தாய்மார்களுடைய துயரமும் இப்படிப்பட்டதுதானேயென்று உணர்ந்து அவர்களுடைய துயரம் தீரும்படி இந்தப் பெரிய புத்தகம் எழுதித் தனக்கும் மற்றவர்களுக்கும் வேண்டிய நன்மை தேடிக்கொண்டாள்.

அவள் கடைசியாகத் தனது 70-வது பிறந்தநாளில் அவ்விடம் விட்டுப் போயினாள். அவள் புறப்படும்போது அவளுக்கு விடை கொடுப்பதற்காக அந்நகரத்திலும் அண்டையயல்களிலுமுள்ளவர்களனைவரும் வந்துகூடி அவளுக்குச் சுபவசனம் சொல்லி வாழ்த்தி வழிவிட்டார்கள். இருப்புப்பாதைவண்டி போகும்போது அவ்விடத்தில் அனைவரும் வந்து கூடினார்கள். வரக்கூடாதவர்களெல்லாம் சுபவசனம் சொல்லிப் பத்திரிகை யெழுதி யனுப்பினார்கள். அப்பொழுது அவள் அங்குவந்து கூடியவர்களை நோக்கிச் சொல்லியதாவது: "நண்பர்களே, உங்கள் அனைவருக்கும் நான் வந்தனம் செலுத்துகிறேன்; இதைத்தவிர வேறென்ன சொல்லப்போகிறேன்; ஆனாலும் ஒன்று; அதென்னவெனில், உங்களுக்கு ஏதேனும் சந்தேகமுண்டானாலும், கஷ்டங்களாயினும் துக்கங்களாயினு முண்டானாலும் அப்படிப்பட்ட காலங்களில் கடவுளுடைய செய்கைகளை நினைத்துக்கொள்ளுங்கள். அடிமைகள் பட்ட கஷ்டங்களைக் கடவுள் எவ்விதமாக விலக்கினார் யோசித்துப் பாருங்கள். முன் அடிமைகளாயிருந்தவர்களெல்லாரும் இப்பொழுது சுதந்தரர்களாகி மிகுந்த தனிகர்களாய்ச் சுகமனுபவித்து வருகின்றனர்; இது நேரில் கண்ணாரக்கண்ட விஷயம். ஆதலால் நமக்கு நேரிடுகிற கஷ்டங்களைப் பார்த்துப் பயந்து மனஞ்சோரலாகாது; "அவன் அருள் உற்றால் அனைவரும் உற்றார்" என்று முதுமொழியுண்டு. தெய்வச்செயலால் எது நடக்கவேண்டுமோ அது நடந்துதான் தீரும்; ஆயின் கடவுள் நம்மை ஒருபோதும் கைவிடார்" என்று சொல்லி முடித்தாள்.

ஸ்டோ துரைசானி இவ்வுலகத்து வியாபாரங்களில் பிரவேசிப்பது இவ்வளவோடு நின்று போயிற்று. ஆயினும் அவள் இன்னும் இவ்வுலகில் புகழுடம்புபெற்று வாழ்ந்துகொண்டிருக்கிறாள்.

1886-ல் அவளுடைய கணவனான ஸ்டோ பண்டிதர் இறந்துபோனார். 1887-ம் வருஷம் அக்டோபர் மீ 1௨ அவள் தன்னுடைய சகோதரனான பீச்சருக்கு ஒரு கடிதமெழுதினாள்; அதின் முக்கியமான விஷயமாவது:

"அண்ணா! உமது கடிதம் சேர்ந்து சந்தோஷமாயிற்று. ஆதியில் நாங்கள் நீர் எழுதிய கடிதங்களால் நல்ல விவேகம் பெற்று முன்னுக்கு வரலானோம். அப்பொழுது என்னுடனிருந்தவர்களெல்லாரும் கடவுளிடம் போய்ச் சேர்ந்தார்கள். அந்தக் கூட்டத்தில் இப்பொழுது நானொருத்தியே ஜீவித்திருக்கிறேன். எனக்கு இரண்டுபிராயம் இளவனான ஹென்றியும் போய்விட்டான்; என் கணவனும் கடவுளடிசேர்ந்தார். அப்படியிருக்க என்னைமாத்திரம் ஏன் இன்னும் உயிரோடு வைத்திருக்கிறாரோ தெரியவில்லை; இன்னும் ஏதாவது நான் செய்யவேண்டிய காரியம் மிகுதியாயிருக்கின்றதோ என்னவோ? என் வாழ்நாளின் சரித்திரத்தைச் சுருக்கமாயெழுதி வைக்கும்படி என் மகனைக் கேட்டுக்கொண்டேன்; அதற்கு அவன் முன்னமே எனது பதின்மூன்றாவது வயதுவரையில் எழுதிவைத்திருப்பதாகச் சொன்னான். இனி நாம் எப்பொழுதும் மனத்தில் மாசில்லாதவர்களாயிருக்கக்கடவோம். நமக்கு ஒருகாலும் துன்பம் நேரிடாது." நாம் ஏதேனும் பாவம்

செய்திருந்தால் கடவுள் அதை மன்னித்து நம்மைக் காப்பாற்றக் காத்திருக்கிறார்" என்று எழுதியனுப்பினாள்.

கடைசியாக அடிமைகளைப்பற்றி இரண்டொரு மொழி சொல்லி இதை முடிப்போம். அடிமை வியாபாரமென்பது அப்பொழுது ஆப்பிரிக்கா தேசத்தில் நன்றாக அடிநூன்றி யிருந்தது. அங்கே பேதை ஜனங்கள் வசிக்குமிடங்களில் அரேபியர்கள் போய் அவர்களை அடிமைகளாகப் பிடித்துக் கொண்டுபோய்ச் சிலரை அங்கேயே விற்றுப்போடுவார்கள்; பலரைக் கப்பலேற்றித் தூரதேசங்களுக்கு வர்த்தகச் சரக்குபோல் அனுப்பிவிடுவார்கள். அவர்கள் இப்படிச் செய்வது கேட்டு இக்கொடுஞ்செய்கைகளைத் தடுக்க ஐரோப்பியர் தலைப்பட்டார்கள். முக்கியமாக ஆங்கிலேயர் விசேஷமாகப் பாடுபட்டு வருகிறார்கள். அடிமைகளை ஏற்றிச்செல்லும் கப்பல் ஏதாவது கண்ணில்பட்டால் அதை அப்படியே எதிர்க்கச் சித்தமாயிருக்கின்றனர். இவ்விதமாக அடிமை வியாபாரத்தை அவர்கள் அனேகமாக அடக்கி மனிதர்களுக்குச் சுவாதீனமுண்டாக்கி யிருக்கிறார்கள். அடுத்து அடுத்து சொன்னால் எடுத்த காரியம் முடியுமல்லவா.

முற்காலத்தில் ஜான்ஜிபாரில் அடிமைகளை விற்கும் கடையொன்றிருந்தது. அவ்விடத்தில் ஆணும் பெண்ணும் குழந்தைகளுமாய் அநேகம் அடிமைகள் விற்பனைக்கு வந்திருந்ததையும், அவர்களை வாங்க வருபவர்கள் ஆடுமாடுகளைப் பிடித்துப்பார்ப்பதுபோலப் பிடித்துப் பரிசைபார்த்து விலைக்குக்கொண்டதையும் அவ்விடம்சென்ற பலர் நேரில் கண்டிருக்கிறார்கள். 35 வருஷங்களுக்குமுன் அப்படி கோரவியாபாரம் நடந்த கடை இப்பொழுது யாவரும் கடவுளைத் துதித்து வந்தனம்செய்கிற ஒரு தேவாலயமாயிருக்கிறது.

CHARLOTTE BRONTË.

1816-1855.

ஷார்லெட் ப்ரோந்தியாள்.

"ஷார்லெட் ப்ரோந்தியாள் என்பவள் யார்?" என்று இதை வாசிப்பவர்கள் கேட்பதுபோல் நமது காதில் படுகின்றது. 'அவள் இங்கிலாந்து தேசத்து வடபாகத்தில் பனியும் குளிரும் மிகுந்த நாட்டில் தன் தகப்பனுடனும் சகோதரிகளுடனும் ஏகாந்தமாக வாசம்பண்ணிக் கொண்டிருந்து, கற்பனை கதைகள் பல எழுதிய ஒரு பெண்மணி' என்று சொன்னால் 'அவ்வளவேதானா' [illegible]

களுடைய கேள்வி அடங்கியதாவென்றால், இல்லை. அதற்கு
மேலும் அவர்கள்—"யாரோ ஒரு மேனாட்டுப் பெண்ணினது
கதையை இந்துதேசத்தில் எங்களுக்குச் சொல்வதனால்
என்ன பிரயோஜனம்? அவளுடைய வாழ்க்கையும் வழக்க
மும், எங்களுடைய வாழ்க்கைக்கும் வழக்கத்திற்கும் எப்படி
ஒத்திருக்கும்" என்று மறுபடி கேட்பதுபோல் கர்ணபரம்
பரையாகக் கேள்விப்படுவதனால் அதற்கும் ஸமாதானம்
சொல்லுகிறோம். அவளுடைய சரித்திரத்தைப் படிப்பத
னால் சில உண்மைகள் விளங்கும். அவையாவன:—குளிர்
மிகுந்த மேல்திசை நாடானாலும், உஷ்ணம் மிகுந்த இந்து
தேசத்தின் தென்திசை நாடானாலும், ஒரேவிதமான வருத்
தங்களும், விசனங்களும் சோதனைத் தோற்றங்களும் அங்கே
யெப்படியோ அப்படியே யிங்கும் நமக்கு நேருமென்பது
ஒன்று. ஷார்லெட் ப்ரோந்தியாருடைய மாசற்ற பாரபக்தி
யும், பொறுமையும், தீரமும், உழைப்பும் ஆகிய குணசம்பத்
தானது, உடன்பிறந்தவர்களையும் மித்திரர்களையும் இழந்து
வகொண்பார் இல்லாதவர்களாய்த் தனிமரம்போல்நிற்கும் இந்
துதேசத்துப் பெண்கள் பலருக்கு நல்லொழுக்கத்தைப் புகட்
டும் சஞ்சீவிபோலாகும் என்பது மற்றொன்று. தீயவழிகளில்
செல்பவர்களுடைய வாழ்க்கை இத்தன்மையதாகுமென்று
அறிய இது அனேககாரணமுமாகலாம்.

இந்தக் கதையால் மற்றொரு பயனும் விளையும். கடவுள்
கடாக்ஷத்தால் கல்வி கேள்வியாகிய கருந்தனம் கிடைத்து
நூல் இயற்றும் திறமையடைந்த குலப்பெண்கள் தமக்கும்
தமது குடும்பத்தாருக்கும் உதவியாகும்படி புத்தகம் எழுதிப்
பிரகாசப்படுத்துவது ஸ்திரீ ஜாதிக்குத் தகாத காரியம் என்று
இந்தத் தேசத்தில் தூஷிப்பவருடைய மூடத்தன்மையும் மதி
மோசமும் அநேகமாக நீங்கும். ஷார்லெட் ப்ரோந்தியா
ருக்கு அமைந்திருந்த சாமர்த்தியம், யாவரும் மகிழ்ந்து

- 155 - . 278

விரும்பத்தக்க புதுமையான கதைகளைக் கற்பிக்கும் சக்தி
ஒன்று மாத்திரமல்ல; அந்தப் பெண்மணிக்குப் பாகசாலையில்
யோக்கியமான சமையல் செய்யும் திறமையும், அழகான சித்
திரப் பூத்தையல் வேலைசெய்யும் கைப்பழக்கமுமுண்டு. இவள்
தேகசுத்தியும் வஸ்திரசுத்தியும் திட்டமான நடையுடை பாவ
னையும் உடையவளாகி, ஸ்திரீகளுக்கு அவசியமான நாணம்
மட மச்சம் பயிர்ப்பு என்னும் நான்குகுணங்களும் நிறைந்து,
பிறர் கண்ணில் படாமல் வீட்டிலேயே தானும் தன் பாடுமாயி
ருந்த பெண் சிரோமணியென்று அறிக. இவள் வாழ்நாட்களை
யெல்லாம் விசனத்துடனே கழித்தவள். ஏழைக் குடும்பத்
தில் பிறந்தவள். இவளும் இவள் சகோதரிகளும் இடகாத்
திரமுள்ளவரல்லர்; சிறு பிராயத்திலேயே தாயை இழந்தவர்
கள். குடியிருந்த நாட்டுப்புறமோ அவலக்ஷணமானது; கடுங்
காற்றும் குளிரும் மிகுந்த வெட்டவெளியான குடிவளம் குன்
றிய பாழூர் என்று சொல்லலாம். இவளுக்குச் சகோதரிகள்
உண்டென்பது மெய்தான். ஆனாலும் அவர்களது இளம்பரு
வம் நகைமுகத்தோடும் மனக்களிப்போடும் கழிந்த ஆனந்த
மான காலமல்ல; வேடிக்கையாக விளையாடும் விடுமுறை நாட்
களை அவர்கள் கண்டவரல்லர்; கடலோரங்களுக்குச் சென்று
தனிகர்கள் அடையும் ஆனந்தத்தையும் பெற்றவரல்லர்; கன
வான்கள் குடும்பங்களில் பந்துமித்திரர்கள் அடிக்கடி விருந்து
செய்து கூடிக்குலாவிச் சந்தோஷிக்கும் ஆயிரக்கணக்கான
பிள்ளைகளைப்போலக் களிக்கும் தருணங்களும் இவர்களுக்கு
நேர்ந்ததில்லை. நாட்கள் செல்லச் செல்லத் துன்பமே மிகுந்து
அதிஷ்டமில்லாத ஜீவகாலமாகவே இருண்டிருந்தது. அந்த
இருள்நீங்கி வெளிப்பட்டதில்லையோவென்றால், சென்றகாலத்
தைவிட நிகழுங்காலத்தில் அவ்விருள் கனத்துக்கொண்டே
அள்ளிருளாகப் பொலித்தது. அந்த ஏழைப்பெண் இவற்றை
யெல்லாம் எப்படி சகித்தாள்? என்னசெய்தாள்? என்று கேட்

பீரோ? அடுத்துவரும் சரித்திரத்தைப் படித்தால் அவள் செய்ததை விளங்கும். அவள் மனோதிடமற்று நிராசையாக ஒருபோதும் ஏக்கமுற்றிருக்கவில்லை. நான் என்று தன்னுடலின் அபிமானம் கொள்ளாமலும், தன்னுடைய இன்பதுன்பங்களைப் பாராட்டாமலும், தான் பிறந்த குடும்பத்திற்கும், உடன்பிறந்த சிறுவர் சிறுமிகளுக்கும், வறுமையாலும் நோயாலும் வருந்துகிற அண்டை அயலாருக்கும் உதவியாகப் பிறர் கருத்துக்கு உடன்படும் புண்ணிய பலத்தை நாடினாள். அதிர்ஷ்டமென்பது தன் பங்குக்குச் சாருப்பொருளாயிற்றேயென்று துக்கப்பட்டுக்கொண்டு அவள் ஒருபொழுதும் பெருமூச்செறிந்து மனஞ்சோர்ந்து சோம்பினவளல்லள். நாள்தோறும் தப்பாமல் தன் மனோவிருத்தியை நாடிக் கடவுள் கொடுத்த புத்திவைபவத்தைப் பெருக்கிக்கொண்டே வாழ்நாள் வீணாள் ஆகாமல் உழைத்துவந்தாள். தினந்தோறும் சமையல் செய்வதும், வீட்டுக்கடுத்த அவசியமான தையல்வேலை முதலான தொழில்களை நடத்துவதுமன்றி, கல்விப்பயிற்சி எழுதும் பயிற்சிகளையும் விடாமல் செய்து வந்தாள். கேளுங்கள்! தகப்பன் சகோதரன் முதலானவர்களுடைய சகாயமும் தூண்டுதலும் சிறிதும் இல்லாமலே இவள் இவ்வளவு காரியமும் நிறைவேற்றினவள். ஒருவர் கையுதவியைத் தேடாமலும் பிறரைப் பிடிக்காமலும் தன் முயற்சியாலேயே காரியசித்தி பெற்றவள். இப்பொழுது இவளுடைய ஜீவகாலம் முடிந்துபோய் விட்டும், இருளடைந்த எத்தனையோ வீடுகளில் இவளுடைய ஜீவசரித்திரம் நிலாவெளிச்சம்போல் பிரகாசித்துத் தேறுதல் உண்டாக்குகின்றது. அது இந்துதேசத்திலும் பரவி ஒளிவீசத் தலைப்பட்டிருக்கின்றது. துயரமடைந்து உதவியில்லாமல் தனிமையாக நிற்கும் தருணங்களில் இந்துஜாதிப் பெண்களும் ஸ்திரீகளும் தமக்குத் தாமே மனோதைரியமும் மலர்ந்தமுகமுங்கொண்டு, ஷார்லெட்

ப்ரோந்தியாள் சரித்திரத்தில் விளங்குவதுபோல், தத்தம் நித்தியமான கடமைகளைக் குறைவின்றிச் செய்து வரக்கற்கலாமே. "நாளுண்டு ஆகிலும் கல்வியை நோக்கு" என்றபடி அவளையே மேல்வரிச் சட்டமாகக்கொண்டு அமரிக்கையான பாடசாலைகளிலும் வீடுகளிலும், அவரவருக்குக் கடவுள் கருணையோடு அளித்த புத்தி சக்திகளையும் சாமர்த்தியங்களையும் பண்படுத்திக் கல்வி விருத்திசெய்து தமக்கும் அன்னியருக்கும் பயன்தரும்படி செய்துகொள்ள வழிதேடக் கூடாதா? அவளைப்போல் தமது வீட்டுக்கு அடுத்தவிடங்களில் நோய்கொண்டு வருந்தும் ஏழைகளுக்குப் பக்ஷத்தோடு இயன்றவரையில் உதவிசெய்து தருமசீலராய் இருக்கலாகாதா? ஒருவேளை தமது குடும்பத்திலேயே நல்வழி தவறிக் கோரமான செய்கைகளை யாராவது செய்யப்பார்த்தால், கடிந்துபேசித் திட்டாமல் நன்மொழிபகர்ந்தே சாந்தகுணத்துடன், குற்றமற்றதாகிய தன் வழிக்கே திரும்பச்செய்து, கண்ணை இமை காப்பதுபோல் காப்பாற்றலாகாதா?

ஷார்லெட் ப்ரோந்தி என்பவள் அங்கிலேய பாஷையில் விசித்திரமான பல கற்பனைகதைகளெழுதிய சிறந்த கவிசிரோமணியாம். அவள் வெகுவாகத் தன் வாழ்நாள் முழுமையும் இங்கிலாந்து தேசத்தின் வடமேற்குக் கோடியில் மனித சஞ்சாரமற்ற காடு அடர்ந்த குளிர்த்தேசமாகிய யார்க்ஷயர் என்னும் மாகாணத்தின் ஓரத்திலிருக்கும் ஹாவர்ட் என்கிற சிறு கிராமத்தில் வசித்திருந்தவள். யார்க்ஷயர் மாகாணத்தில் மேலண்டைப்புறத்திலுடைய சீதோஷ்ண ஸ்திதி இத்தன்மையதென்று மனத்தினால் ஊகித்தறிந்துகொள்ளக்கூட இதைப் படிப்பவர்களுக்குச் சாத்தியமானதன்று. இங்கிலாந்தின் தென்கோடியில், காண்போர் களிக்கத்தக்க இனிய காட்சியுள்ள டெவன்ஷயர் முதலான இடங்களில் வசிப்பவர்களுக்குக்கூட, வடகோடி காடுகளிலுள்ள குளிர்ச்சி இத்தன்

மையதென்று சொன்னால், உடல் நடுங்கி மயிர் சிலிர்க்கும். ஆயினும், ஒருவனுடைய நடையுடை பாவனை முதலிய குணாதிசயங்கள் இத்தன்மையனவென்று நாம் அறிந்து கொள்ளவேண்டுமானால், அவன் வளர்ந்தவிடம் இத்தன்மையதென்பதை நாம் நன்றாகத் தெரிந்துகொள்ளவேண்டியது அவசியம். இங்கே நாம் சொல்லப்போகிற பெருமாட்டியின் தந்தையான பாட்ரிக் பிரோந்தி என்னும் மதபோதகர், மிகவும் நுட்பமான சரீரமுள்ள தனது பாரியாளுடன், ஐந்து பெண்குழந்தைகளையும் ஒரு ஆண்குழந்தையையும் அழைத்துக்கொண்டு யார்க்ஷையரின் மற்றொரு புறத்தினின்றும் 1820-ம் ௵ பெப்ருவரி ௴ இந்த ஹாவர்ட்டு என்னும் கிராமத்திற்கு வந்துசேர்ந்தார். அவருடைய பாரியாள் இங்கிலாந்தின் தென் பாகத்தில் பிறந்து வளர்ந்தவள். குன்று மேலிட்ட விளக்கைப்போலிருந்த இந்த ஷார்லெட் ப்ரோந்தியின் பெருமையினாலேயே இப்பொழுது ஹாவர்ட்டு என்னும் சிறிய கிராமத்திற்குப் பிரசித்தியுண்டாயிருக்கிறது.

ஹாவர்ட்டு கிராமத்தில் இந்த மதபோதகருடைய சிறு குழந்தைகள் வளர்ந்தவிடம் கஷ்டமான ஒரு மடம். இக்குழந்தைகளெல்லாரும் மிகுந்த அடக்கமும் பழைய மாதிரியான நடையுடைகளும் உள்ளவர்களானாலும், மிகுந்த சாமர்த்தியமுடையவர்கள். அந்தக் கிராமம் செங்குத்தான ஒரு குன்றின்மேல் கட்டப்பட்டது. அதில் இந்த மதபோதகர் வசிக்கும் மடம் அக்குன்றின் கீழ்ப்புறத்தை நோக்கியதாக நிருமிக்கப்பட்டிருந்தது. அந்த மடத்தைச் சுற்றிலும் தோட்டமும் ஒன்றுண்டு. அந்த மடம் இரண்டடுக்குவீடு. ஒவ்வொரு அடுக்கிலும் நான்கு அறைகளுண்டு. அந்த வீட்டு வாயிலுக்கு இடது புறத்தில் இருந்த அறை அந்தக் குடும்பத்தார் எல்லோரும் கூடி உட்காருமிடம். அதிலேதான் பிற்காலத்தில் ஷார்லெட்டும் அவளது இரண்டு சகோதரி

களும், தீவெளிச்சத்தில் ஒருவரோடொருவர் இனிப்பாகப் பேசிக்கொண்டும், தாங்கள் எழுதிய கற்பனை கதைகளில் ஒரு பாகத்தை யெடுத்துப் படித்துக்கொண்டும் உலாவிச் சஞ்சரித்தார்கள். வலதுபுறத்து அறையோ, ப்ரோந்தி யென்பவர் படிக்குமிடம். அந்த அறைக்குப் பின்புறத்திலிருப்பது சமையலறை. உட்காரும் அறைக்குப் பின்புறத்திலுள்ளது ஒருவகைச் சாமான் வீடு. மேல்மாடியிலும் இதே அளவுள்ளவையான நான்கு அறைகளுண்டு. இவை நான்கும் படுக்கையறைகளாம். வழியின் மேற்பாகத்தில் சிறிய அறை ஒன்று உண்டு. அதற்குக் குழந்தை வளர்க்கும் வீடென்று பேர்வைத்திருந்தார்கள். யோசித்துப்பார்த்தால், அதைக் குழந்தைகள் வீடென்று சொல்லவே கூடாது. அந்தக் குளிர்ச்சீமையில் முக்கியமாகக் குழந்தைகளிருக்கு மனையில் அவர்களுடைய சௌக்கியத்திற்காக கும்பியிடு சட்டிபோல் ஓயாமல் தீ எரிந்துகொண்டேயிருக்கவேண்டும்; குழந்தைகள் வைத்து விளையாட விளையாட்டுக்கருவிகளும் பல இருக்கவேண்டுமல்லவா? அப்படிப்பட்டவையொன்றும் அவ்விடத்திலில்லை; அவ்விடத்து வேலைக்காரர்கள் அதைப் பிள்ளைகளின் படிப்பறை என்றேவழங்கி வந்தார்கள். சிறு குழந்தைகள் வளரும் அறையைப் படிப்பறையென்றால், அது எத்தன்மையதாயிருக்குமோ யோசித்துப் பாருங்கள்! அவர்களில் மூத்தபிள்ளையின் வயது ஏழே ஏழுதானும்.

ப்ரோந்தியின் குடும்பத்துச் சிறுவர்களுக்குக் குழந்தைப் பருவம் கழிந்தவிதம் இத்தன்மையதென்று இதனாலேயே நன்றாக விளங்குகிறதன்றோ? மற்றக்குழந்தைகளின் சிறுபிராயம் போலன்றி இக்குழந்தைகளின் சிறுபிராயம் முற்றும் வேறு விதமாயிருந்தது. இவர்கள் இந்தக் கிராமம்போய்ச் சேர்ந்தவுடனே, மிகவும் நுட்பதேக முடையவளாகிய தாய்க்கு வரவரத் தேகசௌக்கியம் குறைவுபட்டுக்கொண்டு வந்தது. கடை

யில் ஏதோ ஒரு பொறுக்கக்கூடாத வியாதிகண்டு அவள் தன் அறையைவிட்டு வெளிப்படாமல் அதிலேயே யிருந்தாள். அவள் ஒருபொழுதும் தன் குழந்தைகளை அண்டையில் அழைத்து ஆநந்தமடைந்ததாகத் தெரியவில்லை; ஏனெனில், குழந்தைகளை அதிகமாய்த் தன்னண்டை யழைத்துச் சீராட்டத் தலைப்பட்டால், பிறகு அவர்களைவிட்டுப் பிரியும்போது மனதுக்கு அதிகமான கிலேச முண்டாகுமே யென்று பயந்திருந்தாள்போலும். அதற்கேற்றபடி அக்குழந்தைகளும் தாய்க்கு உடம்பு சொஸ்தமில்லையேயென்று வீட்டில் சிறிதும் சந்தடிசெய்யாமல், ஒன்றோடொன்று சேர்ந்துக் கட்டிக்கொண்டு எங்கேயாவது ஓரிடத்தில் அடங்கியாயிருக்கும். அத்தருணத்தில் அச்சிறுவர்களுக்கு முகத்துக்கு முகம் கண்ணாடியாயிருந்தது. அவர்களுடைய தந்தைக்கும் அக்குழந்தைகளைப் பார்க்க ஒழிவில்லை; அவருக்கு மதபோதனை செய்யும் வேலையே விசேஷமாயிருக்கும். ஒழிந்தகாலத்தில் நோயாளியான பெண்சாதிக்கு வேண்டிய உபசாரம் செய்கிற வேலையிலிருப்பார். அக்குழந்தைகள் நாள்தோறும் தனியாகவேயிருந்து போஜனம் செய்யும். மற்றக்காலத்தில் படிப்பறையில் உட்கார்ந்து படித்துக்கொண்டாவது, காதோடு காது வைத்து மிகவும் மெதுவாய்ப் பேசிக்கொண்டாவது இருக்கும். இல்லாவிட்டால் ஒன்றோடொன்று கைகோத்துக்கொண்டு மலையோரத்திலே போய்த் திரிந்து விளையாடும். ஷார்லெட் ப்ரோந்தியின் சரித்திரமெழுதினவருக்குச் சங்கதிகள் தெரிவித்த ஒருவர் இதைப்பற்றிச் சொல்லியிருப்பதாவது, "அப்பொழுது அந்த வீட்டில் குழந்தைகளிருந்ததாகவே தெரியவில்லை; அப்பிள்ளைகள் அப்படிச் சிறிதும் சந்தடிசெய்யாத அடக்கமுள்ள நல்ல குழந்தைகளாயிருந்தனர். அவர்களில் மூத்தபெண்ணான மெரியா என்பவள் கையில் சமாசார பத்திரிகையை வைத்துக்கொண்டு படிப்பறைக்குள்ளேயே

உட்கார்ந்திருப்பாள். பத்திரிகை முழுமையும் படித்துவிட்டு வெளியேவந்து பார்லிமெண்டு சபையில் நடக்கும் பலவகை வியவகாரங்களையும் இன்னும் பலசங்கதிகளையும் மற்றவர்களுக்கு எடுத்துச் சொல்லுவாள். மற்றப்பிள்ளைகளிடத்தில் அந்த மூத்தமகள் தாயைப்போல அத்தனை பிரீதியாக நடந்துவந்தாள். தேனும் பாலும்போல் இணங்கியிருந்த அவ்வளவு நல்ல குழந்தைகளை நான் ஒருபோதும் கண்டதேயில்லை; சிறிதும் சுறுசுறுப்பில்லாதவர்களென்றே அவர்கள் நினைக்கத்தக்கவராயிருந்தார்கள். அப்பிள்ளைகள் எல்லோரும் மிகுந்த நல்லசுபாவ முடையவர்கள். அவர்களுள் அழகிலே சிறந்த பவளக் கொடிபோல் எமிலி என்பவள் பெண்ணழகியாயிருந்தவளாம்.

அவர்களுடைய தந்தையான ப்ரோந்தியானவர் மிகுந்த வலிமையும் அழகுமுள்ளவரும் கோபக்காரருமான ஐயர்லாந்து தேசத்தவர். அவர் தன் குழந்தைகள் படும் கஷ்டத்தையும், பெரியோர் துணையில்லாமல் குழந்தைகள் தனிமையாகத் தவிக்கும் தவிப்பையும் சிறிதும் தெரிந்துகொள்ளாதவராகவேயிருந்தனர். அவர் அதிக வேகமாக நடப்பவர். பிரகிருதியிலுள்ள விநோதங்களைப் பார்த்துக்கொண்டே அங்குள்ள காட்டில் நடந்துபோவார். உள்ளூர் வியவகாரங்கள் ஏதேனும் அவரிடத்திற்கு வருமானால், அவர் புத்திக்கு எது நேராகத் தோன்றுகிறதோ, அந்தக் கக்ஷியையே மூர்க்கமாகப் பிடிக்கும் சுபாவமுடையவர். அதனால் அவ்வூராரில் சிலருக்கு அவரிடத்தில் சிலவேளை நல்ல அபிப்பிராயமில்லாமல் வெறுப்புண்டாவதுண்டு. அக்காலத்தில் அங்கிருந்த யந்திரத்தலைவர்களுக்கும் யந்திரவேலைக்காரர்களுக்கும் அதிக மனஸ்தாபமுண்டாயிற்று. பஞ்சும் நெருப்பும்போல் விரோதப்பட்டிருந்தனர். இந்த விஷயம் பிற்காலத்தில் அவர்கள் எழுதிய கதைகளில் விசேஷமாகச் சிறப்பித்துக் கூறப்

பட்டிருக்கிறது. இந்த ப்ரோந்தியானவர் அப்போது யந்திர வேலைக்காரர்களுக்கு விரோதமாயிருந்தார். அந்த வழக்கம் அவர் சாகுமளவும் நீடித்திருந்தது. அதனால் அவர் எங்கே போனாலும் கையோடு துப்பாக்கியும் கொண்டுபோகவேண்டியதாயிருந்தது. எப்பொழுதும் துப்பாக்கி அவருடைய மேஜைமேலேயே சித்தமாக வைத்திருக்கும்" என்பதாம்.

அப்படியிருக்க அவர் 1821-ம் ஆண்டு இறந்துபோயினார். வெளிப்படாமல் உள்ளேயே அடைந்துகிடந்த அம்மக்களுடைய வாழ்க்கை, அதன்பிறகு பின்னும் அதிகமான அடக்கமுடையதாகித், துணை யாருமில்லாத தனிவாழ்க்கையாகிவிட்டது. அவர்களுக்கு நாடும் செடியும் அவராகவே தோன்றியிருந்தவராகையால் அவர் போனபிறகு இனி என்னவென்று சோர்ந்திருந்தனர்.

இந்த ப்ரோந்தியார் உணவு விஷயத்தில் எப்பொழுதும் அதிக ஜாக்கிரதையாயிருப்பவர். அவர் ஒருபொழுதும் அவபத்தியஞ்செய்வதில்லை. மட்டான போஜனம் மனதிற்கு மகிழ்ச்சி என்று நினைத்து அவர் ஒருவருடனும் சேராமல் தனியாகவே உணவு ஏற்றுக்கொண்டு வந்தார். எப்பொழுதும் தனியாயிருப்பதே அவருக்கு அதிகமாகப் பழகிப்போனதினால், அவர் உலாவ வெளியே போகும்பொழுதும், மற்றக் காரியங்கள் செய்கையிலும் தமக்குத் துணை ஒருவரையும் தேடுவதேயில்லை. ஒவ்வொரு சமயங்களில் ஆலய சம்பந்தமான காரியத்தைப்பற்றிச் சிலர் வருவார்கள். அண்டையயல் கிராமங்களிலுள்ளபோதகர்களும் சிலசமயம் அவ்விடம் வருவதுண்டு. இவர்கள் தவிர அவர்களுக்குப் பேச்சுத்துணை மற்றொருவரும் கிடையாது. அந்தப் போதகர்களுடன் அவர்களுடைய பெண்டாட்டி பிள்ளைகளாவது அவ்விடம் வருவார்களோவென்றால், அது வெகு தூரமான இடமாகையால் அவ்வளவு தூரம் நடந்துவர அவர்களாலாவதில்லை. அதனால் இச்சிறுமிகளுக்

குக் கூடிக்கலந்து விளையாடச் சரிவயதான சிறுமிகளுமில்லை; கூடப்பழக வயதான ஸ்திரீகளுமில்லை. ஆனால் இச்சிறுமிகள் எல்லாரும் ஒருவரைவிட்டு ஒருவர் பிரியாமல் காந்தம் இழுத்த ஊசியைப்போல் எப்பொழுதும் ஒன்றாய்க் கூடியே வாழ்ந்துகொண்டிருந்ததனால், துணை ஒருவருமில்லையே என்கிற விசாரம் அவர்களுக்குச் சிறிதுமில்லாமலிருந்ததாகவே தெரியவருகிறது.

அவர்கள் வீணான கட்டுக்கதைப் புத்தகங்களை அதிகமாகப் படிப்பதில்லை; சமாசார பத்திரிகைகளையே விசேஷமாகப் படித்து வந்ததாய்த் தெரியவருகிறது. அவர்களுள் மூத்தமகளான மேரியா என்பவள் ஏழுவயதாயிருக்கையிலே, அக்காலத்து முக்கியமான வர்த்தமானங்கள் எல்லாவற்றையும் தட்டுத்தடையின்றித் தன்னுடன் எடுத்துப் பேசிக்கொண்டிருந்ததாக மேஸ்தர் ப்ரோந்தியார் சொல்லியிருக்கிறார். அன்றியும் தான் மறைவாயிருக்கையில் அச்சிறுமிகள் ஒருவருக்கொருவர் நியாயமெடுத்துப் பேசும் சம்பாஷணைகளைக் கேட்டுத் தம்மக்களுடைய அறிவு மிகவும் அற்புதமானதென்று அவரே அதிசயித்திருக்கிறார். இது அவர்கள் மிகச் சிறுவர்களாயிருக்கையிலே நடந்த புதுமையாம்.

இந்த ப்ரோந்தியார் இறந்த ஒருவருஷத்திற்குப் பிறகு அம்மக்களுடைய பெரிய தாயார், ஒருத்தி இங்கிலாந்தின் தென்பாகத்திலிருந்து இந்தக் குடும்பத்தையும் குழந்தைகளையும் பாதுகாக்கும்படி அவ்விடம் வந்து சேர்ந்தாள். பழங்களும் பூக்களும் நிறைந்த அழகான தோட்டங்களும் தோப்புகளுமுடைய சுகமான தென் நாட்டைவிட்டு மிகக்கொடிய குளிர்ச்சிமையான இந்த வடநாட்டிற்கு வந்தபோதே அவளுடைய தேகசௌக்கியத்தில் அதிகமான வித்தியாசம் காணப்பட்டது. கடைசியாகத் தனக்குக் குளிர்காய்ச்சலுண்டாகுமென்னும் அச்சத்தினால், தன் படுக்கையறையிலேயே அவள்

வெகுவாகக் காலங்கழிக்க ஆரம்பித்தாள். அவள் போஜனஞ்செய்வதுகூட அந்த அறைக்குள்ளேதான். அதனால் நாலிடத்திலும் ஓடியாடி விளையாடுவதற்கில்லாமல் அந்தக் குழந்தைகள் தங்களுக்கு ஏற்பட்டிருக்கும் சொற்பமான விடத்திலேயே எல்லாம் செய்யவேண்டியதாயிற்று. அப்படியிருக்கையிலும் பெரிய தாயார் அப்பெண்களுக்குத் தையல் வேலையும், வீட்டுவேலைகளும் கற்பித்துக் கொடுத்தாள். அதில் ஷார்லெட் ப்ரோந்தியாள் எப்பொழுதும் "கண்டதைக் கற்கப் பண்டிதராவார்" என்றபடி மிகச் சுறுசுறுப்பாகக் கற்று வந்தாள்.

பிறகு சிலகாலைக்கெல்லாம் பள்ளியில் படிக்கும்படி நான்கு பெண்களை வெளியே அனுப்பிவிட்டார்கள். அந்தப் பள்ளிக்கு அவர்களை யனுப்பியது ஷார்லெட் ப்ரோந்தியாளுக்குக் கடைசியில் அதிக பிரயாசையாக முடிந்தது. அந்தப் பாடசாலை மிகவும் அசௌக்கியமானதாகத் தோன்றியது. அங்கே அவர்களுக்குக் கிடைத்த உணவு நன்றாகச் சமைக்கப்படாமல் கெடுகெட்டதாயிருந்தது. மூத்த மகளான மெரியாவுக்கு அது சிறிதும் ஒத்துக்கொள்ளாமல், அவளுக்குத் தேகசௌக்கியம் குறைய ஆரம்பித்தது. அதனோடு அங்கே சில உபாத்தியாயர்களும் அவளை மிகக் கொடுமையாக நடத்தலானார்கள். முக்கியமாய்ச் சில உபாத்தியாயர் இந்த மெரியாவினிடத்தில் மிகுந்த பகை கொள்ளலானார்கள். இந்தப் பெண்களெல்லோரும் மிகுந்த அடக்கமும் பொறுமையு முடையவர்களா யிருந்ததனால் அவர்களின் சொரூபம் மற்றெவர்க்கும் தெரியாமலேயிருந்தது. "மூட்டுப்பட்டும் ஜெயம் வருமானால், குட்டுப்பட்டால் குறையென்ன?" தங்களுடைய பயபக்தியினாலுண்டாயிருந்த அடக்க ஒடுக்கங்களாலும், அவர்கள் தம்முடைய வாகலமும் சாமர்த்தியமும் மனோபலமும் புத்திவலிமையு

வெளிப்படாதபடி மறைத்து வைத்திருந்தனர். மெரியாளுக்கு இருந்த அசௌக்கியம் சீக்கிரமே இன்னும் அதிகமாகிவிட்டது. தந்தை உடனே அம்மகளைத் தன்னிடம் அழைத்துக்கொண்டார். அதாவது அவள் அவ்வூரைச் சேர்ந்த சிலநாளைக்குள்ளே 1825-ம் ௵ வசந்தகாலத்தில் க்ஷயரோகத்தினால் தேகவியோகமாயினாள். பிறகு இரண்டாவது மகளான எலிஜபெத்தையும் ஊருக்கு அழைத்துக்கொள்ளும்படியாக நேரிட்டது. அவளும் சீக்கிரமே அதே வியாதி உண்டாகி, கோடைகாலத்தில் இறந்துபோனாள். அதனால் பிறகு அந்தக் குடும்பத்திற்கு ஷார்லெட் ப்ரோந்தியாளே மூத்தவளாயினாள். தாயில்லாத குடும்பத்தில் மூத்தமகள் என்னென்ன உத்தரவாதமான தொழில்களை ஏற்றுக்கொள்ளவேண்டுமோ அவையாவும் இந்த ஷார்லெட் ப்ரோந்தியாள் தலையில் பொறுத்தன. "குடிக்கனமோ தனைத்தனமோ" என்றபடி அவளுக்குக் கவலை அதிகமாயிருந்தது. அதனால் அவளும் எமிலி என்பவளும் சீக்கிரமே பாடசாலையை விட்டுக் கடைசி மகளான அன்னாள் என்பவளுக்குத் துணையாகச் சொந்த ஊருக்குத் திரும்பி வந்துவிட்டார்கள். இந்தத் தருணத்தில் ஒரு கிழவி இவர்களுக்குத் துணையாய் இருந்து வேண்டிய வேலைகளைச் செய்யும் வேலைக்காரியாக அவ்விடம் வந்தாள். "[illegible]ய்வினைக் கெடுத்த தெய்வம் கோலைக் கொடுத்தது" போல அவள் முப்பது வருஷகாலம் தொடர்ச்சியாய் வேலைசெய்துகொண்டு அவர்களோடு கூடவே யிருந்தாள். அவள் அந்தக் குடும்பத்துக்கு மிகவும் பொருந்தியவளே. அவள் யார்க்ஷயர் மாகாணத்திலிருந்து வந்தவளாகையால் அவளது வார்த்தை நடையுடை பாவனைகளெல்லாம் அந்தமாகாணத்தவையாகவே யிருந்தன. அவள் நினைத்ததை நினைத்தபடியே செய்யும் சுபாவமும் நுட்ப புத்தியும் உடையவள். "உண்டுபடு உறுதிப்படு" என்றபடி, பகட்டமாயிருந்தாலும் யதார்த்

தவாதியாய் இம்மக்களை வெகு கண்டிப்பாக நடத்திவந்தாள்; இவர்களுக்காக எவ்வளவு கஷ்டப்படவேண்டுமென்றாலும் பின்வாங்குவதில்லை. அவள் இவ்விடம் வந்தபொழுது, தன்னை ஒரு வேலைக்காரியாக நினையாமல் தோழியாகவே இவர்கள் பாராட்டவேண்டுமென்றும், ஸம்ஸாரத்தைப்பற்றிய எல்லா வர்த்தமானங்களையும் தெளிவாகத் தன்னிடத்தில் தெரிவிக்கவேண்டுமென்றும் அவள் எதிர்பார்த்திருந்தாள். அன்பு இருந்தால் ஆகாததும் ஆகுமாகுமென்பது உண்மையானாலும், முக்கியமாக அவளோடு படுவது ஷார்லெட்டுக்கு அதிக வருத்தமாக முடிந்ததாய்த் தெரிகிறது. ஏனென்றால், சில நாளைக்குப்பின் அந்தக் கிழவிக்குக் காது சிறிதும் கேளாமல் போய்விட்டது. அந்தச் செவிட்டுக் கிழவியோடு குடும்பத்தினுள்ள ரகசியமான செய்திகளை அயலாருக்குத் தெரியாமல் எடுத்துச் சொல்வதெப்படி? மனதிலுள்ள ரகசியத்தை மதிகேடனைப்போலக் கண்டவிடத்திலும் வெளியிடலாமா? அதற்காக அவள் செய்த காரியமென்னவென்றால், மனிதர் ஒருவரும் வாராத வெளியிடத்திற்கு அந்தக் கிழவியை அழைத்துக்கொண்டுபோய் அங்கே ஏகாந்தமான ஒரு ஸ்தானத்தில் உட்கார்ந்துகொண்டு, அந்தக் கிழவி என்னென்ன செய்தி கேட்கவேண்டுமென்கிறாளோ, அவை எல்லாவற்றையும் உரத்த குரலாய் அவளுடன் எடுத்துச் சொல்லுவாள்.

இவர்களின் சகோதரனான சிறுவனே மகா சமர்த்தன்; அவனைப் பிஞ்சிலே பழுத்த பையனென்றும் சொல்லத்தகும். அவன் அதிசீக்கிரமே வெகுதூரம் படித்துவிட்டான். அவன் வெகுவாய் வீட்டிலிருந்தே படித்தவன், அதிலும் மிகுதியாக மிகச் சிறுபிராயத்தில் தன் சகோதரிகளுடனே படித்துத் தெரிந்துகொண்டான். கடல்மீனுக்கு நீச்சுப்பழக்கவேண்டுமோ. அவர்கள் இளம்பிராயத்திலேயே பற்பல விதமான கதைகளும் நாடகங்களும் எழுத ஆரம்பித்ததாகத் தெ

வருகிறது. இரவில் நெடுநேரமளவும் உட்கார்ந்து பேச அவர்களுக்கு அக்கிழவி விளக்குக் கொடுக்கமாட்டாள். அதனால் அவர்கள் நெருப்பண்டையிலுட்கார்ந்து தாங்கள் பகலில் எழுதிய கதையைச் சொல்லிக்கொண்டிருப்பார்கள். அப்பொழுது அவ்வீட்டைச் சுற்றிலும் காற்று கோவென்று கோஷித்து வீசிக்கொண்டிருக்கும்.

ஷார்லெட் ப்ரோண்டியாருக்கு வயதுவந்த பொழுது அவள், சிறந்த மென்மையான உடலும், மிகத்தெளிவான முகமும், செம்மைபடிந்த மெதுவான தலைமயிரும், விசித்திரமான வெளுத்த கண்ணும் உடையவளாகி, மிகவும் வியக்கத்தக்க வடிவமுடையவளாயிருந்தாள். அவளுக்கு அதிகமாக மனவெழுச்சியுண்டாகும்பொழுது அக்கண்கள் மிகப் பளபளப்பாகச் சொலித்து அவளது முகத்திற்கு மிகுந்த சோபையை உண்டாக்கும். அவள் சிறந்த அழகான கைகளும் கால்களுமுடையவள். அவளது உடை எப்பொழுதும் துலக்கமாயும் சமயமாயுமிருக்கும். பதினைந்தாவது வயதில் அவள் மறுபடி பாடசாலைக்குச் சென்றாள். ஆனால் அது முன்போன பாடசாலையைப் போன்றதன்று. அதற்கு முற்றும்மாறானது. அச்சம், நாணம், அடக்கம் முதலிய குணங்கள் அவளிடத்தி லியல்பாகவே ஒரு புறமிருந்தாலும், இவ்விடத்தில் அவளுக்குப் பல நண்பர்கள் ஏற்பட்டனர். அந்தப் பாடசாலைக்குச் சுற்றுப்புறங்களிலுள்ள அற்புதமான காட்சிகளெல்லாம் அவளது உள்ளத்தில் நன்றாகப் பதிந்தன. கண்ணில் கண்டது கோடியானாலும் குறையற எழுதித் தெரிவிப்பது இலேசல்ல. அந்தப் புதுமையான காட்சிகளையெல்லாம் அவள் தானெழுதிய ஷேர்லி என்னும் விநோதகதையில் விசித்திரமாக வர்ணித்திருக்கிறாள்.

பிறகு 1835-ம் ஞு அவள் ஒருபாடசாலைக்கு விசாரணைத் தலைவியாகச் சென்றாள். செல்லும்பொழுது எமிலி என்

னும் சகோதரியைத் தனது வித்தியார்த்தியாகக் கூடவே அழைத்துக்கொண்டு போனாள். அச்சிறுமியின் இயல்பு ஒருதன்மையானது; தன் ஊரைவிட்டுப் பிரிந்துபோனது அவளுக்குப் பொறுக்கவில்லை; அதுவே அவளுக்குப் பெரிய நோயாகிவிட்டது. அதனால் நாளுக்கு நாள் அவள் மெலிந்து போகலானாள். கடைசியாக அவ்விடத்திலிருக்கச் சரிப்படாமல் ஊருக்கே திரும்பிவந்து விடும்படியாக நேரிட்டது. இப்படி எமிலிக்குத் தேகம் அசௌக்கியப்பட்டது வீட்டிலெல்லோருக்கும் ஒருபெரிய விசாரமாகிவிட்டது. யார் எவ்விடத்திற்குப் போனாலும் எமிலிமாத்திரம் வீட்டிலேயே இருக்கவேண்டியதுதானென்று ஏற்பாடு செய்யப்பட்டது. அப்புறம் இறப்பதற்கு முன்னே அவள் இரண்டேதடவைதான் ஊரைவிட்டு வெளியே போனாள். ஒருதரம் ஒரு பாடசாலைக்கு உபாத்தியாகப் போக நேரிட்டது; மற்றொருதடவை ஷார்லெட் ப்ரோந்தியாளுடன் பத்துமாத காலம் வெளியே போகும்படியாயிற்று. எமிலி வீட்டிலே நின்ற காலத்தில் சமையல் முதலான வீட்டுவேலை முழுமையும் தானே பார்த்து வந்தாள். அங்கிருந்த கிழவி மூப்பினால் சக்தியற்றவளானபோது ரொட்டி சுடுவது முதலான வேலைகளும் இவளே செய்துவருவாள். அப்பொழுது அவர்களது வீட்டுச் சமையலறைப் பக்கமாக எவனாயினும் போயிருப்பானானால், அங்கே அவள் புத்தகத்தைத் திறந்து வைத்துக்கொண்டு ஜர்மன்பாஷை படிக்கக் கண்டிருப்பான். அவள் சோறு சமைக்கையிலும் மாவு பிசைகையிலும் அடை தட்டுகையிலும் அவள் பக்கத்தில் புத்தகம் திறந்து வைத்திருக்கும். ஆயினும் அவள் எவ்வளவு இனிப்பான விஷயம் படித்துக்கொண்டிருந்தாலும் அதனால் அவளது சமையலின் பக்குவம் கெட்டுப்போவதில்லை. அவை வெகு பதமாகச் சமைக்கப்பட்டு அதிக ருசியாயிருக்கும். அந்தச் சமைய

லறையில் எப்பொழுது பார்த்தாலும் புத்தகம் மிகுதியாகக் காணப்படும். ஏன்? அடை அப்பங்கள் சுடும்பொழுது இடையிடையே அப்பெண்களுக்குப் படிக்க அவகாசம் அடிக்கடி கிடைக்கும்.

ஷார்லெட் ப்ரோந்தியாள் பாடசாலை விசாரணைத் தலைவியாகச் சென்றிருந்தபோது, தனது கடமையைக் குறைவறச் செய்துமுடிக்கவேண்டுமென்று மனவுறுதிகொண்டு மிதம் மிஞ்சி உழைக்கத்தலைப்பட்டாள். அதனால் அவளுடைய தேகசௌக்கியம் குறைவுபடத்தொடங்கியது. அதற்காக அவளுக்குப் பிரதி எமிலியும் உபாத்தியாக வெளியே போய் அதிகமாகப் பிரயாசப்பட்டுப் பிறகு 1836-ம் ௵ ஜனவரி௴ விடுமுறையில் அந்தச் சகோதரிகள் இருவரும் ஒன்றாய்த் தங்கள் ஊருக்குப் போனார்கள். போய் அவ்விடத்தில் தாங்கள் பிற்காலத்தில் விருத்தியடைவதற்கு வேண்டிய விதங்களைப்பற்றி விசேஷமாக ஆலோசிக்கலானார்கள்.

அந்தப் பெண்கள் பிரதிதினம் இராத்திரி ஒன்பதுமணியளவும் உட்கார்ந்து தைத்துக்கொண்டிருப்பார்கள். அதன் பிறகுதான் அவர்களுடைய அத்தைக் கிழவி படுக்கப்போகிற வழக்கம். அவ்வளவோடு அன்றையதினத்து வேலை முடிந்ததாகும். பின்பு தம் வேலையை நிறுத்திவிட்டு அந்தச் சோதரிகள் இருவரும் தீவெளிச்சத்திலேயே அந்த அறையில் உலாவிக்கொண்டு, பிற்காலத்தைப்பற்றித் தாங்கள் செய்யவேண்டிய ஏற்பாடுகளைக் குறித்தும், அதுவரையில் தாங்கள் பட்ட பிரயாசங்களைக் குறித்தும் பேசுவார்கள். பின்னும் சிலநாள் கழித்துத் தாங்கள் எழுதக் கருதிய கற்பிதக் கதைகளின் முன்பின் சந்தர்ப்பங்களைப்பற்றி விசாரம் செய்வார்கள். அதற்கப்பால் சிலகாலம் கழித்து, அவர்களில் ஒருத்தி இறந்துபோக, மிகுந்திருந்தவள் மாத்திரமே அந்த வழக்கம் மாறாமலே தம் பழையபடிக் கதைகளையெல்லாம்

நினைத்துக்கொண்டே ஒருவருமில்லாத அந்த அறையில் சுற்றிச்சுற்றி உலாவிக்கொண்டிருப்பாள்.

ஷார்லெட் ப்ரோந்தியாள் எமிலியின் தேகசௌக்கியம் தப்பிப்போனதுபற்றி அவளைத் தம் ஊரிலேயே வைத்திருக்க விரும்பினாளல்லவா? அப்பொழுது அவர்களுடைய சகோதரனும் குடும்பத்திற்கு ஒரு பெரிய பாரமாகவந்து சேர்ந்ததனால் அதிக வருத்தமுண்டாகியது. ஏனெனில், தானே தொழில்செய்து சம்பாதிக்கவேண்டுமென்று அவன் சவுதான் தேசத்திற்குப் போயினான். அங்கே ஒரு தொழிலும் செய்யவில்லை; தீயவர்களுடன்கூடிக் கெட்டு, குடி முதலான தீய செய்கைகளால் சீரழிந்து, தன் குடும்பத்தாருக்குப் பெரிய சுமையாகத் திரும்பி ஊர்வந்து சேர்ந்து, தான் சாகுமளவும் அவர்களுக்குப் பிரயாசத்தையே கொடுத்துக்கொண்டு காலங்கழித்தான்.

1840-ம் வருஷத்தில் ப்ரோந்தியின் குடும்பத்தார் எல்லோரும் ஊரில் வந்துவிட்டார்கள். அவ்வருஷம் ஷார்லெட் ப்ரோந்தியாள் ஒரு கதைப் புத்தகம் எழுத ஆரம்பித்தாள். ஆயினும் அந்தப் புத்தகம் பின்பு ஒருநாளும் பிரசுரமாகவேயில்லை. அவள் மறுபடியும் பாடசாலை விசாரணைத் தலைவியாகச் சென்றாளாயினும், ஆன்னாள் என்பவளுக்கு உடம்பு சௌக்கியமில்லையென்று கேட்டு உடனே அதைவிட்டு வந்துவிட்டாள். பிறகு ஷார்லெட், எமிலி ஆகிய இருவரும் வெகுநாளாக ஆசைகொண்டிருந்தபடி தேசாந்தர யாத்திரை போய் அங்கே அதிக ஆவலுடனே பிரெஞ்சு பாஷை படித்தார்கள். அவ்விடத்தில் அவள் தான் எழுதக்கருதிய வில்லெட் என்னும் கற்பிதக் கதைக்குவேண்டிய விஷயங்கள் விசேஷமாகத் தேடிக்கொண்டாள். அப்படியிருக்கச் சில நாளைக்குள்ளே அவர்களுடைய அத்தைக் கிழவிக்கு உடம்பு மிகவும் அசௌக்கியமாயிருக்கிறதென்று அவர்கள் ஊருக்குத்

திரும்பிவிடலாயிற்று. ஐயோ! அவர்கள் ஊர்வந்து சேருவதற்கு முன்னமே அந்தக் கிழவியின் சாமகாரியங்களெல்லாம் முடிவாகிவிட்டன! அதுகேட்டு ஷார்லெட், ஆன்னாள் இருவரும் அந்த விசனத்தினால் தனியே ஒருபுறத்தில் ஒன்றாய் உட்கார்ந்து விசனப்பட்டுக்கொண்டிருந்தார்கள். அவளுக்கிருந்த சொற்பஸ்திதி இந்த இரண்டு பெண்களுக்கு மாத்திரமே பாகித்துக் கொடுக்கப்பட்டிருந்தது; இவர்களின் சகோதரனுக்கு ஒன்றுமில்லை. ஏனென்பீர்களோ? அவனிடத்தில் அந்தக் கிழவிக்கு ஆசை மிகவும் அதிகமேயாயினும், அவன் சிறிதும் சொன்னசொல் கேளாமல் துர்மார்க்கமாக வீண் செலவுசெய்து அவளுக்கு மிகுந்த மனவருத்தமுண்டாக்கியதுபற்றித் தன்னுடைமையில் அவனுக்குச் சிறிதும் பாகம் கொடாமலே போய்விட்டாள். அதன்பிறகு அந்தச் சகோதரிகளின் ஏற்பாடு புதிதாக மாற்றப்பட்டது. ஆன்னாள் என்பவள் ஓரிடத்திற்கு ஒரு தொழிலாகப் போயினாள்; எமிலி வீட்டிலேயே யிருந்தாள்; ஷார்லெட் தான் முன் படித்த பாடசாலையில் உபாத்திமை வேலைக்குப் போயினாள். ஆனால் இப்பொழுது துணை ஒருவருமில்லாமல் தனியாகவே புறப்பட்டுப் போக நேரிட்டது. அவ்விடத்தில் நீடித்த விடுமுறைக் காலங்களில் ஒருவருமில்லாத பள்ளிக்கூடத்தில் ஒரே ஒரு துணைவியுடன் அவள் தனியே இருந்ததனால் அவளுக்கு உண்டான துயரம் மிகவும் அதிகம். அவைகளையெல்லாம் அவள் தான் எழுதிய வில்லெட் என்னும் அற்புதமான கதையில் விசேஷமாக வர்ணித்து எழுதியிருக்கிறாள். அவ்விடத்தில் அவள் சிலநாளிருந்து யோக்கியதாபத்திரம் பெற்றுக்கொண்டு உடனே தன் ஊருக்குத் திரும்பிவிடுவதாகத் தீர்மானஞ் செய்துகொண்டாள். ஏனெனில், அவளது தந்தைக்குக் கண் உபத்திரவம் அதிகமாகிக் கண்ணே தெரியாமற் போய்விட்டது.

இப்பொழுதுதான் அவர்களுடைய சகோதரனுக்கு, சிறுவனுக்குப் பொல்லாத காலம் வந்தது. அவன் தேசாந்தரத்தில் தனது தீச்செயல்களால் சேர்ந்த அவமானத்தைப் பொறுக்கமாட்டாமல் தன்னூருக்குத் திரும்பிவரலானான். வந்தவிடத்தில் அவன் தான் வருத்தமுற்றது மாத்திரமேயன்றி, தன் வீட்டாருக்கெல்லாம் மிகுந்த விசனமுண்டாக்கலானான். ஷார்லெட் ப்ரோண்டியாள் தன் தேக சௌக்கியத்தையும் விசேஷமாகப் பாராட்டாமல் வீட்டிலேயே நின்றுவிடத் தீர்மானித்தாள். குருவிக்கழுத்தில் பனங்காயைக் கட்டினதுபோலாயிற்று. ஆகிலும் இரத்தபாசம் விடுமா, அவர்களுடைய தந்தைக்குக் கண் உபாதி பின்னும் அதிகமாகிவிட்டது. அதற்காக ஷார்லெட் இரவெல்லாம் கண்விழித்துக் கண்ணீர்விட்டுக்கொண்டிருந்ததுபற்றி, அவள் கண்ணுக்கும் சிறிது ஊனமுண்டாகி, அது எப்படியாகுமோவென்று அஞ்சவேண்டியதாயிற்று; இவர்களின் சகோதரன் விசேஷமாய் அபினி தின்பவனானான். அவர்கள் எவ்வளவு ஜாக்கிரதையாய் அபினி அவன் கையில் அகப்படாதபடி கண்காணித்து வந்தாலும், அவன் அத்தனை பேரையும் ஏமாற்றிவிட்டு எப்படியோ அதைத் தேடித் தின்றுவிடுவான். அதனால் அவன் மரணகாலத்திற்குச் சற்று முன்னால் யாவரும் அச்சங்கொள்ளும்படி அவ்வளவு அதிகமான மதிமயக்கங்கொண்டு வீழ்ந்துவிட்டான். அவன் அப்பொழுது தன் தந்தையின் அறையில் பதங்குறைந்து படுத்திருந்தான். அத்தருணத்தில் அவன் சில சமயம், பொழுதுவிடிவதற்குள் "யானாவது என் தந்தையாவது இறந்துபோகவேண்டும்" என்றிவ்விதமாக வாய் பிதற்றுவான். அதுகேட்டு அந்தச் சகோதரிகள் அச்சங்கொண்டு, அப்படிப்பட்ட அபாயத்திற்கு இடமுண்டாகாதபடி, கண்ணில் பட்டால் கரிக்குமா புருவத்தில் பட்டால் கரிக்குமா என்பதுபோல், பொறுத்துக்கொண்டு எச்சரிக்கையா யிருக்கவேண்டு

மென்று தங்கள் மனக்கவலையைத் தந்தைக்குச் சொல்லிக்கொண்டு வந்தார்கள்; அக்காலத்தில் இரவில் அடிக்கடி துப்பாக்கியோசை கேட்கும். இத்தன்மையான துக்கச் செய்திகள் நடந்துகொண்டிருந்த இலையுதிர்காலத்தில் அவர்களுக்கு மனக்களிப்பு உண்டாக்கத்தக்க புதுமையொன்று காணப்பட்டது. அதனால் மிகுந்த இருள் மூடியிருந்த அவர்களது வாழ்நாளில் சிறிது வெளிச்சம் தோன்றியது. அதாவது, ஷார்லெட்டின் கையில் தற்செயலாய் அப்பொழுது பல செய்யுட்கள் எழுதிய கையெழுத்துப் புத்தகமொன்று கிடைத்தது. அது எமிலி எழுதியது. அதைப் பார்த்து ஷார்லெட் மிகவும் விசேஷமாகக் கொண்டாடினாள். அவள் அதைக் கொண்டாடியதைக்கண்டு ஆன்னாள் என்பவள் தானும் மிகுந்த மனவெழுச்சியும் உற்சாகமுமடைந்தவளாகி, ஒரு நூல் எழுதத் தொடங்கினாள். "இறைக்க இறைக்கக் கிணறு சுரக்கும்" என்றபடி கவிகட்டப் பழகி காவியகர்த்தர்களாகவேண்டுமென்று வெகு நாளாக மனோராஜ்யஞ் செய்துகொண்டிருந்த அந்தச் சோதரிகளிருவரும் பிறகு தம்மால் கூடியவரையில் பாடுபட்டு மிகச் சிறந்த கவிகளியற்றி, அவைகளைச் சீக்கிரமே பிரசுரஞ்செய்யவேண்டுமென்று தீர்மானித்தார்கள். 1846-ம் வரு ஜூலையில் அக்காவியங்களைப்பற்றிப் புகழ்ந்து பேசிய பத்திரிகையொன்று பிரசுரமாயிற்று. அதில், அந்த மூன்று காவியங்களிலும் எல்லிஸ் என்னும் காவியமே மிகச் சிறந்ததென்றும், அதுவே படிப்போர்க்கு மிகவும் இன்பம் விளைவிக்கத் தக்கதென்றும் எடுத்துக் காட்டியிருந்தது. சிறிதும் சந்தடியில்லாத சாந்தமான அந்த இடத்தில் இந்தக் காவியத்தை எவ்வளவு ஆவலுடனே அவர்கள் படித்தார்களோ, அதை அவரவரே ஊகித்து அறிந்துகொள்ளவேண்டுமே யல்லது நம்மால் எடுத்துரைக்க முடியாது.

அக்காலத்தில் ஷார்லெட் ப்ரோந்தியாளுக்குக் கண்ணோவு உண்டாகி அதற்குச் சிகிச்சோபசாரம் செய்வது பெரிய காரியமாயிற்று. இந்தக் கவலைகள் அதிகமாக இருக்குங் காலத்திலேதான் இந்தச் சகோதரிகள் ஒவ்வொருவரும் ஒவ்வொரு விநோதகதை எழுதியது. அக்கதைகளெல்லாம் ஒரே காலத்தில் அச்சிட்டுப் பிரசுரமாகவேண்டுமென்பது அவர்களுடைய கோரிக்கை. அதனால் அவற்றைத் தகுந்தவரிடத்திற்கு அனுப்பினார்கள். ஷார்லெட் ப்ரோந்தியாளெழுதிய கதையும், ஷெர்லி என்னும் கதையும், அவர்களுடைய தந்தை கண்வைத்தியஞ் செய்துகொண்ட தினத்தில், வேண்டுவதில்லையென்று திரும்பி வந்துவிட்டன. ஆயினும் அதனால் சிறிதும் மனஞ்சலியாதவளாகி "கறக்கக் கறக்க ஊறும் பசுவின்பால், படிக்கப் படிக்க ஊறு மெய்ஞ்ஞானம்" என்றதுபோல் மிக்க தீரத்துடனே அப்பெண்மணி ஜேன் அயர் என்னும் பிரசித்தமான விநோதகதையை எழுதத்தொடங்கினாள். அக்கதையெழுதும்போது பிரதிதினம் ஓயாமல் எழுதுவதில்லையாம். சிலவாரங்கள் வரையிலும், ஒவ்வொரு சமயம் சிலமாதங்கள் வரையிலுங்கூட, ஒரு வரியும் எழுத முடியாமல் சும்மா இருந்ததாகவும், சிலநாள் காலையில் எழுந்தவுடனே மனம் மிகவும் தெளிவாகிக் கதை முழுமையும் விளக்கமாய் எதிரே தோன்றியதாகவும் அவளே சொல்லுகிறாள். இப்படி இந்தச் சிறந்த காரியங்களில் தலையிட்டுக் கொண்டிருக்கையிலும், வீட்டுவேலைகளை அவள் சிறிதளவேனும் உபேக்ஷைசெய்தாளென்பதில்லை. அவைகளையும் வெகு கருத்தும் சீருமாக நடத்திவந்தாள்.

ஒரு சமயத்தில் ப்ரோந்தியாள் தன் சகோதரிகளுடனே பேசிக்கொண்டிருந்தபோது அவர்களைப் பார்த்து "நீங்கள் எழுதும் விநோதகதைகளில் வருகிற கதாநாயகிகள் எல்லாரையும் மிகுந்த அழகுள்ளவர்களாக வர்ணித்து எழுது

வது உசிதமல்ல" என்று சொன்னாள். அதற்கு அந்தச் சகோதரிகள், "கதாநாயகிகள் அழகிற் சிறந்த பெண்மணிகளாக அமையாவிட்டால், அக்கதை எப்படி இனிப்பு உடையதாகும்" என்று சொல்ல, ஷார்லெட், "நீங்கள் அப்படி நினைத்திருப்பது பிசகென்பதை நான் உங்களுக்குத் திருஷ்டாந்தப்படுத்திக் காட்டுகிறேன்: என்னைப்போலவே மிகச் சாதாரணமான உடையும் சிறிய உருவமுமுள்ளவளான கதாநாயகியும் நீங்கள் வர்ணித்திருக்கும் கதாநாயகிகள்போலவே அவ்வளவு இனிப்புஉண்டாக்கத்தக்கவளாயிருக்கலாம்" என்றாள். அவளெழுதிய ஜேன் அயர் என்னும் சித்திரக்கதை முத்தன்மையானதேயாம். ஆனால் அந்தக் கதாநாயகி மற்ற விஷயங்களில் இவளைப் போன்றவளல்லள்.

மிகவும் அடக்கமாக வாழ்கின்ற அவர்களுக்கு ஒன்றின்மேல் ஒன்றாகப் பல விசனங்களை உண்டாக்கிக்கொண்டே அவ்வருஷம் முடிவுபெற்றது. ஒருகாலத்தில் அவர்களுக்கு மிகவும் பெருமையும் அருமையுமாயிருந்த அவர்களுடைய சகோதரனது புத்தியும் சாமர்த்தியமும் கெட்ட வழியில் உபயோகப்பட்டுப்போனதால் உண்டான பொல்லாங்கு எப்போதும் அவர்களுடைய கண்முன்னேயே தோன்றிக்கொண்டிருந்தன. இப்படிப்பட்ட பலவிதமான சங்கடங்களையும் மனதிலே அடக்கிப் பொறுத்துக்கொண்டிருந்ததனால் அதிகமாக மனம்நொந்துபோயிருந்த தள்ளாத வயதான தந்தையையும் அடிக்கடி தேற்றிக்கொண்டு வரவேண்டியது அவர்களுக்கு முக்கியமான காரியமாயிற்று. உலகத்தில் பிரசித்திபெற வழியில்லாமல் பலவிதமான விரோதங்கள் உண்டாகையிலும், அவர்கள் அன்பும் விசுவாசமும் அமைந்த மனமுள்ளவர்களாய்த் தங்களாலான உதவிகளைச் செய்துகொண்டிருந்தார்கள். அவ்விடத்துப் பாடசாலையைப் பிரதிதினம் போய்ப் பார்த்து வருவார்கள். இப்படிப்பட்ட

கஷ்டங்களுடன் வாழ்ந்து வருகையிலேதான் இடையிடையே கிடைத்த ஒழிவு வேளையில் "ஜேன் அயர்" என்கிற அற்புதக் கதை எழுதப்பட்டது. மற்ற இரண்டு சகோதரிகள் எழுதிய சித்திரக் கதைகளை அச்சிடும் சங்கத்தார் தாமே இதையும் அச்சிட்டுப் பிரசுரம் செய்வதாக ஏற்றுக் கொண்டனர். ஆனால் அதற்குச் செய்த ஏற்பாடு மாத்திரம் அத்தனையாக இவர்களுக்கு இலாபம் தரத்தக்கதன்று.

கடைசியில் "ஜேன் அயர்" என்கிற கதையும் எழுதி முடிந்து ஆகஸ்டு௴ கடைசியில் லண்டனுக்கு அனுப்பப்பட்டது. உடனே அது அங்கீகரிக்கப்பட்டு, அக்டோபர்௴ 16உக்குள் அச்சிட்டுப் பிரசுரமும் செய்யப்பட்டது.

அதன் கையெழுத்துப் பிரதி பிரசாரம் செய்பவரிடம் போய்ச் சேர்ந்தபோது அந்தச் சாலையைச் சேர்ந்த ஒரு கனவான் முதல் முதல் அதை எடுத்துப் படிக்கவேண்டியதாயிற்று. அவர் அதைப் படித்து அதன் அழகைப்பார்த்து உள்ளடங்காத ஆனந்தம் அடைந்தவராகி அந்தச் சங்கத்தைச் சேர்ந்த ஒருவராகிய ஸ்மித்து என்பவரிடம் அக்கதையைப் பற்றி மிகவும் மேலாக வியந்து பேசினார். அதைக்கேட்டு அந்த ஸ்மித்து துரை, அவருக்கு உண்டான ஆவேசத்தைக் கண்டு பிரமித்து, "நீர் ஏதோ ஒரு ஆவேசம்கொண்டு பேசுகிறீரோ, நான் எப்படி உமது வார்த்தையை உண்மையென்று நம்புகிறது" என்று சொன்னார். பிறகு மற்றொருவர் அந்தக் கதையை முழுமையும் அர்த்த ராத்திரிவரையில் உட்கார்ந்து படித்தபோது, தானும் அதைப் படிக்கவேண்டுமென்கிற ஆவல் இவருக்கும் உண்டாகி அதைத் தானே படித்தார். "அவரவர் மனசே அவரவருக்குச் சாக்ஷி" யாகையால் அவர்கள் அதைப் புகழ்ந்து பேசியது அதிசயோக்தியல்லவென்றும், அவ்வளவும் அதற்குத் தகுந்ததேயென்றும் அவருக்கே தெரியவந்தது. அந்தப் புத்தகம் பிரசுரமானவுடனே

அதன் பெருமையை முதல் முதல் அங்கீகரித்தவர்களில் ஒருவர், சிறந்த கிரந்தகர்த்தாவான தாகரே என்பவராம். அவருடைய பெருமையை ப்ரோந்தியாள் மிகவும் விசேஷமாக வியந்து கொண்டாடியிருக்கிறாள்.

இந்த விசித்திர கதை பிரசுரமான வெகு சீக்கிரமே இங்கிலாந்து தேசம் முழுமையும் பரவி அனைவரும் படித்துப் புகழ்ந்து பேசலாயிற்று. ஹாவர்த்து என்னும் கிராமத்தில் இவர்கள் ஏகாந்தமாகக் காலங்கழித்து வருகையில், இங்கிலாந்து தேசம் முழுமையும் ஜேன் அயர் என்னும் அற்புத கதையை எழுதியவர் யாவர் என்று அந்த அற்புதமான நூலாசிரியரைக் கண்டறிய மிகுந்த ஆவலுண்டாயிருந்தது. இவ்விதமாகக் காரியசித்திபெற்ற அதிசயத்தைத் தன் தந்தையிடம் ஷார்லெட் ப்ரோந்தியாள் அறிவித்த முறையைக் கேட்டால் அனைவரும் வியக்கத்தக்கதாயிருக்கும். அதாவது, ஒருநாள் தன் தந்தை காலையில் சீக்கிரமாகவே போசனம் செய்துவிட்டுப் படிப்பறையில் இருக்கும்போது, ஷார்லெட் தன் கதைப்புஸ்தகமும், அதைப்பற்றிப் புகழ்ந்து பேசிய இரண்டு மூன்று பத்திரிகைகளும் கையிலெடுத்துக் கொண்டு அவரிடம் போய்,

"அப்பா! நான் ஒரு புத்தகம் எழுதியிருக்கிறேன்" என்றாள்.

அதன்மேல் அவர்களுக்குள் நடந்த ஸம்பாஷணையாவது:

குழந்தாய், புத்தகமா எழுதியிருக்கிறாய்?

"ஆமாம் ஐயா! நீங்கள் அதைப் படித்துப் பார்க்க வேண்டுகிறேன்."

"எனக்கும் படிக்க இஷ்டமே; எழுத்தைப் பார்த்துப் படித்தால் கண்ணுக்கு ஆகாதேயென்று பயப்படுகிறேன்."

"அது கையெழுத்துப் புத்தகமன்று; அச்சிட்டிருக்கிறதப்பா."

"குழந்தாய், அச்சிடுவதற்குப் பிடிக்கும் செலவை நீ சிறிதும் யோசிக்கவில்லைபோலும்; அது ஒரு பெரிய நஷ்டமாகுமே. ஏனெனில், அச்சிட்ட புத்தகங்களை நாம் விற்பனை செய்வதெப்படி? உனக்கு ஒருவரும் பழக்கமில்லை; உன் பெயர்கூட ஒருவருக்கும் தெரியாதே."

"அப்பா! இதனால் நமக்கு நஷ்டமொன்று முண்டாகாது. இதன் குறைகுணங்களை யெடுத்துப் பிரசித்தப்படுத்திய பத்திரிகைகள் இரண்டொன்றைப் படித்துக் கேட்பீரானால், இதனால் நஷ்டமில்லையென்பது தங்களுக்கே தெரியவரும்" என்று இவ்விதமாகச் சொல்லி அவள் தந்தையின் பக்கத்தில் உட்கார்ந்து அந்தப் பத்திரிகைகளில் சிலவற்றை அவருக்குப் படித்துக்காட்டி, பிறகு ஜேன் அயர் கதைப் புத்தகம் ஒன்று அவர் கையில் கொடுத்துப் படிக்கச் சொன்னாள். பிறகு அவர் தேயிலைக்கஷாயம் சாப்பிடப் போனபோது தன் பெண்களைப் பார்த்து, 'குழந்தைகளே, நம்முடைய ஷார்லெட் ஒரு புத்தக மெழுதியிருக்கிறாள், அதைப் பார்த்தீர்களோ; அது மிகவும் நன்றாயிருக்கிறது' என்றார்.

இப்படியிருக்கக் கடைசியில் இந்தப் புத்தகம் எழுதினவர் இன்னாரென்கிற ரகசியம் உலகமெங்கும் பிரசித்தமாகும்படியான சமயம் வந்துவிட்டது. என்னவென்றால்: ஆன்னாள் என்பவள் எழுதிய ஒரு புதிய கதையைப் பிரசுரம் செய்ய வேண்டியவிஷயத்தில் ஏதோ சில கலகம் உண்டாயிற்று. இரண்டு கதையும் எழுதியவர் ஒருவரேயென்று அவற்றைப் பிரசுரம் செய்பவர் அபிப்பிராயப்பட்டனர். அதனால் அவர்களுடைய சந்தேகத்தைப் போக்கி இருவரும் வேறு வேறு என்பதை விளக்கிக் காட்டுவதற்கு அந்தச் சகோதரிகளிருவரும் லண்டனுக்குப் போய் அப்புத்தகம் பிரசுரம் செய்பவர்களைப் பார்க்கவேண்டியதாயிற்று.

அப்படியே அவ்விடம் போய்ப் புத்தகம் பிரசுரஞ்செய்பவர்களில் தலைவரான ஸ்மித்து துரையிடம் அவரெழுதிய கடிதத்தையே ஷார்லெட் கொண்டுபோய்க் கொடுத்தாள்.

அதைப் பார்த்து அந்த துரை, அந்த அற்புத கதையெழுதியவர் இச்சிறுமிகளாயிருப்பது அசாத்தியமென்று நினைத்து, இந்தக் கடிதம் உங்களுக்கு எங்கே கிடைத்ததென்று கேட்டார். அவர்கள் மெலிந்து சிறுத்த வடிவமும் கறுத்த உடையுமுள்ளவர்களாயிருந்தனர்; மனமகிழ்ச்சி கொண்டவர்போலக் காணப்பட்டாலும் ஏதோ மனக்கவலை யுள்ளவர்போலவும் தோன்றினர். இந்த அற்புதமான கதைகளுக்கு ஆசிரியர் யாவர் என்று வெகுநாளாய்த் தேசம் முழுமையும் அதிக ஆவலுடனே தேடிக்கொண்டிருக்கும் உத்தமிகள் இவர்களாமென்று அவருக்கு அப்போது சிறிதும் தோன்றவில்லை.

கடைசியாக உண்மை வெளிப்பட்டவுடனே, அங்குள்ள பண்டிதர்களில் சிலரைப் போய்க் காணும்படி அந்த துரை வேண்டினார். ஆயினும். "மனக்கவலை பலக்குறைவு" என்று எண்ணிக் கூடுமானால் இன்னும் சிலநாள் வெளிக்குத் தெரியாமலே தாங்கள் மறைவாயிருப்பது உசிதமென்று கருதி அவர்கள் அதற்கு உடன்படாமல் வேண்டிய புத்தகங்களை மாத்திர மெடுத்துக்கொண்டு ஊர்வந்து சேர்ந்தார்கள்.

பிறகு அவர்களுக்குப் பின்னும் அதிகமான துன்பம் உண்டாயிற்று. கடைசியில் பிராம்வெல் ப்ரோந்தியாள் இறந்துபோனான். அதன்பிறகு எமிலி என்பவளும் சிறிது அசௌக்கியம் அடைந்து, வைத்தியர்கூடத் தன்னை வந்து பார்க்கவேண்டாமென்று வைராக்கியத்துடனிருந்து கடைசியில் காலகதியடைந்தாள். அவள் இறந்த அன்றையதினம் காலையிலேகூடப் பிரதிதினம்போல எழுந்து வழக்கப்படி உடைதரித்து ஒருவருடைய சகாயமும் வேண்டாமல் எப்போதுமுள்ள வழக்கத்துடனே தன் வேலைகளைப் பார்த்தாள். பிறகு

காலைப்பொழுது கழிந்து நடுப்பகலாயிற்று; எமிலிக்கு உடம்பு அதிகமாகிவிட்டது. பேசவாயில்லை; கைக்குறியாலும் உதடு அசைவதாலுமே தன் கருத்தைத் தெரிவிக்கவேண்டியதாயிற்று. "இனி எவ்விதத்திலும் பிழைப்பது அசாத்தியமென்று தோன்றி வைத்தியனை அழைப்பித்தால் பார்க்கலாம்" என்று ஷார்லெட்டுக்குத் தெரிவித்தாள். இப்படித் தோன்றியபிறகு வைத்தியனை வரவழைத்திருக்க, இரண்டு மணிக்குப் பிராணன் போய்விட்டது. இதே விசாரத்தினால் அதுமுதல் அவள் மிகவும் நொந்து அதிகமாய் அசௌக்கியமடைந்தாள். இவ்விதமாக அவர்களுக்கு 1848-ம் ௵ முடிவாயிற்று.

அடுத்த ௵ மேமீ அந்தச் சகோதரிகள்: இவ்விடத்திலாவது தேகசௌக்கியம் உண்டாகிறதா பார்ப்போமென்று கடைசியாகக் கடலோரத்திலுள்ள ஸ்கார்பரோ நகரத்திற்குப் போனார்கள். அவ்விடத்திலேதான் அன்னி இறந்து போனது. அதன் பிறகு ஷார்லெட் செய்யவேண்டியதென்ன? தங்கள் பழைய ஊருக்குத் தள்ளாத வயதான தந்தையினிடம் வந்து சேர்ந்தாள். அங்கே முன்னிருந்த விசாரங்களெல்லாம் அடிக்கடி நினைவு வரும்படியான படிப்பறை முதலான இடங்களில் அவள் வேறு துணையின்றி ஒருத்தியாகவே வசித்து வேலைசெய்துகொண்டிருந்தாள்.

"ஜேன் அயர்" பிரசுரமான உடனே "ஷேர்லி" என்கிற மற்றொரு கதை எழுத ஷார்லெட் ஆரம்பித்தாள். அதில் இரண்டாவது ஸம்புடம் முடியப்போகிற தருணத்திலேதான் பிராம்வெல் பிரோந்தி இறந்தாள். அவனுக்குப் பிறகு எமிலியும், அவளுக்குப்பின் அன்னியும் மரணமடைந்தார்கள். இந்த மூன்று சகோதரிகளும் ஒன்றாய்க் கூடி வாழ்ந்தகாலத்தில் கீழே வைத்த எழுதுகோலை இப்பொழுது ஷார்லெட் ஒருத்தியாகவே கையிலெடுக்கவேண்டியதாயிற்று.

அவள் மறுபடி வேலை தொடங்கி முதல்முதல் எழுதிய நாதன கதைக்கு மரணாந்தகாரப் பகுதி என்று பெயரிட்டாள்.

ஷார்லெட் தான் எழுதிய ஷேர்லி என்னும் சித்திரக்கதையில் அழகிலே சிறந்த பவளக்கொடி போன்ற தன் சகோதரியான எமிலி என்பவளுடைய குணங்களையே அமைத்து ஒரு நாயகியை நிரூபித்துக் காட்டியிருக்கிறாள். ஆனால் அந்த எமிலியைத் தான் எவ்விதமாக அறிந்திருந்தாளோ அவ்விதமாக நிரூபித்தாளேயொழிய உலகத்தாருக்கு அவள் தோன்றியபடி அமைக்கவில்லை. அந்தக் கதாநாயகிக்குப் பிராணிகளிடத்தில் அதிகமான அன்பு உண்டாயிருப்பதாக எடுத்துக் காட்டியதெல்லாம் எமிலியின் சரித்திரத்தினின்றும் எடுத்ததேயாம். இந்த ஷேர்லியென்னும் நாடகம் அச்சிட்டுப் பிரசுரமான பிறகுதான் இந்த நூல்களை எழுதியவர் இன்னாரென்கிற ரகசியம் வெளிப்படலாயிற்று. ஷார்லெட் மறுபடியும் லண்டனுக்குப் போய், அங்குள்ள பண்டிதர்களைக் காணும்படி நேர்ந்தது. அந்தப் பண்டிதர்களில் தாகரே என்பவரும் ஒருவராம். ஷார்லெட் நுட்பமான தேகமும் மிகுந்த கூச்சமுமுடையவளாயிருந்ததனால் அவளுக்குத் தேகம் துர்ப்பலமாகிக் கூடிய சீக்கிரம் தன் சொந்த கிராமம் போய்ச் சேரவேண்டுமென்று விரும்பினாள். அவள் மிகுந்த நாணமுடையவள் என்பதற்குத் திருஷ்டாந்தமாக கெஷல் என்பவள் அவளைப் பற்றி ஒரு கதை சொல்லுகிறாள். மாஞ்செஸ்தர் நகரத்தில் அவர்கள் இருவரும் ஒரு அறையில் இருந்தபோது, தன்னைப் பார்க்கப் புதிதாக ஒருவர் அவ்விடம் வந்ததாகவும், அந்தச் சமயத்தில் ஷார்லெட்டைப்பற்றி அவருக்குத் தெரிவிக்கவேண்டுமென்று தான் நினைத்துக்கொண்டு திரும்பிப் பார்க்கும்போது அவள் கண்ணுக்குக் காணாமல்போனதாகவும்,

புதிதாக வந்தவர் அந்த அறையைவிட்டு அப்புறம் போன பின்பு அற்புதமான கதைகள் எழுதிய சிற்றுருவம் அங்கிருந்த ஒரு பெரிய திரைக்குள்ளிருந்து வெளிவந்ததாகவும் சொல்லுகிறாள். இதற்கு முக்கியமான காரணம் புது மனிதரைப் பார்க்கக் கூடாதென்கிற நாணம்தவிர வேறொன்று மில்லையே.

முதல்முதல் தாகரேபண்டிதரைச் சந்தித்தபோது ஷார்லெட் ப்ரோந்தியாள் அவரை நோக்கி, அவருடன் நெருங்கி அவர் சாதாரணமாகப் பேசுவதும், வேடிக்கையாகப் பேசுவதும் இன்னதென்று கண்டுகொள்வது அசாத்தியமாக இருக்கிறதென்று சொன்னாள். சிலநாள் கூட இருந்து அதிகமாகப் பழக்கமானபிறகு மிகுந்த தைரியம் கொண்டவளாகி அவருடன் சிறிதும் நாணமின்றிச் சாதாரணமாகப் பேசத்தொடங்கினாள். பிறகு அவள், பெரிய பாலியன் என்று பெயரிட்டு வழங்கும் லண்டன்மாநகரத்தைப் போய்ப் பார்த்துவிட்டு ஏகாந்தமான தன் ஊரில்) தந்தையினிடம் வந்து சேர்ந்தாள். இந்தப் பெண் ஒருத்திமாத்திரமே இப்பொழுது அந்தத் தள்ளாத கிழவனுக்கு மிகுந்திருப்பதால், அவன் இவளைப்பற்றி அதிகமான கவலைகொண்டவனாயினான். அதனால் ஷார்லெட்டும் தனக்குத் தேகத்தில் ஏதாவது சிறிது அசௌக்கியமுண்டானாலும் கூட அதனால் தகப்பனார் விசாரப்படப் போகிறாரென்று பயந்து அதை அவருக்குத் தெரியவொட்டாதபடி தன்னால் கூடியவரையில் மறைத்துக்கொண்டுவந்தாள். அவர்களுடைய வீட்டுவேலைக்காரி அப்பொழுதும் சீக்கிரமே தன் வேலையை முடித்துக்கொண்டு படுக்கப் போய்விடுவது வழக்கம். அப்படி அவள் போய்விட்டாலும் அவள் போனவுடனே ஷார்லெட் படுக்கப்போவதில்லை; இராத்திரி எவ்வளவு நாழிகையானாலும் தன்னால் கூடிய மட்டும் விழித்துக்கொண்டிருக்கவே பாடுபட்டாள். இளைப்பு

அதிகமாகிப் படிக்கவாவது தைக்கவாவது கண்திறந்து பார்க்கக்கூடாமற்போனால், அந்தருணத்தில் தன் அருமைச் சகோதரிகளை நினைத்துக்கொண்டு கண்ணீர் விடுவாள்.

இப்படி யிருக்குங் காலத்தில் ஷார்லெட் ஏகாந்தமாக ஒரு நாட்டுப்புறத்தில் வசித்துக்கொண்டிருந்தாலும் அவளிருக்குமிட மின்னதென்று தெரிந்துகொண்டு பற்பலர் அவளைக் காணும்படி அவ்விடத்திற்கு வந்தார்கள். அது அவளுக்குச் சிறிதும் விருப்பமில்லாதிருந்தும் அவளால் தடுக்க முடியாமல் போயிற்று. அவளெழுதிய புத்தகங்களை அதிக ஆவலோடு படித்துப் பேராநந்த மடைந்திருக்கும் பலரும் அவளை நேராகக் கண்டுகளிக்கும்படி அவ்விடம் வந்தார்கள். சிலசமயம் அவளை அவர்கள் அவ்விடம் விட்டு வெளியே கூட அழைத்துக் கொண்டுபோய் விடுவதுண்டு. இந்தச் சமயத்தில் அவளுடைய சகோதரியான எமிலி எழுதிய வாடிவதங்கும் இரவுகள் (உதரிங் நைட்ஸ்) என்னும் அழகான கதை பலரால் கொண்டாடப்பட்டு வருகிற சந்தோஷச் செய்தி கேட்டு இவள் மிகவும் களிப்படையலானாள்.

இவ்விதமாகவே பலவிதமான தொல்லைகளும் தேக சௌக்கியக் குறைவும் உண்டாயிருக்கிற காலத்திலே ஷார்லெட் கடைசியாக வில்லெட்டு என்று ஒரு கதை யெழுதினாள். அக்கதை முழுமையும் அவள் தான் அந்தக் கிராமத்தில் தனியே வாழ்ந்த வாழ்க்கையையே ஆதாரமாக வைத்து எழுதியது. அக்கதை எழுதி முடிந்தவுடனே படிக்கும் திறமையுள்ளவர் பலரும் அதை மிகுந்த ஆவலோடும் விருப்பத்தோடும் அங்கீகரிக்கலானார்கள்.

ஷார்லெட்டின் தந்தைக்கு நிகலஸ் என்னும் காரியகர்த்தர் ஒருவர் இருப்பதாக முன்சொன்னோமே. அவரே இந்தப் பெண்மணிக்கு இனிக் கணவனாகப் போகின்றவர்.

அவர் மிருந்த அடக்கமும் நேர்மையுமுள்ள ஏகாந்த சிலர். அவர் பலவருஷங்களாக இவளிடத்தில் ஆசைகொண்டு தருணம் பார்த்துக்கொண்டே யிருந்தார். கடைசியாக 1852-ம் வருஷம் முடிவில் ஒரு நாள் மனத்தைத் திடப்படுத்திக் கொண்டு தன் கருத்தை அவளிடத்தில் வெளியிடலானார். அவருக்குத் தன்னிடத்தில் இப்படிப்பட்ட ஆசையிருக்கிறதென்பது அதுவரை ஷார்லெட்டுக்குச் சிறிதும் தெரியாது. அப்படியிருக்கையில் டிசம்பர் மாசம் ஒருநாள் மாலைவேளையில் அவர் தேயிலைப்பானம் சாப்பிட வந்தார். அதைப் பானம்பண்ணியானபிறகு அவள் இரண்டு புருஷர்களையும் படிப்பறையிலேயே விட்டுவிட்டுத் தான் வழக்கப்படி உட்காரும் கூடத்திற்குப் போய்விட்டாள். அப்பொழுது படிப்பறையின் கதவு திறந்த சத்தம் கேட்டது. மறுபடி அந்தக் கதவைச் சாத்துகிற சத்தம் கேட்குமென்று அவள் எதிர்பார்த்துக்கொண்டே யிருக்கையில், தான் உட்கார்ந்திருக்கும் அறையின் கதவைத் தட்டிய சத்தம் கேட்டது. உடனே அவர் உள்ளே வந்தது அவளுக்கு மின்னல் மின்னியது போலிருந்தது. அவர் அவளுக்கு எதிரே வந்து நின்று அவளுடன் பேசியதைப்பற்றி அவள் சுருக்கமாக எடுத்துச் சொல்லியதாவது:—"அவர் அவ்விடத்தில் வந்த போது ஒன்றும் மறுமொழி சொல்லத் தோன்றாமல் திகில் பிடித்ததுபோல் பிரமித்து நின்றாராம். பிறகு அவர் கேட்ட கேள்வியைப் பார்த்து மனக்கவலையும் ஆச்சரியமும் கொண்டு இவ்விஷயத்தைப்பற்றி நான் இன்னும் என் தந்தையுடன் பேசி, அவர் கருத்தை அறிந்துகொள்ளவில்லை யாகையால், நாளையதினம் முடிவான அபிப்பிராயம் சொல்லுகிறேன்; நீர் உடனே இவ்விடம் விட்டுப்போய் விடும்" என்று சொல்லி அந்தக்ஷணமே அவரை வெளியே அனுப்பி விட்டதாகச் சொல்லுகிறாள்.

கற்பு என்பது சொல்தவறாமை ஆகையால் இந்தக் கலியாண விஷயத்தைப்பற்றித் தந்தையிடம் அவள் பிரஸ்தாபித்தாள். அவர் அப்படி செய்யக்கூடாதென்று அதை முற்றும் மறுத்துவிட்டார். அது கேட்டு மனப்பொருத்தமிருந்தால் மற்றப் பொருத்தம் பார்க்கவேண்டாம் என்று முதுமொழி இருந்தாலும் அவள் அப்படியே செய்யவேண்டுமென்று தான் சொன்னால் தந்தைக்கு ஏதாவது வருத்தமுண்டாகுமென்று பயந்து அப்படியே தானும் வேண்டாமென்று சொல்லிவிடுகிறதாகத் தெரிவித்தாள்.

இக்காலத்தில் அந்த நிகலஸுக்கு இருந்த வேலையும் போய்விட்டது. அதனால் ஷார்லெட் மனவருத்தப்பட்டுக் கொண்டே அங்கே சிலநாள் சும்மா இருந்தாள். இப்படியிருக்க இவளுடைய புத்தகத்தைப் பிரசுரஞ் செய்தவருடைய பெண்சாதி இவளை வரவழைக்க, அதுகேட்டுச் சந்தோஷமாய் 1853-ம் ௵ முதலில் லண்டனுக்குப் போனாள்.

நாளடைவிலே அவளது கலியாணத்திற்கு இருந்த தடைகளெல்லாம் நீங்கிப்போக, 1854-ம் ௵ ஜூன் ௴ ஹாவர்த்து தேவாலயத்திலேயே அவளுக்கும் அந்த நிகலஸுக்கும் ஏகாந்தமாகக் கலியாணம் நடந்தேறியது. கைநிறைந்த பொன்னைப்பார்க்கிலும் கண்நிறைந்த கணவன்மேல் என்று நினைத்தாள். அவள் கணவனோடு கூடிவாழ்வதனாலான சுகத்தை அதிக நாள் அநுபவிக்க வில்லையானாலும், அந்தச் சொற்பகாலத்தில் வெளியே எங்கும் போகாமல் அவ்விடத்திலேயே சுகமாகக் கூடி வாழ்ந்தாள். அவள் கணவனோடுகூடி மனைவாழ்க்கை இல்லறத்தையும் நடத்திக்கொண்டு நெடுநாள் ஜீவித்திருக்கவில்லை யென்பது பெரிய குறை. அவள் ஒருநாள் கணவனுடன் வெளியே உலாவப்போனபோது பெருமழை பொழிய அதில் நனைந்ததனால் ஜலதோஷம் கண்டு அதேகாரணமாய் அவளது மெல்லிய தேகம் அசௌக்கிய மடைந்து தனது நண்பர்களுக்கும்

கணவனுக்கும் தீராத துயரம் உண்டாக்கிவிட்டுப் பரலோகமடைந்தாள். அச்செய்தி கேட்டு அவளை அறிந்தவர்கள் எல்லாரும் கண்ணீர் பெருக்கலானார்கள்.

ஷார்லெட் தன் கடமையைச் செலுத்துவதே முதன்மையான காரியமாகக்கொண்டிருந்தாள். அவளுடைய மனோவாக்குக்காயம் ஒற்றுமைப்பட்டு உத்தமமானவைகளா யிருந்தன. கபடு சூது கடுகாகிலும் தெரியாது. அவளைப்பார்க்கிலும் வலிமையான தேகமும் மிகுந்த செல்வமும் உடையவர்களும் செய்து முடிக்காத காரியங்களை அவள் வெகு திறமையாகச் செய்து முடித்தாள். உடைமையென்பது கல்வியுடைமை என்னும் மூத்தோர் சொல்லுக்குத் திஷ்டாந்தமாக விளங்கினாள்.



PRINCESS ALICE.

1843–1878.

சக்கரவர்த்தினியாரின் இரண்டாவது புத்திரியாகிய ஆலிஸ் இராஜகுமாரத்தியின் சரித்திரம்.

ப்ளாரென்ஸ் நைத்திங்கேல், எலிஜபெத் ப்ரை இவர்கள் நடக்கையை மேற்சட்டமாகக்கொண்ட ஸ்திரீகள் இங்கிலாந்திலும், ஐரோப்பாவிலும் இப்போது இந்தியாவிலும், நூற்றுக்கணக்காயிருக்கின்றனர். அவர்கள் உதாரணமாகக் காட்டின இல்லறவாழ்க்கை, உயர்ந்தோராலும், தாழ்ந்தோராலும் அநுசரிக்கப்பட்டது. நமது மாட்சிமைதங்கிய சக்கரவர்த்தினியாரின் இரண்டாவது புத்திரியாகிய ஆலிஸ் என்னும் ராஜகுமாரத்தியின் சரித்திரத்தைப் பார்க்குமிடத்து மேற்கண்ட ஸ்திரீகளின் நன்னடக்கையானது, ராச்சியத்தில் சிறந்த பதவியிலுள்ளவர்களையும் நல்வழிப்படுத்தி வருகிறதென்று அறியலாம்.

ஒரு ராஜகுமாரத்திக்கு வைத்தியசாலையையும் அதிலுள்ள தாழ்ந்த குலத்து நோயாளிகளையும் குறித்து ஆவதென்ன! தன்னுயிரைப்போல மன்னுயிரையும் நினைத்து அந்த ஜனங்கள் பரிசுத்தமாயும் தகுந்த உபாசனைகளுடனும் இருக்கிறார்களா, அவர்கள் வீடுகளில் போதுமான காற்றும் வெளிச்சமும் உண்டா, அவர்கள் அழுக்கில்லாத வஸ்திரம் தரித்திருக்கிறார்களா, அவர்களுக்கு நல்ல ஆகாரமும் மருந்தும் கொடுக்கப்பட்டு வருகின்றனவா, என்னும் கவலைகள் ஒரு ராஜகுமாரத்திக் கென்னத்திற்கு! அவள் அரண்மனையில்

சுகமாயிருந்துகொண்டு தன் குழந்தைகளுடன் விளையாடிக் கணவனுக்குபசரித்து, நல்ல ஆடையாபரணங்கள் அணிந்து சங்கீதம் கேட்டு நாள்முழுவதும் சந்தோஷமாக இருப்பாள் என்று அல்லவோ நீ சொல்வாய்.

ஆம், அவள் சந்தோஷமாகக் காலத்தைக் கழிப்பது உண்மையே. எப்படி உண்டான சந்தோஷம் என்றால் சுயலாபம் பாராட்டாமல், அயலாருடைய க்ஷேமத்தை நாடினவளாய்த் தன்னுடைய குடிகள் எவ்வளவு ஏழைகளானாலும், எவ்வளவு வியாதிகளால் துன்பப்படுகிறவர்களாயிருந்தாலும் அவர்கள் சுகத்துக்காகக் கவலைப்படுவதே அவளுக்குப் பரம சந்தோஷம்.

அவள் பெருமைதங்கிய இராஜகுமாரத்தி. அவள் அநேக அழகான அரண்மனைகளில் வசித்தாள். அவளுக்கு அன்போடு வளர்க்கப்பட்ட ஆறு குழந்தைகள் உண்டு. அவர்களுடன்கூடி விளையாடி "நாற்பாற்குலத்தின் மேற்பாலொருவன் கற்றிலனாயிற் கீழிருப்பவனே" அல்லவாவென்று அவர்களுக்குக் கல்வி கற்பிப்பாள். அவள் தன் தாயார் தேசமாகிய இங்கிலாந்திலும், கணவன் தேசமாகிய ஜர்மனியிலும், அந்நியதேசங்களிலும், புத்தகங்களைப் படிப்பதிலும், பியானோ வாத்தியம் வாசிப்பதிலும், உலாத்துவதிலும், வண்டி குதிரைகள்மேல் சவாரிசெய்வதிலும், பர்த்தாவுக்கேற்ற பதிவிரதையாகத் தன் கணவனுக்கு இணைபிரியாத் துணைவியாகவும் இருந்தாள். அவள் நல்ல அழகான உடுப்புகளையும் அநேக ஆபரணங்களையும் தரித்தாள். ஆனால் இவையெல்லாம் அவளுக்கு வெளியலங்காரமேயன்றி அவள் மனோபாவத்தையும் சம்பாஷணையையும் விளக்கவில்லை; அது அவளுடைய மனக்கருத்தும் ஆசையும் இவைகளைப் பற்றவில்லை.

இவ்வாறாக அந்த ராஜகுமாரத்தி தனது சுகபோகங்களையே பாராமல் பிறருடைய நன்மையின்மேல் கவனமுள்ளவளாய் நடந்ததற்கு முக்கியகாரணம் அவளுக்கு அதிக விசேஷமாகச் சிறு பிராயத்திலேதானே கற்பித்த நற்குணங்களும் செய்துவந்த நல்ல பயிற்சிகளுமேயாம். "நான் என் பாலியத்தையும் இளம்பெண் பருவத்தையும் நினைக்கும்போது உண்டாகும் சந்தோஷம் மற்ற எல்லாச் சந்தோஷத்திலும் மேலானது" என்று தன் சிறுபிராயத்தைக்குறித்து எழுதியிருக்கிறாள்.

நமது சக்கரவர்த்தினியாருக்குப் பல குழந்தைகளுண்டு. அவர்களில் இந்தியாவுக்கு முதலில் வந்து நமக்கு இளவரசராயிருந்த பிரின்ஸ் ஆவ் வேல்ஸ் பிரபு, இரண்டாவது புத்திரராகிய ஆல்பர்ட் இராஜகுமாரர், சிலவருஷங்களாய் பம்பாயில் வசித்த கன்னாட் பிரபுவாகிய ஆர்தர் எனும் ராஜகுமாரர் ஆகிய இவர்களை நீங்கள் ஒருக்கால் பார்த்திருக்கலாம். ஆனால் சக்கரவர்த்தினியாரின் புத்திரிகளில் ஒருவரும் இதுவரையிலும் இந்தியாவுக்கு வந்ததில்லை. அவர்கள் எல்லாரும் இளமையிலேயே மணம்புரிந்து, தங்கள் வாழ்நாளைக் கணவருடன் இல்லறத்திலிருந்து கழித்தபடியால் இத்தேசத்துக்குவரச் சமயம் வாய்க்கவில்லை. அவர்களை நேரில் பார்க்க இத்தேசத்தாருக்கு நேராவிடினும் அவர்களை நமது சக்கரவர்த்தினியார் எவ்வாறு வளர்த்துக் கல்வி கற்பித்தார்கள் என்பதைக் கேட்க விருப்பமுடையவர்களாய் இருக்கலாம். அவர்களுள் ஆலிஸ் ராஜகுமாரத்தி சரித்திரமே மிகச் சிறந்தது. "அன்பே பிரதானம் அறிவே வெகுமானம்" என்று நினைத்து நடந்த அந்த உத்தமி இம்மை வாழ்வு நீங்கிப் பரலோகம் சேர்ந்தபடியால் அவள் சரித்திரத்தைப் பிறப்புமுதல் இறப்பு வரையில் பூரணமாய் அறியலாம்.

இராஜகுலத்துப் பிள்ளைகள் இராஜாதிகாரம் செலுத்தும் அதிகார ஸ்தானத்திற்குப் புறம்பாக வளர்ந்து வந்தபடியால் பெரியோர் தங்களுக்குச் செய்யும் மரியாதையாலும், அவர்களுக்குக் கீழ்ப்படிதலாலும், கர்வம், அகங்காரம், அவமதிப்பு முதலிய துர்க்குணங்கள் படிவதற்கு வழியில்லாமல் இருந்தது. அவர்கள் மற்றப் பிள்ளைகளைப்போலவே, கீழ்ப்படிதல், சாந்தம், கருணை முதலான நற்குணங்களையும் நன்னடக்கைகளையும் பயிற்சிசெய்துவந்தார்கள்.

நமது சக்கரவர்த்தினியாரும் அவர் கணவராகிய ஆல்பர்ட் பிரபுவும் "எண்ணென்பவேனை எழுத்தென்ப இவ்விரண்டுங் கண்ணென்ப வாழும் உயிர்க்கு" என்று சொல்லியிருப்பதை நினைத்துத் தக்க உபாத்தியாயரையும் செவிலித்தாய்மார்களையும் தங்கள் குழந்தைகளுடன் இருக்கும்படி தெரிந்தேற்படுத்தி, அவர்களுடைய கல்வித்தேர்ச்சிக்காகவும் நற்பழக்கத்துக்காகவும் என்னென்ன செய்யப்பட்டுவந்தனவோ அவற்றை அதிகக் கருத்தாய்ப் பார்த்துவந்தார்கள். பிள்ளைகளுக்குக் கொஞ்சம் வயதுவந்தவுடன் அவர்களை அங்கிலேய, ஜர்மானிய, பிராஞ்சுதேசத்துப் படிப்பாளிகளான மந்திரிகளிடத்தில் ஒப்புவித்தார்கள். அதனால் தங்களுடைய உயர்ந்த அந்தஸ்துக்கு வேண்டியபடி நல்ல தேகபலமும் மனவலிமையும் அடைந்தார்கள். அன்னியபாஷைகள் மாத்திரமல்ல, சங்கீதசாஸ்திரமும், சித்திரம் தீட்டும் வித்தையும் அவர்களுக்குக் கற்பிக்கப்பட்டன.

ஆலிஸ் ராஜகுமாரத்தியின் சிறுபிராயத்தைக்குறித்து அவள் தமக்கையார் அடியில் வருமாறு எழுதியிருக்கிறார்கள். "அவளது சட்டம், எழுதும் புத்தகங்கள் அழுக்குப் படியாமல் சுத்தியாய் வைத்திருந்ததுமன்றி கையெழுத்தும் அழகாய் இருந்தது. தேகபலமும், அழகும், முகத்தினழகும், பாலிய சாதுரியமும், சதுரப்பாடும், உல்லாசப்பேச்சும்,

சந்தோஷ குணமும் உள்ளவளாய்க் குழந்தைப்பருவ நோய்களுக்காளாகாமல், வேடிக்கை விளையாடல் முதலான எல்லாவித தேகமுயற்சிகளிலும் தேறினவளாயும் குதிரைகளிடத்திலும் அவற்றின்மேல் சவாரிசெய்வதிலும் அதிக ஆசையுள்ளவளாகவும் இருந்தனள். தன் சகோதரருடன் விளையாட இடங்கொண்டு ஒரு ஆண்பிள்ளையைப்போலத் துணிவுபட்டவளாயும் இருந்தாலும், மனுஷர்களிடத்தில் உண்மையான பக்ஷமும் தயாளகுணமும் அவளைவிட்டு நீங்கவில்லை.

ஆலிஸ் ராஜகுமாரத்திக்கு 12-ம் வயதில் "உள்ளிய தெள்ளியராயினும் வாழ்வினை பைய நுழையும்" என்னும் வாக்கியத்தின்படி விஷச்சுரம் உண்டாயிற்று. அப்போது அவர் பொறுத்துக்கொண்டு நடந்துவந்த நன்னடக்கையைப் பார்க்குமிடத்து அவருடைய இனிய குணமும், தருமகாரியங்களில் அவருக்குண்டாயிருந்த சிரத்தையும் நன்றாக விளங்கும்.

இப்படி இராஜவம்சத்துக் குழந்தைகளுக்கு நற்காரியத்தின்மேல் உண்டான விருப்பம் மேலுமேலும் விருத்திசெய்யப்பட்டது. அந்தக் குழந்தைகள் தங்கள் நாட்டு அரண்மனைகளொன்றில் வசிக்கையில் ஏழைக் குடிசைகளைப் போய்ப் பார்த்துவரும்படி அவர்களைத் தூண்டுவார்கள். இப்படிப் பாலியத்தில் போய்ப் பார்த்துவந்த குணங்களினால் தான் இராஜகுமாரத்திக்குப் பிற்காலத்தில் வியாதிவந்தவர்களிடத்திலும் துன்பப்படுகிறவர்களிடத்திலும் இரக்கமும் உதவி செய்யவேண்டும் என்கிற விருப்பமும் உண்டாயின.

இராஜவம்சத்துப் பிள்ளைகளுக்கென்று ஒரு சிறுவீடு இருந்தது. அதில் அதிசயப்பொருட்சாலையும், பாகசாலையும், உக்கிராண அறையும், சிறுதோட்டங்களும் இருந்தன. இங்கே அவர்கள் சொந்தத்தில் வீட்டு வேலைகளைச்செய்யவும், சிறுசிறு வேலைக்காரர்களைக் கண்காணிக்கவும் கற்றுக்கொண்டார்கள். இந்தச் சிறுவீட்டில் ஒருவரோடொருவர் பேதமின்றி

யாவருடனும் இணங்கி நேசித்துக்கொண்டும் தங்களுக் கிஷ்டமான வேலைகளைச் செய்துகொண்டுமிருந்தார்கள். இங்ஙனந் தங்கள் தாய்தந்தையரை விருந்தினராக வரவழைத்துத் தாங்களே சொந்தமாகச் சமைத்த அநேக பதார்த்தங்களை அவர்களுக்கு அளிப்பார்கள். இப்படிச்செய்வது தாய்தந்தையர்களுக்கு மிக்க இன்பமுண்டாக்கும். இவ்வாறு சக்கரவர்த்தினியாரின் குழந்தைகள் குடும்ப வாழ்க்கையின் சுகத்தை அநுபவித்துக்கொண்டுவந்தார்கள்.

ஆலிஸ் இராஜகுமாரத்திக்கு 15-ம் வயதானபொழுது அவளுடைய மூத்த தமக்கையார் ஜர்மனிதேசத்துச் சக்கரவர்த்தித் திருமகனை மணம்புரிந்தாள்; அதுமுதல் ஆலிஸ் இராஜகுமாரத்தி வீட்டுப்பெண்களில் பெரியவளாம்; இடைவிடாமல் தந்தை தாயர்களுக்கு முக்கியமான துணையாயிருந்தாள். உண்மையும் விடாமுயற்சியும் இருந்தாலொழிய இவ்வுலகத்தில் யாருக்கும் பதவிக்குத் தக்கபடி நடக்க சாத்தியப்படாதென்றும் "நற்குணமே நல்ல ஆஸ்தி" என்றும் தகப்பனார் ஆலிஸ் ராஜகுமாரத்திக்கு வற்புறுத்தினார். தகப்பனார் செய்வித்த பழக்கத்தால் அவளுக்கு சங்கீத முதலிய வித்தைகளில் இயற்கையாகவேயிருந்த ஆசை அதிகப்பட்டு அதைத் தினந்தோறும் அப்பியாசஞ் செய்துவந்தாள்.

சக்கரவர்த்தினியார் அவள் காலத்தில் தன் மகளைக்குறித்து அடியில் வருமாறு எழுதியிருக்கிறார்கள்:—

"அவள் அதிக சாந்தமும் நற்குணமும் புத்தியும் விரும்பத்தக்க குணமுமுள்ளவள். என் சௌக்கியத்துக்குப் பெரிய ஆதரவு. எவ்வளவுகாலவரையில் நியாயமாய் நிறுத்திவைக்கக்கூடுமோ அதுவரையில் நான் அவளைக் கலியாணம் செய்துகொள்ள இடங்கொடுக்கமாட்டேன்."

இராஜபுத்திரிக்கு 18-ம் வயதில், வின்ஸர் மாளிகையில் சக்கரவர்த்தினியாரும் அவரது உயிர்த்துணைவரான ஆல்பர்ட் பிரபுவும் வாசஞ்செய்துகொண்டிருக்கையில், அநேக பிர

புக்கள் விருந்தினராக வந்தனர். அவர்களுள் பாலியர்களான ஹெஸ்ஸி நாட்டுச் சிற்றரசர்கள் இருவர் வந்திருந்தனர். அவர்கள் இங்கிலாந்தைவிட்டுப் போனபிறகு, இராஜ்ஞியார் நாயகன் தனது பூர்வீக சிநேகிதனும் மந்திரியுமான ஸ்டாக்மர் பிரபுவைப் பார்த்து, அந்த இராஜகுமாரர்களில் ஒருவரான லூயிஸ் பிரபு ஆலிஸ் இராஜகுமாரிமேல் விருப்பம் கொண்டதாகவும் அந்த இராஜபுத்திரியும் அதற்கு இசைந்ததாகவும் அந்த இராஜவம்சத்தாரின் இஷ்டமும் நட்பும் இவ்விஷயத்தில் இன்னும் அதிகப்படுமென்றும் சொன்னார். காலக்கிரமத்தில் இது மெய்யாயிற்று. அந்த இளவரசரும் தன்பட்டாளத்தில் செலவுபெற்றுக்கொண்டு நவம்பர் மாதத்தில் இங்கிலாந்து வந்து சேர்ந்தார். அந்த மாதம் 30உ இராஜ்ஞியார் தமது தினசரியில் அடியில் வருமாறு எழுதினார்:—

"பகற்போஜனம் முடிந்து பெரிய மனிதர்களுடன் பேசிக்கொண்டிருக்கையில், ஆலிஸும் லூயிஸும் இதற்கு முன்னில்லாத உருக்கத்துடன் கனப்பொழுது சமீபத்தில் பேசிக்கொண்டிருக்கக்கண்டேன். நான் எதிர் அறைக்குப்போகும்போது, இருவரும் என்னிடம் வந்தார்கள். ஆலிஸ் அதிக மனக்கலக்கத்துடன் 'அவர் என்னை மணம்புரியக் கேட்கிறார்' என லூயிஸும் தன்னை ஆசீர்வதிக்கச் சொன்னார். நான் அதற்குப் பிரதி உபசாரமாக அவர் கையைப் பிடித்து "அவசியம் அப்படியே ஆகட்டும்" என்று சற்றுப் பொறுத்து அவரை எங்கள் அறையில் பார்ப்பதாகச்சொன்னேன். அந்திப்பொழுதைக் கூடியவரையில் சுகமாகக் கழித்து ஆலிஸ் எங்கள் அறைக்கு வந்தாள். அவள் மனக் குழப்பத்துடன் இருந்தாலும் அமைதியாக இருந்தாள். என் கணவர் லூயிஸ் என்பவரைத் தன் அறைக்கு வரச்சொன்னார். முதலில் அவர் அங்கே போய் என்னையும் ஆலிஸையும் உள்ளே அழைத்

தார். ஆயினும் அதிக அன்பும் பெருந்தன்மையுமுள்ளவர். நாங்கள் எங்கள் அருமை ஆலிஸை மார்போடணைத்து அவளைக்குறித்து ஆலிஸ் முக்யமாகப் புகழ்ந்து பேசினோம்; அவர் என் கையைப் பிடித்துக்கொண்டு அதை முத்தமிட்டார். சற்றுநேரம் பேசிக்கொண்டிருந்து பிரிந்துபோனோம். இந்தச் சம்பாஷணை எனக்கு அதிகப் பிரியமாகவும் மதுரமாகவும் இருந்தது."

இந்த விவாஹமானது மனப்பூர்வமான அன்பினால் சேர்ந்தபடியால் அந்த யௌவனதம்பதிகள் அநுபவித்த இன்பம் சிறந்தது. ஆலிஸ் இராஜகுமாரன் கிறிஸ்மஸ் பண்டிகைக்கும் இருந்தார். அந்தப் பண்டிகைகளில் இங்கிலாந்திலும் ஜர்மனியாவிலும் அநேக குடும்பங்கள் ஒன்றாகக்கூடி சந்தோஷமாகத் திருவிழாக் கொண்டாடுவது வழக்கம். இவ்வருஷம் அவ்வாறு மணவாளருடையதாகையால் மேற்சொன்ன பண்டிகை இன்னும் அதிக சம்பிரமமாக நடந்தது.

இப்படிச் சந்தோஷமாகக் கழிந்த சில வாரங்களுக்கு மேல், ஒரு விசனமான காரியம் சம்பவித்தது. சக்கரவர்த்தினியாரின் தாயார் வியாதிப்பட்டு மரணமடைந்தாள். ஆலிஸ் இராஜகுமாரத்தியின் வருத்தத்தை என்னவென்று சொல்லுகிறது. "அருமைப்பாட்டியுடன், படித்துக்கொண்டும் அவளுக்காக பியானுவாத்யம் வாசித்துக்கொண்டும், காலத்தைக் கழித்தபடியால் அவள் மரணம் அதிக விசனத்தை உண்டாக்குகின்றது" என்றாள்.

சிலமாதம் கழித்து ஆலிஸ் இராஜகுமாரத்தியின் கலியாணத்துக்காக வேண்டிய ஆயத்தங்கள் நடக்கையில், அவளுடைய அருமைத் தந்தை நோயில் விழுந்தார். அவர் வியாதியாயிருக்கையில் இராஜகுமாரி அடிக்கடி அவரிடம் போய் அவருக்கு ஏதேனும் படித்துக் காட்டிக்கொண்டு வந்த

தன்றி தன் தாயாருடனும் அடிக்கடி வந்திருப்பாள். குடிசையிலானாலும், உப்பரிகையிலானாலும், மரணத்தைத் தவிர்க்க யாரால் ஆகும்? டிசம்பர் மீ 14உ நமது சக்கரவர்த்தினியாரின் உயிர்த்துணையாகிய மாட்சிமை தங்கிய ஆல்பர்ட் இராஜப்பிரபு அதிக சாந்தகுணத்துடன் இவ்வுலக வாழ்க்கையை நீத்தார். அந்த மகிமைதங்கிய இராஜநாயகருடைய சீலத்தையும் கீர்த்தியையும்பற்றி விவரித்துச்சொல்ல இங்கே இடமில்லை. அவர் குற்றமற்ற வாழ்க்கையாகிய வெண்மலர் தரித்தவர், மிக்க அடக்கமும் பட்சமும் எல்லாவற்றிலும் தேர்ந்த ஞானமும் உள்ளவர். "அரசுக்கில்லை சிறுமையும் பெருமையும்" என்றபடி சாதாரண ஜனங்களுக்காகவும் ஏழைகளின்பொருட்டும் உழைப்பவர். அவர் தன் மனச்சாட்சியைத் தன் அரசனைப்போல மதித்தார். ஜனங்களுக்கு நேர்ந்த சங்கடங்களை நீக்குவதே அவருக்குப் பெருமை. அவர் ஒருவனைப்பற்றியும் குறைகூறார். யாரேனும் ஒருவர்மேல் குற்றங்கூறின் அதற்கும் செவிகொடார். அவர் ஒரே பிராணியை நேசித்து அவளைவிடாமல் பற்றிக்கொண்டு இருந்தார்.

இப்படிப்பட்ட மகாநுபாவரான புருஷரின் வியோகத்தால் நமது சக்கரவர்த்தினியார் மனமுடைந்துபோனதும் அவர் குழந்தைகள் ஆதரவற்றுப் போனதும் அதிசயம் அல்ல; சக்கரவர்த்தினியார் தன் அருமைநாயகன் இறந்து மகத்தான விசனம் அடைந்த காலத்தில், மனம் நெகிழ்ந்த தாய்க்கு ஆலிஸ் ராஜகுமாரத்தி மற்றெல்லாரைக்காட்டிலும் ஒரு பெரிய ஆதரவாயிருந்தாள்.

ஐயோ எப்படிப்பட்ட தகப்பனார்! எவ்வளவு உயர்ந்த குடும்பத்தலைவர்! தன் மனைவிக்கும் மக்களுக்கும் எவ்வகையான நேசர்! எவ்வளவோ மேலான மந்திரி! இப்படித் தன் அருமைத் தந்தை இறந்ததால் தானே விசனத்தில்

மூழ்கி இருந்தாலும் சிறந்த பாக்கியமுள்ள குடும்பத்துக்கு நேரிட்ட அந்த கோரமான விசனகாலத்தில் ஆலிஸ் இராஜகுமாரத்தி முக்கியமான எல்லாக் காரியங்களையும் தானே நடத்தத் துணிந்தனள். விசனத்தால் துவண்டுகிடந்த மஹாராணியாருக்கு மந்திரிமாரும் வீட்டாரும் எழுதின கடிதங்கள் யாவும் இராஜகுமாரத்தி மூலமாய்ச் சென்றன. அவள் எழுத்து மூலமாயும் வாய்மொழியாயும் தனது தாய்க்கு எவ்வித வருத்தமும் உண்டாகாதபடி காத்தாள். விசனப்படுகிற இராணியாருடன் நடந்த இவ்வித அந்தரங்கமான போக்குவரவினால் தான், இராஜபுத்திரிக்கு இராஜதந்திரங்களில் அவ்வளவு தேர்ச்சியும் சித்தையும் உண்டாகி பிற்காலத்தில் அவளுக்கு பிரஸித்தி உண்டாயிற்று. இப்படிப் பட்ட சமயத்தில்தான் அவளுக்கு அநேக காரியங்களை ஒழுங்குபடுத்தும் திறமும், எப்பொழுதும் உழைக்கவேண்டுமென்கிற விருப்பமும் உண்டாகிப் பிற்காலத்தில் ராஜ காரியங்களிலும் மிக்க சிறப்பு உண்டாயிற்று. அறியாதவளாய் இருந்த இராஜகுமாரத்தி திடீரென விவேகமும் முன் யோசனையுமுள்ள ஒரு பெருமாட்டியாக மாறிப் பிறருடைய நன்மைக்காகத் தன் வாழ்நாளை அர்ப்பணம்பண்ணி உயர்ந்தோராலும், தாழ்ந்தோராலும் நேசித்துச் சன்மானிக்கப்பட்டு வந்தாள்.

அவள் தகப்பனார் இறந்த பதினேழாம் வருஷத்தில் ஐயன் அளந்தபடி அதேதினத்தில் அவளும் இறந்தாள். அதுவரைக்கும் அவருடைய மரணத்தால் உண்டான விசனம் அவளை நீங்கவில்லை என்பது அவள் விடாமல் அவருடைய வருஷாந்த திவசங்களில் தன் தாயாருக்கு எழுதி வந்த கடிதங்களால் தெரியவரும்.

அவர் இறந்த மூன்றாம் வருஷத்தில் அவரைக்குறித்து இராஜகுமாரத்தி அடியில் வருமாறு எழுதி இருக்கிறாள்:—

“இன்றைக்கு நாங்கள் இருவரும் சில ஆசைவார்த்தைகள் எழுதுகிறோம். இந்தக் காலமும் இந்தத் தினமும் எனக்கு விசனத்தை உண்டாக்குகிறது. கண்ணீர் தாரைதாரையாய்ப் பெருகுகிறது. இயற்கையாகவே விசனப்பட்டிருக்கிற உமக்கு நான் விசனத்தை அதிகப்படுத்தலாகாது.”

ஐந்து வருஷங் கழிந்தபிறகு அவள் அடியில் கண்டபடி எழுதினாள்:—

“நான் படுக்கைக்குப் போகுமுன் சில அன்புகூர்ந்த வார்த்தைகளை 14உ காலை உம்மைச் சேரத்தக்கதாய் எழுதுகிறேன். அந்தத் தேதியை நினைத்த மாத்திரத்தில் அது எவ்வளவு காலமானாலும், எனது பிரியமுள்ள தாயே உமக்கும் எங்களுக்கும் உண்டான ஆறுதலற்ற நினைவை உண்டாக்குகிறது. எனது அருமைத் தந்தை இறந்தும் இறவாதவரே, அவர் செய்த நன்மையும், உலகத்தில் அவர் பிரசித்தப்படுத்தின மேலான கருத்துகளும் கோட்பாடுகளும், சுயநயம்பாராட்டாத பெருந்தகைமையுள்ள அவருடைய குணமும், நீடூழிநிற்கும். இவ்வுலகில் அவதரித்தவர்களில் அவ்வளவு குற்றமற்றவரும், உயர்ந்தவரும், தெய்வபக்தியுள்ளவரும் யாருமில்லை. அவருடைய நன்னடக்கை மற்றவர்களை இன்னும் மேலான குற்றமற்ற காரியங்களைச் செய்யத் தூண்டுமல்லவா? எனது அருமைத் தந்தையின் வாழ்வு வீண்போகாதென்பது எனக்கு நிச்சயம். அவர் கருதிவந்த பெருங்காரியம் முடிந்தது. அவருக்குச் செய்து முடிக்க அவகாசமல்லாத காரியங்களை உம்மை நிறைவேற்றும்படி விட்டுப்போனார். 14உ முழுவதும் உம்மையே ஸதாகாலம் நினைத்துக்கொண்டிருப்பதன்றி கடவுளை தியானிக்கும்போதும் உம்மை மறவேன். உமது பக்தியுள்ள குழந்தையையும் சற்று நினையுங்கள்.”

இதற்குப் பதின்மூன்றாம் ஆண்டில் தன்னுடைய பிதா மரித்தும் தெய்வமாகின்றதை நினைத்து அவள் எழுதுகிறதாவது:—

“இத்தினம் முடிவதற்கு முன் நான் சில வார்த்தைகளை எழுதவேண்டும். இறந்த காலத்தின்மேலும், முக்கியமாய் என் அருமைத் தந்தை ஜீவந்தராய் இருந்து அதிக சந்தோஷத்தை உண்டாக்கின என் இளமைப்பருவத்தின் மேலும் என் மனது செல்லுகிறது. இன்றைக்கெல்லாம் உம்மையும் அவரையும் வர்ணிக்கிற தியோடோர் மார்ட்டின் என்பவர் எழுதின “இராஜநாயகன் சரித்திரத்தை”ப் படித்துக் கொண்டிருந்தேன்.

அவர் ஸ்டாக்மர் பிரபு சிலாகிக்கிறபடி என்ன மஹாநுபாவர்! அவர் எவ்வளவு மாட்சிமைதங்கிய பிரபு! அப்படிப்பட்ட தகப்பனாருக்கு நான் பெண்ணாகத்தக்கவளா? அவரைப் போலவே நானும் உயர்ந்த விஷயங்கள்மேலேயே நோக்கம் வைத்தவளானாலும் அவற்றைச் செய்து முடிப்பதில் நான் அவருக்கு எவ்வளவு தாழ்ந்தவள்! ‘அரைச்சொல்கொண்டு அம்பலம் ஏறினால் அரைச்சொல் முழுச்சொல்லாமா?’ ”

இவ்வாறு இராஜகுமாரத்தி தன் தகப்பன்மேலுள்ள நினைவால் தன் வாழ்நாளின் பொன்னூலில் தன் ஆசைவார்த்தைகளும், தருமச் செய்கைகளும், இதற்குச் செய்யும் சாதாரண உதவிகளுமாகிய முத்துக்களைக் கோர்த்துக் காட்டுவாள். சித்திரவித்தை, சாஸ்திரம், இவற்றைக் கற்பதிலானாலும் சரி, கைத்தொழில், விவசாயம், கல்வி இவற்றை விருத்தி செய்வதிலானாலும் சரி, தன்வீட்டை இஷ்டமானபடி ஒழுங்குபடுத்துவதிலானாலும் சரி, உழைத்துப் பிழைக்கிற தாழ்ந்த ஜாதியார்களின் வீடுகளைச் சீர்படுத்தி, மட்டான செலவுசெய்தல் வீட்டுக்காரியம் முதலானவற்றைக் கற்பித்து அவர்களுடைய நிலைமையைச் சீர்படுத்துவதிலானாலும் சரி, எந்தக் காரியம் செய்ய ஆரம்பித்தாலும் இராஜகுமாரத்தி தன் தந்தைகாட்டிய வழியில் நடந்து அவரைக் கனப்படுத்துவாள்.

தன் தந்தை தேகவியோகமான ஏழாம் மாதத்தில் இராஜகுமாரத்தி விவாஹம் செய்துகொண்டு சிலநாளைக்கெல்லாம் இங்கிலாந்தை விட்டுத் தன் கணவனுடன் சென்றாள்.

அவள் புகுந்த அகம், அங்கேயே இராஜகுமாரத்தியாய் வளர்ந்துவந்த பிறந்த அகத்துக்கு சமீபமாயிருந்தும், அதிலும், அவள் தன் கணவன் ஊராருக்கு இசைந்து நடக்கத் தீர்மானித்து இரண்டுவருஷத்துக்குள் ஒரு பேதமுமன்றி அவர்களுடன் இணங்கிக் கலந்துகொண்டாள். அப்போது அவள் தன் தாயாருக்குப் பின்வருமாறு எழுதினாள்:—

“எங்கள் வாழ்க்கை மிக்க ரம்மியமானது இவ்வுலகத்தில் எனக்கு ஒரு குறைவும் கிடையாது. என் நாயகனுக்காக வீட்டை எவ்விதத்திலும் சௌக்கியமானதாகவும் சந்தோஷமுள்ளதாகவும் செய்வதே எனது இடைவிடாத நோக்கம்.”

அவள் மனைவாழ்க்கையில் பிரவேசித்துச் சிலநாள் வரையில் வீட்டுக்காரியங்களில் தேறுவதிலும், தன் புது வீட்டில் ஸ்திரப்படுவதிலும், பிறக்கப்பிறக்கச் சிறுகுழந்தைகளைப் பாதுகாத்து வருவதிலும், தன் காலத்தைக் கழித்தாள். அவள் சங்கீதத்திலும் சித்திரவித்தையிலும் மிகத்தேர்ந்தவள்.

இந்த வித்தைகளையெல்லாம் அவள் கொஞ்சமும் தன் நன்மைக்காகக் கற்காமல் பிறரைப் பிரியப்படுத்துவதற்காக அப்பியாசம் செய்துவந்தாள். இவ்வாறு இராஜகுமாரத்தியின் குணதிசயங்கள் அவளுடைய இளமைப்பருவத்தில் நாளுக்குநாள் முதிர்ந்து வெளிப்பட்டுத் தனக்கு விசேஷ கஷ்டமும், துன்பமும் நேரிட்ட பிற்காலத்தில் நன்மை செய்வதனால் உண்டாகும் பலன்களை விளைவித்தன.

சில காலத்திற்கெல்லாம் இராஜகுமாரத்தி பரோபகார சிந்தையுடன், வருந்துகிற ஏழைகளுக்கு உபகாரஞ்செய்ய முயன்றாள்.

அவளுடைய 22-ம் வருஷத்தில் தன் தாய்க்குப்பின் வரும் கடிதம் எழுதினாள்:—

"நான் இன்று இவ்வூர் ஆஸ்பத்திரியைப் பார்க்கப் போகிறேன்." அது நன்றாகவில்லையாம். சரியாய்ப் பராமரிக்கப் படவில்லையாம். நான் அதைச் சற்றுச் சீர்ப்படுத்த விரும்புகிறபடியால் நான் காரியசித்தி பெறலாமென்று நம்புகிறேன். ஜனங்களுக்கும் பணம் இல்லாமற் போகவில்லை. கொடுக்கத்தான் மனமில்லை. நகராதிபதியும் நகராலோசனைச் சபையாரும் அங்கே என்னைச் சந்திப்பார்கள். பிரஸவிக்கும் ஏழை ஸ்திரீகளுக்குச் சில வஸ்திரங்களைக் கொடுத்து உதவும்படியான ஒரு புது ஏற்பாடு இப்போதுதான் நான் செய்திருக்கிறேன். இந்த ஜனங்களுக்கு அழுக்குவஸ்திரத்தினால் உண்டாகுந் துன்பம் கொஞ்சமல்ல, ஆஸ்பத்திரியைப்பார்க்க எனக்கு அதிக இன்பமுண்டாயிற்று. இடம் காற்றோட்டமாயும், சுத்தமாயும் இருந்தது. ஜனங்கள் சரியானபடி பாதுகாக்கப்பட்டு வந்தார்கள். சுத்தவாயுவும் சுத்த ஜலமும் இவ்விடத்தில் நிறைந்து ஜனங்களுக்கு மிக்க நன்மையுண்டாக்குகின்றன"—என்றாள்.

ஆலிஸ் இராஜகுமாரத்தி சிலகாலத்திற்கெல்லாம் மருத்துவ ஆஸ்பத்திரி ஒன்றிற்குப் போஷகியானார். அவருக்கு இந்த விஷயத்தில் இருந்த சிரத்தையானது இரண்டாவது புத்திரி பிறக்கவே, இன்னும் அதிகப்பட்டது. இந்தக் குழந்தையைத் தாமே போஷிப்பதில் பெருமை யுடையவராய், இதுமுதலாகக் குழந்தைகளின் தேகமனோதத்துவம், சன்மார்க்க அபிவிருத்தி முதலான எல்லாக்காரியங்களிலும் மிகுந்த கருத்துள்ளவரானார்.

ஸ்திரீகளுக்கு வியாதி உண்டானபொழுது வாஸ்தவத்தில் அவர்களுக்கு அப்படி வைத்தியம் செய்யப்பட்டதென்றும், இராஜகுமாரத்தி வருஷங்களாக ஆபத்தப்பட்டிராமல் சாதா

ரணமாக வீடுகளில் இருக்கையில் அவர்கள் வாழ்க்கை யெவ்வாறாகுதென்றும், தன் கண்களால் நேரில் பார்க்கவேண்டுமென்று ஆசையுற்றிருந்தபடியால், தாம் இன்னார் என்று தெரியாதபடி ரகசியமாய் அவர்கள் வீடுகளுக்குப்போய் அங்கே எழுதியனுப்புவார்.
பார்த்தவைகளைத் தன் தாய்க்கு

"நான் அன்று செய்த சில காரியத்தை உமக்குச் சொல்லுகிறேன். இது என் புருஷனும் சில துரைசானிகளும் தவிர வேறொரு பிராணிக்கும் தெரியாதாகையால், நீர் இந்தச் சங்கதியை ஒருவருக்கும் சொல்லாதிருக்கக் கேட்டுக்கொள்ளுகிறேன். இங்குள்ள மருத்துவ ஆஸ்பத்திரிக்கு நான் போஷகி. அதற்கு நீரும் நல்ல வெகுமானம் கொடுத்திருக்கிறீர். இதைச் சேர்ந்த துரைசானிகள், பிரஸவித்திருக்கிற நல்ல குலத்து ஏழை ஸ்திரீகளுக்கு வஸ்திரம் கொடுத்துவருகிறார்கள். எல்லாப் பிரஸவங்களும் எனக்கு அறிவிக்கப்படுகின்றன. அன்றைக்கொருநாள் பழையபட்டணத்தில் ஒரு வீட்டுக்கு யாரோ ஒரு சாதாரண ஸ்திரீயைப்போல, கிறிஸ்டாவைக் கூட்டிக்கொண்டு போனேன். அந்த வீட்டைக் கண்டுபிடிக்க அதிக கஷ்டப்பட்டு, கடைசியாய் ஒரு அஸங்கியமான முற்றத்தின் வழியாய் ஒரு சிற்றேணியேறி ஒரு சின்ன அறைக்குள் போனோம். அங்கே ஒரேபடுக்கைமேலே அந்த ஸ்திரீயும் அவள் குழந்தையும் படுத்துக்கொண்டிருந்தார்கள். அதே அறையில் அவள் புருஷனும் இருந்ததன்றி, வேறு இரண்டு கட்டில்களும் ஒரு அடுப்பும் இருந்தன. ஆனாலும் அதில் துர்வாசனையாவது அழுங்காவது இல்லை. நான் கிறிஸ்டாவைக் குழந்தைகளோடு விளையாட விட்டு அவள் கணவனுடன் அந்த ஸ்திரீக்குக் கொஞ்சம் ஆகாரம் செய்துகொடுத்து, அவள் படுக்கையைச் சீர்ப்படுத்தி, அவள் குழந்தை அதிக பலஹீனமாயும் சீர்கேடாயும் இருந்தபடியால் அதையெடுத்துக் கண்ணைத்துடைத்து, இன்னும் பல உபசாரங்களும் செய்தேன்.

நான் அந்த வீட்டுக்கு இரண்டுதரம்போயும், அந்தச் சனங்களுக்கு நான் இன்னார் என்று தெரியாது. அவர்கள் அதிக அழகுள்ளவர்களும் நல்லவர்களும் ஒருவருக்கொருவர் அதிக உருக்கமுள்ளவர்களுமாக இருந்தார்கள். அவ்வளவு தரித்திரத்தில் அவ்வளவு நல்ல குணங்களைக்காண மனதுக்குச் சந்தோஷமாக இருந்தது. அவள் கணவன், வேலையொன்றுமில்லாமலும் பிள்ளைகள் பாடசாலைக்குப் போகத்தக்க வயசு இல்லாதவர்களாயும் இருந்தார்கள்; அவள் பிரஸவித்த காலத்தில் அந்த வீட்டில் நாலுறாக்காணிதான் இருந்தது. அவர்களுக்கு எவ்வளவு இடுக்கணும் துக்கமும் உண்டாயிருக்க வேண்டும் பாருங்கள்.

தரித்திரத்தை அநுபவியாமலே எப்போதும் அரண்மனையில் வசிப்பவர்களுக்குத் தயை, தர்மசிந்தை முதலிய நற்குணங்கள் உண்டாகா. வெளியேபோய் என்றால் ஆனமட்டும் சிறு உபகாரங்களைச் செய்வது அவசியமெனத் தோன்றிற்று. கேட்காமல் கொடுப்பது உத்தமம் என்று காண்கிறது. இது சரியென நீங்கள் நினைப்பீர்களென்று நம்புகிறேன்."

இராஜகுமாரத்தி தன் கணவனைக்குறித்து அடியில் வருமாறு எழுதுகிறார்:—

"என் அருமைத் தகப்பனாரை நான் எவ்வளவு பெரும்பாக்யமாக எண்ணுகிறேனோ, அது அவருக்குத் தெரிந்திருக்குமென்பதற்குச் சந்தேகமில்லை, உங்களிருவருடைய ஆசீர்வாதமும் எங்களைக் காக்கின்றன. நாங்கள் இருவரும் உங்கள் இருவரிடத்திலுமிருந்து பிரிந்திருப்பதாகக் காணப்படவில்லை. எங்கள் வாழ்வும் உங்கள் வாழ்வும் ஒன்றோடொன்று இணைந்து கலந்திருக்கிறது. ஜனங்கள் எங்கே என் கணவனைப்போல தேக உழைப்பு, நேசம் முதலிய நற்குணமுள்ளவர்களாயிருக்கிறார்களோ, அங்கெல்லாம் எங்கள் தெய்வத்தந்தையின் குண ஒற்றுமையைக் காண்கிறேன். இது நிச்சயம் அல்லவா? நாம்

எல்லோரும் அவரைப்போலிருப்போமாக. என் செல்வத் தாயே! எனக்கு தினம் நேரிடுகிற சிறு சிறு ஆபத்துக்களிலும் நான் அவரைப்போல நடக்க முயலுகிறேன்."

இராஜகுமாரத்தியும் அவர் கணவரும் தம்மக்களுடன் வருஷத்துக் கொருமுறை இங்கிலாந்துக்குப் போய்வருவது வழக்கம். ஒவ்வொருதரமும் அவர் திரும்பி வருகையில் அதிக உற்சாகமும் முகத்திலே களையும் உள்ளவராயிருப்பார்.

இப்படிப் பிரயாணம் செய்து திரும்பிவந்த ஒருதரம் தமது தாயாருக்கு அடியில் வருமாறு எழுதினார்:—

"உமது அன்புள்ள வசனங்களுக்கும் கோரிக்கைகளுக்கும் அநேக வந்தனம். உம்மையும் வீட்டையும் குறித்து நான் அதிகமாக நினைத்துக்கொண்டிருக்கையில் உம்முடைய நிருபம் சேர்ந்து அதிக சந்தோஷம் உண்டாக்கிற்று. அதனால் உம்மோடும், உமக்காகவும், நான் அதிக அநுதாபப்படுகிறேன். நாள் முழுவதும் என் கண்களில் நீர் ததும்பிக்கொண்டிருந்தது. புது வருஷம் வரவே, அப்பா, பாட்டி, இவர்கள் நினைவும், முன்னே உவின்ஸர் மாளிகையில் இருந்த எல்லாருடைய ஞாபகமும் விசேஷமாய் உண்டாகி, என் மனதைப் புண்படுத்திற்று. நான் வீட்டுக்குப் பெரியவளாக இருந்த காரணத்தைப்பற்றி எனது அன்புள்ள தாய்தந்தையாகிய உங்கள்முன் எப்போதும் இருக்கும்படி சிலாக்கியம் பெற்றிருந்தது கழிந்துபோன அந்தச் சந்தோஷகாலமும், முக்கியமாய் அதன் பிற்பாகமும் என் மனதில் தங்க எழுத்துக்களில் பதிக்கப்பட்டிருக்கிறது. நமது வீடு அந்த வருஷப்பிறப்புத் தினத்தில் எவ்வளவு விபவமாக இருக்கும். நாங்கள் எல்லோரும் ஒருங்குகூடி உமது அணிபூண் அறைக்கு வெளியே இருந்து "சந்தோஷமான வருஷப்பிறப்பு" என்று ஒரே குரலாய்க் கூவி, முன்வாரத்தில் அதிக சிரமப்பட்டு எழுதிய சித்திரங்களையும் உருவங்களையும் உமக்கும் அப்பாவுக்கும் கொடுத்து,

எங்களுக்குத் தெரிந்த கவிகளை ஒப்புவிப்போம். அப்படி ஒப்புவிக்கையில் நாங்கள் அடிக்கடி இரண்டொருவார்த்தை ஞாபகத்துக்கு வாராமல் திகைத்து நின்றால், சிரிப்பை அடக்க அப்பா உதட்டைக் கடிப்பார். அதன்மேல் அங்கிருந்து கால் நடையாய்க் கிராமபாடசாலைக்குப்போய் அங்கே ஏழைகளுக்குப் பிச்சைகொடுப்போம். இந்த விபரங்களையெல்லாம் என் கணவருக்கு அன்றுமாலை முழுவதும் சொல்லிக்கொண்டிருந்தேன். என் அருமைத்தாயே! அந்த நாட்கள் மகா பாக்கியமுள்ள நாட்கள். அவற்றை நினைத்தமாத்திரத்திலேயே உமக்கும் பளீரென ஒரு மனமகிழ்ச்சி உண்டாக வேண்டும். அந்தப் பொங்கும் காலமாக நினைத்து ஒருதினமுந் தப்பாமல் வீட்டிலேயே இருந்தோமென்று அதிக ஆனந்தப்படுகிறேன்."

இராஜகுமாரத்தி தானே தனியாய்ப் படித்த புத்தகங்களையும், தன் கணவருக்குப் படித்துக் காட்டிய புத்தகங்களையும் குறித்து அடியில் எழுதுகிறாள்.

"நீர் அனுப்பிய "இஞ்சினீர்களின் சரித்திரம்" என்னும் புத்தகத்தை ஆயில்ஸ் முழுவதும் வாசித்தார். அதைப்போல் அவ்வளவு விநோதமான புத்தகத்தைக் காண்பது அரிது."

மறுபடியும், "தேக தத்துவங்களையும், குழந்தைகளையும், அவைகளை நடத்தவேண்டிய விதிகளையும் குறித்து அநேக புத்தகங்கள் படித்துச் சிந்தனை பண்ணினேன். அவை எனக்கு அதிக மன உற்சாகத்தை உண்டாக்கினவன்றி மிக்க பிரயோஜனத்தையும் விளைவித்தன. இவற்றைப் படிப்பதனால், வைத்தியர்கள் இன்னின்ன செய்யவேண்டுமென்றும், இன்னின்ன செய்யக் கூடாதென்றும், சொல்வதற்குக் காரணங்கள் எளிதில் விளங்கும். ஏதேனுமோர் வியாதிகண்டு வைத்தியர் வருவதற்குச் சற்றுச் சாவகாசப்பட்டால், சொற்ப பரிகாரங்கள் நாமே செய்யலாம். இது மனவெறுப்பு ஒன்றும்

உண்டுபண்ணாமல் நாம் எவ்வளவு அதிசயமாகச் சிருஷ்டிக்கப்பட்டிருக்கிறோமென்று நமக்கு மனதில் ஆச்சரியத்தை உண்டாக்குகிறது."

இராஜகுமாரத்தி தமது 23-வது வயதில் பைத்தியக்காரருக்கு வைத்தியசாலை யொன்றை ஸ்தாபித்தார். இதற்குப் பொருள் சேகரிக்கும்பொருட்டுத் தமது புது அரண்மனையில் ஒரு அலங்காரக்கடை ஏற்படுத்தி, அதில் அநேக சித்திரப்படங்களும், விந்தை விந்தையான பொருள்களும் விற்பனை பண்ணுவிக்கும் பாவனையாகக் கையொப்பங்கள் கொடுக்கும்படி ஏற்பாடு செய்தார். நாலுநாள் வரையில் இந்த விநோத விற்பனை நடந்தேறி 16,000 ரூபாய் சேகரிக்கப்பட்டது. ஐரோப்பாவிலும் இங்கிலாந்திலுமுள்ள துரைசானிகள் இவ்விதமாகத்தான் அநேக தரும காரியங்களுக்கு விசேஷ பொருள் சேர்ப்பார்கள். பெரிய துரைசானிகளும், அவர்கள் பெண்களும், தையல், பின்னல், பூப்போடல், சித்திரம் எழுதல், வாத்தியம் வாசித்தல், சங்கீதவித்தை முதலியன கற்றுத் தேர்ந்து, இவ்வித அருமை வித்தைகளைத் தங்கள் சொந்த நன்மைக்கும் விநோதத்திற்குமே உபயோகிக்காமல், ஏழைகள், நோயாளிகள், வருந்துகிறவர்கள், இவர்களின் நன்மைக்காகவும் உபயோகப்படுத்துவார்கள். ஒரு பட்டணத்தில் அல்லது கிராமத்தில் ஒரு தர்மசாலைக்காவது, பாடசாலைக்காவது பணம் இல்லாதிருந்தால், அவ்விடத்திலுள்ள பிரதான துரைசானிகள் கூட்டம்கூடிப் பேசிப் பணம் சேகரிக்கப் பல உபாயம் செய்வார்கள். ஒரு துரைசானி ஒரு ஜதை பூத்தையல்போட்ட பாதரட்சை செய்து கொடுக்கவும், வேறொருத்தி ஒரு மெத்தை தைத்துக்கொடுக்கவும், இன்னும் ஒருத்தி ஒரு குல்லாவுக்குப் பூச்சித்திரத் தையல்வேலை செய்துகொடுக்கவும், ஒப்புக்கொள்வார்கள். மற்றவர்களும் இவ்வாறே ஒவ்வொரு பொருள் செய்து

கொடுப்பதாகச் சொல்வார்கள். அதற்குமேல் ஒருமாதம் பொறுத்துக் குறித்த ஒரு தினத்தில் மேற்கண்ட பொருள்களை அலங்காரக்கடையாக அடுக்கடுக்காய் வைத்து விற்கும்படி ஏற்பாடு செய்து, அறிக்கைப்பத்திரங்கள் அச்சிட்டு அவற்றில் இவ்விற்பனைகளின் நோக்கத்தையும் பிரசித்தப்படுத்துவார்கள். அக்கம்பக்கங்களிலுள்ள சனங்களும் வந்து துரைசானிமார் சிரமப்பட்டுச்செய்த விநோதப் பண்டங்களை விலைகொடுத்து வாங்குவதினால் அதிக பணம் சேரும்.

இவ்வாறு இங்கிலாந்து தேசத்துத் துரைசானிகள் தங்கள் தேகவுழைப்பால் வருஷாவருஷம் அநேக லட்சம் ரூபாய் சேகரம் செய்கிறார்கள். இது கற்பனையல்ல வாஸ்தவமே. இந்துதேசத்து ஸ்திரீகளும், சிறுமியரும், தன் உயிரைப் போல் மன்னுயிரைக்காக்க வேண்டுமென்று எப்போது தங்கள் சாவகாச வேளைகளை இதேவிதமாக தங்கள்நாட்டு ஏழை ஜனங்களின் பொருட்டு உபயோகிப்பார்களோ தெரியாது.

இராஜகுமாரத்தி மேல் விவரித்த காரியங்களைச் செய்த பொழுது தேசத்தில் போர்க்கலகமில்லாமல் அமைதியாயிருந்தது. ஆனால் இது நீடித்திருக்கவில்லை. ஐயோ! சில நாளைக்கெல்லாம் ப்ரஷியா தேசத்தாருக்கும் சகோதர பாவனையுள்ள அடுத்த தேசஸ்தர்களாகிய ஹோல்ஸ்டீன் ஸ்லெஸ்விக் நாட்டாருக்கும் யுத்தம் மூண்டது. இது சுமார் நூறு வருஷத்துக்குமுன் தஞ்சாவூர் இராஜாக்களிடையுண்டான யுத்தத்தைப்போலிருந்தது. இராஜகுமாரியின் கணவரான ஹாயிஸ் இளவரசர், தமது சேனையுடன் போய்ச் சண்டை செய்ய வேண்டியதாயிற்று.

இச்சமயத்தில் பரிதாபப்படத்தக்க, பாலிய இராஜகுமாரிக்கு மூன்றாம்பெண் பிறந்தது. யுத்தம் நீடித்திராவிட்டாலும், பயங்கரமான ரத்தப்பெருக்கும், துன்பமும், வியாதியும், மரணமும் உண்டானதன்றி, மனைவியர் கணவரையும்,

தரர் ஒருவரையொருவரும், தகப்பன்மார் பிள்ளைகளையும் விட்டுப் போர்க்களத்திற்குப் போவதாகிய விசனமும் ட்டது.

ஜூன் மீ 15ௗ இராஜகுமாரத்தி அடியில் வருமாறு எழுதுகிறார்:—

“ஐயோ! நாளைக்கு ஹாயிஸ்சேனை மற்றச் சேனைகளுக்குப் பதிலாக உள்நாட்டுக்குப் போகிறது. அவரும் கட்டாயமாய்ப் போகவேண்டும். என்னுடைய தைரியம் குறைய ஆரம்பிக்கிறது. ஆகிலும் என்னால் கூடுமானவரையில் பொறுத்துக்கொண்டிருக்கிறேன். இதென்ன கஷ்டமான காலம் என்பது கடவுளுக்குத் தெரியும். ஹாயிஸ் பட்டாளத்தில் முதல்வராகையால் சண்டையின் ஆபத்துக்கும் முதலாயிருக்கிறார். இப்போது அவருடைய பிரிவு மிகவும் கஷ்டமானது. அவர் அதற்காக மிக வருந்துகிறார். எனக்கு எழுதக்கூடக் கையெழவில்லை. அன்றியும் வெயிலும் கடுமையாய் இருக்கிறது. எங்களுக்கு விவாஹம் நிறைவேறி நாலு வருஷம் ஆயிற்று. இந்த நாலுவருஷமும் நாங்கள் ஒருவித இடையூறுமின்றி உண்மையான சுகம் அநுபவித்ததல்லாமல், அது தினேதினே விருத்தியாய்க் கொண்டும் வந்தது. இதற்கெல்லாம் நான் கடவுளை மனமார வாழ்த்துவதல்லாமல் இத்தப் பெரிய ஆபத்துக்குத் தப்புவோமென்று அவரை மிக்க தாபத்தோடு பிரார்த்திக்கிறேன். இந்தப் பயங்கரமான யுத்தம் எல்லாருடைய தைரியத்தையும் போக்கத் தக்கதாய் இருக்கிறது.”

ஹாயிஸ் ராஜகுமாரர் மூன்றுநாள் செலவு பெற்றுக் கொண்டு தமது மனைவியின் பிரசவகாலத்திற் கூட இருந்தார். நீலவிழிகளும் சிவந்த மயிரோடுங்கூடிய, சுகமும் பலமும் உள்ள ஒருபெண் பிறந்தது. இதற்கு ஒருவாரத்துக்குமேல் இராஜகுமாரத்தி தமது தாயாருக்கு எழுதுவதாவது:—

"இந்தக் குழந்தை பிறந்த எட்டுநாளாய் நான் எவ்வளவு கஷ்டமாய்க் காலம் கழிக்கவேண்டி யிருந்தது. முதல்முறை நான் தொழுத்தக்க என் ஆசைக் கணவரைக் காப்பாற்றுவதற்கும், அவ்வளவு அருமையான அவரை என் பிரசவகாலத்தில் என் சமீபத்தில் இருக்கும்படி அனுக்கிரகித்ததற்காகவும் நான் கடவுளுக்குப் பிரார்த்தனை செலுத்தவேண்டும். மூன்று நாளைக்குமேல் அவர் என்னைவிட்டு யுத்தம் நடத்துவதைப் பார்க்கவேண்டி இருந்தது. பீரங்கிசத்தம் இங்கு கேட்கிறது. நான் அவரைத் திரும்ப எப்போது பார்ப்பேனோ, அல்லது அவரிடத்திலிருந்து கடிதம் எப்போது வருமோ, கடவுளுக்குத்தான் தெரியும். கடிதப் போக்குவரத்துகள் நடக்கவில்லை. பத்திரிகைகளாவது, கடிதங்களாவது பெறக் கூடாது; நாமும் ஒன்றும் அனுப்பக்கூடாது; இந்தப் பயங்கரமான கவலையும், வருத்தமும், அவற்றை யனுபவியாதவர்கள் தெரிந்துகொள்வது அசாத்தியம். எங்களைத் தொடர்ந்திருக்கிற சங்கடம் இத்தன்மையதென்று உம்மாலும் அறியக் கூடாது."

சிலநாள் கழித்து அவள் அடியில் வருமாறு எழுதுகிறாள்:—

"கடைசியாய் என் அருமை ஹாயிஸ் க்ஷேமமா யிருப்பதாகக் கேள்விப்பட்டேன். இந்த நாலுநாளாய் மறுபடி யுத்தம் நடந்தது; இரண்டுராத்திரி ஹாயிஸ் ஓர் வயலில்படுத்து ஊணும் உறக்கமுமில்லாமல் இருந்தாராம். அந்த இடத்தில் அவருக்குக் கொஞ்சம் ரொட்டி தவிர வேறொன்றும் கிடைக்கவில்லை. அவர் யுத்தத்தில் காட்டின தீரத்தையும், சுற்றுமுற்றும் இருந்தவர்களின் வருத்தத்தைப்பார்த்து அவர் பட்ட பரிதாபத்தையும் கண்டு, யாவரும் வியந்தார்கள். அவர் எப்போதும் தன் நன்மையையே பாராமல் பிறருக்கு நேரிட்ட ஆபத்துகளையும் வருத்தங்களையும் தானும் அநுபவிப்பார்."

தம் உண்டாகும் என்ற பயம் பிறந்தது; அது சம் முன்னமே, காயம்பட்டவர்களுக்காக ஏற்பட்டிருக் வைத்தியசாலைகளுக்கு வேண்டிய பண்டங்கள் இன் என்று இராஜகுமாரத்தி விசாரிக்கத் தொடங்கினார். அந்தச் சமயத்தில் இராஜகுமாரி சக்கரவர்த்தினியாருக் பின்வருமாறு எழுதினாள்:—

"யுத்தகளத்தில் உள்ள வைத்தியசாலைகளுக்கும் போர் வீரர்களுக்கு வேண்டியனவற்றிற்கும் ஏற்கனவே பணம் சேர்க்கப்பட்டு வருகிறது. இந்த உஷ்ணகாலத்தில் வியாதியும் காயங்களும் பயங்கரமாக இருக்கும். மட்டித் துணிகளும் கந்தைகளும் எவ்வளவு இருந்தாலும் போதாது. நான் துப்பட்டிகளும் உட்சட்டைகளும் சம்பாதித்துக்கொண்டிருக்கிறேன். நீர் கொஞ்சம் கந்தைகள் தயைசெய்ய மாட்டீரோ, உமது எண்ணிறந்த வீடுகளிலிருந்து வருஷத்துக்கு இரண்டுமுறை பழையதுணிகள் சேகரித்து வைத்தியசாலைகளுக்கு அனுப்பப்படுகின்றன. இப்போது நான் சிலது கேட்கலாமா? இங்கே வீட்டில் நாலு டஜன் உட்சட்டைகள் தைக்கிறோம். எவ்வளவு துணியானாலும் மெத்தைகள் தைக்க நல்ல மாதிரிகள் ஆனாலும் அங்கிலேய தேசத்து வைத்தியசாலைகளில் உபயோகமுள்ளதாகக் காணப்படுகிற படுக்கையானாலும், வரப் பெற்றுக்கொள்ள நான் அதிக ஆவலோடிருக்கிறேன்."

சிலநாள் பொறுத்து அவள் எழுதுகிறாள்:—

"வெவ்வேறு வைத்தியசாலைகளிலும் வீடுகளிலும் காயம் பட்டவர்கள் என்னமாயிருக்கிறார்கள் என்று விசாரிக்கப் போய் இப்போதுதான் திரும்பிவந்தேன். என் கணவர் சௌக்கியமாயிருப்பதாயும், ஆனால் ஆறுநாள் ராத்திரியில் வெளியில் படுத்துத் தூங்கவேண்டி வந்ததென்றும், கடைசி மூன்று ராத்திரி மழை விடாமல் பெய்ததாகவும் கேள்விப்பட்டேன். பிரஷியா தேசத்துத் தண்டில் விஷபேதி கண்டிருக்கிறதாம்.

இக்கும் ஒரு போர்ச்சேவகன் மேற்கண்ட வியாதியா[ல்] ...கிறான். அது பயங்கரமாகத்தான் இருக்கிறது. ...தில் யுத்தம் நடப்பதினால் உண்டாகும் அன்பங்களு... ...தாம், பயமும் நேரில் பார்த்தவர்களுக்குத்தான் தெ... அது என்ன பெரிய உபத்திரவம்! காயம் பட்டவர்களை ...படியும் போய்ப் பார்த்தேன். எல்லா வைத்தியசாலைகளு... ...இட்டமும் சுத்தமும் காற்றோட்டமும் உள்ளவையாயிருக்கிறதற்காகச் சந்தோஷப்படுகிறேன். இவ்விஷயங்களில் வைத்தியசாலைகள் சீர்திருத்தம் ஆச்சரியப்படத்தக்கது."

செப்டம்பர்மீ"த்தில் சமாதானம் செய்யப்பட்டுச் சண்டை முடிந்தது. இவ்வளவு சங்கடகாலத்தில் ஜனித்த இராஜகுமாரியின் குழந்தைக்கு ட்ரீன் (Trene) என்று பெயரிடப்பட்டது. மிகுந்த விசாரத்துடன் எதிர்பார்த்திருந்த தேசசமாதானத்துக்கு ஞாபகமாக இந்தப் பெயர் வைத்தார்கள்.

சொற்பகாலத்திற்குமுன் நேரிட்ட யுத்தங்களின் கொடுமைகளைக் குறித்த இந்தக் கதையைப் படிக்கிற இந்துதேசத்து ஸ்திரீகள் தங்கள் தேசம் அதிக பலமாகக் காக்கப்பட்டிருக்கிறபடியால் அதில் நூறு வருஷமாக யுத்தங்களால் உண்டாகிய தீமைகள் ஒன்றும் நேரிடவில்லையென்று சந்தோஷப்படவேண்டும். தங்கள் புருஷர்கள் தங்கள் தேசத்திற்காக யுத்தம் செய்து, காயங்களால் அடிபட்டு, ரத்தப்பெருக்கால் உண்டாகும் அபாயங்களை அநுபவிக்கத் தங்கள் மனைவிமாரையும் சகோதரர்களையும் மக்களையும் விட்டுப் பிரிந்துபோகவேண்டிய அவசியம் இல்லை அல்லவா? ஆனதுபற்றி இப்படிச் செழித்துச் சுகவாழ்வு ஓங்கியும் யுத்தம் இல்லாத இந்த நீடித்தகாலத்தை இந்து ஸ்திரீகள் பயன்படுத்திக்கொள்ள வேண்டாமா? அறியாமை, மதிமோசம் என்னும் சத்துருக்களை வென்று, உழைப்பு படிப்பு இவைகளில் காரியசித்திபெற்று அநுகூலப்பட வேண்டாமா? சண்டை சச்சரவுகள் இல்லாத

காலத்தில் அடையும் வெற்றிகள் யுத்தத்தால் கிடைக்கும் ஜயங்களுக்குக் குறைந்தவையல்ல.

சிலகாலத்துக்குமுன் உண்டான யுத்தத்தின் அநுபவத்தால், யுத்தகளத்தில் நோயாளிகளும் காயம்பட்டவர்களும் தக்க உதவிபெற ஏற்பாடு செய்வது அவசியமெனத் தோற்றுகிறது. வெள்ளம் வருவதற்கு முன்னே அணை போடவேண்டும்.

ப்ளாரென்ஸ் நைத்திங்கேல் பெருமாட்டியின் நல்ல உபாயத்தையும் அவள் கிரிமியா யுத்தத்திலும் அதற்குப் பிறகும் செய்த நன்மையையும் இந்த இராஜகுமாரி மறந்துபோகவில்லை. அவளுக்கு ஸ்வபாவத்திலேயே நோயாளிகளைப் பாதுகாப்பது முதலான காரியங்களில் அதிக விருப்பமுண்டு. ஆனதுபற்றி "துரைசானிகளின் சங்கம்" ("Ladies' Union") ஒன்று ஸ்தாபிக்க அதிக சிரமமெடுத்துக்கொண்டாள். அந்தச் சங்கத்தில் எல்லா வகுப்புத் துரைசானிகளையும் சேரும்படி தூண்டினாள். 1867-ம் வருஷத்தில் ஆறு பெருமாட்டிகளும் இரண்டு வைத்தியர்களும் கூடிய ஒரு சங்கம் ஏற்பட்டது. அதற்கு இராஜகுமாரத்தி அக்கிராசனாதிபதி. தலைச்சங்கம் இராஜகுமாரியின் அதிகாரத்தின் கீழும் மற்றச் சபைகள் தேசமுழுவதும் பரவியும் இருந்தன. இந்தச் சங்கங்களின் நோக்கம், யுத்தகாலத்தில் சேனைகளுக்கு உபசாரணை செய்வதற்கும், சமாதானகாலத்தில் வைத்தியசாலைகளின் உபயோகத்துக்கும், ஏழைகளின் சகாயத்துக்கும், தனவான்களைப் போஷிக்கவும், முக்கியமாக எங்கெங்கே உதவி வேண்டுமோ அங்கெல்லாம் உதவிசெய்யவும், தக்கதாக அநேக தாதிமார்களைப் பழக்குவதற்குந்தான். இரண்டு வருஷத்திற்கெல்லாம் "லேடிஸ். யூனியன்" என்னும் சங்கத்தில் 2500 குலமாதர் சேர்ந்தனர்.

இராஜகுமாரி பரோபகாரமான இந்த காரியத்தை ஆரம்பித்தகாலத்தில், விவாஹமாகாத ஸ்திரீகள், பெண்பிள்ளைகள்

இவர்கள் நிலைமையைச் சீர்படுத்துவதிலும் சாதாரணமாகப்
பெண்கல்வியை விருத்திசெய்வதிலும் கண்ணுங் கருத்தும்
வைத்திருந்தாள். பெண்களின் கைத்தொழிலை விருத்திசெய்
யும்பொருட்டு "ஆலிஸ் பஜார்" என்று பெயருள்ள ஒரு ஸ்திர
மான கடையை ஸ்தாபித்து அதில் ஸ்திரீகள் தைத்த துணிகள்
முதலானவற்றை விற்பனை செய்யும்படி ஏற்பாடு செய்தாள்.

மறுவருஷத்தில் தேசத்துச் சனங்களும் தாய்தந்தை
யரும் சந்தோஷப்படத்தக்கதாக, பட்டத்துக்குச் சுதந்தர
வாளியான ஒரு பிள்ளை பிறந்தது. அது ஒரு அழகான
குழந்தை. இராஜகுமாரிக்கு வெளியில் அநேக வேலைகளி
ருந்தாலும், தன் குழந்தைகளை வளர்ப்பதில் உபேட்சை
செய்யவில்லை. அவர்கள் ஒவ்வொருவருடைய குறைகுணங்
களும் நடக்கையும் நாளுக்குநாள் விருத்தியாவதில் அவள்
கண்ணாயிருந்தாள். அவர்களைக்குறித்துத் தன் தாயான சக்க
ரவர்த்தினியாருக்கு அடிக்கடி எழுதிவந்தாள்:—

"என் மக்கள் பெரும்பாலும் நன்னடக்கையும் கீழ்ப்ப
டிவும் உள்ளவர்கள். சிலகாலம் தவிர மற்றெப்போதும்
நன்றாய் ஆக்கினைக்குட்பட்டவர்கள். அவர்களைச் சேர்ந்த
எல்லாக் காரியங்களிலும் நான் அதிக நெறியுடனும் மனோ
திடத்துடனும் இருக்க முயன்றாலும் சில சமயங்களில் பொறுக்
கக்கூடாததாய் இருக்கிறது. அவர்கள் அதிக துடுக்கும்,
சமர்த்தும், தீவிரமுமுள்ளவர்களானபடியால், சற்றுத் தப்பி
னால் அவர்களுக்கு அதிக தீங்குண்டாகும். நீங்கள் என்னை
எப்போதும் எப்படிச் சந்தோஷப்படுத்தினீரோ அப்படியே
என் குழந்தைகளுக்கும் இன்பமும் சந்தோஷமும் உண்
டாகும்படி செய்வேனாக. நானும் என் மூத்த சகோதரி
யாகிய விக்கியும் எத்தனைமுறை எவ்வளவு உருக்கமாக
எங்கள் அன்பான தாய்தந்தையர்களைக் குறித்துப் பேசுகி
றோம். நாங்களுக்கு அவர்கள் செய்த நன்மைக்காக அவர்

எவ்வளவு நன்றியுள்ளவர்களாக இருக்கிறோம்;
பார்க்கில் இது நாங்கள் உங்களுக்கு உண்டாக்கின
களுக்கும் கவலைகளுக்கும் ஒருவாறு கைம்மாறு
எங்கள் பெண்களினது கல்விப்பயிற்சி விஷயமாகத்
தகள் சொல்வது எனக்கு முழுவதும் சம்மதமாக இருக்
றது. அவர்கள் ராஜவம்சத்தில் பிறந்ததற்காக கர்வப்
படாதபடி தடுக்க முயல்வதன்றி, பெருமை ஒருவருடையு
உண்மையான யோக்கியதையினால் உண்டாகிறதென்றும்
காட்டுகிறேன். உமது கடிதத்தை அந்தக் குழந்தைகளின்
உபாத்தியாயராகிய துரைசானிக்குப் படித்துக்காட்டி அவர்
களை என் அபிப்பிராயத்தையும் தங்கள் கருத்தையும் தெரிந்து
கொள்ளச் சொல்லுகிறேன். இராஜகுமாரர்களும் இராஜ
குமாரிகளும் மற்றவரைவிட எவ்விஷயத்திலும் மேலானவர்க
ளல்ல. பெருமையும் சிறுமையும் தத்தம் யோக்கியதைக்கு
ஏற்றதாயிருக்கும். ஆகையால் அவர்கள் நற்குணமும் அடக்
கமும் உற்றவர்களாக இருக்கவேண்டும். பிறருக்கு உதவி
செய்தால் தெய்வம் உதவிசெய்யுமாகையால் பிறருடைய நன்
மைக்காக உழைப்பதும் அவர்களுக்கு மேற்சட்டமாயிருப்
பதுமாகிய இரண்டு கடமைகள் உண்டு. இவ்விஷயத்தில்
என் கருத்துத் தங்கள் அபிப்பிராயத்துக்கு முற்றும் இசைந்
திருக்கிறது. என் குழந்தைகள் பெரியவர்களாகும்பொழுது
இவ்வித நடக்கையுள்ளவர்களாவார்கள் என்று நம்புகிறேன்."

நாட்டுப்புறத்தில் இருந்து எழுதுகையில் அவர் சொல்
வது பின்வருமாறு:—

"குழந்தைகள் நாட்டுப்புறத்தில் அங்குமிங்கும் திரிந்து
கொண்டு தாமாகச் சந்தோஷிக்கிறார்கள். நாட்டுச் சித்திரக்
காட்சியையும் முக்கியமாகக் காட்டுப் புஷ்பங்களையும் பார்த்து
இவர்களுக்கு மிக்க புத்திவருகிறது. எமலி என்பவளுக்குச்
சில புஷ்பங்களின் பேர் தெரியும். அவள் அவற்றின்

பேரைச் சொல்வதில் எப்போதும் பிசகமாட்டாள் ... டைய எல்லாக் குழந்தைகளுக்கும் சிருஷ்டிப் பெ... மேல் அதிக ஆசையுண்டாயிருப்பதால் இந்த ... நான் எப்போதும் விர்த்திபண்ணுகிறேன். இப்படி ஆசை ஜீவகாலத்தை மனோபாக்கியம் உள்ளதாக்குகிற "கண்ணில் கண்டது கோடி, காணாதது அனந்தம்கோடி" யாகையால் அவர்கள் எங்கேபோனாலும் தங்களைச் சுற்றி யிருக்கிற சிருஷ்டிப் பொருள்களில் அளவற்ற விசே தங்களைத் தேடிப் பார்த்து எவ்விதத்திலும் சோம்பலடையாமல் மனோ சந்துஷ்டி யுள்ளவர்களாகவும், திர்ப்தி யுள்ளவர்களாகவும் இருக்கிறார்கள். நம்முடைய செல்வம் எவ்வளவு கொஞ்சமாக இருக்கிறதோ, அவ்வளவுக் கவ்வளவு நம்முடைய ஆசையும் குறைகிறது. உள்ளதையும் செம்மையாக அநுபவிக்கிறோம். என் குழந்தைகளை என்றால் கூடியமட்டும் சாதாரண குடும்பத்துப் பிள்ளைகளைப்போல் அதிக ஆசைக்கு இடங்கொடுக்கவொட்டாமல் வளர்க்கிறேன். அன்றியும் ஒருவருடைய கையை எதிர்பாராமல் சுவாதீனமாக இருக்கும்படிக்கும், தங்களுக்குத் தாங்களே உதவிசெய்துகொண்டு பிறருக்கு உதவிபுரியும்படிக்கும் பழக்கிவருகிறேன்.

1870-வது வருஷம், ஆலிஸ் இராஜகுமாரி சரித்திரத்திலும், ஐரோப்பாவின் சரித்திரத்திலும் அதிக முக்கியமானது. இவ்வருஷ முதலில் லூயிஸ் இராஜகுமாரனும் அதற்குமேல் விக்டோரியா இராஜகுமாரியும் சிறு இராஜகுமாரனும் "செம்பொட்டுச் சுரம்" (Scarlet Fever) என்னும் வியாதியால் வருந்தினார்கள். அது ஒரு ஒட்டுநோய். தாபஜ்வரமும் தொண்டை வலியும் அதிகம். சில தருணங்களில் குடும்பம் முழுவதும் இந்த வியாதிக்கு இரையாவதுண்டு. இக்கொடியவியாதிக்கு ஆலிஸ் இராஜகுமாரி தானே வைத்தி

யோபசாரங்கள் செய்ய ஆரம்பிக்க, வியாதி அதிரமாக இருந்தாலும், எல்லாரும் சுலபமாய்த் தேறினார்கள்.

இவ்வருஷம் வசந்தருதுவில் ஜர்மனிக்கும் பிரான்சுக்கும் யுத்தம் உண்டாகவே, லூயிஸ் இராஜகுமாரன் தன் சேனையுடன் முனைமுகத்திற் போகவேண்டியதாயிற்று. இராஜகுமாரி ஜூலை 25ஆ கணவனைப் பிரிந்து 'டார்ம்ஸ்டாட்' பட்டணத்திலிருந்துகொண்டு, அக்கம் பக்கத்திலுள்ளவர்களுக்கெல்லாம் உதவிபுரிந்துகொண்டு அவர்களுக்குத் தேறுதலை பண்ணிக்கொண்டும் புத்திமதிகள் சொல்லிக்கொண்டும் இருந்தாள். அவள் தினந்தோறும், "லேடிஸ் யூனியன்" என்னும் சங்கத்துக்குப் போய் வைத்தியசாலைகளையும், இருப்புப்பாதை ஸ்டேஷன்களில் ஏற்பட்ட நோயாளிகள் சாலைகளையும் பார்த்துவந்தாள்.

வியாதியில் படுகிறவர்களுக்காகவும் காயம்பட்டவர்களுக்காகவும் ஸ்தாபிக்கப்பட்ட ஆலிஸ் சங்கத்தில் யுத்தாரம்பத்தில் வேலைக்குச் சித்தமாகக் கைதேர்ந்த வைத்தியோபசாரம் செய்யும் தாதிமார் 16 பெயர் (Nurses) தேறினார். சில டாக்டர்களுடைய சகாயத்தால், வைத்தியம் கற்பிக்க வகுப்புகளை ஏற்படுத்த, தேறின வைத்தியர்களின் தொகை 164 வரையில் அதிகப்பட்டது. சில ஸ்திரீகளும் பெருமாட்டிகளும் ஒருங்குகூடி, பட்டணத்தின் வழியாகச் செல்லும் காயம்பட்டவர்களுக்கு உண்கிற சோறு வெல்லம்போல் கொள்கிற வழைநாரனதுபற்றி அவர் இரவிலும் பகலிலும் ஆகாரம் கொடுக்கிறதாக ஏற்றுக்கொண்டார்கள்.

இராஜகுமாரியின் கடிதமே இக்காரியங்களைப் பூர்த்தியாய் விளக்குகிறது:—

"ஆகஸ்டு 19ஆ நாள் முழுவதும் என் சொந்தக் காரியத்தைப் பார்க்க, இரண்டு மணிக்கதிகம் அவகாசமில்லை. எங்கள் அரண்மனையைச் சேர்ந்த சாலையிலுள்ள நோயாளிகளை

யும், காயம்பட்டவர்களையும், பார்ப்பதன்றி, தினந்தோறும் நாலு ஆஸ்பத்திரிகளைப் போய்ப் பார்க்கவேண்டும். யுத்தரங்கம் அதிக சமீபமானதுபற்றி எங்களுக்கு வேலை அதிகம். இன்று காலை இரண்டுவண்டிகள் நிறைய வியாதியில்படுகிறவர்களும் காயம்பட்டவர்களும் இங்குவந்து சேர்ந்தார்கள். * * இவ்வித கோர யுத்தம் இனி உண்டாகாதென்று நம்புகிறேன். இது மிகப் பயங்கரமானது. காயம்பட்டவர்கள் 500 பேருக்கு அதிகம். அவர்களில் சிலர் பிராஞ்சியரும் சிலர் ஜர்மானியரும் ஆம். யாராவது சொஸ்தமானால் அவர்களை வடக்கே அனுப்பிவிடுவார்கள். வியாதி அதிகப்பட்டவர்களை அவ்விடத்திலே நிறுத்திக்கொள்வார்கள். எங்கேபார்த்தாலும் காயம்பட்டவர்களேதவிர வேறொன்றுமில்லை. மன நடுக்கமுறத்தக்க படையாட்கள் எங்கள் கண்ணுக்குத் தப்புகிறதில்லை. எல்லா ஜாதியிலும் தினந்தோறும் அநேகர் விசனமும் துன்பமும் படுகிறார்கள். அநேக நேசர்களும் அறிமுகமானவர்களும் இறந்தனர். இவையெல்லாம் பார்க்க மகா கண்ணராவியாக இருக்கின்றன. சேனைகளும் ஜனங்களும் ஆகிய எல்லாரும் சமாதானத்தைக் கோருகிறார்கள். இவ்வுலகத்தில் யுத்தத்தைப்போல் கொடியதொன்றுமில்லை. இனி வேறொரு யுத்தமும் நேராமலிருக்கவேண்டுமென்பது என் முக்கியமான பிரார்த்தனை."

இப்பயங்கரமான யுத்தத்தின் நடுவில் இராஜகுமாரிக்கு, ப்ரெடெரிக் (Frederick) அல்லது ப்ரிட்ஸ் என்னும் பெயருள்ள இரண்டாவது புத்திரன் பிறந்தான். இக்கஷ்ட காலத்தில், ஜர்மனி தேசத்து வைத்தியர்களெல்லாரும் யுத்தத்தில் விழுந்தவர்களுக்குச் சிகிச்சைசெய்து கொண்டிருந்தபடியால், நமது சக்கரவர்த்தினியார் தன் புத்திரியின் ஸகாயத்துக்காக ஒரு வைத்தியனையும் வைத்தியோபசாரம் செய்யும் ஸ்திரீயையும் லண்டன் நகரிலிருந்து அனுப்பி இருந்தார்.

இதற்கு ஆறு வாரத்துக்குமேல் இராஜகுமாரி, ப்ரஷியா தேசத்து பட்டத்து ராஜகுமாருடைய பத்தினியாரான தமது தமக்கையாருடன் வசிக்கும்படி பெர்லின் பட்டணத்துக்குப் போனாள்.

எட்டுமாதம் மனைவியைப் பிரிந்திருந்து யுத்தம் நின்று பாரிஸ் பட்டணம் பிடிபட்டபிறகு, இராஜகுமாரர் வீடுவந்து ஆலிஸ் இராஜகுமாரியை, டார்ம்ஸ்டாட் ரெயில் ஸ்டேஷனில் சந்தித்தார். அப்போது அவர்கள் அடைந்த சந்தோஷமும் கடவுளுக்குச் செலுத்தின வந்தனமும் இவ்வளவு அவ்வளவென்று யாரால் அளவிடக்கூடும்? இந்தப் பெரிய யுத்தம் முடிந்த சில வருஷங்களாய் இராஜகுமாரியும் இராஜகுமாரரும் வீட்டோடு தங்கள் வழக்கமான வேலையைப் பார்த்துக் கொண்டு காலம் கழித்தார்கள். *

இராஜகுமாரி சக்கரவர்த்தினியாருக்கு வழக்கப்படி தாம் செய்த காரியங்களைக்குறித்து அடியில் வருமாறு எழுதுகிறாள்:—

"ஸ்திரீகள் கல்வியையும், அவர்கள் நிலைமையையும் சீர்ப்படுத்தும்பொருட்டு ஏற்படுத்தப்பட்டிருக்கிற ஜர்மனி தேசத்து எல்லாச் சங்கங்களும் இங்கு ஒன்றாகக் கூடும். இங்கிலாந்திலிருந்து சில பெருமாட்டிகளும் ஸ்விட்ஜர்லாண்டிலிருந்து சிலரும், உலாந்தாவில் இருந்து சிலரும் வந்து கூடுவார்கள். நான் ஸ்தாபித்திருக்கிற சங்கங்கள் விஷயமாய் அதிககாலம் செலவழிக்கவேண்டி இருப்பதன்றி, கண்ணுங் கருத்துமாக நடத்தவேண்டி இருக்கிறது. நாங்கள் இங்கே செய்துவருகிற காரியம் சரியானதென்று நினைக்கிறேன். நாங்கள் செய்யக் கங்கணம் கட்டிக்கொண்ட காரியங்களைச் சற்று தயவுசெய்து பார்ப்பீரா? எனது அருமைத்தந்தை அயலாருடைய நன்மைக்காகச் செய்யத்துவக்கின பெருங்காரியத்தில் சொற்பத்தைச் சொற்ப அளவாய் இங்கு செய்ய முயன்

றேன். இதில் நீர் கொஞ்சம் சிரத்தை எடுத்துக்கொண்டால் எனக்கு அதிக சந்தோஷமாகும். சிறைச்சாலையின் குற்றவாளிகளுடைய நிலைமையைச் சீர்ப்படுத்த அதிக பிரயாசை எடுத்துக்கொண்ட மேரி கார்ப்பெண்டர் என்ற பெயர்பெற்ற தர்மக்கருத்துள்ள துரைசானியாரும் மேற்கண்ட பெரிய கூட்டத்துக்கு வந்தனர். அவர் இதை விட்டுப்போவதற்கு முன் இந்தியாவையும் அங்குள்ள தேச பாடசாலைகளையும் குறித்து ஒரு உபந்நியாசம் செய்ய யோசித்திருக்கிறார்."

இவ்வருஷம் (1872) டிசம்பர் 14௳ திரும்பவும் நமது சக்கரவர்த்தினியாருக்கும் இராஜகுடும்பத்தாருக்கும் மிக்க வியசனத்தை உண்டாக்கிற்று. பிரின்ஸ் ஆவ் வேல்ஸ் பிரபுவுக்கு விஷஜ்வரம் கண்டு அதிக உபத்திரவமாகி டிசம்பர் 14௳ அவர் மிக்க அபாயஸ்திதியில் இருந்தார். எல்லா தேவாலயங்களிலும், இராஜகுமாரர் தேகம் குணப்படும் பொருட்டு பகிரங்கமாக தேவபிரார்த்தனை செய்யப்பட்டது. கடவுளும் இப்பிரார்த்தனைக்குச் செவிகொடுத்து, இராஜகுமாரனைக் காப்பாற்றினார். "தெய்வசித்த மிருந்தால், செத்தவனும் பிழைப்பான்" என்பது உண்மையே.

இராஜகுமாரத்தி தன் தாயாருக்கு,

"14௳ நமக்கு அதிக விசனத்தைத்தரும் மறக்கத்தகாத தினம். அது நமது குடும்பத்துக்கு மிகப் பரிசுத்தமான தினம். அந்த தினத்தில் ஒரு பெரிய மகாநுபாவர் இவ்வுலக வாழ்க்கையைத் துறந்தார். அப்படி அவர் இவ்வுலகத்திலின்று நீங்கியும், அவர் செய்த காரியங்கள் அழியாமல் தலைமுறை தலைமுறையாகக் கொண்டாடப்பட்டு வருகின்றன. அத்தினத்தில் அவர் முடிக்காதுவிட்ட காரியத்தை வேறொருவர் நிறைவேற்றும்படியா யிருந்தது. அவர் குடும்

பத்துக்கும் அவரைச் சேர்ந்த எண்ணிறந்த ஜனங்களுக்கும் கடவுள் க்ஷேமத்தை அளிப்பாராக" என்று எழுதினாள்.

1873-ம் வருஷத்தில் ஆலிஸ் ராஜகுமாரத்தியானவள் இத்தாலியாதேசத்தில் சஞ்சாரம்செய்து அங்குள்ள சிறந்த சித்திர சில்பங்களைக் கண்ணோட்டமிட்டு வந்தாள். அவைகளைப் பற்றி முன்னமே படித்தும் கேட்டும் மனதினால் ஊகித்தும் இருந்தவள், அற்புதமான அந்தக் காட்சிகளை இப்போது நேராகத்தன் கண்களால் கண்டு நிசம்தான் என்று களித்தாள். உரோமபுரம் என்னும் நகரத்தில் அழகான சித்திரங்கள் அமைந்த அடுக்கடுக்காக ஆகாயமளாவியிருந்த கட்டடங்களும் தேவாலயங்களும் நாள்பட்டுக் கிலமாயிருக்கும் மண்டப நாற் கோபுரங்களும் பற்பல உண்டு. டில்லிநகரத்தை நமது இந்தியாதேசத்து உரோமபுரி என்று ஒப்பிட்டு வருவதுண்டு; டில்லியிலும் அம்மாதிரியாகவே பாழடைந்து கிலமான கட்டடங்கள் அநேகமிருக்கின்றன. ஆலிஸ் ராஜகுமாரி தனது ராஜவம்சத்துக்கடுத்த மரியாதைகளையும் உபசாரங்களையும் பெற்றுக்கொள்வதனால் நேரிடும் தாமசத்தையும் அசௌக்கியத்தையும் நினைத்து, அவள் தன்னை இன்னாரென்று வெளியிட்டுக்கொள்ளாமல் சாதாரணமான பிரயாணிபோல் தேசயாத்திரை செய்தாள். படாடோபத்தையும் ஆடம்பரத்தையும்விட மனக்களிப்பும் புத்திவிகாசத்தாலுண்டாகிய ஆனந்தமுமே சிறந்தனவென்று அவள் நினைத்திருந்ததற்கு இதுவே திருஷ்டாந்தம்.

உரோமபுரி தோன்றிய நாள்முதல் மார்க்கஸ் அரேலியஸ் என்னும் சக்கரவர்த்தி காலம்வரையில் அந்நகரத்தின் சரித்திரத்தையும் அதேகாலத்தில் நடந்த நமது தேசத்து விருத்தாந்தங்களையும் ஒத்துப்பார்க்கின் நமது தேசத்தின் நிலைமை இத்தன்மையதென்று தெரியவரும்; ஏனெனில் உரோம ராஜ்ஜியத்தார் இங்கிலாந்தைப் பிடித்து சட்டதிட்டங்கள்

ஏற்படுத்தி அதைச் சீர்திருத்தினார்கள். அதுபோலவே இ
போது இங்கிலீஷ் ராஜ்ஜியத்தார் இத்தேசத்தில் ராஜ நீதி
முறைகளை ஏற்படுத்தி வருகிறார்கள்.

உரோம ராஜ்ஜியத்தாரைப் பற்றியும் பார்சிகம், எகிப்த்து,
க்ரீஸ், சீனா முதலிய தேசங்களிலுள்ள நாநாவித ஜாதியார்
களைப்பற்றியும் நமது தேசத்துப் பெண்பிள்ளைகள் சுலபமாய்ப்
படித்துத் தெரிந்துகொள்ளும்படியாக இத்தேச பாஷை கிரந்
தங்கள் இல்லையென்பது மெய்தான். ஆனால் அப்படிப்பட்ட
சரித்திரங்களைப் படிக்க அவர்களுக்கு விருப்பமுண்டானா
லல்லவோ அவர்களுக்குத் தகுந்த கிரந்தங்களும் எழுதப்படும்;
அவர்களோ ராமாயணம் பாரதம் இவ்விரண்டொழிய
வேறொன்றும் அறிந்தவரல்ல. இவ்விரண்டும் மிகச் சிறந்த
கிரந்தங்கள் என்பதற்குச் சந்தேகமில்லை. அவைகளை எவ்
வளவு படித்தாலும் தகும். ஆயினும் ஒரேவிதமான புத்த
கங்களைப் படித்துக்கொண்டிருந்தால் மற்றவைகள் வேண்
டாவோ? மூக்கினால் மோந்து, கையினால் தழுவினாலே போ
தும், கண்ணாலே பார்க்கவேண்டியதில்லை யென்பதுண்டோ?
பற்பல விதமான புத்தகங்களைப் படித்தால்தான் நமது புத்தி
விசாலமடைந்து விவேகம் விளங்கும். நாடோறும் செய்
ததையே செய்துகொண்டு முன்னமே அனுபவப்படைந்திருக்கும்
நமது வாழ்வு வெவ்வேறு ஞானரசங்களாலேதான் களிப்ப
டையும்; அன்றியும் நவநவமான சீர்மைகளிலும் புதுபுதிதான
ஜனங்களிடத்திலும் மனோவியாபாரம் செய்துகொண்டு இக்கா
லத்திலுடையவர்கள் மாத்திரமல்ல, சில நூற்றாண்டுகளுக்கு
முன் ஜீவித்திருந்த ஜனங்களுடைய நடையுடை பாவனை
களை யறிந்து அக்காலத்துக்கும் இக்காலத்துக்கும் உள்ள
தாரதம்மியங்களையும் ஆராய்ந்தறியலாம். ஆலிஸ் ராஜகுமா
ரத்தியானவள் இத்தாலியா தேசத்தைப்பற்றியும் உரோம்
புரியைப்பற்றியும் முன்பே படித்திருந்தபடியால் பிறகு அத்

சத்தைப் போய்ப் பார்த்தபோது மிகவும் ஆனந்தகரமா
ருந்தது.

திரும்பி சுதேசம்வந்து சேர்ந்தவுடனே அவளுக்கு ஒரு
ரிய துன்பத்தை உண்டுபண்ணி தெய்வம் அவளைச் சோதித்
து. ஒருநாட் காலையில் அவளுடைய இரண்டு ஆண்குழந்
தைகளும் அவளுடைய படுக்கை யறைக்குவந்து, காலைவந்த
னம் செய்துவிட்டு விளையாட்டாக அங்குமிங்கும் சந்தோஷ
மாக ஓடிக்கொண்டிருந்தபோது அவர்களில் ஒரு அருமை
யான பிள்ளை கம்பியில்லாத ஜன்னல்வழியாகத் தவறிச் செங்
கல்படுத்தியிருந்த கீழ்த்தளத்தின்மீது விழுந்துவிட்டான்.
இந்தியாவில் ஏறக்குறைய எல்லா வீடுகளும் தரையோடு தரை
யாய்க் கட்டப்பட்டிருக்கின்றன; ஐரோப்பாவிலோ வீடுகள்
பெரும்பாலும் ஒன்றின்மேலொன்றாக அடுக்கடுக்காய் அநேக
மாடிகளடங்கியிருக்கும். குழந்தையை ஓடிப்போய் எடுக்
கும்போது பிராணன் தப்பியிருந்தது. சற்றுநேரத்துக்கெல்
லாம் தாயின்மடியிலேயே இறந்துபோய் விட்டான். என்ன
செய்வாள் பாபம்! விசனம் மூண்டு ஏக்கம் பிடித்து பொல்
லாதகாலம் சொல்லாமல் வந்ததே என்று மனது தேறுதலை
அடையவேயில்லை; அப்படியிருந்தும் "மலைகலங்கினாலும்
மனங்கலங்கப் போகாது. சிலநாள் கழித்து ஒருவருக்குக்
கடிதம் எழுதும்போது நாம் படும் துயரத்தினின்றும் நாம்
இனி யடையப்போகிற துன்பத்தினின்றும் நீங்கி பாலகன்
பரலோகத்தில் சொஸ்தமாயிருக்கிறான் என்பதை நினைத்துப்
பார்த்து பூரணமாய் மனந்தேறியிருக்கிறோம்" என்று எழுதி
யிருக்கிறாள்.

அப்புறம் சிலமாதகாலம் சென்றபிறகு அவள் எழுதின
தாவது:—"மனிதர்களுக்குத் துன்பம் வரும்போது வீணில்
வந்துவிட்டுப் போகிறதில்லை. அந்தத் துக்கமும் ஒரு அனு
கூலத்தைப் பண்ணும். ஆயுட்காலமோ நாளென ஒன்றுபோல

காட்டி வாள் அறுப்பதுபோல் ஒவ்வொரு தினமாக நபு உயிர்வாழ்க்கை குன்றுகிறது என்று எண்ணுகபடி. ஓ கொண்டேயிருக்கிறது. நல்ல காரியத்தைச் செய்து பிறருக் நன்மையை விளைவிப்பதும் அப்படி ஓடுகிறநாளிலேதா செய்தால் செய்தது; பாராக்காயிருந்து செய்யாமல் வி போது போக்கினும் அந்தநாள் ஓடாமல் நிற்காது. ஆகையால் எந்த காரியத்தையும் இன்றைக்காகிறது நாளைக்கு ஆகட்டுமென்று அசட்டைசெய்யக் கூடாதென இப்போது எனக்குத் தெளிவாய்த் தெரிகின்றது. குழந்தைகள் நாளுக்குநாள் வளருகிறார்கள்; அவர்களுக்குத் தகுந்தகாலம் வந்து உலகவாழ்க்கையில் நாட்டமாயிருக்கும்போது நாம் அவர்களுக்குச் செய்யப்போகிற சகாயம் வேறொன்றுமில்லை; தங்களுக்கு இடையூறுகள் நேரிடும்பொழுது தங்களை அன்பாகத் தழுவிச் சமாதானம் செய்யத் தாம் பிறந்து வளர்ந்த வீடு ஒன்று இருக்கிறது என்கிற எண்ணம்மாத்திரம் அவர்களுக்கு உண்டாகுமேயானால் அதுவே போதும். என்னுடைய குழந்தைகளுக்கு இதுதவிர வேறு சகாயம் செய்ய நான் ஆசைப்படவில்லை" யென்றாள்.

இதற்கு அடுத்த வருஷம் ராஜகுமாரத்திக்கு ஒரு பெண் குழந்தை பிறந்தது. அக்குழந்தைக்கு ப்ரின்ஸெஸ் மே என்று பேர். 1874-ம் வருஷம் கோடைகாலத்தில் குளிர்ச்சியான கடற்கரையோரத்தில் வாசஞ்செய்யப் போனார்கள். அப்படி வசிக்குங் காலத்தில் தான் பொழுதுபோக்கின விதங்களை அடியில்வருமாறு அவளே சொல்லியிருக்கிறாள். அதெப்படியெனில், பொழுதுவிடிந்து 8½-மணிக்கு காலைபோஜனம் பண்ணுவோம்; பிறகு சிறுகுழந்தையை எடுத்துக்கொண்டு பெரிய குழந்தைகளுடனும் வெளியேபோய் உலாவிவர 11-மணியாகும்; பிறகு வீட்டுவேலைபார்க்கவும் தர்மகாரிய விஷயமான காரியங்களைச் செய்யவும் அப்புறம் 1-மணிக்கு இரண்டு பெண்களுக்கும் ஒன்றின்பின் ஒன்றாக பிரெஞ்சுபாஷையைச்

சொல்லிக் கொடுக்கவும் சரியாயிருக்கும். பகல்போஜனம் செய்தபின்பு தபாலுக்குக் கடிதங்களை எழுதிவிட்டு 5-மணியடிப்பதற்கு முன்னமே வெளியே போவோம். சாயங்கால வேளைகளில் கொஞ்சம் புத்தகம் படித்துவிட்டு ராத்திரி 8-மணிக்கு இரண்டு தோழிப் பெண்பிள்ளைகளோடும் போஜனம் செய்வோம்" என்றாள்.

ராஜகுமாரத்தி தான் ஆரம்பித்த தருமகாரியங்களை இடைவிடாமல் செய்துவந்தாள். வைத்தியசாலைகள் விஷயமாகவும் சிகிச்சை உபசாரம் செய்யும் தாதிகள் விஷயமாகவும் பெண்பிள்ளைகளுக்குக் கற்பித்து வேலைகொடுப்பதற்காக ஏற்பட்டிருந்த (ஆலிஸ் ஸொஸைட்டி) என்னும் தருமசாலை விஷயமாகவும் விடாமுயற்சிசெய்து கொண்டேயிருப்பாள். வருஷாவருஷம் ஒரு நாடகம் போடுவித்து, அல்லது ஒரு சங்கீதச் சபைகூட்டி திரவியம் சேகரித்துத் தருமத்துக்காகவே உபயோகப்படுத்துவாள். ஏழை ஜனங்களின் நிலைமையைச் சீர்திருத்துவதற்காக என்னென்ன ஏற்பாடுகள் நடக்குமோ அவ்வளவிலும் கருத்துவைத்துப் பாடுபடுவாள். இங்கிலாந்தில் இருந்தபோது "ஏழைக்கிரங்கும் தோழி" என்று சிறப்புப் பெயர் பெற்ற மில் என்னும் துரைமகள் சிநேகத்தைச் சம்பாதித்துக் கொண்டு இருவரும் எளியவர்களுக்கு நன்மைசெய்கிறதே விரதமாகக்கொண்டு லண்டன்மாநகரத்தில் மெத்தவும் வருத்தப்படும் ஏழைஜனங்கள் குடியிருக்கும் வீடுகள்தோறும் சென்று அருவருப்பில்லாமல் பார்த்து விசாரிப்பார்கள். அவ்வாறாகவே ஜர்மானியா தேசத்து ஓர் பட்டணத்திலும் ராஜகுமாரத்தியானவள் தன் மகிமையை வெளியிடாமல் இன்னாளென்று தெரிவிக்காமல் வலதுகை கொடுத்தது இடதுகை அறியாதபடி சகாயங்கள்செய்து, ஏகாந்தமாகப் போய்க் கூலிவேலைசெய்யும் ஏழைகளின் அசுத்தமான வீடுகளில் நுழைந்து நுழைந்து பார்த்து அவர்கள் சுகமாகவிருக்க

வீடுகட்டிக்கொள்வதற்காக நல்ல இடம் சம்பாதித்து கொடுத்தாள்.

இவ்விதமான காரியங்களை நமது தேசத்து ராஜாக்களும் ஜமீன்தார்களும் ஐசுவரியவான்களும் செய்வது எப்போது? நமது ஜமீன்தார்களுடைய திரவியமானது எடுப்பாரும் பிடிப்பாருமாகச் சோம்பேறிப் படையை வைத்துக்கொண்டு, மட்டுமிதமில்லாத சம்மானங்களிலும் வீணான வியாச்சியங்களிலும் நவரத்தினங்களிழைத்த அங்கிகளிலும் சிரோபூஷணங்களிலும் வீண்விரயமாகப் போய்விடுகிறது. அவர்களை நம்பியிருக்கும் எளிய குடிகளோ வயிற்றுக்கில்லாமல் அரை வயிறு கால்வயிறு கஞ்சி குடித்துக்கொண்டும் பட்டினிகிடந்தும் குடல்காய்ந்து நோயினால் வருத்தப்பட்டு ஏனென்று கேட்பாரில்லாமல் திக்கற்றவர்களாய்ச் சாகிறார்கள். நம்முடைய ஏகசக்கராதிபதியாகிய இராணியாருடைய குமாரத்தியே தமது ஏழைக்குடிகளின் கஷ்டத்தையும் துயரத்தையும் தாமே நேராகக் கண்கள் கூசாமல் பார்த்து அவர்களுடைய குறைகூறுபாடுகளைத் தீர்க்க என்னென்ன செய்யவேண்டுமோ அதையெல்லாம் செய்ய முயன்று பிறரையும் அவ்வாறே செய்யும்படி தூண்டுவாளேயானால் இத்தேசத்துத் தனவான்கள் தங்கள் நாட்டு ஏழைகளிடத்தில் மனமிறங்க வேண்டுமென்று சொல்வது தகாதகாரியமோ! சுபாசுபங்கள் நடக்கும் விசேஷதினங்களில் ஏழைகளுக்கு அன்னமிடுவதும் பூரிகொடுப்பதும் இதுபோன்ற தற்கால தருமங்களும் நீடித்து நிற்காத உபகாரங்களும் மாத்திரமே போதாது; பலவிதத்திலும் அவர்களைத் தயவாக நடத்திக் குடியிருக்க நல்லவீடுகள் கட்டுவித்துக் கல்வியும் கைத்தொழிலும் கற்பிக்கவேண்டும். மச்சுமாளிகைகளையுடைய நமது தேசத்தவர்கள் தங்களுடைய திரவியத்தை இத்தன்மையான சிறந்த தருமங்களில் செலவு செய்கிறார்களா? அப்படிச் செய்கிறதாயிருந்தாலும் அவர்களைச்சேர்ந்த

ஸ்திரீகள் அப்படி செய்யவொட்டுவார்களோ! அறிவின்மையும் நற்காரியங்களில் வெறுப்பும் ஆடையாபரணங்களில் ஆழ்ந்த அபிமானமும் சுயகாரியமும் தங்கள் சுகமுமே பெரிதென்கிற எண்ணமும் ஆகிய இந்த இருப்புச் சங்கிலிகளைக் கொண்டு நமது பெண்பிள்ளைகள் புருஷர்களைக் கெட்டியாகக் கட்டிப்போட்டிருக்கிறார்கள். பெண் பிள்ளைகளுக்கு விவேகம் பிறந்து எப்போது இந்த துர்க்குணங்களிலிருந்து விடுபடுவார்களோ? அதுதான் ஏழைகளுக்கு நற்காலம்; தனவான்களுக்கும், அதிக ஆனந்தமும் அப்போதுதான் கிட்டும். எப்படியென்றால் தங்களை மறந்து அன்னமில்லாமல் தவிக்கிற பிறருக்கு உதவிசெய்வதுதான் பேரின்பம் என்று அப்போது அறிவார்கள். பூபாலர்கள் "ஊரெங்கும் பேர், வீடுபட்டினி" என்னும் தூஷணைக்கு ஆளாகமாட்டார்கள். கையேந்தி வாங்குவதைவிட கைமேலாகக் கொடுப்பது எப்படிப்பட்ட பாக்கியம்! பற்பல தருமசாலைகளின் காரியங்கள் எப்படி நடந்துவருகின்றன என்பதையும் ஏழைகளின் வருத்தத்தை மாற்றுவிக்க என்னென்ன முயற்சிகள் செய்யப்படுகின்றன என்பதையும் ராஜகுமாரத்தி அடிக்கடி விசாரித்துக்கொண்டேயிருப்பாள். அடிக்கடி செம்படவர் குடிசைகளில் நுழைந்து பார்க்கிறதும் நோயாளிகளைப் பார்த்து விசாரிப்பதும் எல்லாரிடத்தில் அன்பும் ஆதரவுமாயிருப்பாள். ஞாயிற்றுக்கிழமையில் கூடும் வேதப் பள்ளிக்கூடத்தைப் பார்க்கிறதென்றால் அவளுக்கு மிகவும் சந்தோஷம். "இந்தப் பள்ளிக்கூடத்துப் படிப்பு எவ்வளவு உபயோகம்! எவ்வளவு உபயோகம்!" என்று அவள் அடுத்தடுத்துச் சொல்வதுண்டு.

ஆனால் இப்படி தருமசிந்தையும் பரோபகாரகுணமுமுள்ள இவளுடைய ஆயுட்காலம் குறைந்துவிட்டது. ராஜகிரகத்தில் துயரங்கள் ஒன்றின்மேல் ஒன்றாகச் சம்பவித்தன.

1878-ளு நவம்பர் மாசத்தில் மூத்தபெண்ணாகிய செல்வி ராஜகுமாரத்தி விக்டோரியாள் என்னும் துரைமகளுக்கு உக்கிரமான விஷச்சுரத்துடன் கபசம்பந்தமான வியாதி ஒன்று கண்டது. இது மிகவும் அபாயகரமான தொத்து வியாதி; இந்த வியாதியானது ஒரு குழந்தைக்குப் பிறகு இன்னொரு குழந்தைக்கும் இப்படியே எல்லாக் குழந்தைகளுக்கும் கண்டு தகப்பனாராகிய ப்ரின்ஸ் லூயிஸ் என்பவருக்கும் கண்டது. "பட்டகாலிலே படும் கெட்டகுடியே கெடுமல்லவா" ஆலிஸ் அக்காலத்தில் பட்ட விசனத்தை அவள் சக்கரவர்த்தினிக்கு அனுப்புவித்த உருக்கமான கடிதங்களும் தந்தி சமாசாரங்களும் இவ்விதமென்று காட்டுகின்றன.

நவம்பர் 8-ம் தேதி தந்தி. "இன்று காலை முதல் விக்டோரியாளுக்கு தொண்டைநோய் கண்டிருக்கிறது. சுரம் தாபச்சுரம் மிகவும் கவலையுற்றிருக்கிறேன்."

நவம்பர் 12-ம் தேதி. "இன்று ராத்திரி முதல் என் கண்மணி ஆலிக்கும் நோய்கண்டு படுத்திருக்கிறாள்."

நவம்பர் 13-ம் தேதி. ஆலிக்குக் கொஞ்சம் குணம் தான். என் செல்வம் மே என்பவளுக்கு தாபச்சுரம் அதிகமாயிருக்கிறது. சிறு குழந்தைக்கும் வந்துவிட்டது. தவிக்கிறேன். கைக்குழந்தைக்காக அவ்வளவு வருத்தப்படுகிறேன்.

மறுநாள் ப்ரின்ஸூக்கும் அவன் தகப்பனுருக்கும் நோய் கண்டுவிட்டது.

நவம்பர் 15-ம் தேதி தந்தி. என் செல்வம் மே என்பவளுக்குக் குணமில்லை. அதிகமாகத் துன்பப்படுகிறேன். எனக்கு மிகவும் பயமாயிருக்கிறது. மற்றிரண்டு குழந்தைகளுக்கும் சுரம் மட்டு.

சின்ன பெண்ணினுடைய தொண்டை அதிகமாக வீங்கியிருக்கிறது. என்னுடைய கணவனுக்கு ஒரே நிதானமாயிருக்கிறது. அதிகமில்லை; ஆலிக்குக் குணமுகமாயிருக்கிறது.

சாயங்கால தந்தி. "மேயின் நோய் முன்போலவே பார்க்க ரிதாபமாயிருக்கிறது. கணவனுக்கு சுரமும் நோயும் அதிகம். ற்றவர்களும் அப்படியே. எல்லாம் கடினமான ஆபத்து ஷயங்கள். மே என்பவளின் நிலை மிக்க பயங்கரமாயிருக் து." ராணியாருக்கு இப்படிப்பட்ட மனவருத்தம் வந்து ட்டதேயென்று அழுது அனுதாபப்படாதவர்கள் ஊரில் ஒரு ருமில்லை. அவளுடைய குடும்பத்தின் க்ஷேமத்தைக் கருதி ந்தந்த ஆலயங்களில் தேவாராதனைகளும் பிரார்த்தனைகளும் ந்தன. நவம்பர் 16-ம் தேதி காலையில் "சூரியகாந்தி ரியகாந்தி" என்று தாயினால் செல்லம் கொஞ்சப்பட்டுவந்த மே என்னும் சிறிய பெண்குழந்தைக்குத் தாய் தகப்பன் மாரிடத்திலிருந்து பிரியும் காலம் நேர்ந்துவிட்டது.

அப்போது ஆலிஸ் ராஜகுமாரத்தி தன் தாயார் சக்கரவர்த்தினிக்கு அனுப்பிய தந்தி. நம்முடைய அருமையான சிறு கண்மணிக்குக் காலம் ஆகிவிட்டது.

கணவனுக்குச் சற்றே குணம்தான். எர்னியாளுக்கு நோய் அதிகமாயிருக்கிறது. எனக்கோ மனோசஞ்சலம் அளவில்லை.

சாயங்கால தந்தி "வருத்தம் சொல்லி முடியாது. ஆனால் தெய்வசங்கற்பத்துக்கு வேறில்லை. அருமையான எர்னியாளுடைய நிலை மிகவும் பயங்கரமானது. மற்றவர்களுக்கோ அபாயத்தினின்று நீங்கினபடியால் கொஞ்சம் குணத்தோடு சேர்க்கைதான்.

நவம்பர் 17-ம் தேதி. எர்னியாளுக்கு ரொம்பவும் குணம்; கடவுளிடத்தில் நன்றியறிபவளா யிருக்கிறேன்.

நவம்பர் 18-ம் தேதி. "நோயாளிகள் எல்லாருக்கும் குணம்தான். சீக்கிரத்தில் நன்றாய் சௌஸ்தமாகுமென்று கோருகிறேன். கடைசியாக ப்ரின்ஸெஸ் மே என்னும் குழந்தை 3-மணிக்கு என்னைவிட்டுப் பிரிந்தது."

ராஜகுலத்துப் பெண்குழந்தையாகிய மே என்பவளு
டைய சவப்பெட்டியானது முழுவதும் புஷ்பங்களால் அலங்
கரிக்கப்பட்டது. அது வைத்திருந்த கல்லறைக்குள் அ
குழந்தையின் தாயார் மெல்லச்சென்று முழங்காலிட்டு
கொண்டு மூடியிருந்த பெட்டியின் ஒரு ஓரத்தை அழுத்
கொண்டிருந்து பிறகு எழுந்திருந்து கிறிஸ்து மார்க்கப்ப
அந்த ஆத்மாவுக்கு நல்ல கதியுண்டாக வேண்டுமென்று க
ளைப் பிரார்த்தித்துவிட்டு அதற்குப்பின்பு அந்தப் பெ
யைக் கடைசியாக அன்புடன் கண்ணாரப் பார்த்துவிட்
மெதுவாக நடந்து மேல்மாடியிற் சென்றாள். அங்கேயும்
முழங்காலிட்டுத் தங்கத்தூணைப் பிடித்துக்கொண்டு எதிரே
யிருந்த கண்ணாடிமூலமாய் சவப்பெட்டியை வீட்டைவிட்டு
வெளியே கொண்டுபோவதைப் பார்த்துக்கொண்டிருந்தாள்;
அப்போது அவள் புலம்பாமல் பொறுமையாயிருந்த கோலம்
மிகவும் அதிசயத்தைத் தரத்தக்கதே! அவளையும் அறியாமல்
அடுத்தடுத்துப் பெருமூச்செறிந்து கொண்டிருந்தனள்.

நமது தேசத்து ஸ்திரீகளுடைய வழக்கம் யாதெனில், அப்படிப்பட்ட துக்கங்கள் நேரிடுகிறவேளையில் உருண்டு புரண்டு ஐயோ அப்பாவென்று கூக்குரலிட்டு அழுவதும் "ஆசரித்த தெய்வமெல்லாம் கட்டோடே மாண்டதே" என்று தெய்வத்தை நொந்துகொள்கிறதும் வாடிக்கை; இப்படிப்பட்டவர்களுக்கு ஆலிஸ் ராஜகுமாரத்தியின் பெற்றமனது காட்டிய திடத்தையும் நெஞ்சடக்கத்தையும் கேட்டால் மிகவும் ஆச்சரியமாயிருக்கும். சகிக்கக்கூடாத துன்பம் நேரிட்டபோது பொறுமையிருக்கவேண்டியது. ஏனென்றால், அதை அவளே அடியில் கண்ட விதமாய் விவரித்துச் சொல்லியிருக்கிறாள்.

பிரியமுள்ள தாயே! இந்தவேளையில் என் மனதைத்தேற்றி ஆறுதல் செய்யும்பொருட்டுத் தாங்கள் அன்பாயெழுதிய கடி-

தத்துக்காக வந்தனம் செலுத்துகிறேன். நம்முடைய கண்மணி மே என்பவள் முன்னாடி பரமபதம்போய் நம்முடைய வரவை எதிர்பார்த்துக்கொண்டிருக்கிறாள்; அவள் சுகிருதத்தால் இனி நம்முடைய கஷ்டம் அவளுக்கில்லை. சூரியகாந்தி போல் அவள் சொற்பகாலம் இருந்து அனுபவித்தது நாம் ஏதோ துளி பாக்கியம் பண்ணியிருந்தபடியாலேதான். ஆனால் ஓ ஓ! மின்னல்போல் காட்டி மறைந்துவிட்டது. நான் விசனத்தில் முழுகியிருப்பதைப்பற்றிப் பேசவில்லை. ஏனெனில், அதைப் பொறுக்கும்படியான சக்தியைக் கடவுள் எனக்குத் தயவாக அளித்திருக்கிறார். இப்படிப்பட்ட துன்பங்கள் நேரிடும் வேளைகளில் நமக்கு விசேஷமான புத்திமதிகள் உண்டாகின்றன. கடவுள் ஒருவர் இருக்கிறார் என்று நம்புகிறவர்களுக்கு எது சம்பவித்தாலும் நன்மையின்பொருட்டேயாகுமல்லது வேறில்லை; போனதுபோக உள்ளதைக்கொண்டு நன்றியறிந்தவர்களாயிருக்கவேண்டும். நம்முடைய செயலாலே என்ன இருக்கிறது; "அயன் அமைப்பை யாராலும் தள்ளக்கூடாது; தெய்வமில்லாமலா பொழுதுபோகிறதும் பொழுதுவிடிகிறதும்." எல்லாம் தெய்வாதீனம்; அவருடைய சங்கல்பத்தின்படிதான் நடக்கும் எனகிற முழு நம்பிக்கையுடன் அவருக்குப் பணிந்து நடக்கவேண்டியது நமது கடமை. ஆகையால் நாம் எல்லோரும் இப்படியே கருத்தில் வைத்து ஒருவருக்கொருவர் தைரியம் சொல்லிக்கொண்டிருக்கிறோம். அதிர்ஷ்டவசமாக இவ்வுலகத்தில் நம்முடைய உயிர்வாழ்க்கை முடிவற்றதாக இருக்கவில்லையே! இதற்காகக் கடவுளைத் துதிக்கவேண்டும். நம்முடைய பந்து மித்திரர்கள் எத்தனைபேர் பரலோகமடைகிறார்களோ அவ்வளவும் நாம் போகிற வழித்துணையாகிறது; ஏனெனில், அந்தலோகமல்லவோ நமக்கு நிலைமையான மாறாத வீடு!

டிசம்பர்மீ 8-ம் தேதி. ராஜகுமாரத்திக்கு வியாதிகண்டு படுத்துக்கொண்டுவிட்டாள். அந்த தினத்திலேயே அனேக காரியங்களை ஏற்பாடுசெய்து தான் மரணமடைந்தால் இன்னின்னவிதம் நடக்கவேண்டுமென்று கட்டளைகளும் கொடுத்துவிட்டாள். வியாதியின் கொடுமைகளை அவள் பொறுத்தது போல் மற்ற யாரும் பொறுப்பது அரிது. வைத்தியர்கள் என்ன பத்தியம் ஔஷதம் சொல்லுவார்களோ அது எவ்வளவு கடுமையாயிருந்தாலும் அணுமாத்திரமும் பிசகாமல் சொன்னபடி செய்துவந்தாள். ஆ ஆ! அந்த நாள்கள் மிகவும் ஆபத்தும் வியாகுலமுமே மிகுந்த கொடிய நாள்கள். அவருடைய நோயைச் சாந்தப்படுத்த என்னென்ன செய்யவேண்டுமோ எந்த எந்த விதமாக அவளுக்குத் தைரியம் சொல்லவேண்டுமோ அவ்வளவும் குறைவில்லாமல் செய்தார்கள். சில தருணங்களில் தன் கிரககிருத்தியங்களைப்பற்றி உருக்கமாகப் பேசுவாள்; ஊரில் உள்ள ஏழைகளையும் நோயாளிகளையும்பற்றி ஆவலாக விசாரிப்பாள். டிசம்பர்மீ 13உ வைத்தியர்கள் கைவிட்டு இனி நாம் உண்மையை மறைக்கக்கூடாதென்று தாங்கள் செய்த முயற்சிகளெல்லாம் பயன்படவில்லையென்று ப்ரின்ஸ் லூயிஸ் என்பவருக்குத் தெரியப்படுத்திவிட்டார்கள். டிசம்பர்மீ 14உ 8½-மணிக்கு மாட்சிமைதங்கிய ப்ரின்ஸெஸ் ஆலிஸ் என்னும் ராஜகுமாரத்தியானவள் ஒரு குழந்தை படுக்கப்போவதுபோல் சாந்தமாகத் தனக்குள்ளே தானே முணுமுணுப்புடன் கடவுளைத் தியானித்துக்கொண்டு இறந்துபோனாள். அன்றையதினம் ப்ரின்ஸெஸ் மே இறந்துபோய் சரியாக நாலுவாரம் ஆயிற்று; அன்றியும் அந்த நாளானது அவருடைய தகப்பனார் ப்ரின்ஸ் ஆல்பேர்ட்டு என்பவர் இறந்து 17 வருஷம் ஆயிற்று. இவ்வாறு ராஜகுமாரத்தியின் வாழ்நாள் சரித்திரம் முடிந்தது.

இந்த உத்தமியின் சரிதத்தைப் படித்தால் "நிர்மலமாக எது உண்டோ, நேசிக்கத்தக்கதாக எது இருக்கிறதோ, நல்லது நல்லது என்று எது பேர்பெற்றிருக்கிறதோ அவைகளைச் சிந்தித்திரு" என்கிற வேதவாக்கியத்தை அனுஷ்டித்தவர்களாக ஆவோமல்லவா? ராஜகுமாரத்தியாகப் பிறந்து அதிக செல்வத்துடன் இருக்கும்படியான பாக்கியம் எல்லாருக்கும் கிடைக்காமற்போனாலும், மனைவிகளாகவும் தாய்களாகவும் பெண்களாகவும் எல்லாரும் இருக்கக்கூடியதாகையால் இவர்கள் எல்லோருக்கும் அவருடைய சரித்திரமானது அவரவர்களுடைய் கடமைகளுக்கேற்ற சிறந்த புத்திமதிகளைக் கற்பிக்கத் தக்கதாயிருக்கிறது. அவ்வளவு மாட்சிமை பெற்ற நிலைமையில் இருந்தபோதிலும் எவ்வளவு அடக்கமாகவும் வணக்கமாகவும் கபடமற்று மிருந்தாள்; தனக்குப் பணிவிடை செய்ய எத்தனையோபேர் வேலைக்காரர் இருந்தும் தான் சோம்பலில்லாமல் சுறுசுறுப்பாகவும் உழைப்பாளியாகவுமிருந்தாள்; தன்னுடைய நன்மையைக் கருதி நடக்கும்படி அனேகர் கைகட்டிக் காத்துக்கொண்டிருந்தும் தன்னை மறந்து பிறருடைய நன்மையையே கண்ணுங்கருத்துமாகப் பாராட்டிக்கொண்டிருந்தாள்.

மேலும், தாய் தந்தைமார்களை உறுதியான விசுவாசத்துடன் மேன்மைப்படுத்தி அவர்களுக்குப் பணிந்து நடப்பது தங்கள் கடமையென்று பெண்கள் அறிந்துகொள்ளலாம். புருஷனுக்குச் சுகம்வரினும் துக்கம்வரினும் வேலைசெய்யும் போதும் வேலையொழிந்தபோதும் என்றும் ஒரேவிதமாக அவனை நேசித்து ஆதரிக்கவேண்டும் வழி இன்னதென்று இல்லற தருமத்தை மனைவியா யிருப்பவர் தெரிந்துகொள்ளலாம். குழந்தைகள் படித்து நல்வழியில் நடக்கவேண்டுமென்று உள்ளத்தில் ஆசைப்படுவது மாத்திரமல்லாமல் தானும் அவர்களுக்கு அவ்விதமான கல்விப்பயிற்சி செய்விக்

கச் சுயமாகவே முயலவேண்டுமென்று தாய்மார்களறியலாம். மேலும் தானும் தன் புருஷனும் குழந்தைகளும் வாழ்வதே பெரிது என்று நினையாமல் நோயாளிகளிடத்தில் பரிதாபமும் எளியவர்களிடத்தில் இரக்கமும் வைத்துத் தன்னுடைய செல்வச் செல்வாக்குடன் ஒழிந்தவேளையில் பரோபகாரமே பெரிதென்று சிறிது சிறிதாகத் தருமகாரியங்களில் உபயோகித்து எல்லாரிடத்திலும் அன்பும் ஆதரவுமாயிருக்கவேண்டுமென்றால், ஒவ்வொரு பெண்பிள்ளையும் இந்த ஆலிஸ் ராஜகுமாரத்தியின் சரித்திரத்தைப் படித்து உள்ளங்கையில் நெல்லிக்கனிபோல் தெரிந்து நடந்துகொள்ளலாம்.

ELIZABETH QUEEN OF ROUMANIA.

(Carmen Sylva Born 1843.)

ரொமேனியா நாட்டு இராணியாகிய எலிஜபெத்து.

(கார்மென் ஸில்வா.)

ஹங்கரிநாட்டில் பலநூற்றாண்டுகளுக்குமுன்னே என்றும் அழியாத புகழ்பெற்று வாழ்ந்திருந்த ஸெயின்ட் எலிஜபெத்து என்னும் உத்தமியைப்பற்றி நீங்கள் கேட்டிருப்பீர்கள்.

இப்பொழுது நாம் உங்களுக்கு வேறொரு நாட்டிலிருக்கும் எலிஜபெத்தைப்பற்றிச் சொல்ல விரும்புகிறோம். இவள் இக்காலத்திலிருப்பவள். இவளது புகழ், பாடல்களினாலும், கதைகளினாலும், உலகமெங்கும் பரவியிருக்கின்றது. இவள் பெயரைக் கேட்டமாத்திரத்தில் எல்லோருமே இவளைக்கொண்டாடுகிறார்கள். ஒவ்வொரு நாட்டிலும் ஒவ்வொரு நதி அதிகமாகச் சிறப்பித்துக் கொண்டாடப்படுவதுண்டு. அந்தந்த நாட்டில் வாழுகின்றவர்கள் அதன் சம்பந்தமான ஐதிகங்களினாலும், எந்தக்காலத்திலுமுள்ள அதன் அழகினாலும் அதன் மேல் மிக்க வாஞ்சைகொண்டிருக்கிறார்கள். அதுபோல ஐரோப்பாவிலுள்ள டான்யூபியைப் பார்க்கப் பார்க்க விமர்சையாயிருக்கும்; அதன் இருகரையிலுமுள்ள ஊர்களைப் பார்த்தால் அழகாயிருக்கும். அதன் கரையோரங்களிலுள்ள மலைகளின் உச்சிகளில் திராக்ஷைத் தோட்டங்களும், பாழுங் கோட்டைகளும் நிறைந்திருக்கும். முற்காலத்தில் அந்தக் கோட்டைகளிலிருந்த கள்ள அரசர்கள் கூட்டங் கூட்டமாகச் சென்று அவ்வாற்றங்கரைக்கு அருகிலுள்ள ஊர்களிற்

புகுந்து அங்குள்ளவர்களுடைய பொருள்களையெல்லாம் கொள்ளையாடி வாழ்ந்தார்கள். ரைன் நதிக்கரையில் ஓர் குன்றின்மேலுள்ள நென்வீட் எனும் மலைக்கோட்டையில் 1843-௵ எலிஜபெத்து பிறந்தாள். அந்தக் கோட்டையின் பெயராகிய மான்றிபோ வென்பதற்கு ஜர்மன் பாஷையில் "நான் இளைப்பாறுமிடம்" என்று பொருள். அந்தக் கோட்டையின்கீழ் தேவதாரு மரங்களடர்ந்த அழகிய காடுகளுண்டு. அந்தக் கோட்டையின்மேலிருந்து பார்த்தால் கீழே அழகான காடுகளும், பள்ளத்தாக்குகளும், பச்சைப் பசேலென்றிருக்கின்ற வெளிகளும், அவற்றின் நடுவே அந்நதி செல்லுவதும் அழகாயிருக்கும்.

எலிஜபெத்தின் தாய் தந்தையர்கள் நியுவிட் என்னும் ராசு நாட்டிற்கு அரசனும் அரசியுமாய் ஆண்டுகொண்டிருந்தார்கள். நியுவிட் ராஜவம்சம் பிரவித்திபெற்றது; அதில் அரசுபுரிந்த அரசர்களில் பெரும்பான்மையோர் மிகவும் நல்லோர்; கல்வி கேள்விகளால் பெரும்புகழ் பெற்றவர்கள். எலிஜபெத்தின் தந்தையாகிய ஹெர்மான் தத்துவ சாஸ்திரத்தில் கரைகண்ட வித்துவான். அவள் தாயாகிய மேரியா என்பவள் ஆழ்ந்த தெய்வபக்தியுள்ளவள். அவள் தன் மக்களெல்லோருக்கும் கடவுளை வணங்கவும், நோய்கொண்டவர்களுக்கும் ஏழைகளுக்கும் துணைநின்று அவர்களை ஆதரிக்கவும் நன்றாகப் பழக்கிவைத்தாள். தனது மகளாகிய எலிஜபெத்தைப் பயிற்றுவதில்மட்டும் அவளுக்கு அதிக வருத்தமுண்டாயிற்று. அவளுக்குக் குழந்தைப் பிராய முதற்கொண்டே சுறுசுறுப்பும், சுயேச்சையும் அதிகமாயிருந்தனவாகையால், கண்டிப்பாக நடத்தும்போதெல்லாம் அவளுக்குப் பொறுக்கவொண்ணாத கோபமுண்டாகும்.

என்னவெயில் காய்ந்தாலும், மழைபெய்தாலும், பனி கொட்டினாலும், புயலடித்தாலும் தனிமையாகக் காட்டில்

அலைந்து திரிவது அவளுக்கியற்கை. மூன்று ஸெண்பர்னார்ட் நாய்கள் எப்பொழுதும் அவளைவிட்டுப் பிரியாமலிருக்கும். புயல் பலமாக அடிப்பதையும், சருகுகள் சூறைக்காற்றில் சுற்றிச் சுற்றிப் பறப்பதையும், மரத்திலிருந்து கிளைகள் ஒடிந்து விழுவதையும் காணும்போதெல்லாம் சந்தோஷப்பட்டுச் சுயேச்சையாய்த் திரிவாள். காற்று இரைந்து வீசுவதையும், கிளைகள் ஒன்றோடொன்று உரைந்துகொள்ளுவதையும் காடுகளில் திரிந்து கேட்டுக்கொண்டும், அங்கே இயல்பாக வுண்டாகும் விநோதங்களை ஆனந்தமாகப் பார்த்துக்கொண்டு மிருப்பாள். அவள் வீட்டுக்கு வந்தவுடன் தான் கண்டதின் கருத்து நன்றாய் விளங்கும்படி கவிபாடி எழுதிவைப்பாள். பத்து வயதாகும்போதே அவள் கவி பாட ஆரம்பித்தாள். ஆயினும் அவள் தான் இயற்றிய பாடல்களைத் தன் தாய்க்குக்கூடத் தெரியாதிருக்கும்படி ரகசியமாக வைத்திருந்தாள்.

இப்படிக்கெல்லாம் அவள் தன்னிஷ்டப்படி யிருந்தும், சற்றுநேரம் படித்தும், பியானோ வாத்தியத்தை விடாமல் நெடுநேரம் வாசித்தும் வந்தாள். அவள் தாய் ஏழைகளிடத்தில் இரக்கமுள்ளவளென்று முன்பே சொல்லியிருக்கிறோம்; எலிஜபெத்து குழந்தையா யிருக்கும்போதே தன் தாயார் ஏழைகளைப் பார்க்கப் போகும்போதெல்லாம் தானும் அவளோடு கூடவே போவாள்.

ஒருகாலத்தில், எலிஜபெத்தும், அவளுக்கு ஒருவயது மூத்தவனாகிய அவள் சகோதரனும் "ஊரார் பிள்ளையை உடுத்து வளர்த்தால் தன் பிள்ளை தானே வளரும்" என்று நினைத்து ஏழைகளின் குழந்தைகளுக்கு வஸ்திரம் வாங்கிக் கொடுக்க வேண்டுமென்று, தங்களுக்கென்று கொடுக்கப்படும் பணத்தைப் பத்திரமாகக் காப்பாற்றி வைத்திருந்தார்கள். கையில் கொஞ்சம் பணஞ்சேர்ந்தவுடன் தான் அணிந்தி

ருந்த வெள்ளை மேலாடையைப்போலவே ஆடைகளை வாங்கி அந்தக் கோட்டையினின்று நியுவிட்டுக்குச் சென்று தன் கையாலே அவற்றை அவர்களுக்குக் கொடுக்கத் தனக்கு அனுமதிகொடுக்க வேண்டுமென்று தன் தாயை வேண்டிக் கொண்டாள்.

அவள் தாய் அதைக்கேட்டு, ஏழைக்குழந்தைகளுக்கு வெள்ளை வஸ்திரம் வாங்கிக்கொடுத்தால் சீக்கிரம் அழுக்காகிக் கெட்டுப்போகுமாகையால், கறுப்பான கம்பளமாக வாங்கி அவளிஷ்டப்படியே அங்கே கொண்டுபோய்க் கொடுக்கும்படி சொன்னாள்.

எலிஜபெத்து தான் கொண்டிருந்த எண்ணப்படியே ஒரு நாள் அந்த வஸ்திரங்களை யெடுத்துக்கொண்டு தன் அண்ணனோடு கோட்டையின் அடிவாரத்திலுள்ள நியுவிட்டுக்குச் சென்று அங்குள்ள குழந்தைகளுக்கு அவற்றைக் கொடுத்தாள்.

சற்றேறக்குறைய அறுநூறுவருஷங்களுக்குமுன்பு ஹங்கரி தேசத்தில் ஸெயின்ட் எலிஜபெத்து தான் குழந்தையாயிருந்தபோது இவ்வாறே செய்துகொண்டிருந்தாள். ஸோமையா எலிஜபெத்து குழந்தையாயிருந்தபோது அவளும், சில காலத்திற்குப்பின்பு அவளை மணம்புரிந்த அவள் கணவனாகிய லூவியும் தாங்களிருந்த வார்ட்பர்க் என்னுங் கோட்டையினின்றும் அதன் கீழேயுள்ள ஐஸினக் என்னுமூருக்குச் சென்று அங்குள்ள நோயாளிகளுக்கும் ஏழைகளுக்கும் வேண்டுமுதவியைச் செய்யும்படி போவார்கள்.

“பிறருக்கு உதவி செய்தால் தெய்வம் உதவி செய்யும்” என்றபடி எந்நாளிலும் எந்தத்தேசத்திலும், நல்ல பெண்கள் தங்களாலியன்றமட்டும் எந்த விதத்திலாவது பரோபகாரஞ் செய்வதையே உறுதியாகக் கொள்ளுவார்கள். இந்த இரண்டு எலிஜபெத்துக்களின் சரித்திரங்களிலும் வெளித்தோற்றத்தில்

அதிகமாக ஒற்றுமையிராது. இவர்களிருந்த காலமும் ஸ்திதியும் வேறு வேறானவை; ஆயினும் இவ்விருவரும் பரோபகாரமே பெரிதென்று பாராட்டித் தங்களுடைமை முழுமையும் எளியவர்களுக்கே பார்த்துப் பார்த்துப் பங்கிட்டுக் கொடுத்தார்கள். பிடிவாதமும், தயையும், கவிபாடுந் திறமையுமுள்ள அந்தச் சிறுமியின் வாழ்நாள் சென்றவிதம் இப்படியென்று இந்தக் கதையைப் படிக்கப்படிக்கத் தெரியும்.

அவள் சிறுகுழந்தையா யிருந்த காலமெல்லாம் மான்றிபோ கோட்டையிலேதான் கழிந்தன. அவள் குடும்பத்தாரும், நண்பர்களும், அவளிடத்தில் மிகவும் அன்பு பாராட்டிவந்தார்கள். அவளுக்குக் காடு மலை முதலியவற்றைப் பார்ப்பதில் மிக்க விருப்பம்; அவளுக்கு அவற்றைக் காணும்போதே தன்னைச் சேர்ந்தவர்களைக் கண்டாற்போல் சந்தோஷமுண்டாகும். நம்முள் ஒவ்வொருவருக்கும் சுகதுக்கங்களுண்டாகும்போது அவை யெவ்வளவோ அவ்வளவாக மட்டுந்தானிருக்கும். ஆனால் புலவர்கள் தங்கள் மனோபலத்தினால் அவற்றை அதிகமாகச் சிறப்பித்துச் சொல்லுவார்கள். சந்தோஷமுண்டாகும்போது ஆனந்தமாக மேலாகப் புகழ்ந்தும், துக்கமுண்டாகும்போது அதை அதிக தைரியமாக இகழ்ந்தும் பேசுவது வழக்கம். எலிஜபெத்து பாடும் கவிகளை எல்லோரும் நன்றென்று கொண்டாடுவார்கள்; அவள் தன் மனத்திற்குத் தோற்றியதைச் செய்யாதிருந்தாலும், கவிபாடாதிருந்தாலும், அவள் மனம் தாங்காது; தன் கருத்தைக் கவிகளாகப் பாடியமைத்தால் அவளுக்கு அதனிலு மதிக சந்தோஷம். ஆனதினாலேதான் அவள் சிறுகுழந்தைப் பருவமுதல் ஆயுள்காலமெல்லாம் மனோவிசாரங்கொண்டு சங்கடப்பட வேண்டியதாயிற்று.

அன்றியும், அவள் தன்முன்னே எந்நேரமும் சங்கடங்களையே பார்த்துக்கொண்டிருக்கும்படியாயிற்று.

அவள் தந்தை நோய்கொண்டவர். தேகசௌக்கியமுண்டாகவேண்டி அவர் பெரும்பான்மையாய் வீட்டைவிட்டு வெளியேபோய் வசிப்பார். அவள் தம்பியும் பிறந்தது முதல் அடிக்கடி நோய்கொண்டிருந்து இறுதியில் அதனால் உயிர்துறந்தான். அவன் எல்லோரிடத்திலும் அன்பாயிருந்ததனால் அவன் இறந்தது அந்தக் குடும்பத்தாருக்கெல்லாம் பெருந்துன்பத்தை விளைத்தது.

இவ்வாறாக அவளுக்கும் இளமைப்பருவத்தில் சுகமில்லாமற்போயிற்று. அவளுக்குத் துக்கம் இப்படிப்பட்டதென்று அப்பொழுது தெரிந்திருக்குமானால் அதை இன்னவிதமாகத் தாங்கவேண்டுமென்று கண்டிருப்பாள். அவளுக்கு இது தெரியாமலிருந்ததும் ஓர்விதத்தில் நன்மைதானென்று இனிமேல் தெரியும். அவளுக்குப் பதினெட்டு வயதானபோது அவள் கண்ணுக்கினிய கட்டழகியாய் எல்லாருக்கும் மிக்க நல்லவளானாள். அவள் உருவத்தில் சற்றே உயர்ந்து உயரத்துக்குத் தக்க பருமனில்லாமல் சற்றே மெலிந்திருப்பாள்; அதிக உற்சாகமுடையவள்; அவளது கூந்தல் செறிந்து கறுத்துக் கொஞ்சம் செம்மை படிந்திருக்கும்; கண்களிரண்டும் குவளை மலர்போல் அழகாய் அவள் உள்ளக்கருத்தை நன்றாக வெளியிடும். அவள் அத்தனையாக அழகுடையவளல்லாதிருந்தாலும், அதிக புத்தி நுட்பமும் உற்சாகமுமுடையவள். அவளுக்கு வேண்டிய பேர்களெல்லாரும் அவளுக்குக் காட்டு ரோஜாப்பூவென்று வேடிக்கையாகக் குழூஉக்குறிப் பேரிட்டிருந்தார்கள்.

இந்தவயதில் அவள் வீட்டில் தங்கியிராமல், எப்பொழுதும் உலகம் எப்படியிருக்கிறதென்று அறிவதன்பொருட்டு யாத்திரை செய்துவந்தாள். அயல் நாடுகளுக்கு யாத்திரைபோகிற திறமை எல்லோருக்குமே யிராது. சிலர் தேசயாத்திரை செய்தும் வீட்டுக்குத் திரும்பிவரும்போது ஒன்றையுந் தெரிந்துகொள்ளமாட்டாமல் போனபடியே திரும்பிவருகிறார்கள்.

நான் கீழ்நாட்டில் யாத்திரைசெய்தபோது முதலில் கண்ட காட்சியொன்று என் நினைவிற்கு வருகிறது. அப்பொழுது ஈஜிப்டில் இருந்தேன். அலெக்ஸாந்திரியாவிலிருந்து புகைவண்டி மார்க்கமாய், கெயிரோ நகரத்திற்குப் போய்க்கொண்டிருந்தேன். நான் அதிக ஆவலோடு பலகணிவழியாக நீலநதியின் உயரமான கரையையும், அதன்வழியாகப் பாரமேற்றிய ஒட்டகங்கள் தம்மை யோட்டுகிறவர்களோடு செல்லுவதையும், அழகாய் நீலம்படிந்த ஆகாயத்தோடு ஒட்டினாற்போல மனிதர்கள் உட்கார்ந்திருப்பதையுங் கண்குளிரக் கண்டேன். அங்கு எங்கேபார்த்தாலும் வெள்ளைவெளேறென்றிருந்த மணற்காட்டின் இடையிடையேயுள்ள பனந்தோப்புகளில் மண்குடிசைகள் பல சேர்ந்த கிராமங்களிலுள்ளவர்கள் வெள்ளாடுகளையும், நாய்களையும் வைத்துக்கொண்டிருப்பதையும், அவர்களின் குழந்தைகள் அரையில் ஒன்றுமில்லாமல் அம்மணத்தோடு அருகேயுள்ள மணலில் விளையாடுவதையுங்கண்டு எனக்கு ஆச்சரியமுண்டாயிற்று. இவையெல்லாம் எனக்கு முற்றிலும் புதுமையாயிருந்ததனால் வெகு நன்றாயிருந்தது. வண்டியில் என் பக்கத்தில் உட்கார்ந்திருந்த பெண்குழந்தைக்கும் அது புதுமையாகத்தானிருந்தது. ஆயினும் நான் அவளைப் பார்த்து அது விஷயத்தைப்பற்றி அவளோடு பேசத்தொடங்குகையில், அவள் முகஞ்சுளித்து, "மனமொன்றிற் சென்றால் காதொன்றுங் கேளா" என்றபடி தான் அதற்குமுன்னே எப்பொழுதோ படித்திருந்த புத்தகமொன்றை எடுத்துப் பார்த்துக்கொண்டிருந்தாளேயல்லாமல் அவளுக்கு அது சங்கதியொன்றுந் தெரியவில்லை.

எலிஜபெத்து ராஜகுமாரி இவ்வாறு கண்குருடாக யாத்திரை செய்ததில்லை. ஒரு காலத்தில் அவள் சுவிட்ஜர்லாந்திலுள்ள ஜினீவா ஏரியண்டை சென்று அதன் அழகையும், அதனருகேயுள்ள கிராமங்களின் சிறப்பையுங் கண்டாள்.

பின்பு அவள் தனது அத்தைமார்களில் ஒருத்தியோடு அங்கிருந்து இத்தாலியாதேசத்திற்குச் சென்று நேப்பில்சு நகரத்திலிருந்து 1862-ம் ௵ ஜனவரி ௴ 19௳ அடியில் வருமாறு கடிதம் எழுதினாள்;—

“நாங்களிவ்விடத்திலிருக்கிறோம். இங்கே சைரோசோ என்னும் நெருப்புக்காற்று பலமாக அடிக்கின்றது, அலை கொந்தளித்துக் கடல் குழம்புகின்றது, கடல்நாரைகள் அலையின்மேல் மிதந்தோடுகிற நுரைக்குமேலே வட்டமிடுகின்றன. நேற்றிரவில் புயல் பலமாய் அடிக்க, அதைக்கண்டு குதிரை நடுங்கியது. மேகம் கீழே இறங்கி விசூவியஸ் என்னும் அக்கினிமலையைச் சுற்றிக்கொண்டிருக்கின்றது. காற்றும் மழையுங் கலந்தடிப்பதனால் பலகணிவாயில்களின் கதவுகள் காது செவிடுபடும்படி படபடவென்று அடித்துக்கொள்ளுகின்றன. கடல் பசுமையாயும் சாம்பல்நிறமாயும் தோற்றுகிறது. அலையின் வெண்ணிறமான முடிகள் விசித்திரமாக மின்னுகின்றன. எங்கே பார்த்தாலும் புயலடித்தவண்ணமாயிருக்கிறது.”

மறுநாள் அவள் உள்ளதையுள்ளபடி நாம் நேரில் பார்ப்பதுபோல எழுதியிருப்பதாவது:—

“ஜனவரி 20௳. இன்று காலையில் குன்றின்மேலிருந்து நாங்கள் தூங்கியெழுந்திருக்கையில் அசையாமல் கண்ணாடிபோலிருந்த கடலில் வெயில் காய்ந்தது. கதவுகளும், பலகணிகளும் நன்றாகத் திறந்து வைக்கப்பட்டிருந்தன. தென்றற்காற்று வீசுவதனால் தேகத்துக்குச் சுகந்தருவதுமன்றி அதிக சந்தோஷத்தையுமுண்டாக்குகின்றது. என்னுடம்பு வளப்பங்கொண்டது, இன்னும் நெடுங்காலம் பிழைத்திருக்க வேண்டுமென்று ஆசையுண்டாகிறது. உயர அண்ணாந்துபார்த்தால் விசூவியஸ்மலையின் அந்தகாரமான நீர்ப்புகை மண்டியெழுவதும்; அம்மலையின் சிகரம் மேகத்தால் மறைந்திருக்கிறதும்

கண்ணிற்குப் புலப்படுகின்றன. கீழே நோக்கினால் இடது பக்கத்தில் நேப்பில்ஸ் நகரத்தில் வெயில் காய்வதும், வலது பக்கத்தில் கடலும், காப்பிரி தீவுகளின் குன்றுகள் படிப்படியாய் நிறைந்திருப்பதுந் தெரிகின்றன.”

“நேபில்ஸ் நகரத்தை நான் முதலில் பார்க்கையில் எனக்குத் தோன்றின அதன் அழகை இவ்வளவென்று சொல்லக்கூடவில்லை; ஆதலினால் நான் முதலில் அதன் அழகில் முழுகிவிட்டேன்” என்பதாம்.

பின்பு அவள் மற்றொரு சமயத்தில் எழுதியது:—

“நான் வேலைசெய்து என் காலத்தைப் போக்கியபின்பு எனக்கு மக்களாவது, பேரப்பிள்ளைகளாவது இல்லாவிட்டாலும், என்னை நினைத்து அழும்படியாக நான் கடவுளை வேண்டிக்கொள்ளுகிறேன்” என்பதாம்.

இவ்வாறு அவளது நீடிய குழந்தைப்பருவமானது பிரயாணஞ் செய்வதிலும், தன் பந்துக்களிடம் போயிருந்து வருவதிலும், மாண்டிபோவில் தனியேயிருப்பதிலுங் கழிந்தது. அவள் கவிபாடிக்கொண்டு வந்தாள் ஆயினும் அவள் அப்படிப் பாடியது ஒருவருக்குந் தெரியாது. அவள் அதிகமாக ஆழ்ந்துபடித்தாள். அவள் வெகுகாலமட்டும் இரண்டு சிறுமிகளுக்கும் ஒரு சிறுவனுக்கும் நாள்தோறும் மூன்றுமணிகாலம் பாடஞ்சொல்லிவந்தாள். பிறர்க்கு உபகாரஞ் செய்வதென்றால் அவளுக்கு அதிக சந்தோஷம். அவள் தன் தந்தை கேட்க எவ்வளவோ படித்ததுண்டு. அதன்பின், காலக்கிரமத்தில் அவளது தந்தையிறந்தார். அவருக்குப் பின்பு அவள் சகோதரனும் இறந்தான். பெற்றோரும் கூடப்பிறந்தோரும் தவிர சகலமும் வாங்கலாமென்று தேர்ந்தாள்.

அவளுக்குத் தன் கருத்தையெல்லாஞ் செலுத்தும்படியான ஏதேனும் ஒரு நல்ல வேலையில் அமரவேண்டுமென்று, பெண்களுக்காகப் பெரிதான பாடசாலையொன்றை ஸ்தாபித்துக்

தானே அதற்குத் தலைவியாயிருக்கவேண்டுமென்றும் வெகு நாளாக ஓரெண்ணமிருந்தது; அந்த வேலையை நன்றாகச் செய்தற்பொருட்டு அதற்கு வேண்டியதைச் சிறிதுகாலம் படித்தும் வந்தாள். ஆயினும், அவள் வேறு வேலையில் அமர்ந்துகொள்ள வேண்டியதாயிற்று. 1869-ம் ஞு ஜனவரிமீ அவள் தன்னுடைய தினசரியில் அடியில் வருமாறு எழுதியிருக்கிறாள்:—

"சென்ற வருஷம் சந்தோஷமாகக் கழிந்ததைப்பற்றி நான் கடவுளுக்கு வந்தனம் புரிகிறேன். இப்பொழுது பிறந்திருக்கிற புதுவருஷம் எப்படி முடிந்தாலும் சரி; நான் செய்யும் வேலைகள் நன்றாக முடியும்படி ஆண்டவன் அருள் புரிவாராக. இந்த தினசரி புத்தகத்தில் நான் எழுதத் தொடங்கி இன்றோடு ஒன்பது வருஷமாயிற்று. அதில் நான் எனது இளமைப்பருவத்தைப்பற்றி யெழுதியிருக்கிறேன். சிலவேளைகளில் ஈசுவரபக்தி மேலிட்டு உள்ளங்கனிந்து எழுதியிருப்பேன்; சிலசமயங்களில் அதிக சந்தோஷத்தோடு எழுதியிருப்பேன். ஆயினும் நான் எழுதியவற்றுள் பெரும்பான்மை துக்கமாகவேயிருக்கும். எனக்கு பாலியத்தில் யாவரிடத்திலும் அன்புடைமையும், பக்திவைராக்கியமும் உண்டாயின. என்னுடைய மித்திரர்கள் என்னைக் கைவிட்டார்களென்ற துக்கமட்டும் எனக்கு எந்நாளுங் கிடையாது. அல்லாமலும் நான் இன்னமும் இளமை குன்றாமலிருக்கிறேன்; தேகத்தில் நல்ல பலமிருக்கிறது; இனி "உள்ளநாளுள்ள மட்டும் ஓயாப்பெருங்கவலை" என்பதில்லாமல் சுகமாகவே காலத்தைக் கழிப்பேனென்று தோற்றுகிறது. என்னிடத்தில் பாடுந் திறமைமட்டும் ஆண்டவனருளால் கெடாதிருக்குமேயாயின் அதை நான் வரப்பிரசாதமாக வெண்ணி அபிவிருத்தி செய்துவருகிறேன். சந்தோஷமாகக் கழிந்த அழகிய சென்ற வருஷமே! உனக்கு வந்தனம். புதிய வருஷமே!

அன்போடும், நம்பிக்கையோடும் உன்னை உபசரித்தழைக்கிறேன். "செய்வன திருந்தச்செய்" என்பதை நான் உறுதிமொழியாக்கொண்டு செய்வேனாக" என்று எழுதினாள்.

அதே வருஷம் அக்டோபர்மீ 12உ எலிஜபெத்து தனது தினசரியில் அடியிற் கண்டவாறு எழுதினாள்:—

"என் கலியாணத்திற்கு வரன் நிச்சயமாயிற்று; என் ஆசைக்கேற்ற காதற்கணவர் கிடைத்திருக்கிறார்."

அவள் வாழ்க்கைப்பட நிச்சயித்தவர் ஜர்மனிதேசத்து ராஜவம்சத்திற்கு உறவாகிய ஹோஹின்ஸாலரன் என்னும் வம்சத்திற் பிறந்த சார்லஸ் என்னும் ராஜகுமாரர். புதிதாக ஏற்படுத்தப்பட்ட நாடாகிய ரொமேனியாவுக்கு அவர் அதிபதியாகி அதை அரசாளவேண்டுமென்று ஐரோப்பாவிலுள்ள பிரதான அரசர் கேட்டுக்கொண்டபடி அதற்கு அரசனானார். ரொமேனியாவென்பது ருஷ்யாதேசத்தின் தென்மேற்கிலும், கருங்கடலுக்கு மேற்கிலுமுள்ள சிறு தேசம். அது முன்னே துர்க்கிதேசத்தாரால் பிடித்துக்கொள்ளப்பட்டு வெகுகாலமட்டும் அவர்களுடைய ஆதீனத்திற்குட்பட்டிருந்தது; ஆனால் ஐரோப்பியருடைய உதவியினால் அது இப்பொழுது சுவாதீனம் பெற்றிருக்கிறதென்றாலும், துர்க்கியரோடு ஒற்றுமையாகவிருக்கிறது. அதில் உற்பத்தியாகும் பொருள்களை விருத்திசெய்யும்படி ஜனங்களுக்குத் துணையாக நின்று அதை விமர்சையாக ஆளும்படியான நல்ல அரசனை நியமிக்கவேண்டுமென்பதும், அடிமைத்தனத்தைவிட்டு அவர்களை விடுவிக்க வேண்டுமென்பதும் எல்லோர்க்குமுள்ள கருத்து. ஆனதினாலேதான் மேற்சொன்னபடி ஹோஹின்ஸாலரன் வம்சத்திலே பிறந்த சார்லஸ் என்பவரை அவர்கள் தேர்ந்தெடுத்தார்கள். ஆனால் எலிஜபெத்து ராஜகுமாரி இவருக்கு எப்படி மனைவியானாளென்று கேட்கலாம்.

சில வருஷங்களுக்குமுன்னே எலிஜபெத்தின் தோழியொருத்தி அவளோடு "அம்மா! நீர் ஏதோ ஒரு நாட்டின் சிங்காதனத்தை அலங்கரிக்கப்போகிறீர்" என்று சொல்லக் கேட்டு அவளும் வேடிக்கையாகவே, "அப்படி நான் அரசியாகிறதாகவிருந்தால் அது பொஹீமியாதேசத்துச் சிங்காதனமாகத்தானிருக்கவேண்டும்; ஏனெனில், அங்கே போனால் அது எனக்கேற்றபடி உபகாரஞ்செய்வதற்கேற்றவிடமாகும்" என்று சொன்னாள்.

அவள் சொன்ன வார்த்தையின்படியே எல்லாம் நிறைவேறியது. எலிஜபெத்து இதற்கென்றே முந்தியே ஏதோ நிச்சயித்திருந்தாள்.

சார்லஸ் ராஜகுமாரர் வெள்ளோட்டுப் புத்தகமொன்றின் முதல் பக்கத்தில்:—

"சிநேகம் சிநேகத்தைத் தரும்; நீ என்னிடம் வருவது போலவே உன் குடிகைகளிடத்தும் அன்போடும், நம்பிக்கையோடும் வா; நீ எனக்குமாத்திரமே உரியவளல்ல; ஒரு தேசத்தில் வாழும் ஜனங்களெல்லோரும் உன்னை நெஞ்சார நினைந்து உன்னிடத்தில் அன்பும் ஆதரவுமுடையவர்களாக வேண்டுமானால் நீயும் அவர்களிடத்தில் அப்படியே அன்பு பாராட்டவேண்டும்" என்று எழுதியிருக்கிறார்.

1869-ம் ௵ நவம்பர் ௴ 12௳ மான்ரிஸாவில் எலிஜபெத்து எழுதிய தினசரியில், "நான் நல்லவிடந்தேடி வாழ்க்கைப்பட்டேன்; இது நான்பெற்ற பெரும்பேறு" என்றெழுதியிருக்கிறாள். அவர்கள் விவாகம் 1869-ம் ௵ நவம்பர் ௴ 15௳ நியூவிட் நகரத்தில் நடந்தது; அதன்பின்பு உடனே பொஹீமியாவுக்குச் சென்றார்கள்.

நவம்பர் ௴ 22௳ எலிஜபெத்தும் அவளுடைய கணவனும் பொஹீமியாவின் எல்லையோரத்திலுள்ள டர்மியுலாவின் என்னுமிடத்திலிருந்தார்கள்.

அவர் அந்நாட்டின் வழக்கத்தின்படி ரொட்டியும் உப்பும் சாப்பிட்டார்; இப்படிச் செய்வது அவர்களுக்குள் உபசரிப்பதென்று பாரம்பரியமாக எண்ணப்பட்டிருக்கிறது. இதன்பின்பு அவரிடத்தில் நம்பிக்கையுண்டாயிற்றென்பதற்கு அடையாளமாக அந்நகரத்தார் தங்கள் கோட்டையின் திறவுகோலை இவரிடங் கொடுத்தார்கள்.

அந்தத் தேசத்திலுள்ள பல நாடுகளினின்று ஜனங்கள் அவர்களுக்குப் புதிதாகக் கிடைத்த அரசனையும், அவர் மனைவியையும் காணும்படி வந்தார்கள். எலிஜபெத்தைப்போன்ற பெருந்தன்மையுடைய மாதைக் காண்பதே ஒரு அழகு.

அந்நாட்டார் இயல்பாக உடுக்குமுடை விசித்திரமானது; வெவ்வேறான நிறமும், சித்திரவேலையுமுடைய ஆடையணிந்திருப்பார்கள். பெண்கள் பனிக்கட்டிபோல் வெள்ளைவெளேறென்று வெளுப்பான நார்மடி உடையணிந்திருந்தார்கள். சிறிய குதிரைகள் எட்டும், பத்தும், பன்னிரண்டுமாகப் பூட்டிய ரதங்களின்மேல் ஏறி ஸாரதி ஒருவன் தன் ஒரு கையால் செலுத்துவதைக் கண்டு அவற்றின்மேல் விருப்பமுண்டாயிற்று. தெருக்களெல்லாம் கருங்காலிப் பலகை பரப்பியிருந்தார்கள். இருபுறமும் செல்வர்களின் மாளிகைகளும், சிறு குடிசைகளுமிருந்தன. தனவான்களின் மாளிகைகளுக்கு இடையே வெண்ணிறமான சிறு குடிசைகள் இவற்றிற்கேற்ற சிறிதான பலகணிகளோடிருப்பதைப் பார்த்தால் அழகாயிருக்கும். அங்கே அவள் பார்த்தவிடமெல்லாம் கண்ணுக்கினிய காட்சியாகவிருந்ததைக் காண எல்லாம் அவளுக்குப் புதியனவாகவும், இன்பந் தருவனவாகவுமிருந்தன. அவள் சுறுசுறுப்போடு எப்பொழுதும் தனக்குள்ள வழக்கத்தின்படியே தனக்குப் புதிதாகக் கிடைத்திருக்கும் உயர்ந்த நிலைமைக்கேற்றபடி தான் செய்யும் வேலையைச் செய்யத்தொடங்கினாள்.

அந்நாட்டாரோடு அவள் வாழ்ந்திருக்கற்பொருட்டு அவர்களுடைய நடையுடை பாவனைகளை யறியவேண்டியது அவள் வேண்டியவற்றுள் முதலாவதாயிற்று. ஆதலினால் அவள் அநேகரைக் கண்டு வார்த்தை சொல்லும்படி வரவழைத்தாள். ஏககாலத்திலே அநேகரைப் பார்க்கும்படி வைத்துக்கொண்டதினால் அவளுக்கு ஒருவரையும் நன்றாய்க் கண்டுகொள்ளக்கூடவில்லை. ஆனதினால் ஒவ்வொரு சீமாட்டியையும் தனித்தனியே கண்டு வார்த்தை சொல்லும்படி திட்டஞ்செய்தாள்.

இவ்வாறாக அவள் எல்லாரோடும் கலந்து வார்த்தை சொல்லுவதைப்பற்றித் தனது தினசரியில் அடியில் வருமாறு எழுதியிருக்கிறாள்:—"இப்படிப் பார்த்துப் பேசும்போது என் மனதிலில்லாததை உள்ளதுபோலப் பாவித்துச் சொல்ல வேண்டியிருக்கிறது; ஆதலினால் உள்ளேயொன்றும், வெளியேயொன்றுமாக இல்லாமலிருக்கும்படி எல்லோரிடத்திலும் பிரியமாகவே செய்துகொண்டேன். பிறர் அன்பு எல்லோர்க்குமே வேண்டும். இப்படிச் செய்துகொண்டதினால் ஒவ்வொருவரும் எனக்குப் பிரியமானார்கள்; இப்பொழுது ஜனங்களைப் பார்ப்பதென்றால் எனக்கு வெறுப்பில்லை; அதனால் எனக்கு விருப்பமுண்டாகிறது. ஆதலினால் ஒருவன் ஒன்றைக் குறையறச்செய்து முடிக்கவேண்டுமானால் நன்றாய்ச் செய்யவேண்டும்" என்று எழுதினாள்.

உடனே அவள் பொஹிமியா பாஷையைக் கற்க ஆரம்பித்தாள். இப்பொழுது அவள் அந்தப் பாஷையை நன்றாயறிந்து வெகு திறமையாக வார்த்தை சொல்லுகிறாள். அந்த தேசத்தார் அவள் தங்கள் பாஷையில் தங்களிடப் பேசுவதில் வல்லவளாயிருக்கிறாளென்று பெருமையாகச் சொல்லுகிறார்கள். எப்படியெனில் வார்த்தை சொல்லும்போது அத்தனை அழகாய் உச்சரிக்கிறாள். அவளுக்கு ஜெர்மன் பாஷையும், வேறு பாஷைகளும் தெரியுமாதலாலும் பொஹி

மியா பாஷை இவ்விரண்டிற்கும் சம்பந்தமுடையதாகையாலும் அப்பாஷையை அத்தனை நன்றாகக் கற்றுக்கொள்ளல் எளிதாயிற்று. ஒரு பாஷை தெரிந்திருந்தால் அதன்மூலமாக மற்றொன்றைக் கற்றுக்கொள்வது எளிதல்லவா?

அந்தக்காலத்தில் ரோமானியாவில் கல்வி மிகவும் அவமதிக்கப்பட்டிருந்தது. எலிஜபெத்து வந்த சிறிது காலத்திற்குள் சிறுவர்கள் படிப்பதற்கென்று புத்தகங்களை மொழிபெயர்க்குஞ் சங்கமொன்றை ஏற்படுத்தினாள். அவள் அப்பொழுது அங்கே கல்வியிருந்த நிலைமையைப்பற்றித் தன் தாய்க்கு ஒரு கடிதம் எழுதினாள். அதாவது, "பாடசாலைகளுக்கும், ஜனங்களுக்கும் படிப்பதற்கு உபயோகமான புத்தகங்களில்லை. இதைப்பற்றி ஏற்பாடு செய்யவேண்டும். சிறுபெண்கள் படிப்பதற்காக நான் சிறுமியாக விருந்தபோது வாசித்த சிறந்த ப்ரெஞ்சுபாஷைப் புத்தகங்களைக் கொடுத்திருக்கிறேன். அன்றியும் இது விஷயமாகப் புத்திசாலிகளான சிலரோடு கலந்து வார்த்தை சொல்லிக்கொண்டுமிருக்கிறேன். அலெக்ஜாந்தர் என்னும் புலவர் மொழிபெயர்ப்புகளை ஒத்துப்பார்த்துப் பிழைகளைத் திருத்திக்கொடுப்பதாக ஒப்புக்கொண்டிருக்கிறார். சீக்கிரத்தில் புத்தகங்கள் பதிப்பிக்கப்பட்டுக் குறைந்தவிலைக்கு விற்கப்படும்" என்று எழுதினாள்.

இதேகாலத்தில், ஏழைகளுக்குத் துணைநின்று அவர்களை ஆதரித்தற்பொருட்டு ஒரு சங்கமு மேற்படுத்தினாள். இப்படி பரோபகாரமாக நன்மைபுரிந்து வருகையில், அவள் குடும்பத்திலும் ஒரு குறையுமின்றி மேலுமேலும் இன்புற்றிருந்தாள்.

1870-ம் ஹு. செப்டம்பர் மீ 8உ தீர்க்கப்பட்ட இருபத்தொரு பீரங்கிவெடிகளின் முழக்கத்தினால் பக்காரஸ்ட் நகரத்தார் ராணிக்குப் பெண்பிறந்ததென்று கண்டு களிகூர்ந்தார்கள். அந்தக் குழந்தைக்குப் பேர்கொடுத்த தினத்தில் ராணி தன்

தாயின்பேரையிட்டு அன்றுமுதல் அவளை மரியாளென்று அழைத்தாள். இந்த ராஜகுமாரி சில நாள்களுக்குள் ரோமானியா கண்மணி என்று பிரசித்திபெற்றாள். அந்த நாட்டாரெல்லோரும் அந்தக் குழந்தை தங்கள் நாட்டில் பிறந்ததனால் அவளைத் தங்களுடைமையென்று பாராட்டி அவளுடைய க்ஷேமத்தில் மிக நாட்டமுடையவரானார்கள்.

இதுதான் எலிஜபெத்து அரசியின் மேன்மையான வாழ்நாள். அந்த வருஷம் கோடையின் கொடுமை அதிகமாய் ஊரெங்கும் காய்ச்சலாயிருந்ததனால் குழந்தையின் சுகத்திற்கு ஏலாதென்றெண்ணி அவள் பட்டணத்தைவிட்டுக் கார்பேதியன் மலைக்குத் தன் குடும்பத்தோடு சென்றாள். மரியாளுக்கு மலையின் குளிர்ச்சியும், சோலையின் நிழலும் அவசியம் வேண்டியதாயிருந்தன.

அந்த மலையின் உச்சியில் நினைத்தமாத்திரத்தில் அவர்களுக்கு அரண்மனையைக் கட்டுவதென்றால் எளிதன்று. அதன்மேல் புராதனமான ஆச்சிரமமொன்றும், அதைச் சுற்றிலும் துறவிகள் வாசஞ்செய்யும் சிறியமடமும், அவற்றின் அருகே ஓர் சிறிய கோயிலும் இருந்தன. அங்கே முப்பது சன்னியாசிகள் வசித்தார்கள். கோடைகாலத்தில் உஷ்ணந் தாங்கமாட்டாமல் அரசன் தான் மட்டுந் தனியே குளிர்ச்சிக்காக அந்தவிடத்தில் வசிப்பதுண்டு. அது இப்பொழுது அரசகுடும்பம் வாஸம் செய்வதற் கேற்றவிடமாயிற்று.

அங்கே இடம் போதாமையால் தேவதாருமரத்தால் சில சில அறைகளை அதனோடு சேர்த்துக் கட்டினார்கள். தூரத்திலிருந்து பார்ப்பவர்களுக்கு, அதன் வாசலின்மேல் ரோமானியாநாட்டின் கொடி பறவாதிருந்தாலும், காவற்சேனைகள் வாசலில் ஆயுதபாணிகளாய் விடாமற் காத்திராவிட்டாலும், அதில் அரசகுடும்பமிருக்கிறதென்று நன்றாக விளங்கும்படியிருந்தது.

அந்தவிடத்தில் இருந்தபொழுது சற்று அசௌக்கியமும் உண்டு. ராணி உடைதரித்துக்கொள்ளும் அறையை ஒட்டினாற்போல் ஓர் பருத்த சன்னியாசியின் அறைவீடு இருந்ததனால் அங்கேயுண்டாகும் சத்தமெல்லாம் அந்த அறைக்குக் கேட்கும். துறவிகள் தங்கள் மடத்தின் பெரிதான போஜனசாலையில் சுகமாக வுண்ணும்போது அரசனும் அரசியும் அதனோடு சேர்த்துக் கட்டப்பட்டிருந்த சிறிய அறையில் உண்ண வேண்டியதாயிற்று. ஆயினும் இந்த அற்பசங்கதியை அவர்கள் ஒருபொருட்டாக வெண்ணவில்லை. மலைநாட்டில் சோலையும், குளிர்ந்த காற்றும் சுயேச்சையாய் உலாவிவரும் இடமும் கிடைத்திருந்தன. அது நகரவாஸத்தைப் பார்க்கினும் மேலாகவே யிருந்தது. அவர்களிருந்த இடத்துக்கு மேலே பெரிதான மரங்களின் நிழலில் பசும்புல் நிறைந்த தரையில் ராணி ஓர் சிறுவீட்டைக் கட்டுவித்தாள். அந்த வீட்டிற்குள்ளே தனக்கென்று கடவுளைத் தியானிப்பதற்காகச் சிறிய அறையொன்றை வகுத்திருந்தாள். வெவ்வேறு நிறமுள்ள கண்ணாடிக் கதவுகள் போடப்பெற்ற அந்த அறையிலின்றும் வெளியே வெகுகாலமாக ஆகாயமளாவிய பெரிய தேவதாரு விருக்ஷங்கள் நிரைநிரையாயிருக்கிறதைக் காணலாம். அங்கே எழுதுவதற்கு ஒரு சாய்வான எழுதும் பலகையும், இரண்டு நாற்காலிகளும், புத்தகங்கள் அடுக்கியிருந்த ஒரு பீடமும், சித்திரமெழுத வர்ணக்கட்டிகளும் தூரியக்கோல்களும் வைக்கப்பட்டிருந்த ஒரு எடுப்பான பலகையும் தவிர வேறொன்றுமில்லை. ராணியாவுக்கு விருந்தினர் அதிகமாக வந்து அவளுக்கு அதிக சிரமமுண்டானபோதெல்லாம் அவள் இளைப்பாறுதற்பொருட்டு அந்த மலையுச்சிக்குச் செல்லுவாள். அவள் அந்த இடத்தில் ஏகாந்தமாய்ச், சுகமாகத் தன்னிஷ்டப்படி யெல்லாமிருந்து விநோதமான வேலைகளைச் செய்வாள்.

அங்கிருக்கும் போதெல்லாம் எப்பொழுதும் ஓயாமல் ஏதாவது வேலை யிருந்துகொண்டேயிருக்கும். எலிஜபெத்து ராணி எந்நேரமும் ஒருகாரியத்தில் மனதைச் செலுத்திக்கொண்டிருப்பாள். ஒரு க்ஷணப்பொழுதாவது அவளுக்கு இளைப்பாற நேரமிராது. வித்துவான்களும், பாடகர்களும், சித்திரமெழுதுகிறவர்களும், ஓயாமல் வந்து வெகுநாள் மட்டுங் காத்திருப்பார்கள். எலிஜபெத்துக்குத் தன் செல்வமகளைச் சூழ்ந்து அன்பும் ஆதரவுமாக ஆவலுடன் பார்த்துக்கொண்டிருந்த சிறு பெண்களிடத்தில் பற்று அதிகம். இவ்வளவுக்கும் ஒருவராயினும் சோம்பலாயிருப்பது கூடாது. சிலர் எழுதுவார்கள்; சிலர் படிப்பார்கள்; வேறு சிலர் சித்திரமெழுதுவார்கள்; மற்றுஞ் சிலர் கவிபாடுவார்கள்.

அவ்விடத்தில் எலிஜபெத்து ராணி அவர்களோடு சந்தோஷமாயிருந்தாள்; சாதாரணமான உடையைத் தரித்து உற்சாகமாக வேலை செய்துகொண்டிருந்தாள். அழகிய அந்த உடையை உடுக்க அவளுக்கு மிகவுங்கொண்டாட்டம். அன்றியும் அவள் அந்த ஊராரைக்கொண்டு அங்குள்ளவர்களால் வஸ்திரங்களை நெய்விப்பதில் நாட்டம் வைத்திருந்தாள். இந்தக் கைத்தொழிலை அபிவிருத்தி செய்யவேண்டுவதற்கென்று அவளும், அவளோடிருந்த சீமாட்டிகளும் அந்தக் கோடையிற் போகும்போதெல்லாம் அந்த வஸ்திரங்களை மாத்திரமே உடுத்திவந்தார்கள். சித்திரத்தையலால் அலங்கரிக்கப்பட்ட அந்த உடைகளை அவர்கள் தரித்து மலையின்மீதுள்ள சோலையில் உலாவுவதைக் காணும்போது வனதேவதைகளே வந்திறங்கி வாஸஞ்செய்வதுபோலிருக்கும். அங்கே சுகமாய் வாழ்வதற்கு இதனினுஞ் சிறந்த உடை வேறென்னவேண்டும்?

இதன்மத்தியில் மரியாள் எலிஜபெத்து என்னும் ராஜகுமாரி நாளொருமேனியும் பொழுதொருவண்ணமுமாக நன்றாய் வளர்ந்து தன் தாயாரைப்போலவே மிக்க அறிவுடையவ

253 – 127

ளானாள். அந்தக் குழந்தை கதிரொளிபோல அழகுப் பூங்கொடியாய்ச் சூரியகிரணங்களைத் தனது சின்னஞ் சிறுகைகளை நீட்டிப் பிடிக்க முயல்வாள். எலிஜபெத்து தன் குழந்தையைப்பற்றித் தன் தாயாருக்கு எழுதியதாவது: "அம்மா! நமது அருமைக் குழந்தை மரியாளைப்பற்றி என்னென்று சொல்லுவேன்! வெகு சாது; எப்பொழுதாயினும் குற்றஞ் செய்வாளாயின் அதனைப்பொறாமல் துன்பப்படுவாளாதலால் அவளை யாராவது சமாதானப்படுத்த வேண்டியிருக்கிறது. தான் என்னும் செருக்காவது, கீழ்ப்படிதலில்லாமையாவது அவளிடத்தில் சிறிதுண்டானாலும் அவளுக்கு அதனையெடுத்துக் காட்டினமாத்திரத்தில் அவை பறந்துபோம். கதிர்போலக் கூர்மையான புத்தியுடையவள்; பொறுமை அவளிடம் குடிகொண்டிருக்கிறது. அவளிடத்துள்ள புத்திநுட்பத்தை அவள் கண்களே சொல்லும். மதிபோன்ற அவள் முகத்தைப் பார்க்கும்போதே அவளிடத்திலுள்ள நுண்ணறிவு பிரத்தியக்ஷமாகப் படுகின்றது. இவ்வுலகமழியுமளவும் தாய்க்குத் தம்மக்களிடத்திலுள்ள அன்பும், மக்களாலுண்டாகும் ஆனந்தமும் வேறுபடாவென்றும், சம்சாரத்திலுள்ள துக்கங்களெல்லாம் ஒருவாறு மக்கள்முகத்தைக் கண்டமாத்திரத்தில் நீங்குமென்றும் நினைக்கிறேன். ஆயினும் இவ்வுலக இன்பம் இமைப்பொழுதேனும் நிலையில்லாமல் அழிந்துவிடும்" என்பதாம்.

"மக்கட்பேறல்லது பெரும்பேறில்லை" என்றபடி அவள் எழுதியது முற்றுமுண்மையே. 1873-ம் ஷை கோடையில் அவள் தன் மகளையழைத்துக்கொண்டு ஜர்மனிக்குப் போனாள். அவள் கலியாணத்துக்குப் பின்பு தன் தாய்வீட்டிற்குப் போனது அதுதான் முதல்முறை. அந்தக் குழந்தை ஜர்மனிக்குவந்தது முதல் அந்நாட்டாரெல்லாரும் அவளிடத்தில் மிக்க அன்பு பாராட்டித் தங்கள் கண்ணுக்குக் கண்ணாக நினைத்துவந்தார்கள். ஆயினும் சிறுகுழந்தையாதல்பற்றித் தான் பிறந்த நாடா

கிய ரோமானியாவிடத்தே அவள் நினைவெல்லாஞ் சென்று எந்நேரம் பார்த்தாலும் தன் தாயாரோடு தன்னை அவ்விடத்துக்குத் திரும்ப அழைத்துக்கொண்டுபோய்விடும்படி கேட்டவண்ணமாயிருந்தாள். அவள் திரும்பிப்போகையில் ஊர் ஊர் என்ற சொல்லுடையவளானாள். அவள் வியன்னாவுக்குப் போனபோது ரோமானியர் நாட்டுச் சிறுவர்கள் அவளுக்கு எதிர்கொண்டு சென்று அவளை உபசரிக்கையில் அவள் அவர்களைப் பார்த்து நான் ரோமானியாவுக்குத் திங்களோடு போகிறேன் என்று சொன்னாள்.

அப்பொழுது பக்காரஸ்டில் ஜ்வரமும், வைசூரியுமாயிருந்ததனால் சன்னியாசிகள் வசிக்குமிடமாகிய ஸைனியாவின் வழியாகச் சென்றார்கள். எலிஸபெத்து தன் தாய்க்கு 1874-ம் ௵ எழுதின கடிதத்தில் பக்காரஸ்டில் காய்ச்சலும், வைசூரியும் செய்யுங் கொடுமை இவ்வளவவ்வளவென்றல்ல; கணக்கில்லாமற் குழந்தைகள் இறந்துபோகின்றன. தாய்மார்களாகிய நாங்கள் ஒருவரையொருவர் காணும்போதெல்லாம் குழந்தைகள் க்ஷேமமா என்பது முதலாவது கேள்வியாகின்றது என்று எழுதினாள். பிள்ளையருமை பெற்றவளுக்குத் தெரியுமல்லவா?

மரியாளுக்குக் கொஞ்சம் காசநோய் கண்டது; அதற்குத் தக்கபடிச் சிகிச்சை செய்யப்பட்டு உடனே நோய் சாந்தப்பட்டது. ஆயினும் எப்பிரல்மீ 5௳ ஞாயிற்றுக்கிழமையன்று ஜ்வரமும், காசமுங் கலந்துகொண்டு நிமிஷத்துக்கு நிமிஷம் அதிகப்பட்டு வியாழக்கிழமை யிராத்திரி ஜ்வரவேகத்தினால் இடையிடையே நான் ஸைனியாவிற்குப் போய் அங்குள்ள பாலாக்கு நதியின் தண்ணீரைக் குடிக்கவேண்டும் என்று பிதற்றியது. அந்தக் குழந்தை கேட்டபடி ஒரு சின்னத் தண்ணீரைக் கொடுக்கப்போக, அது தன் கையைத் தூக்கிக்கொண்டு அங்கிலேய பாஷையில் எல்லாந் தீர்ந்துவிட்டது

கின்றது. அது வியாழக்கிழமை காலையில் ஐந்து மணிக்குப் போய்விட்டது. தன்னை வளர்த்த அங்கிலேய முலைத்தாயின் மடியில் படுத்திருந்தது. எலிஸபெத்து தன் குழந்தையின் பக்கத்தில் முழங்காலிட்டு உட்கார்ந்து குழந்தையின் சிறு கைகளைத் தாங்கிக்கொண்டிருந்தாள். குழந்தைக்கு மூச்சு இழுத்துக்கொண்டிருந்து பளிச்சென்று சுவாஸம் நின்று பிராணன் போய்விட்டது.

குழந்தைக்குப் பிராணன் போகுமளவும் ஒரு தாய்க்கு ஒரு பிள்ளையானதால் அருமை மகள் பிழைப்பாளென்றே எலிஸபெத்து எண்ணியிருந்தாள். தன் குழந்தைக்குப் பிராணன் போய்விட்டதென்று கண்டவுடன் அவளுக்கு ஆற்றவொண்ணாத துக்கமுண்டாகி அங்கம் பதறினாள் என்றாலும், தலைகுனிந்து கடவுளை வணங்கி எல்லாம் ஆண்டவன் செயலென்று ஈசுவரன் வசம் ஒப்புவித்து அவனே கதியென்றிருந்தாள்.

சற்றுநேரத்திற்கெல்லாம் அவள் தானே தன் குழந்தையின் கண்களை மூடிவிட்டு, மெல்ல வெழுந்திருந்து, அங்கிருந்த வைத்தியர்கள் தன் குழந்தைக்காகப் பட்டபாடுகளுக்காக அமரிக்கையாய் அவர்களுக்கு வந்தனஞ் செய்தாள். அவள் வாய்விட்டு தெய்வத்தின்மீது சிறிதேனுங் குறைகூறவில்லை. பின்பு அவர்கள் குழந்தையை யெடுத்து அதற்குச் செய்யவேண்டியவற்றையெல்லாஞ் செய்கிறமட்டும் அவள் தன் விசனத்தைக் காட்டாமல் உறுதியாக விருந்தாள். அதன் பின்பு அவள் துக்கம் பொங்கியெழுந்தது. இவ்வாறு "பொல்லாத காலம் சொல்லாமல் வந்தது" என்றபடி திடீரென்றுண்டான மரணத்தினால் அரசனும் அவளைப்போலவே விசனமடைந்தவனானான். ஆயினும் அவன் தைரியத்தை விடாமல் ஒருவாறு துக்கத்தை யடக்கிக்கொண்டு "வாழ்நாளுக்கு ஏற்ற

வயிற்றெரிச்சல்" என்று தன் மனைவிக்குத் தேற்றஞ் சொல்ல முயன்றான். எலிஜபெத்து "ஈசுவரன் என் குழந்தையை என்னிலும் அன்பாக விரும்பினான்; அவன் அவளைத் தன்னிடஞ் சேர்த்துக்கொண்டான்" என்று அவள் சாந்தத்தோடு உருக்கமாகச் சொன்னாள்.

அந்தக் குழந்தையின் பிரேதத்தைப் பெட்டிக்குள்ளே வைத்துக்கொண்டு அரசி தன் கையை அதன்மேல் வைத்து "ஆண்டவனே! என் குழந்தையை இரக்ஷிப்பீராக" என்றாள். அரசன் அந்தப்பெட்டியைப் படிக்கட்டின்மேலே கொண்டு போகையில் தானுந் துணையாக நின்று தூக்கினான். அந்த விடத்திலிருந்து சிறு பெண் குழந்தைகள் நீண்ட வெள்ளை முக்காடுகளைத் தரித்து, வெண்மலர்மாலைகளை யணிந்து அவ ளுக்கு எதிர்கோயிலில் முன்னே ஞானஸ்நானம் செய்யப்பட் டதோ அந்தக் கோயிலுக்குக் கொண்டுபோகப்படுமளவும் கூடவே சென்றார்கள். அந்தக் கோயிலில் எங்குமுள்ளவர் கள் வந்து நிறைந்து மாலைமாலையாகக் கண்ணீர்விட்டு விம்மி விம்மியழுதார்கள். அந்தக் குழந்தையை எலிஜபெத்தா டயாரு என்னுங் கோயிலண்டையில் மலைப்பக்கமாயுள்ள சோலையில் அடக்கஞ்செய்தார்கள்.

பின்பு அதுமுதல் சிலமாதங்கள்மட்டும், அவ்வாறு குழந் தையை யிழந்த தாய்தந்தையர்களுக்காகப் பரிதவித்து அழுது; நாட்டில் எறும்புமுதல் எண்ணாயிரம்கோடியும் அந்தக் கல்லறையின் ஜனங்கள் அவ்விடத்தாங்குச் சென்று அந்தக் மேல் மலர்களைக் கொண்டுபோய்த் தூவினார்கள். அந்தக் குழந்தையை ரோமானியா நாட்டாரெல்லாரும் தங்கள் உடைமையென்றெண்ணி அவள்மீது மிகவும் அன்புபாராட்டி வந்தார்கள். அரசனும், அரசியும் கடவுளின் ஆக்கினைக்குட் பட்டுக் கண்ணான தங்கள் அருமை மகளை யிழந்துவிட்டுப் பரிதவித்துக்கொண்டிருக்கையில் அவர்களை துக்கம் விசாரிக்க

வந்தவர்களெல்லாரும் அவர்களைக் கண்டு அதை ஆற்றாதவர் களாகி மனம் வெந்து "ஆர் இட்டசாபமோ அடிநாளின் தீவினையோ" என்றார்கள்.

இது சங்கதியை எலிஜபெத்தினிடஞ் சொன்னபோது அதற்கு அவள் நான் என் தாயார் செய்தபடியே யழுகிறே னென்றும், அவள் என்னிலும் பலமுடையவளென்றும், அவள் துக்கப்பட்டதைக் கண்டிருக்கிறேன் என்றும் அவர் களோடு சொல்லச் சொன்னாள்.

அந்தக்குழந்தை போனபின்பு 1874-ம் வருஷம் ஏப்பிரல்மீ 12ௗ தன் தாயாருக்கு, "அம்மா! ஆண்டவனுக்கு என் செல்வமகள் மரியாளினிடத்துள்ள அன்பின் மிகுதியினால் அவர் அவளைத் தம்மிடம் திரும்ப அழைத்துக்கொண்டார். அதனால் நான் அனுபவித்த பரிசுத்தமான அந்த பிரமாணந் தத்திற்காக அவரை வந்திக்கிறேன். குழந்தைக்குத் தாயா ராவதிலும் நயோபியைப்போலக் கல்லாகச் சமைந்து கண்ணீர் விட்டுக்கொண்டிருப்பதே நலமென்று காண்கிறது.

ஆம்; மக்களைப் பெறுதலால் மனிதருக்கும் பேரானந்த முண்டாகிறதென்பதுண்மையே. என் குழந்தை அதிக ஸந் தோஷமாயிருக்கிறாள். சவக்குழியிலும் நான் அவளிடத்தில் அதிக அன்புடையவள். அவள் சுகித்திருந்தால் அதுவே எனக்கு ஆனந்தம். என் மகளின் பெருந்தன்மையை நான் என்னென்று சொல்லப்புகுவேன். சிறு குழந்தைப் பருவத் திலே தானே நற்குணமும், சுயமுயற்சியும், புத்திகூர்மையும் அன்புமுடையவளானாள். அவள் இனிமேல் என்றைக்கும் என்னுடைய மகளேயாவாள். எனது அருமைக்கண்ணாட்டி என்னிடமிருந்து பிரித்துக்கொண்டுபோகப்பட்டாளேயென்று எனக்கு அவளிடத்திலுள்ள தாயின் உருக்கம் நீங்கவில்லை. அவளால் எனக்குண்டான சுகம் அவள் இறந்ததோடு போய்விடவில்லை. அவளால் எனக்குண்டான ஆனந்தத்தில்

இந்தத் துக்கம் மறைந்துவிடும். இப்பொழுது துக்கமாகவிருந்தாலும் இனிமேல் அத்தனைக்கத்தனை இன்பந்தரும். கடவுள் எனக்கு எவ்வளவோ நன்மைகளைச் செய்திருக்கிறார். இத்தன்மையான தந்தையும், தாயும், கணவனும், குழந்தையுங் கொடுத்தருளினார். ஆம்; இது அதிகமே. நாங்கள் படும்பாட்டில் ஜனங்கள் எங்களிடம் அன்பாயிருக்கிறார்கள். எங்கள் குழந்தையின் ஸமாதியில் எங்களுக்குத் தெரியாமலே யாராயினும் முடிகளையும் மலர்களையுங் கொணர்ந்து பரப்புகிறார்கள். அன்புள்ள சிறுமிகள் தினந்தோறும் அதிகாலையில் அந்தச் சமாதியண்டை சென்று, கடவுளைத் தோத்திரஞ் செய்து, மலரைத் தூவி, அதில் எரியும் விளக்கைத் தூண்டிவிட்டுப் போகிறார்கள். இறந்தவர்களுக்கு இத்தனை யேற்றந்தருகின்ற நல்லநாட்டிற்கு நான் வந்தது நல்லதாயிற்று" என்று எழுதினாள்.

ஜர்மனியில் இருந்ததுபோலவே எலிஜபெத்து ரோமானியாவில் டிம்போவிட்ஸா என்னும் நதியோரத்தில் வந்தாள். அந்த நதியைப்பற்றியும் தன் குழந்தையைப்பற்றியும் அவள் தன் கவியில் வியந்து பாடியிருக்கிறாள்.

அவள் இன்னமும் தன் அருமைப் புதல்வியைப்பற்றி "என் தோளிற் கட்டிக்கொள்ளுகின்ற உனது சிறிது கைகளை இனி நான் என்று காணப்போகிறேன்; உனது பவளவாயினது தேனினுஞ் சிறந்த சுவையுடைய மதுரமொழிகளை இனி என்று கேட்பேனோ! என் செல்வமகளே! நீ ஆசையோடு எங்களை முத்தமிடுவதை நான் எப்போது பெறுவேன்; என் கோகில மொழியாளே நீ பாடுவதை நான் கேட்கப் பெறுவதென்னாளோ! நீ அம்மாவென்று அன்போடு என்னை மீண்டும் எப்போது கூப்பிடுவாயோ! நீ உன் சிறுகாலால் இங்கெங்கும் ஓடி யுலாவினது இப்பொழுதுதான் நேரில் உன்னைக் காண்பதுபோல என் மனதை உருக்குகின்றது; உன் கூந்தலழகை

என்னென்று சொல்லுவேன்! என் கண்மணியே என் ஆசைக்கென்னசெய்வேன்? கடவுளையன்றி உன்னை என்னிடங் கொடுப்பவருண்டோ" என்று உள்ளமுருகி நொந்தாள்.

இவ்வாறு எலிஜபெத்து ஆற்றங்கரையோரத்தில் அடக்கஞ் செய்யப்பட்டிருந்த தனது அருமை மகளைப்பற்றி நெஞ்சந் துடித்துப் புலம்பியதை இவ்வளவோடு நிறுத்திவிடுவோம்.

மரியாளுக்கப்புறம் எலிஜபெத்துக்கு வேறுகுழந்தை பிறக்கவில்லை. ஆயினும் குழந்தைகளைக் கண்டால் அவளுக்கு எப்பொழுதும் அவர்களிடத்தில் அதிக ஆசை. அவள் குழந்தைகளைத் தன்னைச்சூழத் தரையிலும், மடியிலும் வைத்துக்கொண்டு அவர்கள் சொல்லும் வேடிக்கையான கதைகளைக் கருத்தாகக் கேட்டுக்கொண்டிருப்பாள். எலிஜபெத்து எழுதிய புத்தகங்களால் அவளுக்கு "கார்மென் ஸில்வா என்பது சாதாரணமான பேரொன்று கற்றோர்க்கெல்லாந் தெரியும். கார்மென் என்பதற்கு செய்யுள் என்று பொருள்; ஸில்வா என்பது காடு என்று பொருள்படும். அவள் தனது சிறுபருவந்தொட்டே காட்டில் வாசித்து நன்றாகப் பாடத்தலைப்பட்டதனால் கார்மென் ஸில்வா என்னுந்தொடர் காட்டில் பாடுபவள் என்று பொருள்படுமாதலால் இந்தப்பெயர் அவளுக்கு அமைந்ததாம்.

மனதுக்கு எவ்வளவுதான் சங்கடத்தின்மேல் சங்கடமுண்டானாலும் நன்றாகப் பாடுபடுபவர்களுக்கு அத்தனையும் நீங்கிப்போமென்பது அவளது கோட்பாடு. தன் குழந்தை போனபின்புதான் அவள் புத்தகங்களை விடாமல் முயன்று எழுதிவந்தாள். சிலகாலமளவும் ரோமானியாவிலுள்ளவர் ஒருவருக்கும் தங்கள் அரசிக்குக் கவி பாடுந்திறமை யுண்டென்பது தெரியாதிருந்தது.

அலெக்ஸாந்திரி என்னும் ரோமானியா நாட்டுக் கவியை அவள் முதலில் கண்டு அவனோடு வார்த்தை சொன்னபோது

நாணி, "புலவரே உம்மோடு ஒன்று சொல்லவேண்டும்; ஆயினும் அதைச் சொல்ல எனக்குத் தைரியமில்லை. கவி பாடுவதில் நீர் இட்டது பிச்சையல்லவா" என்றாள். சற்றுநேரங் கழித்து அச்சத்தோடு நானும் கவிபாடுவதுண்டு என்று அமர்ந்து சொன்னாள்.

அந்தக் கவிஞன் அவள் பாடியவற்றுள் சிலவற்றைத் தனக்குக் காட்டவேண்டுமென்று வேண்டினான்; அவன் அவற்றைப் பார்த்தவுடனே அதன் சொற்சுவையைக் கண்டு கொண்டாடி அப்படியே விடாமற் பாடிக்கொண்டு வரவேண்டுமென்று விரும்பிக் கேட்டுக்கொண்டான். அவளும் அவனது வேண்டுகோளுக்கிணங்கி ரோமானியநாட்டுப் பாட்டுகளையும், சரிதைகளையும், கட்டுக்கதைகளையும் பிரஞ்சுபாஷையிலேயன்றி, ஜர்மன்பாஷையிலும் செய்யுளாகப் பாடினாள். இவ்வாறாக நெடுநாள் மட்டும் வெளிப்படாதிருந்த அவள் கல்வித்திறமையினால் சாதாரண ஜனங்களுக்குப் பயன்படும்படி புதிதான புத்தகங்கள் எழுதி அச்சிட்டு வெளிப்படுத்தினாள்.

ஆயினும் எலிஜபெத்து ஜூலை 7௳ "நான் இப்பொழுது சிறிதாயினும் மொழிபெயர்க்கிறதில்லை; ஏனெனில் அதிகமாக எழுதிக்கொண்டு வருகிறேன், லேகனியைக் கையிலேயெடுத்த மாத்திரத்தில் என் மனதில் எண்ணங்கள் பூர்ணமாகின்றன. மொழிபெயர்த்தல் அதிகமாக உபயோகமுள்ளதென்பது மெய்யே; ஆயினும் சொந்த அபிப்பிராயத்தை ரசனைசெய்து எழுதினால் வெகு நன்றாயிருக்கும். என் மனதில் ஏதேனுமொருகருத்துத் தோன்றினால் நான் உடனே அதனை வசனமாகவேனும் செய்யுளாகவேனும் செய்யவேண்டும்; இல்லாவிடின் என்மனது விச்ராந்திபெறமாட்டாது" என்றாள்.

சிலநாள்மட்டும் எலிஜபெத்து எழுதியவைகள் எல்லாம் கையெழுத்துப் பிரதிகளாகவேயிருந்தன. அவற்றை ஒவ்வொ

ருவராகப் படித்துவிட்டு மற்றவர்களுக்குப் படிக்கக்காட்டிக் கொண்டிருந்தார்கள். ஆயினும் அலெக்ஸாந்திரி* என்னும் புலவரின் வேண்டுகோளுக்கு அவள் இணங்கினதனால் அவளால் செய்யப்பட்ட கதைகளும், ஸாபோ ஹாமாஸ்டின், சூனியகாரி என்னும் பேருள்ள மூன்று செய்யுள் கிரந்தங்களும் கார்மென் ஸில்வாவின் முகாமையாகவே அச்சிட்டுப் பிரசுரமாயின.

அந்த வருஷத்தில் "கார்மென் ஸில்வா அரசாங்கத்தினிலே" யென்று பெயருள்ள கதைப்புத்தகமொன்று பிரசுரமாயிற்று. பின்பு அந்தப் புத்தகம் பலபாஷைகளில் மொழிபெயர்க்கப்பட்டது. அதின் முகவுரை சிறுகுழந்தைகளை நோக்கிச் சொல்லப்பட்டிருக்கிறது. ஆனால் அதிலுள்ள கதைகளெல்லாம், செய்யுள் ஞானமுள்ள எந்தப் பருவமுடையவர்களுக்கும் எளிதில் இன்பந்தரும்படி திராக்ஷாபாகமாகச் சுகமாக எழுதப்பட்டிருக்கின்றன.

கார்மென் ஸில்வா உலக வியாபாரங்களையெல்லாம் நன்றாக அறிந்திருந்தனாலும் துக்கப்பட்டவளானதினாலும் எல்லாத் தெரிந்துகொண்டு, எல்லோரையுந் தன்னைப்போலவே எண்ணி யாரிடத்திலும் அன்பும் ஆதரவுமுடையவளாயிருந்தாள். அவள் எழுதியிருக்கிற கதைகளும் நாடகங்களும் படிக்கப் படிக்க இன்பமும் உற்சாகமும் தருவனவாயிருக்கும். அவள் எழுதும் நடை திராக்ஷாபாகமாகவும், விஷயங்கள் இப்பொழுதுதான் எதிரே நடப்பவைபோலவும் தெளிவாக விளங்கும். அவள் எழுதிய மற்ற நாடகங்களிலெல்லாம் கருணாரஸமே மேலிட்டிருக்கும்; அவள் எழுதுவதெல்லாம், நீதி அல்லது மதத்தைப்பற்றியவையாயிருக்கும். அவள் தீமைசெய்ய என்றும் இடந்தருகிறதில்லை; குற்றஞ் செய்தவர்களுக்காக அநுதாபப்படுகிறதுமில்லை.

நடந்ததை நடந்தவண்ணம் தெளிவாக எழுதுவது அவளது இயல்பாதலால் கற்பனை சிறிதுமிராது.

கார்மென் ஸில்வா என்னும் மறுபேர்கொண்ட எலிஜபெத்து அடியிற் கண்டவாறு சுருங்கக்கூறுகிறாள். அதாவது, "ராஜாளிபோலச் சுவாதீனமும் தைரியமுமுடையவளாகவும், சூரியனைப்போலக் காய்பவளாகவும், உண்மையுடையவளாகவுமிருத்தல்வேண்டும். தொட்டாற்சிணுங்கியென்னும் ஓஷ்தி உணர்ச்சியையும், வெள்ளத்தின்வேகம் வலிமையையும், வஸந்தகாலம் நிர்மலத்தையும் அவளுக்குக் கொடுப்பனவாக" என்பதாம். இதுவரையில் எலிஜபெத்துக்கும், அவள் கணவனுக்கும் அரசியென்றும் அரசனென்றும் பட்டப்பெயர் பகிரங்கமாகக் கிடையாதிருந்தது.

1887-ம் வருஷத்தில் துருக்கியைச்சேர்ந்த கிறிஸ்தவர்கள் நாடுகளிலுள்ள கிறிஸ்தவர்களெல்லாரும் அதிக கொடுமைக்கு ஆளானார்கள்.

ருஷியர் துருக்கியரோடு யுத்தஞ்செய்ய ஆரம்பித்துத் தங்களுக்கு அநுகூலமாயிருந்த ரோமானியா நாட்டின் வழியாகச் சென்றார்கள். சண்டைமுகத்திலே நமக்கு என்ன காரியம் என்று சிறியராஜ்யமாகிய ரோமானியா நாட்டார் ஒருவரோடுஞ் சேராமல் இரண்டு கக்ஷிக்காரர்களுக்கும் பொதுவாயிருக்க விரும்பினார்கள். நல்லவன் ஒருவன் நடுவே நின்றால் அருகிழுக்கும் அறம் என்று முதுமொழி இருந்தலால் இருவரில் யாருடனாவது சேர்ந்துகொள்ள வேண்டுமென்று துருக்கியர் அவர்களைப் பலவந்தப்படுத்தினார்கள். 1877-ம் வருஷ சண்டைக்காரம்பிக்க ரோமானியர் ருஷியர்களோடு சேர்ந்துகொண்டார்கள்.

அந்த யுத்தத்தில் ரோமானியர் தங்களாலியன்றமட்டும் வருந்தி உழைக்கவேண்டுமென்று கேட்டுக்கொள்ளப்பட

எலிஜபெத்து அதன் கொடுமையை மட்டுப்படுத்தும்படி வேண்டிய முயற்சிசெய்தாள்.

பரோபகாரமே பெரிதென்று எலிஜபெத்து தன் ராஜசபா மண்டபத்தை வேலைசெய்யும் சாலையாக்கினாள். அந்நாட்டிலுள்ள சீமாட்டிகளோடு சேர்ந்து யுத்தத்தில் அடிபட்டவர்களுக்குக் காயக்கட்டுக்கள் கட்டுவதற்காக நார்த்துணிகளை வேண்டியவளவிற்கு வாங்கினாள். இன்னாரென்று பேதமில்லாமல் பலவிடங்களிலிருந்து அளவற்ற ஸ்திரீகள் வலியவந்து சிறிதும் வஞ்சனையின்றித் தையல்வேலையைப் புண்ணியத்துக்கு வருந்திச் செய்தார்கள். உணவுக்கு வழியில்லாத அநேக ஏழைகள்கூடத் தாமாகவே வந்து "அம்மா! தாங்கள் எங்களுக்கு இரண்டு வருஷகாலமாக வேலைகொடுத்துக் காப்பாற்றினீர்களே; நாங்கள் இப்போது ஒருவாரம்கூலிபெறாமல் வேலைசெய்வது தகாதோ" என்றார்கள். வேண்டாமென்று மறுத்தால் அவர்கள் முகம் எங்கே கோணுமோவென்றஞ்சி அவள் அதற்கிணங்கினாள்.

எலிஜபெத்து தன்னுடைய சிங்காரவனத்தில் நூறு குழந்தைகள் இருக்கும்படி நூறு படுக்கைகளைத் தன் சொந்தச் செலவில் செய்வித்துத் தானே அவர்களைத் தன் மக்களைப் போலப் பாதுகாத்துவந்தாள்.

யுத்தகளத்திலிருந்து காயம்பட்டவர்களை யெடுத்துக் கொண்டுவரும் புகைவண்டித்தொடர் வரும்போதெல்லாம் அவள் தானே சென்று அழைத்துவந்து அவர்களுக்கு வேண்டிய உபசாரங்களையெல்லாஞ் செய்து தைரியப்படுத்தி இறந்துபோகிறவர்களின் அருகேயிருந்து குளிர்ந்த வார்த்தைகளைச் சொல்லுவாள். அங்கசேதம் பண்ணும்போது வலிதெரியாதிருத்தற்பொருட்டுக் கொடுக்கப்படுகின்ற மயக்க மருந்தை அவள் கையால் கொடுத்தால் பேசாமல் பெற்றுக் கொள்ளுவார்கள். பிராணனைக் காப்பாற்றுதற்பொருட்டுக்

கைகால் முதலியவற்றுள் எதையேனும் வெட்டிவிடவேண்டுவது அவசியமென்று காணப்பட்டால் பிணியாளிகள் அவள் சொன்னபடி கேட்பார்கள். ரோமானியருக்கு நொண்டியாயிருப்பதென்றால் அதினிலுங் கொடியது அவர்களுக்கு வேறில்லை. வாலிபனான ஒரு போர்ச்சேவகனது உயிரைக் காப்பதற்பொருட்டு அவன் காலை வெட்டிவிடவேண்டுமென்று கண்டபொழுது அவன் "நொண்டியாயிருப்பதிலும் பிராணனை விட்டுவிடுவதே நன்று" என்று சொன்னான். அதைக் கேட்டு ராணி மெள்ள அவன் படுக்கையண்டை போய், இத்தனை இளமைப்பருவத்தில் வீணாய் உயிரை விடலாகாதே என்றாள். அதற்கு அவன் தாயே ராணியாரே! தாங்கள் இத்தனைதூரம் சொல்லுகிறபடியால் தங்களுக்காக உடன்படுகிறேன் என்று சொன்னான். "பக்கச்சொல் பதினாயிரம்" ஆகையால் காயம்பட்ட போர்வீரர்கள் அவள் தங்கள் படுக்கையண்டை வரும்போதெல்லாம் அவளைக் கண்டு தங்கள் துக்கத்தை மாற்றிவிடுவார்கள்.

அவளால் நோய் தீர்க்கப்பட்ட வீரர்களெல்லோரும் அவளைத் தங்கள் நாட்டாரின் தாயென்று சொல்லத் தலைப்பட்டார்கள். அவள் என்னசங்கடம் நேரிட்டாலும் அஞ்சாமல் பொறுப்பாள்.

அவளும் கணவனும் பூவும் மணமும்போல் ஒத்த குணமுடையவர்கள். அவள் கணவனாகிய சார்லஸ் அஞ்சாமையும் ஆண்மையுமுடையவனாகித் தன் சேனைக்கு அதிபதியானான். ரோமானியர் துருக்கியரின் கையினின்று வெளிப்பட்டுச் சுயாதீனம் பெற்றதற்கு அவனே காரணமென்று அவனைக் கொண்டாடினார்கள்.

அந்தச் சண்டை முடிவுபெற்று 1878-ம் வருஷம் அக்டோபர்௴ 20௳ சார்லஸ் அரசன் தன் சேனைக்குமுன்னே ஜயகோஷத்தோடு பக்கார்ஸ்ட் நகரத்திற்குள்ளே வந்தான்.

அந்த வெற்றியை ரோமானியர் உள்ளளவும் மறவார். அன்று அந்தப் போர்வீரர்களின் மனைவியர்களெல்லாம் அந்த யுத்தத்தில் தங்களுக்குண்டாயிருந்த கவலையைக் காட்டும்படி சிலைப் பதுமையொன்றைச் செய்வித்து அதை அவளிடங் கொடுத்தார்கள். அது எலிஜபெத்து காயம்பட்டுக் கிடந்த ஓர் போர்வீரனண்டை முழந்தாளிட்டு உட்கார்ந்து ஒரு கிண்ணியில் தண்ணீரை அவனுக்குக் கொடுக்கும்வண்ணமாகச் செய்யப்பட்டிருந்தது.

1881-ம் ௵ மார்ச்சு௴ 24௳ ரோமானியர் சுயாதீனம் பெறவே எலிஜபெத்தும், சார்லசும் அரசியும் அரசனுமானார்கள். மேய்௴ 22௳ எல்லார் மனமும் குளிரும்படி பட்டாபிஷேகம் நடந்தது. அத்திருநாளைப்பார்க்க ஆயிரங்கண்கள் வேண்டும். பட்டாபிஷேகம் நடந்ததைப்பற்றி எழுதப்புகின் பெருகுமாதலால் அப்பொழுது நடந்தவற்றுள் முக்கியமான இரண்டொன்றைமட்டுஞ் சொல்லிவிடுவது நன்று:—அன்று காலையில் சிறுபெண்கள் வெள்ளை உடைபூண்டு கோட்டைக்குப் போய் அதன் பலகணிவாயிலின் கீழேநின்று தங்களுக்கு ராணியாகிறவளைப்பற்றிப் பாடினார்கள். பதினொருமணிக்குச் சேனைகள் முன்னேசெல்ல, வாத்தியகோஷங்கள் முழங்க, மெய்காப்பாளர் புடைசூழ, பரிவாரங்களோடு அரசன் குதிரைமேலே பவனியாகக் கோயிலுக்குச் சென்றான். வீதிகளெல்லாம் பலவர்ணக் கொடிகளாலும், பூமாலைகளாலும் அலங்கரிக்கப்பட்டிருந்தன. அந்த வேடிக்கையைக் காணும்படி எங்குமுள்ள ஜனங்கள் அந்நகரத்துக்கு வந்து வீடுகளில் நிற்க இடமில்லாமல் கூரைகளின்மேலும் ஏறி நின்று கைகொட்டி ஆர்ப்பரித்துத் தங்கள் கைக்குட்டைகளை விசிறி மலர்மாரி பெய்தார்கள். பின்பு எட்டுக் குதிரைகள் பூட்டப்பட்டு வெள்ளைமலர்களால் சிங்காரிக்கப்பட்ட ராணியின் ரதம் வந்தது. அதில் ஏறிவந்த ராணி தேவஸ்திரீயைப்போலிருந்தாள்.

அவளைக் கண்டமாத்திரத்தில் அவர்கள் அத்தனைபேரும் ஆனந்த பரவசர்களானார்கள். அந்நாட்டார் தங்களுக்குள்ள விசுவாசத்தைக் காட்டும்படியாக தோரணங்களை நாட்டி, மலர்களைப் பொடித்து, அதனோடு தங்கப்பொடியைக் கலந்து தூவினார்கள். வெள்ளைப்புறாக்களை விடுக்க அவைகள் சமாதானத்தையும், சந்தோஷத்தையுங் காட்டும் அறிகுறியாகி நின்று தேரைச்சுற்றி அதில் சிங்காரிக்கப்பட்ட மலர்களில் உட்கார்ந்தன.

ராஜதம்பதிகள் கோயிலிலிருந்து வந்ததும் முன்னே சண்டையில் காயம்பட்டவர்களுக்கு வைத்தியசாலையாகவிருந்த அரண்மனைக் கொலுமண்டபத்திற்கு வந்து அங்கிருந்த சிங்காசனத்தில் இருவரும் வீற்றிருந்தார்கள். அவ்விடத்தில் அந்நாட்டின் மகாஜனங்களும், கார்பேத்திய மலைநாட்டாரும் அவர்களை உபசரித்தார்கள்; தங்கள் நாட்டுக்குரிய உடை தரித்தோர் சிங்காதனத்தின்கீழ் வரிசையாகநின்று அதன் படியண்டை வந்து நமஸ்காரஞ்செய்து அதை முத்தமிட்டார்கள்; மற்றவர்கள் தாங்கள் இதற்குமுன்பே எழுதிக்கொண்டு வந்திருந்த மங்கள பத்திரங்களை யெடுத்து அவளுடைய பாதங்களில் வைத்தார்கள். மலைநாட்டார் தங்கள் மலையிலுள்ள தேவதாருக்களின் கிளைகளை ஒடித்து வழியில் வாடிப்போகாதபடி பத்திரமாகக் கொண்டுவந்து காணிக்கையாகச் சேர்த்தார்கள்.

பட்டாபிஷேகமானவுடன் அதைக் காணவந்தவர்களெல்லோரும் நகரத்துக்கு வெளியே அடிக்கப்பட்டிருந்த கூடாரங்களில் வசித்தார்கள். அவர்கள் அத்தனைபேருக்கும் விருந்திட்டார்கள்; அரசன் நேரே சென்று அவர்களை உபசரித்தான். இரவில் பட்டணமெங்கும் தீபாலங்காரஞ் செய்யப்பட்டது; அங்குவந்திருந்த நாட்டாரெல்லாரும் அதைக்கண்டு மெய்ம்மறந்து இரவில் சூரியகாந்தி கண்டோம் என்று ஸந்தோஷித்தார்கள்.

எலிஜபெத்து அதிகமான வேலைசெய்யத் திறனற்றவளேனினும், பட்டாபிஷேகத்தன்று நல்லோருக்குப் பொறுமையே அழகு என்றபடி தைரியமாகப் பொறுத்துக்கொண்டு முகங்கோணாமல் செய்கடன்களைச் செய்து மரியாதைகளைப் பெற்றாள். அவள் அதைப்பற்றி ஒருவருக்கு எழுதின கடிதத்தில் "காலை பதினொரு மணிமுதல் மாலை நாலுமணிநேரமளவும் நாங்கள் எண்ணூறுபேரோடு வார்த்தைசொன்னோம். இரவில் எட்டுமணிக்கு மீண்டும் ஆயுதம் பூண்டிருந்தோம்; தீவட்டி வரிசைகளோடு நாங்கள் பட்டணமுழுவதும் வலம் வந்தோம்; பின்பு வாணவேடிக்கை நடந்தது; நாங்கள் மாளிகைக்கு வந்துசேர இரவில் பதினொருமணிக்கு மேலாயிற்று. கடைசியில் எனக்கு வந்தனஞ் செய்தவர்களுக்கு நான் திரும்பி வந்தனஞ் செய்யக்கூடப் பலமில்லாமல்போனதனால் என் கைக்குட்டையை யெடுத்து விசிறினேன். இவ்வாறு பெரிய கும்பல்கள் போனந்தங்கொண்டு வந்தனஞ் செய்யுங் காட்சியைக் காண்பது ஆச்சரியமாயிருந்தது. மே 22உயன்று உதயமுதல் அஸ்தமனமளவும் முற்றும் இன்பமுடைத்தாயிருந்தது" என்று கண்டிருக்கிறாள்.

எலிஜபெத்துக்கு முதல் குழந்தைக்கப்புறம் வேறு குழந்தை பிறக்கவில்லை. ஆதலினால் அவள் காலத்திற்குப் பின் பட்டத்திற்கு யாரை வைக்கவேண்டுமென்று நிச்சயிக்க வேண்டியதாயிற்று. அரசன் மருமகனும், பக்கத்துநாட்டின் இராஜகுமாரனுமாகிய பெர்டினண்டிற்குப் பட்டங்கட்ட வேண்டுமென்று தீர்மானித்தார்கள். தங்களுக்குப்பின் பட்டமாளுவதற்குப் பிள்ளையில்லையேயென்று அரசனுக்கும் அரசிக்கு மிருந்த துக்கத்திற்கு அளவில்லை. பட்டத்திற்கு உரியவன் இன்னானென்று பத்திரமெழுதிப் படிக்கப்பட்டதைப் பற்றி அவள், "அந்தக் காட்சி ஒருவாறு துக்கத்தை யுண்டுபண்ணிற்று. அரசுபுரிவதற்கேற்ற ஒருவனை நாங்கள் நியமித்

ததற்காக மந்திரிமார்கள் எங்களுக்கு வந்தனஞ் சொல்லுவதற்கே வந்திருந்தார்கள். அவ்வமைச்சர்களில் ஒருவராகிய பிரேஷியம் என்பவர் துக்கத்தினால் ஓட்டமாக வாசிக்கமாட்டாமற் படித்தார். அதை அவர் படித்தானபின்பு நான் அவருக்கு என் கையை நீட்டினேன்" என்று சொன்னாள்.

எலிஜபெத்து தன் நாட்டாருக்குச் செய்த நன்றியை இன்னும் ஒருவாறுசொல்லி இதைமுடித்துவிடுவோம். இளமைப் பருவந்தொட்டே பிறருக்குச் சொல்லிக்கொடுப்பதிலும், கல்வியை அபிவிருத்தி செய்வதிலும் அதிக முயற்சியுடையவளாயிருப்பது அவளதியற்கை. "கை உண்டாவது கற்றவர்களுக்காமே" என்று உணர்ந்து அப்படிச் செய்தாள்.

அவள் ரோமானியாவுக்கு வந்தவுடன் தன்னிடத்தில் மிக்க அன்புவைத்திருந்த அத்தையாகிய ஹெலன் என்பவள் போல், தாய்தந்தையரை யிழந்து ஆதரிப்பாரில்லாதிருந்த பெண் குழந்தைகளை வளர்த்து அவர்களுக்குக் கல்வி கற்றுக்கொடுக்கும் பாடசாலையொன்றை ஸ்தாபித்தாள். அதில் ஐந்து வயதுமுதல் இருபதுவயதுவரையில் உள்ள பெண் நானூற்றறுபது பேர்களுக்கு அன்னவஸ்திரங் கொடுத்துப் பாதுகாத்துக் கல்வியறிவூட்டி வருகிறார்கள். தொழில்செய்முறை, சாஸ்திரம், அயல்நாட்டுப் பந்தடிகள், தையல்வேலை, கணக்கு எழுதுதல் முதலானவற்றைக் கற்றுப் பாடசாலைகளில் பாடஞ்சொல்லத் திறமையுள்ளவர்களாகுமட்டும் அங்கிருந்து கற்றுப் பரீக்ஷைகொடுத்துத் தேறுமளவுமிருந்து விட்டுப் போகிறார்கள். அவர்களில் பெரும்பான்மையோர் கல்வி கற்றான பின்புதான் கலியாணஞ் செய்துகொள்ளுகிறார்கள். அந்த நாட்டிலுள்ள ஆண்பிள்ளைகள் ஹெலன் பாடசாலையில் கல்விபயிலும் பெண்களை விரும்பி மணம்புரிகிறார்கள். அவள் 'எலிஜபெத்து வோனா' என்று பேரிட்டு வஸ்திரங்களில் பூத்தைக்கக் கற்றுக்கொடுக்கிற பாடசாலையொன்றை ஏற்படுத்தி

னாள். அதில் எழுபதுபேர் ஏழைப்பெண்கள் எழுதவும் படிக்கவும் பயின்று அந்த நாட்டுக்குரிய சித்திரவேலை கற்றுவருகிறார்கள்.

வஸ்திரங்களுக்குக் கரைகட்டுதல், கோடியெழுதிப் பூப்போடுதல் முதலிய சித்திரவேலையில் ரோமானியருக்கு இயல்பாகவே அதிகமான திறமையுண்டு; அவர்கள் தங்கள் நாட்டின் காட்சிகளை வஸ்திரங்களில் அழகாக அந்தந்த நிறங்கள் அப்படியே தோற்றும்படி எழுதுவார்கள். ஏழைகள் வேலைசெய்து பிழைப்பதற்காக 'ஆல்பினியா' என்னும் பேருள்ள சங்கமொன்றை ஏற்படுத்தியிருக்கிறாள். அதில் எளிய பெண்களுக்கு வேலைகொடுத்து அவர்களைக் காப்பாற்றுகிறார்கள். அதில் முதலில் ஆறு பெண்கள் வேலைசெய்துவந்தார்கள். இப்பொழுது ஆயிரக்கணக்காகப் பெண்கள் வேலைசெய்துவருகிறார்கள். அவர்களில் பலர் தையல் யந்திரங்களை விலைக்குவாங்கி வேலைசெய்கிறார்கள். 1881-ம் வருஷத்தில் 'ஆல்பினியா' தொழிற்சாலையிலுள்ள பெண்கள் 30,000 கூடாரங்களை இராணுவத்தின் உபயோகத்திற்காகச் செய்தார்கள். அன்றியும் இராணுவத்திற்கும், வைத்தியசாலைக்கும் வேண்டிய உடைகள், கட்டுகள் முதலிய யாவையும் அந்தப் பெண்களே செய்துவருகிறார்கள்.

அரசியினால் ஏற்படுத்தப்பட்டிருக்கின்ற சபைகள் இன்னும் எத்தனையோ உண்டு. ரோமானியாவி லுற்பத்தியாகின்ற சணலையெல்லாம் நெய்யும்படி நெசவுசாலையொன்றை ஏற்படுத்தியிருக்கிறாள். பெண்களுக்குப் பாகசாஸ்திரமும், பிரசவ சிகிச்சை முதலிய வைத்திய முறைகளும் கற்றுக்கொடுக்கப்படுகின்றன. எந்தச் சபை ஏற்பட்டாலும் எலிஜபெத்து அதற்குத் தலைமையாக நின்று செய்துமுடிப்பாள். பொதுநன்மைக்கான எதிலும் அவள் எப்பொழுதும் விடாது முயல்வாள்.

"முயற்சி திருவினை யாக்கும் முயற்றின்மை
இன்மை புகுத்தி விடும்"

என்பதை அவள் கோட்பாடாகக்கொண்டு ஓயாமல் பாடுபடுவாள். விடாது நன்முயற்சி செய்கிறவர்களுக்குக் கடவுள் கூடவே துணையாக நின்று இடையூறுண்டாகாதபடி எளிதில் அவர்களது காரியத்தைச் செய்து முடிப்பாரென்பது திண்ணமேயாம்.

எலிஜபெத்துக்குச் சிறு குழந்தைகளிடத்தில் அதிகமான அன்புண்டு; குழந்தைகளின் அருமையை அவள் நன்றாக அறிந்தவள். அவளுக்கு இளமைப்பருவமுதற்கொண்டே காடுகளிலும், மலைகளிலுந் திரிந்து இயற்கைப்பொருள்களில் மனம் அதிகமாகப் பற்றியிருந்ததனால், ரோமானியாவில் நெடுங்காலமளவும் வைத்தியசாலை முதலியவற்றிலிருந்தது அவளுக்கு வெறுப்பாகி, மீண்டும் சுகமாக வெளியே திரிந்து விநோதக்காட்சிகளைக் கண்டு களிக்க விரும்பினாள். வேலை செய்யாவிடில் அவளுக்குப் பொழுதுபோகாது.

பிறகு எலிஜபெத்து தன் கணவனோடு ரோமானியரின் நன்மைக்காகப் பாடுபடுவதையும், தன் இன்னுயிர்க்குழந்தையின் சமாதியைப் பார்த்துவிட்டு வருவதையும் விட்டுவிட்டுத் தான் பிறந்தவிடமாகிய ரைன்நதிக்கரையிலுள்ள நியுவீட்டில் தன் தாயுடன் வசித்துக்கொண்டிருந்தாள். நமது பரதகண்டத்தில் வசிக்கும் பெண்பாலோரெல்லோருமே முற்றும் உண்மையான இந்த உத்தமியின் சரித்திரத்தைக் கருத்தாகப் படித்து, நம்மெல்லோரையும் படைத்துக் காக்கின்ற கருணைக்கடலான பரம்பொருளைத் தியானித்து, எலிஜபெத்து தன் கணவனோடு சுகமாக வாழ்ந்திருந்து இன்னும் வெகுகாலமளவும் பரோபகாரஞ் செய்வதையே விரதமாகக்கொண்டு பாடுபட்டுச் சுகம்பெற்று வாழ்ந்திருக்க வேண்டுமென்று தோத்திரஞ் செய்வார்களாக.

KATE MARSDEN.

(A Living Philanthropist.)

கேட் மார்ஸ்டன்.

ஸ்நானஞ்செய்ய ஆற்றிற்குப் போகும்போதும், வீட்டுக்குரிய சாமான்களை வாங்கக் கடைக்குப் போகும்போதும், இந்துக்களின் பெரிய தேவாலயங்களில் நடக்கும் திருவிழாக்களைக் கண்டுகளிக்கப் போகும்போதும், நாளுக்குநாள் சிறிது சிறிதாகத் தசையைத் தின்றுகொண்டுபோகிறதும், அவ்வாறு உடம்பு அழுகிப்போகிறதினால் மரணத்திற்கு ஏதுவாகிறதும், பார்த்தவுடனே அச்சத்தை உண்டாக்குவதுமாகிய குஷ்டமென்னும் பெரிய நோயினால் அவஸ்தைப்படுகிற மகாரோகிகளைப் பார்த்துப் பயத்தோடு திகைப்படைந்திருப்பீர்களென்று நான் நிச்சயமா யெண்ணுகிறேன். இந்தப் பெரும் வியாதியானது பார்ப்பதற்கே மிகுந்த பயத்தை விளைப்பதாக இருக்க, இதனால் பீடிக்கப்பட்டவர்களுக்கு இவ்வளவு பயத்தையும், துன்பத்தையும், நோவையும் உண்டாக்குமென்று கணக்கிட முடியாததாகும். இந்தக் குஷ்டரோகிகளைச் சிறிது நேரம் பார்த்தபின்பு நீங்கள் நடுக்கத்தோடு முகத்தை உடனே திருப்பிக்கொண்டு, கடவுள் நம்மை இக்கொடுநோயினால் துன்பப்படாமலிருக்க அனுக்கிரகித்தாரென்று அவரை மிகு பத்தியோடு தோத்திரஞ் செய்திருப்பீர்களல்லவா?

இப்போது உயிர் வாழ்ந்திருப்பவளும், இப்படிப்பட்ட நோயாளிகள் மற்றவர்களால் ஒதுக்கப்பட்டு இருக்க விடில்

சைபீரியாதேசத்துக் குஷ்டரோகிகளுக்கு உதவிய
கேட் மார்ஸ்டன் என்னும் மஹோபகாரி.

லாமல் திரிந்துகொண்டு துன்பத்தினால் வருந்துவதைப் பார்த்து மிகுதியும் பரிதபித்தவளுமாகிய ஒரு ஆங்கிலேயக் குலமகள் சரித்திரத்தை நான் உங்களுக்குச் சுருக்கிச்சொல்ல விரும்புகிறேன்.

இந்தப் பெண்மணி மகாரோகிகளைப் பார்த்து தாமரையிலைத் தண்ணீர்போல மனங்கலங்கி அனுதாபப்பட்டாள். ஆனால் மற்றவர்களைப்போல வெறுப்போடு தன் முகத்தை மறு பக்கம் திருப்பும் குணமுடையவளல்லள். அந்நாள் தொட்டு அந்தப்புண்யவதி இத்தன்மையான பிணியாளருடைய ஆரு யினை ஆதரிக்க ஓர் ஆலோசனை செய்யவேண்டுமென்பதே முக்கிய கருத்தான முடிவுடையவளா யிருந்தனள். இந்த அம்மாள் பெயர் கேட் மார்ஸ்டன் என்பதாம். இந்தப் பெயர் ஐரோப்பாவிலுள்ள எல்லாராலும் மேன்மையோடு நன்கு மதிக்கத்தக்க தகைமையை யுடைத்தா யிருக்கின்றது. இந் தக் காரணத்தினால் இந்தியாவில் வசிக்கும் பெண்மக்களாகிய உங்களுக்கு அந்தப் பெண்ணாயகத்தின் குணத்தை நன்கு விளங்கச் செய்வதே என்னுடைய முக்கியமான கருத்து; அதி னால் நீங்களும் அந்தம்மாளைப்போல் யாவரும் அதிசயிக்கும் பணிவுள்ள பரோபகாரியாகக்கூடும்.

கேட் மார்ஸ்டன் என்னும் பெண்மணி ஒரு தரும வைத் தியசாலையில் பணிவிடைசெய்யத் திறமையுடையவளாகிய ஆங்கிலேயக் கோயிலைச்சார்ந்த தரும சகோதரி. ஆனால் உரு ஷியா தேசத்தார்களுக்கும்; துருக்கிய தேசத்தார்களுக்கும் யுத்தம் நடந்தபோது போரில் காயப்பட்ட யுத்தவீரர்களுக் குப் பணிவிடை செய்ய நிமித்தம் இந்த உத்தமி துருக்கி தேசத் திற்குச் சென்றனள். இவ்விடத்திற்றான் இந்த அம்மாள் முதன்முதல் இந்தக் கொடுமையாகிய பிணியைக் கண்ணுற்று அப்பிணியாளர்க்குவேண்டியவற்றை உதவ மனவுறுதி கொண்

டனள். அதற்குமுன் யாராலும் ஆதரிக்கப்படாத அகதி
களுக்கு • உதவிசெய்யவேண்டுமென்பதுவே முக்கியமான
கருத்தாயிருந்தது. இங்கிலாந்திலும் இன்னும் ஐரோப்பா
கண்டத்து அநேக நாடுகளிலுமுள்ள ஏழைகளும், நோயாளி
களும் கிறிஸ்துமதத்தைச் சேர்ந்தவர்களால் நியமிக்கப்பட்ட
நல்ல வைத்தியர்களாலும், பக்ஷமுள்ள பணிவிடைக்காரர்க
ளாலும், தரும வைத்தியசாலைகளாலும் ஆதரிக்கப்பட்டு வரு
கின்றார்கள் என்று இந்த அம்மாளுக்கு நன்றாகத் தெரியும்.
பாழானதும், புல் பூண்டு முளையாததும், பனியால் மிகு குளி
ருடையதும், சொற்ப ஜனவாசமுடையதும், ருஷியா தேசத்
தாருக்குரியதும், ஆசியா கண்டத்திற்கு வடக்கிலுள்ளதுமா
கிய ஸைபீரியா என்னும் பிரதேசத்தில் அநேகர் இந்தக் கொடு
நோயினால் வருந்துகிறதாயும், இந்தப் பயங்கரமான புண்ணு
ண்டு தோன்றின மாத்திரத்தில் நோயாளர்களை அந்த நாட்டார்
ஊருக்குப்புறம்பே வெளிப்படுத்துவதினால் அப்பிணியாளர்
கொடுமையாகிய பனியினாலும், குளிரினாலும் தங்க இடமில்
லாமல் அவஸ்தைப்படக் காடுகளில் இருப்பதாயும், அவர்
கள் எடுத்துக்கொள்ளும்படி உதாரகுணத்தோடு ஊரார் சிலர்
உணவும் வேண்டியவைகளும் தூரத்தில் நின்று கீழே வைத்து
வருகிறதாயும் இந்த உத்தமி கேள்விப்பட்டாள். இப்படிப்
பட்ட அநேக நோயாளரில் சிலர் இக்காட்டில் களிப்புற்றிருந்த
கரடிகளுக்கும், தோண்டான்களுக்கும் இரையாய்விடுகிறார்
கள்; சிலர் தாங்கள் அழைத்துக்கொண்டுபோன நாய்களால்
காப்பாற்றப்பட்டு வருவதும் உண்டு. இந்த நாய்கள் புத்தி
சாதுர்யத்தால் அடர்ந்துவரும் மிருகங்களைக் குலைத்துக் குலைத்து
வெகுதூரம் ஓடச்செய்து மறுபடியும் அருகான சிறுவழியாக
ஓடிவந்து எஜமானனைச் சேரும். "அகதிக்கு ஆகாயமே கதி"
யென்று இப்படி வருத்தப்படுகிற குஷ்டரோகிகளாகிய ஆருயிர்
கள் தந்தம் நாய்களினால் ஆதரிக்கப்பட்டு வருகின்றன.

ஆனால் ஸைபீரியாவிலிருக்கும் இந்நோயாளர் பூமியின்கண்
கடவுள் சிருஷ்டிப்பொருள்களால் பெரும்பாலும் ஆதரிக்
கப்படவில்லையென்று மனந்துணிவுற்றனள். தரும வைத்
தியசாலைகளும், வீடுகளும், ஆடைகளும், உண்ணுதற்குரிய
உணவுகளும், மருந்தும், தேகம், மனம், ஆத்துமா இவற்
றிற்குரிய உதவியுமின்றிக் காட்டு மிருகங்களினாலும் குளிரி
னாலும் துன்பப்பட்டுக்கொண்டிருக்கிற கானகவாசிகளாகிய
அந்நோயாளர்களுக்கு ஒத்தாசை செய்யும்பொருட்டு இந்தப்
பெண்ணுயகமாகிய மிஸ். மார்ஸ்டன் உடல், பொருள்,
ஆவி மூன்றினையும் பரித்தியாகந்தான் செய்யவேண்டியது.
ஆனால், இந்த அம்மாள் அவர்களுக்கு எங்ஙனம் உதவி
செய்யக்கூடும்? இந்த அம்மாள் ஆசியாவைச்சேர்ந்த ஓர்
ஆங்கிலேயப் பெண்மணி. ஆனால், இக் கொடுநோயாளர்
ஆசியாவைச்சேர்ந்த ருஷியாதேச சாதியாரேயொழிய ஐரோப்
பாவிலுள்ள ருஷியசாதியாரல்ல. ஒரு கூட்டமாக வசிக்கா
மல் இரண்டு மூன்று பெயர்களாகவும் பத்து இருபது
தொகையினராகவும் அதிக விஸ்தீரணமான ஆசியாகண்டத்தி
லுள்ள வடக்குக் கடைமுனையிலிருக்கின்ற ருஷியாவில் 100
மைல் தூரத்திற்குத் தூரம் சிதறியுள்ள ஜனங்கள் இவர்
கள். இந்த அம்மாளுக்கு இந்தத் தேசமானது மிகத் தூர
மாய்க் கொடுமையுள்ளதாயிருப்பதும் தவிர, அவர்களு
டைய பாஷையில் ஒரு பதமேனும் அறிந்தவளுமல்லள்.
இவ்வூருக்குச் செல்லுதற்குரிய பிரயாணத்தில் சிறிது தூரந்
தான், இருப்புப்பாதையிற் போகக்கூடும். மற்றுள்ள வழி
களைத்தும் பயங்கரமான காடுமுரடான பாதைகளும்
பாலங்களில்லாப் பல நதிகளும் பாதையில்லாத சதுப்பான
பல காடுகளும் அடர்ந்துள்ளவையாம். இப்படியிருக்க
அந்தப் பேதமைக்குணமுடைய பெண்மணி அவர்கள்பாற்
செல்ல எங்ஙனந் துணிவள்? இந்தக் கருணாகரியாகிய பெண்

மணி திரவியமற்றவளாயிருந்தனள். பிரயாணத்தைத் தடை செய்யும் இவ்வித நூதன கஷ்டமிருந்ததினால், தன்னுடைய் கோரிக்கை முடியும்பொருட்டுக் கடவுளையே நம்பித் தியானிப்பதற்குக் காரணமென்ன? அது இந்த அம்மாள் தன்னுடைய கோரிக்கையில் ஜெயமடைவாள் என்பது அவருடைய திருவுள்ளமாயின் இந்த கஷ்டங்களெல்லாம், ஒன்றொன்றாய், விட்டோடும். ஏனெனில் "என்னைத் தந்தையாக எண்ணி நீங்கள் வேண்டினவற்றைக் கேட்டபோது தான் அவைகளை அளிப்பதாகக் கிறிஸ்துவானவர் தன்னடியார்களுக்குச் சொல்லவில்லையா?" மேலும் நமது அன்பும் காருண்யமுமுள்ள குயின் விக்டோரியாள் என்னும் சக்கரவர்த்தினியார்க்கு நன்மையான காரியங்களில் அன்போடும், பரிதாபத்தோடும் மனங் கனிய முயலுகிறது வழக்கம். ஆகையால், இதை அம்மாள் அவ்விராணியாரவர்களுக்குத் தன்னெண்ண முடிவுபெற உதவி செய்யவேண்டுமென விண்ணப்பம் செய்துகொண்டனள். பின்னர் சக்கரவர்த்தினியார் மறுமொழியாகப் பின்வருமாறு கடித மூலமாகத் தெரிவித்தனர். கேட் மார்ஸ்டன் என்னும் பெண்மணி குஷ்டரோகிகளைப்பற்றி முயன்ற தருமகாரியத்தில் இராணியார் மிகுதியும் மனங்கனிந்து முயல இருப்பதாயும் இந்த அம்மாள் செய்யும் நற்காரியத்தில் எவ்வெவருடைய வுதவி வேண்டியதாக விருக்குமோ அவ்வவர்களுக்கு எழுத்து மூலமாக வாக்குச்சகாயம் செய்ய விருப்பமுள்ளவளாயும், ருஷிய சக்கரவர்த்தினியார் நமது இளவரசருடைய அன்பும், அழகுமுடைய பத்தினியாருக்குச் சொந்தத் தமக்கையாகவும் இருப்பதினால் இந்த அம்மாள் கேட் மார்ஸ்டன் எவ்வெவ் விடங்களுக்குச் செல்ல விருப்பமுள்ளவளா யிருக்கின்றனளோ அவ்வவ்விடங்களிலுள்ள இராணுவ உத்தியோகஸ்தர்களால் வேண்டிய வுதவியை இந்த ஜனோபகாரிக்குக் கூடுமான

வரையிற் செய்விக்க ருஷியா இராஜாங்கத்துக்கு ஒரு பக்ஷமான கடிதம் எழுதி கேட் மார்ஸ்டனுக்குக் கொடுத்தனுப்பினர்.

இப்பொழுது உங்களிடம் தேசபட புத்தகம் இருக்குமல்லவா அதில் உலகமுழுது மிருக்கிற படத்தைப் பார்த்து கேட் மார்ஸ்டன் சென்ற வழிகளைப் பார்ப்பீர்களானால் உங்களுக்கு அதிக விநோதமும் ஆச்சரியமும் உண்டாகும். இந்த அம்மாள் முதல் டர்க்கி தேசத்து முக்கிய நகரமாகிய கான்ஸ்டாண்டிநோபிலிலிருந்து புறப்பட்டுக் கருங் கடல்மூலமாகச் சென்று 1890-ம் ௵ நவம்பர்௴ மாஸ்கோ என்னும் பட்டணத்தில் வந்து சேர்ந்தனள். இந்த அம்மாள் இரண்டு மூன்றுநாள் அந்நியதேசங்களில் தங்காமலும் அந்த தேசங்களுக்குரிய பாஷைகளைத் தெரிந்துகொள்ளாமலும் பிரயாணம் செய்தனள். அதனால் இந்த அம்மாள் தங்குமிடம் போய்ச்சேர ஆவலுள்ளவளா யிருந்திருக்கலாமென்று நீங்கள் நினைக்கக்கூடும். மாஸ்கோ என்பது பெரிய பட்டணம். அது அவ்வூரிலிருக்கப்பட்ட அநேக கோயில்களை அலங்கரித்தும்படியிருக்கிற பொன்மயமான கும்பங்களினால் (The Golden headed city) பொற்சிகரநகரம் என்று சொல்லப்பட்டு வழங்குகின்றது. நீலவர்ணத்தினால் சித்திரிக்கப்பட்ட சில கும்பங்களும் பச்சை வர்ணத்தினால் சித்திரிக்கப்பட்ட சில கும்பங்களும் கோயிலுள்ள மற்ற விடங்களில் வெண்மையாயிருப்பதினால் இந்தப் பிரகாசமான நிறங்கள் முக்கியமாய்ச் சூரிய காந்தியினால் மிகுதியும் அழகாகத் தோன்றுகின்றன. கேட் மார்ஸ்டன் என்னும் இப் பெண் நாயகமானவள் இருப்புப்பாதையினின்றும் இறங்கின பின்னர் வேறோர் வண்டியிலும் ஏறாமல் உறைபனியால் மூடிக்கொண்டபொழுது உபயோகப்படுத்தப்பட்டதும் சக்கரமில்லாமல் இரண்டு மூன்று குதிரைகளால் இழுக்கப் பட்டதுமாகிய வண்டியில் ஏறினள். குறுக்கமானதும்,

சித்திரமானதாயுமிருக்கிற பல வீதிகள் மூலமாய் இந்த
விநோதமான வண்டியானது இந்த அம்மாளை ஏற்றிக்கொண்டு
சந்தடியில்லாமல் துரிதமாய் மலையின்மேல் ஏறி யிறங்கிச்
சென்றது. ருஷியாவின் மேன்மைபொருந்திய சக்கரவர்த்தி
யாகிய ஜார் என்பவருக்குப் பிரதிநிதியாகத் தொழில் நடத்
துபவராகிய பிரின்ஸ் டால் கொர்கோ என்பவரை முதல்முதல்
பிரார்த்தித்தனள்.

மிஸ். மார்ஸ்டனுக்குப் பெருமையான ஆடையில்லாமை
யாலும், தான் தரும வைத்தியசாலையில் பணிவிடைக்காரியா
னபடியாலும், அதற்குரிய ஆடை உடுத்திக்கொண்டும், தலையில்
பெண்டுகள் போட்டுக்கொள்ளும் சிறிது கிழிந்த டொப்
பியைத் தரித்துக்கொண்டும் போகும்படி நேரிட்டது. டால்
கொர்கோ என்னும் இராஜகுமாரன் "அம்மா உனக்கு என்
னால் முடியவேண்டுவன என்ன" என்று இந்த அம்மாளைக்
கேட்டபோது இவருடைய சாந்தமான வார்த்தையும், பட்ச
முள்ள நல்லொழுக்கமும் இந்த அம்மாள் சிறிதும் கூச்சப்
படாதிருக்கும்படி செய்தது. பின்பு இந்த அம்மாள் அந்த
ஊரிலுள்ள குஷ்டரோகிகளைப் பார்க்கும்பொருட்டு அங்கிருக்
கப்பட்ட தரும வைத்தியசாலைகளில் சென்று பரிசோதனை
செய்யவேண்டியதாகிய கருத்தை வெளியிட்டனள். இராச
குமாரன் இதைக் கேள்விப்பட்ட பின்னர் தரும வைத்தியசா
லைகளுக்குரிய விசாரணைக்காரர்களைக் கூப்பிட்டு இந்த அம்
மாள் பார்க்க இஷ்டப்படுகிற இடங்களில் அழைத்துப் போய்க்
காட்டும்படி கட்டளையிட்டனன். மிஸ். மார்ஸ்டன் யுரஸ்கோ
என்னும் பட்டணத்திலிருக்கும்போது தனக்கு உதவிசெய்
யத் தகுந்தோர்களை அழைத்துக்கொண்டு ரெயிலில் 12 மணி
காலஞ்செல்லும் பிரயாணமுள்ள செண்ட் பீடல்பர் என்
னும் ஒரு பெரிய பிரதான பட்டணத்திற்குத் தினம் இரண்டு
முறை போகிறது வழக்கம். சக்கரவர்த்தினியார் இந்த அம்

மாளுக்கு 1000 ரப்பிலாய் அதாவது 1500 ரூபாய் கொடுத்
தார். மேல் டால்ஸ்டர் என்னும் குலமகள் இந்த அம்மாளுக்கு
அதிக ஒத்தாசை செய்தனள். ஒரு இராஜகுமாரத்தி அந்த
நற்செய்கையைப்பற்றி ஒரு வர்த்தமான பத்திரிகைக்கு மிகு
தியும் சிறப்பாக ஒரு கடிதம் எழுதினள். அதன்பிறகு
வர்த்தமான பத்திராதிபர்கள் இதைப்பற்றி யோசித்தார்கள்.
நானாவித பக்கங்களிலிருந்து இதற்காகச் சனங்களால் நிதி
வைக்கப்பட்டுப் பணம் வந்துகொண்டேயிருந்தது. வேண்டிய
சாமான்களும் துணிகளும் சேகரிக்கப்பட்டுச் சில வாரங்க
ளுக்குள் அபாயமான இன்னவிடமென்று குறிப்பிடத்தகாத
இடத்திற்குப் போகும் பிரயாணத்திற்கு வேண்டியவைக
ளெல்லாம் ஆயத்தமாய்விட்டன.

அதிக சூடான இந்தியா தேசத்தில் அவ்வளவு உஷ்ணத்
தைத் தரும் ஆடைகள் ஒருவன் உடைத்தாயிருத்தலை யாரா
வது கேட்டால் உடனே அவர்களுக்கு மனத்தளர்ச்சியுண்
டாகும். ஆனால் ஊடுருவிச்செல்லுகிற குளிருக்குப் பழக்கப்
பட்டிராத ஒருவன் ருஷியாவில் நன்றாக உயிரோடுங்கூடி
ஜீவித்திருக்கலாம். ஆடைதரிக்கும் கோலம் மேற்கூறியது
மாத்திரமல்ல, உரோமங்களால் செய்யப்பட்ட இரண்டு காற்
சட்டைகளை இந்த அம்மாள் உடுத்திக்கொண்டு அதன்பின்பு
துரைமக்கள் உடுத்திக்கொள்ளும் வேட்டைக்குரிய மிருதி
யும் பருமனுன இரண்டு காற்சட்டைகளையும் உடுத்திக்
கொண்டபின் ருஷியாவில் தோலால் செய்யப்பட்ட இரண்டு
பெரிய பாதரட்சைகளையும் பாதகோசங்களையும் தரித்துக்
கொண்டனள். இவையன்றித் தான் அடிச்சுவட்டை வைப்
பதற்குரிய ரோமங்கள் பொருந்திய தோல்பைகளும், சால்
வைகளும், கம்பளிகளும், போர்வைகளுமாகிய இவை
களை இந்த அம்மாள் உடைத்தாயிருந்தனள். மாஸ்கோ என்
னும் பட்டணத்திலிருந்து ஜிலேடோஸ் என்னும் பட்டணத்

திற்கு இருப்புப்பாதையின் மூலமாகச் சென்றனள். அதன் பின்பு சைபீரியாவுக்கு முன்கூறிய சக்கரமில்லாத வண்டியில் சென்றபோது இராணுவ உத்தியோகஸ்தர் எல்லாரும் இந்த அம்மாளைக் கண்டு தங்களால் கூடுமான ஒத்தாசை செய்தார்கள். இந்த அம்மாள் தான் வைத்திருந்த கனமான ஆடைகள் இத்தன்மையான சக்கரமில்லா வண்டியில் சுமத்தப்பட்டமையால், இந்த வண்டியில் போகும் பிரயாணம் சௌக்கியமானதாகத் தோன்றவில்லை. மணிப்பாறையின்மேல் புகைவண்டிகள் செல்வதினால் உண்டாக்கப்பட்ட பள்ளங்களிலும், மேடுகளிலும் குலுங்கிப் போவதினால் அதிலுள்ள ஜனங்கள் மோதப்பட்டும், நசுங்கப்பட்டும் தங்கள் தங்கள் அவயவங்கள் வருந்தியிருக்கிறார்கள். வண்டி ஓட்டுகிறவர்கள் ஓயாமல் செய்யுஞ் சத்தமானது அச்சக்கரமில்லா வண்டியில் கட்டப்பட்ட மணியின் ஓசையைப் பார்க்கிலும் அதிகப்பட்டது. இந்தக் கஷ்டத்தில் கொஞ்சநேரம் அவஸ்தைப்பட்டவர்கள் சமமாயிருக்கும் இருப்புப்பாதையின் சுகுணத்தை நினைத்தால் பரலோகத்தைக் கண்டது போல் தோன்றும். இந்த வண்டியோட்டுகிறவன் வண்டியில் பூட்டிய குதிரைகளை இருபக்கங்களிலும் சவுக்கினால் குருட்டடி அடிக்காமல் எனது சிறிய புறாக்களே! சிறிய தங்கைகளே! என்று மிகுந்த அன்போடு கூப்பிடுகிறது வழக்கம். கடைசியாக இந்த வண்டியானது அப்புறம் தங்குமிடத்திற் சேர்ந்தபிறகு குதிரைகளை நோக்கி செத்த பிணத்திற்குங் கடையாக இழுத்துப்போடப்பட்டு வருவீர் என்றாள். அந்த மார்க்கத்திலுள்ள சத்திரங்கள் மிகுந்த அசுசியாயும், காற்று வருவதற்கு இடமில்லாமல் நெருங்கியிருப்பதினால் அதிக வெப்பமாயும், தெள்ளுப்பூச்சிகளாலும் மூட்டுப்பூச்சிகளாலும் நிறையப்பட்டுமிருக்கின்றன. ஆனால், அவ்விடத்தில் வேலைக்காரர் யாருமில்லை. அச்சத்

திரங்களில் செம்மறியாடுகளின் தோல்களும், கம்பளங்களும் விரிக்கப்பட்டு இருப்பதினால் பிரயாணிகள் மிகுதியும் நித்திரைசெய்ய உபயோகமாயிருக்கிறது. அங்கு அகப்படும் உணவோ, பிரயாணிகள் கொண்டுவரும் உணவுதான். ஆகிலும் உலர்ந்த கோதுமை அப்பமும், ஒரு கிண்ணம் சூடான தேத்தண்ணீரும் சதா கிடைத்தலும் கூடும். இவ்விதப் பிரயாணத்தில் கேட் மார்ஸ்டன் அநேக ஏரிகளைத் தாண்டி இருபக்கங்களிலும் மரத்தால் கட்டிய வீடுகளுள்ள பெரிய வீதிகளடங்கிய அநேக கிராமங்களைக் கடந்து எக்டரின்பர்க் என்னும் பட்டணத்திலிருக்கிற சிறைச்சாலைபோய்ச் சேர்ந்தாள். அந்தச் சிறைச்சாலையினுள் நன்றாகத் தீபம் வைக்காமலும், மிகுதியும் காற்றுவர இடம் வைக்காமலும் இருப்பதையும், அசுசியாயிருப்பதையும் கண்டாள். குற்றவாளிகள் சாப்பிடும் இடமானது காற்றில்லாமலும், அசுத்தமாயும், ஜனங்கள் அடர்ந்திருப்பதையும் கண்ணுற்றனள். "அருவருப்புச் சோறும் அசங்கிதக்கறியும் இடுவதைப்பார்க்கினும் பட்டினி நன்று" என நினைத்தனள். எக்டரீன்பர்க் என்னும் பட்டணத்திலிருக்கும் சிறைச்சாலையைப்போல் இந்தியா இராஜ்யத்தில் ஒரு சிறைச்சாலையாவது, அல்லது ஒரு தரும வைத்தியசாலையாவது இல்லாமல் எல்லாம் சுத்தமாயும், காற்றுவர வழியுடைத்தாயிருப்பனவும், சௌக்கியத்தைத் தரத்தக்கனவாயிருப்பனவுமாகிக் குற்றவாளிகள் நன்றாகவும், விசேஷமாக உண்பிக்கப்பட்டும் நோயாளர்கள் பரிவுடன் ஜாக்கிரதையாகப் பாதுகாக்கப்பட்டும் வருவது மிகுதியுள்ளதும், பெருமையுள்ளதும் அல்லவா? எக்டரீன்பர்க் என்னும் பட்டணத்தில் ஆங்கிலேய தாதர்கள் சாந்தமும், நல்ல உள்ளமும், நேசமும், ஜனங்கள் நன்றாக வாழ்ந்து இறக்கும்பொருட்டுப் பாவங்களை மன்னிக்கும் மன்னிப்பும் சொல்லப்பட்ட வேத புத்தகங்களை விக்கிரயம் செய்கிறார்கள்.

குஸ்மான்.—பெரிய நீண்ட வீதிகளுள்ளதும் பச்சை வர்ணம் பூசப்பெற்ற விமானங்கள் பொருந்திய ஆலயங்களையுடையதுமாகிய குஸ்மான் என்னும் பழைய பட்டணத்தில் மிஸ். மார்ஸ்டன் தான் கண்டுவந்த தரும வைத்திய சாலைகளில் மிகுதியும் கேடாயுள்ள ஒரு தரும வைத்திய சாலையைக் கண்டனள். இதைக் கண்டபின்பு இந்த அம்மாள் சொன்னதாவது: "சுத்தமாயும், வெளிச்சமாயுமுள்ள ஆங்கிலேய தரும வைத்தியசாலையைப் பார்த்தபின்பு, இதைப் பார்க்க மிகுதியும் நுட்பமாய்ப் பிழைபார்க்க நிச்சயித்திருக்கிறேன்" என்றதே. ஆனாலிந்த அம்மாள் ஜனங்களுக்கு வேண்டிய கல்விப் பயிற்சியில் மனம் செலுத்தவில்லை. அருகிலிருக்கும் இரண்டு மூன்று கிராமங்களில் படிக்கவும் எழுதவும் கூடிய மனிதன் ஒருவனைத்தான் காணலாம். பலதரம் அந்தச் சக்கரமில்லா வண்டிகளை இழுக்கும் குதிரைகளின் இடுப்பு அறுபட்டதினால், வண்டி செலுத்துவோர்கள் குதிரைகளையும் பிரயாணிகளையும் தனியாக பனிக்கட்டியினால் வருந்த விட்டுவிட்டு அநேக மைல் நடந்து, அருகிலிருக்கும் கிராமத்திற்குச் சென்று உதவி பெற்றார்கள். ஒருதரம் வண்டியில் கட்டப்பட்ட குதிரைகள் அறுபட்டு நின்றபோது அருகிலிருக்கும் கிராமத்திற்குச் சென்று, புதிய குதிரைகளைக் கொண்டுவந்து கட்டி அடுத்த மஜிலியிலிருக்கும் ஒரு அசுத்தமான சத்திரத்தைச் சேர நடு இராத்திரியாய்விட்டது. இன்னொருதரம் இரண்டு வண்டிகள் நேருக்கு நேராய் வந்து தாக்கப்பட்டு, அதினால் மிஸ். மார்ஸ்டன் பக்கத்திலிருந்த பனிக்கட்டிகள் நிறைந்த பள்ளத்தில் விழ, அதினால் வண்டி போகத் தாமதித்து, மற்றொரு மஜிலிக்குப்போக மறுநாள் இரண்டு மணியாய்விட்டது.

போல்ஸ்க்.—பின்பு மிஸ். மார்ஸ்டன் போல்ஸ்க் என்னும் பட்டணத்தில் சென்று அங்கிருக்கப்பட்ட சிறைச்

சாலையானது, மிகுதியும் சுத்தமாயிருப்பதைக்கண்டு விசேஷ அதிசயமுற்றனள். இந்த இடத்திலிருந்து பிரயாணப்பட்டுப் போகும்போது பாதைகள் கேடுகெட்டிருக்கக் கண்டு, மிஸ். மார்ஸ்டன் இளைப்பினாலும், சாப்பாடில்லாமையாலும், டெக்காலிஸ்க் என்னும் பட்டணத்தில் மறுநாள் சாயங்காலம் வரையிலும் தங்கும்படி நேரிட்டது.

ஓமஸ்க்.—இதன்பின்பு ஓமஸ்க் என்னும் பட்டணத்திற் சென்று, தான் அசௌக்கியமாயிருந்தபடியால் கவர்னரோடு பதினைந்துநாள் தங்க நேரிட்டது. பின்பு ஓம்ஸ்க் என்னும் பட்டணத்தைவிட்டுச் சென்றபோது வழியில் ஆண்பிள்ளைகளும் பெண்பிள்ளைகளும் கைதியாக்கப்பட்டுச் சுதேசத்திலிருந்து சைபீரியாவுக்குச் செல்வதையும், அவர்களோடு இராணுவசேவகர்கள் சனியனென்னும் ஆயுதபாணிகளாகப் போதலையும், அவர்கள் கால்களில் தளைபூட்டப்பட்டிருப்பதையும் கண்டனள். எவனாவதொரு குற்றவாளி விடுபட்டுச்செல்லத் தொடங்குவானானால், அவனை உடனே அவர்கள் துபாக்கியால் சுட்டுவிடுவார்கள். வழியில் குற்றவாளிகளில், எவனாவதொருவன் நோயாளியாவானாயின் அவனை ஏற்றிக் கொள்ளும்பொருட்டு ஒவ்வொரு கூட்டங்களுக்கும், ஒரு வண்டி பின்போவதையும் பார்த்தனள். இப்படிப்பட்ட அநேகரைக் கண்டால், கேட் மார்ஸ்டன் உடனே தன்னுடைய போர்வைகளைக் கழற்றிவைத்துவிட்டு அவர்களிடம் சென்று, சர்க்கரை தேயிலை ஞானநூல்கள் ஆகிய இவற்றைத் தருவது வழக்கம். இவ்வாறு போகும் பெண்பிள்ளைகள் அநேகருள் சிலர் இயற்கையிலேயே குற்றவாளிகள்தான். மற்றவர்கள் தங்கள் புருஷர்களாகிய குற்றவாளிகளை இராஜாங்கத்தாருடைய செலவினால் காப்பாற்றும்பொருட்டு தங்கள் தங்கள் குழந்தைகளை எடுத்துக்கொண்டு உடன்செல்வதையும் நோக்கினள். மிஸ். மார்ஸ்டன், எப்ரில் மாசம்

தோமஸ்க் என்னும் பட்டணத்தைச் சேர்ந்தபின்னர், தேக சௌக்கியம் குறைவுற்று இருந்ததினால், அங்கிருக்கிற சிறைச்சாலையைப் பரிசோதிக்க இரண்டுநாள் தடைபட்டன. அதன் பின்னர் இக்குணசீலி, முதலில் தருமவைத்தியசாலையிலும், பின் சிறைச்சாலையிலும் சென்று ஏறக்குறைய இரண்டாயிரம் பேர்களுக்கு உணவையும், ஞானத்தை விளக்கும் புத்தகங்களையும் கொடுத்தனள். சிறைச்சாலைகள் மிகுதியும் அசுசியா யிருப்பதையும். இராஜாங்கத்தார் புதிதாகத் தருமவைத்திய சாலைகளையும், சிறைச்சாலைகளையும் கட்டும்பொருட்டு மிக்க பொருளுதவி செய்திருப்பதையும் செவியுற்றனள். தோமஸ்க் என்னும் பட்டணத்தைவிட்டுச் சென்றபோது லீனா என்னும் ஆற்றைக் கடக்கும்படி நேரிட்டது. ஆனால், பனிக்கட்டிகள் கரையுங்கால் இந்நதியைக் கடப்பது மிக அபாயம். பனிக்கட்டிகள் உருகுவதும், இறுகிக் கட்டுவதுமாயிருப்பதினால், வித்தியாசம் யாதொன்றும் தோன்றாமையால், எனிலி முதலான நதிகளைக் கடக்குங்கால் அநேகர் தங்கள் தங்கள் பிராணனை இழந்தவராயினர். துடுக்கான ஒரு பெண்பிள்ளை இந்தக் கசிவான தரையின்மீது நடக்கத் தொடங்குங்கால் அந்த அம்மாள் படும் அநுபவங்களை நாம் சற்றே நினைக்க வேண்டும். தோமஸ்க் என்னும் பட்டணத்திலிருந்து சுமார் ஐந்நூறுமைல் தூரமுள்ள கிராஸ்நாயர்க்ஸ்க் என்னும் பட்டணத்திற்கு வந்து சேர்ந்தாள். இந்த இடத்தில் மிஸ். மார்ஸ்டன் தனது சக்கரமில்லா வண்டியிற் போதலைவிட்டு தான் விலைக்குவாங்கின டரன்டாஸ் என்னும் வண்டியில் போகப் பிரவேசித்தனள். இந்தம்மாள் இந்த வண்டியின் உண்மையான விலை முடிவுக்கு வருகிறவரையில் மிகுதியும் விலைபேசவேண்டியதாயிற்று. இந்த வண்டி வில்லின்றியோடும் வலியுடையது, சக்கரமில்லாதது. அது பூமிக்கு உயரமா யிருப்பதினால் இறங்கவும் ஏறவும் மிகவும் கஷ்டமாயிருக்

The red line in the map of Russia shows the way travelled by Miss Kate Marsden to improve the condition of outcast Siberian Lepers.



தது. பாதைகள் மிகுதியும் பள்ளமேடுகளாயிருப்பதனுல் பயங்கரமான மார்க்கங்களாக இருந்தன. அப்படிப்பட்ட அபாயகரமான பாதைகளில் ஆயிரமைல் தூரம் வண்டியைச் செலுத்துபவன் மிகுதியும் தைரியத்தோடும் பொறுமையோடும் கூடி இருக்கவேண்டும். மிஸ். மார்ஸ்டன் தான் அனுபவித்த அனுபவங்களைப் பின் வருமாறு சொல்லத் தொடங்குவாள்:—"நீங்கள் இப்படிப்பட்ட பிரயாணம் ஒருநாள் செய்வீராயின், உங்கள் அவயவங்கள் நோகும்; தசையும் இன்னும் தேகத்திலுள்ளவைகளும் மிகுதியாக நோகும்."

"இவ்விதமாகப் பல கஷ்டங்களை அனுபவித்துக்கொண்டு முதல்நாள் பிரயாணம் செய்தபின்பு ஒருவாரம் அம்சதூளிகா மஞ்சத்தின்மேல் சயனிக்க நீங்கள் விரும்பக்கூடும். இப்படிச் செய்யாமல், மஜிலிகள் சிலவாகியும் ஒன்றுக்கொன்று நெடுந்தூரம் உள்ளனவாயும் இருப்பதினுல் நீங்களேறிச் செல்லும் வண்டியில் இரவு முழுவதும் போகவேண்டியதாயிருக்கும். சிலநாள் இவ்வித பிரயாணத்தைச் செய்வீர்களாயின் ஒரு மாதம் எல்லாவற்றையும் மறந்து ஆ! ஓய்ந்த பம்பரம்போல், ஓய்வையும் நித்திரையையுமே விரும்புவீர்கள்" என்றுள்.

இர்கட்ஸ்க் என்னும் பட்டணத்தைச் சேர்ந்தபோதுதான் மிக்க நோயினுல் வருந்திய இந்தப் பெருமாட்டி யாதொன்றையும் கவனிக்கச் சக்தியற்றிருந்தாள். இந்த லோகோபகாரி அவ்விடத்தில் இரண்டுதினம் தங்கியிருந்து கவர்னரவர்களைக் கண்டு பிரார்த்தித்தனள். யாகட்ஸ்க் என்னும் பட்டணத்தில் வயிறார போஜனமும் புண்ணுற மருந்துமில்லாமல் வருந்தும் குஷ்டரோகிகளைப்பற்றிய விசனகரமான குறைகளைத் தான் கேள்விப்பட்டதாக கவர்னரவர்களுக்கு விண்ணப்பம் செய்துகொள்ள, அவரும் அதற்கு அங்கீகரித்து மிகுதியும் உதவிசெய்ய ஆவலுடையவராயும் கனவான்

கள் சிலரைச் சேர்த்து தருமகர்த்த சபையாராக்கி அவர்
கள் மூலமாக வடக்கே சென்ற இந்த நோயாளருக்கு
உதவி செய்யும்பொருட்டு அப்பட்டணத்திலுள்ள வர்த்தக
ரிடம் பொருள் சேர்க்கத் தொடங்கவும் ஒத்துக்கொண்டார்.
இரண்டு பெரிய பிரதான அத்தியட்ச குருக்களும், அத்
தியட்ச தேவாலயத்திலுள்ள குருக்களும், இராசாங்கத்து
மந்திரிகளும், பட்டணத்திலுள்ள படைத்தலைவனும் ஆகிய
இவர்கள் கூடி கவர்னரைச் சங்கத்தலைவராக்கி இந்த நோயாளி
களை ஆதரிக்கச் சட்டங்களை ஏற்படுத்தினர்கள். அவர்கள்
மிஸ். மார்ஸ்டன் தான் மேற்சொன்ன வியாதியில் பழுகிறவர்க
ளின் நிலைமைகளைப் பலவிடங்களிலும் போய்ப் பார்த்தபின்பு
இந்த அம்மாளுடைய அறிக்கைக்கு எதிர்பார்த்துக்கொண்டி
ருந்தார்கள். இப்படியாக இந்தச் சங்கமானது 1891-ம் வரு
மேமீ 21உ ஏற்பாடு செய்யப்பட்டது.

பிரயாணத்திற்குரிய சாமான்களைத் தயார்செய்துகொண்
டும், யாகட்ஸ்க் என்னும் பட்டணத்து கவர்னருக்கு ஒரு
கடிதம் தயார்செய்துகொண்டும் மிஸ். மார்ஸ்டன் இர்கட்ஸ்
என்னும் பட்டணத்திலிருந்து புறப்பட்டாள். முதல் சிறிது
தூரம் டாரண்டாஸ் என்னும் வண்டியில் ஏறிச்சென்று பின்
னர் லீனு என்னும் ஆற்றைக்கடந்து சலத்தின்பேரிலேயே
பிரயாணம்செய்து யாகட்ஸ்க் என்னும் நகரஞ்சேர்ந்தனள்.
இர்கட்ஸ்க் என்னும் பட்டணத்திலிருந்து யாகட்ஸ்க் என்
னும் பட்டணத்திற்குச் சாமான் ஏற்றிக்கொண்டு போகும்
ஓடத்தைப்பார்க்கிலும் இந்தம்மாள் ஏறிச்சென்ற படகானது
அதிக நலமானதல்ல. மேலும் கப்பல் சாக்குகளோடு இந்
தம்மாளிருந்தே நித்திரை செய்யவேண்டியதாக நேரிட்டது.
மிஸ். மார்ஸ்டன் இங்கிலாந்தைவிட்டு ஏறக்குறைய பன்னி
ரண்டு மாதங்களாயின. இப்படிப் பிரயாணஞ்செய்து
யாகட்ஸ்க்கை அடைந்தபொழுது, அங்கு கவர்னர் இல்

லாமையைக் கண்டு அதிக விசனத்தையும், நம்பிக்கை பங்
கத்தையும் அடைந்தாள். “எழுந்திருப்பாள் தாவில்லை.”
அந்த அதிகாரியைக் காணுவதாயின் சமுத்திரக் கரையோ
ரமாய்ச் சென்று காட்டில் குறுக்குவழியாய்ப் போய் அதன்
பின் ஆற்றையடைந்து ஜலமார்க்கமாகப் போய் அவர் செல்
லும் படகைக் கண்டாலும் காணலாம். அந்த தன் பட
கின் எஜமானன், இந்த அம்மாளைச் சீக்கிரத்திற் கொண்டு
போய்விட ஒப்புக்கொண்டான். இவர்கள் அநேக மைல்
தூரம் செடிகளடர்ந்த காட்டிற் சிறு பாதையிற் சென்று
அதிசயமான நீண்ட சட்டையை உடுத்திக்கொண்டிருக்கும்
யாகட்ஸ்க் ஜாதியார் அநேகரை வழியிற் கண்டார்கள். அவர்
கள் ஆற்றிற்கருகில் வந்தபோது ரோவிக் கப்பலினின்றும் வரும்
புகையின் தோற்றத்தைக் கண்ணுற்றார்கள். இதைக் கண்ட
மாத்திரத்தில் உடனே தாங்கள் ஏறிவந்த சிறிய குதிரைகளைச்
சீக்கிரத்தில் விட்டுக் கரையை அடைந்து ஒரு காலிப்படகில்
ஏறிப்போகும்போது புகைக்கப்பல் விரைவிற் போவதைப்
பார்த்துத் தெளிந்து சாடையால் நிறுத்தும்படி செய்து சீக்கி
ரத்தில் அதன் அருகே சென்றபோது புகைக்கப்பலில் உள்ள
வர்கள் படியேணி போட்டார்கள். கவர்னரும் மனப்பூர்வ
மாக மிஸ். மார்ஸ்டனுக்கு உபசாரங்களைச் செய்தனர்.
குஷ்டரோகிகளைப்பற்றி அவர் சொன்ன விருத்தாந்தங்
கள் மிகுதியானவையும் பயங்கரமானவையுமாகவிருந்தன.
தான் புறப்படுகிறதற்கு முன்னம் அந்த அம்மாளுக்கு
வேண்டிய உதவிகளைப்பற்றிய ஏற்பாடுகளைச் செய்து
அவர்களிடம் அந்த அம்மாளைப் போகும்படி வேண்டினர்.
மிஸ். மார்ஸ்டன் இவ்விதமாக ஒரு மணிநேரம் வரையி
லும் சம்பாஷணை செய்துவிட்டுத் தனது சிறிய ஓட்டைப்
படகில் வந்து சேர்ந்தனள். இந்த அபாயமான நதியானது
“ஆகாசத்திலிருந்து அறுந்துவிட்டேன், பூமிதேவி ஏற்றுக்

கொண்டாள்" என்பதுபோல் மிகுந்த ஆவலோடு இவர்களு
டைய நல்வரவை எதிர்கொண்டது. அவர்கள் படகைவிட்டுப்
பூமியில் இறங்கும்போது இராத்திரி ஒரு மணியாய்விட்டது.
அதன்பின்பு குதிரைகளின்மேல் சவாரி செய்துகொண்டு
யாகட்ஸ்க் என்னும் நகரமடைந்தார்கள். சைபீரியாவின்
வடகிழக்கிலுள்ள மேற்படி யாகட்ஸ்க் மாகாணமானது,
25 லட்சம் மைல் விஸ்தீரணமுள்ளதும், நாநாவித ஜனங்கள்
சஞ்சரிக்கின்றதுவுமாம். மேற்படி மாகாணமானது, ஐந்து
பிரிவாகப் பிரிக்கப்பட்டும், இந்தப் பிரிவுகளும் கிராமங்க
ளாகப் பிரிக்கப்பட்டும் இருக்கின்றன. இந்த யாகட்ஸ்க்
என்னும் முக்கிய நகரமானது லீனா என்னும் நதிக்கரையில்
உள்ளதும், ஏழாயிரம்பேர் வசிக்கும் ஜனத்தொகையுள்ளது
மாம். நான் இனி அதிகமாகக் கேள்விப்படப்போகிற விலாடி
யூஸ்க் என்னும் பிரிவானது ஐந்துலட்சத்து ஐம்பத்தொன்
பதினாயிர மைல் விஸ்தீரணமுள்ளதும் நான்கு கிராமங்கள்
அடங்கியுள்ளதுவுமாம். இவ்விடத்தில் காடுகளையும் பள்ளத்
தாக்குகளையும் ஏரிகளையும் காணக்கூடும். ஆனால், ஏரிக்
கரைகளிலும் ஆற்றங்கரைகளிலும் ஜனங்கள் தங்கள் தங்
கள் ஆடுமாடுகளைப் போஷித்து வருகின்றனர்.

சுதேசிகள் தைக்குறைவைப் பாதிப்பட்சத்தார் அற்பகுண
முடையவர்களும் விக்கிரகாராதனை செய்பவர்களுமாம். ஆனால்
இப்பொழுது அநேகர் கிறிஸ்தவர்களாயிருந்தும், புறச்சம
யத்தார் செய்யும் வழக்கங்களைத் தாங்களும் செய்ய சம்ப
திப்பட்டவர்களா யிருக்கின்றார்கள். அவர்கள் ஏழைகள்;
மிக்க மெல்லிய உரோம வர்த்தகத்தினால் ஜீவித்து வரு
கின்றனர். அநேசர் மரங்களின் பட்டைகளினால் பொருத்த
மான பல வர்ணங்கள் பிரகாசிக்கும்படி கூடைகள் செய்
துகொண்டும், தண்ணீர் குடிக்கப் பாத்திரங்களும், தொட்டில்
களும் செய்துகொண்டும் வருகிறார்கள். ஜனங்கள் களிமண்

ணினாலும் சாணியினாலும் மேல்பூசப்பட்டுள்ள குடிசைகளில்
வாசம்பண்ணுகின்றனர். முற்கூறிய பெரிய நோயாளிகள் வந்து
சேர்வதினால் அந்த ஊரார் மிக வறுமையை யடைகிறார்கள்.
ஆகையால் குடிகள் செலுத்தவேண்டிய வரிகள் அதிகமாகச்
சேர்ந்து வருகின்றன. யாகட்ஸ்க் என்னும் பட்டணத்தில் இர
வில் எட்டு மணிக்கெல்லாம் கதவை மூடிக்கொள்கிறார்கள். சீத
ளம் அங்கே அதிகம், மூடுபனி அடர்ந்துள்ளது. ஒரு வருஷத்
தில் எட்டுமாதம், காலை பத்துமணிக்குமேல் வெளிச்சந்தோற்
றும். மறுபடி மத்தியானம் இரண்டு மணிக்குள் இருள் சூழ்ந்து
கொள்ளும். தினம் பன்னிரண்டுமணி நேரத்தில், ஆறுமணி
நேரம் ஜனங்கள் சீட்டு ஆடுகிறதிலும், சுருட்டுப் பிடிப்ப
திலும் நாளைக்கழிப்பார்கள். பெண்பிள்ளைகளும் சுருட்டுப்
பிடிப்பார்கள். ஏழைகள் தங்கள் வீட்டுச் சன்னல் கத
வுக்கு வேண்டிய கண்ணாடிக்குப் பதிலாக இரண்டு அங்குல
குல கனமுள்ள பலகைபோன்ற பனிக்கட்டிகளை உபயோ
கித்து வருகின்றனர். சாமான்கள் வருஷத்திற்கு ஒருமுறை
விற்கப்படும். ஜனங்கள் அப்போதுதான் பன்னிரண்டு மாதங்
களுக்கு வேண்டிய சாமான்களை வாங்கிக்கொள்வது வழக்
கம். மிஸ். மார்ஸ்டன் யாகட்ஸ்கில் வந்தவுடன் அத்தியட்ச
குருவைக் காணப்போயினள். இவர் ஜனங்கள் விஷயத்
தில் மிகுந்த ஆவலும் சுறுசுறுப்புமுள்ளவர். மேலும் பட்
டணத்திலுள்ள கனம்பொருந்தியவர்களைச் சேர்த்து இந்தப்
பெரிய வியாதியாளர்களுக்கு உதவி செய்வதாக இந்தப்
புண்ணியவதிக்கு வாக்களித்தனர்.

போய்ச்சேர்வதற்கு அருகிலுள்ள காடுகளிலும் சதுப்பு
நிலங்களிலும் இருக்கின்ற பெரிய வியாதிக்காரரைப்பற்றிய
பயங்கரமான சவிஸ்தாரங்களை இந்த அத்தியக்ஷ குருவி
னிடத்தும், அந்தப் பட்டணத்திலிருந்த ஒரு வைத்தியரி
டத்திலும் கேள்விப்பட்டாள். வைத்தியர் இந்த அம்மாளை

அவர்களுக்குத் தேயிலையும் புகையிலையும் கொண்டுபோய்க்
கொடுக்கும்படி வேண்டினார். அத்தியட்ச குருவும் பிரதி
தேசாதிபதியும் விசாரணைசெய்யும் வைத்தியரும் அந்த மாகா
ணத்து வைத்தியர்களும் ஆகிய யாவரும் ஒருங்குசேர்ந்து
ஒரு சபை கூடினார்கள். எந்த வழியாகச் செல்லவேண்டுமோ
அதைப்பற்றி ஏற்பாடு செய்துகொண்டனர். அங்கிருந்த
பாளையக்காரன் ஒருவன் மிஸ். மார்ஸ்டனுடன் தான் செல்
வதாயும் மேலும் இந்த அம்மாளுக்கு வேண்டிய பண
மில்லாமை கண்டு வேண்டும் குதிரைகளை உதவிசெய்வதா
யும் ஒத்துக்கொண்டான். “பக்கச்சொல் பதினாயிரமல்லவா?”
வண்டியில் போவதினால் காடுகளில் அநேக சங்கடங்கள்
நேரிடுவதையறிந்து, குதிரைகளின் மேற்செல்ல நிச்சயித்துக்
கொண்டு, சாமான்களைத் தூக்கிக்கொண்டு வருவதற்கும்
காட்டுக்காடி முதலான மிருகங்களால் வரும் துன்பங்களைத்
தடுக்கும்பொருட்டும் சில மனிதர்களையும் ஏற்பாடு செய்து
கொண்டார்கள். இந்தக் குதிரைச்சவாரி மிகவும் ஆச்சரிய
கரமா யிருந்தது. இதில் மிஸ். மார்ஸ்டன் ஒருத்திதான் பெண்
பிள்ளை. இவள் பதினைந்து மனிதர்களோடும் முப்பது குதி
ரைகளோடும் சென்றனள். “ஜெபமுள்ளமட்டும் பயமில்லை”
என்று மிஸ். மார்ஸ்டன் பெரிய கைகளையுடைய சட்டை
யொன்றைப் போட்டுக்கொண்டு தன்னுடைய தோளின்மேல்
சிறிய பை ஒன்று தொங்க இரண்டாயிரம் மைல் போக
வேண்டியதைப்பற்றிப் பெண்பிள்ளைகளைப்போல் ஒரே பக்க
மாக யுட்கார்ந்து சவாரி செய்யாமல் ஆண்பிள்ளைகளைப்போ
லவே உட்கார்ந்து சென்றனள். இவர்கள் எல்லோரும் புறப்
படுகிறதற்கு முன்னர் அத்தியக்ஷ குருவின் வீட்டிற்குச்
சென்று கடவுளை நோக்கித் துதித்துப் பின்பு 1891-ம் ௵
ஜூன் ௴ 22௳ புறப்பட்டார்கள். ஆனால் செல்லப் பாதையொ
ன்றும் காணாராகி மலைகளைச் சுற்றிக்கொண்டு எங்காயினும்

வழி கஷ்டமாயிருந்தால், சுற்று வழியாகச் சென்று போனார்
கள். பிரயாணத்தின் முதலில் குதிரைகள் சதுப்பு நிலத்
தில் இடுப்புவரையிலும் புதைந்தன; தன்னோடு வந்த மற்
றவர்கள் குதிரைகளினின்றும் கூக்குரலிடவும், மிஸ். மார்ஸ்
டன் தன்னால் கூடியவரையிலும் குதிரையைச் செலுத்திக்
கொண்டு முன்வைத்தகால் பின்வைக்கமாட்டேன் என்று
சென்றாள். பின்பு இராக்காலம் வந்தபோது கூட வந்த
வர்கள் கூடாரம் அடித்துக்கொண்டு நெருப்புமூட்டித் தேத
தண்ணீர் காய்ச்சிக் கொடுத்தார்கள். காடிவந்தால் உடனே
சுடும்பொருட்டுத் துப்பாக்கி வைத்துக்கொண்டிருந்தவர்கள்
அதின்மேலேயே படுத்துக்கொண்டு நித்திரைபோயினர். அங்
குள சிலரைக் காவல்காக்க வைத்தார்கள்; கொசுக்கள் அங்கே
அநேகமாயிருந்தபடியால் அவற்றின் கடியினால் மிஸ். மார்ஸ்
டன் கைகளும் மணிக்கட்டுகளும் அதிக நோயுடன் வீங்
கின. மேலும் குதிரைகளின் கடிவாள வாரினால் அந்த அம்
மாளுடைய கைகள் கொப்பளிக்கப்பட்டன. அந்த வார்கள்
குதிரைகளின் வால்தோலினால் செய்யப்பட்டமையால் மிக
வும் கடினமாயிருந்தது. இதன்றிக் குதிரைகளும் கொசுக்
கடியினால் மிகவும் வருந்தின. இராக்காலங்களில் பூமியா
னது உஷ்ணப்படுவதனால், மழை பெய்தபின்பு அந்தப் புழுங்
கப்பட்ட பூமியினின்றும், மூடுபனியாகிய குளிர்ந்த மேகம்
எழும்புகின்றது. இந்தப் பக்கங்களில் காற்று இடி மின்னல்
களோடுங் கூடிய புயல் மிகுதியும் அதிகம். இவ்வளவு
பெரிய தேசத்தில், எங்காவது ஓரிடத்தில், ஆடுமாடுகளா
லும், மனிதர்களாலும் சஞ்சரிக்கப்பட்டுள்ளதும், மிகுதியும்
அசுசியானதும் ஆகிய ஒரு சத்திரத்தைக் காணலாம். பகல்
குறைந்த கோடைக்காலத்துத் தினங்களிலுள்ள வெயிலின்
தீட்சண்ணியமானது, பகல் நீண்ட மாரிகாலத்துத் தினங்
களின் குளிர்ச்சியைப்போலு மவ்வளவு கடுமையாகவேதானி

ருக்கும். வெயிலினின்றும் துன்பப்படாதிருக்க இந்தப் பத்துப்பேரடங்கிய கூட்டமானது இரவிலும் பிரயாணஞ்செய்வது வழக்கம். அநேக மரங்கள் விழுந்துள்ள பல காடுகளையும் கடந்து சென்றார்கள். இவ்வாறு மரங்கள் விழுந்திருப்பதை அங்குள்ள மந்திரக்காரிகளின் மகிமையென்று அங்கு வசிக்கும் மூடஜனங்கள் கட்டுக்கதையாய்ச் சொல்லுகிறார்கள்.

ஆனால் இப்படித் தரைமீது விழுந்துகிடக்கும் மரங்களைப்பற்றி மிஸ். மார்ஸ்டன் சொன்ன உண்மையான காரணமானது இந்தக் கட்டுக்கதையைப் பார்க்கிலும், ஆச்சரியகரமாயும் கேட்க இன்பமாகவுமிருக்கும். இந்தக் காட்டுப் பூமியின் அடிப்புறமானது தகிப்பு வியாபித்துள்ளது. மழையினாலுண்டாகும் ஜலப்பிரவாகமும் வெயிலினால் பனிக்கட்டிகள் உருகி ஓடும் பனிச்சலமும் மேற்கூறிய தகிப்பை அடக்காமல் இருப்பதினால் இந்தத் தகிப்பானது தாக்கி அநேக மரங்களின் வேர்களை யெரிக்க நிலைதளர்ந்து நேரிடும் காற்று மழையினால் விழுந்திருக்கின்றனவேயன்றி வேறன்று. மிஸ். மார்ஸ்டன் இவ்விதமாயெரிந்த மண்ணை மாதிரிக்காக ஆங்கிலேய பலபொருட் காட்சிச்சாலைக்குக் கொண்டுபோயினள். கரடிகளின் பயமும் அடிக்கடி நேரிடுவதுமன்றி அங்குள்ள சுதேசிகள் தாங்கள் அப்போதுதான் பதினொரு கரடிகளைப் பார்த்ததாகச் சொன்னார்கள். சில சுதேசிகள் மரத்தின் பட்டைகளைப் பாலில் கலந்து சாப்பிடுகிறார்கள். பால் கட்டியாக விற்கிறார்கள். இதுபோலும் பாற்கட்டிகள் இங்கிலாந்திற்கும் இந்தியாவிற்கும் மத்தியிற் போகும் புகைக் கப்பல்களில் உபயோகப்படுத்தப்பட்டன. ஏறக்குறைய ஒவ்வொரு கப்பலிலும் பனிக்கட்டி வைத்திருக்கும் ஒவ்வொரு அறையைக் காணலாம். மாரிகாலத்தில் சைபீரியா என்னும் தேசத்தில் பிரேதங்களை அடக்கஞ்செய்வது மிகவும் கஷ்-

டம். மூன்றுநாளிரவும் பகலும், பூமியின்மீது அக்கினியை யுண்டாக்கி பின்பு பூமியைத்தோண்டி அதினுள் பிரேதத்தை அடக்கம் செய்வதினால் பிரேதங்கள் குளிர்ச்சியினால் அநேக வருஷம் அழிவின்றியிருக்கும். இப்படியாகச் செய்யும் பிரயாணத்தில் மிஸ். மார்ஸ்டன் மிகவும் தேகதளர்ச்சியடைந்து சதுப்பு நிலங்களிலும் காடுகளிலும் கஷ்டத்துடன் சென்றும், இரவில் கூடாரம் அடித்துக்கொண்டும், சிலவேளைகளில் அசுத்தியான மூட்டைப்பூச்சிகள் நிறைந்த குடிசைகளில் நித்திரை செய்யும்பொருட்டுத் தங்கியும், "காசி இரண்டு எழுத்தாயினும் அதைக் காண்பது கஷ்டம்" என்பதுபோல் அநேகவிதமான கஷ்டங்களை அனுபவித்துக் கடைசியாக விலூஸ்க் என்னும் பட்டணத்தைச் சேர்ந்தாள். பிரான்சு தேசத்தைப் பார்க்கிலும் அதிக விஸ்தீரணமுள்ள ஒரு மாகாணத்தைக் கண்டனள். இவ்விடத்தில் வசித்திருக்கும் எழுபதினாயிரம் ஜனங்களுக்கு வரும் நோயைத் தீர்க்கும்படி ஒரு வைத்தியர் தான் வைக்கப்பட்டிருந்தார். மிஸ். மார்ஸ்டன் ஜான் என்பவனைக் கண்டனள். வெயிலில் நின்றும் மிகவும் சங்கடப்படாமலிருக்கும்படி சாயுங்காலம், மிஸ். மார்ஸ்டன், தான் அநேகநாள் பார்க்க எண்ணியிருந்த தருமவைத்தியசாலையிலிருக்கும் இடத்திற்கு ஜான் என்பவருடன் சென்றனள். இப்படியாக இந்த அம்மாள் காட்டின் வழியாக இருபது மைல் தூரம் குதிரை சவாரிசெய்து முடிவில் தருமவைத்தியசாலையிருக்கும் இடத்திற்குச் சென்று அந்த இடம் வைத்தியசாலை யிருக்கத் தகுந்த தன்மையைக் கண்டுற்றனள். இவ்விடத்தில் இவ்விருவரும் நடு இராத்திரியில் போய்ச் சேர்ந்தபடியால், அங்கு அன்றிரவு தங்கிச் சிறிது யோசனை செய்தபின்னர் இந்த வைத்தியசாலையைப்பற்றியும், குஷ்டரோகிகளைப்பற்றியும் சிறிது சம்பாஷணை செய்து கொண்டே நித்திரை செய்துவிட்டாள். மறுநாள் மிஸ்.

மார்ஸ்டன் அநேக வருஷங்களுக்குமுன் கட்டியிருந்த ஒரு தரும வைத்தியசாலை அப்போது மூலதனமில்லாமையால், மூடப்பட்டிருந்ததைக் கண்ணுற்றனள். மிஸ். மார்ஸ்டன் குஷ்ட நோயாளர் வசிக்குமிடமாகிய காட்டையும், படுக்கப் பாயும் தூங்க இடமும் இல்லாமல் இவர்கள் தனியாக வசித்துக்கொண்டிருப்பதையும், பக்கத்தில் இருக்கப்பட்ட கிராமங்களில் உள்ளவர்கள் தங்களுக்குத் தரும் உணவுகளைப் பெற்றுக்கொள்ளும்படி இவர்கள் அநேக மைல் தூரம் செல்ல வழி வெட்டியிருப்பதையும், அந்தப் பாதையில் நூறு மைல் தூரம் கம்பங்களைப் பூமியில் நட்டிருப்பதாகிய குறியினால் கண்ணுற்றனள். வழி முழுவதும் தறித்த கட்டைகளும் மரத்தின் வேர்களும் போடப்பட்டிருப்பதினால் இவ்விருவரும் தாங்கள் ஏறிச் செல்லும் குதிரைகளின் கால்கள் இடற அதிக சங்கடப்பட்டுக்கொண்டு, கடைசியாக அநேக நோயாளர் இருக்கின்ற இடத்தை அடைந்தார்கள். இந்த அம்மாள் குதிரையினின்றும் இறங்கி, நொண்டி, குருடர் முதலான அவயவம் இழந்தவரிடம் சென்றபோது, சிலர் பூமியில் விழுந்தும் சிலர் முட்டி போட்டுக்கொண்டும் இந்த அம்மாளையும் ருஷிய சக்கரவர்த்தினியாரையும் மிகுதியும் பயபக்தியோடு தோத்திரம் செய்தார்கள். இதன்பின் தேயிலை, புகையிலை, வஸ்திரம் முதலானவைகளை இந்த அம்மாள் அவர்களுக்கு அன்போடளித்தனள். மேலும் குஷ்ட வியாதிக்காரர் இருக்கின்ற குடிசைகளுக்குச் சென்று பெருங்கும்பலாய்ப் படுக்கப் படுக்கையில்லாமலும், போர்த்துக்கொள்ளப் போர்வையில்லாமலும், அவர்கள் வைத்திருந்த துணிகள் மிகக் கிழிவுற்றும், அழுக்குற்றும் இருப்பதினால் அந்தக் கொடுநோயாளர்கள் அநேக வருஷம் தங்கள் மரணகாலம் நேரிடும்வரையில், இவ்விதத் துன்பங்களினாலும், நோயின் கொடுமையினாலும் அவஸ்தைப்பட்டுக்கொண்டிருப்பதைப் பார்த்தனள். அவர் முக்கியமாக அழுகின மீன்களைத்

தான் தின்பது வழக்கம். அவர்களுடைய குடிசைகள் மூட்டைப்பூச்சிகள் நிறைந்தும், தங்கள் தங்கள் மனைவிமக்கள் ஆடுமாடு கன்றுகள் இவையாவும் யாதொரு வித்தியாசமின்றி அசுசியால் நிறையப்பட்டுமுள்ளன. சிலகாலங்களில் இவர்களுக்கு அம்மை நோயும் வருவது வழக்கம். இதனால் மரணமடைகிறவர்களை அக்குடிசைகளுக்குச் சில கெஜதூரத்தில் புதைப்பார்கள். மிஸ். மார்ஸ்டனும் இன்னும் மற்றுமுள்ளவர்களும் அவ்விடத்தைவிட்டுத் திரும்புகையில் ஒரு காடியானது எதிர் வர அதைப்பார்த்துக் குதிரைகள் மிகவும் பயந்து வழியில் மரம் கிளை முள் என்பனவற்றையும் தெரியாமல் ஓட இதனால் மிஸ். மார்ஸ்டன் அதிக தொந்தரை அடைந்து குதிரையை விட்டுக் கீழிறங்கிவிட்டாள். அவர்களுடைய பிரயாணத்தில் சிறிதுதூரம் ஆற்றில் படகின்மீது செல்லவேண்டியதாகவிருந்தபடியால் அவர்கள் அதிக கஷ்டப்பட்டுக்கொண்டு செல்லுகையில் கொடிய காற்று மழை வந்தமையால் படகானது அடிக்கடி மோதப்பட்டது. கப்பலேறிக் கடலில் விழுவது போலிருந்த அத்தருணத்தில் அவர்கள் படகைவிட்டிறங்கிப் பத்து மைல் தூரம் காட்டில் நடந்தும் சென்றார்கள். மிஸ். மார்ஸ்டன் இதுகாறும் நெடுந்தூரம் நடந்து கஷ்டப்பட்டவளல்லள். ஆகையால் மூன்று மைல் தூரம் நடந்து பின்பு சக்தியற்றவளாய் நின்று மறுபடியும் நடக்கத்தொடங்கி நான்கு யுத்தவீரர்களின் உதவியினால் மற்றுமுள்ள வழியைக் கடந்து அலுத்துப்போய் விலாஸ்க் என்னும் பட்டணத்தைச் சேர்ந்தார்கள். இவ்விடத்தில் இந்த அம்மாள் தூக்கமின்றி அதிக கஷ்டப்பட்டமையாலும் இரண்டு நாளைக்குள் அநேக மைல் தூரம் பிரயாணம் செல்லவேண்டியதால் இரண்டு நாள் யாதொரு தொந்தரையில்லாமல் நித்திரை செய்தாள். இன்னும் இந்த நோயாளர்கள் அநேக இடங்களில் பரவியிருப்பதினால் இவர்களிடம் தானே நேரில் சென்று அவர்களுடைய

பரிதபிக்கும்படியான நிலைமையையும் நோயையும் பார்த்தாலொழிய அவர்கள் யாவரையும் ஒரு இடத்தில் ஒன்றாகச் சேர்க்க யாதொரு ஏற்பாடும் செய்ய சக்தியற்றவளாயிருந்தாள். ஜூலை 27உ இந்த அம்மாளும் இன்னும் மற்றுமுள்ளவர்களும் பிரயாணப்பட்டுப் படகில் ஏறிச்சென்றும் காட்டில் குதிரை சவாரி செய்துகொண்டும் இராக்காலங்களில் கூடாரம் அடித்துத் தங்கியும் இவ்விதமாக நூறு மைல் தூரம் பிரயாணம் செய்துகொண்டு ஸிவிட்ளி விலூஸ்க் என்னும் பட்டணத்தைச் சார்ந்தார்கள். இவ்விடத்தில் குஷ்டரோகிகளோடு இருந்த ஒரு நல்ல குருவானவர் இந்த அம்மாளைக் கண்டமாத்திரத்தில் இந்த நோயாளருக்கு உதவிசெய்யும்படி மிகுதியும் பிரார்த்தித்து ஒரு தரும வைத்தியசாலை கட்டுதற்குரிய ஏற்பாடுகளைப்பற்றிப் பேசித் தெளிந்தார்கள். இந்தவிடத்திலிருந்து இன்னும் நூற்றைம்பது மைல் சென்றால் இந்நோயாளர் இருக்கின்ற மற்றொரிடத்தைக் காணக்கூடும். ஒரு இடத்தில் பெரிய வியாதியால் பிடிக்கப்பட்ட பெண்பிள்ளையோடு பயித்தியம் பிடித்த ஒருவன் ஒரே குடிசையில் சுமார் நான்குவருடகாலமாக வாசமாயிருப்பதைக் கண்டார்கள். மற்றொரிடத்திற்கு அதிகாலை குதிரையின்மேல் சவாரி செய்துகொண்டு போய்ச் சேர்ந்தபோது, அவ்விடத்தில், ஒன்பது பெரிய வியாதியால் வருந்துகிறவர்கள் மிகுந்த குளிரினாலும், துணியில்லாமையாலும் கந்தைகளையும், வைக்கோல்களையும் போர்த்துக்கொண்டிருக்கக் கண்டார்கள். மற்றொரிடத்தில் இந்த வியாதியே பிடித்த ஒரு பெண்பிள்ளை சுமார் ஆறுவருடகாலமாகத் தனக்கு உணவு கொண்டுவந்து நூறு கஜ தூரத்தில் வைக்கப்பட்டவுடனே வைப்போர் கைகொட்டிச் சத்தம்செய்து செல்லுகிற குரலோசை தவிர வேறொரு மனித சஞ்சார சத்தத்தைக் கேட்டவளல்லள். இப்படி வைக்கப்பட்ட உணவு இந்த நோயாளி மெல்ல மெல்ல நகர்ந்துகொண்டு

வந்து எடுத்துக்கொண்டு போகவேண்டியதாக விருக்கின்றது. இந்தப்பிரயாணத்தில் மிகுந்த அதிசயமும், ஆச்சரியமும் உள்ள ஒரு விநோதத்தைக் கண்ணுற்றனள். அது என்னவெனில் மெல்லிய கூரைமேலமைந்த தரைக்கீழ்ப் பாதையில் குதிரைகள் செல்லும்போது எந்தச் சத்தம் உண்டாகுமோ அந்தச் சத்தமே இந்தக் குதிரைகள் பூமியின்மீது செல்லும்போதும், உண்டாவதைச் செவியுற்று அறிந்தனள். இதற்குக் காரணம் என்னவோவென்று யோசித்துப்பார்க்கையில் பூமியின் கீழ் நெருப்பு கொதித்து மிகவும் அதிக கொடுமையாகப் பற்றி எரிவதே காரணமாகத் தோன்றுகின்றது. இரவு வந்தபோது தடித்த இருள் எங்களைச் சுற்றிலும் சூழ்ந்துகொள்ளக் கண்டோம். மிஸ். மார்ஸ்டன் தான் அநுபவித்த அநுபவங்களைப் பின்னும் சொல்லத் தொடங்குவாள். இவ்விதமாகச் செல்லும்போது வெகு தூரத்தில் பலபக்கங்களிலும் விளக்கு வெளிச்சங்கள்போலக் கண்டோம். இதன்பின் இந்த வெளிச்சங்களெல்லாம் ஒன்றாய்க் கூடி ஏக சோதியாய்த் தோன்றிற்று. இப்படியாக அநேக கஷ்டங்களை அநுபவித்துக் காட்டைக்கடந்த பின்னர் தரைதட்டின கப்பல்போல் ஒரு பெரிய கடுவெளியில் வந்து சேர்ந்தோம்.

ஆ, ஆ, என்ன இந்தப் பூலோகத்தின்கண் எப்போதும் கண்டிராத தோற்றம் என் கண்களுக்கு முன்னர்த் தோன்றியது. காடுகள்தவிர மற்றப் பூமி முழுவதிலும் எங்களைச் சுற்றி அநேக மைல்தூரம் பலவித வர்ணத்தோடுங் கூடிப் பூமியின்மேல் நான்குபுறத்திலும் சுடர்க்கொழுந்துகள் தோன்றக் கண்டோம். நெருப்பைச்சேர்ந்த யாவும் அதன் நிறமாகு மல்லவா? பின்பு நாங்கள் எங்களுக்குள்ளேயே மனதைச் சிறிது திடப்படுத்திக்கொண்டு எங்களால் கூடிய வரையிலும் நிதானித்துத் தாண்டிக்கொண்டே சென்றோம்.

இந்த அக்கினியாலுண்டாகும் புகை எங்கள் கண்களில் வந்து அடிக்கடி படியக் கண்டோம். மேலும் சுவாலையில் உண்டாகும் நெருப்புக் காற்றினால் எங்கள் சுவாசம் அடிக்கடி அடைக்கப்பட்டது. ஆனால் நாங்கள் இந்த அபாயத்தினின்றும் நீங்கிச் செல்ல வேறிடமில்லாமையால் நெருப்பினால் சுவாலை வீசப்பெற்ற வழியாகவே போகவேண்டியதாய் நேரிட்டது. நாங்கள் இதினின்றும் தப்பியபின்னர் உயிரோடுங்கூடி ஜீவந்தரா யிருப்போமென்று நினைக்கவேயில்லை; ஆனால் திரும்பிச் செல்வதைப்பார்க்கிலும் மரணமடைவதே நலமாகும். எங்கள் குதிரைகள் மிகுதியும் மூச்செறிந்துகொண்டே நடுங்கிச் செல்ல நாங்கள் மெதுவாக ஜாக்கிரதையாய்ச் செல்லலுற்றோம். இப்படி மூன்றுமைல் தூரம் நாங்கள் கடந்து செல்லும்போது சண்டாளக் குதிரைகளில் ஒன்று மிகுதியும் பயந்து இந்தக் கூட்டத்தினின்றும் பிரிந்து மிகவும் வேகத்தோடு செல்லலுற்றது. இது இந்த அக்கினிச்சுவாலை வீசுகின்ற பூமியின்கண் மிகுதியும் அபாயம் விளைவிக்கத் தக்கதென்று சொல்லவேண்டுமோ, ஆகிலும் சிறிது நேரத்திற்குள் குதிரைகள் பயந்தெளிந்து சாந்தமாகவே நாங்கள் எல்லோரும் பின்னர் நெடுமரங்களடர்ந்த ஒரு அழகான வனத்தில் வந்து சேர்ந்தோம்.

இப்படியாக மிஸ். மார்ஸ்டன் அநேக கஷ்டங்களை அநுபவித்த பின்பு தேகத்தளர்வெய்தினாள். இந்த அம்மாள் குதிரையின்மீது விடாமல் சவாரி செய்ததனால் நோயொன்றுண்டாகி மிக வருந்தி ஒரு நாள் இளைப்பாறும்படி நேரிட்டது. இன்னுமுள்ள பிரயாணமனைத்தும் மிகுந்த சங்கடத்துடன் மிஸ். மார்ஸ்டன் சென்றனள். சிலவேளைகளில் நோய் பொறுக்கமுடியாமலிருந்தாள். அவள் அப்போது மற்றவர்களால் கீழே யிறக்கப்பட்டு மிகுந்த நோயுடன் நித்திரை செய்தாள். மறுபடியும் நித்திரை நீங்கி விழித்துக்கொண்ட

பின்பு கடவுள் தான் எடுத்துக்கொண்ட வேலையை முடிக்கத் தனக்குப் பலங்கொடுப்பார் என்னும் எண்ணத்தோடு குதிரையின்மீதேறி சவாரி செய்துகொண்டே போனாள். இப்போதும் நாளுக்குநாள் குஷ்ட நோயாளர் தனித்தனியாகவும், ஐவர் அல்லது பதின்மர் கூடியாவது இருக்கக் கண்டுகொண்டே வந்தனள்.

யாகட்ஸ்க் என்னும் பட்டணத்திற்குத் திரும்பிச் செல்லுகையில் ஒரு நாளுக்கு எழுபது மைல் வரையில் சாப்பாடும் நித்திரையும் அதிகமின்றிச் சென்றார்கள். கடைசியாக இருபது மைல்தூரம் கடந்து சென்றபின்னர் மிஸ். மார்ஸ்டன் குதிரைச்சவாரி செய்யச் சக்தியற்றவளாயிருந்தபடியால் ஒரு வண்டியைப் பேசி அதின்மேல் வைக்கோலைப் பரப்பி அதின்மீதேறிச் சென்று இருபது மைல்தூரம் சவாரி செய்தபின்னர் யாகட்ஸ்க் என்னும் பட்டணத்தை அடைந்தார்கள். அவ்விடத்தில் மிஸ். மார்ஸ்டன் தன்னோடு துணையாக வந்தவர்களுக்கு வந்தனம்செய்து இவ்விடத்தில் தான் யாதொன்றும் செய்யமாட்டாமல் "பசிக்குக் கறிவேண்டாம், தூக்கத்துக்குப் பாய்வேண்டாம்" என்றவாறு இருபத்து நான்கு மணிநேரம் மெய்மறந்து நித்திரை செய்தாள். இதன் பின்னர் முதல் இர்கட்ஸ்க் என்னும் பட்டணத்திற்குப் போக லீனா என்னும் ஆற்றைக் கடக்கும்பொருட்டுப் படகின்மீது ஏறிச் சென்றாள். இந்தப் படகில் ஜனங்கள் அடர்ந்திருப்பதையும் போதுமான உணவு இல்லாமையையும் கண்டனள். ஆனால் இந்த அம்மாள் துர்ப்பலமாயிருந்தபடியால் தான் யாதொன்றும் செய்யாளாகிக் கப்பற் பள்ளியறையிற் படுத்துக்கொண்டு அரைதுயிலாக அந்நாள் முழுதுமிருந்தாள். இதன் பின் இர்கட்ஸ்க் என்னும் பட்டணத்தை அடைந்து கவர்னர் ஜெனரலவர்களைக் கண்டாள். அவரும் இந்த அம்மாள் கண்டு வந்த குஷ்டரோகிகளைப்பற்றிச் சொல்லப்போகின்ற விர்த்தாந்

ங்களைக் கேட்கும்வண்ணம் ஒரு சங்கம் ஏற்படுத்தினர். மிஸ். மார்ஸ்டன் மாஸ்கோ ஸெண்ட் பீடர்ஸ்பர்க் என்னும் இரண்டு பட்டணங்களிலுள்ள தலைமையானவரிடம் இடமற்ற குஷ்டரோகிகள் வசிப்பதற்கு ஓரிடம் உண்டுபண்ண வேண்டியதற்குரிய பொருளுதவி செய்வதைப்பற்றிப் பேசவேண்டுமென்றனள். இது இர்கட்ஸ்க் என்னும் பட்டணத்திலுள்ள ஜனங்களை மிகுதியும் ஏவித் தூண்டினதால் இந்த அம்மாள் இவ்விடத்தைவிட்டு நீங்குதற்கு முன்னமே பதினையாயிரம் ரூபாய் சேர்ந்துவிட்டது. இந்தப் பெண்மணி இத்தொகையை கவர்னரிடமே ஒப்புவித்துவிட்டு டாமஸ்க் என்னும் பட்டணத்திற்கு இர்கட்ஸ்கிலிருந்து மூன்று குதிரைகள் கட்டிய சக்கரமில்லா வண்டியிற் சென்றாள். இவ்விதமான வண்டி அதிக துரிதமாய்ச் செல்லும். இந்த அம்மாள் டாமஸ்க்கை அடைந்தவுடன் அங்கிருந்த கன்னியர்மடஞ் செல்லவே அந்த மடத்துத் தலைவியும் மிகுந்த அன்புடனே உபசரித்தனள். மிஸ். மார்ஸ்டன் குஷ்டரோகிகள் படும் வருத்தங்களையும் மேலும் அவர்களுக்கு வேண்டியவற்றையும் அந்த மடத்திலுள்ள கன்னிகைகளுக்கும் தலைவிக்கும் விவரித்துச் சொல்லவே அவர்கள் மிகுதியும் மனம் வருந்தினார்கள். “இப்பெரிய வியாதியால் வருந்துகிறவர்களுக்கு உபசாரம் செய்ய சுயநயம் பாராட்டாத பெண்பிள்ளைகள் வேண்டுமென்று அந்தக் கன்னியர்மடத்துத் தலைவியை கிறிஸ்துவின் பெயரால் அழைத்து வேண்டினேன். நான் பேசின பின்னர் அந்த அம்மாள் சாந்தமாய் யோசித்து நான் அப்படியே கிறிஸ்துவின்பொருட்டே நீங்கள் வேண்டியவற்றைச் செய்ய விருப்பமுடையவளாக விருக்கிறேன். ருஷியாதேசத்தில் உயர்ந்த வகுப்பினர் வீட்டினின்றும், மத்திம வகுப்பினர் வீட்டுப் பெண்களினின்றும் கன்னியர்மடத்தில் தருமசகோதரிகளாகச் செய்யப் பெண்களை வரவழைத்துக்கொண்டும், பயிர்

தொழில் கைத்தொழில் முதலான கஷ்டவேலையைச் செய்பவர் வீட்டுப் பெண்களினின்றும் கன்னியர்மடத்தில் தவப்பெண்களாகச் சிலரைச் சேர்த்துக்கொண்டும் வருகின்றனர்.

கன்னியர்மடத்து வீட்டுக்குரிய காரியங்களைப் பார்த்தலும், அங்குள்ள இடங்களைச் சுத்திசெய்தல், ரொட்டி சுடுதல், சாப்பாடு சமைத்தல், மெழுகுவர்த்தி செய்தல், இன்னும் அந்த மடத்துச் சுவர் முதலானவைகளைப் புதுப்பித்தல், கடிதாசி ஒட்டுதல், வர்ணம் பூசுதல் முதலான திருத்தங்களும், நிலத்தைப் பண்படுத்திப் பயிர் இடுவதுமே இவர்கள் வேலை என்று தெரியவந்தது. டியுமான் எஸ்டீன்பர்க், ஜலாஸ்ட் என்னும் இடங்களைக் கடந்து பின்பு கேட் மார்ஸ்டன் இருப்புப்பாதைகளையும் புகைவண்டிகளையும் பார்த்தபோது சிறு குழந்தையைப்போல மிகுதியும் ஆவல்கொண்டனள். மிஸ். மார்ஸ்டன் தன்னுடைய தேகம் மெலிந்து சௌக்கியத் தளர்ச்சி யடைந்தவளா யிருந்தபடியால், ஜலாடுஸ்ட் என்னுமிடத்திலிருந்து மாஸ்கோவுக்குச் சுமார் எண்ணூறு மைல் தூரமுள்ள பெரிய பிரயாணத்தை இடையில் எவ்விடத்திலும் தங்காமல் நேராகச் செல்லச் சக்தியற்றவளாய் மத்தியில் சில இடங்களில் தங்கிச் சென்றனள். பின்பு நான்கு மாதம் மிஸ். மார்ஸ்டன் ஸெண்ட் பீடர்ஸ்பர்க்கிலும், மாஸ்கோவிலும் உயர்ந்த வகுப்பைச் சேர்ந்தவர்களும், தாழ்ந்த வகுப்பைச் சேர்ந்தவர்களும் ஆகிய ருஷியதேசத்திலிருக்கப்பட்ட ஜனங்களைக் குஷ்டரோகிகள்மீது இரக்கங்கொள்ளும்படி சொல்வதுடன் இரவச்சமில்லாமல் நினைப்பூட்டிச் சொல்லிக்கொண்டிருந்தாள். ருஷியாதேசத்துச் சக்கரவர்த்தினியாரும் மிஸ். மார்ஸ்டன்பொருட்டு ஜனங்கள் அநேகருக்குத் தெரியாவண்ணம் இரகசியமாய் ஒரு சபையைச் சேர்த்து மிஸ். மார்ஸ்டன் தன் தோலைச் செருப்பாகத் தைத்துக் குஷ்டரோகிகள் விஷயமாக எடுத்துக்கொண்ட தருமச் செய்கைக்கு வேண்டிய

பொருளுதவிநிமித்தம் உபகார சிந்தையுள்ள சில உதாரிகளு
டன் ஆலோசித்து ஏற்பாடு செய்தனள். அன்புடைய ராணி
யார் சொல்லுதவி வீண்போகுமா? வெகு சீக்கிரத்தில் பொரு
ளும் சேகரிக்கப்பட்டு அதற்கேற்க நிதியும் உண்டுபண்ணினார்
கள். வர்த்தமான பத்திரிகைகளிலும் சகலமான ஜனங்களுக்
கும் இந்தத் தருமவிஷயம் தெரிவிக்கப்பட்டது. குஷ்டரோ
கிகளை ஆதரிக்கும்பொருட்டு முன்னமே யோசித்தபடி நவீன
மாய்க் குடியேறத் தேசம் ஒன்றை உண்டாக்குவதில் மிஸ்.
மார்ஸ்டனுக்கு உதவிசெய்யும்படி பெரிய வியாதியாகிய கொடி
யநோயைத் தீர்க்க வைத்தியத் தேர்ச்சியடைந்து யாவருக்கும்
தெரிந்த ஒரு வித்தியார்த்தியாகிய பீட்டர்ஸன் என்பவர்
ஆங்குள்ள வைத்தியக் கூட்டத்தாரால் நியமிக்கப்பட்டனர்.
யாகட்ஸ்க் என்னும் பட்டணத்திற்கும் அதைச்சேர்ந்த தேசங்
களுக்கும் சென்று அவ்வூரார்களை அறிந்த வைத்திய பண்
டிதர்கள் ஒரு சிறு சபைகூடி மேற்சொன்ன ஏற்பாட்டுக்
கிசைந்து பின்வருமாறு நியமனம் செய்தார்கள். ஒவ்வொரு
வீட்டிலும் பத்து நோயாளிகள் வாசம் செய்யக்கூடிய பத்து
வீடுகளைக் கட்டவேண்டுமென்றும், பெரிய வியாதியின் மிகுந்த
கொடுமையினால் வருந்துபவர் வைத்தியஞ் செய்துகொள்
ளும்பொருட்டு ஆண் பிள்ளைகளுக்கும் பெண் பிள்ளைக
ளுக்கும் தனித்தனியாக இரண்டு ஆஸ்பத்திரிகளும், வைத்
தியர் ஒருவருக்கும் அவருக்கு உதவிசெய்துவரும் இருவ
ருக்கும் ஒரு வீடும், வைத்தியசாலையில் பணிவிடை செய்
யும் பெண்பிள்ளைகளுக்கு ஒரு வீடும், குருக்களிருக்க ஒரு
வீடும் ஒரு கோவிலும், இவையன்றித் தொழிற்சாலையொன்
றும், ஸபாமண்டபம் ஒன்றும், ரொட்டி செய்ய ஒரு பாகசா
லையும், மயானச்சாலை ஒன்றும் ஆகிய மேற்சொல்லிய கட்ட
டங்களைக் கட்டி முடிக்கவேண்டுமென்றும் ஏற்பாடு செய்
தார்கள். பெரிய வியாதிபிடித்த புருஷனுக்குப் பெண்சாதி

குழந்தை முதலிய சமுசாரமிருந்தால், அவன் மேற்படி
சமுசாரத்தோடும் மற்றவர்கள் தனித்தனியாகவும் இருக்க
வேண்டுமென்றும், ஒவ்வொரு வீடும் ஒரு தோட்டமும், சமய
ல் [illegible]மும், இரண்டு பசுவிருக்கத்தக்க தொழுவமும், தனித்
தனியாக உடைத்தாயிருக்கவேண்டுமென்றும் முடிவுசெய்தார்
கள். இப்படியாக நவீனமாய்க் குடியேறப்போகின்ற இந்த
தேசத்தை உண்டுபண்ண ஏறக்குறைய ஒன்பதினாயிரம் சவ
ரன்கள் (9000 £) வேண்டியதாயிருந்தன. மாஸ்கோவில்
அநேக பாடசாலை உண்டுபண்ணின பரோபகாரியும், ஜனங்
களுக்கு மிகுதியும் உபயோகப்படத்தகுந்த புத்தகங்களைப்
பரவச்செய்வதற்குரிய சங்கத்தாருள் தலைவியும் ஆகிய ஸ்டீ
காலாப் என்னும் பெயரையுடைய பெருமாட்டியைக் காணும்
படி ஒரு கடிதம் கேட் மார்ஸ்டனுக்குக் கொடுத்தார்கள்.
இந்தப் பரோபகாரியும் கேட் மார்ஸ்டனைத் தன்னோடிருந்து
மாஸ்கோவென்னும் பட்டணத்திலுள்ள ஜனங்களுக்கு இந்த
மகா ரோகிகள்மேல் பரிதாபம் உண்டுபண்ணும்படி வேண்
டினள். ருஷியாதேசத்திலுள்ள சில குலப்பெண்கள் சபை
சேர்ந்து பரோபகாரமான கிருத்தியங்களைச் செய்துகொண்டு
வந்ததுமன்றி இன்னும் நூறு பெரிய நோயாளிகளுக்கு
வேண்டிய ஆடைகளையும் நவீனமாகக் குடியேறப்போகிற
வருக்கு வேண்டிய சாமான்களையும் இன்னும் பலவிதமான
வேலைகளுக்கு உபயோகப்படுவதற்குரிய சணல் நாற்புடை
வைகளையும் சித்தப்படுத்துவதில் பிரவேசித்தனர். மாஸ்கோ
வென்னும் பட்டணத்தில் இருந்த ஷாகூஸ்கா என்னும் இராஜ
குமாரியினிடம் தரும சகோதரி முறைமையைப் பாராட்டி
வந்த ஓர் கன்னிகை மிஸ். மார்ஸ்டன் இப்பெரிய நோயாளிக
ளைப்பற்றிய விருத்தாந்தமனைத்தும் சொல்லக் கேட்டனள்;
மேலும் ஐந்து கன்னிகைகள் பெரியவியாதி கண்டவர்நிமித்
தம் சைபீரியாவுக்குப் போகச் சம்மதிப்பட்டார்கள். இராஜ

குமாரியால் நியமிக்கப்பட்ட வைத்தியசாலையில் நாநூறு ஜனங்கள் பலவிதமான வியாதிகளினால் வருந்திக்கொண்டிருந்தார்கள். அவர்களில் அநேகர் பைத்தியம் பிடித்தவர்கள்.

இவ்விடத்தில் இந்நோயாளர்கள் அறுபது கன்னிகைகளால் பணிவிடை செய்யப்பட்டு வருகின்றனர். ஆனால் இந்தச் சாலையோ முக்கியமாக இராஜகுமாரியினால் ரக்ஷிக்கப்பட்டு வருகின்றது. மேற்கூறிய கன்னிகையர் ஐவரும் அந்நோயாளரிடம் போய்ச் சேருவதற்கும், மற்றுமுள்ள செலவுக்கும் என்றாயிரம் ரூபாய் ஹோராபிட்ஸ் என்பவரால் அனுப்பப்பட்டது. 1892-ம் ௵ மேமீ மறுபடியும் திரும்பி வருவதற்கு அசாத்தியமான நெடும் பிரயாணம்போக இக்கன்னியர்கள் தலைப்பட்டார்கள். மிஸ். மார்ஸ்டன் இதன் பின்னர் இங்கிலாந்துக்குச் சென்று சைபீரியாவிலுள்ள குஷ்டரோகிகளைப் பார்க்கப் போனபோது, தான் கண்ட சக்கரமில்லா வண்டியைப்பற்றியும், குதிரை சவாரியினால் தனக்கு நேரிட்ட அனுபவத்தைப்பற்றியும் ஒரு புத்தகம் எழுதவும் அமெரிக்காவில் சென்று இதைப்பற்றி நன்றாக ஜனங்களுக்கு விளங்கும்வண்ணம் பிரசங்கம் செய்யவும் தொடங்கினாள். இந்தப் பெண்சிரோமணி எழுதின புத்தகத்திலிருந்துதான் இச்சரித்திரம் எடுத்தெழுதப்பட்டது. இந்தப் புத்தக வியாபாரத்தில் வரும் பொருளினால் இவ்வுலகத்தில் வருந்துகின்ற இக்கொடிய நோயாளர் பலரையும் ஆதரிப்பதில் முக்கியமான கருத்துடையவளாயிருந்தாள். சொற்சுவை பொருட்சுவைகளிலான சரித்திர சங்கிரகம் மிஸ். மார்ஸ்டன் எழுதினதைப்பார்க்கிலும் இன்னும் நன்றாக முடிவு பெறும்படிச் செய்தல் மிக அரியதாகும்.

ஒருகாலத்தில், ஒரு பிரபுவானவர் ஓர் தரும வைத்தியசாலையைப் பார்க்கச் சென்றபோது அதில் அநேகர் இக்கொடிய வியாதியினால் வருந்தக் கண்டு அச்சாலையைத்

காண்டி; அங்கு தான் அக்கொடிய நோயாளிகளின் பரிதாப நிலைமையைப் பார்த்தபோது தன் மனம் கசிந்ததை யோசித்து, தன்னோடு பின்தொடர்ந்த ஒரு பணிவிடைக்காரியைப்பார்த்து, நீ இப்படிப்பட்ட இடத்தில் இருப்பதால் அதிக அபிமானமும் பரோபகார குணமும் உடையவளாக இருக்கிறாய் என்பது நிச்சயமென்று சொன்னார்.

அதற்கு அப்பணிவிடைப்பெண் "நான் இங்கிருப்பதற்கு அபிமானமும் பரோபகார குணமும் காரணங்களல்ல; சர்வக்ஞர்மேல் வைத்திருக்கும் பக்தி விச்வாஸமே காரணமாகும்" என்றனள்.

FRANCES POWER COBBE.

The Animal's Friend.

Born 1822.

மிஸ். பிரான்ஸிஸ் பவர் காப் என்னும் ஜீவகாருணியமுள்ள சீமாட்டி.

வாயில்லாத ஜந்துக்கள் விஷயமாய்ப் பாடுபடுகிறவர்கள் பெரிய புருஷர்களாவது ஸ்திரீகளாவது மிகவும் அருமை. ஆயினும் இந்தக்காரியத்தில் இடைவிடாது உழைத்தவர் ஒருவர் உண்டு; அவர் யாரெனில், மிஸ். பிரான்ஸிஸ் பவர் காப் என்னும் பெருமாட்டியாம். சில காலத்துக்குமுன் இங்கிலாந்தில் மிகவும் கெடுகெட்ட வழக்கம் ஒன்று உண்டாயிற்று. இரணவைத்தியர்கள், கைப்பயிற்சி உண்டாவதற்காக உயிருள்ள மிருகங்களைச் சேதித்தும் அறுத்தும் வந்தார்கள். இக்காலத்திலோ இவ்வகைப் பிராணி வதையானது சரியல்லவென்று பெரும்பான்மையோர்க்குத் தோன்றிவருகின்றது; இதற்கு முக்கியகாரணம் மேற்கூறிய பெருமாட்டி ஒரு தலைமுறைக் காலமாகச் செய்துவந்த முயற்சியே.

வாயில்லாத பிராணிகளிடத்தில் அன்பு வைக்கவேண்டும் என்பதைக்குறித்து வழக்காடினதுதவிர வேறு நற்செய்கைகள் ஒன்றும் செய்யவில்லையா இப்பெருமாட்டி யென்றாலோ, அப்படியல்ல. இவர் செய்திருக்கிற சிறந்த காரியங்களும் நடத்தியிருக்கிற விசேஷமான நடவடிக்கைகளும் எத்தனையோ உண்டு. அவைகளையெல்லாம் விவரிக்கின் மிகப் பெருகும்.



மிஸ். பிரான்ஸிஸ் பவர் காப் என்னும் ஜீவகாருணிய சீமாட்டி.

சென்ற நாற்பதுவருஷ காலத்துக்குள் மிகுந்த பிரசித்தியுடன் வாழ்ந்தவர்கள் அனைவரும் இவருக்குத் தெரியும்; அவர்களில் ஒருவராவது இப்பெருமாட்டிக்குச் சினேகமில்லாதவரில்லை. அக்கீர்த்திமான்கள் தங்கள் கையால் இவருக்கு எழுதியனுப்பியிருக்கிற கடிதங்களைப் பரிசோதித்துப் பார்ப்பதே ஆனந்தகரமாயிருக்கிறது. மிருகசேதன சாலையின் கொடூரங்களை நிறுத்தவேண்டுமென்கிற இவருடைய கோட்பாட்டுக்கு அவர்கள் எல்லோரும் இணங்கினார்கள்.

இத்துரைமகளின் வாழ்நாளில் 1863-ம் ஆண்டு மிக்க ஏற்றமானது. இவ்வருஷத்தில்தான் இவர் தாம் கொண்ட சீர்திருத்தத் தொழிலைத் தொடங்கியதும், பத்திரிகைகள் எழுதத்தொடங்கியதும். பாரிஸ் நகரத்துக்கு அருகில் ஒரு கிராமத்தில் மிருக வைத்தியர்கள் என்று பேரிட்டுக்கொண்டிருந்தவர்கள் சிலர் தீட்டத் தீட்டக்கூராகிய ஆயுதத்தால் மிருகங்களைச் சேதித்துத் தங்களுடைய கத்தித்தொழில்களைச் செய்வதை இவர் கண்டார். அவர்கள் அவ்வாறு செய்தது தங்களுக்குக் கைப்பழக்கமும் சாஸ்திரப்பயிற்சியும் உண்டாகும் பொருட்டன்றி வேறல்ல. இறந்துபோன மிருகங்களுடலில் தங்களுக்குவேண்டிய அங்கபரிசைகளை நடத்திப் பார்த்தாலும் போதுமானதாயிருக்க, உயிருள்ள சிலகுதிரைகளுடலில் அறுபதுவிதமான அப்பியாசங்கள் செய்யப்பட்டனவாம். ஒரே மூச்சாக எட்டுமணிநேரம் அக்குதிரைகள் சின்னபின்னமாக வதைக்கப்பட்டனவாம். ஐயோவென்று சொல்ல யாருமில்லாத அந்த மிருகங்களின் பரிதாபமான காட்சியானது இப்பெருமாட்டிக்கு மிகுந்த வருத்தத்தை உண்டுபண்ணிற்று. அதுமுதல் இந்த அப்பியாசத்தைக் கண்டிக்க எவ்வளவோ பிரயத்தனம் பண்ணிவருகின்றார். அவர் பத்திராதிபரா எழுதத் தொடங்கியதும் இக்காலத்தான். 'மனிதனுடைய சுதந்தரங்களும் மிருகங்களின் உரிமைகளும்' என்று ஒரு பத்

திரிகையை முதல் முதல் எழுதினார். பிறகு பற்பல விஷயமான எத்தனையோ பத்திரிகைகளும் கிரந்தங்களும் எழுதிக் கிரந்த கர்த்தாவாக விளங்கி வந்தாலும், தாம் மேற்கொண்ட சீர்திருத்தும் காரியத்தைமட்டும் சிறிதேனும் மறக்காமல் என்றும் ஒரேசீராகப் பாராட்டி முயன்றுவருகிறார்.

இவர் சங்கற்பித்துக்கொண்டிருக்கிற காரியத்தில் இவ்வளவு சிரத்தை வைத்திருக்கிறார் என்பது இவருடன் ஒரு மணிகாலம் சம்பாஷித்தால் யாருக்கும் தெரியவரும். ஜீவவதை கூடாதென்னும் தம்முடைய வழக்கையாடுவதில் இவர் முன்போல இப்போது முன்வரிசையில் நிற்காவிட்டாலும், 'கத்திவதையினின்று மிருகங்களை விடுவிக்க விக்டோரியா வீதிசபை' என்று ஏற்பட்ட சபையின் காரியதரிசியாகச் சம்பளமில்லாமல் 10 வருஷம் சேவித்த நாளில் எவ்வாறோ, அவ்வாறே நாளைக்கும் அதிக ஊக்கத்துடன் ஹெங்கர்ட் என்னும் வீட்டிலிருந்துகொண்டு தாம் பிடித்த கட்சிக்குப் பாடுபடுகிறார். ஹெங்கர்ட் என்னும் மாளிகையோ குன்றுகளும் சோலைகளும் பச்சைமரங்களும் சூழ்ந்து ரிஷியாச்சிரமம் போல் ரமணீயமாயிருக்கிறது. இந்த வாசஸ்தலம் இவருக்குக் கிடைத்ததே ஒரு ஆச்சரியம். இது 1896-ம் ஆண்டில் இறந்துபோன தம்முடைய இணைபிரியாத தோழியாகிய மிஸ். லாயட் என்பவருடைய சொந்த வீடாயிருந்தும், தாம் வயது மிகுந்து உழைப்புவேலையினின்று ஒழிந்து ஏகாந்தவாசம் பண்ணக் கருதிய சமயத்தில் தாமும் தோழியுமாய் ஒரு சிறிய வீட்டில் குடியிருக்கும்படி நேரிட்டது; ஏனெனில் ஹெங்கர்ட் என்னும் வீடு தங்கள் கையினிலிருந்தும் அந்தப் பெரிய மாளிகைக்குத் தகுந்த அலங்காரமும் பரிவாரமும் வைத்துக்கொள்ளப் பணமில்லை. இக்காரணத்தினால் அதை அன்னியருக்குக் குடிக்கூலிக்கு விடுவதைத்தவிர வேறு வழியில்லையென்று நிச்சயித்து என்னைத்தினம் நியாயாதிபதிகள்

முடிவான தீர்மானம் சொல்வதாக அறிவித்திருந்தார்களோ அன்றைத்தினம் காலையில், மிஸ். காப் என்பவருக்கு ஐசுவரியம் கிடைத்துவிட்டது என்று தபாலில் வக்கீல் மூலமாகச் சமாசாரம் வந்தது. பணம் வந்தவழியாதெனில், ஏழை வயிற்றில் பிறந்து திரளான பொருள் சம்பாதித்து வைத்துக்கொண்டிருந்த மிஸ். யாட்ஸ் என்ற ஒரு துரைமகள் மிஸ். காப்பினிடத்திலும் இவருடைய ஜீவகாருணியத் தொழிலிலும் திவிரமான விசுவாசம் பிறந்து அந்தியகாலத்தில் தன்னுடைய தனத்தில் பெரும்பான்மையையும் இவருக்கு எழுதி வைத்து விட்டாராம். தக்ஷணமே இவரும் தோழியும் ஹெங்கர்ட்வீட்டிற்கு மாற்றம் செய்து கொண்டனர். முன்னவர் நாளதுவரைக்கும் அவ்விடத்திலேயே வசித்துவருகிறார். 1876-ம் வருஷத்தில் தாம் ஏற்படுத்திய 'விக்டோரியா வீதி சபை'யினின்று சென்ற வருஷம் விலகி 'மிருகாங்க சேதன கண்டன பிரிட்டிஷ் யூனியன்' என்ற ஒரு புதிய சபையை ஏற்படுத்தினார்.

ஆணாகட்டும் பெண்ணாகட்டும் மிஸ். காப்புக்கு யார் யார் சிநேகரோ, அவர்கள் எல்லோரும் இவருடைய கருத்துக்கு இசைந்தவர்கள்தாம். கல்நெஞ்சராயிருப்பவரையும் தக்கவண்ணம் போதித்து மனதுருகச்செய்ய இவருக்குச் சாமர்த்தியமுண்டு. இது இவரிடத்திலிருக்கிற நேசர் கடிதங்களினால் தெரியவருகிறது. ஜீவகருணையைப்பற்றித் தத்தமக்குத் தோன்றிய தோற்றங்களையெல்லாம் அவர்கள் எல்லாரும் கடிதத்தில் எழுதி இவருக்கு அனுப்பியிருக்கிறார்கள்.

இவருக்கு பிரௌனிங் துரை என்ன எழுதியிருக்கிறா என்றால், 'நமக்கு எள்ளளவும் நோவக்கூடாது என்கி வியாஜத்துக்காக ஒரு நாயையோ பூனையையோ பிராணஹிம்சை செய்வதைக்காட்டிலும் நானே சித்திரவதைக்குள்ளாவேன்' என்றும், மற்றொரு சந்தர்ப்பத்தில் வேறொரு

தார்டத்தைப்பற்றிப் பேசும்போது 'புருக்களைச் சுடுவதாகிய கொடூரம் எப்போது ஒழியுமோ! ஜீவவதையோ அதைவிடக் கொடியது? இதின்மேல் யார் கங்கணம் கட்டுகிறார்களோ, அவர்களுக்குத் தெய்வம் அனுகூலம் தருக' என்றும் எழுதியிருக்கிறார். தென்னிஸன் என்னும் இராஜகவி சிரேஷ்டன் மிஸ். காப் நாட்டுப்புறத்தில் ஏகாந்தவாசியாயிருக்கும் காலத்தில் போய்ப்பார்த்துக் கவித்துவத்தைக்குறித்தும் வைத்தியபண்டிதர்கள் செய்யும் கொடுமையைக் குறித்தும் பேசிக்கொண்டிருந்ததுமல்லாமல் 'செத்தவர்களின்மேல் தம்முடைய பரிகாசங்களைக் காட்டித் தம்மிடத்தில் அன்பும் ஆதரவுமாய்த் தமது அடிவாரத்தில் கெஞ்சிக் காத்திருக்கும் நாயைக் கண்டம் கண்டமாய் அறுப்பவர்கள்' என்று தான் தன்னுடைய ஒரு கவியில் சொல்லியிருப்பதைப் பார்த்து ஒரு சாஸ்திரி மிகவும் கோபங்கொண்டார் என்றும் சொன்னாராம். இது விஷயமாக மிஸ். காப் அனுப்பிய விண்ணப்பங்களில் இராஜகவியாகிய தென்னிஸனுடைய கையொப்பமில்லாதது கிடையாது. அன்றியும் இவரை அவர் கடைசியாகக் கண்டபோது 'அம்மா போய் வருகிறேன். நற்சண்டையைச் செய்யுங்கள், தளரவேண்டாம்' என்று தைரியம் சொன்னதாகவும் தெரியவருகிறது. இப்படியே புத்தியிலும் கல்வியிலும் சிறந்தவர்கள் இவருக்கு எழுதியிருக்கிற கடிதங்கள் அநேகமுண்டு.

லண்டன் நகரத்தில் கண்ணியமுள்ளவர்களுக்குள் தாமும் ஒருவராய் விளங்கி ஜீவகாருண்ணியத்தைத்தவிர மற்ற விஷயங்களைப்பற்றியும் மிஸ். காப் பல பெரியோரோடு சம்பாஷிப்பதுண்டு. ஜான் ஸ்டூவார்ட் மில் என்னும் சாஸ்திரி இவருக்கு நன்றாய்த் தெரியும். அவரைவிடக் கபடமற்ற வித்துவான் கிடையாது என்று இவரால் நமக்குத் தெளிவாய்த் தெரியவருகிறது. ஒருநாள் ஆத்துமா நித்தியம், அது

அழிவில்லாதது, கன்பனைக் குறித்து இவர் அவருடன் பேசும்போது நெஞ்சுருகிக் கன்னத்தில் இரத்தம் தளும்பிக் கண்ணீர்விட்டாராம். ஈரமில்லாதவர் என்று எல்லாராலும் சாதாரணமாக எண்ணப்பட்ட புருஷனுக்கு இவ்வளவு உணர்ச்சியும் உருக்கமும் உண்டாயிற்றேயென்று மிஸ். காப் ஆச்சரியப்பட்டார். சார்லஸ் கிங்லிஸி என்னும் பண்டிதரைக் கடைசியாக இவர் பார்த்தபோது அவருடைய ஏகாந்தநிலை இவருக்கு மனதிற்பட்டது. அவரைப்பற்றி இவர் 'என்னவோ ஆழ்ந்த நினைவில் மூழ்கியிருந்தார், முகத்தைப் பார்க்கும் போதே யிருந்த ஏக்கமும் விசனமும் பிடித்தவர்போலிருந்தது. இவ்வளவு மனத்துயரப்படும்போது நாம் ஏன் பார்க்கவந்தோம் என்று நினைத்தேன். அவருடைய மனதில் என்னதான் புகுந்துகொண்டிருக்குமோ?' என்கிறார். பாஸெட் துரை குருடாயிருந்தாலும் இராஜ்ஜிய தந்திரத்தில் புலி என்று கேட்டிருக்கிறோமல்லவா? அவர் 'குழந்தைப் பிள்ளையைப்போல் சிரித்த முகமுடையவர்' என்று மிஸ். காப்பினால் தெரிய வருகிறது. அன்றியும் இவருக்கு மாத்யு ஆர்னல்ட் என்னும் கலாவல்லபர் எழுதியிருக்கிற ஒரு வேடிக்கைக் கடிதத்தில் 'விண்ணப்பங்களில் வித்துவான்களுடைய கையொப்பம் உபயோகமில்லை. ஏனெனில் கல்வி கற்றவர்கள் உலக நடவடிக்கை தெரியாதவர்களென்றும், கேவலம் கற்பனா சக்தியே மேலிட்டவர்கள் என்றும் சாதாரணமான அபிப்பிராயம்' என வெழுதியிருக்கிறார்.

மிஸ். காப் என்பவர் நாநாதேச யாத்திரைகள் செய்திருக்கிறார். அவைகள் எல்லாவற்றையும் சொல்ல அவகாசமில்லையாயினும் உலகத்தில் உள்ள அருமையான அற்புத வேலைகளில் ஒன்றாகிய ஈஜிப்ட் தேசத்தின் பிரமிட்ஸ் என்னும் கோபுரங்களை அவர் பார்க்கப்போனதைப் பற்றியாயினும் இரண்டொரு வார்த்தை சொல்லாமலிருக்கக்கூடாது. முக்கியமான நெடுங்கோபுரத்தின் நடுவில் செல்லும்போது

315 . 158

அவர் துணைக்கு அழைத்துக்கொண்டுபோன ஐந்து அரபிக் கூலிக்காரர்களும் சட்டென்று நின்று பணம் அதிகம் கொடுத்தாலல்லது வரமாட்டோமென்றார்களாம். இந்த வர்த்தமானத்தைப்பற்றி அவர் சொல்லுகிறதாவது "கூலி ஆட்களுடைய பிடிவாதம் நிமிஷத்துக்கு நிமிஷம் அதிகரித்தது; இருட்டில் என்னைத் தனியே விட்டுவிட்டு அவர்கள் ஓடிப்போய்விட்டால் ஏக்கம்பிடித்துத் தடுமாற வேண்டுமேயென்று திகிலடைந்தேன். நான் வந்ததோ கைரோநகரத்தில் ஒரு காக்கை குருவிக்குக்கூடத் தெரியாது; சிலநாள் வரைக்கும் என்னை ஒருவரும் தேடக் காரணமிராது. நிராயுதபாணியாய் ஐந்து முரட்டு மனிதர்களினடுவில் நின்றேன். ஓடிப்போவோமென்று அவர்கள் நினைப்பதுதானே தாமசம். ஓடிவிட்டால் நம்முடைய கதி யென்னவென்று நினைத்துப்பார்த்தேன்" என் கிறார். ஆயினும் உள்ளே யிருந்த பயத்தை வெளியிட்டு பசாரவார்த்தை சொன்னால், அவர்கள் இன்னும் தலைமேல் வார்கள் என்று தைரியம் பண்ணிக்கொண்டு 'நல்லது, றும் பேசாதேயுங்கள்: அடா, நீ வெளிச்சத்தை எடுத்துக் ண்டு முன் நட; அடா, நீ எனக்குக் கை கொடு; மற்ற ர்கள் கூடவே வாருங்கள்' என்று கண்டித்துச் சொன் ான். அப்படிச் சொல்லவே என்னமோ ஒரு மந்திரத்தால் டுப்பட்டதுபோல் இவரும் நடுநடுங்கிக் கட்டளைப்படி ந்தார்கள், என்கிறார். இவ்வாறாக இவர் மந்திரங்கால் தி முக்கால் என்றபடி ஒரு தந்திரமான காரியத்தைத் ணிந்து செய்து ஜயித்தார். துணிந்தார்க்குத் துக்கமுண்டா, ணிந்தார்க்கு பாடுண்டா?

மிஸ். காப் கிரந்த கர்த்தாவென்று சொன்னோமல்லவா? ர் எழுதியிருந்த கிரந்தங்களைப்பார்த்தால் ஒருவருடைய ட்காலம் முழுவதும் எழுதினாலும் முடியாதுபோலிருக் து. அவையும் தாம் ஏற்றுக்கொண்ட தர்ம காரியத்தில் ம்முழுதையும் போக்கி இடை யிடையே கிடைத்த ஒழிவு

தேசங்களில் எழுதின கிரந்தங்களேயன்றி வேறில்லை. அந்தக்
கிரந்தங்களின் பெயரைக் குறிப்பதற்கே பிரிட்டிஷ் மியூஸியம்
புஸ்தகப்பட்டியில் ஒருபக்கம் வேண்டியிருக்கிறது. அவைக
ளில் சில தம்முடைய சொந்த காரியமாகிய ஜீவகாருண்ய
விஷயமாகவும், மற்றவைகள் யாத்திரை, மதவிசாரம் முத
லான விஷயங்களாகவும் இருக்கின்றன. இதுமாத்திரமோ!
பிளாரென்ஸ், ரோம் என்னும் பட்டணங்களிலுள்ள தின
வர்த்தமானிக்குச் சிறிதுகாலம் நியத வர்த்தமானக்காரராக
இருந்ததுமன்றி லண்டன் நகரத்து ஒரு தினவர்த்தமானிக்கு
ஏறக்குறைய ஆயிரம் முக்கியமான பத்திரிகைகளும் எழுதி
யனுப்பியிருக்கிறார். இதுவும் தவிர 'ஸ்டாண்டர்ட்' என்
னும் பத்திரிகையை நடத்தும் பத்திராதிபர்களில் ஒருவராக
வும் இருந்தார். இப்படி யிருந்த காலத்தில் ஒரு நாள் "அடி
நாக்கிலே நஞ்சும் நுனிநாக்கிலே அமிருதமும்" ஆகப்பேசி ஜந்
துக்களை யறுத்துச் சோதிக்கும் சாஸ்திரவேதசாரிகளுடைய
'கத்திவதை'க்கு அநுகூலமான ஒரு பத்திரம் அதில் அச்சிடப்
பட்டிருப்பது கண்டு அதைச் சகிக்காமல், அந்த தினவர்த்த
மானி சம்பந்தமே நமக்குக் கூடாதென்று கோபித்து வேலையை
விட்டுவிட்டார். 'இறந்த நாயின் விக்கியாபனங்கள்' என்
றும், 'நானறிந்த நாய்கள்' என்றும், பேர் வைத்து இவ
ரெழுதியிருக்கிற இரண்டு சிறிய புஸ்தகங்களைப் பார்த்தால்
இவர் வாயில்லாப் பிராணிகளிடத்தில் வைத்திருக்கும்
இரக்கமும் அன்பும் இவ்வளவென்று நன்றாய்த் தெரியவரும்.

இந்த பிரான்ஸிஸ் பவர் காப் என்னும் பெருமாட்டி
ஐயர்லாண்டு தீவில் டப்ளின் நகரத்தில் பிறந்து பெண்
பட்டணத்துப் பாடசாலையில் கல்விப் பயிற்சிசெய்து படி
பாளியானார். ஸ்திரீகளுடைய உரிமைகளையும் சுதந்தரங்
களையும் நிலைநிறுத்தி ஆதரிக்க முயன்று பிரசங்கஞ்செய்
சபாவாதிகளில் சிறந்த ஸ்திரீ சிரோமணியென்றும் பிரசித்
பெற்றிருக்கின்றனர்.

BARONESS BURDETT COUTTS.

(The Friend of the Homeless Poor.)

Born 1837.

பர்டெட் கௌட்ஸ் என்னும் ஜநோபகாரி.

நாட்டார் நன்மையையோடிப் பாடுபடுகிறவர்கள் சிலர்
இருக்கிறார்களாயினும் அவர்கள் இன்னாரென்பதை உலகத்
தார் தெரிந்துகொள்ளாமலே யிருக்கிறார்கள். அடிக்கடி சில

சேனாவீரர்கள் போர்க்களத்தில் ஜயம்பெற்று மிகுந்த கீர்த்தி பெறுகிறார்களே. அவ்விதமாகவே "சித்திரம் கைப்பழக்கம் செந்தமிழ் நாவின்பழக்கம்" என்றபடி கவிராயர், சிற்பிகள், சங்கீத சாகித்தியர், சித்திரம் தீர்ப்பவர் முதலியவர்கள் ஒவ்வொருகாலத்தில் தோன்றி வியக்கத்தக்க காரியங்களைச் செய்கிறார்கள். அவர்கள் பெரும் பிரசித்தியும் பெற்று அவர்களுடைய காலத்தில் எவ்விடத்திலும் யாவராலும் விசேஷமாகக் கொண்டாடப்படுகின்றனர்.

இவர்களைப்போலன்றிச் சில உத்தம புருஷர்கள் தாம் செய்கிற காரியம் ஒருவருக்கும் தெரியாமலே ஏகாந்தமாக லோகோபகாரமான செய்கைகள் அநேகம் செய்கின்றனர். அவர்கள் ஒருவர் கண்ணுக்கும் தோன்றாமல் ஏழை ஜனங்களுடைய வீடுகளில் சென்று, அந்த ஏழைகளின் கஷ்டங்களைப் போக்கி அவர்களை மேலான நிலைமைக்குக் கொண்டு வருகிறார்கள். அதை எவ்விடத்தும் விளம்பரஞ் செய்வதேயில்லை. இக்காலத்தில் இவ்வாறு லோகோபகாரஞ் செய்து வந்த பல பிரபுக்களில் நமது ராஜாங்கத்துப் பிரதானமந்திரியாயிருந்த கிளாட்ஸ்டன் பிரபு ஒருவர். அவர் எப்பொழுதும் தமது கைப்பொருளை ஜனங்களுடைய நன்மைக்காகவே கொடுத்துவந்தாரென்பதை எவரேனும் அறிவார்களா? இந்தப் பரோபகாரந்தவிர மற்றொரு தொழிலும் அவருக்கு இல்லாதிருக்குமாயின் அவருடைய பெயர்கூட உலகத்தில் ஒருவருக்கும் தெரிந்திராது. அவர் பல தருமகாரியங்களுக்கு அனுப்பிய பெருந்தொகைகளைச் சமாசாரபத்திரிகை முதலியவற்றில் விளம்பரஞ் செய்தாரோ? இல்லை. "இவ்வுலகத்தில் இரண்டாவது பெருமாட்டி." என்று நமது புதிய சக்கரவர்த்தி முன்னே புகழ்ந்து கொண்டாடிய ஒரு உத்தமி செய்த நற்செய்கைகளும் அத்தன்மை யானவையேயாம். அவர் செய்த லோகோபகாரமான செய்கைகளை உலகத்தில் சாதாரணமாகத் தெரிந்துகொண்டவர் அருமையென்றே

சொல்லலாம். பர்டெட் கௌட்ஸ் என்னும் பெருமாட்டியின் பெயரையும் மகிமையையும் உலகத்தில் அநேகம் கேள்வியுற்றிருக்கலாம்; ஆயினும் ஆயிரத்தில் ஒருவர்கூட அவர் செய்த அஸாத்தியமான காரியங்கள் இவ்வளவென்பதை நன்றாகக் கண்டறியவில்லை. அப்பெருமாட்டியோ 1837-ம் வருஷந் தொடங்கி நாளதுவரையிலும் அறுபது வருஷங்களுக்கும் அதிகமாக ஏழைஜனங்களிடத்தில் விசேஷமான உள்ளன்பு பாராட்டி வந்தார். அவருடைய செல்வமத்தனையும் ஏழை ஜனங்களுக்கு உபகரிப்பதற்கே உபயோகப்பட்டது. அவர் உதவிசெய்ய இன்னார் இப்படிப்பட்டவரென்று ஆலோசனை செய்ததில்லை. கஷ்டப்படுகிறவர்கள் யாராயிருந்தாலும் அவர்களுக்குடனே உதவிசெய்வார்.

இது அதிசயோக்தியென்று எண்ணவேண்டாம். கௌட்ஸ் துரைசாணி செய்துவந்த உபகாரத்திற்கு இவ்வளவென்று கணக்கில்லை. இவ்வுலகம் எவ்வளவு விஸ்தாரமுடையதோ அவ்வளவு விஸ்தாரமாகப் பரவியது; ஜீவகாருண்ணியம் எவ்வளவுதூரஞ் செல்லுமோ, அவ்வளவுதூரஞ் சென்றது; ஆயினும் துர்விநியோகம் எவ்வளவு விலக்கக்கூடுமோ, அவ்வளவு விலக்கப்பட்டது. அவரிடம் விண்ணப்பஞ்செய்யப்பட்ட எந்தப் பெரிய முயற்சியும் காரியசித்தி பெறாமற்போகவில்லை. நாற்பது வருஷங்களுக்கு முன்னே லண்டன் நகரத்துக் கைநெசவுத் தொழிலாளர் பலரும் வேலை கிடைக்காமல் வருந்த முற்றபோது, ஜீவனத்திற்காக அவர்களைத் தேசாந்தர மனுப்பியது இவரது பணமேயாம். அதற்குப்பின்பு தோல் பதனிடுவோர் தொழிலகப்படாமல் தவித்தபோது அவர்களுடைய துன்பத்தைத் தீர்த்ததும் இப்பெருமாட்டியே. அவருக்கு இருபத்துமூன்று வயதிலேயே திடீரென்று மிகுந்த செல்வம் கிடைத்தது. புதிதாக யாருக்காவது பணம் வந்தால் அதை உடனே செலவழித்துவிட மனம் வருமா? வராதே! இப்பெரு

மாட்டி விஷயத்திலோ அப்படியில்லை. இவருக்குப் பணமெவ்
வளவு அதிகமாக வந்ததோ, அவ்வளவுக்கவ்வளவு ஏழைகளி
டத்தில் அவருக்கு இரக்கம் அதிகமாயிற்று; தம்மால் கூடிய
வரையில் ஏழை ஜனங்களுடைய சங்கடங்களை நிவிர்த்திசெய்
தலும், ஈனஸ்திதியை அடைந்தவர்களைக் கைதூக்கி மேலான
நிலைக்குக் கொண்டுவருதலும் ஆகிய பரோபகாரங்களிலேயே
தமது வாழ்நாளைக் கழித்துவிட வேண்டுமென்கிற தீர்மானம்
செய்துகொண்டாராம்.

நாம் கோரியபடியே அவர் தமது தொழிலைச் செவ்வை
யாகவே செய்யத்தொடங்கினார். எவ்விடத்தில் அவருடைய
உதவி அதிகமாக வேண்டியிருந்ததோ, அவ்விடத்திற்கு
அவர் உடனே சென்றார். லண்டன்மாநகரத்துக் கீழண்டை
யில் குற்றவாளிகளுக்கு ஏற்பட்டிருந்த மிகக் கொடுமையான
சிறைச்சாலைகளைச் சீர்ப்படுத்தினார். ஊர்காப்பாளர்கூட அந்
தச் சாலைகளில் பலர் ஒன்றாகக் கூடாமல் தனியே போவதற்
குப் பயப்படுவார்களாம். அவ்வளவு பயங்கரமாயிருந்த
சிறைச்சாலை சீர்ப்படுத்தப்பட்டது. கோலாஸ் கோஷியா
தோட்டமென்னுமிடத்தில் ஏழை ஜனங்களுக்கு உசிதமான
வீடுகள் கட்டிக்கொடுத்தாள்; வீடென்றால், ஒன்றிரண்டல்ல;
இருநூறு வீடுகள் கட்டிக்கொடுத்தாள். அந்தக் கிரகங்கள்
நாளைக்கும் லண்டன் பட்டணத்தில் ஏழைகள் வசிக்கும்
ஆயிரக்கணக்கான வீடுகள் எல்லாவற்றிற்கும் மேன்மைபெற்ற
தாயிருக்கின்றன. இவ்வாறு வீடுகள் கட்டிப் பிரதிஷ்டை
செய்தவிடத்திற்கு கொலம்பியா பேட்டையென்று பெயர்.
அதற்குச் சமீபத்தில் அந்தப் பேட்டையிலுள்ள எளிய ஜனங்
கள் தங்களுக்கு வேண்டிய உணவுப்பொருள்களை மலிவாக
வாங்கிக்கொள்வதற்கு அநுகூலமாக மிகப் பெரிய கடை
யொன்று கட்டப் பிரயத்தனப்பட்டாள். இந்தப் பெருமாட்டி
செய்த எந்த ஏற்பாடும் மிகக் கொண்டாடத்தக்கதுதான். ஆனா

லும் ராஜீகம் தைவீகம் எப்படியோ? "நல்லகாரியத்துக்கு
நாற்பலத்தடை" என்றதுபோல் இது ஒன்றுமாத்திரம் அவளது
எண்ணப்படி ஈடேறவில்லை.

அந்த அற்புதமான கடையைக் கட்டிமுடிக்க அப்பெரு
மாட்டி எழுபத்தைந்து லக்ஷம் ரூபாய் செலவு செய்தாராம்.
அது அவ்வளவு புதுமையான கட்டடம். அந்தக் கட்டடம்
கடையாகவே அமைந்திருந்தால் எவ்வளவோ நன்மையா
யிருக்கும். ஐயோ! லண்டன் பட்டணம் பண்ணிய துர்ப்பாக்
கியம் அப்படி யமையவில்லை. அவ்விதமான கட்டடமுள்ள
கடை உலகத்தி லெவ்விடத்திலும் கிடையாது. ஏழைகள்
வசிக்கும் பேட்டையில் கட்டப்பட்டதாயினும், அவர் உத்தே
சித்தபடி காரியம் நிறைவேறியிருந்தால் மிகவும் கொண்டா
டத்தக்கதாயிருக்கும். ஆனாலும், சலவைக்கல்லினால் செய்த
அற்புதமான ஸ்தம்பங்கள் நாட்டிய கூடங்களும், மிகப்பாடு
பட்டுச் செய்த சித்திரவேலைப்பாடுகளும், காண்போர் கண்
களைக் கவரும்படியான அக்கட்டடத்தின் சௌந்தசாட்சியும்,
அது ஒரு கடையாயிருப்பதினும் கோவிலாயிருந்தால் மேன்
மையாயிருக்குமே! அவ்வாறே, இவ்வற்புதமான கட்டடம்
ஒரு ஆலயமாவதற்கு ஒரு குறையுமில்லையென்றும், பிரசங்கப்
பீடமொன்றுமாத்திரமே அமைக்கவேண்டியது குறைவென்
றும் பிரதான குரு எடுத்தோதினர். பல பத்திராதிபர்களும்
கடைவைப்பதற்கு இவ்வளவு அற்புதமான கட்டடமேதாக்
கென்று அவருடைய அபிப்பிராயத்திற்கு விரோதமாகவே
யெடுத்துக் கூறினார்கள். அதனால் அவர் கருத்து ஈடேறுமற்போ
யிற்று. ஏழை ஜனங்களுக்கு நயமாக நல்லுணவு கிடைக்கும்
படி செய்யவேண்டுமென்று ஒரு பெண் பட்ட பாடுகளுக்கு
அக்கட்டடம் ஒரு அறிகுறியாக நாளைக்கும் காணப்படுகின்ற
தாயினும், உபயோகமற்றதாகவே கிடக்கின்றது. இவ்விதமாய்
அந்தப்பெரிய கட்டடம் கடையாக உபயோகப்படவில்லையாயி

லும், லண்டன் பட்டணத்தில் கடைகள் கட்டவேண்டுமென்கிற விசாரத்தை எவருக்கும் உண்டாக்கி, இருப்புப்பாதை முழுவதும் ஒவ்வோரிடத்திலும் ஒவ்வொரு கடைகட்டிப் பிரதிஷ்டைசெய்யும்படி வழிகாட்டி விட்டது.

கௌட்ஸ் பெருமாட்டி கிழக்கு லண்டனிலுள்ள ஜனங்களின் கஷ்டங்களைத் தீர்க்கவும், துக்கங்களைப் போக்கவும், இவ்வாறு எவ்வளவு பொருள் செலவுசெய்தாரோ, அது ஒருவருக்கும் தெரியாது. அவர் அப்படிச் செய்தது அந்த ஒரு இடத்திலே மாத்திரந்தானோ; லண்டன் பட்டணத்துப் பற்பல பேட்டைகளிலும் ஐம்பது வருஷகாலம் அளவற்ற தருமங்கள் செய்தார். முப்பது வருஷங்களுக்கு முன்னே கிழண்டைப் பாகத்தில் விஷபேதியாகிய கொள்ளைநோய் கண்டு மிகக் கொடுமைசெய்ய ஆரம்பித்தது. அக்காலத்தில் பர்டெட் கௌட்ஸ் ஏற்படுத்திய வைத்தியர்களும், சிகிச்சோபசாரம் செய்பவர்களும், சுகாதார விசாரணைத் தலைவர்களும், இராப்பகல் ஓயாமல் ஓடியலைந்து அந்நோய் தாக்கியவர்களைக் கைவிடாமல் பார்த்து உபசரித்தவண்ணமா யிருந்தார்கள்.

இவ்வாறு கீழ்ப்பாதியில் பற்பல தருமங்கள் செய்தபிறகு கலியாணமாகாத கன்னிகையான அந்தச் சீமாட்டி மேற்பாதிக்குச் சென்றார். அவ்விடத்திலுள்ள ஏழை ஜனங்களுக்கு இன்னவென்று கணக்கில்லை; அங்கே ஏழைகள் அளவுகடந்து அடர்ந்திருந்தனர். அவ்விடத்தில் அந்த ஜனங்களுக்கு உபயோகமாகப் பல பாடசாலைகளும் ஆலயங்களும் கட்டினார். அவற்றில் செயின்ட் ஸ்டீபன் ஆலயமென்பது 1847-ம் ஆ பிரதிஷ்டை செய்யப்பட்டது. அந்தக் கட்டடங்கள் கட்டுவித்ததோடு அவை எதற்காகக் கட்டப்பட்டனவோ, அந்தக் காரியங்களுக்கு வேண்டிய செலவும் அன்றுமுதல் அவரே கொடுத்து நடப்பித்துவருகிறார். அந்தக் கட்டடங்கள் கட்டுவதற்கு லக்ஷம்பவுண்டு செலவாயிற்றாம். லண்டன் பட்டணத்தி

லுள்ள மற்றப் பாடசாலைகளிலும் இப்பாடசாலைகளே மிகச் சிறப்புற்றிருக்கின்றனவென்பது யாவரும் கொண்டாடத்தக்க விஷயமாம். இப்பாடசாலைகளுடன் வெஸ்ட் மினிஸ்டர் சிற்ப சித்திர வித்தியாசாலையும் ஒன்று ஸ்தாபித்தார். அதனால் எல்லாக் கல்விகளும் கைத்தொழில்களும் அங்கேயே குறைவறக் கற்க அநுகூலமாயிற்று. முதலில் சிற்பசித்திர வித்தியாசாலையென்பது, பகலில் வேலைசெய்யும் கூலிவேலையாட்களுக்கு அந்தந்த வேலைகள் கற்பிக்க வேண்டுமென்றே ஸ்தாபிக்கப்பட்டது. அப்படி பாலபோதத்திற்காக ஏற்பட்ட அந்தப் பாடசாலையில் சிற்பசித்திரங்கள் கற்பதற்கு வேண்டிய பல வகுப்புகளும் ஸ்தாபிக்கப்பட்டதனால், கல்விகளைப் பூரணமாகக் கற்க அது போதுமானதாயிற்று. இப்பெருமாட்டி பரோபகாரமே பெரிதாகக்கொண்டு அனைநாற்றுண்டுவேளையில் மிகப் பெரிய தருமங்கள் செய்யத் தலைப்படாதிருந்தால் குருக்கள்மாரும் சமயபோதகரும் அவருக்கு உதவியானவர்களும் அத்தேசத்தில் செய்ய ஆரம்பித்திருந்த பல நற்காரியங்கள் வெகுவாகத் தடைபட்டுப் போயிருக்கும். அத்தேசத்துப் பெயர்பெற்ற பெருமாட்டிகள் சிலர் செய்த அற்புதமான சித்திர பளமொன்று செயின்ட் ஸ்டீபன் தேவாலயத்தில் பாப்பப் டு இப்பெருமாட்டியின் பெருமையைப் பிரகித்தப்படுத் கொண் டிருக்கின்றது. வெஸ்ட் மினிஸ்டர் தேவாலயத் ல் அப்பெருமாட்டிக்குப் பலகாரணத்தினால் அதிகமான பிமானமிருந்தாலும், கிறிஸ்து தேவாலயங்களுக்கென்று வர் தனியே நியமித்துவைத்திருந்த திரவியம் முழுவதை ம் அவ்விடத்திலேயே செலவுசெய்துவிட்டாரோ? இல்லை; ப்பிரிக்கா, ஆஸ்திரேலியா தேசங்களிலுள்ள அங்கிலேய க்கூட்டத்தாரும் தம்முடைய பெயரைக் கொண்டாடும் டி அடிலெட், கேப்டவுன், பிரிட்டிஷ் கொலம்பியா என் ம் பிரதேசங்களிலும் பதவிஷபங்களைப் போதிக்கக் குரு

பீடம் ஸ்தாபித்து அவற்றிற்கு வேண்டிய செலவைக் கொடுத்துப் பரிபாலித்துவந்தார். லண்டன்பட்டணத்தில் சற்றுப் பேர்போன தருமம் எதுவாயினும் இப்பெருமாட்டியின் சகாயோபகாரத்தொகை கலவாத தருமம் ஒன்றேனும் கிடையாது.

கதியற்ற குழந்தைகளைக் காக்கும்பொருட்டு 'பாலபோஷண சங்கம்' என்று ஒரு சபை லண்டன் பட்டணத்தில் ஏற்பட்டதற்கு இப்பெருமாட்டியே முதற்காரணம். அவரே அதற்காக ஒரு சட்டமும் பார்லிமெண்டு சபையில் ஏற்படுத்தும்படி செய்தார். அவர் வசித்திருந்த வீதியிலேயே ஆயிரக்கணக்கான ஏழைச் சிறுவர்கள் செல்வதையும் அங்கே கூட்டங்கூடுவதையும் அவர் பலதரம் பார்க்கவே, அப்பேதைப் பிள்ளைகளைப் பரிபாலிக்க ஏதேனும் ஒரு தகுந்தவழி ஏற்படுத்தவேண்டுமென்கிற எண்ணம் அவருடைய மனத்தில் தோன்றியது. எப்படியாயினும் இதற்கு முதலில் வழியுண்டாக்கினவர் இவரே. இவருடைய மாளிகையிலேயே அதற்காக முதல் சபை கூட்டப்பட்டது. இவர் ஜீவப்பிராணிகளிடத்திலும் மிகுந்த அன்புள்ளவராதலால் இவர் ஆதிமுதல் ஜீவஹிம்சை நிவாரண சங்கத்திலும் அத்தியக்ஷர்களில் ஒருவராக ஏற்பட்டிருந்தார்.

பாதரக்ஷைகளுக்குக் கறுப்பு வர்ணம் தடவும் பையன்களிடத்திலும், பூப்பறிக்கும் சிறுமிகளிடத்திலும் இவருக்கு அன்பு மிகவும் அதிகம். இவர் விக்டோரியா சக்கரவர்த்தினியாரினும் ஐந்து வயது முதிர்ந்தவராயிருந்தாலும், இ[illegible] பொழுது சில மாதங்களுக்கு முன்புதான் நெருப்புவர்த்தி வி[illegible]ற்கும் சிறுமிகளைப்பற்றிப் பரிந்து பேசினார்.

ஸ்திரீகளுக்கு நாகரிக விருத்திசெய்யத் தலைப்பட்டவர்களில் இவர் முதன்மையானவராயிருந்தார். அன்னதான[illegible]ச் சாலை அன்னதானம் இருக்கிறது? ஏழைச்சிறு

அன்னதான ஸமாஜத்திற்குப் பிரதான போஷகராயிருந்தார். அதில் பிரதிவருஷம் லண்டன் பட்டணத்து ஏழைச்சிறுவர்கள் 3 லக்ஷம்பேருக்கு உணவு அளித்துவந்தனர். இப்படியே அயர்லாந்திலும் ஏழைகள் விஷயத்தில் அளவற்ற பொருள் செலவுசெய்தார். அத்தேசத்தில் மீன்பிடிக்கும் செம்படவர்களுக்காக இச்சீமாட்டி பதினாயிரம் பவுண்டு செலவுசெய்ததால், அத்தேசத்து ஆண் பெண் அனைவரும் அவரிடத்தில் அதிகமான அன்புடையவரானார்கள். அத்தேசத்துச் சிறுவர் நன்மைக்காக அங்கே நிலைமையான பாடசாலையொன்று ஸ்தாபிக்கப்பட்டது. அது முக்கியமாக இப்பெருமாட்டியின் தருமத்தினாலேயே ஏற்படுத்தப்பட்டது. இந்த அயர்லாந்துக்கும் கிறிஸ்து பிறந்தவிடத்திற்கும் அதிக தூரமல்லவா? ஆயினும் பர்டெட் கௌட்ஸின் தருமவெள்ளம் பெருகியோட அது அதிகதூரமாகக் காணப்படவில்லை. கிறிஸ்தவர்களுடைய புண்ணியக்ஷேத்திரமான அவ்விடத்திலும் பலவிதமான தருமங்கள் செய்தார். முக்கியமாக அங்கே ஜலாதாரத்தையுண்டாக்கினார். அப்படியே லண்டன் பட்டணத்திலும் மற்றும் பலநாடுகளிலும் பல பாடசாலைகளும் கிறிஸ்து தேவாலயங்களும் ஸ்தாபித்தார்; இன்னும் பலவற்றிற்கு மிகுதியாகப் பொருள்கொடுத்து உதவினார். ஸ்திரீகளுக்காக ஏற்படுத்திய தையல்வேலைப் பாடசாலை அவைகளில் ஒன்று. ஏழை ஸ்திரீகளுக்குத் தையல்வேலை கற்பித்துக்கொடுக்கவும் அவர்கள் பகற்காலத்தில் வீண்பொழுது போக்காமல் லாபங்கிடைக்கத்தக்க உபயோகமான தொழில் செய்யவும் அநுகூலமாகவே அப்பாடசாலை ஸ்தாபிக்கப்பட்டது. இந்தப் பாடசாலையினால் ஏழைஸ்திரீகள் பலர் விருத்தியடைந்து சௌக்கியமான நிலை பெறும்படியாயிற்று. லண்டன் பட்டணத்தில் இப்பெருமாட்டி தருமஞ்செய்யாதவிடம் ஒன்றேனுமில்லை; "அன்புள்ளகுணம் அலையில்லாதது" என்ற

படி. தாராளமான மனதுடன் செய்த அந்தத் தருமங்கள் யாவும் இப்பொழுது விசேஷமான நன்மை விளைவித்துக்கொண்டிருக்கின்றன.

இவர் வைத்திருந்த மிகவும் விலைபெற்ற ஆஸ்திகள் பலவற்றில் ஒன்று வெள்ளியினுற் செய்த சிறு கழுதையாம். அது ஒரு புகழ்ச்சிப் பத்திரிகையுடனே வீதிவர்த்தகக்கூட்டத்தார் இவருக்குப் பரிசாயளித்தது. அந்த வர்த்தகக் கூட்டத்தாரிடத்தில் அவர் எப்பொழுதும் அன்பு மாருதிருந்தவர். பாவலர் அருமை காவலர் அறிவாராகையால் இவர் ஒரு சமயத்தில் இவ்வர்த்தகக் கூட்டத்தாரில் சிலரை, ஷேக்ஸ்பியர் இயற்றிய ஹாம்லெட் என்னும் நாடகத்தின் ஆட்டத்தில் பார்த்துக்களிக்கும்படி நாடகசாலைக்கு அனுப்பினுர். அந்த ஆட்டத்தைப் பார்ப்பதில் அவர்களுக்கு அதிகமான இனிப்பு உண்டாகும்படி முன்னதாகவே இவர் அவர்களுக்கு அதன் கதையை விளங்கச்சொல்லி யனுப்பினுர். இப்படியிருக்கச் சில நாளைக்கு முன்னே இந்த வர்த்தகர்கள் ஒரு வியவஹாரத்தில் அகப்பட்டுக்கொண்டு நியாயஸ்தலத்தில் விசாரணை நடக்கும்படி நேரிட்டது. அப்பொழுது அவ்வர்த்தகர்களுக்காக வாதிக்கும்படி தன்னுடைய சொந்தமான வக்கீலை யனுப்பினுள்.

செடிகளிலும் பூக்களிலும் ஏழை ஜனங்களுக்கு அதிகமான விருப்பம் உண்டாக்கவேண்டுமென்று இவர் பல வருஷகாலம் பாடுபட்டார். எளிய மாகாணங்களிலுள்ள ஏழை ஜனங்கள் கையிலே வருஷாரம்பத்தில் பல செடிகளைக் கொடுத்து, அந்தச் செடிகளை நன்றாக வளர்த்துப் பின்னும் செழிப்பாகக் கொண்டுவந்து காட்டுகிறவர்களுக்குக் கோடைகாலத்து முடிவில் வெகுமதியளிக்கப்படுமென்று ஏற்பாடு செய்தார். இவ்விதமாகப் பூஞ்செடிவைத்துப் பயிராக்குவதில் அவரால் பழக்கப்பட்ட எளியபெண்கள் ஆயிரம்பேருக்கு அதிகமிருக்கும். பலவாறு சொல்லியென்ன!

இவருடைய தருமசிந்தையினுலாகிய நன்மையைப் பெருத எளியவர்கள் ஒருவரேனு மில்லையென்று சொல்லலாம். அவர் ஆலயங்களுக்குச் செய்வித்த மணிகளும், பலபேர்களுக்கும் உபயோகமான பொதுஸ்தானங்களில் நிருமித்த தண்ணீர்க் குழாய்களும் தடாகங்களும் எண்ணிறந்தவை. ஆப்பிரிக்காவில் பருத்தி வியாபாரம் நடந்தேறுவதற்காக அவர் அதிகமான உதவிசெய்தார்.

இதேவிதமான இந்த கௌட்ஸ் பெருமாட்டியின் சரித்திரம் முழுவதும் எழுதப்புகுந்தால், இவ்வாறே பல அத்தியாயங்கள் எழுதலாம். தேசத்து ஜனங்களுடைய உரிமைகளையும் சுவாதந்திரியங்களையும்பற்றிப் பரிந்து பேசினதற்காகச் சிறையில் அகப்பட்ட ஒரு பெரிய ஜனுபிமானியினது புத்திரி இவர். ஜனங்களின் சுவாதீனம் இக்காலத்தில் உள்ளது போலன்றிக் கேடுகெட்டிருந்த முற்காலத்தில் நடந்த அதிசயமான விஷயங்களெல்லாம் இவருக்கு நன்ருய்த் தெரியும். பார்லிமெண்டு மஹாஜன ஸபையில் ஜனங்களுக்குச் சுவாதந்திரியமளிக்கும் சீர்திருத்தச் சட்டத்தைப்பற்றி முதல் முதல் எடுத்துப் பேசியவர் இவரது தந்தையே. இப்பொழுது இப்பெருமாட்டி வசிக்கும் மாளிகையில் அவர் வசித்திருந்த காலத்திலேதான் அவர் சிறையாகப் பிடிபட்டது. முதலில் அவரைப் பிடிக்கச் சேவகர்களுக்கு வழியேவிடாமல் வெகுநேரம் குடிகள் வழிமறுத்துத் தடுத்தார்கள். ஆயினும் அவர் கடைசியில் காவலாட்கள் கையில் அகப்பட்டுக்கொள்ளும்படியாயிற்று. பரோபகாரமே பெரிது என்று நடந்த அவரைப் பிடித்துக்கொண்டு சென்ற காவலாட்களின்மீது ஜனங்கள் கல்லெடுத்து எறியலானுர்கள். பர்டெட் பிரபு இவ்விதமாகச் சிறையில் அகப்பட்டாராயினும் அதில் அதிககாலம் வருந்தவில்லை; கெடுக்கினும் தருமம் பழுதுபடாதாகையால் உடனே விடுபட்டுக் குடிகள் அனைவராலும் கொண்டாடத் தக்கவரானுர்."

ஆதலால் இத்தன்மையான தந்தை இறந்துபோன ஏழு வருஷங்களுக்குப் பிறகு அளவற்ற செல்வம் கிடைத்தபோது இந்த கௌட்ஸ் பெருமாட்டி முதலில் ஏழைகளைப்பற்றியே ஆலோசிக்கலானாரென்பது ஒரு அதிசயமன்று. அதே வருஷந்தான் விக்டோரியா சக்கரவர்த்தினி சிங்காதனமேறியது. இங்கிலாந்து தேசத்துச் சகலமான ஜனங்களுடைய நோக்கங்களும் இவ்விரண்டு ஒப்பற்ற உத்தமிகள் மேலேயே முதன்மையாக நிலைபெற்றிருந்தன. இவர்கள் இவற்றைக்கொண்டு என்னசெய்வார்கள் என்று அப்பொழுது ஒவ்வொருவரும் இதேபேச்சுப் பேசிக்கொண்டிருந்தனர். இப்பொழுது அறுபது வருஷங்களுக்குப் பிறகும் மாட்சிமைபெற்ற இவ்விரண்டு உத்தமிகளே பிரிட்டிஷ் ராஜ்யத்துப் பெருமாட்டிகள் பலரினும் மிகச் சிறப்புற்றுக் குன்றின் மேலிட்ட விளக்காக விளங்கினின்றனர். நமது நாதன சக்கரவர்த்தியான 7-வது எட்வர்டு மன்னவர் முன்னொரு சமயத்தில் மகிழ்ந்து கூறியதாவது, 'இங்கிலாந்து தேசத்துப் பெருமாட்டிகள் பலருள் நமது தாயாருக்கு இரண்டாவது பெருமாட்டி பாரனெஸ் பர்டெட் கௌட்ஸ்' என்னும் உத்தமியேயென வியந்து கூறினார்.

பர்டெட் கௌட்ஸ் பெருமாட்டியின் சரித்திர புத்தகத்தினது முதல் பக்கமே அதிசயங்கள் நிறைந்திருக்கின்றது. இவர் சிறுபிராயத்தில் தன் தந்தையினது பூஸ்திதியிருக்குமிடமான ராம்ஸ்பரியென்னும் கிராமத்தில் வசித்திருந்தார். இவரது பாட்டனார் ஒரு காசுக்கடைக்காரர். பாட்டியார் அற்பாயுசாக இறந்துபோகவே பாட்டனார் மறுபடி ஒரு நாடகசாலைப் பெண்ணை விவாகம் செய்துகொண்டார். அப்பால் அந்தப் பாட்டனார் இறந்துபோக, அவரது மனையாட்டி ஸெண்ட் ஆல்பன்ஸ் டச்செஸ் எனும் பட்டம் பெற்றாள். அந்த டச்செஸ் பெருமாட்டியின் மூலமாகவே நமது கௌட்ஸ்

பெருமாட்டிக்கு அவ்வளவு அதிகமான ஐசுவர்யம் கிடைத்தது. இவர் தமது பாட்டனாரது இரண்டாவது மனையாட்டியின் அளவு கடந்த அன்புக்கு இடமாயிருந்தார். ஆயினும் இதனால் இவ்வளவு ஸம்பத்து கிடைக்குமென்று எவரும் கனவிலு மெண்ணவில்லை. இப்படியிருக்க அந்த டச்செஸ் பெருமாட்டி மரணமடைந்தாள். அப்பொழுது நமது பர்டெட் என்னும் சிறுமிக்கு வயது இருபத்து மூன்று. அத்தருணத்தில் இவருக்குத் திடீரென்று 13 டன் எடையுள்ள இங்கிலீஷ் ஸவரன்கள் கிடைத்தன. அந்தப் பொருளின் மொத்தத் தொகை பதினெட்டு லக்ஷம் பவுண்டுக்கு அதிகப்பட்டிருந்ததாம்.

பிறகு பல வாரங்களளவும் இந்த கௌட்ஸ் பெருமாட்டிக்குக் கடிதங்கள் கொண்டுவருவதே தபால்காரனுக்குப் பெரிய வேலையாயிருந்தது. நல்லெண்ணமுள்ளவர்கள் ஒவ்வொருவரும் உலகத்திற் பற்பல இடங்களிலிருந்தும் இவருக்குச் சோபனவார்த்தைகளும், நல்ல புத்திமதிகளும் சொல்லிப் பற்பல கடிதங்கள் எழுதலானார்கள். தபால் வருகிற மணி ஒவ்வொன்றிலும் கலியாணஞ் செய்துகொள்ளும்படி கட்டுக்கட்டாக வந்த கடிதங்களுக்குக் கணக்கில்லை. பணமென்றால் பேயாய்ப் பறக்கிறவர்கள் இப்படி வேண்டினாலும் விவாகஞ் செய்துகொண்டு இல்வாழ்க்கை செய்யாமல் அவரது மனம் வேறொரு துறையில் இழிந்திருந்தது. அத்தேசத்தில் தாம் யாவரினும் மிகுந்த தனவந்தராகி மேலான நிலையடைந்திருப்பதை அவர் நினையாமற்போகவில்லை. பற்பல ஸங்கங்களிலும் அவர் பிரவேசித்திருந்தார். விக்டோரியா மகாராணியாருக்கு மகுடாபிஷேகம் நடந்த காலத்தில் சிறப்புற்று விளங்கியவர்களில் இவரொருவராம். அவ்வாறிருந்தும் லோகோபகாரமான மற்றும் பல காரியங்கள் செய்யப் பலருடனும் கூடிக் களிப்படையும் இயல்புடையாயிருந்தார்.

தமது கடமையைக் கருத்தாகச் செய்வதில் அவருக்கு
விருப்பமதிகம். அவருக்கு முகமறியாத மனிதர்கள் நற்போ
தனைசெய்து எழுதிய கடிதங்கள் ஸ்டிராட்டன் வீதியிலுள்ள
அவரது மாளிகையில் ஆயிரக்கணக்காக வந்து நிறைந்தபோ
திலும், அவற்றை அவர் கவனிக்கவில்லை. டியூக் ஆவ் வெ
லிங்டன் என்னும் வல்லபர் நற்போதனைசெய்யும் அந்தரங்
மான நண்பர். அத்தேசத்தில் மிகவும் மேலான பதவியி
ருந்த ஸ்திரீகளையும் புருஷர்களையுமே அவர் தம்முடை
நேசர்களின் பட்டியில் சேர்த்துக்கொண்டார். இப்பெரு
மாட்டியும் சார்லெஸ் டிக்கென்ஸ் என்கிற பண்டிதரும் லண்
டன் பட்டணத்துக் கீழ்ப்பாதியில் எளிய ஜனங்கள் வசிக்கு
தாழ்ந்த இடங்களுக்கு அடிக்கடி போய் விசாரித்து வருவ
துண்டு. "சற்சனர் உறவு சருக்கரைப்பாகுபோல்" என்றபடி
அந்தக் கவிராயரது நட்பை இப்பெருமாட்டி இன்னும் நினை
த்துக்கொண்டிருக்கிறார். இப்பெருமாட்டிக்கு ஏழைகளிட
த்தில் அநுதாபமுண்டாகிற விஷயத்தில் அவர் அதிகமா
உதவிசெய்தார். பண்டிதர் வாக்குப் பலமிருந்தால் மனோ
பலம் வருமல்லவா?

பாரனெஸ் கௌட்ஸ் பெருமாட்டியின் தருமகாரியங்
கள் பலவற்றில் டிக்கென்ஸ் அவருக்கு உதவிசெய்திருக்கி
றார். அவற்றில் முக்கியமான வொன்று ஒரு சிறு பட்டணத்
தில் ஸ்தாபித்த வித்தியாசாலைக்கு அவர் செய்த ஸகாய
மாம். அந்த வித்தியாசாலைக்கு வேண்டிய சட்டதிட்டங்க
ளெல்லாம் அவரே ஏற்படுத்திக்கொடுத்தார். தாமே வி
ரனை கர்த்தராயிருந்து, அதற்கு வேண்டிய நிலம் வாங்கி கட்
டடங்கட்டி, அதற்கு வேண்டிய சகல உபகரணங்களையும் சேக
ரித்து அமைக்கலானார். அந்தப் பண்டிதர் சிறைச்சாலைகளை
நேரில் போய்ப் பார்த்தார். மாஜிஸ்திரேட்டுகளையும் கவர்னர்
களையும் கண்டு பேசினார். பிறருடைய உதவியை வேண்டி

பல பேதைப் பெண்களுக்குத் தாம் "அடக்கமே பெண்டி
ருக்கழகு" என்பதுபோல் பணிவான சொற்களால் கடிதங்கள்
பல எழுதினார். அந்தக் கடிதங்கள் ஒவ்வொன்றும் எத்த
னையோ பொன் விலைபெறும். அந்தக் கடிதங்களை இங்கு
எடுத்தெழுதுவதென்றால் புத்தகம் மிகப் பெரிதாகிவிடும். அக்
கடிதங்கள் ஒவ்வொன்றும் கையெழுத்தில்லாமலே ஏழை ஸ்தி
ரீகளுக்கும் அனுப்பப்பட்டன. அவற்றில் எழுதியதென்ன
வென்றால், "வயிறாரப் போஜனமும், இடுப்பார வஸ்திரமு
மில்லாமல், புதிதாக ஜீவனோபாயந்தேடிப் பிழைக்க விருப்ப
முடையவர்களுக்கு ஜீவனோபாயம் தேடிக் கொடுக்க ஒரு
ஸ்தல மேற்படுத்தப்பட்டிருக்கின்றது; இங்கே எவ்விதமான
நிர்ப்பந்தமும் கிடையாது; கொடுமையான ஏற்பாடுகள் ஒன்று
மில்லை; ஒரேவிதமான உடையே யாவரும் தரிக்கவேண்டு
மென்கிற விதியுமில்லை; சென்ற நாளைப்பற்றிய விசாரமுமில்லை.
ங்கள் விஷயத்தில் உங்களைப்பார்க்கிலும் எனக்கு அதிகம்
கரித்ததாக நான் எண்ணி இதை உங்களுக்கு எழுதினேன்
ன்றாவது, உங்களுடைய நிலைமையை உங்களுக்குத் தெரி
வித்து உங்களுக்கு மனவருத்த முண்டாக்க வேண்டுமென்
கிற எண்ணமுடையவனா யிருக்கிறேன் என்றாவது நீங்கள்
ஒருபோதும் நினைக்கலாகாது. கடவுள் உங்களுக்கு அவ்விதமான
எண்ணமுண்டாக்கா திருக்கவேண்டும். கேவலம் உங்களி
டத்திலுள்ள அன்பின் மிகுதியால் உங்களை எனது சகோதரி
களாகவெண்ணி இப்படி யெழுதலானேன்" என்று முன்பின்
அறிமுகமில்லாதவருக்கு டிக்கென்ஸ் பண்டிதர் "சொற்றிறம்
பாதல் கற்றவர்க்கழகு" என்றபடி சாதுர்யமாக எழுதினார்.

இன்னும் அவர் எழுதுவதாவது,—"இந்நகரத்தில் ஒரு
பெருமாட்டி யிருக்கின்றனள். அவள் நேற்றிராத்திரி தன்
வீட்டுச் சாளரத்தினின்றும் வெளியே பார்த்துக்கொண்டிருந்
தாள். அப்பொழுது வீதிவழியே போனவள் உன்னைப்

போலவே தோன்றினள். அத்தோற்றத்தைப் பார்த்தவுடனே
அப்பெருமாட்டியின் மனம் மிகவும் உருகியது. அவ
மிகுந்த மாட்சிமைபெற்ற மாதுசிரோமணி. தன்னைப்போன்ற
பெண்பாலார் இப்படி வருத்தப்படும்படி யாயிற்றேயென்
வீதியில் சென்றவளைக் கண்ணுற்றவளவிலே 'அப்பெரு
மாட்டி மிகவும் இரக்கமும் பரிதாபமுமடைந்தவளாகி, அ
படிப்பட்ட பெண்களுக்காக ஒரு ரக்ஷகஸ்தானம் ஸ்தாபிக்
லானள். அந்த ஸ்தானம் நாட்டுப்புறம் போன்றதான ஒரு
தனித்தோட்டத்தில் அமைக்கப்பட்டிருக்கின்றது. இஷ்ட
முண்டானால் அவ்விடத்தில் ஒவ்வொருத்தியும் ஒவ்வொரு
சிறிய பூந்தோட்டம் ஏற்படுத்திக்கொள்ளலாம். அவர்கள்
அனைவரையும் அதிகமான அன்புடனே ஆதரிக்கப்படும்
ஒவ்வொருத்தியும் ரம்மியமாயும் ஆரோக்கியமாயும் சந்தோஷ
பாயும் வாழ்நாள் கழிக்கலாம்; அவசியமான பலவிஷயங்கள்
கற்றுக்கொள்ளலாம்; தங்களுடைய சுபாவமறிந்து பழகி
மனிதர்கள் பலரையும் விட்டுப் பிரிந்து வரவேண்டியிருந்
லும், இங்கே நூதனமான ஒரு ஜீவனோபாயந் தேடிக்கொண்
நல்ல யோக்கியதையையும் பிரசித்தியும் பெறலாம். அங்கேவந்
பழகித் தாங்கள் வீண்காலம் போக்கியதைப்பற்றிப் ப
சாத்தாபமடைந்து தாங்கள் செய்யவேண்டிய கடமை இன்
தென்று நன்றாய்த் தெரிந்துகொண்ட சிறுபெண்கள் மூலை
அடைபட்டிருக்க வேண்டுமென்பது அப்பெருமாட்டியி
கருத்தல்ல ஆதலாலும், அப்படிப்பட்டவர்களை உலகத்
ருடன் கூடிப் பழகும்படி செய்விக்கவேண்டுமென்பதே அ
ருடைய முதன்மையான கருத்தாதலாலும், அவர்கள் ந
ருகத் திருந்தி ஊக்கமுடையவர்களா யிருக்கின்றனரென்
பது விளங்கும்பக்ஷத்தில், அவர்களுக்கு வேண்டிய ப
பலவிதமான ஸ்தானங்களையும் தேடிக்கொடுத்து அவர்க
வெளித்தேசங்களுக்கு அனுப்பி அங்கே மிகவும் யோக்

 333 / 167

யர்களான புருஷர்களை விவாகஞ் செய்துகொண்டு அவர்க
ளுடனே சுகமாக வாழ்ந்து விசாரமின்றிக் காலங்கழிக்கும்
படி செய்யலாகும்" என்று எழுதுகிறார். சார்லெஸ் டிக்
கென்ஸ் ஒருவர்தவிர வேறு யார், இவ்வளவு சாதுரியமாய்,
ஸ்திரீகளுக்குள் ஒருவர்க்கொருவர் உண்டாக்கக்கூடிய நேசத்
தை நன்கு வெளியிட்டு இவ்விதமான கடிதமெழுத வல்லவர்
இருக்கின்றனர்? அப்படியே ஸ்திரீவித்தியாசாலையில் படித்து
நன்றாய்த் தேறியபெண்கள் இருவரும், மூவருமாகப் பலர்
வெளித்தேசத்திற்கு அனுப்பப்பட்டனர். அந்தக் கல்விச்
சாலையின் பதிவு புத்தகங்களைப் பார்த்தால், அந்தத் தருமஞ்
செய்தவர்களுக்கு அதைவிடப் போரானந்தமுண்டாக்க வே
றொன்றுமில்லை யென்னலாம். இப்படியே இப்பெருமாட்டி
இன்னும் அநேகம் உத்தம புருஷர்களுடன் நட்புச் செய்து
கொண்டு அநேகவிதமான நன்மைகள் செய்திருக்கிறார்.

எவ்வளவு பெரிய புத்தகமெழுதினாலும், இப்பெருமாட்டி
செய்த காரியங்கள் பலவற்றையும் பூர்ணமா யெடுத்தெழுத
எவராலும் சாத்தியமன்று. இவரது சரித்திரத்தில், ஜனோப
காரமான காரியங்களையும், தனித்தனி ஒவ்வொரு இனத்தா
ருடைய நன்மையை நாடிச்செய்த பல தருமங்களையும்பற்
றிய அளவற்ற உபாக்கியானங்கள் அடர்ந்திருக்கின்றன.
அவர் செய்த அநந்தமான செய்கைகளில் சிலவற்றை யாத்தி
ரமே இங்கே சுருக்கமா யெடுத்துரைத்தோம். அவரது சுய
மான யோக்கியதையையும், சொந்தமான காரியங்களையும்பற்றி
எடுத்துரைக்க இங்கு இடமேயில்லை. அவர் வாய்திறந்து
பேசுவதைக் கேட்கையிலேயே அவரது அற்புதமான வாசா
லகத்துவமும், தட்டுத்தடையின்றிச் சொற்கள் சித்தமாகப் புங்
கானுபுங்கமாய்ப் பிரவகித்து வருவதும் நன்கு விளங்கும்.
தாம் செய்த பற்பல நன்முயற்சிகளை அந்தந்தச் சமயங்களில்
அவசியமாக எடுத்துரைக்க வேண்டியதாக நேரிட்ட தீர்ப்பக்

தத்திற்காகவே இந்த விசித்திரமான சாமர்த்தியத்தை அவர் விருத்திபண்ணிக்கொண்டார்.

மற்றும் பல விஷயங்களுக்குள் இப்பெருமாட்டிக்கு முக்கியமாக பிரிட்டிஷ் இராஜ்யத்தினிடத்தில் அபிமானம் மிகவும் அதிகம். ராஜ்ய தந்திர நிர்வாகப் பயிற்சிப் பாடசாலை யேற்படுதற்கு வெகுநாள் முன்னமே இப்பெருமாட்டி வெளிநாடுகளுக்கு யோக்கியர்களான ஸ்திரீகளையும் புருஷர்களையும் அனுப்பி, அங்கெல்லாம் அங்கிலேய அரசாட்சியை ஸ்தாபிக்க அடிகோலினார்.

இவர் தமது சொந்தமான வாழ்க்கையைப்பற்றிச் செய்துகொண்ட ஒரு அதிசயமான செய்கையை மாத்திரமே இங்கு எடுத்துரைக்கச் சாத்தியப்படும். இவர் "அறனெனப் பட்டதே யில்வாழ்க்கை" என்பதையறிந்து தமது அறுபத்தேழாவது வயதான 1881-ம் ௵ முப்பது வயதுள்ள தமது நண்பரான மேஸ்தர் வில்லியம் பர்டெட் என்பவரை விவாகம் செய்துகொண்டதே அவ்வதிசயமான செய்கையாம். இந்த விவாகத்தை இன்னும் விசித்திரமாகச் செய்யவல்ல அற்புதமான கதையொன்று சொல்வதுண்டு. அதென்னவென்றால், இப்பெருமாட்டி பல வருஷங்களுக்கு முன்னே ஏதோ ஒரு பாடசாலையிலுள்ள பிள்ளைகளை அவர்களுக்கு இஷ்டமான ஒருதினத்தில் தம்வீட்டிற்கு வந்து விருந்துண்ணும்படி கேட்டுக்கொள்ள, ஒரே ஒரு பிள்ளைமாத்திரமே வந்தானாம். அவன் இந்த வில்லியம் பர்டெட் என்பவனேயாம் என்று அக்கதை சொல்லுகிறது. இது முற்றும் கட்டுக்கதையே. இது பலநாளாகச் சொல்லப்பட்டுவந்தாலும், இதில் அணுவளவும் உண்மையானதன்று. இவ்வாறே இவர் கௌட்ஸ் பெருமாட்டியினது காசுக்கடையில் உத்தியோகமா யிருந்தாரென்பதும் உண்மையன்று. கௌட்ஸ் பெருமாட்டிக்குக் கீழ்ப்பட்டு இவர் எந்தவிதமான வேலையும் செய்தவரன்று. டர்க்கியில்

யுத்தம் நடந்தபோது வருத்தமுற்ற குடிகளுக்காக இப்பெருமாட்டி சிலநாளைக்குள் 30,000 பவுண்டு திரவியம் சேகரித்தார்; அப்பொழுது இவர் அத்தேசத்தைப் பார்க்கப்போனதும், பிறகு 1880-ம் ௵ பஞ்சமுண்டானபோது அயர்லாந்து தேசத்துமேலண்டைப் பாகத்திற்கு யாத்திரைபோய் வந்ததும் அவர் தாமே வேண்டுமென்று உபகாரமாகச் செய்த காரியங்களாம். பின் என்னவெனில், சிறுபிராயம் முதற்கொண்டே அவர் இந்தப் பாரனெஸ் பெருமாட்டிக்கு அந்தரங்க நேசராயிருந்தார். அன்றியும் இப்பெருமாட்டி செய்யத்தொடங்கிய பற்பலவிதமான நற்காரியங்களிலும் மிகவும் பிரியமுள்ளவராயிருந்தார். இந்த விவாகம் இங்கிலாந்து தேசத்தார் அனைவருக்கும் அதிகமான வியப்பை உண்டாக்கியதாயினும், அதைவிட வேறுவிதமான ஏற்பாடு செய்துகொள்ள அவரால் ஸாத்தியப்படாமற் போயிற்றென்று தெளிவாக விளங்குகின்றது. இந்தக் கௌட்ஸ் பெருமாட்டி மிகவும் சுகமாயிருந்த தனது வாழ்நாளில் தம் கணவனோடு கூடிவாழும் கடைசி பதினொரு வருஷகாலமே மிகச் சிறந்தகாலமென்று அவரை இளமைமுதற்கொண்டு அறிந்த ஒரு நண்பர் சொல்லுகிறார். மேஸ்தர் கௌட்ஸ் என்பவரைப்போலத் தன் பாரியையினிடத்தில் அவ்வளவு அதிகமான பிரீதியும், விசுவாஸமுமுடைய பர்த்தா வேறொருவருமில்லையென்னலாம்.

"அன்பு மறனு முடைத்தாயி னில்வாழ்க்கை
பண்பும் பயனு மது."

தமது அற்புதமான ஸாமர்த்தியங்களுக்காக விக்டோரியாளிடம் பியர் என்னும் பட்டம் பெற்ற இப்பெருமாட்டி இப்பொழுது 86 வயதுள்ளவராயிருந்தும், காரியம் செய்வதில் மிகுந்த பாலியப் பருவமுள்ளவராகவே யிருக்கின்றார். அவர் கைகள் எப்பொழுதும் இளைப்படைவதில்லை. நாம் அவரிடத்தில் எவ்வளவு நன்றிபாராட்டக் கடமைப்பட்டிருக்

கிறேமோ, அது நமக்கே தெரியாது. அவரிடத்தில் எத்தனையோ ஆயிரம் பிரஜைகள் நன்றிசெலுத்தக் கடமைப்பட்டவரா யிருக்கின்றனர். இப்படி இவரைப்போல மகாராஜா முதல் ஏழைஜனங்கள் வரையுமுள்ள அனைவராலும் அன்புடனே அபிமானித்துக் கொண்டாடத்தக்கவர், விக்டோரியா மகாராணியார் ஒருவர் நீங்கலாக, வேறொரு பெண்மணி இவ்வுலகில் எவ்விடத்திலுமில்லை.

MARY CARPENTER.

MARY CARPENTER.

(The Friend of Female Education in India)

1807–1877.

மேரி கார்ப்பெண்ட்டர்

என்னும்

ஸ்திரீ வித்தியாபிமானி.

மேரி கார்ப்பெண்ட்டர் என்னும் உத்தமியின் சரித்திரம், இந்துதேசத்துப் பெண்பிள்ளைகளுக்கு நற்புத்தியும் நல்லொழுக்கமும் போதிப்பதற்குச் சிறந்த மேல்வரிச் சட்டமாக விளங்குகின்றது. தாய்க்கு மக்களிடத்தி லுள்ளது போலத் தமக்கு இந்துதேசத்துப் பெண்பிள்ளைகளிடத்தில் அன்பு உள்ளதாக அப்பெருமாட்டி தாமே கூறியிருக்கிறார். அவர்களுக்காக அவர் தாம் பட்ட பிரயாஸங்களாலும், அடுத்தடுத்து நான்குதடவை இந்துதேசத்திற்கு வந்து, "ஐங்காதம் போனாலும் அறிமுகம் வேண்டும்" என்றதுபோல் பலரைக் கண்டு நேசித்துத் தாமே வேண்டிய காரியங்களை நேராக நடத்தியதாலும், தாம் தாயைப்போன்ற அன்புள்ளவர் என்று வாயினாற் சொன்னதைச் செய்கையிலும் பிரத்தியக்ஷமாகக் காட்டினார். அவர் இந்தியாவுக்கு எப்பொழுது வந்தார் என்கிறீர்கள்? "இனிமேல் ஒருவேலையும் செய்ய முடியாது; இனி மற்றக்காலத்தை எங்கேயாயினும் ஏகாந்தமாகச் சுகமே கழிக்கவேண்டும்" என்று மற்றவர்கள் நினைக்கும்படியான தள்ளாத வயதிலேயாம்.

இந்த மேரி கார்ப்பெண்ட்டர் 1807-ம் ௵ ஏப்ரல் ௴ 3௳ இங்கிலாந்தில் எக்ஸிடர் என்னும் கிராமத்தில் பிறந்தவள். இவளோடுகூடப் பிறந்தவர்கள் மூன்று பெண்களும்,

மூன்று பிள்ளைகளுமாக ஆறுபேர். அவர்களில் இவளே மூத்தவள். வீட்டில் பெரியபெண் மேற்போட்டுக்கொண்டு செய்யவேண்டிய காரியங்களில் இவள் எப்பொழுதும் சற்றேனும் பாராமுகமாயிருந்ததாகத் தெரியவில்லை.

இவளுடைய தகப்பனாரான டாக்ட்டர் ரஸ்ஸல் லாண்ட் கார்ப்பெண்ட்டர் என்பவர், அங்கிலேயமதச் சபைக்கொள்கையை அநுசரியாத ஒரு மதாசாரியர். அவர் பிறப்பிலேயே தெய்வபக்தி குடிகொண்டவர். இவரும் இவருடைய மனையாளும் தம்மால் கூடியவரையில் பாடுபட்டு, தமது குழந்தைகளைச் சீராக வளர்த்து "இளமையில் முயற்சி முதுமையிற் காக்கும்" என்னும் மூத்தோர் சொற்படி அவர்களுக்குத் தெய்வபக்தியும், அண்டையயல் மனிதர்களிடத்தில் அன்பும் இயற்கையிலேயே உண்டாகும்படி செய்துவந்தார்கள். இந்த அன்புள்ள தந்தையாரிடத்திலேதான் இப்பெருமாட்டி முதலில் வித்தியாப்பியாசம் செய்யத் தொடங்கியது. அப்பொழுது கல்வியழகே அழகென்று நினைத்து அத்தந்தையார் போதித்த போதனைசக்தியே இப்பெருமாட்டிக்கு வாழ்நாள் முழுவதும் வழிகாட்டிவந்தது.

இவளுடைய தாயார் தனது ஆயுள் முடிவுவரையில் தினசரிக் குறிப்பு ஒன்று எழுதிவந்தாள். அந்தக் குறிப்புப் புத்தகத்தில் அவளது மூத்த மகளின் இளமைப்பருவத்தில் உண்டான சில விசேஷங்கள் குறிக்கப்பட்டிருக்கின்றன. இப்பெருமாட்டி இளமை முதற்கொண்டே மிகுந்த சாமர்த்தியமும் பரோபகார சிந்தையுமமைந்த உத்தமியாயிருக்க வேண்டுமென்று அதனால் விளங்குகின்றது. இரண்டாவது குழந்தை பிறந்தவுடனே தாயார் மூத்தமகளைப்பற்றி யெழுதியிருப்பதாவது: "இந்தச் சிறிய அறிவாளியின் சிரிப்புண்டாக்கத்தக்க செய்கைகளும், சாதுரியமான பேச்சுக்களும், நான் சந்தோஷமாயிருந்தாலும் வெறுப்பாயிருந்தாலும் எப்பொழு

தும் நான் அவளுடனே பொழுதுபோக்கும்படியான மனமகிழ்ச்சியுண்டாக்கின. அப்படிச் செய்யாவிட்டால், ஆட்டுக்குட்டியின் அழகான செய்கைகளையே பார்த்து நான் பொழுதுபோக்கியிருப்பேன். சிறு குழந்தையான மேரிக்கு நான் அறிவாளி என்று பேரிட்டுச் சொன்னது உங்களுக்குச் சற்று ஆச்சரியமாயிருக்கலாம். ஆனால், அது நான் வைத்த பேரல்ல; அக்குழந்தை தானே வைத்துக்கொண்ட பேர். சில நாளைக்கு முன்னே மேரி என்று பெயரிட்டு அழைப்பது அச்சிறுமிக்குச் சந்தோஷமாயிருந்தது. அதன்பின்பு தன்னை மிஸ். மேரி என்று பெயரிட்டு அழைக்கும்படி வேண்டிக்கொண்டாள். அதுவும் தகாதென்று அப்புறம் மிஸ். கார்ப்பெண்ட்டர் என்று பேர் கூறும்படி கேட்டுக்கொண்டாள். கடைசியாக அதுவும் தனக்குச் சரியானபேரல்லவென்று தனது தாதியுடன் சொன்னாள். அதுகேட்டுத் தாதி, ஆனால், உன்னை நான் வேறே என்ன பெயரிட்டு அழைக்கிறதென்று கேட்க, டாக்ட்டர் (=அறிவாளி) கார்ப்பெண்ட்டர்என்று பெயரிட்டு அழைக்கவேண்டும் என்று சொன்னாள்" என்பதாம்.

இவள் குழந்தைப்பருவத்திலே பதுமைகளிடத்தில் அதிகமான ஆசைகொண்டு அவைகளை வைத்துக்கொண்டு குற்றமற்ற விளையாட்டுக்கள் விளையாடிவந்தாள். அவள் தனக்கு வயதுவந்தகாலத்தில் எவ்வளவு ஊக்கத்துடனே மற்ற வேலைகளைச் செய்யத்தொடங்கினாளோ, அதே ஊக்கத்தோடு அச்சிறுவயதிலும் பொம்மைகளுக்கு உடுப்புத் தைத்து அழகு செய்வது முதலான காரியம் செய்துவந்தாள்.

தாய் தனது தினசரிப் புத்தகத்தில் மற்றொரு சங்கதி எழுதி வைத்திருக்கிறாள். அது கேட்போர் அனைவரும் வியக்கத்தக்கதாயிருக்கும். அதனால், குழந்தைக்கு நற்குணம் வா[illegible] பொழுதே அரும்பிக்க ஆரம்பித்ததென்று கண்டு தாய் மனமகிழ்ந்தாளென்று [illegible] விளங்குகின்றது. அதாவது,

"கோடைகாலத்தில் நன்றாக வெயில் காய்ந்துகொண்டிருந்த ஒருநாள், கார்ப்பெண்ட்டர் பண்டிதர் தம் இரண்டு பெண்குழந்தைகளுடனே வெளியே உலாவிவரும்படி புறப்பட்டு, புதிதாகப் புல் அறுத்துப்போட்டிருந்த ஒரு புலத்திற்கு அப்பெண்களை அழைத்துக்கொண்டு போனார். சாதாரணமான மற்றப் பிள்ளைகளைப்போல அன்னி என்னும் இரண்டாவது மகள் வெயிலில் குளிர் காய்ந்துகொண்டு வினோதமாயிருக்கிற அத்தருணத்தில், மதுரமான இளம்புல் போரின்மேல் விழுந்து புரண்டு விளையாடிக்கொண்டிருந்தாள். மேரிக்கோ அப்படிப் புரள்வது சிறிதும் சம்மதமில்லை. "நான் ஏதாவது சகாயம் செய்யவேண்டும், நான் ஏதாவது சகாயம் செய்யவேண்டும்" என்று கூவினாள். அதைக்கேட்டுத் தந்தை அண்டையிலிருந்த வேலியில் ஒரு கொம்பு தறித்துக் கொடுத்த பிறகுதான் அவளுடைய மனம் திருப்தியடைந்தது. அந்தக் கொம்பைக் கையில் வாங்கிக்கொண்டு அச்சிறுமி, புலத்தில் வேலை செய்பவர்கள் செய்வதைப் பார்த்து அவ்விதமாகவே, தானும் தன் தங்கை இறைத்து விட்ட புற்களையெல்லாம் கூட்டி ஒன்றாகச் சேர்க்கலானாள்" என்பதாம்.

"கை உண்டானது கற்றவர்களுக்குத்தானே" என்பது போல் இளமைப் பருவத்திலேயே கற்று அறிந்த மேரி கார்ப்பெண்ட்டருடைய திறமைகளெல்லாம் தாமே நன்றாக விளங்கலாயின. இவளுடைய தாய் தகப்பன்மார் இருவரும் கல்வி கற்பிப்பதில் மிகத் தேர்ச்சி பெற்றவர்கள். அதனால் அவர்களின் மகளுடைய படிப்பு வெகு சீக்கிரமாக விருத்தியடைந்து வந்தது.

1817-ல் அந்தக் குடும்பம் எக்ஸிடாரிலிருந்து பிரிஸ்ட்டல் பட்டணம் போய்ச் சேரும்படியாயிற்று. அப்பொழுது மேரியாளுக்கு வயது பத்திற்கு அதிகமில்லையாயினும், அவ்விடத்திலுள்ள ஜனங்களுக்கு உபகாரமான நன்மைசெய்யும்

பொருட்டுத் தகப்பனார் மேற்கொண்ட முயற்சியில் இச்சிறுமி தானும் ஆலைசெய்யத் தொடங்கினதாகத் தெரியவருகிறது. அவர் ஏற்படுத்திய பாடசாலையில், மற்றப்பிள்ளைகளுடனே மேரியாளும் படிக்கத்தொடங்கி, லத்தீன், கிரீக் பாஷைகளும், கணிதசாஸ்திரமும் கற்றுக்கொண்டாள். இவ்வளவோடு திருப்திகொள்ளாமல், பிரகிருதி சரித்திரம், பிரகிருதி தத்துவசாஸ்திரம் முதலானவைகளும் கற்கவேண்டுமென்கிற விருப்பம் அவளது மனத்தில் குடிகொண்டிருந்தது. அந்தக் காலத்தில் இங்கிலாந்திலேகூட இப்படிப் பற்பலவிதமான விஷயங்களைப் படிக்க மற்றெந்தப் பெண்களும் முயற்சி செய்ததில்லை. இவைகளோடுகூடத் தந்தையின் பாடசாலையிலுள்ள பிள்ளைகள் படித்த வேறுபல விஷயங்களையும் அவள் கற்றறிந்ததாகத் தெரியவருகிறது. "கண்டதைக் கற்கப் பண்டிதராவார்" என்றபடி அவளுக்கு ஒவ்வொரு விஷயத்திலுமிருந்த ஆசையும் புத்திகூர்மையும் அவளை எல்லா விஷயங்களிலும் விசேஷமாக விருத்தியடையச் செய்தன. ஆதலால், அவள் அதிசீக்கிரத்திலே தன் தந்தைக்குப் பாடசாலைக்காரியத்தில் உதவிசெய்யும்படியான சாமர்த்தியமுடையவளாயினாளென்பது ஒரு ஆச்சரியமன்று. அவர் பிள்ளைகளுக்குப் படிப்பிப்பதற்கும் இவள் எப்பொழுதும் உதவியாயிருந்தாள். "ஆலை விழுது தாங்குகிறது" போல் அவருக்குத் தேகம் அசௌக்கியமாயிருக்கிற காலத்தில் அவருடைய ஸ்தானத்திலு மிருந்து நிர்வகிக்கலானாள். தனக்குச் சரிவயதான புருஷப் பிள்ளைகள்நிறைந்த மிகப்பெரிதான பாடசாலையில் அவள் அத்தனை பிள்ளைகளும் வணக்கமுடைமையுடன் அடக்கமாகத் தான் சொல்வதைக் கேட்டறியும்படி செய்துவந்தாளென்பதைக் கேட்கையிலேயே அவளது சாதுரியமும் சாமர்த்தியமும் இத்தன்மையனவெனத் தெளிவாக விளங்கும். இப்படியிருக்கையில் டாக்டர் கார்ப்பெண்டருக்குத் தேக

சௌக்கியம் குறைவுபட்டது. அப்பொழுது அவருடைய மூத்தமகளுக்கு வயது இருபத்திரண்டு. தேகம் அசௌக்கியப்பட்டதனால் அவர் படிப்பிக்கிற தொழிலைவிட்டு, மதவிஷயபோதனை ஒன்றைமாத்திரமே மேற்கொண்டிருக்க வேண்டியதாயிற்று.

இந்தக் காலத்தில் மேரியாள் வீண்பொழுது போக்கவில்லை. 1827-ம் வருஷத்தில் அயல் அவ் உவைட் என்னும் இடத்திலே அவள் சில சிறுபெண்களைச் சேர்த்துக்கொண்டு அவர்களுக்குப் படிப்பிக்கலானாள். இப்பொழுது தந்தையின் துணையில்லாமல் தன்புத்தியே துணையாகக் கொண்டு படிப்பித்தாள். சிலநாள் கழித்து அவள் பிரிஸ்டல் பட்டணம் போய்ச் சேர்ந்தாள். அங்கே இன்னும் சில வேறு வித்தியார்த்திகள் வந்துசேர, இன்னும் அதிகமான ஊக்கத்துடனே அவர்களுக்குக் கல்விப்பயிற்சி செய்வித்து வந்தாள்.

இப்படியிருக்க ஒரு சமயத்தில் கண்ணோவு உண்டாகி அதனால் அவள் அதிகமாக வருத்தப்படலானாள். கண்ணே போய்விடுமோவென்றுகூட அச்சப்படும்படியாக இருந்தது. அப்படிப்பட்ட குணபூஷணியான பெண்மணிக்கு இந்தக் கொடியநோய் வரத்தகுமா? நல்லகாலமாய் அந்தக் கொடிய நோய் குணமாகிவிட்டது. அவள் நோயினால் வருந்தின பொழுது நிமிஷங்கூட அவளை விட்டுப்பிரியாமல் அவளது தங்கை அன்னி யென்பவள் கூடவேயிருந்து கண்ணை இமை காப்பதுபோல் அன்புடனே உபசாரம் செய்துவந்தாள். அதைப்பற்றி மேரியாள் தானே சில பாட்டுக்கள் எழுதியிருக்கிறாள். அவள் செய்த பாட்டுக்களையெல்லாம் எடுத்தெழுத இங்கு இடமில்லாமையால், அதற்கு நிதர்சனமாகச் சிலவற்றின் கருத்தைமாத்திரம் சுருக்கமா யெழுதுகிறேன்.

“சிறிதும் சந்தோஷமில்லாமல் இரண்டு சகோதரிகள் ஒரு இருண்ட அறையில் உட்கார்ந்திருந்தனர். மூத்தவள் நோய்

வருத்தம் பொறுக்கமுடியாமல், “இனி நமக்கு நல்ல பொழுது கூட விடியுமோவென்று விசனப்பட்டுக்கொண்டிருந்தாள். வெயிலென்றால் அவளுக்கு விஷமாயிருந்தது. இருள் மூடின அவ்விடத்தில் தலையைத் தொங்கவிட்டுக்கொண்டு உட்கார்ந்திருந்தாள்.

மற்றொருத்தி அழகே உருவமெடுத்து வந்தது போன்ற அருமைச் சிறுமகள். அச்சிறுமி தனது விளையாட்டுக்களை யெல்லாம் விட்டு, பிரீதியும் பரிதாபமுமாக அக்காளண்டை உட்கார்ந்து அவளுக்கு இனிப்பாகப் புத்தகம் படித்துவந்தாள். அவளது பேச்சிலேயே இரக்கமும் அன்புமமைந்திருந்தன. அவளது இனிய குரலைக் கேட்டு அந்தநோயாளியே உள்ளமுருகி, வெகு வருத்தப்பட்டுத் தலையைத் தூக்கித் தன் அருமைத் தங்கையின் அழகிய முகத்தை நோக்கினாள். சாளரத்தின் வழியாக நுழைந்துவந்த சூரியகிரணத்தில் அவளது சோதிமுகம் சுந்தரமாக விளங்கியது. மூத்தவள் இராத்திரி காலங்களில் நோய் அதிகமாகி நித்திரையில்லாமல் தவிக்கையிலும், பகலிலும் அந்தகாரத்தில் பொழுதுபோகாமல் புலம்புகையிலும், சிறுமகள் சாந்தமாக உபசாரம்செய்து சமாதானப் படுத்திவந்தாள். கண்ணைத் திறக்க முடியாத கஷ்டகாலத்திலும் தன் தங்கையினது அழகிய முகத்தை மனதில் நினைத்துக்கொண்டு வருத்தந்தீர்ந்தாள்” என்னும் இக்கருத்தடங்கிய பாட்டை யெழுதியிருக்கிறாள்.

அன்னி யென்கிற அந்தச் சகோதரியினது நேசமானது மேரியாளுக்கு வாழ்நாள் முழுவதுமே நீங்காத் துணையாயிருந்தது. மூத்தமகள் தன்னிடத்திலுள்ள குறைபாடுகளை நினைத்துப் பலதடவை விசனப்பட்டு இருக்கிறாள். கண்டவர் மனதைக் களிக்கச் செய்யும்படியான தன்மை தன்னிடத்திலில்லையென்றும், தனக்கு நண்பர்கள் அதிகமாகச் சேராமைக்கு அதுவே காரணமென்றும் அவளுக்கே நன்றாக விளங்கியது.

உண்மையிலேயே அவ்விருவரிலும் அன்னியென்பவள்
கண்டோர் கண்களைக் கவரும்படியான அழகு வாய்ந்தவள்.
மேரியாளுக்கு அது இல்லை. அன்னிக்கோ மேரியாளுக்கு
இருந்த புத்தியுமில்லை; இளமை முதற்கொண்டு பரோபகாரம்
செய்வதே பெரிய காரியமெனக் கொண்டிருந்த மனோதைரிய
மும் உத்தமகுணமுமில்லை.

பிறரை வடிவத்தினால் வசிகரிக்கும்படியான சிறப்பில்லா
விடினும், பேச்சினால் எவரையும் சுவாதீனம் செய்துகொள்
ளும்படியான சொற்றிறமும் சாதுரியப்பேச்சும் தெய்வாதீன
மாக மேரியாளிடத்தில் அமைந்திருந்தன. இவற்றோடு தன்
னிடத்திலுள்ள குற்றங்களும் இவையென்பது அவளுக்கு
நன்றாகத் தெரியும். அவள் தன் குற்றங்களைத்தானே கண்
டறிந்து அதற்காக மிகவும் விசனப்பட்டிருக்கிறாள். "இள
மைக்குற்றம் கண்ணுக்குத் தெரியாது" என்பது உண்மை
தான்; இந்த விஷயம் அவள் எழுதிய பத்திரிகையினாலேயே
பிரசித்தமாகத் தெரிகின்றது.

"அசலார் குற்றம்போல் தன் குற்றம் பார்த்தால், பின்
தீது உண்டோ மன்னுயிருக்கு" என்பதுபோல இப்படி
ஒருவன் தன்னிடத்திலுள்ள குணதோஷங்களை ஆய்ந்தோய்ந்து
பார்ப்பது எவருக்கும் நல்லதுதான். ஆயினும் அது மிதம்
மிஞ்சா திருக்கவேண்டும். அளவுக்கு மிஞ்சினால் அமுதமும்
நஞ்சன்றோ? நம்மில் அநேகர் இப்படித் தம்மனத்திற்குள்
மறைந்து கிடக்கின்ற குற்றங்களை வெகுவாய் உற்றுப் பார்ப்ப
தேயில்லை; தம்மிடத்திலுள்ள குற்றங்குறைகளை உற்றுப் பார்க்
கிற சுபாவம் சிலருக்கு இருக்கின்றதாயினும், அவர்கள் வேறு
சிந்தையின்றித் தம்மிடமுள்ள குறைகளையே நினைத்து
நினைத்து வருந்துகிறார்கள். அந்த நினைப்பு அவர்களுக்கு
மென்மேலும் மிகுந்த அதைரியமும் அதிகமான விசனமு
முண்டாவதற்குக் காரணமாகின்றது. அது அவர்களுக்கு

மாத்திரமேயன்றி அவர்களைச் சூழ்ந்திருப்பவர்களுக்கும் சந்
தோஷமின்றி வீணான வருத்தத்தை உண்டாக்குகின்றது.
அப்படியே, இந்த எண்ணத்தினால் மேரியாளுக்கிருந்த மன
மகிழ்ச்சியும் குறைந்துபோகலாயிற்றென்பதில் சந்தேகமில்லை.
ஆயினும், அந்நியர்களுக்கிருந்த செருக்கும் தம்மிடமுள்ள
தோஷங்களை நினையாமையும் இவளிடத்திலில்லாமலிருந்தது
பெரிய பாக்கியம். அதனோடு சிறந்த புத்தியும் சாமர்த்தி
யமும் கடவுள் கொடுத்திருப்பதற்காக அவள் மிகுந்த நன்றி
யுள்ளவளாகி, கடவுள் அளித்த அந்த சக்திகளை அவள்
வெகு பிரயாசப்பட்டு மேன்மேலும் விசேஷமாக விருத்தி
செய்துகொண்டாள்.

அவள் தனக்காகவே எழுதிய ஒரு பத்திரிகையில் தான்
கற்றறிந்தவைகளையெல்லாம் வரிசையாக அடுக்கி யெழுதியி
ருக்கிறாள். அதென்னவெனில், "நான் கற்றறிந்த விஷயங்க
ளாவன: பிரஞ்சு பாஷை எனக்கு நன்றாகத் தெரியும்.
கிரீக், லத்தீன், இத்தாலியன் இப்பாஷைகளைப் படித்துப்
பொருள் தெரிந்துகொள்ளத் தெரியும். கடைசியாகச்சொன்ன
இரண்டு பாஷைகளைத் தட்டாமல் படிப்பேன். இப்பொழுது
தான் ஜர்மனி பாஷை படிக்கத்தொடங்கினேன். பிரகிருதி
தத்துவசாஸ்திரம், ஜந்துலக்ஷண சாஸ்திரம், கனிஜவஸ்து
சாஸ்திரம், பூமி தத்துவசாஸ்திரம் ஆகிய இவைகளிலும்
வேண்டிய விஷயங்களைத் தெரிந்துகொள்ளும்படி போதுமான
வளவு கற்றறிந்திருக்கிறேன். க்ஷேத்திர கணிதம், பீஜகணி
தம் இவைகளும் சிறிதளவு தெரியும். அவைகளைக் கற்க
வேண்டுமென்கிற ஆசை எனக்கு மிகவும் அதிகம். அப்
படியே சரித்திரம் படிக்கவேண்டுமென்கிற ஆசையும் எனக்கு
அதிகமாயுண்டு. ஆயினும் அதில் அவ்வளவு மிகுதியாகப்
பழகவில்லை. சித்திரம் வரையவும் பயின்றேன்; ஆனால்
அவ்வளவு திருத்தமாகக் கை பழகவில்லை. சங்கீதமும் கற்றுக்

சங்கீத சாஸ்திரத்தின் முக்கியமான அம்சங்களையும் ஒரு
வாறு உணர்ந்தேன். ஆயினும் கடைசியில் ஐந்து வருஷங்க
ளாக அதை முற்றும் உபேக்ஷை செய்துவிட்டேன்" என்று
இவ்விதமாக எழுதி, பின்னும் தன் மனதில் ஒவ்வொரு
மூலை முடக்குகளிலும் நுழைந்து அங்குள்ள ஒவ்வொரு
எண்ணங்களையும் விவரமாக எடுத்துக் காட்டுகிறாள். ஆனால்
இப்படி காட்டியது "எனக்கு எதிரில்லை, எனக்குப் பத
ரில்லை" என்று தற்புகழ்ச்சி செய்ய எழுதியது அன்று.

அவள் இவ்விதமாகப் புதிய வழியில் வாழ்நாள் கழிக்
கத் தொடங்கியது அழகுதான். தனக்கு எப்படிப்பட்ட
சங்கடங்கள் நேர்ந்தாலும் அவற்றைச் சிறிதும் எண்ணாமல்
அலக்ஷியம் செய்திருந்தது அதினுமழகான குணம். "போதும்
என்கிற மனமே பொன் செய்யும் மருந்து." தான் கலியாணஞ்
செய்துகொள்வது கடவுளுக்குத் திருவுள்ளமில்லையென்று
கொண்டு கலியாணம் செய்துகொள்ளவேண்டுமென்கிற எண்
ணத்தையும் ஆசையையும் சிறிதும் கொள்ளாமலே ஒருபுற
மாக ஒதுக்கிவிட்டிருந்தது எல்லாவற்றிலும் உத்தமமானதே.

கடைசியாக அவள் 1832-ம் வரு இங்கிலாந்திலே விசை
பேதி கண்டபோது, விர்த்தினமாக ஏற்படுத்திய ஒருநாள்
தன்னைக் கடவுளுக்கே அர்ப்பணமாகச் செய்து சயாயத்தைச்
சிறிதேனும் பாராட்டாமல் லோகோபகாரமான வேலைகள்
செய்தே காலங்கழிக்கவேண்டுமெனத் தீர்மானஞ்செய்கிறாள்.
அதாவது, "கடவுளுக்கு முன்னிலையில் யாவரும் தமக்
குள்ள தெய்வ பத்தியையும் தரும சிந்தையையும் வெளிப்
படுத்துவதற்காக ஏற்படுத்திய இந்தத் தினத்தில், பிறர்க்கு
உபகாரம் செய்வதிலேயே என் காலம் கழியவேண்டுமென்
பது என் மனப்பூர்வமான எண்ணம் என உறுதியாகச் சொல்
லுகிறேன். கடவுள் தமது கிருபையாகிய நல்லொளியைக்

காடுத்து என்னை நல்வழியில் நடத்தவேண்டுமெனப் பிரார்த்
திக்கின்றேன்" என்று உறுதியாகக் கூறினாள்.
இவ்விதமாக அவள் கொண்ட தீர்மானங்கள் நிறைவே
றிய வகை இப்படிப்பட்டதென்பது பின் குறிக்கும் சிறு
கதையினால் தெளிவாக விளங்கும்.
இவளது தந்தையான டாக்டர் கார்ப்பெண்ட்டர் தான்
வைத்திருந்த ஆண்பிள்ளைப் பள்ளிக்கூடத்தை எடுத்துவிட்ட
பின்பு, அவரது மனையாளும் மகளுமாகிய இருவரும் பெண்
பிள்ளைகளுக்காக ஒரு பள்ளிக்கூட மேற்படுத்தி, பல வருஷ
காலம் அதைப் பரிபாலித்து வந்தார்கள். ஆயினும் அவர்
களுடைய காலம் முழுமையும் இந்தக் காரியத்திலேயே
ஒழிந்துபோகவில்லை. தங்களைச் சுற்றிலுமுள்ள ஏழைகளும்
திக்கற்றவர்களுமான பல பேதை ஜனங்களுக்குப் பலவித
மான உபகாரம் செய்யவும் அவர்களுக்குப் போதுமான
அவகாசம் கிடைத்திருந்தது. புதிதுபுதிதாக ஏற்பாடுகள்
தோன்றுகிற மேரியாளுடைய மனதில் ஏழைகளைக் காப்
பாற்ற நூதனமான ஆலோசனை ஒன்று தோன்றியது. அவள்,
'தீனஜன போஷண சபை' என்று ஒரு சபை ஏற்படுத்தி,
அதற்காகப் பல நண்பர்களிடம் போய் வேண்டி அவர்களை
யும் அந்தச் சபையில் சேரும்படி செய்தாள். அதிற் சேர்ந்த
ஒவ்வொருவரும், தேகம் பலவீனப்பட்டவர்களுக்கும், நோயி
னால் வருத்தப்படுகிறவர்களுக்கும் அவசியமான பண்டங்
களைத் தேடிக் கொடுப்பதே தமக்குத் தொழிலாகக்கொண்டி
ருந்தார்கள். ஆடையில்லாதவர்களுக்கு ஆடைகள் வாங்
கிக்கொடுக்கவும், நோயாளிகளின் நோய்களைத் தீர்க்கும் வழி
களைத் தேடவும், பலதரம் கூட்டங்கூடிப் பேசினார்கள்.
• கல்கத்தாவாசியாகிய ராஜா ராம்மோஹன்ராய் என்பவர்
இங்கிலாந்திற்குச் சென்றது, நமது கார்ப்பெண்ட்டர் பெரு
மாட்டியின் கொள்கைகள் பின்னும் மேன்மைப்படுவதற்கு

ஏதுவாகியது. தெய்வபக்தி அதிகரித்தவரான இந்த ராம் மோஹன்ராய், டாக்டர் கார்ப்பெண்ட்டருடைய காரியங்களைக் கண்டு மிகவும் கொண்டாடி அவரை நேராகவே காணப் போனார். அந்த டாக்ட்டர் கார்ப்பெண்ட்டரும் அவ்விடத்திற்கு வரும் அவருடைய மற்றும் பல நண்பர்களும் இவரை வரவழைத்து மிகவும் கொண்டாடினார்கள். "மனப்பொருத்தம் இருந்தால் மற்றப்பொருத்தம் பார்க்கவேண்டுமோ" என்பது நமது நாட்டுப்பழமொழியல்லவா?

மேரி கார்ப்பெண்ட்டரது அருமை பெருமைகளைச் சொல்லப்புகுந்த இச்சிறு புத்தகத்தில் ராம் மோஹன்ராயினது கொள்கைகளையெல்லாம் எடுத்துக்கூற இடம் கிடைக்காதன்றோ? அவர் பிரிஸ்ட்டல் நகரத்திலிருந்தகாலத்தில் அவரிடமிருந்து மேரியாளும் அவளது தந்தையும் பற்பல சங்கதிகளைத் தெரிந்துகொண்டார்கள்.. ஐயோ! சில மாதங்களுக்குள் அவர் இறந்துபோனார். அப்பொழுது இவர்களுக்கு அத்தன்மையான சிறந்த நண்பனை இழந்ததனால் உண்டான நஷ்டமும் கஷ்டமும் நன்றாகப் புலப்பட்டன. அவர் இந்து தேசத்தைப்பற்றியும் இந்துதேசத்துப் பெண்பிள்ளைகளுடைய குறைபாடுகளைப்பற்றியும் எடுத்துக் கூறியது மேரியினுடைய உள்ளத்தில் நன்றாய்ப் பதிந்துபோயிற்று. அப்பெருமாட்டி அப்பொழுது தனக்கு உண்டான ஆசையை வெளியிடத்தக்க முதன்மையான செய்கை யேதேனுமொன்று அந்த நிமிஷமே செய்ய விருப்பங்கொண்டிருப்பாள். மனதில் ஏதேனுமொரு நல்ல விஷயக்தோன்றினால், அதை உடனே செய்து முடிப்பதேயன்றி, வீணெண்ணமாயும் பயனற்ற சொற்களாயும் போக்கிவிடுவது அவளுடைய சுபாவமன்று. ஆயினும் அப்பெருமாட்டி மிகுந்த புத்திசாலி; தான் பிறந்தவிடமான தேசத்திற்கு வேண்டிய நன்மைகளைச் செய்வது ஸ்திரீகளின் முதன்மையான கடமையென்றும், அதிலும்

தாய்தந்தையர் சகோதரர் முதலிய உற்றாருறவினரைப் பரிபாலிப்பது மிகச் சிறந்த கடமையென்றும் அவள் நன்றாய் அறிந்தவள். அதனால் தான் நேராகவே இந்தியாவைப் போய்ப் பார்க்கவேண்டுமென்கிற ஆசையை அப்பால் முப்பது வருஷம் வரையில் வெளிக்குக் காட்டாமலே அடக்கிவைத்திருந்தாள்.

தமது சுதேசத்தில் தாம் செய்யவேண்டிய காரியங்களெல்லாம் செய்து முடிந்து, ஓய்வு உண்டான பிறகுதான் இந்தியா தேசத்தைப்பற்றி அவள் கொண்டிருந்த அபேக்ஷையை நிறைவேற்றவேண்டியதாயிற்று. உற்றாரை ஆதரித்தபிறகு ஊராரை ஆதரிக்க முயலவேண்டுமென்பதும், கையிலுள்ள காரியத்தை நன்றாகச் செய்து முடித்தபின் மற்றொருகாரியத்தின்மேல் ஆசைப்படவேண்டுமென்பதும் ஆகிய சிறந்த நீதிகள் இதனால் நன்கு புலப்படுகின்றனவல்லவா?

பெண்கள் கல்வி நாளுக்குநாள் விருத்தியடைந்துகொண்டும், இந்தியாவிலும் இங்கிலாந்திலும் அவர்களுக்கு உத்தியோகம் கொடுக்கப் பல புதியவையான தொழில் துறைகள் ஏற்படுத்தப்பட்டும் வருகிற இக்காலத்தில், "அடுப்பே வனவாசம் வயிறே கைலாசம்" என்றிராமல், ஸ்திரீகள் தாம் லோகோபகாரமான பெரிய காரியங்களில் பிரவேசித்துப் புகழ்ச்சி பெறுவது மேன்மையேயன்றி, இருக்கிற இடந்தெரியாமல் அடுப்பங்கரையில் அடைத்துக்கொண்டிருப்பது புத்தியீனம் என்று சிலர் நினைப்பதற்கு ஏதுவுண்டு; அது மிகவும் புத்தியீனமான நினைப்பு. தம் வீட்டைத் தாம் பரிபாலிப்பது தாழ்மையான காரியமோ? இதுவுமல்லாமல்,

"குழலினிது யாழினி தென்ப தம்மக்கள்
மழலைச்சொற் கேளா தவர்"

என்றபடி அதன் பெருமை அநுபவித்தவர்களுக்கே தெரியும். இளங்குழந்தையை ஊட்டி வளர்ப்பவளே உலகமா

ளுவாள் என்பது பழமொழி. வீட்டு வேலைகளைப் பூர்ண மாகச் செய்து முடித்தபிறகுதான், பெண்கள் மற்ற வேலை களுக்குத் தம்மாலான உதவி செய்ய ஒழிவு தேடிக்கொள் ளவேண்டும்.

மேரி கார்ப்பெண்ட்டர் பிறகு முப்பதுவருஷகாலம் பட்ட பிரயாசைகளெல்லாம் இக்கொள்கையையே முதன்மையாக மனத்திற்கொண்டுதான். இப்பெருமாட்டி தனது அன்புக்கு இருப்பிடமும் தெய்வமுமாக நினைத்திருந்த தகப்பனார் சில வருஷகாலம் தேக சௌக்கியம் தப்பியிருந்து 1840-ம் ௵ இம்மகளை விட்டுப் பிரிந்துபோயினார். இடம் மாறிக் குளிரில் லாத இத்தாலியாவிலே போய்ச் சிலநாளிருந்தால் தேகம்சௌக் கியப்படுமென்று வைத்தியர்கள் சொல்லி அப்படியே அனுப் பினார்கள். லெக்ஹாரனிலிருந்து மார்ஸல்லேக்குப் போகும் வழியில் அவர் கடலிலே முழுகிப்போயினார்.

இத்தன்மையான பெரிய ஆபத்துத் திடீரென்று நேரிட்ட பொழுது, அவருடைய மக்கள் அனைவரும், கைம்பெண் ணாகிவிட்ட தமது தாயார்க்குத் தேற்றரவு சொல்லி அவ ளுக்கு உபசாரம் செய்வதிலே மனஞ்செலுத்தியிருந்தார் கள். அவர் இறந்த புதிதில் அவர்களுடைய துக்கத்தை யாற்ற ஒருவராலும் ஆகாமற்போயிற்று. தனியே உட்கார்ந் திருந்து எவ்வளவுநேரம் தவிப்பார்கள்! அக்காலங்களில் "அயனிட்ட எழுத்தில் அணுவளவும் தப்பாது;" எல்லாம் தெய்வச்செயலென்று நினைத்துச் சற்று மனந்தேறுவதும், இஷ்டர்கள் வந்து பொழுதுபோக்காகச் சற்றுநேரம் பேசிக் கொண்டு இருப்பதுமே ஒருவாறு துக்கம் தணிய ஏதுவாயின.

பிறகு முப்பது வருஷகாலம் மேரி கார்ப்பெண்ட்டர் தமது தாயோடுகூடவே வசித்துக்கொண்டிருந்தாள். அவர் களுக்கு உண்டான விசனத்தினாலேயே அவர்கள் அப்படிக் கூடி வாழவேண்டியதாக நேரிட்டது. அப்பொழுது அவர்

களுடைய தாய் சும்மா இருப்பதில்லை; ஏதேனுமொருவேலை செய்தவண்ணமா யிருப்பாள். அதற்கு அம்மக்கள் தம்மா லான உதவி செய்துகொண்டும், விசனம் வந்தபோது "திரு வாக்குக்கு எதிர்வாக்குண்டோ" எனச் சமாதானப்படுத்திக் கொண்டு மிருந்தார்கள்.

இவ்விதமாக மேரி கார்ப்பெண்ட்டருக்கு உண்டான கஷ் டங்களையும், அவற்றை ஒருபொருட்டாக நினையாமல் மனோ தைரியத்துடன் அவற்றை மிதித்துக்கொண்டு மேலெழுந்ததை யும் இங்கே சொல்வதென்றால் ஏடு இடங்கொள்ளாது. அவற் றில் பாதி எடுத்துரைப்பதென்றாலும் மிகப் பெருகும். எப் பொழுதும் அவளுடைய மனதுமாத்திரம் ஒரே நிலையிலிருந்த தென்பதை வெளிப்படையாகக் காட்டத்தக்கதாய் அவள் செய்த இரண்டொரு நற்செய்கைகளை மாத்திரமே இங்கெடுத் துச்சொல்வது போதுமானது.

பேதைப் பிள்ளைகளுக்குத் தனியே பள்ளிக்கூட மேற் படுத்த அடிகோலினவர்களில் இவள் ஒருத்தி; அந்தப் பள்ளிக் கூடங்கள் மிகவும் எளியவர்களும் திக்கற்றவர்களுமான பிள்ளைகளுக்கே ஏற்படுத்தப்பட்டவை. இங்கிலாந்திலே தன வந்தர்களுடைய பிள்ளைகள் படிக்கும் பள்ளிக்கூடங்களில் இந்த ஏழைப் பிள்ளைகளைச் சேர்த்துக்கொள்வதில்லை. ஏனெ னில், அந்தப் பிள்ளைகள் அழுக்கற்ற சுத்தமான வஸ்திரம் தரித்துக் கண்ணுக்கு லக்ஷணமாயிருப்பார்கள்; ஏழைப் பிள்ளைகளுக்கோ அப்படிச் செய்துகொள்ள வழியில்லையல் லவா?

பிறகு அவர் கிங்வுட் என்னும் ஊரில் நன்னெறிப்படுத்தும் பாடசாலையொன்று ஸ்தாபித்தார். திருடியும், வேறுவிதமான தப்புகள் செய்தும் குற்றவாளிகளான சிறிய பெண்களை யும் பிள்ளைகளையும் சேர்த்துப் படிப்பித்து நல்வழிப்படுத்த உபாயம் செய்தார். அந்தப் பள்ளிக்கூடம் இல்லாவிட்டால்

அப்பிள்ளைகள் சிறைச்சாலையில் அகப்பட்டு வருந்தவேண்டு
வதுதானே. இந்தச் சிறு குற்றவாளிகளுடனேயிருந்து அவர்
பல வருஷகாலம் பாடுபட்டு அவர்களைப்பற்றிய எல்லா விஷ
யங்களையும் தெரிந்துகொண்டார். இச்சிறு குற்றவாளிகளு
டனே பழகப் பழக, பெரிய குற்றவாளிகளைப் பார்க்க
வேண்டுமென்கிற பேரவா அவருக்கு உண்டாகியது. சிறைச்
சாலைகளில் அடைபட்டு வருந்தும் குற்றவாளிகளைப் பார்க்
கையில் அவர் மனம் பரிதாபமடைந்தது. அன்புள்ள அவ
ரது உள்ளத்தில், அக்குற்றவாளிகளை நல்வழிப்படுத்த எவ்
வளவு வேண்டுமோ அவ்வளவே தண்டிக்கவேண்டுமென்றும்,
மறுபடியும் அவர்கள் அயலாருக்கு உபத்திரவஞ் செய்யாத
விடத்தில் அவர்களை வைத்திருப்பது போதுமானதென்றும்
தோன்றியது. அன்றியும், அவர்களுக்கு அவிவேகத்தை
ஒழிக்கும் அறிவும் யோக்கியதையும் உண்டாகும்படி கற்
பித்து, அப்படி விருத்தியடையப் பாடுபடுகின்றவர்களுக்
குச் சிறந்த வெகுமதி கொடுக்கும்படி ஏற்பாடு செய்யவேண்
டுமென்றும் அவர் மிகுந்த ஆவல் கொண்டவராயினார்.

இப்படி அவர் ஏழைப்பிள்ளைகளுக்கும் குற்றவாளிக
ளுக்கு முண்டான குறைகளைத் தீர்க்கவேண்டிய வழிகளில்
பழகப்பழக, அதனோடு சம்பந்தப்பட்ட இன்னும் பல வியா
பாரங்களிலும் பாடுபட வேண்டுமென்று எண்ணமுண்டாகி
விட்டது.

அவர் தம்முடைய அபிப்பிராயங்கள் நன்றாக விளங்
கும்படி பல புஸ்தகங்களும் சஞ்சிகைகளும் எழுதினார்.
"தான் கற்று ஒன்றைத் தரிக்க உரை" என்பதுபோல் தமது
சொல்லை ஏற்றுக்கொள்ளத் தக்கவர்களான பல பிரபுக்க
ளுக்கும், மந்திரிமார்களுக்கும் தம்மை அபிப்பிராயம் கேட்ட
மற்றும் பலருக்கும் கடிதமெழுதித் தெரிவிப்பதிலேயே வெகு
வாகக் காலம் போக்கினார்.

அவரது நற்றாயும் 1856-ம் ௵ இறந்துபோனாள். இந்த
விடக் கொடிய சோதனை வேறென்னவேண்டும்? விசனமிப்
படிப்பட்டதென்பது அப்பொழுதுதான் அவருக்கு நன்றாகத்
தெரிந்தது. தாயாருடைய அன்பும் ஆசையும், நல்வாழ்த்தும்
அவளோடு ஒழிந்துபோயினவன்றோ! இனித் தனக்கு ஆற்று
வாருமில்லை தேற்றுவாருமில்லை என்று நினைக்கும் அக்கா
லத்தில் அவருக்கு நண்பர்கள் பலர் ஏற்பட்டிருந்தார்கள்.
அவர்களுடனே அன்னி என்கிற சகோதரியும், அவளு
டைய புருஷனும் தாயிறந்த துக்கம் மேரியாளுக்கு அதி
கமாகத் தோன்றாதபடிசெய்து வந்தார்கள்; யார் என்ன செய்
தாலும் பெற்ற தாயாவார்களோ? தாயார் இல்லாத குறையை
நீக்க ஒருவராலுமாகவில்லை. தாயை யிழந்த விசனம்
மனத்தை அதிகமாக உறுத்தாதிருக்கும்படி மேரி கார்ப்
பெண்டர், பரோபகாரம் செய்வதாகிய தமது காரியத்தில்
பின்னும் அதிகமான ஊக்கம் கொள்பவரானார். முக்கியமாக
ரின்ஆடிலும், ரெட்லாட்ஜிலும் தாமேற்படுத்திய பாடசாலைக
ளில் படிக்கும் சிறுவர் சிறுமிகள் விஷயத்தில் அதிகமான
ஆஸ்தையுடையவரானார்.

எப்பொழுதும் பிறருக்காகக் கஷ்டப்படுவதே அவரு
டைய சுபாவம். இவ்வளவு காலத்தில் அவருக்கு ஐம்பத்
தொன்பதாவது வயது வந்துவிட்டது. அப்பொழுது அவரு
டைய நண்பர்கள் எல்லாரும், இனி இவர் வேலையொழிந்து
சுகமாகக் காலம் கழிக்கவேண்டுமென்று நினைத்திருந்தார்கள்.

அவரோ அப்படிச் செய்யவில்லை. முப்பது வருஷத்திற்
குப் பிறகு அவரது எண்ணம் மறுபடி இந்தியாவின்மேல்
ஓடியது. இச்சஞ்சிகை யாருக்காக எழுதப்படுகின்றதோ,
அவர்களுக்கு அப்பெருமாட்டி மிகவும் முக்கியமான நன்மை
கள் செய்யத் தொடங்கியது இப்பொழுதுதான்.

அவருடைய நண்பர்கள் அநேகர் அவரை இந்தியாவுக்
குப் போகக்கூடாதென்று தடுக்கப் பாடுபட்டுப் பார்த்தார்கள்.
அறுபதுக்குச் சமீபமான அந்த வயதிலே நெடுந்தூரம் கப்பல்
யாத்திரை செய்வதும், ஒருநாளும் போய்ப் பழகாத உஷ்ண
தேசத்தில் ஸஞ்சரிப்பதும், ஜனங்களும் தேசாசாரமும்
முற்றும் நூதனமான தேசத்திலே ஸஞ்சரிப்பதுமாகிய இவற்
றால் உண்டாகும் பல கஷ்டங்களையும் ஆலோசித்து அவர்
கள் மிகவும் பயந்தார்கள். ஆயினும் அவர்களுடைய வார்த்தை
மேரி கார்ப்பெண்டர் இடத்தில் பயன்படவில்லை; இங்கிலாந்
திலே தாம் செய்யவேண்டிய வேலை முற்றும் செய்தாகிவிட்ட
தென்றும், இனிமேல் தனது ஸகாயமில்லாமலே அவ்விடத்தில்
வேலைகள் நடந்தேறி வருமென்றும் அவருக்கு நன்றாக விளங்
கியது. இவ்வுலகத்தில் எந்தத் தேசத்திலாயினும் நன்மை
செய்வதற்குப் போதுமான அநுபவமும் அறிவும் அவருக்கு
உண்டாகிவிட்டன. அன்றியும் அவரது வாக்கு எவ்விடத்தி
லும் தடையின்றிச் செல்லும்படியான பிரசித்தியும் சிலாக்கிய
பாக்கியமும் இப்பொழுது அவருக்கு உண்டாகிவிட்டது.

உள்ளூரிலேயே இருக்கும்படியான கால்கட்டுகள் இப்
பொழுது அவருக்கு ஒன்றுமில்லை. அதனால் அவரது மனம்
இந்தியாவிலுள்ள ஸ்திரீகளின்மேலே சென்றது. இங்கிலாந்து
தேசத்து ஸ்திரீகள் அநுபவிக்கின்ற நன்மைகளில் சிலவற்றை
இந்தியாவிலுள்ள ஸ்திரீகளும் பெறும்படி செய்யவும், அவ்
வளவுகாலமாகத் தாம் பெற்றுக் களஞ்சியமாகச் சேர்த்துவைத்
திருக்கும் அறிவையும் அநுபவத்தையும் அவர்களுக்கும் அவர்
களுடைய தேசத்திற்கும் தத்தம்பண்ணி உபயோகப்படுத்தவும்
ஆசைகொண்டார்.

வீணான தொல்லைகளைத் தாமே வேண்டுமென்று மேற்
போட்டுக்கொண்டு தமக்குச் சம்பந்தமில்லாத காரியங்களில்
தாமே தலையிட்டுக் கொள்ளுகிறாரென்று சிலர் அவரைப்பற்றி

நினைப்பார்கள். அப்படியும் அநேகர் நினைத்தார்கள். ஆனால்
சிறந்த விவேகிகளும், அவருடனே நன்றாகப் பழகியவர்
களும் அப்படி நினைத்தவரல்லர்; உசிதமான முயற்சியென்றே
மெச்சினார்கள். ராஜாங்கத்து மந்திரிமார்களும், மதக்கோட்
பாடுகளில் வேறுபட்டவர்களும், நானாவித காரியங்களிலும்
தொழில்துறைகளிலு மிருக்கின்றவர்களுமான பல துரை
சானிகளும் துரைமாருமாகிய ஸஜ்ஜனர்களும் இந்தியாவை
ஆளும் ராஜப்பிரதிநிதிக்கும், ஒவ்வொரு ராஜதானியின் கவர்
னருக்கும் இப்பெருமாட்டியை அறிமுகமாக்கும்படி புகழ்ந்து
பேசிக் கடிதமெழுதினார்கள்.

அவர்களில் இந்துதேசத்துப் பிரதான மந்திரியான லார்டு
ஸாலிஸ்பெரி பிரபுவும் பரோபகாரியான நைத்திங்கேல் என்
னும் உத்தமியும் முக்கியமானவர்கள். இந்துதேசத்துப் பிர
தான மந்திரி எழுதிக்கொடுத்த கடிதத்தைக் கைக்கொண்டு
அவர் இங்கிலாந்தினின்றும் புறப்பட்டார். அந்தக் கடிதத்
தின் பல பிரதிகள், வித்தியாவிசாரணை, சிறைச்சாலை விசா
ரணை முதலான பல அதிகாரங்களின் தலைவர்கள் ஒவ்வொரு
வருக்கும் தனித்தனியே அனுப்பப்பட்டன. அந்தக் கடிதத்
தில் கண்ட பல விஷயங்களில் முக்கியமான சங்கதியாவது,
"...... இப்படிப்பட்ட பலவிதமான விஷயங்களில் மேரி
கார்ப்பெண்டர் பெருமாட்டியின் அபிப்பிராயத்தையே இங்
கிலாந்தின் மந்திராலோசனைச் சபையாரும், ராஜ்ய தந்திர நிர்
வாகிகளும் முதன்மையாகக் கேட்டு அநுசரித்து வருகின்ற
னர்" என்பதாம். இதுவே அவருடைய யோக்கியதாபத்தி
ரிகையாக மதிக்கப்பட்டது.

பரோபகார சிந்தையினாலுண்டான ஒருவகை அபிமானம்,
தவிப்பு, ஊக்கம், மேலான காரியத்தைச் சாதிக்க வேண்டுமென்
கிற மனோரதம் ஆகிய மனோவியாபாரங்களாலேயே, இந்த நூத
ன யாத்திரை ஆரம்பமானது. இந்துதேசம் ஒருநாளும் தாம்

பாராத புதிய தேசமென்றும், அத்தேசத்தைப்பற்றித் தாம் தெரிந்துகொள்ள வேண்டியவை அநேக மிருக்கின்றனவென்றும் அவருக்கு நன்றாகத் தெரியும். ஆதலால் முதலில் அத்தேசத்தைப்பற்றிய பலவற்றையும் தாம் தெரிந்து கொள்வதோடு திருப்தியடைய வேண்டுமேயன்றித் தாம் ஒன்றையும் அவ்விடத்தில் போதித்து நிறைவேற்ற முடியாதென்று உணர்ந்தார்.

இங்கிலாந்திலிருந்த இந்துதேசத்துப் பிரபு ஒருவருக்கு அவர் எழுதியதாவது: "பெரிய காரியங்களைச் சாதிக்க வேண்டுமென்கிற ஆசையிலே நான் இந்தியாவுக்குப் போகிறேனென்று ஒருவர்க்கும் தோன்றாதபடி ஜாக்கிரதையாகப் பார்த்துக்கொள்ளவேண்டும். உங்கள் தேசத்து ஸ்திரீகளுடைய நன்மைக்காக நீங்கள் செய்யும் நற்காரியங்களைக்கேட்டு நான் மிகவும் சந்தோஷித்து, அத்தேசத்தார் விஷயத்தில் ஏதேனும் நன்மை செய்யத் தக்கதிறமை எனக்கும் உண்டாக்கிக் கொள்வதற்காக, அத்தேசத்து நிலையை ஒருவாறு அறிந்துகொள்ளும்படி நான் போகின்றேன்" என்பதாம்.

"ஊக்கமுடைமை ஆக்கத்திற்கழகு" ஆகையாலே இந்து தேசத்திற்கு யாத்திரை செய்கிறோமென்கிற சந்தோஷத்தினால் அவருக்குப் புதிதான உற்சாகமுண்டாகியது. இந்த மேரி கார்ப்பெண்டரைப்போல நன்றாகப் பயிற்சிசெய்யப்பட்ட மனமுடையவர்களுக்கும், புதிது புதிதாகப் பல சங்கதிகளை யறியப் பழகிய புத்தியுடையவர்களுக்கும், மேலான மகிழ்ச்சி யுண்டாக்கத்தக்கது அயல்நாடுகளில் யாத்திரை செய்வதைவிட மற்றொன்றில்லை. "கண்ணிருந்தும் குருடு" என்று ஒரு கதை உண்டே; அதை யெப்பொழுதேனும் கேள்விப்பட்டிருக்கிறீர்களா? அதாவது, ஒரு சிறிய பையன் தூர தேச யாத்திரை போயினான். எங்கேபோனாலும் அங்கங்கே அவனுக்கு அதிசயமான ஏதேனும் ஒருபொருள் புலப்பட்டுக்

கொண்டேயிருந்தது. பிறகு மற்றொருவன் அதேவழியில் நடந்துபோனான்; அவனுக்கு ஒரு அதிசயமும் அங்கே புலப்படவில்லை.

இது ஒரு பழையகதையே யானாலும், இதனால் விளங்கும் நீதிமாத்திரம் எப்பொழுதும் புதிதாகவேயிருக்கின்றது. நாம் எவ்வளவு விஷயங்களைக் கற்கிறோமோ, அவ்வளவுக் கவ்வளவு நன்றாக நமது புத்தியும் மனமும் பண்படுத்தப்படுகின்றன; அவ்வளவுக் கவ்வளவு இவ்வுலகத்திலுள்ள பண்டங்கள், பொருள்கள், பிராணிகள், ஆண் பெண் ஆகிய மானிடர்கள் ஆகிய பலவற்றில் எதைக்கண்டாலும், அதில் இனிப்பும் அதிசயமும் உண்டாக்கத்தக்க புதுமைகள் பல தோன்றுகின்றன. மந்தபுத்தியுடையவர்களான மூடர்களும், அன்பும் ஒற்றுமையும் இல்லாதவர்களுமே எவ்விடத்திலிருந்தாலும் ஒரு அதிசயத்தையும் காணமாட்டார்கள்.

ஆதலால் மத்தியதரைக்கடலிலே இராக்காலங்களில் அழகாக நிலவுகாய்ந்ததும், செங்கடலில் செவ்வானம்பட்டுச் சூரியன் அஸ்தமித்ததும், கீழே அகாதமான கடலும் மேலே மிகப் பரந்தவானமும் விசித்திரமாகத் தோன்றியதும், அழகிய பம்பாய் பட்டணத்தை அவர் முதல் முதல் கண்ட சிறப்பான காட்சியும், நானாவிதமான நிறத்துடனே பற்பல நடையுடை பாவனையுள்ள அவ்விடத்துப் பிரஜைகள் தோன்றிய தோற்றமும், மேரி கார்ப்பெண்டருக்கு மேலான மகிழ்ச்சியை உண்டாக்கி அவருடைய இளைப்பையும் ஆற்றின.

இந்தியாவுக்கு வந்துசேர்ந்தவுடனே மேரி கார்ப்பெண்டர் தம்மால் கூடியவரையில் பிரயத்தனப்பட்டு, இத்தேசத்துப் பிரஜைகளையும் வழக்கங்களையும் கையாளும் பொருள்களையும்பற்றித் தெரிந்துகொள்ள முயன்றார். இத்தேசத்துச் சிறைச்சாலைகள், வைத்தியசாலைகள், வித்தியாசாலைகள், போதனாப்பியாஸ பாடசாலைகள் ஆகிய பலவற்றையும்

போய்ப் பார்த்தார். இத்தேசத்துப் பிரபுக்கள், பெருமாட்டிகளில் சிலருடைய கிருகங்களுக்குத் தாமே சென்றும், சிலர் தாமிருக்குமிடத்திற்கு வரப்பெற்றும், அவர்களைக் கண்டு பேசி, தேசமரியாதை அறியாதார்க்கு மகிமையில்லையாகையால் இந்துக்களுடைய ஒழுக்கங்களையும் மரியாதைகளையும் தம்மால் இயன்றவளவு தெரிந்துகொண்டார்.

முதலில் இந்தியாவிலிறங்கினவுடனே பம்பாயில் சிலகாலமிருந்து அவ்விடத்தை நன்றாகப் பார்த்துக்கொண்டு, பிறகு சென்னைக்கு வந்தார். சென்னையில் அப்பெருமாட்டி, அப்பொழுது இந்தியாவில் பிரதான வித்தியாவிசாரணைத் தலைவராயிருந்த இ. பி. பவல் துரையவர்களின் வீட்டிலிறங்கினார்.

அப்பால் சென்னையிலிருந்து கல்கத்தாவுக்குப் போனார். அவ்விடத்திலே கேசவ சந்திரசேனன் என்பவர் இப்பெருமாட்டியின் பழைய நண்பனான ராஜா ராம்மோஹன்ராய் போலவே கடவுள் ஒருவரே என்று வாதிக்கும் பிரம்ம ஸமாஜமதத்தைப் பிரசுரம் செய்தவர். அந்த மதத்தில் இப்பெருமாட்டிக்கும் அதிகமான நோக்கமுண்டு.

பிறகு கல்கத்தாவிலும் சென்னையிலும் அவருக்காகக் கூடிய பல சபைகளையும், அந்தச் சபைகளில் அவர் செய்த பிரஸங்கங்களையும், கண்டகாட்சிகளையும், செய்த செய்கைகளையும் முற்றுமெடுத்துரைப்பதென்றால் மிகப் பெருகும். கல்கத்தாவிலே அவர் லார்டு லாரென்ஸ் பிரபுவின் வீட்டில் விருந்தாகச் சென்றிருந்தார். திரும்புகாலில் அவர் மறுபடி சென்னைக்கு வந்து, நேப்பியர் பிரபு, நேப்பியர் துரைசானி இவர்களுடனே துரைத்தனமாளிகையில் இறங்கியிருந்தார்.

இங்கே சிறைச்சாலைகளைச் சீர்ப்படுத்தவும், பாலிய குற்றவாளிகளுக்குப் பாடசாலைகள் ஏற்படுத்தவும் அவர் வேண்டிய யுக்தியுபாயங்கள் எடுத்துக் காட்டினார். பெண்களது கல்விப்

பயிற்சி விஷயத்தில் விசேஷமாகப் பிரசங்கித்தார். அவருக்கு உண்டாயிருந்த அதிகமான அநுபவத்தினால், அக்காலத்திலிருந்த பெண் கல்விப் பயிற்சியிலுள்ள முதன்மையான குறைவு இன்னதென்பதைச் சீக்கிரமே கண்டுகொண்டார். அதாவது, பெண்களுக்குப் பாடசாலையில் கற்பிக்கப் பெண்பாலரே உபாத்திமாராகக் கிடைக்காமையேயாம். அது கண்டுகொண்டு அவர் ஸ்திரீகளுக்குத் தனியே போதனாப்பியாஸ பாடசாலையொன்று அவசியம் வேண்டுமெனத் துரைத்தனத்தாருக்கு உறுதியாகத் தெரிவித்தார்.

இப்படியிருக்கச் சீக்கிரமே அவர் இந்தியாவை விட்டுப் போகும்படியான தருணம் வந்துவிட்டது. அவர் இந்தியாவுக்கு வரும்பொழுது எதிர்பார்த்திருந்ததைப்பார்க்கிலும் மிகவும் அதிகமான நன்மைகளை இத்தேசத்திற்கு உண்டாக்கிவிட்டு, மிகுந்த விசனத்துடன் 1867-ஆம் மார்ச்சுமீ 10உ பம்பாயைவிட்டுக் கப்பலேறினார்.

திரும்பி அவர் இங்கிலாந்திற்குச் சென்றபோது நமது மகாராணியாரை நேரகப் போய்த் தரிசிக்கும்படியான அநுமதி கிடைத்தது. இந்துதேசத்து ஸ்திரீகளைப்பற்றி மேரி கார்ப்பெண்டர் சொல்லிய எல்லா விஷயங்களையும் சக்கரவர்த்தினியார் அதிக ஆதரவுடனே கேட்டு, அப்பெண்களிடத்தில் தமக்குள்ள தாய்க்குச் சமமான விசுவாஸத்தை வெளிப்படுத்தினார்.

பெண்களுக்காகப் போதனாப்பியாஸ பாடசாலை ஏற்படுத்தவேண்டியது அவசியமென்பதைப்பற்றி மேரி கார்ப்பெண்டர் அவ்வளவு உறுதியாகச் சொல்லியும், அதற்காக இந்தியா துரைத்தனத்தார் ஒவ்வொரு ராஜதானி நகரத்திற்கும் 1,200 பவுண்டு கொடுப்பதாகத் தீர்மானித்து, அது ஐந்து வருஷம் வரையில் நீடித்து நடத்தப்படுமென்று உத்தரவு பண்ணியும், போதனாப்பியாச பாடசாலை ஸ்தாபிக்கத் தாம

ஸப்பட்டது. அதனால் 1868-௵ மேரி கார்ப்பெண்ட்டர் மறுபடி இந்தியாவுக்கு வரலானார். இந்தத்தடவை பம்பாயில் ஸ்திரீகளுக்காக ஏற்படுத்தும் போதனாப்பியாஸ பாடசாலைக்குத் தாமே விசாரணைத்தலைவரா யிருக்கவேண்டுமென்கிற நோக்கத்துடனே வந்தார். அவருடைய பிரேரபணையின்மேல் சென்னப்பட்டணத்திலும் ஸ்திரீகளுக்குப் போதனாப்பியாஸ வித்தியாசாலை யொன்று ஸ்தாபிக்கப்பட்டது. பல மாதங்களவரையில் அவர் இதற்காக மிகப் பாடுபட்டு உழைத்தார். அப்படியிருக்க, ஐயோ! 1869-௵த்தில் கொடிய நோயொன்று கண்டு அவர் திடீரென்று அவ்வேலையை விட்டு ஒழியும்படி நேரிட்டது. அன்றியும், அவ்வளவு முதிர்ந்தவயதில் அதிக உஷ்ணமான தேசத்திலேயிருந்து வித்தியாப்பியாசம் செய்வித்துக்கொண்டிருப்பது அபாயத்திற்கு இடமானதென்று பிரத்தியக்ஷமாகத் தெரியவந்ததனால், தேகத்தை அநுகூலப் படுத்திக்கொள்வதற்காக இங்கிலாந்திற்குத் திரும்பிவிட்டார். ஆயினும் அவ்விடத்திலேயே நின்றுவிடவில்லை. அடுத்த வருஷம் மறுபடி மூன்றாந்தடவை இந்தியாவுக்கு வந்தார். இந்தத்தடவை வந்து பார்த்தபொழுது தாம் செய்த முயற்சிகளில் சில காரியசித்திபெற்று வருகின்றனவெனக் கண்டு களிப்படையலானார். ஆயினும் பலவிஷயங்களில், யாவரும் விருப்பத்துடனே தமக்கு உதவி செய்வார்களென்று அவர் எதிர்பார்த்திருந்ததற்கு முற்றும் மாறாகப் பலர் அதற்கு உடன்படாமல் விரோதமாக இருந்ததைக்காண அவருக்கு அதிகமான மனவருத்த முண்டாகிவிட்டது.

ஆனால் இது எவ்விடத்திலும் இயற்கையான விஷயமே. இந்தியாவில் பின்னும் விசேஷம். லோகோபகாரமாக என்ன காரியம் செய்யப் பிரயத்தனப்பட்டாலும், அதற்கு முதலில் இவ்விதமான தடைகளும் உற்சாக பங்கமும் உண்டாகுமென்பது நிச்சயம். ஆகையால், எது வந்தாலும் அதற்கு நாம் சலிக்

காமல், மேற்கொண்ட முயற்சியைக் கைவிடாமல் முனைந்து பாடுபடச் சித்தமா யிருக்கவேண்டுமென்று மனவுறுதி கொண்டு மேரி கார்ப்பெண்ட்டர் தம் வாழ்நாள் முழுவதும் பாடுபட்டவிதமாகவே, போகப்போக நல்லகாலம் வரும்; நல்லகாலம் வருமென்று எதிர்பார்த்துக்கொண்டு, விடாமுயற்சியாகப் பாடுபட்டுக்கொண்டிருந்தார்.

எப்பொழுதேனும் கடற்கரையிலே போய் நின்று அலை பெழும்பி வருவதை உற்றுப்பார்த்திருக்கிறீர்களா? முதலிலேயே அலை மிகப் பெரிதாக மேலே யெழும்பிக் கரைமேல் வெகுதூரம் உள்ளே வந்து மோதுவதில்லை. அலைகளை உற்றுப் பார்த்துக்கொண்டேயிருந்தால், ஒவ்வொரு அலையும் அதற்குமுன் வந்த அலையைப்போலவே சற்று மேலெழும்பி வந்து அடங்கிப்போகுமென்று தோன்றுகிறது. ஆனால் உண்மை அப்படியில்லை; அலைகள் ஒன்றின்பின் ஒன்று சிறிது சிறிதாக உரத்து மேலெழுந்துகொண்டு வர, சற்று நேரத்திற்குள் ஒரு அலை மிகப் பெரிதாய் அதிக உயரம் வானத்தில் எழும்பிக் கரைமேல் வெகுதூரம் வந்து மோதுகின்றது. சரியான ஏற்பாடுகளின்மேல் நடத்தப்படுகிற ஒவ்வொரு காரியமும் இத்தன்மையானதே. சில சமயத்தில் அது அப்படியே நின்றுபோனதாகத் தோன்றும்; சில சமயம் அதற்கு ஆதாரமே அற்றுப்போனதாகத் தோன்றும்; ஆயினும் கடைசியில் காரியம் கைகூடும். இந்தியாவிலே பெண்கள் கல்விப்பயிற்சியும் இத்தன்மையானதாகவே யிருக்கின்றது. ஸ்திரீகளுக்கு வித்தியாப்பியாஸம் செய்விப்பதில் சில தீமைகளும் குறைகளும் உள்ளனவென்றாலும், அதிகமான கல்வித்தேர்ச்சியும், ஸ்வாதீனமுமுள்ள ஸ்திரீகளே நன்மக்களும், நன்மனையாட்டியும், நற்றாயுமாவார்களென்று ஒவ்வொரு ஸ்திரீயும் அநுபவத்தினால் காட்டி இந்த நன்முயற்சியை ஈடேறச்செய்வார்களென்பதுமாத்திரம் எப்பொழுதும் நிச்சயமென்று நினையுங்கள்.

மேரி கார்ப்பெண்டர் இந்தியாவைவிட்டுத் திரும்பிச் சென்றபொழுது, பாபு கேசவ சந்திரசேனன் இங்கிலாந்தி லிருந்தார். இப்பெருமாட்டி அவரை பிரிஸ்டல் நகரத்தில் ரெட்லாட்ஜ் என்னுமிடத்திலே தமது மாளிகைக்கு வர வழைத்து, அவருடன் பரோபகாரமான பல விஷயங்களை யெடுத்துப்பேசினார். அவர்களுக்குப் பிரஜைகளிடத்திலி ருந்த அன்பினாலும், அவர்களுடைய சம்பாஷணையினாலுமே நாஷனல் இந்தியன் அஸ்ஸோஸியேஷன் என்கிற பெய ருடன் தாபிக்கப்பட்டுப் பிரசித்திபெற்றிருக்கும் சங்கமானது இப்பொழுது இத்தேசமெங்கும் முதன்மை செலுத்தத் தலைப் பட்டது.

இந்தச் சங்கம் ஏற்படுத்தினதற்கு முதன்மையான நோக் கங்களாவன:—இந்தியாவில் படித்துத் தேறிய வித்தியார்த்தி கள் இங்கிலாந்திற்குப் போவதற்கு வேண்டிய உதவிசெய் வதும், பெண்களுக்குக் கல்விப்பயிற்சியை விருத்திசெய் வதும், சுதேச ஸ்திரீகளும் ஆங்கிலேய ஸ்திரீகளும் ஒரு வர்க்கொருவர் கூடிப் பழகி அதிகமான நட்புள்ளவர்க ளாகவேண்டு மென்பதுமேயாம். அப்பொழுது ஆரம்பித்த அந்தச் சங்கம் மேன்மேலும் சீராகவே நடந்தேறிவருகின்றது.

அந்தச் சங்கத்திற்கு இப்பொழுது இத்தேசத்து மூன்று ராஜதானிகளிலும் கிளைச்சங்கங்கள் பல ஏற்பட்டிருக்கின் றன. அந்தச் சங்கத்திற்குக் காரியதர்சியாயிருக்கின்ற மிஸ். மானிங் பெருமாட்டியைவிட, இந்துதேசத்து ஸ்திரீகளுக்குச் சுபாபத்தை விசேஷமாய்ப் பாராட்டும் உண்மையான நண்பர் வேறொருவருமில்லை. அதே காலத்தில் அச்சங்கத்தின் நோக் கங்களை விவேசனம்பண்ணி, "இந்தியன் மாகஜீன்" என்னும் பெயருள்ள ஒரு பத்திரிகை துவக்கப்பட்டது. அது இப் பொழுதும் விடாமல் பிரதிமாதம் பிரசுரம் செய்யப்பட்டுவரு கிறது.

1870-ல் மேரி கார்ப்பெண்டருக்குப் புதிதாய்
க் கொடிய மற்றொரு விசனம் சம்பவித்தது; அதாவது,
ர்பர்டு தாமஸ் துரைக்கு வாழ்க்கைப்பட்டிருந்த அன்னி
ன்கிற அவளுடைய சகோதரி மரணமடைந்தாள். அவள்
சமயத்தில் ஒரு நேசனுக்கு எழுதிய கடிதத்தில், 'நம்மிரு
க்கும் பரஸ்பரம் உள்ள நேசம் இவ்வளவென்பதை நாம்
வர்க்கொருவர் ஒருபோதும் சொல்லிக்கொண்டதில்லையே.
ரில் மனமும், என்னில் எண்ணமும், உடலில் உயிரும்
ல் நமக்குள்ளிருந்த நேசம் இவ்வளவென்பதை வாயி
விளங்கச்சொல்வது அசாத்தியம்' என்று கண்டிருக்
ள். குடும்பத்திலே நேர்ந்த இந்தத் துன்பமானது மேரி
ப்பெண்டர் மேற்கொண்டிருந்த லோகோபகாரமான
காரியங்களைச் சிறிதும் தடைபண்ணவில்லை. அவற்றோடு
ி கார்ப்பெண்டர் தம் சகோதரி செய்ய உத்தேசித்
ந்த சில காரியங்களையும் தாம் நிறைவேற்ற முயன்றார். மறு
ஷம் அவ்வாறே அந்தச் சகோதரியின் ஒரு மனோர
தை நிறைவேற்றலானார். பாபு சசிபாத பானர்ஜியை
ருடைய மனையாட்டியுடனே இங்கிலாந்திற்கு வரவ
க்கலானார். தமது தேசத்துக் கைத்தொழிலாளிகளின் அபி
த்தியைப்பற்றி அவர் மேற்கொண்டிருப்பதாகச் சொன்ன
ங்களில், தாமும் அதிக ஆவலுடனே கலந்துகொண்
.

இந்தியாவிலுள்ள பிராமண ஸ்திரீ முதலில் இப்பொ
இங்கிலாந்துக்குப் போக வழிகாட்டியதனால், இதைக்
இன்னும் பல பிராமண ஸ்திரீகளும், அவளைப்
தொடரும்படியாகி, இந்துதேசத்து ஸ்திரீகள் மேன்மைப்
படு ஆகுமென்று அவர் மகிழ்ச்சிகொண்டார்; அப்
பெண்மணியைத் தமது வீட்டிலேயே வரவழைத்து
சரித்தார்.

பானர்ஜியின் மனையாட்டி கோடைகாலத்தில் அந்த மாளிகையிலேயேயிருந்து ஆநந்தமாகக் காலம் கழித்தார். அப்பொழுது அவ்விடத்தில் அவருக்குக் குமாரன் ஒரு வன் பிறந்தான். அவனுக்கு *ஆல்பியன் என்று பெயரிடப் பட்டது. "கிணறு இறைக்க இறைக்கச் சுரக்கும்" என்பது போல் தமது மனத்திலே ஓயாமல் ஊறிக்கொண்டிருந்த அன்பின் வெள்ளத்தை மேரி கார்ப்பெண்டர் ஆதரவில் லாத அந்தச் சிறு குழந்தையின்மீதும், சுதேசத்தைவிட்டு நெடுந்தூரம் வந்திருந்த அதன் பெற்றோர்களின்மீதும் பெருக் கினாள். "அன்பே பிரதானம் அதுவே வெகுமானம்."

நாளாக நாளாக மேரி கார்ப்பெண்டருடைய நற்போத னையும் நல்லுதவியும் விசேஷமாக வேண்டப்பட்டன. இதனால் அவரைத் தருமஸ்தானம் என்னும் இடத்திற்கு வரவழைத்தார் கள். அங்கே காலஞ்சென்ற நம் மகாராணியாரின் அருமை மகளான பிரின்ஸெஸ் ஆலிஸும், பிரின்ஸெஸ் லூவிஸும் ஸ்திரீ களுடைய வேலைகளைப்பற்றி யுண்டான கேள்விகளைக்குறித்து ஆலோசிக்க ஒரு மகாசபை சேர்க்கும்படி அப்பொழுது ஏற்பாடு செய்துகொண்டிருந்தார்கள். அங்கே கார்ப்பெண் டர் பெருமாட்டி அரண்மனையிலேயே போயிறங்கினார். அந்த ராஜகுமாரத்தியும் கண்டமாத்திரத்தில் அவளை அறிந்து கொண்டார். அன்றியும் "உம்மைக் கண்டவளவிலே எனக்கு மனோதிடமும் மேலான நன்மையும் உண்டாயின" என்று மிஸ். கார்ப்பெண்டருக்கு உபசாரமாக ஒரு கடிதத்தி லெழுதிப் பிரியப்படுத்தினார்.

அந்த தருமஸ்தானத்தைப் பார்த்தபிறகு, ஸ்விட்ஜர்லாந் தில் பலவிடங்களைப் போய்ப் பார்த்துவரும்படியாக நேரிட்

* இந்த ஆல்பியன் பெனர்ஜி இந்தியா ஸிவில் ஸெர்விஸ் பரீக்ஷையில் 1894-ஆம் தேதி இப்பொழுது சென்னை ராஜதானியில் பெரிய உத்தியோ கத்திலிருக்கிறார்.

அமெரிக்காவுக்குப் போயினர். டது. அப்பால் மூறுவருஷம் அங்கேயிருந்த சிறைச்சாலைகளின் நிலையைப் பார்க்க மிகவும் பரிதாபமாயிருந்தது.

இந்தியாவைக் கடைசியாக வந்து பார்த்து இப் பொழுது ஐந்து வருஷங்களாயின. இந்த வருஷங்களில் சொந்த நாட்டிலும் மற்றும் வேறு நாடுகளிலும் அவருக்கு வேலை மிகவும் அதிகமாயிருந்தது. பிறகு அவர் மறுபடி ஒருதரம் இந்தியாவுக்குச் சென்று, தாம் மனத்திலெண்ணி யிருக்கும் பல காரியங்களையும் செய்து முடிக்கவேண்டு மென்று அபேக்ஷைகொண்டனர். அன்றியும், அவரது குடும் பத்தில் கண்ணுக்குக் கண்ணாயிருந்தவர்களெல்லாம் கால வசத்தினால் பிரிந்துபோகவே "மனக்கவலை பலக்குறைவு" என்றபடி தனியேயிருந்து ஜீவிக்கப்பொறாமல், இந்தியாவி லுள்ள மனமொத்த நண்பர்களை மறுபடியும் போய்ப் பார்க்க ஆசைகொண்டார்.

இங்குள்ள மூன்று இராஜதானிகளிலும் மேரி கார்ப் பெண்டர் போய்வந்த பல இடங்களையும் இங்கு எடுத்து உரைப்பதென்றால் வளரும். மிகவும் முதிர்ந்த வயதான அறுபத்தெட்டாம் பிராயத்தில் இப்பொழுது நாலாந்தரம் அவர் இந்தியாவுக்கு வந்தார். "கற்றோர்க்குச் சென்றவிட மெல்லாஞ் சிறப்பு" என்றபடி அவர் எவ்விடம் சென்று லும், அங்கங்கே ஐரோப்பியரும் இந்துக்களுமாகிய பல ரும் அவரது நல்வரவைக் கொண்டாடி, இந்து தேசத்து நன் மையின்பொருட்டு அவர் சுயநயத்தைச் சிறிதும் பாராட் டாமல் படுகிற பிரயாசைகளுக்காக மிகவும் புகழ்ந்து பேசினார்கள். பெருமையும் சிறுமையும் வாயால் வருமல்லவா?

மேரி கார்ப்பெண்டர் முன்னே தாம் அடிகோலிய காரியங்களெல்லாம் அநேகமாய்க் கைகூடி வருகின்றனவென்று கண்டு ஆநந்தமடைந்தவராகி, இத்தேசத்தார் அனைவரும்

நன்றியுள்ள நன்மனத்துடனே வாழ்த்தி வந்தனஞ்செய்ய, கடைசியாக 1876-௵ மார்ச்சு௴ 27௳ சுதேசம் செல்லக் கப்பலேறினார்.

இந்தத்தடவை அவர் தம்முடனே பாபூ சசிபாத பானர்ஜியின் பெரிய பிள்ளைகளிருவரை இங்கிலாந்தில் கல்வி கற்பிக்கவேண்டுமென்று அழைத்துக்கொண்டு போயினார்.

இவருடைய வாழ்நாளில் கடைசி வருஷம் தம்முடைய சகோதரர் அமெரிக்காவில் இறந்துபோனாரென்கிற துக்கச்செய்தியைக் கேட்கும்படியாக நேரிட்டது. ஆயினும், அவரடைந்த முதுமைப்பருவமும், அவருக்குச் சம்பவித்த பல அபாயங்களும் அவருடைய குணங்களைப் பின்னும் அழகாகப் பக்குவப்படுத்தினவென்று அவருடன் பழகியவர்களுக்கெல்லாம் நன்றாக விளங்கியது. அந்தக் குணமே முதுமைப் பருவத்தில் மிகக் கொண்டாடத்தக்கதாயிருந்தது. அப்படிப்பட்டவர்களையே மற்ற வாலிபர்களெல்லாம் விசேஷமாக விரும்புவார்கள். இந்தச் சிறப்பை அவரும் தாமே உணர்ந்திருக்கலாம். அவர் சிறு பருவத்திலே அதிகமாக ஆசைப்பட்டுக்கொண்டிருந்தது இதுவே. யாவரும் தம்மை விரும்பிக் கொண்டாடத்தக்க உத்தமகுணத்தைத் தாம் பட்ட பல பிரயாசைகளாலும், கஷ்டங்களுக்கு ஈடுகொடுத்ததனாலும் அவர் சம்பாதித்துக் கொண்டாரென்று சொல்லத் தடையில்லை. கடைசியில் அவருக்கு எழுபதாவது பிறந்தநாள் வந்தது. அப்பொழுது, அவரிடத்தில் அனைவரும் நட்பும், அன்பும், மரியாதையும், வியப்பும் உடையவரானார்கள். அவரும் இங்கிலாந்திற்குப் பெரும் பெருமையும் உண்டாக்கிய உத்தமர்களுள் ஒருவரானார்.

அவர் தமது வாழ்நாளை எவ்வளவு அழகாகக் கழித்தாரோ, அவ்வளவு அழகாகவே அவ்வாழ்நாளும் முடிவுபெற்றது.

தேகத்தில் ஒருவிதமான அசௌக்கியமுமில்லாமல், தேகதார்ட்டியமும் சாமர்த்தியமும் குறைவுபடாமல் சௌக்கியமான ஸ்திதியிலேயே படுத்துத் தூங்குவதுபோல, 1877-௵ ஜூன் மாதம் 14௳ மனக்களிப்புடனே தேகவியோகமானார். கடவுள் அவரைக் கைக்கொண்டார்; தீர்க்கநித்திரையடைந்தார்.

அவருடைய தாய், சகோதரியான அன்னி இவர்களண்டையிலேயே அவருடைய தேகம் அடக்கம் செய்யப்பட்டது. தரித்திரர் தனவந்தர் ஆகிய அனைவரும் பெருங்கூட்டமாய் ஸமாதிசெய்யுமிடத்திற்கு அவரது உடலைப் பின்தொடர்ந்து போனார்கள். அவர்களுடன் மேரி கார்ப்பெண்டர் கடைசியாக ஆதரித்துவந்த இந்துதேசத்துச் சிறுவர் இருவரும் கவலையும் கண்ணீருமாகக் கைகோத்துக்கொண்டு பின்தொடர்ந்து போனார்கள்.

> "ஒன்றா வுலகத் துயர்ந்த புகழல்லால்
> பொன்றாது நிற்பதொன் றில்."

> "ஊழையு முப்பக்கங் காண்ப ருலைவின்றித்
> தாழா துஞற்று பவர்."

11816